527
942
3-57
942

# புது முறைச் சரித்திரம்

## S. S. C. (G. C. E.)

இலங்கைச் சரித்திரமும்
உலக சரித்திரமும்

APPROVED FOR CLASS TEXT (G. C. E.)
BY THE DIRECTOR OF EDUCATION, September '56

V. S. S. RAM, M. A.,
T. V. K. MOORTHY, B. A., Hons.

கலைவாணி புத்தக நிலையம்
திரிகோணமலை வீதி, கண்டி

TB
V(11) N57
132296.


1939ம் ஆண்டில்
உலக நிலைமை
கட்டளைப் பிரதேசங்கள்
பிரித்தானியருக்குரிய பிரதேசங்கள்.
பிரித்தானியருக்குரிய சிறு பிரதேசங்களின் பெயர்கள் கீழ்-
கோடு கீறப்பட்டுள்ளது. (மால்டா)
பிராஞ்சியருக்குரிய பிரதேசங்கள்
ருஷ்யா
அலாஸ்கா
வன்கூவர் தீவு
ஐக்கிய நாடுகள்
பசிபிக் சமுத்திரம்
மத்திய அமெரிக்க
பிரசீல்
உருகுவே
ருஷ்ய சக்கராதிபத்தியம்
(ரு. ஐ. சோ. கு)
சீன சக்கரா
திபேத்து
இந்தியா
பிலிப்பைன் தீவுகள்
போர்னியோ
இந்து
மடகாஸ்கர்
சமுத்திரம்
அவுஸ்திரேலியா
தாஸ்மேனியா

# புது முறைச் சரித்திரம்

## S. S. C. (G. C. E.)

[1953-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திலும் அதற்குப் பின்னரும் நடைபெற விருக்கும் பரீட்சைகளுக்குரிய பாடத்திட்டத்தின்படி எழுதப்பட்டது.]

பகுதி I. இலங்கைச் சரித்திரம்
,, II. உலக சரித்திரம்

V. S. S. RAM, M.A.
T. V. K. MOORTHY, B.A., HONS.

வித்தியாதிபதி அவர்களால் 3–9–56-இல் G. C. E. வகுப்புச் சரித்திர பாடநூலாக அங்கீகரிக்கப்பட்டது.



கலைவாணி புத்தக நிலையம்
130, திரிகோணமலை வீதி, கண்டி

பதிப்புரிமை]

[விலை ரூ. 5–00

திருத்திய முதற் பதிப்பு—ஐப்பசி, 1956
இரண்டாம் பதிப்பு—ஆவணி, 1957

Kabeer Printing Works, Madras (3631)

# முகவுரை

விஞ்ஞானத்துறையில் மோகம் மிகுந்துள்ள இந்த நாளில், சரித்திரம் அத்துணை அவசியமான பாடமன்றெனக் கூறுவாரு முளர்; சரித்திர நூலை 'வெறும் புனைந்துரை' யென்று அலட்சிய மாகக் கருதுவோரும் பலர் நம்மிடையே உண்டு. ஆனால், மனித நாகரிகத்தின் வளர்ச்சியை ஒருவன் உணர்ந்து கொள்ளாத வரையில்,—தன் முன்னோரது அரும்பெரும் செயல் களை அறிய முயலாத வரையில்—மற்றத் துறைகளில் வல்லவனா யினும் ஒருவனது கல்வி முற்றுப் பெற்றதாகக் கருதுவதற் கில்லை. சரித்திரஞானம், மக்களுக்குப் பண்டைய அனுபவங் களை விளக்க உதவுவதால், அவர்களது சிந்தனா சக்தி வளர்ச்சி யுற்றுப் புதிய பிரச்னைகளை எதிர்நோக்கித் தீர்மானிப்பதற்குரிய ஆற்றலையும் அளிக்கின்றது.

இக் காரணத்தால், சரித்திர நூலில் மூன்று பெரும் விஷயங் களுக்கு இடமளித்தல் வேண்டும். முதலாவதாக, ஒரு நூற் றாண்டு அல்லது அத்தகையதொரு நீண்ட கால எல்லைக்குள், சம்பவங்களின் ஊடே காணப்படும் பொது இயல்பை (General tendency) ஆங்காங்கு விளக்குதல் வேண்டும். இரண்டாவதாகச் சம்பவங்களைத் தனித்தனியே ஆராய்ந்து அவற்றைக் கோவைப்படுத்திக் கூறுதல் வேண்டும். மூன்றாவ தாக, ஒவ்வொரு சம்பவமாகிய சுழலிலும் நடுநாயகமாக நின்று செயல்புரியும் வீரர்களையும் தலைவர்களையும் வாசகர்களின் மனக் கண் முன்பு கொண்டு நிறுத்துதலும் அவசியமாகும். இத்தகைய மூன்று நிபந்தனைகளையும், இந்த நூலிற் பெரும் அளவில் நிறைவேற்ற நாங்கள் முயன்றிருப்பதை அன்பர்கள் காணலாம்.

மேலும், உலக சரித்திரத்தையும் தாய்நாட்டின் வரலாற்றை யும் இணைத்து வைத்துப் பாடவிதானம் வகுத்த பெரியோரின் முயற்சி பாராட்டுதற்குரியதாகும். இந்த முயற்சியால் இரண்டு நற்பலன்கள் விளையுமென்பதில் தடையில்லை. பிற நாடுகளின் சரித்திரங்களைச் சிறிதும் உணராமல், தனது நாட்டுச் சரித்திர மொன்றையே படிப்பதால் உண்டாகும் அதீதமான தேசீய

உணர்ச்சியால் பல கேடுகள் விளையும்; இதற்கு ஜெர்மனியின் சமீபகால சரித்திரமே சான்று பகரும். அவ்வாறின்றிப் பிற நாட்டினரின் பெருமைகளையும் மாணவர் உணர்ந்து, 'சர்வ தேசீய உணர்ச்சி' தோன்றுவதற்கு இந்தப் பாடவிதானம் வழி வகுத்துள்ளது. இரண்டாவதாக, எந்த நாடும் தனித்திருக்க இயலாதாகையால், உலகச் சம்பவங்களுடன் நமது நாட்டில் நிகழ்ந்தனவற்றையும் தொடர்புபடுத்திக் காணுதலே அவசிய மாகும். ஆசிரிய அன்பர்களை, இரு கருத்துக்களையும் மனத்திற் கொண்டு இந்த நூலை ஆராய்ந்து பார்க்குமாறும், அவ் வாறே இதனைக் கற்பிக்குமாறும் பெரிதும் வேண்டிக்கொள் கிறோம்.

இந்த நூலில், இலங்கையைப் பற்றிய பகுதி விரிவாக அளிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்; உலக சரித்திரம் தேவை யான அளவில் சுருக்கமாக வழங்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், 'இங்குத் தாய்நாட்டின் சரித்திரத்திலுள்ள சிறு நிகழ்ச்சிகளும் பிரதானமானவை; ஆனால் உலக சரித்திரத்திலுள்ள பெரும் சம்பவத் தொடர்கள் மட்டும் ஓர் பின்னணிக் காட்சியாக (background) அளிக்கப்படுதல் வேண்டும்' என்ற கொள்கை பின்பற்றப்பட்டுள்ளது. மேலும், கோட்டை இராச்சியம், கண்டி, சீதவாக்கை முதலியவற்றின் வரலாறுகளைக் கூறிவரும் போது, நிகழ்ச்சிகள் பின்னிக்கொண்டிருப்பதால், மீண்டும் மீண்டும் ஒரே வகையான நிகழ்ச்சிக் கோவைகளைப் பல சரித் திர நூல்களும் வருணித்திருப்பதைக் காணலாம். இந்த நூலில், அவ்வாறின்றி, இயன்றவரையில் அவற்றைப் பிரித்து ஒழுங்கு படுத்தியிருத்தல், மாணவர்களின் குழப்பத்தைத் தவிர்க்கும்.

அன்றியும், மாணவர்களுக்கு விஷயங்கள் தெளிவாகப் புலப்படும்வண்ணம் எளிய தமிழ்நடை கையாளப்பட்டுள்ளது. ஆங்காங்கு வம்சாவளிகளும் அட்டவணைகளும் தேவையான படங்களும் அளிக்கப்பட்டிருப்பதால், பிறர் உதவியின்றிப் பல விஷயங்களையும் மாணவர் தாமே கற்றுக்கொள்வது எளிதா கின்றது. ஒவ்வோர் அத்தியாயத்தின் இறுதியிலும் அளிக்கப் பட்டுள்ள பயிற்சிகள், மாணவரது சிந்தனையைத் தூண்டவும் அவர்கள் படித்தனவற்றை நினைவிலிருத்திக் கொள்ளவும் பேருதவி புரியுமென்பதிற் றடையில்லை.

இந்த நூலின் கவர்ச்சிகரமான தோற்றமும் அச்செழுத்துக்களின் அழகும் இதனுற் றேன்றக் கூடிய பயனைப் பன்மடங்கு பெருக்கியுள்ளன. இவ்வாறு அனைவருக்கும் நன்முறையிற் பயன்படும் வண்ணம் நூலைப் பதிப்பித்துத் தந்துள்ள பதிப்பாளருக்கும் அச்சகத்தாருக்கும் எங்களது மனமார்ந்த பாராட்டுதல்கள் உரியன.

இந்த நூலைச் சரித்திராசிரியர்களும் கல்விக் கழகங்களும் மனமுவந்து ஏற்பதோடு, இதனிற் காணுங் குற்றம் குறைகளைக் களைந்து மேலும் அபிவிருத்தி செய்வதற்குரிய யோசனைகளும் கூறுமாறு பெரிதும் வேண்டிக்கொள்கிறேம். இந்நூல் எழுதுங்கால் வேண்டிய ஆலோசனைகளைக் கூறியும், திருத்தங்களைச் செய்தும் உதவிய ஆசிரியர் V. S. கந்தையா அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

இங்ஙனம்

கண்டி,
22–11–1955

வி. எஸ். எஸ். ராம்
ரீ. வி. கே. மூர்த்தி

# பொருளடக்கம்

எண் பக்கம்

## முதற் பகுதி—" இலங்கைச் சரித்திரம் "


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கையின் உண்ணாட்டு நிலைமை ... | 1 |
| 2. | கடல்மார்க்கமும் போர்த்துக்கீசரும் ... | 14 |
| 3. | புவனேகபாகுவும் மாயாதுன்னையும் (1521–1551) ... | 26 |
| 4. | கோட்டை இராச்சியத்தின் அழிவு ... | 34 |
| 5. | சீதவாக்கையின் எழுச்சியும் வீழ்ச்சியும் (1521–1592) ... | 40 |
| 6. | யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுதல் ... | 50 |
| 7. | அசிவிடோ ஆட்சி (1594–1612) ... | 58 |
| 8. | தொன் கொன்ஸ்தந்தைன் திசா ... | 62 |
| 9. | கண்டி நாட்டின் சுதந்திரப் போர் (1582–1635) ... | 68 |
| 10. | போர்த்துக்கீசருக்கும் ஒல்லாந்தருக்குமிடையே நிகழ்ந்த போராட்டம் ... | 80 |
| 11. | போர்த்துக்கீசர் ஆட்சியின் பலன்கள் ... | 94 |
| 12. | இராசசிங்கன் II (1635–1687) ... | 103 |
| 13. | இரண்டாம் விமலதர்மசூரியன் (1687-1707) ... | 111 |
| 14. | பின் வந்த அரசர்கள் (1706–1747) ... | 115 |
| 15. | கீர்த்தி ஶ்ரீ இராசசிங்கனும் பௌத்த சமயப் புனருத்தாரணமும் ... | 120 |
| 16. | ஒல்லாந்தரின் வீழ்ச்சி ... | 128 |
| 17. | ஒல்லாந்தர் ஆட்சியால் விளைந்த பலன்கள் ... | 136 |
| 18. | ஆங்கில ஆட்சியின் ஆரம்பம் (1796–1798) ... | 145 |
| 19. | கண்டி இராச்சியப் போர் ... | 153 |
| 20. | மூன்று தேசாதிபதிகளின் நிருவாகம் (1798–1820) ... | 166 |
| 21. | நிருவாக அபிவிருத்தி (1821–1850) ... | 176 |
| 22. | அமைதியும் முன்னேற்றமும் (1850–1914) ... | 189 |
| 23. | டொனமூர் அறிக்கையும் அரசியல் மாறுதல்களும் ... | 203 |
| 24. | சோல்பரி விசாரணைக் குழுவும் அரசியற் திருத்தங்களும் ... | 214 |
| 25. | தேசிய அரசாங்கம் ... | 220 |


இலங்கையின்
சரித்திரப் படம்
குறியீடுகள்
சிதைவடைந்த நகரிகள்
இன்றும் சிறப்புடன் விளங்கும்
கண்டி- புராதன நகரிகள்
புராதன தலை நகரங்கள்
போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் அல்லது ஆங்கிலேயர்- சீர்ப்படுத்திய பட்டினங்கள்
சென்ற 50 ஆண்டுகள் தீவிர முன்னேற்றமடைந்த புராதன
நகர்கள்
புராதன பாதைகள்
யாழ்ப்பாணம்
முல்லைத் தீவு
பிகிற்றிரட்டை
அல்லது
மன்னார்
மாதோட்டம்
ஒல்லாந்தர் இறங்கியஇடம்
திரிகோணமலை
அநுராதபுரி
இராசரட்டை
புத்தளம்
சிகிரிய
பொல்லநறுவை
தம்பளை
மட்டக்களப்பு
சிலாபம்
குருநாகல்
மாத்தளை
தம்பதெனியா
கண்டி
நீர்கொழும்பு
கேகாலை
குண்டசாலை
போர்த்துக்கேயர் ஆங்கிலேயர் இறங்கிய இடம்
கம்பளை
நாவலப்பிட்டி
அஸ்கிரியா
களனி
சீதவாக்கை
அவிசாவலை
நுவரெலியா
வதுளை
கொழும்பு
கோட்டை
மொறட்டுவை
இரத்தினபுரி
களுத்துறை
உறுகுணரட்டை
திசமகாராமை
மாகமம்
ஒல்லாந்தர் இறங்கிய இடம்
காலி
அம்பாந்தோட்டை
மாத்தறை
80
81
82
10
9
8
7
6

# முதற் பகுதி
# இலங்கைச் சரித்திரம்

## 1. பதினைந் நூற்றாண்டின் றெடக்கத்தில் இலங்கையின் உண்ணாட்டு நிலைமை

பதினைவது நூற்றாண்டு தொடங்குவதற்கு முன்னர், கோட்டை இராச்சியமே இலங்கையில் மிகப் பெரியதும், வல்லமை வாய்ந்ததுமாக இருந்தது. ஆறாவது பராக்கிரம பாகுவின் அரசாட்சியில் இந்த இராச்சியத்தின் புகழும் ஆற்றலும் செல்வநிலையும், உன்னத நிலையை அடைந்துவிட்டன. அந்த அரசனது படை வலிமைக்கு ஆற்றாது, யாழ்ப்பாண மன்னரும், கண்டி யரசரும் அவருக்குப் பணிந்து அவரைச் 'சக்கரவர்த்தியாக' ஏற்றுக்கொண்டிருந்தனர். அவர்களும் மற்றச் சிற்றரசர் களும், ஆண்டுதோறுங் கோட்டை இராசதானியில் நிகழ்த்தப்பெற்ற "பெரஹரா" (Perahera) என்ற விழாவிற்கு விசயம் செய்து, பதினறு நாட்கள் சக்கர வர்த்தியின் விருந்தினராய்த் தங்கியிருந்து, கப்பம், காணிக்கைகளைச் செலுத்திய பிறகே செல்லவேண்டும்; இல்லையேல், கீழ்ப்படியாத அரசர்கள்மீது படை எடுக்கப் படும் என்ற நிபந்தனை இருந்தது.

ஆறாவது பராக்கிரமபாகு உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் தனது கீர்த்தியை நிலைபெறச் செய் தான். உதாரணமாக இலங்கையிலிருந்து சென்ற வர்த் தகக் கப்பல் ஒன்றை விசயநகர மன்னரின் அதிகாரி களில் ஒருவன் வழிமறித்து, அதிராம்பேட்டை என்ற

துறைமுகத்தில் நிறுத்தி வைத்திருந்தான்; அதை உணர்ந்த பராக்கிரமபாகு தனது கடற்படையை அனுப்பி, அத் துறைமுகத்தைத் தாக்கி, அந்த வர்த்தகக் கப்பலை மீட்டுவரச் செய்தான்.




படம் 1. இயற்கை அமைப்பு

இந்த மன்னனது ஆட்சிக்காலத்தில் கல்வியும் கலைகளும் ஓங்கி வளர்ந்தன; வியாபாரம் பெருகியதால், இலங்கையின் செல்வ வளமும் பெருகியது. அக்காலத்தில் இலங்கையிற் கிடைத்த சிறந்த கறுவாவிற்கு ஐரோப்பிய நாடுகளிற் பெரிதும் மதிப்பு ஏற்பட்டதாகை

யால், முசுலிம் வர்த்தகர்களும் ஐரோப்பிய நாட்டினரும் இந்த நாட்டை நாடலாயினர். இதனை உணர்ந்த ஆருவது பராக்கிரமபாகு கறுவா வியாபாரத்திலே கவனம் செலுத்தலானுன். இலங்கையில் மழை மிகுந்துள்ளதும் வளம் பெற்றதுமான தென்மேற்குப் பகுதியில் கறுவா நன்கு விளைந்ததாகையால், இவன் கோட்டையை இராசதானியாக்கிக் கொண்டான். இதினின்றும் யாழ்ப்பாணத்தரசனின் படை எடுப்புக்கு அஞ்சி இவன் அங்குச் சென்று விட்டானென்று கூறும் சரித்திராசிரியர்களின் கூற்று தவறுனது என்பதை உணரலாம். அங்குச் சென்றது முதல், கறுவா வியாபாரத்தைப் பெருக்கி, நாட்டின் வருமானம் அதிகரிக்கச் செய்தான்.

"கோட்டை" என்ற இராசதானியின் முழுப் பெயர் "**சயவர்த்தன கோட்டை**" என்பதாகும்; ஏனெனில், இந்தக் கோட்டையைத் தன் வெற்றிப் பெருமையின் அழியாத சின்னமாகவே பராக்கிரமபாகு மதித்தான். இந்தக் கோட்டையை இராசதானியாகக் கொண்டமைக்கு இரு காரணங்கள் உள்ளன. மேலே கூறியவாறு கறுவா வியாபாரத்தைப் பெருக்குவதற்குக் கொழும்பு நகரத்திலிருந்த முசுலிம் வியாபாரிகளுடன் தொடர்பு கொள்ளும்பொருட்டும், நீரும் சதுப்பு நிலங்களும் சூழ்ந்து இயற்கை அரண்கள் பெற்றுள்ள பிரதேசம் என்ற காரணத்தாலும் இங்கு இராசதானி அமைக்கப்பட்டது. இயற்கை அரண்கள் மட்டுமன்றிச் செயற்கை அரண்களாய் மதிலும், அகழியும் இதனைச் சூழ்ந்து அமைக்கப்பட்டன. மேலும், கொழும்பு நகரத்திற்கு வடக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் வருவோர் இந்த நகரத்தைக் கடந்தே செல்ல நேர்ந்ததாகையால், இதன் பெருமை அதிகரித்தது.

ஆருவது பராக்கிரமபாகு இறந்த பின்னர்க் கோட்டை இராச்சியத்தின் பெருமை குன்றியது. அதன் ஆதிக்கத்




படம் 2. கோட்டை

தினின்றும் யாழ்ப்பாணமும், கண்டியும் விலகித் தனி இராச்சியங்களாக அமைந்தன. இவ்வாறு நாட்டின் ஒற்றுமை குலேவுற்றதே, அந்நியராகிய போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் முதலியவர்கள் இங்கு நிலைபெற்று ஆட்சி தொடங்கியமைக்கு முக்கிய காரணமாகும்.

பதினாறுந் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கையில் மூன்று பெரிய அரசுகள் காணப்பட்டன. எட்டாவது வீரபராக்கிரமபாகு (1484—1509) கோட்டையை இராசதானியாகக் கொண்டு அரசு புரிந்தான். அவனது இராச்சியம் வடக்கே காலஓயா தொடங்கித் தென் திசையிலுள்ள வளவை கங்கை வரை பரந்திருந்தது. அது பல குறிச்சிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அந்தக் குறிச்சிகளில் சப்தகோறளை, நான்கு கோறளை, மூன்று கோறளை, இரயிகம், தேவனுக, மாத்தறை என்பன பிரதானமானவை. 8-வது வீரபராக்கிரமபாகுவின் காலத்திற்றான் போர்த்துக்கீசர் முதன் முதல் இந்த நாட்டிற்கு வந்தனர் என்பதை நினைவிற் கொள்வது நலம். இந்த அரசன் பலமற்றவனுக இருந்தமையால், தன் இராச்சியத்தை ஆள்வதற்குத் தன் புதல்வர்களாகிய ஒன்பதாம் தர்ம பராக்கிரம பாகுவையும், விசயபாகுவையும் இணையரசராக இருக்கச் செய்தான். அவர்கள் இருவரும் தனித்தனியே ஆட்சியைப் பெறுவதற்காகத் தமக்குள் போராடத் தொடங்கினர். அதனாலே தர்ம பராக்கிரமபாகு போர்த்துகீசரின் உதவி பெற்றுத் தன் சகோதரனை ஒடுக்குவதற்கு முயலலானான்.

எட்டாவது வீரபராக்கிரமபாகுவின் ஆட்சியின் இறுதிக்காலம் குழப்பம் நிறைந்ததாக இருந்தது. அவனுடைய புதல்வர்கள் தமக்குட் போரிட்டதுமல்லாமல், அவனுடைய உறவினர்களான மாதம்பை, உடுகம்போல அரசர்கள் சுயேச்சை பெற்ற அரசர்கள்போல நடந்து கொள்ளலானார்கள். மலையாளத்தினின்றும் வந்த ஒரு கடற் கொள்ளைக்காரன் மன்னார்க் கடற்கரையிலே முத்துக்

குளித்தெடுக்கச் செய்து நிறைய முத்துக்களைப் பெற்றதை அறிந்ததும், இந்த அரசர்கள் பெரும்படைகளுடன் சென்று அவனைத் தோற்கடித்தார்கள். அதே தருணத்தில் **விக்கிரமபாகு** என்ற கண்டியரசனும் தான் அனுப்பி வந்த திறையைக் கொடாது நிறுத்திவிடவே, அவன்மீது உடுகம்போல அரசன் படை எடுத்து அவனைத் தோற்கடித்து திறைப்பணம் முதலியவற்றைத் தான் பெற்றுச் சென்றான். இத்தகைய துன்பங்களிடையே 1509-ல் வீர பராக்கிரமபாகு இறந்தான்.

உடனே ஆட்சியைப் பெற்ற **ஒன்பதாவது தர்ம பராக்கிரமபாகு** தனது சகோதரனான விசயபாகுவின் பகைமையைக் கண்டு அஞ்சிப் போர்த்துக்கீசரின் துணையை நாடினான். இதனால் முதலில் பயன் ஏற்படாவிடினும், சில ஆண்டுகளுக்குப் பின்னர்த் தமது கறுவா வியாபாரத்தைக் கவர்ந்து செல்லும் முகமதிய வியாபாரிகளை அடக்கும்பொருட்டு, 1518-ஆம் ஆண்டிற் போர்த்துக்கீசர் இலங்கையிற் கவனம் செலுத்தினர். அல்புகூர்கே என்ற போர்த்துக்கீசத் தலைவனது தலைமையின்கீழ் அவர்களது கடற்படை வந்தது. அவர்களைத் தர்மபராக்கிரமபாகு கொழும்புத் துறைமுகத்தில் சந்தித்தான்; முகமதிய வியாபாரிகளுக்கு எதிராக பெரும் கோட்டை ஒன்றைக் கொழும்பில் அமைக்கவும் போர்த்துக்கீசருக்கு அனுமதியளித்தான். முகமதியரின் எதிர்ப்புகளைக் கடந்து இறுதியில் கோட்டை அமைக்கப்பட்டதுடன், தர்மபராக்கிரமபாகுவுடன் மீண்டும் ஓர் ஒப்பந்தமும் செய்துகொள்ளப்பட்டது. அந்த உடன்படிக்கையின்படி, வருடந்தோறுந் திறையாகக் கறுவா போர்த்துக்கீச மன்னனுக்கு அனுப்பப்படவேண்டும்; அதற்குக் கைம்மாறாகப் போர்த்துக்கீசர் அரசனுக்குத் துணைபுரிவதாக ஏற்றுக் கொண்டனர்.

இந்த நிலையில், சினம் மிகுந்த சிங்களவரும் முகமதியரும் கொழும்புக் கோட்டையை மீண்டும் தாக்

கினர். அப்போது தர்ம பராக்கிரமபாகுவால் தமக்கு உதவ இயலாமற் போனமையால், போர்த்துக்கீச வீரன் ஒருவன் அவனைக் கொன்றான். அவனது முடிவை எதிர் நோக்கியிருந்த சகோதரன் விசயபாகு உடனே கோட்டை இராச்சியத்தின் மன்னனானான். ஆனால், விசயபாகுவின் ஆட்சி மூன்று ஆண்டுகளே நீடித்தது. அவன் போர்த்துக்கீசரை அழிப்பதற்காகக் கள்ளிக் கோட்டை அரசனான சாமொரின் மன்னனது கடற் படையினது துணையை நாடினான். ஆனால், சாமொரினது படை போர்த்துக்கீசரால் முறியடிக்கப்படவே, அவர்களுடன் விசயபாகு சமாதானம் செய்துகொள்ள நேர்ந்தது. மீண்டும் 1520-ல் இருமுறை முயன்றும், அவனால் போர்த்துக்கீசரைத் துரத்த இயலவில்லை.

விசயபாகு தனது இளைய மனைவியின் புதல்வனை அரசனாக்கக் கருதித் தனது மற்றப் புதல்வர்களைக் கொல்ல நினைத்தான். இந்த முயற்சிக்குக் கண்டுர பண்டாரா, ஏகநாயக்க என்பவர்கள் துணை நின்றனர். அதனால் அவனது மூன்று புதல்வர்களில் புவனேகபாகுவும், இறைகம்ப்ண்டாரனும் நீர்கொழும்பிற்குத் தப்பி ஓட, இளையவனான மாயாதுன்னை கண்டி அரசனது படைத் துணையுடன் கோட்டை இராசதானியில் புகுந்தான். பிறகு கண்டுரபண்டாரன் கொல்லப்படவே, ஏகநாயக்கனும் தப்பி ஓடிவிட்டான். பின்னர் அரண்மனை கொள்ளையிடப்பட்டு, அங்கிருந்த விலைமதிப்புள்ள இரத்தினங்களும் ஆபரணங்களும் மற்றப் பொருள்களும் சூறையாடப்பட்டன. இறுதியில் மூன்று சகோதரர்களின் சூழ்ச்சியின் பயனாக, விசயபாகு 1521-ல் கொல்லப்பட்டான்.

பிறகு கண்டியரசனும் பிரபுக்களும் ஆலோசித்து, மூத்தவனாகிய ஏழாவது புவனேகவாகுவிற்குக் கோட்டை இராச்சியத்தை வழங்கினர். ஆனால், இளையவனான மாயாதுன்னையின் போர்த்திறமே இவர்களது வெற்றிக்

குக் காரணமாகையால், அவனுக்கும் இராச்சியத்தில் ஒரு பகுதியை வழங்கத் தீர்மானித்தனர். முடிவில், நாடு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. புவனேக வாகு கோட்டை இராசதானியையும், தென்மேற்குப் பகுதியையும் கடற்கரைப் பிரதேசங்களையும் பெற்றான். மாயதுன்னைக்கு நான்கு கோறளைகளும், தேனவாகா பகுதியும் வழங்கப்பட்டன. இக்காலத்தில் 'சப்பிரகமுவா மாகாணம்' எனப்படுவதே, அவனது சீதாவாக்கை இராச்சியமாக இருந்தது எனலாம். மற்றொரு சகோதரனான இறைகம்பண்டாரன் இறைகம், பஸ்டுன், வலல்லவீதி என்ற கோறளைகளைப் பெற்றான். ஆனால், கடற்கரைப் பகுதி மட்டும் அவன் வசம் இல்லை. இவ்வாறு கோட்டை இராச்சியம் பிளவுற்றதனாலேயே, நாடு அன்னியர் வசமாவது எளிதாயிற்று.

கோட்டை இராச்சியத்தின் நிலைமை இவ்வாறாக, அதன் கிழக்கிலிருந்த கண்டி இராச்சியத்திலும் அக்காலத்திற் பல மாறுதல்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. இந்த இராச்சியத்தின் பழைய பெயர் 'உடரட்டை' என்பதாகும். இதில் கொட்மலை, உடுபுலட்காம என்ற பகுதிகளடங்கிய உடுநுவரையும், எட்டிநுவரையும், தும்பறையும், கரிசுபற்றும், கேவகேதவும் அடங்கியிருந்தன. இவையன்றிக் கண்டி மன்னர்களின் ஆதிக்கத்தில் மாத்தளை, மட்டக்களப்பு, திரிகோணமலை, வெல்லச, விந்தனை, ஊவா என்ற குறிச்சிகளின் அதிபர்களும் அடங்கியிருந்தனர். முதலிற் கம்பளை தலைநகரமாக விளங்கியது; ஆனால், பிற்காலத்தில், மகாநுவரை என்னும் கண்டி நகரத்தைத் தலைநகரமாகக் கண்டியரசர்கள் அமைத்துக்கொண்டனர். ஆதியிற் கோட்டை இராச்சியத்திற்குக் கப்பம் செலுத்திவந்த கண்டியரசர்கள், பின்னாற் சுயேச்சையடைந்தனர். ஆறும் பராக்கிரமபாகு இறந்த பின்னர் முடிசூடிய ஆறும் புவனேகவாகுவின் காலத்தில், செயவீர பண்டாரன் என்பவன் கண்டி இராச்

சியத்தை தனி நாடாக அமைத்துக்கொண்டு தன்னை விக்கிரமபாகு என்று அழைத்துக் கொள்ளலானன்.




படம் 3. பதினரும் நூற்ருண்டு இலங்கை

அது தொடங்கி, கண்டி இராச்சியம் ஒரு வல்லமை பொருந்திய இராச்சியமாக விளங்கலாயிற்று.

கண்டிநாடு மலைகளும், காடுகளும் சூழப்பெற்று இயற்கை அரண்களுடன் விளங்கியது. அதனால் பகைவர்களின் படைகள் உட்புகுவதும் வெளியே மீள்வதும் கடினமாயிருந்தது. தென்மேற்கிலிருந்து வருவோர் 'வல்லணை' என்ற இடத்திலும், கிழக்கிலிருந்து வருகிறவர்கள் 'அலுத்நுவரை' மார்க்கமாகவும், வடமேற்கிலிருந்து புகுவதானால் 'கலகெதரைக் கணவாய்' வழியாகவும் வரநேர்ந்தது. கண்டி நகரம் இயற்கையரண்கள் வாய்ந்ததாயினும், மலைகளற்ற பகுதிகளில் உயர்ந்த மதில்களும் வாய்க்கப்பெற்றிருந்தது. அந்தப் பிரதேசத்திற்குள் புகுவது எத்துணை அபாயகரமானது என்பதைப் பிற்காலத்தில் அங்குக் கைதியாக இருந்த இரொபர்ட் நொக்சு என்ற ஆங்கிலேயர் எழுதிவைத்த குறிப்புகளினின்றும் உணரலாம்.

இலங்கையின் வடபகுதியிலிருந்த யாழ்ப்பாண இராச்சியம், மன்னார்த் துறைமுகத்திலிருந்து வடக்கிலுள்ள தீபகற்பம் வரை வியாபித்திருந்தது. அங்குத் தமிழர்களே பெரும்பாலும் குடியிருந்தமையால், இந்து மதம் பரவியிருந்தது. கோட்டை மன்னர்களுக்கு அடங்கியிருந்த யாழ்ப்பாண மன்னர்களும், கண்டி அரசர்களைப்போலச் சுயேச்சை பெற்றனர். அவ்வாறு சுயேச்சை பெற்ற முதல் அரசன் **பரராசசேகரன்** (1478–1519) ஆவான். அவனது தலைநகரமாக, யாழ்ப்பாணத்திலுள்ள **நல்லூர்** அமைந்திருந்தது.

இந்த மூன்று பெரும் இராச்சியங்களேயன்றி இலங்கையில் வேறு பல சிறிய இராச்சியங்களும் இருந்தன. கண்டி நாட்டிற்கும் யாழ்ப்பாண நாட்டிற்குமிடையே காணப்பட்ட சிறு நாடுகள் பதினெட்டும் ஒருங்கே '**வன்னி நாடு**' எனப்பட்டன. அங்கு **வன்னியர்** என்னும் வேளாள அதிகாரிகள் ஆட்சிபுரிந்து வந்தனர்.

இக்காலத்தில் இலங்கையின் அரசியல் அமைப்பும் பொருளாதார நிலையும் எவ்வாறு இருந்தன என்பதை

யும் ஆராய்வோம் : சிங்கள அரசர்கள் வரையறையற்ற அதிகாரம் படைத்திருந்தனர். அவர்கள் இராச்சிய விவகாரங்கள் குறித்துத் தமது ஆலோசனைச் சபைகளுடன் ஆலோசித்தனராயினும், அவர்களுக்கு மிகுந்த அதிகாரம் இருந்தது. எனினும், பண்டைக் காலத்திலிருந்து வழக்கில் இருந்துவரும் பழக்க வழக்கங்களுக்கும், நடைமுறைகளுக்கும் மாறுபடா வண்ணம் அரசன் நடந்து கொண்டான். கிராமங்களில் அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் கிராமங்களில் வரிகளை வசூலிப்பது, நியாய விசாரணை செய்வது, ஏரி குளங்களையும் கற்பாதைகளையும் சீர்திருத்துவது ஆகிய பல காரியங்களையும் நிர்வகித்து வந்தனர். அரசனுக்காக ஆங்காங்குப் படை திரட்டுவதும் அவர்களது கடமையாக இருந்தது.

கிராமங்களிலே நிலங்கள் பற்றி எழும் வழக்குகளை விசாரணை புரியக் '**கன்சபாவ**' என்ற கிராமச் சங்கங்கள் இருந்தன. ஆனல், கிராம அதிகாரிகளின் உதவியின்றிக் கிராமச் சங்கங்கள் தமது உத்தரவுகளை நிறைவேற்ற இயலா. இத்தகைய கிராம அதிகாரிகள் தமது சேவைக்காக ஊதியம் எதுவும் பெறுவதில்லை; அதற்கு ஈடாக, மக்களிடமிருந்து '**தேகும்**' என்ற பரிசுப் பணமும், தமது நிலங்களைக் கூலியின்றி உழுது செய்கை பண்ணுவதற்குத் தேவையான உழைப்பும் அவர்கள் பெற்று வந்தனர்.

இக்காலத்தில் சிங்களவரும், தமிழரும் நெற் பயிரிடுவதில் பெரும்பாலும் ஈடுபட்டிருந்தனர். வளவை கங்கை பாயும் பிரதேசத்திலும், திருக்கோணமலைப் பகுதியிலும், மட்டக்களப்பைச் சூழ்ந்த இடங்களிலும் நெற் சாகுபடி செய்யப்பட்டது. தென்மேற்குப் பகுதியில் ஏலம், மிளகு, கறுவா, தேங்காய், கமுகு முதலியன அதிகம் செய்கை பண்ணப்பட்டன. பதினைந்தாம் நூற்றுண்டில், இந்தப் பொருள்களை மேல்நாடுகளுக்கு ஏற்றுமதி புரிவதற்காக முசுலிம்கள் முனைந்து வியாபாரத்தில்

ஈடுபட்டனர். இவையன்றி, சப்பிரகமுவ பகுதியிலிருந்து இரத்தினக் கற்களும், சப்தகோறளையிலிருந்தும், வன்னிப் பகுதியிலிருந்தும் யானைகளும் வியாபாரத்திற்குக் கிடைத்தன.

கொழும்பு நகரத்தில் துறைமுகம் அமைந்ததாலும், அந்தப் பகுதியில்தான் கறுவாச் செய்கை மிகுதியாதலாலும், அந்தத் துறைமுகம் வளர்ச்சியடைந்தது. இதனால் நாளடைவில், கோட்டை இராசதானியின் பெருமை குன்றியது. போர்த்துக்கீசர் வருவதற்கு முன்பு கறுவா வியாபாரத்திற் பெரிதும் ஈடுபட்டிருந்தவர்கள் தென்னிந்திய முசுலிம்களே ஆகும். போர்த்துக்கீசர் வந்த பிறகு முசுலிம்களின் ஆதிக்கம் குறைந்துவிட்டது. இலங்கையின் கரையோரமிருந்த துறைமுகங்கள் எல்லாவற்றிலும் வியாபாரம் புரிந்துவந்த முசுலிம் வியாபாரிகள் போர்த்துக்கீசரால் துன்பமுற்று வியாபாரத்தை இழக்க நேர்ந்தது. அக்காலத்தில் தம்பதேனி (Dambadeni) காசும், பணம் என்ற நாணயமும் அதிகமாக வழங்கி வந்தன.

அரசனுக்கும் அதிகாரிகளுக்கும் சேவை புரிவதற்கு ஈடாகவே, மக்கள் நிலத்தைப் பெற்று உழுது பயிரிட்டனர். அரசனது நிலங்கள் நிறைந்த கிராமங்கள் **கபடாகம்** என்றும், அதிகாரிகளின் கிராமங்கள் **நிண்டகம்** என்றும் அழைக்கப்பெற்றன. இவற்றை உழுது செய்கை பண்ணுவதற்கு ஈடாக, அரசனுக்குச் செய்தி கொணருதல், கிராமத்தைப் பாதுகாத்தல் போன்ற பல கடமைகளை மக்கள் புரிதல் வேண்டும். இவையன்றி ஆலயங்களுக்கும், விகாரைகளுக்கும் தர்மமாக விடப்பெற்ற '**தேவாலகம்**,' '**விகாரகம்**' எனப்படும் கிராமங்களும் ஆங்காங்குக் காணப்பெற்றன.

அக்காலத்தில் கிராமங்களில் 'கமக்காரர்' மட்டுமன்றி மற்றத் தொழிலாளிகளையும் காணலாம். பிறந்தது முதல் ஒரே தொழிலிற் பயிற்சி பெற்ற தொழிலாளி

கள் இருந்தமையால், அவர்களிடையே சாதி வித்தியாசங்களும் அதிகமாகக் காணப்பட்டன. அரசன் யாரையேனும் தண்டிக்க விரும்பினால், அவர்களுக்கு இழிவான தொழில்களை நியமித்து அவர்களை ஈனமான சாதியாராகச் செய்துவிடலாம்; ஆனால், எவருடைய சாதி நிலையையும் உயர்த்துவது சாத்தியமில்லை என்ற கொள்கை நிலவி வந்தது. சாதிப் பிரச்னைகளைத் தீர்த்து ஒழுங்கு செய்ய, 'இரட்ட சபை' (Rate sabhia) என்ற மன்றம் அரசனுக்குத் துணைபுரிந்தது.

பதினாறும் நூற்றாண்டில், சிங்கள மொழியும் இலக்கியமும் பெரிதும் வளர்ச்சியுற்றிருந்தன. அதற்கு முன்னரே ஆறாவது பராக்கிரம பாகுவின் காலத்தில், இலங்கையின் இலக்கிய வரலாற்றில் 'பொற்காலம்' தோன்றிவிட்டது. **தோட்டகமுவ, விதகம** முதலிய கவிஞர்களின் **காவிய சேகரம், பாரவி சந்தேசம், புதுகுணாலங்காரம்** முதலிய கவிதை நூல்கள் பெரும் புகழ் பெற்றிருந்தன. இவ்வாறு அரசியற் குழப்பங்களினிடையிலும் சிங்கள இலக்கியம் வளர்ந்து வந்தமை போற்றற்குரியதாகும்.

### வினாக்கள்

1. ஆறாவது பராக்கிரம பாகுவின் ஆட்சியில் இலங்கை அடைந்த நன்மைகள் யாவை?
2. கோட்டை இராச்சியத்தில் அடங்கியிருந்த பகுதிகள் யாவை?
3. தர்ம பராக்கிரமபாகு போர்த்துக்கீசருடன் ஏன் ஒப்பந்தம் செய்துகொண்டான்? ஒப்பந்தத்தின் விளைவுகள் யாவை?
4. விசயபாகு எப்பொழுது, ஏன், கொல்லப்பட்டான்?
5. விசயபாகுவின் புதல்வர்கள் யாவர்? அவர்கள் ஒவ்வொருவரும் பெற்ற இராச்சியப் பிரிவுகள் யாவை?
6. கண்டி இராச்சியத்தின் இயற்கை அமைப்பையும் பிரிவுகளையும் தெளிவாகக் குறிப்பிடுக.
7. யாழ்ப்பாண இராச்சியம் யாருடைய ஆட்சியில் சுதந்திரமடைந்தது? அதன் தலைநகரம் எது?

8. இலங்கையில் 16-ஆம் நூற்றுண்டுத் தொடக்கத்தில் சமூக அமைப்பும், பொருளாதார நிலையும் எவ்வாறு இருந்தன என்பதை விளக்குக.

9. இலங்கையில், அக்காலத்தில் இலக்கிய வளர்ச்சி ஏற்பட்டதற்கு உதாரணங்கள் தருக.

## 2. கடல்மார்க்கமும் போர்த்துக்கீசரும்

இலங்கையிலே இத்தகைய மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டிருந்த பொழுது, ஐரோப்பாக் கண்டத்தில், மக்கள் வாழ்க்கையிலும் நாகரிகத்திலும் பல பெரும் மாறுதல்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. அந்த மாறுதல் களின் விளைவாக 'இடையிட்ட காலம்' (The Middle Ages) மறைந்து, அங்கு "நவீன காலத்தின்" (Modern Age) ஒளி உதயமாகிக்கொண்டிருந்தது.

நவீன காலம் தோன்றிவிட்டது என்பதற்கு அறி குறியாக, ஐரோப்பியராற் கீழ்நாடுகளுக்கு ஒரு புதிய கடல் மார்க்கம் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. அதற்கு முன்னர் ஐரோப்பியர் கீழ்நாடுகளுடன் வியாபாரத் தொடர்பு கொண்டிருந்த போதிலும், ஆபத்துகள் நிறைந்ததும், நீண்ட காலம் பிரயாணம் செய்ய நேருவதுமான தரைமார்க்கங்கள் வழியாகவே போக்கு வரவு வைத்துக் கொண்டிருந்தனர். ஒட்டகங்கள், குதிரைகள் முதலியவற்றின் உதவியாலும், நடந்தும், நெடுந்தூரம் வந்து, கீழ்நாடுகளிலிருந்த கறுவா, ஏலம், மிளகு, பட்டாடைகள் முதலிய பல பொருள்களை ஐரோப்பியர் வாங்கிச் சென்றனர். **செங்கிசுகான், குப்ளேக்கான்** முதலிய மங்கோலிய அரசர்கள்கூட இத்தகைய ஐரோப்பிய வியாபாரிகளை வரவேற்றனர். ஆனால், துருக்கியர் முகமதியராக மாறி, மத்திய ஆசியா வில் வலிமை பெற்றதும், ஐரோப்பியக் கிறித்தவர்கள்

இங்கு வருவதைத் தடுக்கலாயினர். இக்காரணத்தினால், ஐரோப்பியர் தரைமார்க்கத்தை உபயோகிப்பது நின்று விட்டது. ஐரோப்பியரில் முதன்மை பெற்று விளங்கிய பல நாட்டினரும் கீழ்நாடுகளுக்கு வருவதற்கேற்ற ஒரு கடல் மார்க்கத்தைக் கண்டுபிடிப்பதில் பெரும் முயற்சி யுடன் ஈடுபடலாயினர்.

அக்காலத்தில், அதாவது பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில், அத்திலாந்திக் சமுத்திரக் கரையோரத்தி லிருந்த நாடுகளே, இத்தகைய முயற்சிகளில் அதிகமாகக் கவனம் செலுத்தின. அப்போது ஸ்பெயின் நாட்டி லிருந்து பிரிந்திருந்த போர்த்துக்கீச நாட்டிலும் 'கடல் மார்க்கம்' காணவேண்டுமென்ற எழுச்சி காணப்பட்டது. அதற்குப் பிரதான காரணமாக இருந்தவன், அந்த நாட்டு மன்னனாகிய **கென்றி** என்பவனேயாம். அவ னுடைய ஊக்கம் காரணமாக அவனை 'மாலுமிகளின் தலைவன்' (The Navigator) என்றே மக்கள் அழைத் தனர். அவனது ஆதரவினால், பல போர்த்துக்கீச மாலுமிகள் மேற்கு ஆப்பிரிக்கக் கரையோரமாக நெடுந் தூரம் பிரயாணம் செய்து பல புதிய இடங்களைக் கண்டு பிடித்தனர். அவன் இறந்த பின்னரும் அவர்களது முயற்சிகள் குறையவில்லை. அவர்களில் சிறந்தவனாகிய **பார்த்தலோமியோடயசு** என்பான், ஆபிரிக்காவின் மேற்குக் கரையோரமாகவே வந்து, 'நன்னம்பிக்கை முனை' என்று இக்காலத்தில் அழைக்கப்படும் முனையை 1486-ல் நெருங்கிவிட்டான்; ஆனால், அங்குப் புயலால் அலைப்புண்டு நெடுநேரம் தவித்தமையால், மேலும் பிரயாணம் செய்யாமல், அந்த முனைக்குப் '**புயல்முனை**' என்று பெயரளித்துவிட்டுத் திரும்பிச் சென்றான். இறுதி யாக, 1498-ம் ஆண்டில் **வாசுகோ-ட-காமா** என்னும் மாலுமித் தலைவன் சற்றும் அஞ்சாதவனாய் டயஸ் சென்ற மார்க்கத்தைப் பின்பற்றிச் சென்று, புயல்முனையை அடைந்தான். அப்போது அங்கே புயலின்றிக் கடல்

அமைதியாக விளங்கியது; அதனல் அவனது உள்ளத்திலும், எவ்வாருயினும் இந்தியாவை அடைந்து விடக்கூடும் என்ற நம்பிக்கையின் ஒளி பிறந்தது. அக்காரணத்தாலேயே, அந்த முனை 'நன்னம்பிக்கை முனை' என்ற புதிய பெயரையும் பெற்றது.



படம் 4. வாசுகோ-ட-காமா

பிறகு ஆபிரிக்காவின் கிழக்குக் கரையோரமாகப் பிரயாணம் செய்த வாசுகோ-ட-காமா மலிந்தி துறைமுகத்தை அடைந்த பொழுது, அங்கு வந்திருந்த இந்திய வியாபாரிகள் அவனுக்கு வழிகாட்டிகளாய் அமைந்தனர். அவர்களது உதவியால் வாசுகோ-ட-காமா இந்து சமுத்திரத்தையும் அரபிக் கடலையும் கடந்து, 1498-ஆம் ஆண்டு மே மாதம் 27-ம் திகதி இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள கள்ளிக் கோட்டையை அடைந்தான். இந்தச் சம்பவமானது, கீழ்நாடுகளின் சரித்திரத்தில் மட்டுமல்ல, உலக வரலாற்றிலேயே, ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கமாக அமைந்துவிட்டது எனலாம்.

ஏனெனில், இந்த நிகழ்ச்சியின் விளைவாகப் பல பயன்கள் தோன்றின. முதலாவதாக, கீழ்நாடுகளில் முசுலிம் வியாபாரிகளின் ஆதிக்கம் குறைந்து, போர்த்துக்கீசரின் வலிமை ஓங்கியது. இரண்டாவதாக, போர்த்துக்கீசரும் அவர்களைப் பின்பற்றி மற்ற ஐரோப்பிய இனத்தவரும் வந்தமையால், கீழ்நாடுகளுக்கும், ஐரோப்

பியருக்குமிடையே நெருங்கிய தொடர்பு தோன்றியது. ஐரோப்பியரைப் பற்றி ஆசியமக்களும், ஆசிய இனத்தினரைக் குறித்து ஐரோப்பியரும் கொண்டிருந்த விநோதமான கருத்துக்கள் மறைந்தன; ஆயினும், முதன் முதலில் வந்த போர்த்துக்கீசரும் மற்றவர்களும் பெரும்பாலும் போர்வீரர்களாகவும் வியாபாரிகளாகவுமே இருந்தமை




படம் 5. வாசுகோ-ட-காமா சென்ற பாதை

யால், அவர்களது சுயநலம் காரணமாக, கீழ்நாடுகளிலுள்ள மக்களின் செல்வத்தைப் பறிப்பதிலும், கொடுமைகள் இழைப்பதிலு மீடுபட்டனர். சில நூற்ருண்டுகளில் இந்த நிலை மாறுதலடைந்து, ஐரோப்பியரின் நிர்வாக முறைகள், கலைகள், நாகரிகம் முதலியவற்றைக் கீழ்நாட்டினரும் விரும்பிப் பின்பற்றலாயினர். அதனுல்,

ஆசிய மக்களின் பண்டைய நாகரிகங்களும் காலப்போக்கிற்கு ஏற்றவாறு மாறத் தொடங்கின.

வாசுகோ-ட-காமா கள்ளிக்கோட்டை அரசனை சாமொரினிடம் பல வர்த்தக உரிமைகள் பெற்றுத் திரும்பிச் சென்றான். அவனுக்குப் பிறகு வந்த போர்த்துக்கீசத் தலைவனான **அல்வாரிசு காப்ரல்,** கள்ளிக்கோட்டையில் மட்டுமன்றி இந்தியாவின் மேற்குக் கரையிற் பல இடங்களிலும் பண்டக சாலைகளை நிறுவ முயன்றான். இதனால், அங்கு வியாபாரம் புரிந்து பொருளீட்டிய அரேபிய வியாபாரிகளுக்கும் போர்த்துக்கீசருக்குமிடையே பெரும்போர் தொடர்ந்தது. இந்தப் போராட்டம், ஆபிரிக்கக் கரையிலுள்ள மொசாம்பிக், பாரசீகக் குடாவிலிருக்கும் ஓர்மசு, செங்கடல் துறைமுக மான ஏடன், இலங்கைக் கடற்கரை, மலாக்கா நீரிணை என்ற பல இடங்களிலும் நடைபெற்றது. போர்த்துக்கீசருக்குப் படைவலிமையும், சிறந்த ஒழுங்குமுறையும் பெரிய கப்பல்களும், பீரங்கிகளும் இருந்தமையால், சிறிய கப்பல்களும் ஒழுங்குமுறையற்ற படைகளும் படைத்த அரேபிய முசுலிம்களால் அவர்களது ஆதிக்க வெறியை எதிர்த்து நிற்க இயலவில்லை. மேலும், தொடர்ச்சியாகத் திறமை வாய்ந்த போர்த்துக்கீச மாலுமிகளும், படைத்தலைவர்களும் அதிகாரிகளாக வந்தமையால், அவர்களது ஆதிக்கம் வளருவதும் எளிதாயிற்று. 1505-ல் நியமனம் பெற்ற **பிரான்சிசு அல்மெய்டா** திறமை மிக்க மாலுமியாகவும் நுண்ணறிவு படைத்த இராச தந்திரியாகவும் இருந்தான். 'கடல் ஆதிக்கத்தின் வலிமையால் சாம்ராச்சியத்தை நிலைநிறுத்த வேண்டும்' என்ற கொள்கையை வலியுறுத்தியவன் அவனே. அவனது முயற்சியால் கொச்சித்துறைமுகம் போர்த்துக்கீசரின் தலைநகரமாயிற்று.

அவனது ஆட்சிக் காலத்திற்றான் முதன் முதலாக போர்த்துக்கீசர் இலங்கையிற் பிரவேசிக்க நேர்ந்தது.

முசுலிம் வியாபாரிகளின் கப்பல்களைக் கைப்பற்றுமாறு அல்மெய்டாவினல் அனுப்பப்பெற்ற அவனது குமாரனை தொன்லோரென்சோ, 1505-ல் பெரும் புயலாற் றுன்பமடைந்து, முடிவில் தற்செயலாகக் காலித்துறைமுகத்தருகே இலங்கைக் கரையை அடைந்தான். தான் இறங்கியுள்ளது இலங்கை நாடு என்பதை உணர்ந்து கொண்டதும், கோட்டை இராசதானியை அடைய விரும்பித் தொன்லோரென்சோ தனது கப்பல்களைக் கொழும்புத் துறைமுகத்தை நோக்கிச் செலுத்தினன்.

அக்காலத்தில் ‘கொலம் தோட்டை’ அல்லது ‘கொலம்பா’ என்றழைக்கப்பட்ட கொழும்பு, கப்பல்கள் தங்குவதற்கேற்ற துறையாக இருந்தது. முசுலிம் வியாபாரிகள் கறுவா, தேங்காய், யானைகள் முதலிய பொருள்களை ஏற்றுமதி செய்யும் துறையாதலால், கொழும்பு நகரத்தில் முசுலிம்களே மிகுதியாக இருந்தனர். அவர்கள் தொழுகை நடத்துவதற்கேற்ற மசூதியும், அவர்களது வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றமும், அகன்ற கடைத் தெருவும் இந்த நகரத்தில் அமைந்திருந்தன. தொன்லோரென்சோ வந்த பொழுது, முசுலிம் வியாபாரிகள் தமக்கு ஊறு விளையுமெனக் கருதி அச்சமடைந்தனர். உலோரென்சோ தன்னல் யாதொரு துன்பமும் அவர்களுக்கு விளையாதென உறுதி கூறியும், அவர்கள் நம்பாமல் ஊருக்குள் இறங்கி வந்த போர்த்துக்கீச மாலுமிகளைத் துன்புறுத்தத் தொடங்கினர். அதனல் போர்த்துக்கீசக் கப்பல்களினின்றும் பீரங்கிகளின் வெடி எழுப்பப் பெற்றதும், கொழும்பு நகர மாந்தர் அஞ்சி அமைதியாக நடந்து கொள்ளலாயினர்.

இவ்வாறு போர்த்துக்கீசர் வந்திறங்கியமைபற்றிக் கோட்டை அரசனுக்குச் செய்தி அறிவிக்கப்பட்டது. “நமது கொழும்புத் துறையில் வெள்ளை நிறம் படைத்த புதியதொரு சாதியார் வந்துள்ளனர்; அவர்கள் இருப்புச் சட்டையும் தொப்பியும் அணிந்துள்ளனர்; அவர்கள்

சற்றுமோய்ந்திராது, இங்குமங்கும் சென்ற வண்ணமே உள்ளனர்; அவர்கள் உண்பனவற்றைப் பார்த்தால், கல்லும் இரத்தமும் (உரொட்டித்துண்டும், உவைனும்) போலத் தோன்றுகின்றன! அவர்கள் பொன், வெள்ளி நாணயங்களைத் தாராளமாக வழங்கிப் பண்டங்களைப் பெறுகின்றனர். யுகாந்த காலத்தில் பாறைகளில் மோதி உடையும் இடியின் முழக்கம் போல, அவர்களது பீரங்கிகளின் முழக்கம் தோன்றுகிறது!'' என்று மன்னனிடம் மக்கள் கூறியதாக இராசா வலியம் என்ற நூல் கூறுகின்றது.



படம் 6. போர்த்துக்கீசரின் ஐந்து கேடக வீரமுத்திரை

அரசனை **வீரபராக்கிரமபாகுவும்** அவனது அதிகாரிகளும் போர்த்துக்கீசரை வரவேற்கத் தீர்மானித்தனர். உலோரென்சோ அனுப்பிய தூதனாகிய டீ சூசா கோட்டை இராசதானியை அடைந்தான். "ஒரு நீண்ட கூடத்தில், அழகியதொரு சிம்மாசனத்தின்மீது, இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற முடியணிந்தவனாய் அந்த நாட்டு மன்னன் அமர்ந்திருந்தான்; பிரபுக்கள் அங்கே குழுமியிருந்தனர்; வெள்ளித் தீபங்களின் ஒளியில் அந்தக் கூடம் மிக அழகாக மிளிர்ந்தது. அரசன், நமது தூதருடன் அன்புடன் பேசி, ஆண்டு தோறும் 150 எடை கறுவாவைத் திறையாக அளிப்பதாக ஏற்றுக்

கொண்டு, அப்போதே அந்த ஆண்டிற்குரிய திறையாகக் கறுவா அளித்தான்.'' என்று போர்த்துக்கீச வரலாறுகள் இந்த முதல் உடன்படிக்கைக் காட்சியை வருணிக்கின் றன கோட்டை மன்னனின் துறைமுகங்களைப் பகைவ ரிடமிருந்து பாதுகாத்துத் தருவதாகப் போர்த்துக்கீசர் உறுதி கூறினர். கொழும்புத் துறையின் அருகில் ஒரு சிறு பண்டகசாலையும் கிறித்துவ மத தேவாலயமும் அமைத்து, ஒரு பாறைமீது ஐந்து கேடகங்கள் கொண்ட போர்த்துக்கீச வீரமுத்திரையையும் பொறித்துவிட்டு, உலோரென்சோ திரும்பிச் சென்றுன். அவன் சென்ற சில நாட்களுக்குள் முசுலிம் வியாபாரிகள் பெரும் கலவரம் விளைத்துச், சிங்களவரின் துணையுடன் போர்த்துக்கீச ரைத் தாக்கினர். அப்போது போர்த்துக்கீசர் வேறு போர்களில் ஈடுபட்டிருந்தமையால், 1507-ல் தமது கொழும்புப் பண்டகசாலையை மூடிவிட்டுக் கொச்சியை நோக்கிச் சென்றனர்.

ஆயினும், இலங்கையில் தமது வியாபாரம் வேரூன்ற வேண்டும் என்ற கருத்துப் போர்த்துக்கீசரின் உள்ளத்தினின்றும் அகலவில்லை. 1509-ல் ஆல்பான்சோ அல்புகூர்க்கே போர்த்துக்கீசரின் இந்திய தேசாதி பதியாக நியமனம் பெற்றதினின்றும், அந்தக் கருத்து மேலும் வலியுறுத்தப்பட்டது. அவன் வருவதற்கு முன் னரே போர்த்துக்கீச அரசன் எமானுவேல் எழுதியதோர் கடிதம் போர்த்துக்கீசரின் நோக்கத்தை உணர்த்து கின்றது. அந்தக் கடிதத்தின் பிரதான பகுதிகள் பின் வருமாறு :—

''.........சிங்களத் தீவில் நம் ஆதிக்கம் நிலைபெறுவ தற்கான எல்லா முயற்சிகளும் நீவிர் செய்தல் வேண்டும்; உயர்ந்த வகைக் கறுவாவும் அருமையான முத்துக்களும், யானைகளும் அந்தத் தீவில் கிடைக்கின்றன என்று நான் அறிகிறேன். மேலும், இந்தியாவிற்கு அருகில், வங்கா ளம், மலாக்கா முதலிய இடங்களுக்குச் செல்லும் மார்க்

கத்தில் கேந்திரமாக அது அமைந்திருப்பதால், அங்கு ஒரு கோட்டையும் நமது இந்திய தேசாதிபதிகளின் இருப்பிடமும் அமைக்கப்படுமானுல், நமது வியாபாரமும் படைவலிமையும் பெருக ஏதுவாகும்......".

அல்புகூர்க்கே போர்த்துக்கீச ஆட்சியை நிறுவுவதில் ஊக்கம் படைத்தவனுதலின், 1510-ம் ஆண்டில் **கோவைத்** துறைமுகத்தைக் கைப்பற்றி அங்குக் கோட்டையும் மதில் களும் அமைத்தான். பிறகு அதனை இராசதானியாகச் செய்ததுடன், முசுலிம்களையும் இந்துக்களையும் கிறித்தவ



படம் 7. போர்த்துக்கீசர் கொழும்பில் கட்டிய முற்கோட்டை

ராகுமாறு துன்புறுத்திஞன்; போர்த்துக்கீசருடன் கீழ் நாட்டினர் மணம் புரிவதையும் ஆதரித்தான். அவனது ஆட்சிக் காலத்தில் ஏடன், ஓர்மசு, மலாக்கா என்ற இடங்

களில் கோட்டைகள் நிறுவப்பட்டு, அரண் செய்யப் பட்டன. இதனால், இந்து சமுத்திரத்தில் போர்த்துக் கீசரின் கடல்வலிமை நிகரற்று விளங்கியது. அவனுக்குப் பிறகு தேசாதிபதியாகப் பதவிபெற்ற அல்பர்கேரியா, தனது அரசனிடமிருந்து இலங்கைத் தீவில் கோட்டை அமைக்குமாறு வந்த செய்தியை ஏற்றுக்கொண்டு, 1518-ம் ஆண்டில் ஒரு கடற்படையுடன் கொழும்பு நோக்கிப் புறப்பட்டான். புயற் காற்றால் அவன் காலி நோக்கிச் செல்ல நேர்ந்ததாயினும், அங்கிருந்து கொழும் பிற்கு வந்து, கோட்டை இராசதானிக்குத் தூது அனுப்பி னன். தனது சகோதரனின் பகைமைக்கு அஞ்சி, போர்த் துக்கீசரின் உறவை நாடிய தர்ம பராக்கிரம பாகு, அவர் களுக்குக் கோட்டை ஒன்று அமைப்பதற்கு அனுமதி கொடுத்தபொழுது, முசுலிம்களின் தூண்டுதலால் சிங் களவர் எதிர்த்தனர். ஆயினும் அல்பர்கேரியா விடா முயற்சியுடன் கொழும்பு நகரத்தைத் தாக்கி, முசுலிம்கள் தங்கியிருந்த பகுதியைத் தீக்கிரையாக்கிவிட்டுக் கோட்டை இராசதானியை நோக்கிப் படை எடுத்தான். அவன் மக்களின் எதிர்ப்புக்கு ஆற்ருது திரும்ப நேர்ந்ததாயி னும், தர்ம பராக்கிரம பாகுவின் சம்மதம் பெற்றுக் கொழும்பில் ஒரு கோட்டையை அமைக்கலானன். கொழும்புத் துறைமுகத்தின் தென்மேற்குப் பாகத்தில் கடலில் நீண்டிருந்த நிலப்பகுதியில் இந்தக் கோட்டையை அமைத்துக் கொண்டனர். மூன்று புறங்களில் கடலும், நகரத்தோடு தொடர்பு உள்ள பகுதியில் ஒரு பெரிய கால்வாயும் இதற்கு அரண்களாக அமைந்தன. இதனை அக்காலத்திய ஐரோப்பிய கோட்டைகளைப் போன்ற முறையில் கட்டி முடித்தனர். பிறகு அரசனிடமிருந்து கறுவாவும், யானைகளும் கப்பமாகப் பெற்றபின், அல்பர் கேரியா கோட்டையின் தளபதியாகச் சில்வெய்ராவை நியமித்துச் சென்றான்.

இவ்வாறு போர்த்துக்கீசர் கோட்டையை அமைத்தது,

தர்ம பராக்கிரம பாகுவின் மரணத்திற்கே காரணமாயிற்று என்பதை முன் அத்தியாயத்தில் படித்தோமல்லவா? அவனது சகோதரனுன விசயபாகு முசுலிம்களின் துணை கொண்டு பதவி பெற்றவனுதலின், போர்த்துக்கீசரை அழிக்கச் சாமொரினது உதவியை நாடினுன். ஆனுல் சில்வெய்ராவின் எதிர்பாராத தாக்குதலினுல், சாமொரினது படை சிதறிவிட்டது. அதனுல் விசயபாகு போர்த்துக்கீசரின் நட்புறவை நாடலானுன். இந்த நிலையில், இந்தியாவிலிருந்த போர்த்துக்கீச தேசாதிபதி உலோபச டீ சிக்வீரா 1520-ல் டீ பிரிட்டோ என்ற தளபதியைத் தமது கோட்டையைப் பலப்படுத்துமாறு அனுப்பி வைத்தான். அவன் கோட்டையைச் செப்பனிடும்பொழுது இரு முறை முசுலிம்கள் கலகம் விளைத்தமையால், கொழும்பு நகரத்தின் முசுலிம் பகுதியை எரித்துவிட்டான். இறுதியில் கோவையினின்றும் உதவி பெற்றுக் கொழும்புக் கோட்டையின் வலிமையை நிலைநாட்டினுன்.

அப்போது விசயபாகுவிற்கும் அவன் புதல்வர்களுக்குமிடையே மூண்ட பகைமையால், நாடு குழப்பத்தில் ஆழ்ந்தது. விசயபாகு கொல்லப்பட்டு, அவனது மூன்று புதல்வர்களும் நாட்டைப் பங்கிட்டுக்கொண்டனர். அப்போது பிரிட்டோ சென்று விட்டான். அவனுக்குப் பிறகு தளபதியாக அமைந்த திலிமாச் என்பான், இலங்கையில் ஒரு கோட்டை அவசியமில்லை யென்றும், பண்டகசாலையே போதுமானதென்றும் எழுதினுன். அதை ஏற்றுக்கொண்டு, கொழும்பிலிருந்த கோட்டையை அழித்துவிடுமாறு கோவையிலிருந்த தேசாதிபதி கூறவே, அவ்வாறே 1524-ஆம் ஆண்டில் கோட்டையை அழித்துவிட்டு, பண்டகசாலையை மாத்திரம் வைத்துக்கொண்டிருந்தனர். இந்தச் செய்கையின் மூலமாகப் புவனேக பாகுவின் நட்புறவையும் சிங்களவரின் ஆதரவையும் பெறக்கூடுமென்று போர்த்துக்கீசர் நம்பினுர்கள். ஆயினும், இலங்கையில் நேர்ந்த அரசியல்

போராட்டங்களில் அவர்கள் விரைவில் ஈடுபடுமாறு நேர்ந்துவிட்டது.

## வினுக்கள்

1. எக்காரணத்தினுல் ஐரோப்பியர் தரைமார்க்கத்தை உபயோகிக்காமல் விடுத்தனர்?

2. கடல் மார்க்கத்தில் ஊக்கம் செலுத்திய மன்னன் யார்?

3. 'புயல்முனே' என்பது எது? அதைக் கண்டுபிடித்த மாலுமி யார்?

4. வாசுகோ-ட-காமா வந்த மார்க்கத்தை விவரித்து எழுதுக.

5. புதிய கடல் மார்க்கம் கண்டு பிடித்தமையால் விளைந்த பலன்கள் யாவை?

6. அல்மெய்டாவின் கொள்கை யாது?

7. முதன் முதல் எந்த ஆண்டில், எக் காரணத்தினுல் போர்த்துக்கீசர் இலங்கையை அடைந்தனர்? அவர்களின் தலைவனுக வந்தவன் யார்?

8. 'இராசவலியம்' என்ற வரலாற்றுநூல் போர்த்துக்கீசரை எவ்வாறு வருணிக்கிறது?

9. இரண்டாம் முறையாக எப்பொழுது கொழும்பு பண்டகசாலை அமைக்கப்பட்டது? கோட்டையை அமைக்க அனுமதி அளித்தது யார்?

10. விசயபாகுவிற்கும் போர்த்துக்கீசருக்குமிடையே எத்தகைய உறவு காணப்பட்டது?

11. கோட்டையை எப்பொழுது, எக்காரணத்தால், போர்த்துக்கீசர் அழித்துவிட்டுச் சென்றனர்?

## பயிற்சி

வாசுகோ-ட-காமா வந்த மார்க்கத்தை உலகப் படமொன்றில் குறிப்பிடுக.

# 3. புவனேகபாகுவும் மாயாதுன்னேயும் (1521—1551)

இனி, எவ்வாறு கோட்டை இராச்சியம் சகோதரர்களிடையே நேர்ந்த பகைமையால் ஒற்றுமை குலேந்து வீழ்ச்சியுற்ற தென்பதையும், போர்த்துக்கீசர் இலங்கை அரசியலில் ஊக்கத்துடன் ஈடுபட நேர்ந்த வரலாற்றையும் பற்றி ஆராய்வோம்.

போர்த்துக்கீசர் கொழும்புக் கோட்டையை அழித்துவிட்டுச் சென்றதும், புவனேகபாகுவிற்குப் பெரும் கவலே உண்டாகியது. அவனுடைய இளேய சகோதரனை மாயாதுன்னே சீத வாக்கை இராச்சியத்தை ஆண்டு வந்த போதிலும், கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்றி ஆளவேண்டுமென்றும், பண்டைய கோட்டை அரசர்கள் போல இலங்கை முழுமைக்கும் சக்கரவர்த்தியாக விளங்க வேண்டுமென்றும் கனவு கண்டு கொண்டிருந்தான். இதனே அறிந்த புவனேகபாகு பெரிதும் அச்சமும் துயரமும் அடைந்தான். போர்த்துக்கீசர் சென்றுவிட்டமைக்குக் காரணம் முசுலிம்களிடம் அவர்கள் கொண்டிருந்த அச்சமும் வெறுப்புமே யாகும் என்று தவருக நினேத்த மாயாதுன்னே, அவர்களது எதிரிகளான முசுலிம்களேத் தனது நாட்டிற்கு அழைத்து முக்கிய பதவிகளில் அவர்களே நியமித்தான். பிறகு அவர்களில் சிலரைத் தூதுவராக அனுப்பிக் கள்ளிக்கோட்டை சாமொரினேக் கடற்படை அனுப்பி உதவுமாறு வேண்டினன்.

சாமொரினது கடற்படை வந்ததும் கொழும்புத் துறைமுகத்தில் ஒரு சிறு போர் நிகழ்ந்தது. போர்த்துக்கீசப் பண்டகசாலேயின் தலேவனும், சாலப்பு ஆராய்சி என்ற சிங்கள வீரனும் துறைமுகத்தில் இறங்கியிருந்த முசுலிம் வீரர்களேத் துரத்திவிட்டனர். மீண்டும் ஒரு முறை சாமொரினது கடற்படை வந்ததாயினும், அது

வும் தோல்வியுற்றுச் சென்றது. புவனேகபாகு கொழும்பி லிருந்த முசுலிம்களை அனுப்பிவிடவே, அவர்களை மாயா துன்னை தன் நாட்டில் வரவேற்றான். மூன்றும் முறை யாகச் சாமொரினது கடற்படை வந்ததும், அச்சமடைந்த சிங்களவர் பலரும் மாயாதுன்னையின் பக்கம் சேர்ந்தனர். உடனே, 1527-ஆம் ஆண்டில் மாயாதுன்னை பெரும்படை யுடன் கோட்டை இராசதானியை முற்றுகையிட்டான். ஆனால், புவனேகபாகுவிற்குத் துணையாகக் கோவை யிலிருந்து டீமெல்லோ தலைமையின்கீழ்ப் போர்த்துக்கீசக் கடற்படை வருவதாக அறிந்ததும், மாயாதுன்னை சீத வாக்கைக்குத் திரும்பிச் சென்று விட்டான் ; சாமொரினது கடற்படையும் மறைந்துவிட்டது. மாயாதுன்னை போர்த் துக்கீசருக்குக் கப்பம் செலுத்துவதாக ஏற்றுக் கொண்ட மையால், போர்த்துக்கீசர் சீதவாக்கையைத் தாக்காமல் விடுத்துச் சென்றனர்.

ஆயினும், மாயாதுன்னை தனது பகைமையை மறந்துவிடவில்லை. 1527-ஆம் ஆண்டிலிருந்து 1539 வரை பன்னிரண்டு ஆண்டுகளிலும் பன்முறை படை யெடுத்தவண்ணமிருந்தான். 1537-ஆம் ஆண்டில், பெரிய தொரு மலையாளக் கடற்படை வந்ததும், இதுவே தருண மெனக் கருதி, மாயாதுன்னை தனது படைகளுடன் சென்று கோட்டையை முற்றுகையிட்டான். உடனே புவனேகபாகு முறையிடவே, கோவையினின்றும் போர்த் துக்கீசக் கடற்படை அபோன்சோ டீ சூசாவால் நடத்தப் பெற்று, இராமேசுவரத்திற்கு அருகில் சாமொரினது கடற் படையை முறியடித்து, வெற்றி மாலை சூடியது. இதன் பின்னர் மாயாதுன்னை அச்சமடைந்து புவனேகபாகு வுடன் சமாதானம் செய்துகொண்டான்.

எனினும், மறு ஆண்டில் மீண்டும் போர் மூண்டது. அதற்குப் பிரதான காரணம், புவனேகபாகுவின் கொள்கையில் தோன்றிய மாறுதலேயாகும். அவனுக்கு மூத்த மனைவியிடம் ஒரு பெண்ணும், இளைய மனைவி

## கோட்டை இராச்சிய அரசர்கள் வம்சாவளி [1484—1597]

- எட்டாவது வீரபராக்கிரம பாகு (1484—1509)
  - தர்ம பராக்கிரம பாகு IX (1509—1518)
  - விசயபாகு VII (1518—1521)
    - புவனேகபாகு VII (1521—1551)
      - மகள் × விதியன்
        - தர்மபாலன் (1551—1597)
      - புதல்வர்கள் (2) (மரணம் : 1546)
    - இரயிகம் பண்டாரன் (மரணம் : 1538)
    - மாயாதுன்னை (1521—1581)
      - (மூத்தமகன்)
      - முதலாம் இராசசிங்கன் (திகிரி பண்டாரன்) (1581—1592)

[குறிப்பு :—இதனில் சீதவாக்கை மன்னர்களின் வம்சாவளியும் சேர்ந்துள்ளது.]

மூலம் இரு குமாரர்களும் இருந்தனர். மாயாதுன்னையின் பேராசையைக் கண்டு அஞ்சிய புவனேகபாகு, தனது மகளைத் தன் மருமகனும் சிறந்த வீரனுமாகிய விதிய பண்டாரனுக்கு மணம் புரிவித்திருந்தான். இதனால் தனது உரிமைக்கு இடையூறு வருமென நினைத்த மாயாதுன்னை பெரிதும் கோபமடைந்தான். அப்போது இரயிகம் பண்டாரன் இறந்தமையால், அவனது இராச்சியமும் மாயாதுன்னைக்கு உரியதாயிற்று. எனவே, பெரிய படையொன்றைத் திரட்டிக்கொண்டு, கோட்டை இராச்சியத்தின்மீது படை எடுத்தான். அப்போது அவனுக்கு உதவி புரியுமாறு சாமொரின் அனுப்பிய படை ஒன்று, புத்தளத்திலிறங்கி, நீர் கொழும்பு வழியாகச் சீதவாக்கைக்குச் செல்லத்தொடங்கியது. விதிய பண்டாரனும் போர்த்துக்கீசரும் மாயாதுன்னையின் படைகளைத்தடுத்து நிற்கும் பொழுதே, போர்த்துக்கீசரின் கடற்படை ஒன்று இந்தியாவினின்றும் வரலாயிற்று. அந்தப் படை, நீர் கொழும்பிலிருந்த மலையாளப் படையை அழித்து அவர்களது கப்பல்களையும் நாசமாக்கியது. பிறகு போர்த்துக்கீசப் படைகள் களனி ஆற்றைக் கடந்து, சீதவாக்கையை நோக்கிச் செல்லத் தொடங்கியதும், மாயாதுன்னை பணிய நேர்ந்தது. தனது வசமிருந்த மலையாள வீரர்களின் தலைவர்களை, போர்த்துக்கீசரைத் திருப்திபடுத்துவதற்காக அவன் கொல்ல நேர்ந்தது. அதனால் சாமொரினிடமிருந்து உதவி வருவதும் நின்றுபோயிற்று. இவ்வாறான நிலையில், 1539-ல் மாயாதுன்னை தான் கைப்பற்றிய பிரதேசங்களையும், துறைமுகங்களையும் திருப்பிக் கொடுத்துப் போர்த்துக்கீசருடனும் புவனேகபாகுவுடனும் மீண்டும் உடன்படிக்கை செய்துகொண்டான்.

புவனேகபாகுவிற்குத் தான் வயது முதிர்ச்சியுறுவதும், மாயாதுன்னை இடைவிடாமல் கோட்டையைக் கைப்பற்ற முயல்வதும் பெரிதும் கவலையை விளைத்தன.

அவன் தனது இளைய மனைவியின் குமாரர்கள் இருவரும் பிற்காலத்தில் மாயாதுன்னையை எதிர்த்து நிற்க இயலாதென்று கருதித் தனது பேரனும் விதியபண்டாரனின் புதல்வனுமான **தர்மபாலனையே** தனக்கு உகந்தவனாகத் தேர்ந்தெடுத்தான். அவனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டுவதற்குப் போர்த்துக்கீசரின் உதவி வேண்டுமென்ற எண்ணத்தினால், ஓர் உபாயத்தைக் கையாண்டான். 1540-ம் ஆண்டில், தர்மபாலனின் உருவமொன்றையும் ஒரு மகுடத்தையும் பொன்னாற் செய்வித்து, அவற்றை எடுத்துச் செல்லும் தூதர்களாக ஸ்ரீ இராதாரக்க பண்டிதரையும், சாலப்பு ஆராச்சியையும் நியமித்தான். அந்த தூதர்களும், போர்த்துக்கீச அதிகாரிகளும் 1542-ல் புறப்பட்டுச் சென்றனர். மறு ஆண்டில், போர்த்துக்கீச மன்னன் **மூன்றாம் சோன்** அந்த உருவத்திற்கு மகுடம் புனைந்து, தர்மபாலனையே கோட்டை அரசனாய் ஏற்றுக் கொள்வதாய் உறுதியளித்தான். அவனுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறும் போர்த்துக்கீச அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டான்.

புவனேகபாகுவின் யோசனைப்படி, அவனது தூதர்களிருவரும் தமது நாட்டில் மதப்பிரசாரத்திற்காகக் கிறித்தவக் குருமாரை அனுப்புமாறு சோன் அரசனை வேண்டினர். இந்த வேண்டுகோளைக் கேட்டு மனமகிழ்ந்த சோன் அரசன், இலங்கையில் கொடுமை இழைக்கும் போர்த்துக்கீச அதிகாரிகளைக் கண்டித்து உத்தரவுகள் அனுப்பினான். மேலும், இலங்கையில் கிறித்தவ சமயத்தைப் பரப்புமாறு [பிரான்சிஸ் சபை] குருமாரையும் அனுப்பிவைத்தான். தூதர்களிருவருடனும், தமது சீடர்களுடனும் **விலாடிகோன்டி** என்ற சாமியார் வந்து சேர்ந்தார். தூதர்கள் கொணர்ந்த செய்திகள் கேட்டுப் புவனேகபாகு மனமகிழ்ந்தபோதிலும், தானும் தனது குடிகளும் கிறித்தவராக மாறுவதில் விருப்பம் காட்டவில்லை. ஏனெனில், மதம் மாறினால்

சிங்களவரனைவரும் மாயாதுன்னையை ஆதரிக்கத் தொடங்குவர் என்பதை அவன் அறிவான். இதற்கிடையே, புவனேகபாகு தனது பௌத்திரனை தருமபாலனை இளவரசனாகத் தேர்ந்தெடுத்தமை, மாயாதுன்னைக்கு மட்டுமன்றிப் புவனேகபாகுவின் இளைய மனைவியின் புதல்வருக்கும் கவலையை விளைத்தது. அவர்கள் கோவைக்குச் சென்று, ஞானஸ்நானம் பெற்று கிறித்தவராக மாறிக் கோட்டை அரசுரிமைக்காகப் போர்த்துக்கீசரின் உறவை நாடலாயினர்.

போர்த்துக்கீசரும் அவர்கள்பால் நட்புக் காட்டியமையால், புவனேகபாகு கோபமடைந்து மாயாதுன்னையிடம் நட்புப் பாராட்டத் தொடங்கினான். போர்த்துக்கீச அதிகாரிகள் மக்களுக்கு அநீதி புரிந்து பலவாறு துன்புறுத்தியமையால், அவர்களைக் கண்டு யாவரும் அஞ்சினர். மேலும், அவர்களது வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை. இக்காரணங்களால், புவனேகபாகுவும் மாயாதுன்னையும் ஒன்று சேர்ந்து, கண்டி நாட்டின்மீது படை எடுக்கவும் திட்டமிட்டார்கள். அப்போது கோவையிலிருந்து வந்த போர்த்துக்கீசத் தூதரையும் புவனேகபாகு அலட்சியம் செய்தான். அதனால் கோபமடைந்த போர்த்துக்கீசர் கண்டி நாட்டரசனுக்கு உதவி புரிவதாக வாக்குறுதி கொடுத்தனர். எனினும், போர்த்துக்கீசப் படை கண்டிக்கு விரைவில் வரவில்லை; அதனால் கண்டியரசன் மாயாதுன்னையுடன் சமாதானம் செய்து கொள்ள நேர்ந்தது. பின்னர், பாரெட்டோ தலைமையில் ஒரு போர்த்துக்கீசப் படை வந்தபொழுது, கண்டியரசன் தனது நிபந்தனைகளை நிறைவேற்ற மறுத்தான். எனவே, போர்த்துக்கீசப்படை சீதவாக்கை வழியாகத் திரும்பிவர நேர்ந்தது.

அப்போது மாயாதுன்னை அவர்களிடம் நட்புப் பாராட்டலானான். புவனேகபாகுவிற்கும் போர்த்துக்கீசருக்கு மிடையே பகைமையை உண்டாக்குவதே அவன்

நோக்கமாக இருந்தது. அதனால், புவனேகபாகுவே கண்டிநாட்டில் நிகழ்ந்த சம்பவங்களுக்குக் காரணம் என்று மாயாதுன்னை கூறவே, பாரெட்டோ புவனேக பாகு மீது பெரும் கோபமடைந்தான். பாரெட்டோவின் உதவியால் கோவையிலிருந்த இராசப் பிரதிநிதியின் ஆதரவையும் மாயாதுன்னை பெற முயன்றான். இதனை யறிந்த புவனேகபாகு மாயாதுன்னையின் போலி நட்பை உதறி எறிந்துவிட்டு, மீண்டும் போர்த்துக்கீசர் உறவை நாடலானான்.

இந்த நிலையில் மாயாதுன்னை போர்த்துக்கீசரின் உதவியைப் புவனேகபாகு பெறமுடியாதென்ற எண்ணத் தினால், மீண்டும் கோட்டைமீது படை எடுத்தான். ஆயினும், போர்த்துக்கீசருக்கு, புவனேகபாகுவைக் கைவிட மனமில்லையாகையால், கோவையினின்றும் ஒரு படை அனுப்பப்பட்டது. அந்தப் படை வருவதற்கு முன்னரே, மாயாதுன்னை சீதவாக்கைக்குத் திரும்பி விட்டான். அதனால், அந்தப் படை கண்டிநாட்டில் பிரவேசித்தது. அங்கு அது தோல்வியுற்றுத் திரும்பிய மையால், மீண்டும் புவனேகபாகுவின் மீது போர்த்துக் கீசர் வெறுப்புகொள்ள இடமாயிற்று. அந்த வெறுப்பை வளர்த்த மாயாதுன்னை, தனது புதல்வனைக் கோவைக்குத் தூதனாக அனுப்பினான். புவனேகபாகுவை ஆதரிக்காமல் தன்னைப் போர்த்துக்கீசர் ஆதரித்தால், தான் திறைப் பணம் செலுத்துவதாக மாயாதுன்னை கூறியதை அவன் தெரிவித்தான். அதையறிந்த புவனேகபாகுவும் தனது தூதனாக இராதாரக்க பண்டிதரை அனுப்பவே, கோட்டை இராச்சியத்தின் பிற்கால உரிமை பற்றியும் வழக்கு எழுந்தது. அதனைத் தீர்த்துவைக்க ஒரு நீதிபதியைக் கோவையிலிருந்து போர்த்துக்கீசர் அனுப்பிவைத்தனர். ஆனால், அவர் வருவதற்குள், 1551-ம் ஆண்டில், புவனேகபாகு படை வீரருக்கு உணவளித்துக் கொண் டிருக்கும் பொழுது, அவன்மீது ஆத்திரமடைந்த

போர்த்துக்கீச வீரன் ஒருவனுல் சுட்டுக் கொல்லப்பட்டான். இவ்வாருக, முப்பது ஆண்டுகள் ஆட்சிசெலுத்திய புவனேகபாகுவும் மறைய நேர்ந்தது. அவனுடைய சுயநலமும், சகோதரர்கள்பால் கொண்டிருந்த சந்தேக உணர்ச்சியும், உறுதியற்ற தன்மையும், அவனது வீழ்ச்சிக்குக் காரணங்களாயின. போர்த்துக்கீசருடைய ஆதிக்கம் ஓங்குவதற்குக் காரணமாக இருந்த அவன், இறுதிக்காலத்தில் அவர்களுடைய பகைமையையும் அடைந்தான்.

### விளுக்கள்

1. ஆதியில் புவனேகபாகு கவலேயுறக் காரணம் யாது?
2. 1537-ல் மாயாதுன்னே ஏன் புவனேகபாகுவுடன் சமாதானம் செய்துகொண்டான்?
3. புவனேகபாகு தனது அரசுரிமை விடயமாக செய்த புதிய ஏற்பாடு யாது? அதனுல் நேர்ந்த விளேவுகள் யாவை?
4. மாயாதுன்னேக்குச் சாமொரின் உதவியனுப்பும் வழக்கம் ஏன் நின்று போயிற்று?
5. தர்மபாலனுக்கு எவ்வாறு இளவரசுப் பட்டம் வழங்கப் பட்டது?
6. கிறித்தவக் குருமார் மிகுதியாக எப்பொழுது வரத் தொடங்கினர்?
7. புவனேகபாகு போர்த்துக்கீசரை வெறுக்க நேர்ந்தது, எக்காரணத்தால்?
8. புவனேகபாகுவிற்கும் போர்த்துக்கீசருக்கு மிடையே தோன்றிய பகைமையை மாயாதுன்னே எவ்வாறு பயன்படுத்திக்கொண்டான்?
9. புவனேகபாகு எந்தச் சந்தர்ப்பத்தில், எவ்வாறு மரணமடைந்தான்?

### பயிற்சி

கோட்டை அரசர்களின் வம்சத்தையும், சீதவாக்கை அரசருக்கும் அவர்களுக்கு மிருந்த உறவையும் விளக்க ஓர் அட்டவணே தருக.

# 4. கோட்டை இராச்சியத்தின் அழிவு

1551-ம் ஆண்டில் புவனேகபாகு இறந்ததும், அவனது விருப்பத்தின் பிரகாரம் அவனுடைய பௌத்திரனை தர்மபாலன் அரசனுனன். அவன் சிறுவனுக இருந்தமையால், அவனது தந்தை விதியபண்டாரன் இராசப் பிரதிநிதியாக நியமிக்கப்பெற்ருன். இவ்வாறு ஆட்சி மாறுதலடைந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கோட்டை இராச்சியத்தின் நிதியனைத்தையும் கொள்ளையடிக்க வேண்டுமென்னும் எண்ணம் போர்த்துக்கீசருக்கு உதித்தது. எனவே, கோவையிலிருந்து இராசப் பிரதிநிதியான நொரன்கா தானே நேரில் அந்த நிதியைப் பெறவேண்டுமென்று கொழும்பிற்கு வந்து சேர்ந்தான்.

அவன் தருமபாலன் கிறித்தவனுக மாறிய பின்னரே அரசனுக ஏற்றுக்கொள்ளப்படுவான் என்ற கொள்கையை வெளியிட்டதும், விதியபண்டாரனும் இராதாரக்க பண்டிதரும் நிலைமையை விளக்கிக் கூறி, பின்வரும் நிபந்தனைகளுக்கு நொரன்காவின் சம்மதம் பெற்றனர்: (1) மாயாதுன்னை உயிருடனிருக்கும் பொழுது தருமபாலன் கிறித்தவ சமயத்தைத் தழுவினுல், அவனது சிங்களக் குடிகள் பலரும் மாயாதுன்னையை நாடுவர். ஆதலின், அந்த மதமாற்றம் பின்னர்ச் செய்யப்படவேண்டும். (2) மாயாதுன்னை கைப்பற்றியுள்ள கோட்டை இராச்சியப் பகுதிகளை மீட்டுத் தரவேண்டும். (3) அவ்வாறு மீட்டுத் தந்தால், பொக்கிசங்கள் அனைத்தும் போர்த்துக்கீசர் வசம் அளிக்கப்படும்; புவனேகபாகுவால் பறிக்கப்பட்ட நிலங்கள் மீண்டும் அக்கிறித்தவருக்குத் திருப்பித் தரப்படும். இவற்றை அங்கீகரித்த நொரன்கா திரவிய ஆசையால், சீதவாக்கைமீது படை எடுத்தான். மாயாதுன்னை எங்கோ மறைந்து விட்டமையால், அவனது நகரத்தை அழித்து, அரண்மனையையும்

இந்துக் கோயில் விருந்தையையும் பாழ்படுத்திவிட்டு நொரன்கா திரும்பிஞன். இதற்கிடையில், அவனது கட்டளேயின் பிரகாரம் விதியனும் இராதாரக்க பண்டிதர் முதலியவர்களும் பொக்கிசத்தை ஒப்படைக்குமாறு பெரிதும் துன்புறுத்தப்பட்டனர். இளேஞனை தரும பாலனும் நொரன்காவால் பலவாறு அவமதிக்கப்பட்டான். அப்போது ஓர்மசுக் கருகில் போர் விளேந்தமையால், நொரன்கா புறப்பட்டுச் செல்ல நேர்ந்தது. நொரன்கா பேராசையே உருவெடுத்தவன்; பொருள் வேட்கையால், எத்தகைய கொடும் செயலும் துணிந்து செய்யக் கூடியவன். போர்த்துக்கீச அரசனின் பாதுகாப்பும் ஆதரவும் பெற்றிருந்தும், தருமபாலனே அவன் துன் புறுத்தத் தவறவில்லே.

நொரன்கா சென்றதும், விதியன் திரும்பிவந்து இராசப் பிரதிநிதியாக அமர்ந்தான். அவன் ஆற்றலும் மன உறுதியும் வாய்ந்தவன். அவன் போர்த்துக்கீசர்மீது பழிவாங்கும் எண்ணத்துடன், அவர்களேப் பலவாறு துன்புறுத்தத் தொடங்கிஞன். போர்த்துக்கீச அரச னுக்கு அளிக்கவேண்டிய திறைப்பணத்தை நிறுத்தி வைத்ததுடன், கிறித்தவரின் ஆலயங்களேச் சிதைத்தும் அவர்களது நில உரிமைகளேப் பறித்தும் இடையூறு விளேத்தான். அவனது வலிமையைக் கண்டு மாயா துன்னேயும் யாழ்ப்பாணத்தரசனும் அஞ்சினர். விதிய ஞல் நிகழ்ந்த கொடுமைகளே உணர்ந்த போர்த்துக்கீச அரசன், இவற்றிற்குக் காரணம் நொரன்காவின் தீச் செயல்களே என்பதை அறிந்ததும், பொக்கிசத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுமாறும் விதியனுடன் சமாதானம் செய்து கொள்ளுமாறும் போர்த்துக்கீச அதிகாரிகளுக்குக் கட்டளே யிட்டான். அதன் பின்னர்ப் போர்த்துக்கீசர் விதியனேக் கோட்டையின் இராசப் பிரதிநிதியாக ஏற்றுக் கொள்ளவே, அவனும் சினம் தணிந்து கிறித்தவர் மீது கொடுமைகள் இழைப்பதை நிறுத்திஞன். ஆயினும்,

தருமபாலனுக்கு முழுப் பொக்கிசமும் திருப்பியளிக்கப் படாமல், அதன் ஒரு பகுதியே கொடுக்கப்பட்டது.

1554-ல் போர்த்துக்கீசர் தமது படைப் பலத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகக் கொழும்புக் கோட்டையைப் பெரிதாகக் கட்டுவதற்கு முற்பட்டனர். இதனை வெறுத்த விதியன் கிறித்தவர்களை மீண்டும் துன்புறுத்தியதுடன், தானே மன்னனுவதற்கும் எத்தனித்தான்; உடனே போர்த்துக்கீசர் விதியனைக் கைது செய்து, கொழும்பிற்கு அழைத்துச் சென்று அங்கே சிறைப்படுத்தினர். ஆயினும் விதியனுடைய மனைவி புரிந்த தந்திரச் செயலால், விதியபண்டாரன் சிறையினின்றும் தப்பிச் சென்று படை திரட்டினுன். அவன் சென்ற இட மெங்கும் கிறித்தவர்களைத் துன்புறுத்தியமையால், அவனைக் கண்டு அனைவரும் அஞ்சி ஒடுங்கினர். அதனுல் 1552-ம் ஆண்டில் இருந்த நிலையைப் பற்றிக் கிறித்தவ குருமார்களில் ஒருவர் பின்வருமாறு கூறினுர்: "விதியபண்டாரனுடைய பெயரைக் கேட்டுக் கிறித்தவ மக்கள் நடுக்கமுறுகின்றனர்; அவர்களில் பலர் மீண்டும் தமது புராதன மதங்களுக்கு மாறிவிட எத்தனிக்கின்றனர். இத்தகைய இடையூறுகள் யாவும், போர்த்துக்கீசர் இங்கு புரிந்துள்ள அநீதிகள் காரணமாகவே விளைந்துள்ளன."

விதியபண்டாரனுக்கு எதிராக மாயாதுன்னை உதவியளித்தமையால், போர்த்துக்கீசரும் சீதவாக்கைப் படைகளும் விதியனைத் தொடர்ந்து சென்று அவனை முறியடித்தன. ஆனுல், அவன் சப்தகோறளைக்கு ஓடிவிட்டான். அங்கும் மாயாதுன்னையின் படைகள் நெருங்கவே, விதியன் தனது பொக்கிசங்களுடன் யாழ்ப்பாண நாடு சென்று செகராசசேகரனிடம் அடைக்கலம் புகுந்தான். அவர்களிருவரும் படைகளைச் சேகரித்துப் போருக்கு ஆயத்தம் புரிவதற்குள், ஒருநாள் தற்செயலாக நேர்ந்த வெடிவிபத்தால் விதியன் மரண

மடைந்தான். அவனது பொக்கிசங்கள் யாவும் செக ராசசேகரனிடம் சிக்கிவிட்டன. புவனேகபாகுவின் மருமகனுன விதியபண்டாரன் நிகரற்ற வீரன். அவனது கம்பீரமான தோற்றத்தையும் துணிச்சலையும் ஆற்றலையும் குறித்து அந்நிய நாட்டினரும் நன்கு வருணித்துள்ளனர். திறமை மிகுந்தவனுயினும், புத்தி சாதுரியமும் தீர்க்காலோசனையும் இல்லாதவனுகையால், விதியன் வீழ்ச்சியுற நேர்ந்தது. அவனுக்குப் பிறகு போர்த்துக்கீசரை எதிர்த்து நிற்கவல்ல வீரர் எவரும் தோன்றுமையால், விரைவில் கோட்டை இராச்சியம் வீழ்ச்சியுற நேர்ந்தது.

விதியன் மறைந்தமையால், தருமபாலன் மதம் மாறுவது எளிதாயிற்று. 1556-ல் அவனும் அவனது மனைவியும் கிறித்தவராக மாறினர். தருமபாலன் தொன்சுவான் தருமபாலன் என்ற பெயர் தரித்தான். இராதாரக்க பண்டிதர் போன்ற மந்திரிகளும் பிரபுக்களும் இன்னும் பலரும் அரசனைப் போலவே தாமும் கிறித்தவ மார்க்கத்தைப் பின்பற்றலாயினர். இவ்வாறு உயர்ந்த குடும்பத்தினர் பலரும் புதிய மதத்தைத் தழுவிய போதிலும், சிங்களவரிற் பெரும்பாலோர் வெறுப்புற்று, மாயாதுன்னையைச் சார்ந்தனர். இத்தகைய தருணத்தை எதிர்நோக்கியிருந்த மாயாதுன்னையும், தானே கோட்டை இராச்சியத்திற்கு உரிமை வாய்ந்த மன்னனென்று பிரகடனம் செய்துகொண்டு, கோட்டை இராசதானி மீது படை எடுத்தான். ஆயினும், கடற்படைகளின் உதவியால் போர்த்துக்கீசர் அவனது முற்றுகையைச் சமாளித்தனர். இறுதியில், மாயாதுன்னை முற்றுகை புரிவதை விடுத்துத் திரும்ப நேர்ந்தது.

மீண்டும், யாழ்ப்பாணத்தில் போர் நிகழ்ந்த தருணத்தில் மாயாதுன்னை கோட்டையைத் தாக்கத் தொடங்கினுன். அப்பொழுதும் முற்றுகையைப் போர்த்துக்கீசர் எதிர்த்து நின்றனராயினும், 1562-ஆம் ஆண்டில்

முல்லேரியாவில் அவர்களது படை மாயாதுன்னையின் மகன் இராசசிங்கனிடம் தோல்வியுற்றது. பிறகு கோட்டை மீண்டும் முற்றுகை இடப்பெற்று, அங்கு வாழ்ந்த மக்கள் பெரிதும் இடர்ப்பட்டமையால், போர்த்துக்கீசர் அந்த நகரத்தைப் புறக்கணித்துத் தருமபாலனை யும் தம்முடன் அழைத்துக்கொண்டு கொழும்பிற்குச் சென்று விட்டனர். இவ்வாறு, நெடுங்காலம் புகழுடன் விளங்கிய ஸ்ரீ சயவர்த்தனக் கோட்டை அழி நிலையை அடைந்து, விரைவில் பாழடைந்த நகர மாயிற்று.

கொழும்பு நகரத்திலே வாழ்ந்த தருமபாலனுடைய நிலைமையும் இவ்வாறே அழிநிலைக் கதியில் இருந்தது எனலாம். அவன் தனது மூத்த மனையாள் இறந்த பின்பு, கண்டியரசன் மகளாகிய **தோனகதெரினவை** இளைய தாரமாக மணந்து கொண்டான். மாயாதுன்னை யுடனும் மற்றவர்களுடனும் நிகழ்ந்த போர்களில் அவ னுக்கு ஒரு சம்பந்தமும் இல்லை. இடையே, மாயா துன்னையின் சூழ்ச்சியால் அவன் விட பானத்தை அருந்திய காரணத்தால், பற்களை இழந்து நோய்வாய்ப் பட்டான். அவனுடைய இராச்சியத்தை இழந்து விட்ட மையால், போர்த்துக்கீசர் அவனைப் பெயரளவில் மரியா தையுடன் நடத்தினரேயொழிய, அடிக்கடி அவமதித்துத் துன்புறுத்தினர். போர்த்துக்கீச மன்னனால் அளிக்கப் பட்ட வருடாந்தர உபகாரச் சம்பளமும் அவனது ஆடம் பரச் செலவுகளுக்குப் போதவில்லை. எனவே, சொந்த மாகக் கறுவா அனுப்பி அதிக வருமானம் பெற முயன் றும், அதற்கும் போர்த்துக்கீசரின் அனுமதியும் உதவி யும் கிடைக்கவில்லை. இத்தகைய துன்பங்களுக்கிடை யிலும், பொதுமக்கள் அவனைப் பண்டைய இராசகுலத் தின் வழித்தோன்றலாக மதித்துப் பாராட்டி வந்தமை, அவனது நொந்த உள்ளத்திற்குச் சிறிது ஆறுத லளித்தது.

அந்த நிலையிலும் கத்தோலிக்க மதத்தை உள்ளன்புடன் பின்பற்றி வந்தானாகலின், போர்த்துக்கீசருடன் பகைமை பாராட்ட விரும்பவில்லை. ஏனெனில், அத்தகைய பகைமையைப் பயன்படுத்திக் கொண்டு மாயாதுன்னையும் இராசசிங்கனும் கிறித்தவ சமயத்தை இலங்கையினின்றும் ஒழித்து விடுவர் என்ற அச்சம் அவனுக்கிருந்தது. தனது இளைய மனைவி இறந்து மூன்றும் மனையாளை மணந்த பின்னரும், மதப்பற்று காரணமாகவே, ஒரு புதிய ஏற்பாடு செய்வித்தான். அதாவது, தான் சந்ததியின்றி மரிக்க நேர்ந்தால், தனது இராச்சிய உரிமை போர்த்துக்கீச மன்னனையே சாரும் என்பதாகத் தருமபாலன், 1580-ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் இறுதிச் சாசனம் எழுதிவைத்தான். இந்தச் சாசனமே, போர்த்துக்கீசருக்குச் சட்ட பூர்வமான அரசுரிமை கிடைக்க வழிசெய்தது. தர்மபாலன் 1597-ஆம் ஆண்டில் மரணமடைந்ததும், அப்போது போர்த்துகல் நாட்டை ஆண்ட **முதலாம் பிலிப்பு** மன்னன் கோட்டை இராச்சியத்திற்கும் அரசனாகி விட்டானென்று பறையறிவிக்கப்பட்டது.

உடனே போர்த்துக்கீசர் தமது ஆட்சி முறைகளையும் சட்டங்களையும் பின்பற்ற விரும்பினராயினும், மக்களது சம்மதத்தையும் பெறக் கருதி, '**மல்வானை**' என்ற இடத்தில் கோரளைகளிலிருந்து வந்த பிரதிநிதிகளின் சபை ஒன்று கூட்டினர். இறுதியில், அவர்களனைவரும் தீர்மானித்தவாறு இலங்கை நாட்டுச் சட்டதிட்டங்களும் பழக்க வழக்கங்களுமே பின்பற்றப் படவேண்டுமென்பது உறுதியாயிற்று. பலாத்காரமாக மதமாற்றம் புரிவதை நிறுத்துவதென்றும் மல்வானை மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இந்த '**மல்வானை ஒப்பந்தம்**' (1597) சரித்திரப் புகழ் வாய்ந்தது; ஏனெனில், போர்த்துக்கீசரும் குடிகளின் கருத்தை உணர்ந்து நடக்கவும், முன்னர்ச் செய்ததுபோலப் பலாத்காரச் செயல்களில் ஈடுபடாமல்

நாகரிகமான அரசியல் முறைகளை அனுசரிக்கவும் தொடங்கியதற்கு இதுவே முதலாவது சான்ருகும்.

### வினுக்கள்

1. புவனேகபாகு இறந்ததும் கோட்டை அரசியலில் நேர்ந்த மாறுதல்கள் யாவை?

2. நொரன்கா ஏன் இலங்கைக்கு வந்தான்? அவன் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகள் யாவை?

3. நொரன்காவின் தீச்செயல்களால் நேர்ந்த பலன்கள் யாவை?

4. விதியனுக்கும் போர்த்துக்கீசருக்குமிடையே பகைமை தோன்றியதேன்?

5. விதியன் நிகழ்த்திய போராட்டத்தைச் சுருக்கி வரைக.

6. விதியனுடைய மரணத்திற்குப் பின்பு தருமபாலன் நிலைமை எவ்வாருக மாறியது?

7. தருமபாலனது மதப்பற்று எவ்வாறு வெளியாகின்றது?

8. 'மல்வானை ஒப்பந்தம்' எப்போது நிகழ்ந்தது? அதைப்பற்றி விளக்குக.

## 5. சீதவாக்கையின் எழுச்சியும் வீழ்ச்சியும் (1521—1592)

சென்ற அத்தியாயங்களில் எவ்வாறு கோட்டை இராச்சியத்தினின்றும் சீதவாக்கை தனி இராச்சியமாகப் பிரிந்தது என்றும், அங்கு ஆட்சி நடத்திய மாயாதுன்னைக்கும் கோட்டையரசன் புவனேகபாகுவிற்குமிடையே போர்கள் நிகழ்ந்தன என்றும் கூறினேமல்லவா? இனி, முப்பது ஆண்டுகளுக்கு மேலாகப் புவனேகபாகுவுடன் போர் நிகழ்த்திவந்த மாயாதுன்னை, அவனது பௌத்திரனை தர்மபாலனுடன் நிகழ்த்திய போர்களையும், இராசசிங்கனின் ஆட்சித் திறனையும் பற்றி ஆராய்வோம்:

புவனேகபாகு 1551-ல் கொலையுண்டு இறந்ததும்,

தர்மபாலனை அரசனுகவும் அவனது தந்தை விதிய பண்டாரனை இராசப் பிரதிநிதியாகவும் போர்த்துக்கீசர் ஏற்றுக்கொண்டனர். அப்போது கோவையிலிருந்த போர்த்துக்கீச இராசப் பிரதிநிதியான நொரன்கா என்பவன் கோட்டை இராச்சியத்தின் பொக்கிசங்களைப் பற்றிக் கேள்வியுற்றிருந்தாளுதலின், அவற்றைக் கைப் பற்றும் நோக்கத்துடன் இலங்கைக்கு வந்தான். மாயா துன்னையைத் தோற்கடித்துப் போர்த்துக்கிசர் சீத வாக்கையை அழித்து விடுவார்களானுல், தர்மபாலன் கிறித்தவ சமயத்தை ஏற்றுக்கொள்வதற்கும் பழைய பொக்கிசங்களை அவர்களிடம் ஒப்படைப்பதற்கும் தடை யொன்றும் இராதென்று விதியபண்டாரன் முதலிய வர்கள் கூறியமையால், நொரன்கா தர்மபாலனை அரச ளுக அங்கீகரித்தான். பிறகு திரவியங்களைத் தந்து விடுமாறு விதியனையும் மற்றவர்களையும் துன்புறுத்தி ளுன். அதனுற் றேவாலயங்களின் பொக்கிசங்கள் அவனிடம் ஒப்படைக்கப் பெற்று, அவை கிறித்தவ குருமாருக்கும் போர்த்துக்கீசருக்கும் வழங்கப்பெற்றன. ஆயினும், மக்கள் இத்தகைய செயல்களை எதிர்த்துக் கலகம் புரிந்ததுடன், கூட்டம் கூட்டமாகச் சீதவாக் கையை நோக்கிச் செல்லத் தொடங்கியமையால், நொரன்கா மாயாதுன்னை மீது போர்தொடுத்தான்.

போர்த்துக்கீசப் படைகள் சீதவாக்கையில் புகுந்து, நகரங்களைக் கைப்பற்றியும் ஆலயங்களைக் கொள்ளை யடித்தும் துன்பம் விளைத்தன. முக்கியமாக, விருந்தைக் கோயிலும் அழிக்கப்பட்டு புவனேகபாகுவின் மரணத் திற்குப் பழிவாங்கப்பட்டது. ஆனுல், மாயாதுன்னை யைத் தொடர்ந்து செல்லாமல், நொரன்கா தனது படை களுடன் மீண்டும் கோட்டை இராசதானியை அடைந்து பொக்கிசங்களைத் தேடலானுன். ஆனுல், விரைவில் அவன் இந்தியா செல்ல நேர்ந்தமையால், விதிய பண்டாரன் மீண்டும் இராசப் பிரதிநிதியாக அமருவதற்

கும் மாயாதுன்னை தான் இழந்த பெருமையை நிலை நாட்டிக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

மாயாதுன்னை தருமபாலனுக்கு அரசுரிமை வழங்கியது சரியல்ல என்றும், தானே கோட்டை இராச்சியத்திற்கு உரிமை வாய்ந்தவன் என்றும் கூறிக்கொண்டான். போர்த்துக்கீசரை வெறுத்த சிங்களவரும் பௌத்த சந்நியாசிகளும் அவனது பாதுகாப்பை நாடினர். அவனுடைய சீதவாக்கை இராச்சியம், பண்டைய கோட்டை இராச்சியம் போலச் சீரும் சிறப்பும் பெற்றுப் பொலிவுற்றிருந்தது. அவனும் கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்ற எண்ணிச் சிறிது சிறிதாக அந்த இராசதானியைச் சூழ்ந்த பகுதிகளில் தன் ஆட்சியை நிலை நாட்டினான். இறுதியில் கோட்டை இராசதானியையும் முற்றுகையிட்டான். தர்மபாலனும் போர்த்துக்கீசரும் பெரிதும் முயன்று முற்றுகையைச் சமாளித்து வந்தனர். அவர்களுக்கு இந்தியாவினின்றும் சிறிது உதவி வந்ததும், மாயாதுன்னை முற்றுகையைத் தளர்த்திச் சற்றுப் பின் வாங்கிச் செல்லும்படி நேர்ந்தது.

ஆயினும், போர்த்துக்கீசப் படைகளிற் பெரும் பகுதி யாழ்ப்பாணத்திலே சங்கிலிராசனுக்கு எதிராக அனுப்பப்பட்டமையால், மீண்டும் மாயாதுன்னையும் அவனது மகனான இராசசிங்க (திகிரி பண்டாரன்) னும் கோட்டையையும் கொழும்பு நகரத்தையுந் தாக்கினர். எனினும் போர்த்துக்கீசருக்கு மேன்மேலும் உதவிகள் வந்து கொண்டிருந்தமையால், இராசசிங்கனால் கோட்டையைக் கைப்பற்ற முடியவில்லை. இறுதியில் 1562-ல் போர்த்துக்கீசரின் படை ஒன்று இராசசிங்கனால் முல்லேரியாவில் முறியடிக்கப்பட்டது. கோட்டையில் வசித்தவர்கள், முற்றுகை காரணமாகப் பெரிதும் துன்பமடைந்தனர்; அவர்களிற் பலரும் மாயாதுன்னை யிடமேனும் அடைக்கலம் புகுந்து விடலாமென்று கருதலாயினர். இறுதியில், கோட்டையையும் கொழும்புத் துறைமுகத்தையும்




படம் 8.

ஒருங்கே பாதுகாத்துக்கொள்வது இயலாத காரியம் என்பதனைப் போர்த்துக்கீசரும் உணர்ந்துகொண்டனர். எனவே, தொன்சுவான் தர்மபாலனும் பிரபுக்களும் போர்த்துக்கீசருடன் கொழும்பு நோக்கிச் செல்ல நேர்ந்தது.

இதன் விளைவாக, நூற்றைம்பது ஆண்டுகளாகப் பொலிவுடன் விளங்கிய கோட்டை இராசதானி பொலிவிழந்து, மாடமாளிகைகள் இடிந்து பாழ்நிலையை அடைந்தது. கோட்டை அரசர்கள் தாழ்ந்த நிலையை அடைந்து, அந்நியர் சார்பில் வாழ நேர்ந்ததற்கு ஓர் அறிகுறியே போல அதன் அழிவு தோற்றமளித்தது.

கோட்டையின் வீழ்ச்சியால், மாயாதுன்னையே சிங்கள அரசர்களிற் பிரதானமாக விளங்கலானான். கொழும்பு நீங்கிய பகுதிகள் யாவும் அவனது ஆதிக்கத்தில் அடங்கியிருந்தன. ஆனால், கோட்டையரசர்கள் போர்த்துக்கீசருக்கு அடங்கியவர்களாகி விட்டமையால், போர்த்துக்கீசருக்கும் மாயாதுன்னைக்குமிடையே போர்கள் தொடர்ந்து நிகழலாயின. போர்த்துக்கீசத் துருப்புகள் அடிக்கடி சீதவாக்கை, கோட்டைப் பகுதிகளைத் தாக்கி, மக்களைக் கொள்ளையடித்தும் ஆலயங்களை இடித்தும் துன்பம் விளைத்தன. அப்போது மாயாதுன்னைக்கும் கண்டியரசனுக்குமிடையே தோன்றிய பகைமை, போர்த்துக்கீசருக்கு உதவிகரமாக இருந்தது. கண்டியரசன் தனது மகளை இராசசிங்கனுக்கு மணம் புரிவதற்கு இசையாமல், தர்மபாலனுக்கே மணம் செய்து கொடுத்தான். இதுவே இரு அரசர்களுக்குமிடையே பகைமை தோன்றுவதற்குக் காரணமாயிற்று. மாயாதுன்னை கண்டிமீது படை எடுத்தபொழுது, கடற்கரைப் பிரதேசங்களிற் போர்த்துக்கீசர் புகுந்து நாட்டைக் கொள்ளையடித்தமையால், அவனால் போரை நடத்த இயலவில்லை; அதனாற் கண்டி நாடு சுயேச்சையாக விளங்குவது சாத்தியமாயிற்று. பிறகு மாயாதுன்னை

தருமபாலனைக் கொன்றுவிடக் கருதி, அவனுக்கு நஞ்சூட்டுவதற்கு ஏற்பாடு செய்தான். இந்தச் சூழ்ச்சி யின் பயனாகத் தருமபாலன் இறக்கவில்லையாயினும், அவன் தன் பற்களை இழந்து நோய்வாய்ப்பட்டான்.

மாயாதுன்னையும் அவனது புதல்வனான இராசசிங் கனும் பிறகு கொழும்புத் துறைமுகத்தைக் கைப்பற்றுவ தில் முனைந்தார்கள். ஒரு பெருஞ்சேனையுடன் 1579-ல் இராசசிங்கன் தொடங்கிய முற்றுகை 1581 வரையிலும் நீடித்தது. நகரத்தின் தெற்குப் பக்கத்திலுள்ள வாவி நீரை இறைத்து வற்றச் செய்தபோதிலும், கொழும்பு நகரத்திலுள்ளவர்களின் எதிர்ப்பு நீடித்தது. மீண்டும் மீண்டும் முயன்றும், போர்த்துக்கீசரின் இடைவிடாத எதிர்ப்புக் காரணமாக அவனது முயற்சிகள் பயனற்றுப் போயின. இராசசிங்கனிடம் கடற்படை இல்லாமை யாலும், போர்த்துக்கீசர் இந்தியாவினின்றும் உதவி பெற்று வந்தமையாலும் இறுதியில் அவன் தனது முயற்சியைக் கைவிட நேர்ந்தது.

1581-ல் மாயாதுன்னை மரணமடைந்தான். அவனை இராசசிங்கன் நஞ்சூட்டிக் கொன்றிருக்கவேண்டும் என்று மகாவம்சமும் அயல்நாட்டு யாத்திரீகர்களும் கூறுவது பொருத்தமுடையதல்ல. ஏனெனில், அவன் வயது முதிர்ந்தவனாக இருந்தமையால் முன்பே அரசுரிமையை இராசசிங்கனுக்கு அளித்துவிட்டான். அறுபது ஆண்டுகளாகச் சீதவாக்கையை ஆட்சி புரிந்தும் போர்த்துக்கீசருடன் இடைவிடாது போர் நிகழ்த்தியும் வந்த மாயாதுன்னை இறந்தது, அவனது பகைவர்களுக்குச் சற்று உற்சாகத்தை அளித்தது. மாயாதுன்னை திறமையுந் தைரியமும் மிகுந்தவன்; கோட்டையையுங் கைப்பற்றி இலங்கை முழுவதற்கும் அரசனாக விளங்கவேண்டுமென்ற குறிக்கோள் கொண் டிருந்தமையால், அவன் வாழ்நாள் முழுதும் போர்புரிவதி லேயே கழிய நேர்ந்தது. அரசியற் சூழ்ச்சியில் இணை

யற்றவனுகலின், அவனுல் ஒப்பந்தங்கள் புரியவும் பகைவரை அழிக்கவும் சுலபமாக முடிந்தது. அவனது பேராசையும் எதிர்ப்பும் புவனேகபாகுவின் வம்சத்தினரைப் போர்த்துக்கீசரிடம் அடைக்கலம் புகுமாறு செய்ததாயினும், அவனுடைய இடைவிடாத எதிர்ப்பினுலேயே, போர்த்துக்கீசர் பெரிதும் துன்பமடைந்து, கோட்டை இராச்சியத்தின் ஆதிக்கத்துடன் திருப்தியடைந்திருந்தனர் என்பதையும் நினைவில் கொள்ளத் தகும்.

முதலாம் இராசசிங்கன் தகப்பன் இறந்ததும் 1581-ஆம் ஆண்டில் அரசுரிமையை ஏற்றுன். மாயா துன்னையின் இளைய மனைவியின் குமாரனுன இவன், முதலில் **திகிரி பண்டாரன்** என்றழைக்கப்பட்டான். தனது மூத்த புதல்வன் திறமையற்றவனுக இருந்தமையால், இவனையே இளவரசனுக மாயாதுன்னை நியமித்திருந்தான். இவனுடைய போர்த்திறமையையும் அரசியலறிவையும் கண்டு பகைவர்கள் அச்சமடைந்தனர். அவன் ஆட்சி பெற்றபொழுது, கொழும்பு நீங்கிய கோட்டை இராச்சியமும், சீதவாக்கையும், இரயிகம் பகுதிகளும் அவனது ஆட்சியில் அடங்கியிருந்தன.

கொழும்பைக் கைப்பற்ற இயலாது போனதும், இராசசிங்கன் கண்டியைக் கைப்பற்ற முயன்றுன். **கரலியட்ட பண்டாரன்** என்ற கண்டியரசன் போர்த்துக்கீசரது உதவி பெற்றபோதிலும், அவனது அதிகாரிகளான வீரசுந்தரன் முதலியவர்கள், இராசசிங்கனுக்குத் துணைபுரிந்தனர். இக்காரணத்தினுல், 1582-ல் கண்டி நாடு எளிதிற் கைப்பற்றப்பட்டது. இராசசிங்கன் ஈழ நாட்டிலேயே இணையற்ற அரசனுக விளங்கினுன். கரலியட்ட பண்டாரனும் அவனது குடும்பத்தாரும் கிறித்தவராக மாறி, மன்னுரில் போர்த்துக்கீசர் ஆதிக்கத்திலிருந்தனர். கரலியட்டன் விரைவில் மரணமடைந்தான்.

பிறகு 1587-88-ஆம் ஆண்டுகளில், இதுவரை யாரும் கண்டிராத வகையில், இராசசிங்கன் கொழும்புக் கோட்டையைத் தாக்கலானுன். பிற நாடுகளிலிருந்து உதவி பெறவும் முயன்றதோடு, அளவு கடந்த மூர்த் தணியத்துடன் சேனைகளை அனுப்பிப் போர் புரிந்தான். கிராமங்களைக் கொள்ளையடித்தும் மக்களைத் துன்புறுத்தி யும் போரை நடத்தியமையால், சிலர் அவனுக்கு எதிராக வும் சூழ்ச்சிகள் புரியலாயினர். இராசசிங்கன் பொறு மையை இழந்து, அத்தகையவர்களைக் கொலை புரிவித் தான். அப்போது பல பௌத்த பிக்குகளும் கொல்லப் பட்டமையால், மக்கள் அவனை வெறுக்கலாயினர். அவ்வாறு வெறுத்தவர்களிற் கண்டி நாட்டைச் சேர்ந்த வீரசுந்தரனின் மகனுன கோணப்பு பண்டாரனும் ஒருவன். இவன் இராசசிங்கனது கொடுமைக் காற்ருது, போர்த்துக்கீசருடன் சேர்ந்து, கிறித்தவனுக மதம் மாறித் "**தொன் சுவான்**" என்ற பெயருடன் விளங்க லானுன்.

மீண்டும் வாவியின் நீரை இறைத்துக் கொழும்பு நகரத்தைக் கைப்பற்ற இராசசிங்கன் முயன்ருன். ஆனுல், போர்த்துக்கீசர் தமது கடற்படை வலிமையால், தீவாந்தர முனையிலிருந்து நீர் கொழும்பு வரையிலுள்ள கடற்கரைப் பகுதிகளைத் தாக்கிப் பட்டினங்களை அழித் தும், விகாரைகளையும் ஆலயங்களையும் தகர்த்தும் கொடுமை இழைத்தனர். அவர்களுக்கு இந்தியாவி னின்றும் உதவி கிடைத்தமையால், 1588-ல் தனது நோக்கம் நிறைவேருமல் இராசசிங்கன் பின்வாங்கிச் செல்ல நேர்ந்தது.

மேலும் நாட்கள் செல்லச் செல்ல, இராசசிங்கனுக் குத் துன்பங்கள் பல விளைந்தன. அவனும் பொறுமையை இழந்து, தனது குடிமக்களைத் துன்புறுத்தலானுன். இதனுற் கலகங்கள் பல நேர்ந்தன. சுதுபால பண் டாரன் என்பவன் சப்தகோறளையிற் கலகம் விளைத்

ததும், இராசசிங்கன் மக்கள் பலரையும் சற்றும் இரக்க மின்றிக் கொலைபுரிவித்தான். அப்போது கண்டி நாட்டி லும், தொன் பிரான்சிஸ்கோ முதலியார் என்பவரின் தலைமையிற் கலகம் நிகழ்ந்தது. அவர் பழைய அரச வம்சத்தை நிலைநாட்ட முயன்ருர். உடனே போர்த்துக் கீசர் துணையுடன், கோணப்பு பண்டாரனும் பழைய அரச வம்சத்தைச் சேர்ந்த தொன் பிலிப்பும் கண்டி நாட்டில் புகுந்து, ஆட்சி உரிமை பெற்றனர். அவர்களைத் தடுக்க இராசசிங்கன் முயன்றபோது, கோணப்பு பண்டாரன் என்ற விமலதர்ம சூரியன் அவனது படையை **வல்லணை** என்ற இடத்தில் முறி யடித்தான். அப்போது தோல்வியுற்ற இராசசிங்கன் சீதவாக்கைக்குத் திரும்புகையில், காலில் மூங்கில் சிராயால் காயமடைந்து, 1592-ல் மரணமடைந்தான்.

இராசசிங்கன் ஆட்சிபுரிந்த பதினொரு ஆண்டு களுக்குள்ளாக, அவனது போர்த்திறமும், ஆட்சிப் பெருமையும் வெளிப்பட்டது. அவனுக்குப் பிறகு அத் தகைய பரந்த ஓர் இராச்சியத்தை எவரும் ஆளவில்லை. அவன் வல்லவனுயினும், பொறுமையை இழந்தமையாலும் தந்தையைப் போன்ற இராச தந்திரம் வாய்ந்தவனுக இல்லாமையாலும் அவனுக்குப் பகைவர்கள் பெருகி, எல்லையற்ற துன்பங்கள் விளைந்தன. அவன் பௌத்த சமயத்தை விடுத்து இந்து மதத்தைப் பின்பற்றியமை யால், சிங்கள பௌத்தர்கள் அவனை வெறுத்துப் பல வாறு எழுதி வைத்துள்ளனர். எனினும், அவன் போர்த்துக்கீசரை எதிர்த்து நின்ற பெரும் வீரன் என்ற உண்மையை எவரும் மறுக்க இயலாது.

இராசசிங்கனுக்குப் புதல்வர்கள் இல்லாமையால், அவனது பேரனுன இராசசூரியனும், அவனுக்குப் பிறகு நிகபிட்டிய பண்டாரனும் அரசுரிமை பெற்றனர். ஆனல், **மன்னம்பெருமாள்** என்ற படைத்தலைவனே உண்மையில் ஆதிக்கம் பெற்றிருந்தான். ஆனல்,

மன்னம் பெருமாளைப் பகைத்தவர்கள் யாவரும் போர்த்துக்கீசரைச் சார்ந்தனர். இக்காரணத்தினுல், போர்த்துக்கீசர் சீதவாக்கை மீது படை எடுத்து, அந்த நாட்டின் படைகளை மல்வானை முதலிய இடங்களிலே முறியடித்துக் கோட்டை இராச்சியத்தைத் தருமபால னுக்கு உரிமையாக்கினர். சில மாதங்களுக்குள்ளாகச் சீதவாக்கை முழுதும் போர்த்துக்கீசரது ஆதிக்கத்தின் கீழ் வந்தது. நிகபிட்டிய பண்டாரன் இளைஞனுக இருந்த மையால், முதலில் கோவைக்கும் பின்னர்ப் போர்த்துகல் நாட்டிற்கும் அனுப்பப் பெற்றுக் கல்விப் பயிற்சி பெற் ருன். இவ்வாருக, இராசசிங்கன் இறந்த ஓர் ஆண்டிற் குள்ளாக அவனது சீதவாக்கை இராச்சியம் மறைய நேர்ந்தது.

## விஞக்கள்

1. நொரன்காவால் விளைந்த பலன்கள் யாவை?
2. 'முல்லேரியாப்' போர் எவ்வாறு முக்கியமானது?
3. கோட்டை ஏன், எப்பொழுது மாயாதுன்னை வசமாயிற்று?
4. மாயாதுன்னையின் திறமையும் குணுதிசயங்களும் பற்றி ஒரு குறிப்பு எழுதுக.
5. இராசசிங்கன் பெற்ற முக்கியமான வெற்றி எது?
6. இராசசிங்கன் எப்போது, யாரிடம் தோல்வியுற்ருன்?
7. இராசசிங்கனது பெருமையையும் குறைகளையும் விளக்குக.

# 6. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுதல்

இலங்கையின் வடபகுதியிலுள்ள தீபகற்பமும் தீவுகளும் சேர்ந்த நாடு, நீண்டகாலமாக 'யாழ்ப்பாணம்' என்று வழங்கப்பட்டு வந்துள்ளது. சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்தப் பகுதிக்கும் தென்னிந்தியாவிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்ததாகப் பண்டைய வரலாறுகள் கூறுகின்றன. அதனால் சிறிது சிறிதாக இங்குத் தமிழர் குடியேறலாயினர். அவர்கள் பெரும்பாலும் சைவ மதத்தினர்களாகவும், வேளாண்மைத் தொழிலிற் சிறந்தவர்களாகவும் விளங்கியமையால், இந்தப் பிரதேசத்தில் அவர்களது சிவாலயங்களும் வேளாண்மை முதலிய தொழில்களும் நிலைபெறலாயின. அவர்கள் வருவதற்கு முன்னர் இந்தப் பகுதிகள் காடடர்ந்த பிரதேசமாய் இருந்திருக்க வேண்டும். தமிழர் இக்காட்டுப் பிரதேசங்களைத் தங்கள் விடாமுயற்சியால் செழிப்புற்றோங்கும் நாட்டுப் பிரதேசமாக்கினர். அப்பிரதேசங்களை தமிழ் ராச்சியமாக்கி அரசாட்சியும் புரிந்தனர். பதின்மூன்றாவது நூற்றாண்டில், நல்லூரைத் தலைநகரமாகக் கொண்ட தமிழ் அரசர்கள் யாழ்ப்பாணம் முழுமைக்கும் ஆதிக்கம் வகிக்க முற்பட்டதுடன், பிற இராச்சியங்களினின்றும் திறைப்பணம் வாங்கவும் முயன்று வந்தனர். ஆகவே, அக்காலத்தில் இந்தத் தமிழ் இராச்சியம் வலிமையுடன் திகழ்ந்தது.

கோட்டை இராச்சியம் மீண்டும் எழுச்சிபெற்ற போது, யாழ்ப்பாண அரசர்களால் அதனை எதிர்த்து நிற்க இயலவில்லை. ஆனால், பராக்கிரம பாகு காலத்தில் அவர்கள் கோட்டை அரசரின் ஆணையை ஏற்று, அவருக்குத் திறைப்பணம் செலுத்த நேர்ந்தது. ஆயினும், பராக்கிரம பாகு இறந்த பின்னர் நேர்ந்த

அரசியற் குழப்பத்தின்போது, யாழ்ப்பாண அரசனுன பரராசசேகரன் சுயேச்சை பெற முயன்ருன். இறுதியில் 1478-ல் அவன் கோட்டை அரசருக்கு அனுப்பவேண்டிய திறையை நிறுத்திவிட்டுத் தனது நாட்டின் சுதந்திரத்தை நிலைநாட்டினுன். அவனது முப்பது வருட ஆட்சியில் யாழ்ப்பாணம் வலிமையும் பெருமையும் பெற்றது. அவனுக்குப் பின்னர் அரசுகட்டிலேறியவர்கள் பலவீனர்களாக இருந்தமையால், சங்கிலிராசன் என்பான் 1519-ல் அவர்களை நீக்கிவிட்டுத் தானே அரசுரிமை பெற்ருன். அரசனுனதும், செகராசசேகரன் என்னும் பட்டத்தைத் தரித்துக்கொண்டு பெரும் வல்லமையுடன் ஆட்சிபுரியலானுன்.

கோட்டை இராச்சியம் பலவீனமுற்றிருந்தமையால் தனது ஆதிக்கத்தை எளிதில் நிலை நாட்டக்கூடுமெனச் செகராச சேகரன் கருதினுன். அதற்கு இடையூருக இருப்பவர்கள் போர்த்துக்கீச அதிகாரிகளே என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் தோன்றியது. இக்காரணத்தினுல், அவனுக்கும் போர்த்துக்கீசருக்குமிடையே பகைமை வளர்ந்தது.

இந்தப் பகைமை முற்றிப் போர் நிலைமை தோன்றுவதற்கு இரு முக்கிய சம்பவங்கள் காரணங்களாயின. சங்கிலி ராசனுல் துரத்தப்பட்ட பண்டைய வம்சத்தைச் சார்ந்த இளவரசர்கள் இந்தியாவிலிருந்த போர்த்துக்கீசரிடம் தஞ்சமடைந்து, அவர்களது உதவியை நாடினுர்கள். அன்றியும், யாழ்ப்பாணக் கரை ஓரமாகத் தங்கிய கப்பல்களைக் கைப்பற்றும் உரிமை தனக்குண்டு என்று சங்கிலிராசன் உரிமை பாராட்டி வந்தமையால், போர்த்துக்கீசக் கப்பல்களும் அவனிடம் சிக்கிவிட்டன. அவற்றை விடுவிப்பதற்காகவும், பழைய இளவரசனுக்கு இழந்த இராச்சியத்தை மீட்டுத் தருவதற்காகவும் கோவையினின்னும் பெரிய கப்பற்படை ஒன்று 1543-ல் அனுப்பப்பட்டது. அந்தப் படை வந்ததும் சங்கிலி

ராசன் அச்சமடைந்து, போர்த்துக்கீசருடன் உடன் படிக்கை செய்துகொண்டான். அதன் பிரகாரம், அந்த அரசன் போர்த்துக்கீசரின் ஆணைக்கு அடங்கித் திறைப் பணம் செலுத்துவதாகவும் ஏற்றுக்கொண்டான்.

ஆனால், மறு ஆண்டில் மீண்டும் பகைமை மூண்டது. ஏனெனில் முந்திய உடன்படிக்கை காரணமாக, யாழ்ப் பாண நாட்டிற் கிறித்தவக் குருமார்களின் பிரசாரம் வலு வடைந்தது. கோவையிலும் தென்னிந்தியாவின் மற்றக் கடற்கரைப் பகுதிகளிலும் மக்களைக் கிறித்தவராக மத மாற்றம் செய்து வந்த பிரான்சிசு சவேரியாரை, மன்னாரிலிருந்த மக்களும் அழைத்தனர். அவர் தமது சீடனொருவனை அனுப்பியமையால், இங்கும் மதமாற்றம் தொடங்கப்பட்டது. மன்னாரிலும் அதைச் சார்ந்த பகுதிகளிலும் பலர் கிறித்தவராயினர். அதன் விளை வாகக் கோயில் அருச்சகர்கள் பெரிதும் அச்சமடைந்து, தமது தேவாலயங்கள் அழிக்கப்பட்டுவிடுமென்றும், யாழ்ப்பாண இராச்சியமும் கோட்டை இராச்சியம் போல போர்த்துக்கீசரின் ஆதிக்கத்தில் இருக்க நேரிடுமென்றும் கூறத் தொடங்கினர். இதனைக் கேள்வியுற்ற சங்கிலி ராசன் மன்னாருக்கு ஒரு படையை அனுப்பி, புதிதாக மதம் மாறியவர்கள் இந்து சமயத்திற்குத் திரும்பாவிடில் கடுந்தண்டனைக்கு உள்ளாவார்கள் என்று எச்சரித்தான். அவனது எச்சரிக்கையை ஏற்றுக் கொள்ளாத மக்கள் கொல்லப்பட்டனர். இவ்வாறு நூற்றுக் கணக்கான மக்கள் கொலையுண்டதை அறிந்ததும், பிரான்சிசு சேவியர் கவலையடைந்து, கோவையிலிருந்த போர்த்துக் கீசரை யாழ்ப்பாணத்தின் மீது படை எடுக்குமாறு தூண் டினர்.

போர்த்துக்கீசக் கப்பற்படை ஒன்று, 1544-ல் யாழ்ப் பாணக் கடற்கரையை அடைந்தது. மீண்டும் சங்கிலி ராசன் உடன்படிக்கை செய்து கொள்வதற்கு ஆயத்த மாக இருந்தான். அப்போது கரையிற்றட்டி உடைந்து

போன போர்த்துக்கீசக் கப்பல் ஒன்றில் நிறையத் திரவிய மிருந்தமையால், அதனைச் சேகரிப்பதில் போர்த்துக்கீசர் முனைந்தனர். எனவே, சங்கிலிராசன் இனிக் கிறித்தவர்களைக் கொல்வதில்லை என்று கூறி நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டதும், போர்த்துக்கீசர் அவனைத் தண்டியாது திரும்பிவிட்டனர்.

சங்கிலிராசன் கொடுமைகளைப் பொறுக்கமாட்டாமல், யாழ்ப்பாணத்து மக்களில் பலரும் கோவைக்கு மனுக்கள் அனுப்பி வந்தனர். புவனேகபாகுவின் புதல்வர்கள் இருவர் கிறித்தவராக மதம் மாற்றப் பெற்றுக் கோவையில் வாழ்ந்து வந்தார்களல்லவா ? அவர்களை ஏற்றுக்கொள்ளவும் யாழ்ப்பாண மக்கள் சித்தமாக இருந்தனர். ஆயினும், அவர்கள் இருவரும் 1546-ல் அம்மை நோய் காரணமாக இறந்தமையாலும், போர்த்துக்கீசர் கண்டி நாட்டில் தலையிடத் தொடங்கியமையாலும் ஏறக்குறையப் பதினைந்து ஆண்டுகள் சங்கிலிராசன் தன் மனம் போனவாறு யாதொரு தடையின்றி ஆட்சி செலுத்தி வந்தான். 1560-ம் ஆண்டில் மீண்டும் போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்திற் றலையிட முற்பட்டதும், நிலைமை மாறியது.

நீண்ட காலமாகச், சங்கிலிராசன்மீது பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்ற கருத்துப் போர்த்துக்கீசரிடையே நிலவியது. மேலும், அவனுடைய ஆதிக்கத்தைக் குலைக்குமாறு போர்த்துக்கீச அரசர்கள் கோவையிலிருந்த தமது பிரதிநிதிகளைத் தூண்டிய வண்ணமிருந்தனர். அன்றியும், போர்த்துக்கீசருக்கு எதிராக விதிய பண்டாரனைச் சங்கிலிராசன் ஆதரித்ததையும் அவர்கள் மறக்கவில்லை. எனவே, 1560-ல் **கொனஸ்தன்தைன் டி பிரகான்சா** பெரும் படையுடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறிய தீவுகளை முதலில் தாக்கினன். பிறகு யாழ்ப்பாணத் துறையில் அவனது படை இறங்கியது. தலைநகரமாகிய நல்லூரை அவர்கள் தாக்கிக் கைப்

பற்றியதும், சங்கிலிராசன் கோப்பாய்க்குச் சென்ருன். அந்த நகர் போர்த்துக்கீசர் வசமானதும், சங்கிலி ஆனையிறவு மார்க்கமாகத் தெற்கு நோக்கிச் சென்ருன். போர்த்துக்கீசப் படைகள் அங்கும் தொடர்ந்தமையால், இறுதியில், போர்த்துக்கீசருக்குத் திறை செலுத்துவதாகவும், தனக்கு விதிய பண்டாரன் அளித்த பொக்கிஷங்களைக் கொடுத்துவிடுவதாகவும், கிறித்தவ மதப் பிரசாரத்திற்குத் தடை விளைப்பதில்லை என்பதாகவும் சங்கிலிராசன் பல நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு, பிரகான்சாவுடன் உடன்படிக்கை செய்துகொண்டான்.

அப்போது கிறித்தவக் குருமார் நாடெங்கும் மதப் பிரசாரம் புரியத் தொடங்கியமையாலும், அவர்களுக்கு உதவியாகப் போர்த்துக்கீசர் ஆங்காங்கு இந்து தேவாலயங்களை அழித்தும் மக்களைப் பலவாறு துன்புறுத்தியும் வந்தமையாலும், மக்கள் கொதித்தெழுந்து கலகம் விளைத்தனர். போர்த்துக்கீசப்படை சிறியதாக இருந்தமையால், எளிதில் முறியடிக்கப்பட்டது. உடனே போர்த்துக்கீசர் தப்பி ஓடி, மன்ஞருக்குச் சென்று, ஆங்கு ஒரு கோட்டை அமைத்தனர். யாழ்ப்பாண நாட்டிற் குடியேறப் போர்த்துக் கீசர் விரும்பாமையால், அப்போது மீண்டும் அதனைக் கைப்பற்ற முயலவில்லை.

ஆயினும் சங்கிலிராசனுடைய ஆட்சி நிலைத்திருக்கவில்லை. மறு ஆண்டில் (1561) மக்கள் கலகம் விளைத்து, அந்த மன்னனை நீக்கினர். பிறகு அவனது மகனுன புவிராசபண்டாரன் அரசனுக்கப்பட்டான். அவனை நீக்கிவிட்டுக் காசி நயினுர் என்பான் ஆட்சியைக் கைப்பற்றியதும், கலகங்கள் விளைந்தன. அப்போது காசி நயினுர் கொல்லப்படவே, பெரியபிள்ளை என்ற இரண்டாம் செகராசசேகரன் 1570-ல் பதவிபெற்ருன். அவன் பன்னிரண்டு ஆண்டுகள் அரசு செலுத்திய பிறகு, 1582-ம் ஆண்டில் புவிராசபண்டாரன் என்பான் **பரராசசேகரன்** என்னும் பட்டப்பெயருடன் அரச

பதவி எய்தினன். அவன் போர்த்துக்கீசரை ஒழித்து விடுவதற்காக மன்னூர்க்கோட்டையை முற்றுகையிட்டான். கள்ளிக்கோட்டையினின்றும் அவன் எதிர் பார்த்த உதவி கிடைக்காததால், அவன் முறியடிக்கப்பட்டு மாந் தோட்டைக்குச் செல்ல நேர்ந்தது. அங்குக் கிறித்தவர் சிலரைத் துன்புறுத்திவிட்டு நல்லூரை அடைந்தான். இதற்கிடையே கள்ளிக்கோட்டையினின்றும் வந்த கப்பற் படையை முறியடித்த போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத் தைக் கைப்பற்றி, நல்லூர்க் கோட்டையையும் சூழ்ந்து கொண்டனர். அங்குப் புவிராச பண்டாரன் 1591-ல் தோற்கடிக்கப் பெற்றுக்கொல்லப்பட்டான்.



படம் 9. சிமாவோ பின்காவோ எதிர்மன்ன சிங்கனைக் காப்பாற்றுதல்

அப்போது நிகழ்ந்த கடும்போரில், பெரிய பிள்ளை யின் மகனான எதிர்மன்ன சிங்கன் என்பான் வீரமாகப்

போர்புரிந்தான். அவன் கீழே வீழ்ந்து விடவே, பகைவரால் கொல்லப்படப்போகும் தருணத்தில், சிமாவோ பின்காவோ என்ற அதிகாரி அவர்களைத் தடுத்து அவனது உயிரைக் காப்பாற்றினான். இந்தக் காட்சி, இரத்தினபுரியிலுள்ள மகாசமன் தேவாலயத்திலுள்ள ஒரு கல்லில் வெகு அற்புதமாகப் பொறிக்கப்பட்டுள்ளதை இன்றுங் காணலாம்.

புவிராசபண்டாரன் இறந்ததும், போர்த்துக்கீசர் யாழ்ப்பாண நாட்டிலுள்ள அதிகாரிகளையும் பிரபுக்களையும் வரவழைத்து, நல்லூரில் ஒரு சபையைக் கூட்டினர். அவர்கள் அனைவரும் எதிர் மன்னசிங்கனையே தேர்ந்தெடுத்தமையால், அவனே மன்னனாக 1591-ல் முடிசூட்டப் பெற்றான். அவனும் 'பரராசசேகரன்' என்னும் பட்டம் சூடினான். அவனைப் பாதுகாக்க ஒரு போர்த்துக்கீசப் படை நிறுவப்பட்டது. அவனது ஆட்சியிற் போர்த்துக்கீசருக்கு அளவிறந்த ஆதிக்கம் இருந்தமையாலும், கிறித்தவர் தமது ஆலயங்களை நிறுவிப் பிரசாரம் செய்ய அனுமதிக்கப்பட்டமையாலும், மக்களுக்கு அவனிடம் அன்பு குறைந்தது. அவனை ஒழிப்பதற்காகப் பகைவர்கள் செய்த முயற்சிகள் பயனற்றுப் போயின. எனினும், அவன் போர்த்துக்கீச அதிகாரிகளால் அவமதிக்கப்பட்டுப் பெரிதும் துன்பமடைந்தான். அவன் 1615-ல் இறந்ததும், அவனது மூன்று வயதுள்ள புதல்வன் பட்டம் பெற்றான். அந்தச் சிறுவனுக்கு உதவியாக இராசப் பிரதிநிதியாக இருந்துவந்த அரசகேசரியைக் கொன்றுவிட்டு, எதிர் மன்ன சிங்கனின் மருமகனான சங்கிலி, அந்தப் பதவியை அடைந்தான். அவன் கிறித்தவ சமயத்தை ஆதரிப்பதாகக் கூறியதும், போர்த்துக்கீசர் திருப்தியடைந்தனர். ஆனால், நாட்டிற் கலகங்கள் விளைந்தன. முதலில் அவனை ஆதரித்த போர்த்துக்கீசர், அவன் ஒல்லாந்தருடன் தொடர்பு கொள்வதை அறிந்ததும், பெரிதும் சினம் கொண்டனர்.

சங்கிலி, தஞ்சாவூர் நாயக்க மன்னனிடமிருந்து உதவி பெற்றதோடு, கண்டியரசன் சேனரதனையும் போர்த்துக் கீசருக்கு எதிராகத் தூண்டிவிடலானன். இக்காரணங் களாற் போர் மூண்டது. ஒலிவியெரா என்ற போர்த்துக் கீசத் தளபதி சங்கிலியைத் தோற்கடித்து, அவனையும் அவனது குடும்பத்தாரையும் கைப்பற்றினன். சங்கி லிக்குத் துணையாக வந்த தஞ்சை நாயக்கர் படையும் சிதறுண்டது. 1621-ம் ஆண்டில் யாழ்ப்பாண இராச் சியம் போர்த்துக்கீச ஆட்சியின்கீழ் வந்துவிட்டது. ஒலிவியெரா அந்த இராச்சியத்தின் இராசப் பிரதிநிதி யாகவும், தளபதியாகவும் நியமனம் பெற்ருன். சங்கிலி கோவையில் விசாரிக்கப்பட்டு, மரண தண்டனை அளிக்கப் பெற்ருன். இவ்வாறு யாழ்ப்பாண நாடும் அன்னியர் வசமாயிற்று.

## யாழ்ப்பாண மன்னர்கள் [1478—1621]

1. பரராச சேகரன் I (1478—1519)
2. செகராச சேகரன் I (சங்கிலி ராசன்) (1519—1561)
3. புவிராச பண்டாரன் I } (1561—1570)
4. காசி நயினர் }
5. செகராச சேகரன் II (பெரிய பிள்ளை) (1570—1582)
6. பரராசசேகரன் II (புவிராச பண்டாரன்) (1582—1591)
7. எதிர்மன்ன சிங்கன் (1591—1615)
8. சங்கிலி ராசன் II (1615—1621)

[குறிப்பு: இவர்கள் யாவரும் ஒரே வம்சத்தினர் அல்ல.]

### வினக்கள்

1. யாழ்ப்பாணத்தின் தலைநகர் எது? அது எவ்வாறு தமிழர் ஆட்சியின் கீழ் வந்தது? எப்போது சுயேச்சை பெற்றது?

2. முதல் செகராச சேகரனுக்கும் போர்த்துக்கீசருக்கும் எக்காரணங்களால் போர்கள் நிகழ்ந்தன? அவற்றின் முடிவு யாது?

3. முதல் சங்கிலி ராசனுக்குப் பிறகு ஆட்சிபுரிந்தவர்கள் யாவர்?

4. எதிர்மன்னசிங்கன் எவ்வாறு ஆட்சி பெற்ருன்?

5. யாழ்ப்பாணம் எப்போது, எவ்வாறு போர்த்துக்கீசர் வசமாயிற்று?

# 7. அசிவிடோ ஆட்சி (1594—1612)

தருமபாலன் இறப்பதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே, கண்டி நாட்டில் பெரும் சம்பவங்கள் நிகழ்ந்தன. அங்குப் புதிதாக அரசுரிமை பெற்ற விமல தர்மன் போர்த்துக்கீசப் படையொன்றை முறியடித்து, அதிலடங்கிய வீரர்களை அங்கவீனம் செய்து அனுப் பினுன். இந்தச் செய்தியைக் கேள்வியுற்றதும், இராசப் பிரதிநிதி கோவையினின்றும் **செரனிமோ-டி-அசிவிடோ** வைத் தளபதியாக நியமித்தான். அவன் மிகவும் கொடு மையாக அடக்கத் தொடங்கியமையால், கலகங்கள் பல விளைந்தன. ஆயினும், அவன் எல்லாக் கோறளைகளிலும் புதிய அதிகாரிகளை நியமித்தும், படைகளை நிறுத்தி வைத்தும் சமாதானம் உண்டாக்கப் பெரிதும் முயன்ருன். அத்தகைய அதிகாரிகளுஞ் சில சமயங்களிற் கலகங் களைக் கிளப்பினர். சப்தகோறளையின் திசாவையாக இருந்த **தோமிங்கோ கொரியா** இவ்வாறு கலகம் விளைத் ததும், சீதவாக்கையிலிருந்த தருமபாலனையும் அவனது இராணியையும் கொழும்புக்கு மீட்டுச் செல்வது பெரும் தொல்லையாகிவிட்டது. கொழும்பும் காலியும் தவிர்த்த மற்ற இடங்களிற் போர்த்துக்கீச ஆதிக்கம் மறைந்து விட்டது.

ஆயினும் அசிவிடோ அஞ்சாத நெஞ்சினனுய்,

கலகக்காரரை ஒவ்வொருவராக முறியடித்துச் சமாதானம் நிலவச் செய்தான். தோமிங்கோ கொரியாவும் முறியடிக் கப்பட்டு, மரணதண்டனை அடைந்தான். 1602-ம் ஆண் டிற்குள் அசிவிடோ சமபூமியெங்கும் அமைதியை நிலை நாட்டிச் சீதவாக்கை, மேனிக்கடவரை, குரு நாகல் போன்ற இடங்களிற் கோட்டை கொத்தளங்களை அமைத் தான். கலகக்காரருக்குப் பெரிதும் உதவியவன் விமல தர்மனுகையால், இறுதியிற் கண்டிமீதும் படை எடுக்க அசிவிடோ தீர்மானித்தான்.

முதலில், விமலதர்மனுடைய படைகள் முறியுண் டதும், விமலதர்மன் போர்த்துக்கீசருடன் சமாதானம் செய்து கொள்ள முயன்றான். ஆனால், அசிவிடோ மிகவும் கடுமையாய் அவனை ஒழிப்பதையே நோக்கமாகக் கொண்டு, அவனது சமாதான நிபந்தனைகளை மறுத்துப் படையுடன் கண்டி நாட்டில் புகுந்தான். வல்லனை என்ற இடத்தில் கண்டியர் கடும்போர் புரிந்தனர். எனினும், அது கைப்பற்றப்பட்டது. பிறகு அசிவிடோ, விமல தர்மனைச் சூழ்ச்சியால் வெல்லக் கருதிச் **சிமாவோ பின்காவோவைத்** துரோகியாக நடிக்கச் செய்தான். எனினும், விமலதர்மன் இந்தச் சூழ்ச்சியை உணர்ந் ததும், பாதுகாப்பாக இருந்துவிட்டான்.

இந்த நிலையில், விமலதர்மன் வலிமை மிக்க கடற் படை வாய்ந்த ஒல்லாந்தருடன் உறவு கொள்ளலானான். இசுபில்பேர்கன், தேவீட் என்ற டச்சுத் தூதர்கள் அவனை அணுகியபோது, அவர்கள் நாட்டினருடன் உடன் படிக்கை செய்துகொள்ள விருப்பம் தெரிவித்தான். இதனை அறிந்த அசிவிடோ பெரும்படையுடன் வல்லனை யைக் கடந்து முன்னேறுகையில், அவனது படையைச் சேர்ந்த சிங்களவீரர் பகைவருடன் சேர்ந்துவிட்டனர். எனவே, அசிவிடோ திரும்பிச் செல்ல நேர்ந்தது. திரும்புகையில், அந்தப் படை சென்ற மார்க்கமெங் கணும் இடைவிடாது சிங்களவரால் தாக்கப்பட்டது.

கணத்தன்னே, அலுத்நுவரை, அட்டப்பிட்டி, மெனிக் கடவரை, உரூவன்வேலி, சீதாவாக்கை முதலிய கோட்டை கள் பகைவர் வசமாகிவிட்டன. எனினும், அசிவிடோ ஆங்காங்குக் கலகக்காரரை எதிர்த்தவண்ணம் படையைச் செலுத்திக் கொண்டு மல்வானையை அடைந்தான். அங்கும் கலகக்காரர்கள் கொழும்புப் படைகளைச் சிதைத் துத் தளபதியின் மாளிகையையும் அலங்கோலமாக்கி யிருந்தனர். எனினும், அங்கு அசிவிடோவும் களைப் புற்ற அவனது படைவீரரும் தங்கியிருந்தனர்.

மீண்டும் ஓர் ஆண்டுக்கு மேலாகக் கலகங்கள் தொடர்ந்து நிகழ்ந்தன. இதற்கிடையில் கண்டிநாட்டின ரால் தேவீட் கொல்லப்பட்டதால், விமலதர்மனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையே இருந்த நல்லுறவு குறைந்தது. விமலதர்மனும் போர்த்துக்கீசருடன் உறவாட முயன் ருன். ஆயினும், 1604-ம் ஆண்டில் விமலதர்மன் இறந் ததும், கண்டி நாட்டில் சிறிது குழப்பம் தோன்றியது. அவன் தனது மகனுக்கு அரசுரிமையைக் கொடுத்துத் தனது மைத்துனனுன சேனரதனே இராசப் பிரதிநிதி யாக நியமித்திருந்தான். இராசப் பிரதிநிதியாக இருக்க விரும்பாத சேனரதன், அரசுரிமையைப் பெற விரும்பிய இன்னும் சிலரையும் அடக்கி முடிவில் தானே அரசுரிமை யையும் பெற்று, விதவையான தோனுகதரினுவையும் மணந்தான். இதற்கிடையில், கலகங்களை அடக்கி விட்டு, அசிவிடோ மீண்டும் கண்டியைக் கைப்பற்று வதற்கு எத்தனித்தான். சேனரதன் ஒல்லாந்தரின் துணையை நாடக்கூடும் என்பதே அவனது ஐயப்பாடு. பிறகு ஒல்லாந்தரின் கறுவா வியாபாரத்திற்குச் சேன ரதன் துணைபுரியத் தொடங்கினுனென்பதை அறிந் ததும், அசிவிடோ 1610-ல் மாத்தளை வரையிலும் ஊடுருவிச் சென்றுன். பிறகு 1611-ல் கண்டியை நோக்கிச் செல்கையில் **கன்னொறுவா** என்ற இடத்தில் சேனரதனின் படையை அழித்து, வல்லனைக்கு

மீண்டான். பிறகு வல்லனை முற்றுகை இடப்பட்ட போதிலும், அதனாற் பெரும் நட்டம் எதுவும் விளைய வில்லை.

இந்த நிலையில், சேனரதன் சமாதானத்தை விரும்பி னான். அவனது தூதரான கிறித்தவக் குருமார் ஒருவரின் உதவியால், கண்டி மன்னன் போர்த்துக்கீச மன்னனுக் குத் திறைப்பணம் செலுத்துவதென்றும், போர்த்துக்கீச ரைக் கோட்டை இராச்சியத்தின் அதிபதிகளாக ஏற்ப தென்றும் நிபந்தனைகள் வகுக்கப்பட்டு, அந்த உடன் படிக்கையைச் சேனரதன் ஏற்றான். ஆனால், அதுவே அவனுக்கு எதிராக மக்கள் கலகம் புரிவதற்குக் காரண மாயிற்று.

1612-ம் ஆண்டில் அசிவிடோ கோவையின் இராசப் பிரதிநிதியாக நியமிக்கப் பெற்றதால், இலங்கையினின் றும் கோவைக்குச் சென்றான். அவன் இலங்கையிலிருந்த போர்த்துக்கீசத் தளபதிகள் அனைவரினும் திறமை மிக்க வன். மன உறுதியும், இடைவிடா முயற்சியும், செய லாற்றும் திறனும் படைத்தவன். இலங்கையிற் போர்த் துக்கீச ஆதிக்கம் அத்தமிக்கும் நிலையை அடைந்த பொழுது, அதனை மீண்டும் உயிர்ப்பித்த பெருமை அவனுக்கே உரியது. அவனது போர்வேட்கை காரண மாக, அவன் இராச்சிய நிர்வாகத்தையும் புறக்கணித்து விட்டான். அவனது கொடூரமான அடக்கு முறையால், இலங்கை மக்கள் பெரிதும் வருந்தினர். அவனுடைய ஆட்சியில் கொள்ளைகளும், அநீதிகளும் நிலவின என் றும், அதனால் போர்த்துக்கீசரிடம் சிங்களவர் கொண்ட பகைமை வளர்ந்தது என்றும் 'குவெய்ரோசு' சுவாமியார் எழுதியுள்ளார். சிறந்த இராணுவத் தலைவனாயினும் அசிவிடோ பரிபாலனமுறை தெரியாதவன். அதனால் அவனது ஆட்சிக் காலத்தில் கலகங்கள் விளைந்து, மக்கள் அமைதியின்றி வாழ நேர்ந்தது.

### வினுக்கள்

1. அசிவிடோ ஏன் அனுப்பப் பெற்ருன்?

2. அவன் எத்தகைய குணுதிசயமும் கொள்கைகளும் வாய்ந்தவன்?

3. விமலதர்மனுக்கும் அசிவிடோவுக்கும் இடையே நிகழ்ந்த போரைச் சுருக்கி வரைக.

4. சேனரதன்மீது ஏன் அசிவிடோ போர் தொடுத்தான்?

5. அசிவிடோ ஆட்சியால் விளைந்த நன்மை தீமைகளைத் தொகுத்துக் கூறுக.

## 8. தொன் கொனஸ்தந்தைன் திசா

அசிவிடோ சென்ற பிறகு சிறிதுகாலம் **மெனசெசு** என்பவன் தளபதியாக இருந்தான். அவன் கண்டிமீது படை எடுத்து வெற்றிகரமாகத் திரும்பியபோதிலும், அவன்மீது எண்ணற்ற குற்றங்களும், குறைகளும் கூறப் பட்டன. அதனுல், இராசப் பிரதிநிதியாக இருந்த அசி விடோ அவனைத் திரும்ப அழைத்துக் கொண்டு, **கோமம்** என்பவனை அனுப்பினுன். அசிவிடோவின் உத்தரவுப் படி இவன் கண்டிமீது இருமுறை படை எடுத்துக் கிரா மங்களைச் சூறையாடியும், எரித்தும் திரும்பினுன். சிங் களப் படைவீரரை இரக்கமின்றித் தண்டித்தும், அதிகாரி களை கடுமையாக அடக்கி வைத்தும், கோமம் அசிவிடோ வைப் போல நிர்வாகம் புரிந்தனன்; ஆயினும், அவன் புரிந்த திருத்தங்களில் நிலங்களை அளந்து கணக்கெழுது மாறு செய்த ஏற்பாடு பிரதானமானது. **அழகிய வண் ணன்** என்ற சிங்கள மகாகவி இக்காலத்தில் கிறித்தவ ஞக மதம் மாறி, இந்த நிலக் கணக்கு ஏற்பாட்டில் பங் கெடுத்துக் கொண்டான்.

கோமம் இரண்டு ஆண்டுகள் (1614–1616) பதவியி லிருந்தான். அவனுக்குப் பிறகு **பெரிரா** தளபதியாக விளங்கினுன். அவனது ஆட்சியிலும், கலகக்காரரைத்

தண்டிப்பதும், இரு கோறளைகளிலும் சப்பிரகமுவா விலும் ஊர்களை எரித்து நாசமாக்குவதுமே பிரதான வேலையாக இருந்தது. ஆயினும், பெரிராவால் கலகங் களை அடக்குவது இயலாமற் போனமையால், 1618-ல் இராசப் பிரதிநிதி **தொன் கொனஸ்தந்தைன் திசாவை** அனுப்ப நேர்ந்தது.

**திசா** முதலில் இரண்டு ஆண்டுகளும் (1618–1620), பின்னர் ஏழு ஆண்டுகள் வரையிலும் (1623–1630) இலங் கையில் தளபதியாக இருந்து வந்தான். அவன் அனு பவமும் ஆற்றலும் மிக்கவன்; திறமை வாய்ந்தவனுயினும் அசிவிடோவைப் போன்று கொடூர சிந்தை உடையவ னல்ல. அவன் படைகளை ஒழுங்குபடுத்தி, சிங்களவரை அமைதியான முறைகளால் திருப்திபடுத்த முயன்றான். போர்த்துக்கீச உத்தியோகத்தரை நல்வழிப்படுத்தி, கலகக் காரரை அடக்குவதில் முனைந்தான். கங்கர ஆராச்சி, பரேட்டோ போன்ற கலகத் தலைவர்களைக் கைப்பற்றி, அவர்களைக் கொன்றான். அப்போது அவன் புரிந்த போரின் பெருமையை அழகிய வண்ணன் '**குசுதாந்தினு கதன**' என்ற சிங்களக் காவியத்தில் வருணித்திருக் கிறான்.

அவன் கண்டி நாட்டைப் படை எடுத்து அழிக்க முற்படுகையில், யாழ்ப்பாணத்தில் நிலைமை சீர்கேட டைந்திருப்பது தெரியவந்தது. உடனே அங்குக் கவனம் செலுத்தலானான். அப்போது இரண்டாம் சங்கிலிராசனின் கொடுமையை ஆற்றாது மக்கள் கிளர்ச்சி புரிந்து வந்தமையாலும் அவன் ஒல்லாந்த ருடன் தொடர்பு கொண்டமையாலும், திசா அவன்மீது படை எடுத்துச் செல்லுமாறு ஒலிவியராவை அனுப்பி னான். அவன் சங்கிலியின் படைகளை எளிதில் முறி யடித்து, அவனையும் பிடித்துக் கொழும்பிற்கு அனுப்பி விட்டான்; பிறகு வடுகரின் கலகத்தையும் அடக்கி, யாழ்ப்பாணம் முழுவதையும் போர்த்துக்கீச ஆட்சியின்

கீழ்க் கொணர்ந்தான். அதனல், ஒலிவியரா யாழ்ப் பாணத்தில் முதலாவது போர்த்துக்கீசத் தேசாதிபதி யாகவும், தளபதியாகவும் நியமிக்கப்பட்டான்.

இதற்கிடையில், சேனரதனுடன் சமாதானம் செய்து கொண்டு, திசா சப்த கோறளேயிற் கலகங்களே அடக்கு வதில் முனைந்தான். அங்கிருந்து கலகக்காரனுன மாயா துன்னே என்பவனைத் துரத்திவிட்டு, காலித் துறைமுகத்தைச் செப்பனிட்டுப் பலப் படுத்தி வைத்தான். அப்போது சேனரதன் மீண்டும் ஒல்லாந்தருட னும் தேனியருடனும் தொடர்பு வைத்துக் கொள்ள முயன்றதால், திசா அவனைப் பகைக்குமாறு நேர்ந் தது. ஆனல், திசா கண்டிமீது படை எடுப் பதற்குள், அவனுடைய ஆட்சி முறையை விரும்பாத போர்த்துக் கீச அதிகாரிகள் அதனைப் பற்றி இராசப் பிரதிநிதியிடம் பலவாறு எடுத்துக் கூறி, அவனைத் திரும்ப அழைக்கு மாறு செய்துவிட்டனர். இதனல், அல்புகூர்க்கே என்னும் பெயருள்ள தளபதியை இராசப் பிரதிநிதி அனுப்பி வைத்தான். எனவே, திசா தனது வேலையைப் பூர்த்தி செய்ய முடியாமல் திரும்ப நேர்ந்தது.



படம் 10. அல்புகூர்க்கே

'அல்புகூர்க்கே' காலத்தில் வேறு முக்கியமான ஏற்பாடு எதுவும் நிகழவில்லை. அதனல் மீண்டும் திசா 1623-ல் திரும்ப நேர்ந்தது. அவனைத் தளபதியாக

அனுப்புமாறு போர்த்துகல் அரசனுன பிலிப்பும் கட்டளை அனுப்பியிருந்தான். திசா இப்போது கண்டி யரசனை ஒடுக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் வந்தானுகையால், உடனே திருக்கோண மலையிற் கோட்டை கொத்தளங்கள் அமைக்கலானுன். ஒல் லாந்தர் போன்ற பிற ஐரோப்பியர் புகாதவாறு செய்யவே இந்த ஏற்பாடுகள் நடைபெறுவதாகச் சேனரதனுக்கு அறிவிக்கப்பட்டதாயினும், தனது வியாபாரத்தையும் பிற நாட்டுத் தொடர்பையும் அழிக்கவே இந்த முயற்சிகள் செய்யப்படுவதாக அவன் கருதினுன்.

திசா சிறந்த நிர்வாகத் திறமை வாய்ந்தவனுதலின், அமைதியையும் பாதுகாப்பையும் உண்டாக்கும் பொருட்டுச் சில திருத்தங்கள் செய்யத் தொடங்கினுன். சிங்களவரின் அன்பைப் பெறும் பொருட்டு, அவர் களுக்குப் போர்த்துக்கீசருக்குச் சமமான உரிமைகளை வழங்கினுன்; அவர்களுக்கும் கிராமங்கள் மானியங்க ளாக அளிக்கப்பட்டன. அவர்கள் உயர்ந்த உத்தியோ கங்களிலும் நியமிக்கப்பட்டனர். பிறகு, நிர்வாக முறையை ஒழுங்குபடுத்தி அமைத்தான். வரிகளை விதித்துக் கணக்கெழுதும் நிதி நிர்வாகம் சரிவர நடை பெருமையால், தானே அந்தப் பொறுப்பையும் ஏற்ருன். பின்னர்க் காலி, கற்பிட்டி, கொழும்பு முதலிய இடங்களி லுள்ள கோட்டைகள் மேலும் பலப்படுத்தப்பட்டன. இந்தத் திருத்தங்களை நிறைவேற்றியதும், மன்னன் நான்காம் பிலிப்பின் கட்டளைப்படி, 1626-ல் முஸ்லிம் வர்த்தகர்களைப் போர்த்துக்கீசரின் இராச்சியத்தி னின்றும் வெளியேற்றினுன். அவர்களிற் பலரும் சேனரதனுடைய ஆதரவைப் பெற்று அவனது நாட்டிற் குடியேறினர். மட்டக்களப்பில் சுமார் நாலாயிரத்திற்கு மேற்பட்ட முசுலிம்கள் ஒரு குடியேற்றம் அமைத்துக் கொண்டனர்.

இறுதியில், திசா கண்டி நாட்டின்மீது கவனம் செலுத்தினன். இந்த நாடு தனித்திருக்கும் வரை போர்த்துக்கீச ஆதிக்கத்திற்கு இடையூறு விளையுமென் பது அவனது நம்பிக்கை. சேனரதன் மீண்டும் ஒல் லாந்தருடன் தொடர்பு கொள்ளக் கூடுமாகையால், கண்டி நாட்டிற்கு அருகிலுள்ள துறைமுகங்களைப் பாதுகாப்புச் செய்து போர்த்துக்கீசரின் ஆதீனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று திசா கருதினன். எனவே, முன்னர் திரிகோணமலையைப் பாதுகாக்கக் கோட்டை அமைத் ததுபோல, மட்டக்களப்பிலும் அமைக்க முயன்ருன். இதற்குத் தேவையான படைப் பலமும் பொருளுதவியும் கிடைக்கவில்லையாதலால், திசா தனது வருவாயையும் தியாகம் செய்து, மட்டக் களப்பிலுள்ள 'புளியந் தீவு'ப் பகுதியில் கோட்டை ஒன்றை அமைத்தான். இதனைத் தடுக்க விரும்பிய போதிலும் சேனரதனிடம் போதிய படைப்பலமில்லாமையால், அவனுல் ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஆயினும், திசாவை சேனரதன் சூழ்ச்சியால் வெல்லக் கருதினன். கொழும்பிலுள்ள "முதலியார்கள்" என்ற அதிகாரிகளே படைத்தலைவர்களாக இருந்தமை யால், அவர்களைப் போர்த்துக்கீசரிடமிருந்து பிரிக்கும் முயற்சியில் ஈடுபட்டான். அவர்களும் சேனரதனது வேண்டுகோளுக்கு இணங்கினர். சூழ்ச்சியை அறியாத திசா, போருக்குத் தேவையான ஆயத்தங்களைச் செய் தான். பிறகு 1627-ல் போர் தொடங்கியதும், திசா ஊவா மாகாணத்தின்மீது படை எடுத்து அதனை அடக்கி வைத்துத், திரிகோணமலை, மட்டக்களப்பு முத லிய இடங்களை யாழ்ப்பாணத்திலிருந்த போர்த்துக்கீச அதிகாரியின் மேற்பார்வையின்கீழ்க் கொணர்ந்தான். அப்போது சேனரதன் சமாதானத்தை விரும்பிய போதி லும், திசா அதற்கு இணங்கவில்லை. 1628-ல் சேனரதன், **அதப்பட்டு** முதலியார் தலைமையில் ஒரு படையை

அனுப்பி, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முயன்ருன். அந்தப் படை யாழ்ப்பாணத் தீபகற்பத்துள் புகுந்ததை அறிந்ததும், திசா ஒரு படையை அனுப்பினுன். அந்தப் படை அதப்பட்டு முதலியாரின் சேஜனயை அழித்துப் போர்த்துக்கீசரின் ஆதிக்கத்தை நிலே நாட்டியது.

மறு ஆண்டில், திசா படை எடுத்துச் சென்று ஊவா மாகாணத்திலுள்ள வதுளேயை அடைந்தான். அந்த நகரத்தைக் கைப்பற்றியதும், அங்கிருந்த 'முதியங்கன' விகாரை முதலிய ஆலயங்களே அழித் தான். அப்போது முதலியார்களிடம் பகைத்துக் கொண்ட ஓர் ஆராய்ச்சியின் மூலம் அவர்களது சூழ்ச்சி தெரியவந்ததாயினும், திசா அவர்களேத் தண்டிக்க முற்படவில்லே. ஆகையால், விரைவில் தொன் குலோத் துங்கன், தொன் அலெக்சோ போன்ற முதலியார்கள் தமது சிங்களப் படைகளுடன் திசாவை விட்டுப் பிரிந் தனர். ஆகவே சிறு போர்த்துக்கீசப் படையுடன் திசா திரும்பிச் செல்ல நேர்ந்தது. அப்பொழுது அவர்களே நான்கு புறமும் சேனரதனின் படைகள் சூழ்ந்து கொண்டு தாக்கின. அவற்றைச் சமாளித்துக்கொண்டு போர்த்துக்கீசர் வெள்ளவாயா என்னுமிடத்தை அடைந் ததும், புயலும் மழையும் தோன்றி அருவிகள் பெருக் கெடுத்தன. அப்போதும் திசாவும், அவனது வீரரும் தீரமாகப் போர்புரிந்தனர். முடிவில், பெரும்பாலோர் கொல்லப்பட்டு, ஒரு போர்த்துக்கீச வீரன் குறி தவறிச் சுட்ட குண்டு பாய்ந்து திசா மரணமடைந்தான். இவ்வாறு மீண்டும் போர்த்துக்கீசரின் பெருமை குலேந்தது. பிறகு சேனரதனின் படைகள் கொழும்பு நகரைச் சூழ்ந்துகொண்டு முற்றுகையிட்டன. ஆனல் கோவையினின்றும் படைகள் வந்தமையால், முற்றுகை வெற்றியுருமல், இறுதியில் 1634-ல் சேனரதன் சமாதானம் செய்துகொள்ள நேர்ந்தது.

### வினுக்கள்

1. திசா எத்தகைய குணுதிசயங்கள் படைத்தவன்?
2. "அழகிய வண்ணன்" யார்? இவனைப் பற்றி ஒரு குறிப்பு எழுதுக.
3. யாழ்ப்பாணம் எவ்வாறு போர்த்துக்கீசர் வசமாயிற்று?
4. திசா செய்த திருத்தங்கள் யாவை?
5. திசாவை வெல்ல சேனரதன் செய்த சூழ்ச்சி யாது? அது எவ்வாறு வெற்றிகரமாக நிறைவேறியது?

## 9. கண்டி நாட்டின் சுதந்திரப் போர் (1582—1635)

கடந்த ஒரு நூற்ருண்டு காலமாக, விக்கிரமபாகு, செயவீரன் முதலிய சிறந்த வீரர்களின் நிர்வாகத்தில் சுதந்திரமாக விளங்கிவந்த 'கண்டி நாடு' 1582-ம் ஆண்டிலிருந்து பல ஆண்டுகள் அன்னியரின் இடை விடாத படை எடுப்புகளாற் றுன்புற நேர்ந்தது. முதலில் போர்த்துக்கீசரையும், பின்னர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்ற மற்ற ஐரோப்பியரையும், கண்டி மன்னர்கள் எதிர்த்து நின்ற வரலாறு சரித்திரப் பிரசித்தி பெற்றதொன்ருகும்.

மாயாதுன்னையின் மகனுன முதலாம் இராச சிங்கன் கண்டி மீது படையெடுத்தான். வீரசுந்தரன் போன்ற முதலியார்களின் உதவியால் அவன் உடரட் டையைக் கைப்பற்ற முடிந்தது. கண்டி மன்னனுன கரலியட்ட பண்டாரன் 1582-ல் போரில் தோற்றதும், கிறித்தவனுக மாறிப் போர்த்துக்கீசரிடம் அடைக்கலம் புகுந்தான். அவன் அம்மை நோயால் இறந்துவிடவே, அவனது மகளைப் போர்த்துக்கீசர் தமது மதத்தில் சேர்த்துக்கொண்டு கல்வியும் போதிக்கத் தொடங்கினர்; அவளைத் 'தோனுகதரினு' என்றும் வழங்கினர்.

கரலியட்டனின் மருமகனுன யமசிங்கனும் கிறித்தவனுக மாறித் "தொன் பிலிப்பு" என்று பெயர் பெற்றுன்.

இராசசிங்கன் கொழும்புக் கோட்டையை முற்றுகையிட்டுப் பயன் பெருமல் துன்புற்றபொழுது அவனது நாடெங்கும் கலகங்கள் கிளப்பப்பட்டன. அவற்றை அடக்குவதற்காகக் கொடூரமான முறைகளைக் கையாண்டு, தனது குடிகளின் வெறுப்பை அவன் சம்பாதித்துக் கொண்டான். அவ்வாறு அவனை வெறுத்தவர்களிற் கண்டியை வெல்ல உதவிய வீரசுந்தர பண்டாரனும் ஒருவன். அவனைச் சதிசெய்து இராசசிங்கன் கொன்றுவிட்டமையால், அவனது மகனுன **கோணப்பு பண்டாரன்** கொழும்புக்கு ஓடிப் போர்த்துக்கீசரிடம் அடைக்கலம் புகுந்தான். அவன் பின்னர்க் கிறித்தவனுக மதம் மாறி "**தொன் சுவான்**" என்ற புதிய பெயரைச் சூட்டிக்கொண்டான். இராசசிங்கனது கொடுமையைப் பொறுக்கமாட்டாமல், கண்டி மக்கள் கலகம் விளைவித்தனர்; மேலும், தமது பழைய அரச வம்சத்தைச் சேர்ந்த 'தொன்பிலிப்'பை மன்னனுகப் பட்டம் தரிக்குமாறு அழைப்பு விடுத்தனர். இந்தத் தருணத்தை எதிர்பார்த்திருந்த போர்த்துக்கீசரும், தொன் பிலிப்புடன் ஒரு படையையும் அதனை நடத்திச்



படம் 11. போர்த்துக்கீச உடையில் தொனுகதரினு

செல்ல தொன் சுவானையும் அனுப்பி வைத்தனர். சில நாட்களில் தொன் பிலிப்பு கண்டியை அடைந்து அர சுரிமையையும் பெற்முன்.

தமக்குத் துணைபுரியக்கூடிய அரசாங்கம் கண்டியில் தோன்றிவிட்டதைக் கண்டு போர்த்துக்கீசர் மகிழ்ச்சி கொண்டிருக்கும்பொழுது, அங்கே பெரும் மாறுதல்கள் நிகழ்ந்தன. கிறித்தவ மதப் பிரசாரம் விரைவாக நடக்கத் தொடங்கியமையால், கண்டி நாட்டுச் சிங்கள வர் பெரிதும் கவலையடைந்தனர். அந்தக் கவலையை வளர்த்துப் போர்த்துக்கீசர் மீது அவர்களுக்கு வெறுப்பை உண்டாக்கி அதனுல் பயனடையத் தொன் சுவான் முயற்சி புரியலானுன். சிலநாட்களில் தொன் பிலிப்பு நோய்வாய்ப்பட்டு இறக்க நேர்ந்தது. அவனது மரணத்திற்குத் தொன் சுவானே காரணமாக இருக்கக் கூடும் என்று பலர் கருதலாயினர். அஃது எவ்வாரு யினும், தொன் சுவான் உடனே ஆட்சியைக் கைப் பற்றுவதில் முனைந்தான். பிலிப்பின் மகனை 'சோ ஆவோ'வை அழைத்துக்கொண்டு போர்த்துக் கீசர் வெளியேறினர். அந்தச் சிறுவன் பிற்காலத்தில் போர்த்துக்கலுக்குச் சென்று படித்துக் கிறித்தவக் குரு வாக மாறி, ஆடம்பர வாழ்க்கை வாழலானுன். இதற் கிடையில், தொன் சுவான் கன்னெறுவாக் கோட்டை யைக் கைப்பற்றிக்கொண்டு போர்த்துக்கீசரைத் துரத்தி விட்டுத் தானே அரசனுனன். பிறகு சிங்களவரை மகிழ்விக்கும் பொருட்டுத் தன் பெயரை "விமலதர்ம சூரியன்" என்று மாற்றிக்கொண்டான். மேலும் அவ னுல் கண்டியில் கிறித்தவ மதப்பிரசாரம் நடக்கவொட் டாமல் தடுக்கப்பட்டது. விரைவில் அவன் பௌத்த சமயத்தைத் தழுவினமையால், சிங்கள மக்கள் அவனைப் பெரிதும் போற்றினர்.

இராசசிங்கன் இறந்தமையாலும், தருமபால னுக்குப் பிறகு கோட்டையின் ஆட்சி உரிமையைத் தாம்

பெறக்கூடும் என்று வாய்ப்பு இருந்ததாலும், சிறிது சிறிதாகப் போர்த்துக்கீசர் உள்ளத்தில் இலங்கையைக் கைப்பற்றித் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்த வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. முதன்முதலிற் கறுவா வியாபாரத்திலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்த போர்த்துக்கீசருக்குப் புவனேகபாகு செய்த தவறுகளால் தமது மதத்தை நிலைநாட்டவேண்டுமென்ற கருத்தும், அரசர்களுக்கிடையே நிகழும் சண்டை சச்சரவுகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற ஆவலும் முன்னரே தோன்றிவிட்டன. ஆயினும், இந்தத் தீவில் அரசியல் ஆதிக்கம் பெற்றுத் தாங்களே ஆட்சி செலுத்த இயலுமென்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. மேற்கூறிய இரு சம்பவங்களே அவர்கட்குப் புதிதாகத் தோன்றிய ஆதிக்க ஆசையை வளர்த்தன.

மேலும், இலங்கைத் தீவு இந்து சமுத்திரத்தின் மத்தியில், இந்தியா, கிழக்கிந்தியத் தீவுகள், மேற்கிலுள்ள அரபு நாடுகள், ஆபிரிக்கா என்ற பல பிரதேசங்களுக்கும் இடையே சிறந்ததொரு தானத்தை வகிப்பதால், இதனைக் கைப்பற்றுதல் அவசியமென்பதை உணரலாயினர். கோட்டை இராச்சியத்திலும் யாழ்ப்பாணத்திலும் வெற்றிகரமாகத் தமது ஆதிக்கத்தை நிறுவியது போலவே, கண்டியிலும் நிலைபெறச் செய்துவிடலாம் எனக் கருதினர். இந்த எண்ணமே கண்டியை அவர்கள் இடைவிடாது தாக்கிவந்தமைக்கு மூலகாரணமாகும்.

விமலதர்மன் போர்த்துக்கீசரிடமே கல்வியும் போர்ப் பயிற்சியும் பெற்றுக் கிறித்தவனாக விளங்கிப் பின்னர் ஆட்சியைக் கவர்ந்து மதமும் மாறிவிட்டானாதலால், அவன்மீது போர்த்துக்கீசருக்கு அளவற்ற கோபமிருந்தது. அவனைப் 'பெரும் மதத்துரோகி' என்று குவெய்ரோசு சுவாமியார் குறிப்பிடுவதினின்றும் அக்காலத்தில் போர்த்துக்கீசரின் மனோநிலை ஒருவாறு

விளங்கும். ஆதலின், போர்த்துக்கீசர் மன்னரில் இருந்துவந்த 'தொனுகதரினு' என்ற கரலியட்ட பண்டாரனின் மகளைக் கண்டியில் முடிசூட்டி அரசியாக்கத் தீர்மானித்தனர். 1594-ல் உலோபசு டி சூசா தலைமையின்கீழ் ஒரு படை அனுப்பப்பட்டது. அவனுடன் சப்த கோறளையின் அரசனாக இருந்த விதிய பண்டாரன் என்ற சிற்றரசனும் சேர்ந்துகொண்டான். அந்தப் படைகளுடன் தொனுகதரினுவும் சென்றாள். விமலதர்மனது படைகள் எதிர்க்கமாட்டாது பின்வாங்கிச் சென்றன. விமலதர்மன் கண்டியினின்றும் போய்விட்டமையால், எளிதில் நகரைக் கைப்பற்றி, அவளை அரசியாக்கினர்.

அப்போது செயவீரன் என்ற சிங்களப்படைத் தலைவனுக்கும் சூசாவுக்குமிடையே பகைமை தோன்றியது. செயவீரன் விமலதர்மனுடன் உறவாடுவதாகச் சந்தேகம் கொண்ட போர்த்துக்கீசர், அவனைக் கொன்றுவிட்டனர். அதனாற் சிங்கள வீரர்கள் கலகம் செய்தனர். உடனே போர்த்துக்கீசப் படை கொழும்பு நோக்கித் திரும்பத் தொடங்கியது. அதனைக் கன்னொறுவையில் விமலதர்மன் தன் படைகளுடன் சூழ்ந்துகொண்டு தாக்கினான். கடும்போர் புரிந்து போர்த்துக்கீசரில் பெரும்பாலோர் கொலையுண்டனர்; மற்றவர்கள் கைது செய்யப்பட்டனர். சூசா விரைவில் மரணமடைந்தான். கண்கள் நீக்கப்பட்டுக் குருடராக, நாற்பது போர்த்துக்கீச வீரர்கள் கொழும்பு நோக்கி அனுப்பப்பட்டனர். இந்த வெற்றியின் பலனாக விமலதர்மனின் பெருமை உயர்ந்தது; போர்த்துக்கீசர் எங்கும் அவமதிக்கப்பட்டு, அவர்களுக்கெதிராக எல்லாக் கோறளைகளிலும் கலகங்கள் விளையலாயின.

இந்த நிலையில் அசிவிடோ பதவி ஏற்றானென்பதும், அவனும் கண்டியைக் கைப்பற்றப் பலமுறை படை எடுத்தானென்பதும் முன்னரே கூறப்பட்

டுள்ளன. அஸிவிடோ வருவதற்குள், விமலதர்மன் தொனகதிரினவைக் கைது செய்து அழைத்துச் சென்று, அவளையே பின்னர் மணந்துகொண்டான். கதரின கண்டி நாட்டிற்கு உரிமை உடையவளாகையால், இந்த மணத்தின் மூலமாக விமலதர்மன் கண்டிநாட்டின் அரசுரிமைக்குப் பெரிதும் தகுதி உடையவனுயினன். இதனுற் சிங்களவரின் பெரும் ஆதரவையும் பெற்றுன். போர்த்துக்கீசருக்கு எதிராகச் சிங்கள மக்களின் சார்பில் போர்புரியக்கூடிய தனித் தலைவனுக அவனைச் சிங்கள மக்கள் கருதினர்.

விமலதர்மன் கலகக்காரருக்கு இடைவிடாது துணை புரிந்து வந்தமையால், கலகங்களை அடக்குவது போர்த்துக்கீசருக்கு எளிதான காரியமாக இல்லை; நான்கு கோறளைகளில் கண்டிப் படைகள் புகுந்து தாக்கின. இறுதியில், அசிவிடோவின் போர்த்துக்கீசப் படைகளும் பிடிவாதமாக, மெனிக்கடவரை, அட்டப் பிட்டி என்ற இடங்கள் வழியாகக் கணத்தன்னையை அடைந்தன. அதனைக் கைப்பற்றியதும் சிங்கள வீரர்கள் போர்த்துக்கீசரை விட்டுப் பிரிந்து சென்றனர். அதனுற் போர்த்துக்கீசர் அச்சமுற்று மல்வானை நோக்கிச் செல்ல முற்பட்டனர். விமலதர்மன் தனது படைகளுடன் அவர்களை மல்வானை செல்லும் வரையில் இடைவிடாமல் தாக்கினுன். போர்த்துக்கீசரின் சேனை பின்னடைந்த செய்தியைக் கேள்வியுற்றதும் நாடெங்கும் கிளர்ச்சிகள் நிகழ்ந்தன.

இதற்கிடையில், இலங்கைக்கு வேறெரு ஐரோப்பிய நாட்டினரும் விசயம் செய்யலாயினர். இந்தத் தொடர் பின் பயனுகவே, பிற்காலத்தில் ஒரு புதிய ஆதிக்கம் தோன்றியது. 1602-ம் ஆண்டில் விமலதர்மன் போர்த் துக்கீசருடன் போரிட்டுக் கொண்டிருந்தபொழுது, ஒல் லாந்தரின் கடற்படையொன்று மட்டக்களப்பில் வந்து தங்கியது. அதன் தலைவனுன யோன்சு வான் சுபில்



படம் 12. விமலதர்ம சூரியனும் சபில்பேர்கனும் சந்திக்கல்

**பேர்கன்** விமலதர்மனைச் சந்தித்துப் போர்த்துக்கீசருக்கு எதிராக ஒல்லாந்தரின் உதவி கிடைக்குமென்பதைத் தெளிவு படுத்தினுன். சுபில்பேர்கன் தேவையான பொழுது ஒல்லாந்தர் உதவியளிப்பர் என்று உறுதி கூறிப் பல வெகுமதிகளையும் அளித்துவிட்டுச் சென்முன். சில மாதங்களுக்குப் பிறகு **சீபால்டு தேவீட்** என்ற டச்சுத் தூதன் ஒல்லாந்தரின் வியாபாரக் கம்பெனி சார்பில் கண்டி நாட்டிற்கு வந்து, விமலதர்மனைச் சந்தித்தான். ஒல்லாந்தர் போர்த்துக்கீசரைக் கடலில் தாக்கினுல், தான் அவர்களது கோட்டைகளை முற்றுகையிடுவதாகவும் அவர்களுக்கு போர்ச் செலவிற்காக கறுவா, மிளகு முதலியன தருவதாகவும் விமலதர்மன் வாக்களித்தான். ஒல்லாந்தரின் தூதுவர் விமலதர்மனுடன் தொடர்பு கொண்டதை அறிந்த போர்த்துக்கீசர் பெரிதும் கவலையும், கோபமும் அடைந்தனர்.

சமநிலப் பிரதேசங்களிற் குழப்பம் அதிகரித்து, போர்த்துக்கீசர் பெரிதும் துன்புற்ற சமயங்களில், விமலதர்மன் கலகக்காரருக்கு உதவியளித்து வந்தான். அப்போது **தேவீட்** மட்டக்களப்பில் ஒல்லாந்தப் போர்க் கப்பல்களுடன் வந்திருத்தலை விமலதர்மன் உணர்ந்ததும், பெரிதும் மகிழ்ச்சியடைந்தான். அவன் கைப்பற்றிய சில போர்த்துக்கீச மரக்கலங்களையும் அவற்றின் போர்த்துக்கீச மாலுமிகளையும் தன்வசம் ஒப்படைக்குமாறு விமலதர்மன் கேட்க, இரு தரப்பினருக்குமிடையே சச்சரவு மூண்டது. அதனுல், விருந்து ஒன்று நடக்கும் பொழுதே தேவிட்டும், அவனது வீரர் சிலரும் கொல்லப் பட்டனர். உடனே கோபமடைந்த ஒல்லாந்தரின் கடற்படை அங்கிருந்து அகன்றது. இனி அவர்களது உதவி கிட்டாதென உணர்ந்த விமலதர்மன் மீண்டும் போர்த்துக்கீசரோடு சமாதானம் செய்ய முற்பட்டான். அதற்காகக் கோவைக்குந் தூது அனுப்பினுன். அந்தத் தூது பயன் பெறவில்லை.

1604-ம் ஆண்டில் விமலதர்மன் இறந்தான். அவன் கண்டி நாட்டு அரசர்களிடையே உயர்ந்ததொரு தானத்தை வகித்தவன். அவனது பேராற்றல் போர்த்துக்கீசரைத் திகைக்கச் செய்தது. அவனது கம்பீரமான உருவத் தோற்றத்தையும், உடல் வலிமையையும் எதற்கும் அஞ்சாத மனத்திட்பத்தையும், கூர்ந்த அரசியல் அறிவையும் பற்றி குவெய்ரோசு சுவாமியார் தெளிவாக வருணிக்கிறுர். போர்த்துக்கீசரிடையே வளர்ந்து, அவர்களது மொழி, நாகரிகம், போர் முறை, அரசியல் தந்திரங்கள் முதலியவற்றைக் கற்றுத் தேர்ந்தவனுதலின், அவனே அவர்களால் வெல்ல இயலவில்லை. தொனுகதரினுவை மணந்ததும், ஒல்லாந்தரை அழைத்ததும், பௌத்த மதத்தைச் சார்ந்து பௌத்த குருமாரை அழைப்பித்துத் தலதாமாளிகாவ போன்ற சிற்பங்களை உருவாக்கியதும் அவனது அரசியல் திறமைக்கும் நுண்ணறிவிற்கும் உதாரணங்களாகும். அவன் ஒருவனுலேயே போர்த்துக்கீசர் இலங்கை முழுவதிலும் ஆதிக்கம் பெறுவது தடைப்பட்டதெனில், அவனது ஆற்றலையும், பெருமையையும் உணரலாகும்.

அவனுக்குப் பிறகு சிறு குழந்தையான **மகா ஆத்தானன்** என்ற அவனது குமாரன் அரசுரிமை பெற்றுன். அப்போது இராசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்த விமலதர்மனின் சகோதரனுன **சேனரதன்,** தானே அரசனுக விரும்பினுன். இவன் முன்னர் பௌத்த பிக்குவாக இருந்து நூல்களை ஆராய்வதில் ஈடுபட்டிருந்தவன். ஆனுல், உலக விவகாரங்களில் ஈடுபட்டதும், விமலதர்மனைப் போலவே நுண்ணறிவும் பேராற்றலும் போர்த் திறமும் பெற்று விளங்கினுன். தொனு கதரினு இன்னும் இளமங்கையாகவே இருந்தமையால், அவளை மணக்க ஊவா மாகாணத்துத் தலைவனும் தேனவாக்கையரசனும் போட்டியிட்டனர். சேனரதன் இத்தகைய பகைவர்களை அடக்கிவிட்டுத் தானே அவளை

மணந்துகொண்டான். பிறகு மகா ஆத்தானனை நீக்கி விட்டு, ஆட்சி உரிமையும் அடைந்தான்.

சேனரதன் போர்த்துக்கீசருடன் சமாதானம் செய்து கொள்ள விரும்பிய போதிலும், அவர்கள் அவனுடன் பகைமை பாராட்டினர். அசிவிடோ கண்டியை ஒடுக்க முயற்சி செய்வதை அறிந்த சேனரதன் ஒல்லாந்தரை வரவேற்று, அவர்களுடன் உடன்படிக்கை செய்ய முயன்முன். இதை அறிந்த அசிவிடோ 1611-ல் ஒரு படையுடன் சென்று சேனரதனை **கன்னொறுவையில்** முறியடித்தான். பிறகு வல்லனையில் ஒரு பெரும்படையை நிறுத்திவிட்டுக் கொழும்புக்குத் திரும்பினன். சேனரதன் எங்ஙனமேனும் ஒல்லாந்தரின் உதவியைப் பெறத் தீர்மானித்து, இந்தியாவிலிருந்த அவர்களது தலைமை அதிகாரிகளிடம் தூது அனுப்பியும் பலன் ஒன்றும் விளையவில்லை. ஆகையால், அவன் மதலினு சுவாமியார் உதவியால், அசிவிடோவுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டான். அதன் பிரகாரம், போர்த்துக்கீசருக்குத் திறை அளிப்பதாகவும் அவர்களுக்குக் கோட்டை இராச்சியத்திலுள்ள உரிமையை அங்கீகரிப்பதாகவும் சேனரதன் சம்மதித்தான். ஆனல், கண்டி நாட்டினர் இதனை ஏற்காமல், அரசனையும் எதிர்க்கத் தொடங்கினர். பிறகு பலமுறை போர்த்துக்கீசரின் படை எடுப்புகள் நேர்ந்தபோதிலும், சேனரதனை முறியடிக்க இயலவில்லை. 1617-ம் ஆண்டில் வல்லனையிலுள்ள போர்த்துக்கீசரைத் தோற்கடித்தான். ஆயினும், அப்போது கலகம் விளைத்த நிகபிட்டியனுக்கு எதிராக அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டான். அதன்படி அவனது ஆட்சி உரிமையைப் போர்த்துக்கீசர் ஏற்பதென்றும் அவர்களுக்கு அவன் திறையாக யானைகளை அனுப்புவதென்றும் ஏற்பாடாயிற்று.

1620-ல் ஒல்லாந்த வர்த்தகனுன **பொச்சுவாரின்** முயற்சியால் தேனிசு கடற்படை ஒன்று வந்தது.

போர்த்துக்கீசருடன் சேனரதன் சமாதானமாக இருந்தமையால், அவர்களது உதவியைப் பெரிதும் விரும்பவில்லை. எனினும், அவர்களுக்குத் திரிகோணமலையில் ஒரு கோட்டை அமைத்துக் கொண்டு வியாபாரம் செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால், 1623-ல் திசா திரிகோணமலையைக் கைப்பற்றிக் கோட்டை அமைக்கலானான். சேனரதனால் இதனைத் தடுக்க இயலவில்லை. பிறகு திசா மட்டக்களப்பையும் காலியையும் பாதுகாப்புச் செய்யத் தொடங்கியதும், சேனரதனுக்குப் போர்த்துக்கீசரின் நோக்கம் புலப்பட்டது. கிழக்கிலுள்ள துறைமுகங்களைக் கைப்பற்றி, அவனுக்கும் பிற ஐரோப்பியருக்குமிடையே எவ்விதத் தொடர்பும் இல்லாதவாறு செய்யவேண்டுமென்று போர்த்துக்கீசர் கருதினர். பிறகு சேனரதன் துணிந்து, போர்த்துக்கீசரால் வெளியேற்றப்பட்ட முசுலிம்களைத் தனது நாட்டில் குடியேற அனுமதித்தான்.

சேனரதன் போர்த்துக்கீசரை முறியடிப்பதற்காக, அவர்களிடமிருந்த சிங்களப் படைகளின் தலைவர்களான 'முதலியார்'களுடன் இரகசியமாக தொடர்பு கொண்டான். 1627-ல் சேனரதன் ஊவா எல்லையிலுள்ள போர்த்துக்கீசத் தலங்களைத் தாக்கியதும், போர் தொடர்ந்தது. அரசனின் சூழ்ச்சியை அறியாத திசா கண்டிமீது படை எடுத்தான். 1628-ல் சேனரதன் யாழ்ப்பாணத்தை வெல்லுமாறு அனுப்பிய படையும் முறியடிக்கப்பட்டது. மறு ஆண்டில் கண்டி நாட்டில் படைகளுடன் நுழைந்தபோது, திசா உடல் நலிவுற்று வருந்தினான். அப்போது சேனரதனின் மகனான குமார சிங்கனும் 'அபயசிங்கன்' என்ற முதலியாரும் சப்பிரகமுவா மாகாணத்து எல்லையில் புகுந்து குழப்பம் விளைத்தனர். எனவே, 1630-ல் திசா முடிவாகத் தீர்மானித்துப் பதுளையை நோக்கிச் சென்று, அதனைக் கைப்பற்றி அழித்தான். அங்கிருந்த முதியங்கனவிகாரை

முதலியவற்றின் புகழ்பெற்ற சிற்பங்களும் சிதைந்து போயின. அப்போது முதலியார்களைப் பற்றிச் சந்தேகித்த திசா அவர்களிடம் பரிவு காண்பித்துத் தனக்கு அடங்கியிருக்குமாறு செய்துகொண்டான். ஆனால், சேனை திரும்பத் தொடங்கியதும், முதலியார்கள் தமது படைகளுடன் விலகிச் சென்று பகைவருடன் சேர்ந்து கொண்டனர். உடனே திரும்பிச் சென்றுகொண்டிருந்த போர்த்துக்கீசப் படையும் அதன் தலைவனை டசூசாவும் **வெள்ளவாயா** என்ற இடத்தில் கண்டி நாட்டுப் படைகளால் சூழ்ந்து கொள்ளப்பட்டு அழிக்கப்பட்டனர். இந்த வெற்றியால் வலிமை பெற்ற சேனரதன் உடனே கொழும்பு நகரத்தையும் முற்றுகையிட்டான். ஆனால், போர்த்துக்கீசக் கடற்படைகளின் உதவியால் அந்த நகரம் பாதுகாக்கப்பட்டது. அவ்வாறே மட்டக்களப்பையும் அவர்கள் பாதுகாத்துக் கொண்டனர்.

1631-ல் தளபதியாக வந்த அல்மெயிடா நிலைமையை உணர்ந்து சேனரதனுடன் சமாதானத்தை விரும்பினான். சேனரதன் திறைகொடுக்க முடியாதென்று மறுத்தமையால், முதலில் ஒப்பந்தம் நிகழவில்லை. ஆயினும், காசிட்ரோ தளபதியாக வந்த பிறகு மீண்டும் போர் தொடங்கியமையால், சேனரதன் திறை அளிக்கவும், போர்த்துக்கீசக் கைதிகளை விடுவிக்கவும், மட்டக்களப்புத் துறைமுகத்தைப் போர்த்துக்கீசரிடமே விட்டு விடவும் இணங்கினான். இவ்வாறு சமாதானம் ஏற்பட்டது.

1635-ல் சேனரதன் இறந்தான். விமலதர்மன் நிகழ்த்திய போராட்டதைத் தானும் இடைவிடாது நடத்திப் போர்த்துக்கீசரை அடக்கியதொன்றே சேனரதனுடைய பெருமைக்குச் சான்றாகும். முன்னரே மகா ஆத்தானன் கொல்லப்பட்டமையாலும், தனது மூத்த புதல்வர் இருவரும் திறமையற்றவர்களாக இருந்தமையாலும், கடைசிப் புதல்வனை இராசசிங்கன் வசம்

சேனரதன் கண்டி நாட்டை ஒப்படைத்திருந்தான். அவனது ஆட்சியிலும் போர்த்துக்கீசரோடு போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

**வினுக்கள்**

1. முதலாம் இராசசிங்கன் கண்டிமீது படை எடுத்தமையால் நேர்ந்த விளைவுகள் யாவை ?
2. தொன் சுவான் யார்? அவன் எவ்வாறு கண்டியரசனுனன் ?
3. அவன் எவ்வாறு சிங்களவரின் அன்பைப் பெற்றுன் ?
4. "தொனுகதரினு"வின் வாழ்க்கை பற்றி ஒரு குறிப்பு எழுதுக.
5. கன்னெறுவைப் போரின் பலன் யாது ?
6. விமலதர்மனேச் சந்தித்த ஒல்லாந்தர் யாவர்? சந்திப்புக்களின் பலன் யாது ?
7. சேனரதனுக்கும் போர்த்துக்கீசருக்கு மிடையே நிலவிய உறவை விளக்குக.
8. 'வெள்ளவாயா' போரின் விளைவு யாது ?
9. அல்மெயிடாவும் சேனரதனும் செய்துகொண்ட ஒப்பந்தம் யாது ?

## 10. போர்த்துக்கீசருக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே நிகழ்ந்த போராட்டம்

பதினரும் நூற்ருண்டில் சுபானிய மன்னனுன இரண்டாம் பிலிப்பு, காலந்து நாட்டில் தனது ஆதிக்கத்தை நிலே நிறுத்தவும் தனது மதமாகிய கத்தோலிக்க மார்க்கத்தைப் பரப்பவும் பெரிதும் முயன்ருன். ஆனுல், பெரும்பாலும் புரட்டசுதந்து மதத்தைப் பின்பற்றிய ஒல்லாந்தர்கள் நாட்டுப் பற்றும் சுதந்திர வேட்கையும் கொண்டிருந்தமையால், அவர்களே ஒடுக்கப் பிலிப்பால் முடியவில்லே. மேலும், அவர்களுக்கு இங்கிலாந்து முத

லிய நாடுகளும் பேருதவிபுரிந்தன. இறுதியில், அவர்கள் சுபானிய சேனைகளை முறியடித்து, தமக்கெனச் சுதந்திர அரசியலை நிறுவிக்கொண்டனர். அவர்கள் சிறந்த மாலுமிகளாகவும் வியாபாரத்தில் விருப்பமுள்ளவர்களாகவும் இருந்தமையால், விரைவில் கடல் கடந்து, கீழைத் தேசங்களுக்கு வந்து வியாபாரம் புரியத் தொடங்கினர். கி. பி. 1602-ம் ஆண்டில், தமது வியாபாரத்தை வளர்த்துக் கொள்வதற்காகக் 'கிழக்கிந்திய வியாபாரச் சங்கம்' என்ற தாபனத்தையும் நிறுவினர்.

இவ்வாறு தாம் ஏகபோகமாக அனுபவித்து வந்த கீழ்நாட்டு வியாபார உரிமைகளில் ஒல்லாந்தர் தலையிட்டமையால், போர்த்துக்கீசர் அவர்களைப் பகைவர்களாகக் கருதிப் போரிடலாயினர். ஒல்லாந்தர் திறமை மிக்க மாலுமிகளாகவும், கீழ் நாடுகளிலுள்ள சுதேச மன்னர்களுடனும் மக்களுடனும் நன்கு பழகக் கூடியவர்களாகவும் இருந்ததால், போர்த்துக்கீசரால் அவர்களை எதிர்த்து நிற்க இயலவில்லை. மேலும், போர்த்துக்கீசரின் கொடுமையால் துன்புற்ற மன்னர்கள் ஒல்லாந்தரின் உதவியைப் பெறப் பெரிதும் முயன்றுர்கள். அதனுல், விரைவில் கிழக்கிந்தியத் தீவுகளில், மொலூக்காசு, அம்பாய்னு, யாவா முதலிய பகுதிகளில், அவர்கள் தமது ஆதிக்கத்தை நிறுவி, அங்கிருந்து கராம்பு, சாதிக்காய் போன்ற வாசனைப் பண்டங்களை ஏற்றுமதி செய்யலாயினர். இந்தப்



படம் 13. கோவன்

பிரதேசங்களை நிர்வகிக்க ஒரு தேசாதிபதியும், அவனுக்கு ஆலோசனை கூற ஒரு சபையும், நியமிக்கப்பட்டன. இத்தகைய ஒல்லாந்த தேசாதிபதிகளில் **கோவன்** திறமை வாய்ந்தவன். இவனே பத்தேவியா நகரத்தை நிறுவி, அங்கு ஒல்லாந்தரின் தலைமைக் காரியாலயத்தை ஏற்படுத்தியவன். 1623-ல் அம்பாய்னுவிலிருந்த ஆங்கில வியாபாரிகளைக் கொல்லச் செய்து, அவர்களை இந்தத் தீவுகளினின்றும் துரத்தியவனும் இவனே. இவனைப்போன்ற தேசாதிபதிகளின் விடா முயற்சியால், சீனநாட்டில் போர்மோசா தீவும், இந்தியாவில் சின்சூரா, சூரத் பழவேற்காடு முதலிய துறைமுகங்களும் ஒல்லாந்தர் வசமாயின. இவற்றை அழிக்கப் போர்த்துக்கீசர் செய்த முயற்சிகள் பயனற்றுப் போயின.

**வான்டீமன்** தேசாதிபதியாக விளங்கிய காலத்தில் தான், ஒல்லாந்தருக்கும் இலங்கைக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அப்போது மலையாளக் கரையையும் இலங்கையையும் போர்த்துக்கீச ஆதிக்கத்தினின்றும் விடுவித்து அங்குள்ள கறுவா வியாபாரத்தைக் கவர்ந்துகொள்ள வேண்டுமென்னும் கருத்து, அவர்களது உள்ளத்தில் நிலைபெற்றது. எனவே, முன்னர்த் **தேவிட் கண்டி** யரசரால் கொல்லப்பட்டதையும் கருத்தில் கொள்ளாமல், இரண்டாவது இராசசிங்கன் உதவிபுரியு



படம் 14. வான்டீமன்

மாறு 1636-ல் வேண்டுகோள் அனுப்பியதும், ஒல்லாந்தர் இலங்கை அரசியலில் ஈடுபடத் தொடங்கினர். ஒல்லாந்தர் உதவிபுரிந்தால் மட்டக்களப்பில் கோட்டை கட்ட அனுமதிப்பதாகவும் வாக்களித்தான். எனவே, பத்தேவி யாவில் இருந்த வான்டீமன் முற்றுகையிட்டுக் கொண்டி ருந்த **ஆதாம் வெசுடர் வோல்டை** இலங்கை செல்லுமாறு பணித்தான். அவன் தனது துணைத் தளபதியாகிய **காசுடர்** என்பவனை ஒரு கடற்படை யுடன் இலங்கைக்கு அனுப்பவே, அவன் விரைவில் மட்டக்களப்பைத் தாக்கி அதைக் கைப்பற்றினுன். பிறகு 1638-ல் வெஸ்டர் வோல்டும் இராசசிங்கனும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். அதன் நிபந்தனைகளில், ஒல்லாந்தர் இலங்கையில் கறுவா வியாபாரத்தின் ஏகபோக உரிமையைப் பெறலாமென்பதும், இலங்கைத் தீவில் எங்கும் வரிகள் முதலிய தடைகளின்றி வியாபாரம் செய்யலாமென்பதும், இராசசிங்கன் போர்ச் செலவை ஏற்றுக்கொள்வதால் **அவனது விருப்பத்திற்கு மாருகப் போர்த்துக்கீசரிடமிருந்து கைப்பற்றிய கோட்டைகள் எதனையும் அரண் செய்வதில்லை யென்பதும்**, முக்கிய மானவைகளாகும். இவ்வாறு கண்டியரசரும் ஒல்லாந் தரும் தமது பொதுவான எதிரியாகிய போர்த்துக்கீசரை அழிப்பதென உறுதி பூண்டனர்.

பிறகு இராசசிங்கனது விருப்பத்தின் வண்ணம் இலங்கையை நோக்கி அனுப்பப்பெற்ற ஒல்லாந்த கடற் படை கொழும்புத் துறைமுகத்தை முற்றுகையிட்டது. ஆனுல், இராசசிங்கனது படைகள் தரை மார்க்கமாகக் கொழும்பை அடைவதற்கியலாது போகவே, அந்தக் கடற்படை கொழும்பை விடுத்துத் திரிகோணமலையை அடைந்தது. பிறகு அந்தத் துறைமுகம் 1639-ல் எளி தில் கைப்பற்றப்பட்டது. மட்டக் களப்பையும் திரி கோணமலையையும் ஒல்லாந்தர் அரண் செய்தனர். அதைக் கண்டு இராசசிங்கன் அச்சமடைந்தான்.



படம் 15. காலித் துறைமுகத்தை ஒல்லாந்தர் கைப்பற்றுதல்

மீண்டும் உலூகாசு என்ற தளபதியின் தலைமையின் கீழ் ஒல்லாந்தக் கடற்படை இலங்கையை அடைந்தது. கொழும்புத் துறைமுகத்தைக் கைப்பற்ற இயலாதெனக் கண்ட உலூகாசு, நீர் கொழும்புத் துறைமுகத்தைத் திடீரென்று தாக்கிப் போர்த்துக்கீசரை முறியடித்தான். கறுவா வியாபாரத்திற்குச் சிறந்த இடமாதலால், உலூகாசு இதனைக் கைவிடவில்லை. பின்னர்க் காலித் துறைமுகமும் இவ்வாறே ஒல்லாந்தர் வசமாயிற்று. இந்த இரு இடங்களிலும் மன்னன் அனுமதியின்றி ஒல்லாந்தர் அரண்கள் அமைத்தமையால், இராசசிங்கன் மிகவும் வருத்தமடைந்தான். தாங்கள் இலங்கையினின்றும் போர்த்துக்கீசரை முடிவாகத் துரத்திய பின்பு, ஒரு கோட்டையை மாத்திரமே வைத்துக்கொண்டு மற்றவைகளை அழித்து விடுவதாகக் காஸ்டர் உறுதி கூறியதும், இராசசிங்கன் ஒருவாறு மனம் தேறினான். ஆனால், மீண்டும் அவனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே வருத்தம் தோன்றுவதற்கான சம்பவம் ஒன்று நிகழ்ந்து விட்டது. காஸ்டர் 1640-ல் கண்டிக்குச் சென்று இராசசிங்கனுக்குச் சமாதானம் கூறிவிட்டுத் திரும்பிச் செல்லும்போது, வழியில் கொலையுண்டிறந்தான். இராசசிங்கன் பத்தேவியாவிற்குத் தூதுவர்களை அனுப்பி, காஸ்டரின் கொலைக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்பதை விளக்க முயன்றான். ஒல்லாந்தர் அவனது கூற்றை நம்பாவிடினும், கறுவா வியாபாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்னும் ஆசையால், அவனுடன் பகைமை பாராட்டாதிருந்தனர்.

இதற்கிடையில், 1640-ல் போர்த்துக்கீசர் ஊக்கத்துடன் போர் புரியலாயினர். பிலிப் மாஸ்கரன் காஸ் என்ற புதிய தளபதி நியமிக்கப்பட்டு, அவன் தலைமையின்கீழ்க் கடற்படை நீர் கொழும்பை முற்றுகையிட்டது. ஒல்லாந்தரும் கண்டியரசனும் தமக்குள் பிணக்குப் பட்டுக்கொண்டிருந்தமையால், நீர் கொழும்பும் நான்கு



படம் 16. காலிக்கோட்டை

கோறளையும் சப்த கோறளையும் எளிதில் போர்த்துக்கீசர் வசமாயின. ஆனால், காலியை மாத்திரம் கைப்பற்ற அவர்களால் இயலவில்லை.

அப்போது போர்த்துக்கல் நாட்டிற் புரட்சி தோன்றி, அதன் பயனாக சுபானிய ஆதிக்கத்தினின்றும் போர்த்துக்கல் விடுதலையடைந்தது. நான்காவது யோன் என்பான் போர்த்துக்கல் அரசனானான். அவன் 1642-ல் ஒல்லாந்தருடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டான். அதன் பிரகாரம் அவரவர்கள் வசமுள்ள இடங்களை அவரவர்களே வைத்துக்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆயினும், நீர் கொழும்பை 1644-ல் முடிவாக ஒல்லாந்தர் கைப்பற்றிய பிறகே, இந்தச் சமாதானம் நிலைத்தது. இவ்வாறு போர்த்துக்கீசர், ஒல்லாந்தரது ஆதிக்கத்திற்கு இலங்கையில் இடமளிக்குமாறு நேர்ந்து விட்டது. ஒல்லாந்தர் பேன்தோட்டைக்கு வடக்கிலுள்ள பகுதிகளில் ஆட்சிபுரியத் தொடங்கினர்.

ஆனால், ஒல்லாந்தருக்கும் இராசசிங்கனுக்குமிடையே பகையை வளரலாயிற்று. அவனுக்காக ஏழு ஆண்டுகளாகப் போர்த்துக்கீசரோடு தாங்கள் போர் புரிந்தும், அவன் முன்னர் வாக்களித்தபடி போர்ச் செலவில் ஒரு சிறிதும் கொடுக்கவில்லை என்றும், போர் நிகழ்ந்த காலத்திலும் தனது படைகளை அனுப்பி ஊக்கத்துடன் போர் புரியவில்லை என்றும் ஒல்லாந்தர் குறைகூறினர். ஆனால், அவர்கள் போர்த்துக்கீசரிடமிருந்து கைப்பற்றிய கோட்டைகளைத் தன் வசம் விட்டுவிடாமலும் அழிக்காமலும் ஒல்லாந்தர் வைத்துக் கொண்டது பழைய ஒப்பந்தங்களுக்குப் புறம்பான செயல் என்று இராசசிங்கன் கூறலானான். ஆயினும், அவர்கள் தமது போர்ச் செலவிற்கு ஈடாகக் கறுவா சேகரிப்பதை அனுமதித்தான். ஆனால், ஒல்லாந்தர் கறுவா சேகரிப்பதுடன் நில்லாமல், நீர் கொழும்பையும் காலியையும் சுற்றியுள்ள பகுதிகளிற் றமது நிர்வாகத்தை ஏற்படுத்த

வும், 'இராசகாரியம்' போன்ற பண்டைய திறைகளை வசூலிக்கவும், இரகசியமாகப் போர்த்துக்கீசருடன் உறவு கொள்ளவும் தொடங்கினர். 1644-ல் ஒல்லாந்தர் தேசாதிபதியாக வந்த **தைசன்**, கண்டியரசனது அனுமதியின்றி அவனது பிரதேசங்களிலிருந்த யானைகளைப் பிடித்து விற்பதையும் மேற்கொண்டான். இதனால், கோபமடைந்த இராசசிங்கன் ஒல்லாந்தருக்கு மக்கள் கறுவா விற்பதையும் உணவுப் பொருள்கள் கொடுப்பதையும் தடுத்தான். உடனே தைசன் போர் தொடுத்தமையால், இராசசிங்கனுடைய படைகள் சப்த கோறளையில் புகுந்தன. 1645-ல் **வான் டெர் சுடெல்** என்பவனை முறியடித்தபிறகு, கண்டிப் படைகள் நீர்கொழும்பைச் சூழ்ந்த பகுதிகளைக் கைப்பற்றி, கறுவாவைச் சூறையாடின. மீண்டும் 1646-ம் ஆண்டில் ஒல்லாந்தர் தோல்வியுற்றமையால், பத்தேவியா அரசாங்கம் தைசனைத் திரும்ப அழைத்து விட்டுச், சிறந்த அரசியல் நிபுணனாகிய **மட்சூய்கர்** என்பவனைத் தேசாதிபதியாக அனுப்பியது.



படம் 17. மட்சூய்கர்

ஐரோப்பாவில் ஒல்லாந்தருக்கும் போர்த்துக்கீசருக்கும் போர் மூளக் கூடுமென்பதை உணர்ந்த மட்சூய்கர், இராசசிங்கனைச் சமாதானப்படுத்துவதில் முனைந்தான். அவன் அனுப்பிய தூதனுக்கும் கண்டியரசனுக்குமிடையே முடிவாக 1649-ல் ஒப்பந்தம் ஏற்பட்டது. பெரும்பாலும் 1638-ம் ஆண்டின் உடன்படிக்கை நிபந்

தனைகளை ஒட்டியே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதாயினும், ஒல்லாந்தர் அரசனுக்கு மிகவும் சாதகமாக நடந்துகொள்ளுமாறு நேர்ந்தது. கறுவா வியாபார உரிமை மாத்திரம் ஒல்லாந்தருக்கு அளிக்கப்பட்டது. நீர் கொழும்பும் மாத்தறைப் பகுதியும் அவர்களிடம் விடப்பட்டன. அங்கு அவர்கள் ஒல்லாந்தரையே திசாவைகளாக நியமித்துக் கொண்டனர். 1650-ல் மட்சூய்கர் சென்ற பிறகும் இத்தகைய நிலைமை நீடித்தது.

1652-ம் ஆண்டில் ஒல்லாந்தருக்கும் போர்த்துக்கீசருக்குமிடையே நிலவிய பத்துவருடச் சமாதானம் முடிவடைந்துவிட்டது. மீண்டும் ஒல்லாந்தர் போர்க் கோலம் பூண்டனர். அப்போது கொழும்பில் போர்த்துக்கீசத் தளபதியாக இருந்த **மாசுகரன் காசு கோமம்** போருக்கு யாதொரு ஆயத்தமும் செய்யாதிருந்தமையால், கழுத்துறையை ஒல்லாந்தர் எளிதில் கைப்பற்றினர். பிறகு, பாணந்துறையிலும் போர்த்துக்கீசர் முறியடிக்கப்பட்டனர். கண்டியரசனது படைகளும் சப்பிரகமுவ மாகாணத்தில் பிரவேசித்தன. இதனால் கோபமடைந்த கொழும்பு நகரத்து மக்களும் போர் வீரரும் குருமாரும் தமது தளபதிமீது வெறுப்படைந்து, அவனைத் தேசத்துரோகக் குற்றம் சாட்டிச் சிறைப்படுத்தினர்.

பிறகு பிகுய்ரா என்ற வீரன் கொழும்பு நகரத்தைப் பாதுகாக்கத் துணிந்தான். அவனுடைய வீரச் செயல்களால், ஒல்லாந்தர் தாம் கைப்பற்றிய பகுதிகள் பலவற்றையும் விட்டு நீங்குமாறு நேர்ந்தது. பிறகு 1653-ம் ஆண்டின் இறுதியில், **பிரான்சிசுகோ டி காசுரோ** போர்த்துக்கீசத் தளபதியானான். அப்போது வலியதொரு போர்த்துக்கீசக் கடற்படை வந்து சேர்ந்தது. அது காலியை முற்றுகையிட்டபோதிலும், இறுதியில் ஒல்லாந்தக் கடற்படையால் அழிவடைந்து மறைந்தது.

மேலும், ஒல்லாந்த கடற்படைத் தலைவனான வான் கோயன்சு கடல் மார்க்கமாகக் கோவையினின்றும் போர்த்துக்கீசருக்கு உதவி கிடைக்காதவாறு தடுத்துக் கொண்டிருந்தான்.



படம் 18. செராட் கல்ப்ட்

அடுத்தஆண்டிலிருந்து (1654) போர்த்துகீசர் பெரிதும் துன்பமுறலாயினர். செராட் கல்ப்ட் என்ற ஒல்லாந்து படைத் தலைவன் மீண்டும் களுத் துறையைக் கைப்பற்றி, பாணந்துறையில் போர்த் துக்கீசரை முறியடித்து, கொழும்புக் கோட்டையை இரு பக்கமாகவும் தாக்கலானன். அவனது பாசறை விளங்கிய இடமே, கோட்டைக்கு வெளியிலுள்ள 'கல்சுடோப்' என்ற இடமாகும். அவனுக்கு உதவியாக இராசசிங்கன் தனது சேனைகளுடன் இரயிகம் வத்தை என்ற இடத்தை அடைந்தான்.

கொழும்புக் கோட்டைக்கு உதவி வராதவாறு ஒல்லாந்த கடற்படை முற்றுகையிட்டுக் கொண்டிருக்க, அவர்களது சேனைகள் கொழும்புக் கோட்டையை 1655-ம் ஆண்டு ஐப்பசியில் முதன் முதலாகத் தாக்கத் தொடங்கின. கோட்டைக்குள்ளிருந்த போர்த்துக்கீசத் துருப்புகளும் அவர்களைச் சார்ந்தோரும் உணவின்மையாலும் நோய்களாலும் நலிந்த போதிலும், பிடிவாதமாக எதிர்த்து நின்றனர். கோவையிலிருந்து எவ்வாறேனும் உதவி பெறக்கூடும் என்ற நம்பிக்கை அவர்கள் உள்ளத்தில் ஒளிவீசியது. ஆனல், துரதிருட்ட வசமாக

அவர்கள் முன்பு சிறையிலடைத்து அவமானப்படுத்தி அனுப்பிய மாசுகரன்காசு அப்போது கோவையில் சிறிது காலத்திற்கு இராசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டான்; அவன் கொழும்பிற்கு உதவியனுப்பக் காலதாமதம் செய்தமையால், கொழும்பிலிருந்தவர்களின் எதிர்ப்பு நாளடைவில் குறைந்தது.

1656-ல் கல்ப்ட் இராசசிங்கனைச் சந்தித்தான். இருவரும் சேர்ந்து கொழும்பைத் தாக்குவதென்று ஏற்பாடாயிற்று. விரைவில் கல்ப்ட் வெடியால் தாக்குண்டு இறந்து போனமையால், **ஏட்ரியன் மேய்டன்** படைத்தலைவன் ஆனான். அந்த ஆண்டு மே மாதத்தில் ஒல்லாந்தப் படைகள் மூர்க்கமாக எதிர்த்துத் தாக்கத் தொடங்கின. மிகவும் துன்புற்றுச் சோர்வடைந்த போர்த்துக்கீசர் இறுதியில் பணிந்தனர். அவர்களது ஆதிக்கத்தின் வீழ்ச்சிக்கு அறிகுறியாக வைகாசி மாதம் பன்னிரண்டாம் திகதியன்று கொழும்புக் கோட்டையில் ஒல்லாந்தரின் கொடி பறக்கத் தொடங்கியது!

கொழும்பைக் கைப்பற்றியதும் இராச சிங்கன் எதிர்பார்த்த வண்ணம் நகரத்தை அவனிடம் ஒப்படைக்கவோ, அன்றிக் கோட்டையைத் தகர்க்கவோ, ஒல்லாந்தர் இசையவில்லை. அதற்கு மாறாகக், கண்டிப் படைகளைத் துரத்திவிட்டு, ஒல்லாந்தத் துருப்புகளே கோட்டையின் பாதுகாப்பை ஏற்றுக்கொண்டிருந்தன. போர்ச் செலவுகள் அளிக்கப்படாமையால், கொழும்புக் கோட்டையை இராசசிங்கன் பெறமுடியாது என்று மெய்டன் கூறிவிட்டான். சினமடைந்த அரசன், கண்டி நாட்டுக்குச் செல்லும் கணவாய்களைத் தடைசெய்து, சிங்களவர் ஒல்லாந்தருடன் ஒத்துழைக்கலாகாது என்றும் கட்டளையிட்டான். பிறகு தனது பெரும் பகைவரான போர்த்துக்கீசருடன் உறவு கொண்டாடி, ஒல்லாந்தரின் கறுவா வியாபாரத்திற்கும் இடையூறுகள் விளைத்தான். உடனே அரசனது படைகளை **வான் டெர் மெய்டன்**

தோற்கடித்தானுயினும், அதன் அரசனேடு சமாதானமாக இருக்க முற்பட்டான்.

கொழும்பு நகரத்தைக் கைப்பற்றிய பிறகு, அதனை இரு பகுதிகளாகப் பிரித்து, 'கோட்டை'க்குத் தகுந்த அரண்களை ஒல்லாந்தர் உண்டாக்கினர். அதன் புறம்பே 'பேட்டை' என்ற பகுதி அமைந்திருந்தது. இந்த இரு பகுதிகளுக்குமிடையே நீர் தேங்கிய குளம் ஒன்று காணப்பட்டது. 'கல்ப் சுடொப்' என்ற இடத்தில் அரசாங்கத்தின் தலைமைக் காரியாலயம் தாபிக்கப் பட்டது.

தனது முயற்சிகள் வீணனதும், இரயிகம் வத்தையி லிருந்து இராசசிங்கன் திரும்பிவிட்டான். அவனுக்கு ஒல்லாந்தரின் உண்மையான நோக்கம் இப்பொழுதே புல ஞயிற்று. போர்த்துக்கீசரை அழிப்பதற்காக முற்பட்டு, அந்த முயற்சியில் ஒல்லாந்தரின் ஆதிக்கம் நிலைபெறச் செய்து விட்டோமே என்று பெரிதும் மனம் வருந்திஞன். மேலும், அவன் பல மாதங்களாகக் கண்டியில் இல்லாத தாலும், தனது குடிகளைக் கொடூரமாக நடத்தியதாலும் மக்களின் வெறுப்புக்கு ஆளாஞன். அவனுடைய பகை வர்கள் அவனை அழிக்க முயன்றனர். அவர்களுடன் அவன் போராடிக் கொண்டிருந்தது, ஒல்லாந்தருக்கு நல மாக அமைந்தது. அவர்கள் விரைவில் போர்த்துக் கீசரின் மற்றக் கோட்டைகளையும் தாக்கி, அவற்றைக் கைப்பற்றிஞர்கள்.

1658-ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் **இரைகிளவ் வான் கோயன்சு** தலைமையிற் கடற்படையொன்று மன்ஞர்த் துறைமுகத்தை அடைந்து, அங்குள்ள கோட்டையைக் கைப்பற்றியது. நான்கு நாட்கள் வீர மாகப் போராடியும் போர்த்துக்கீசரால் ஒல்லாந்தரை எதிர்த்து நிற்க இயலவில்லை. பிறகு அங்கிருந்து தரைப் படைகள் யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்றன. சாவகச்சேரி, ஊர்காவற்றுறை முதலிய இடங்களைக்

கைப்பற்றிய பிறகு, யாழ்ப்பாணம் முற்றுகையிடப் பட்டது. கோவையிலிருந்து உதவிக்கு வந்து கொண்டிருந்த கடற்படையும் ஒல்லாந்தரால் முறியடிக்கப்பட்டதால், இறுதியில் போர்த்துக்கீசர் பணிய நேர்ந்தது. இவ்வாறு இலங்கை நாட்டில் போர்த்துக்கீசர் ஆதிக்கம் முடிவடைந்தது.

### விஞக்கள்

1. ஒல்லாந்தர் எவ்வாறு தம் நாட்டில் சுதந்திர அரசியலை நிறுவினர்?

2. வான் டீமன் காலத்தில் இலங்கையுடன் ஒல்லாந்தர் தொடர்பு கொண்டதை விளக்கி வரைக.

3. கண்டியரசனுடன் அவர்கள் செய்து கொண்ட உடன்படிக்கையையும், அதனுல் விளைந்த பலனையும் விளக்குக.

4. போர்த்துக்கீசருக்கும் ஒல்லாந்தருக்கும் எவ்வாறு சமாதானம் ஏற்பட்டது?

5. இராச சிங்கனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையே ஏன் பகைமை தோன்றியது?

6. மட்சூய்கர் செய்த ஒப்பந்தத்தால் விளைந்த பலன் யாது?

7. போர்த்துக்கீசரிடமிருந்து ஒல்லாந்தர் கோட்டைகளைக் கைப்பற்றிய வரலாற்றை விளக்கி, இலங்கைத் தேசப்படத்தில் அவற்றைக் குறிக்க.

### பயிற்சி

ஐரோப்பா படத்தில் சுபானியர் வசம் (பதினும் நூற்ருண்டில்) இருந்த தேசங்களையும் ஒல்லாந்தரது நாட்டையும் தெளிவாகக் குறிப்பிடுக.

# 11. போர்த்துக்கீசர் ஆட்சியின் பலன்கள்

போர்த்துக்கீசர் தொன்சுவான் தர்மபாலன் இறந்ததும், இலங்கையின் தென்மேற்குப் பகுதியில் ஆட்சி உரிமை பெற்றனர் அல்லவா? அவர்கள் அந்த இராச்சியத்தை நான்கு ‘திசாவனி’ களாகப் பிரித்தனர்; அவையே மாத்தறை, சப்பிரகமுவா, நான்குகோறளே, சப்தகோறளே என்பனவாகும். கொழும்பு நகரத்தை மத்தியத்தானத்தில் வைத்து, இந்த நான்கு பகுதிகளும் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு திசாவனியையும் பரிபாலிக்கத் ‘திசாவை’ என்ற அதிகாரி நியமிக்கப்பட்டார். முதன் முதலில் சிங்களவரே திசாவைகளாக நியமிக்கப்பட்டபோதிலும், நாட்கள் செல்லச் செல்லப் போர்த்துக்கீசருக்கு அவர்களிடம் நம்பிக்கை குறைந்தது. அதனால், பின்னர்ப் போர்த்துக்கீச இனத்தினரே பெரும்பாலும் திசாவைகளாக நியமிக்கப்படலாயினர். யாழ்ப்பாண நாட்டில் அவர்களது அரசியல் முறை சிறிது மாறுபட்டிருந்தது.

திசாவைகளுக்கு அளவு கடந்த அதிகாரம் இருந்தது. அந்தந்தத் திசாவனிகளில் நிதி நிர்வாகம், நீதி பரிபாலனம், இராணுவம் முதலியவை பற்றிய சகல அதிகாரங்களும் திசாவைகள் வசமே விடப்பட்டிருந்தன. அவர்களுக்குப் படை நடத்துவதற்கு ‘இலசுகரின்’களும் (Lascarin), நீதி நிர்வாகத்திற்கு அதிகாரி, மொகத்தலர், பசநாயகர்களும் துணைபுரிந்தனர். மரண தண்டனை விதிக்கும் அதிகாரமும் திசாவைகள் வசமிருந்தது. அவர்களுக்கு மாதந்தோறும் ஊதியம் அளிக்கப்படவில்லையெனினும், திசாவனிகளிலுள்ள சில கிராமங்கள் ஒதுக்கிவிடப்பட்டு அவற்றிலிருந்து **நிந்தகம்** என்ற வரியைத் தமக்குரிய வருவாயாக வசூலித்துக்கொள்ளும் உரிமை இருந்தது.

ஒவ்வொரு திசாவனியும் பல கோறளேகளாகப்

பகுக்கப் பட்டிருந்தது. கோறளைக்குரிய தலைவன், 'கோறளை' அல்லது 'கோறளை விதானி' என




படம் 19. போர்த்துக்கீச அரசியற் பிரிவுகள்

வழங்கப்பட்டான். இவனுக்கும் வரி வசூலிக்கும் உரிமையும் நீதி வழங்கும் அதிகாரமும் இருந்தன. இத்தகைய அதிகாரிகளுக்குத் துணைபுரிய ஒவ்வொரு கோறளையி

லும் நான்கு '**அத்துக் கோறளே**'கள் இருந்தனர். அவர்களுக்குக் கீழ் விதானேமாரும் சிறு தலைமைக்காரரும் இருந்து கிராமங்களைப் பரிபாலித்தனர். இவர்களிற் பெரும்பாலோர் சிங்களவராக இருந்தனர். இவர்கள் மட்டுமன்றிக் கிராமங்களில் 'மயேரல்லர்,' கண்காணிகள் முதலியவர்களும் ஊழியம் புரிந்தனர். கிராமங்களிலுள்ள கற்பாதைகளையும் பாலங்களையும் கண்காணிப்பதும், நீர் பாயும் மதகுகளைச் சீர்திருத்துவதும், படைவீரருக்கு உணவளிப்பதும், திசாவைகளுக்கும் விதானிமாருக்கும் வேலை செய்ய ஆட்களைத் திரட்டுவதும் கிராம அதிகாரிகளின் கடமைகளாம். இத்தகைய அதிகாரிகள் யாவருக்கும் போதிய வருவாய் அளிக்கக் கூடிய நிலங்கள் விடப்பட்டிருந்தன.

இவர்களேயன்றி, கறுவா சேகரிக்கும் கிராமங்களில் '**மகாபட்ட தளபதிகள்**' என்ற அதிகாரிகளும், இரத்தினங்களைச் சேகரிப்பதற்கு '**ஆக்ர விதானி**' என்போரும் நியமிக்கப்பட்டிருந்தனர். பண்டைய சிங்கள ஆட்சி முறையில் போர்த்துக்கீசர் மிகுதியும் மாறுதல்கள் செய்யவில்லை என்பதை இதனின்றும் அறியலாம்.

மக்களிடமிருந்து அரசிறை சேகரிப்பதற்கும் பண்டைய முறைகளே பின்பற்றப்பட்டன. ஆயினும், ஐரோப்பாவிலிருந்த நிலமான்ய முறையை (Feudalism) அனுசரித்து நிலமனைத்தும் போர்த்துக்கீச அரசனது உடைமை என்றும், அதைப் பயன்படுத்தும் பொருட்டு அரசிறையைத் தானியமாகவோ, அன்றி இராச காரிய சேவையாகவோ செலுத்திவிட வேண்டுமென்றும் ஒரு கொள்கை வகுக்கப்பட்டிருந்தது. அரசனிடமிருந்து குத்தகையாகக் கிராமங்களைப் பெறுவோர் '**வொரிரோசு**' என வழங்கப்பட்டனர். இந்த முறையால் நேர்ந்த தீமை யாதெனில், கிராமத்திலுள்ள குடிமக்களைத் துன்புறுத்தித் தாங்கள் விரும்பிய அளவு செல்வம் சேகரிக்க இத்தகைய 'வொரிரோசு'க்கள் இடம்

பெற்றதேயாகும். போர்த்துக்கீசர் இத்தகைய தீமைகளுக்கு இடமளித்தனர் என்பதனே, "........இந்தப் போர்த்துக்கீசருக்குச் சிங்களவரின் சட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் ஆராய்ந்தறிவதில் விருப்பமில்லை ; அவற்றை அவர்கள் வெளிப்படையாக அறிவிப்பதுமில்லை. சில திசாவைகளுக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் அவர் மனம் போனவாறு ஆட்சிபுரிய உரிமை கொடுத்துவிட்டனர். அவர்கள் போர்களையும் அரசிறை திரட்டுதலையும் காரணங்களாகக் கூறிப் பேராசை காரணமாக மக்களை வதைத்துப் பொருளீட்டும் கயவர்களாக உள்ளனர்," என்ற குவெய்ரோசு சுவாமியாரின் கூற்றினின்றும் தெளிவாக உணரலாம்.

அன்றியும், நிலங்களை அளத்தல், தகுந்த அரசிறை விதித்தல், அவற்றைக் கணக்குப் புத்தகங்களில் தொகுத்தல் முதலிய திட்டங்களைப் போர்த்துக்கீசர் மேற்கொள்ளவில்லை. கண்டி நாட்டில் மாத்திரமே நிலங்கள் எவருக்காக, எந்தெந்தச் சேவைகளுக்காக வழங்கப்பட்டன என்பன போன்ற விபரங்களை அதிகாரிகளைக் கொண்டு தொகுக்கச் செய்தனர். அவ்வாறு தொகுப்பு வேலையில் ஈடுபட்ட அதிகாரிகளில் புகழ்பெற்ற கவிஞராகிய அழகிய வண்ணனும் ஒருவர். வருமானக் கணக்குகள் பதிவு செய்யப்பெற்ற புத்தகங்கள் போர்த்துக்கீசரால் 'தோம்புகள்' என வழங்கப் பெற்றன. இவை சிங்களரால் 'இலேகம்மிதி' எனப்பட்டன.

நிலங்கள் எந்தெந்தச் சேவைகளுக்கு ஈடாக வழங்கப்பட்டனவோ, அவற்றிற்கு ஏற்றவாறு அந்த நிலங்களின் வருவாயும் கணக்கிடப்பட்டு உரியவர்களுக்குச் சேர்ப்பிக்கப்பட்டன. அரச காரியங்களுக்கு ஈடாகக் '**கபடாகம்**', ஆலயங்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்களினின்றும் '**தேவலகம்**', அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்ட '**நிந்தகம்**' தொழில்கள் புரிவோருக்கு மான்யமாக அளிக்கப்பட்ட '**ஆக்ரகம்,**' என்பன பிரதான

மான வருமான வரிகளாய் இருந்தன. இவையன்றி, கறுவா, யானை, இரத்தினங்கள் முதலியன விற்கும் ஏக போக உரிமை போர்த்துக்கீச அரசருக்கே உரியதாக லின், அவற்றின்மீது விதிக்கப்பட்ட வரிகளினின்றும் ஏராளமான வருமானம் கிடைத்தது. கிறித்தவரல்லா தார் மீது விதிக்கப்பட்ட '**மரலபடா**' என்ற வரியும் முக்கியமானதாகக் கருதப்பட்டது. இவ்வாறு மக்களிட மிருந்து திறைகள் பெறுவதிலும், பெரும்பான்மையும் பழங்காலத்திலிருந்து மரபாக வந்த பழக்க வழக்கங் களும் ஏற்பாடுகளுமே பின்பற்றப்பட்டன.

இத்துணை வருமானம் பெற்றும் இலங்கையிலிருந்த போர்த்துக்கீச அரசாங்கம் பொருள் முட்டுப்பாட்டினுல் தவித்தது. 'அந்த அரசாங்கம் எப்பொழுதும் கடன் பட்டிருந்தது' என்று குவெய்ரோசு சுவாமியார் கூறு கிறுர். இதற்கு இரு காரணங்கள் இருந்தன. இலங்கை யிற் பணியாற்றிய போர்த்துக்கீச அதிகாரிகளும் அவர்க ளைச் சார்ந்த சிங்கள அதிகாரிகளும் சுயநல வேட்கை யால் அரசாங்கப் பொருளையும் ஆலயங்களின் வருமா னத்தையும் அபகரிப்பதில் ஈடுபட்டிருந்தனர். அவர் களை ஒழுங்குமுறைப் படுத்தவல்ல திறமையும், அரசியல் தந்திரமும் போர்த்துக்கீச மேலதிகாரிகளிடம் காணப்பட வில்லை. இரண்டாவதாக, போர்த்துக்கீசர் இடைவிடாமல் போர்களில் ஈடுபட்டனர். அவர்களது சக்தி முழுதும் பயனற்ற போர்களிலும் வழக்குகளிலும் விரயமாயிற்று. இக்காரணங்களால் அவர்களது பொருள் விரயமாயிற் றல்லாமல், மக்களுக்கு அவசியமான நன்மைகள் செய்த மையால் செலவாயிற்று என்று கூறுவதற்கில்லை.

அவர்களது நீதி பரிபாலனமும் புராதன வழக்கங்க ளைத் தழுவியே அமைந்தது. சிங்களவரின் சட்டதிட் டங்கள் பெரிதும் கையாளப்பட்டன. எனினும், அறி யாமை காரணமாகவும் சுயநலம் காரணமாகவும் சாதி யாசாரங்களை அவர்கள் புறக்கணிப்பதும் உண்டு. நீதி

பரிபாலனம் புரிந்த உயர்ந்த அதிகாரி 'ஒளவிடோர்' எனப்பட்டார். இவர் அடிக்கடி மாகாணங்களுக்கு விசயம் செய்து வழக்குகளை விசாரிப்பதுமுண்டு. சாட்சி




படம் 20. போர்த்துக்கீசரின் கொழும்புக் கோட்டை

1. கல்ப்டின் தலைமைக் காரியாலயம்
2. அகோவாடிலெய்போவின் தேவாலயம்
3. சென் செபாத்தியன்
4. கால்வாய் மீதுள்ள பாலம்
5. கல்ப்ட் உயிர் நீத்த இடம்
6. ஆறு துப்பாக்கிகளையுடைய நிலையம்
7. நான்கு துப்பாக்கிகளையுடைய நிலையம்
8. இரண்டு துப்பாக்கிகளையுடைய நிலையம்
9. சுட்டிப் பிரங்கிகள்
10. புறமதில்

கூறுவோரையும் குற்றவாளிகளையும் சித்திரவதை செய்து உண்மையை அறியும் வழக்கத்தைப் போர்த்துக்கீசர் பெரிதும் கையாண்டனர்.

அவர்களது இராணுவ ஏற்பாட்டின்படி, இலங்கையிலிருந்த 'கப்டன்-செனர'லே பிரதான தளபதியாக இருந்தான். மேனிக்கடவர என்னுமிடத்தில் பிரதான

இராணுவ காரியாலயம் இருந்தது. ஒவ்வொரு திசாவனியிலிருந்தும் திரட்டப் பெற்ற இலசுகரீன்கள் என்ற போர்வீரர்கள் புதிய முறைகளில் பயிற்சியளிக்கப்பட்டனர். இவர்களது ஊழியத்திற்கு ஈடாக 'மானியங்கள் விடப்பட்டிருந்தன. இவர்களுக்குத் தலைவனாக இருந்த சிங்கள அதிகாரி, 'முதலியார்' என்றும் 'விக்கிரம சிங்கன்' என்றும் பலவகைப் பட்டப் பெயர்களால் குறிக்கப்பட்டான். இந்தச் சிங்கள வீரர்கள் போர்த்துக்கீசரால் பெரிதும் அவமதிக்கப் பெற்றமையால், அடிக்கடி கலகங்கள் நிகழ்வதும், போர்க்காலங்களில் அவர்கள் எதிரிகளுடன் சேர்ந்துகொள்வதும் சர்வ சாதாரணமாக இருந்தது.

மத்திய அரசாங்கம் கொழும்பிலிருந்தது. அதன் பிரதான அதிகாரியான 'காப்டன் செனரல்', கோவையிலிருந்த இராசப் பிரதிநிதியின் அதிகாரத்திற்கு அடங்கி நடந்தான். அவனுக்கு நிதி நிர்வாகத்திற்கு உதவிபுரிய "வெடோர் டி பாசெண்டா" என்றும், நீதி பரிபாலனத்திற்குத் துணைசெய்ய 'ஔவிடோர்' என்றும் இரு உயர்தர அதிகாரிகள் இருந்தனர்.

கொழும்பு நகரம் 'காமரா' எனப்பட்ட ஒரு சங்கத்தால் பரிபாலிக்கப்பட்டது. அந்த நகரத்தில் ஏராளமான தொழிலாளரும் போர்த்துக்கீசக் குடும்பங்களும் வாழ்ந்தனர். கிறித்தவ தேவாலயங்கள், கன்னி மாடங்கள், ஆசுபத்திரி, கல்லூரி முதலியனவும் அங்கே காட்சியளித்தன.

போர்த்துக்கீசர் மதவெறி மிகுந்தவர்கள். அவர்களால் கிறித்தவ மதம் தழைத்ததெனினும், அவர்களது பலாத்கார முறைகளும் ஈவிரக்கமற்ற செயல்களும் சிங்களவரையும் முசுலிம்களையும் அவர்களது பெரும் பகைவராகச் செய்துவிட்டன. கிறித்தவக் குருமார்களின் பிரசாரத்தால் கொழும்பு, மன்னார் போன்ற இடங்களில் பல சிங்களவரும் தமிழரும் மதம் மாறிய

VCID N57

போதிலும், அவர்கள் பெரும்பாலும் அரசர்களையும் அவர்களது வம்சங்களையும் மதம் மாறச் செய்வதில் நோக்கமுடையவர்களாய் அரசியற் சூழ்ச்சிகளில் ஈடு பட்டிருந்தனர். அதனால் கல்விப் போதனை முதலிய துறைகளில் 'இயேசு சபை' (Society of Jesus) யினர் போன்ற பிற கிறித்தவச் சங்கங்களே அதிகம் ஈடுபட் டிருந்தன. அவர்களால் கொழும்பில் ஓர் உயர்தரக் கல்லூரி நிறுவப்பட்டிருந்தது. எனினும், மதவெறி காரணமாகப் போர்த்துக்கீசர் பண்டைய தேவாலயங் களைச் சிதைத்தும், சிங்களவரையும் முசுலிம்களையும் வதைத்தும் துன்புறுத்தினர் என்பதில் தடையில்லை. மதப் பிரசாரத்துடன் போர்த்துக்கீசர் தமது பழக்க வழக்கங்களையும் இந்த நாட்டு மக்களிடையே பரப்பி வந்தனர். கிறித்தவ நாகரிகத்தின் வளர்ச்சி காரணமாக, பௌத்தரும் இந்துக்களும்கூடத் தமது சமுதாய வாழ்க்கையில் மாறுதல்கள் செய்துகொள்ள நேர்ந்தது.

போர்த்துக்கீசரின் தொடர்பால் சமுதாய வாழ்க்கை யின் மற்ற அம்சங்களிலும் பல பெரும் மாறுதல்கள் நிகழ்ந்தன. உதாரணமாகப் போர்த்துக்கீசக் குருமார் களின் உழைப்பால் சிங்கள மொழியிற் புதிய வசன நடையும் புதிய இலக்கியத்துறைகளும் தோன்றலாயின. **கொன்சால் வெசு வாசு** என்ற கத்தோலிக்கக் குருமாரின் சிங்கள நூல்கள் இன்றும் பாராட்டப் பெறுகின்றன. கொழும்பிலிருந்த கல்லூரியிற் சிங்களவர் பலரும் படித் துத் தேர்ந்தனர். அவர்களில் ஒருவரான அழகிய வண்ணன் என்ற கவி இலத்தீன் மொழியிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். கிறித்தவக் குருமார் தமது மதப் பிரசாரத்திற் கேற்ற நாடகங்களை நடித்துக் காட்டியமை யால், நாடகக்கலையும் வளர்ச்சியுற்றது. போர்த்துக்கீச ரின் வருகையால் பல புதிய பொருள்களும் உபயோகத் திற்கு வந்தன. முதன்முதலாகக் கடதாசியைக் கொணர்ந்தவர்கள் அவர்களே. வெடிமருந்தும் துப்

பாக்கிகளும் அவர்களாலேயே கொணரப்பட்டன. போர்த்துக்கீசரின் நடை உடை பாவனைகளைச் சிங்களவர் பின்பற்றத் தொடங்கினர். போர்த்துக்கீசச் சொற்கள் 'தொப்பி,' 'சப்பாத்து' போன்றவை தமிழிலும் சிங்கள மொழியிலும் புகுந்தன. சிங்களவர் போர்த்துக்கீசப் பெயர்களைத் தரித்துக்கொள்வதிலும் விருப்பம் காண்பித்தனர். போர்த்துக்கீசர் பெரும் சிற்பங்களை அமைக்காவிடினும் ஐரோப்பிய முறையிற் கோட்டை கொத்தளங்களை அமைத்தனர். சில தேவாலயங்களும் மாளிகைகளும் அவர்களால் அமைக்கப்பட்டதெனினும், அவர்களது சிற்பக்கலை பின்வந்த டச்சுக்காரரது சிற்பங்களுக்கு இணையாக ஒருபோதும் இருந்ததில்லை. இவ்வாறு போர்த்துக்கீசர் தொடர்பால் இலங்கை மக்கள் மேலைநாட்டு நாகரிக வாழ்க்கையை முதன்முதலாக உணரலாயினர்.

எனினும், போர்த்துக்கீச ஆட்சியால் நன்மையை விடத் தீமையே அதிகம் விளைந்ததெனலாம். இது குறித்துப் போர்த்துக்கீசராகிய குவெய்ரோசு சுவாமியார் கூறுவதையே ஈண்டு எடுத்துக் காட்டுதல் நலம் :

"...............போர்த்துக்கீசர் புரிந்த அநீதிகள், கொடுமைகள், பலாத்காரம் முதலியவற்றிற்குத் தகுந்த தண்டனையே ஆண்டவன் அவர்களுக்கு அளித்திருக்கிறான். துர்ப்பாக்கியசாலிகளான சிங்களவரைப் பகைத்து, அவர்கள்மீது தொடர்ந்து போர்புரிவதே அவர்களது கொள்கையாகிவிட்டது. அரசர்களுடன் அவர்களது உறவு எத்தகையதாயினும், பொதுமக்களைப் பகைத்துத் துன்புறுத்துவதே அவர்கள் புரிந்து வந்த பெருஞ் சேவையாகும்........."

போர்த்துக்கீச நாகரிகம் இலங்கையில் வேரூன்றுமைக்கும், அவர்களை ஒல்லாந்தர் எளிதில் முறியடித்ததற்கும் அவர்கள் வகுத்த இத்தகைய அரசியல் கொள்கையே காரணமாயிற்று.

### வினுக்கள்

1. போர்த்துக்கீசரின் மாகாண அரசியல் எவ்வாறிருந்தது ?

2. திசாவைகளுக்குக் கீழ் வேலைபார்த்த அதிகாரிகள் யாவர் ?

3. நிலமானிய முறையை விளக்குக.

4. போர்த்துக்கீசர் எந்தெந்த முறைகளால் வருமானம் பெற்றனர் ?

5. ஏன் போர்த்துக்கீச அரசாங்கம் கடன்பட்டிருந்தது ?

6. நீதி பரிபாலனம் எவ்வாறு நிகழ்த்தப்பட்டது ?

7. இராணுவ ஏற்பாட்டில் சிங்களவருக்கிருந்த பங்கை விளக்குக.

8. மத்திய அரசாங்கம் எவ்வாறு அமைந்திருந்தது ?

9. போர்த்துக்கீசரின் 'மதக் கொள்கையால் விளைந்த நன்மை தீமைகளை எடுத்துக் கூறுக.

10. போர்த்துக்கீச நாகரிகத்தால் சிங்கள நாகரிகம் மாறுதலடைந்ததற்கு உதாரணங்கள் வரைக.

11. போர்த்துக்கீச அரசாங்கமும் நாகரிகமும் குன்றியதற்கு எதனைக் காரணமாகக் குவெய்ரோசு கூறுகிருர் ?

# 12. இராச சிங்கன்–II (1635–1687)

1635-ல் சேனரதன் இறந்ததும், அவனது மகனுன இராசசிங்கன் ஆட்சி உரிமை பெற்ருன். இவனது ஆட்சிக் காலம் இலங்கை வரலாற்றில் முக்கியமான இடம் பெறுகின்றது. ஏனெனில், இவனது கண்டி நாட்டைப் பிடிக்க போர்த்துக்கீசர் செய்த முயற்சிகள் யாவும் தவறியதுடன், இவனது அழைப்பின் பயனுக நாட்டில் பிரவேசித்த ஒல்லாந்தருடன் அவர்கள் கடும் போர் புரியவும் நேர்ந்துவிட்டது. இவ்வாறு நெடு நாளைய போர்த்துக்கீச ஆதிக்கம் மறைந்து, ஒல்லாந்தர் ஆட்சி, மேலோங்குவதற்கு இராசசிங்கனே துணைபுரிந்தமையால், இந்த அரசனின் வரலாறு பிரதானமாகக் கருதப்படுகிறது.

இராசசிங்கனுக்கு ஒல்லாந்தர் கடற்படை அனுப்பி உதவக்கூடும் என்றும், இராசசிங்கனது தூதுவர் அவர்களைச் சென்று சந்தித்து விட்டனரென்றும் பலவாருக நிலவிய வதந்திகளைக் கேள்வியுற்ற போர்த்துக்கீசத் தளபதி டிபெல்லோ 1638-ல் கண்டிமீது படை எடுத்து, நகரத்தை முற்றுகையிட்டு, அதனைச் சிதைக்கவும் துணிந்தான். ஆனால், வெற்றிப் பெருமிதத்துடன் அவனுடைய சேனை திரும்பியபொழுது, மீண்டும் கன்னெறு வாவில் சிங்களப்படைகள் அவனது சேனையைச் சூழ்ந்து கொண்டு அவனையும் அந்தச் சேனையையும் அழித்து விட்டன. இதனுல் சினமடைந்த போர்த்துக்கீசர், சிங்களவர் பலரைக் கொன்று, கிளர்ச்சிகளை அடக்கினர். தாழ்நிலத்தில் கலகம் பரவியதாயினும், அதைப் பயன்படுத்திக் கொண்டு கொழும்புத் துறைமுகத்தைக் கைப்பற்றுவதற்குப் போதிய படைகள் இராசசிங்கன் வசம் இல்லை.



படம் 21.
இராசசிங்கன்–II

ஆகவே, இராசசிங்கன் ஒல்லாந்தரது உதவியை எதிர்பார்க்கலானுன். ஒல்லாந்தரும் முன்பு கண்டியரசரால் தேவிட் கொலையுண்டதையும் கருத்தில் கொள்ளாமல், கறுவா வியாபாரத்தின் மீதுள்ள நாட்டத்தால் இராச

சிங்கனுக்கு உதவிபுரியத் துணிந்தனர். அவன் அனுப்பிய தூதர் பழவேற்காட்டை அடைந்து, 1536-ல் உதவியனுப்புமாறும் அதற்கு ஈடாகக் கொட்டியாரம் அல்லது மட்டக்களப்பைத் தருவதாகவும் கூறியிருந்தனர். பத்தேவியாவிலிருந்த வான்டீமன் அதனை ஏற்றுக்கொண்டு, வெசுடர் வோல்டு என்ற கடற்படைத் தலைவனை இலங்கைக்குச் செல்லுமாறு பணித்தான். முதலில், அவனது துணைவனான காசுடர் சென்று கல்முனையிலிறங்கிப் பிறகு மட்டக்களப்பை அடைந்து அந்தக் கோட்டையைக் கைப்பற்றினான். பின்னர் வெசுடர் வோல்டு வந்ததும், ஓர் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் ஒல்லாந்தர் போர்த்துக்கீசரின் கோட்டைகளைக் கைப்பற்றுவதென்றும், போர்ச் செலவை மன்னன் ஏற்றுக்கொள்வதென்றும் ஏற்பாடாயிற்று. ஆயினும், இராசசிங்கனது விருப்பமின்றிக் கோட்டைகளை வைத்துக்கொள்வதில்லை என்று உறுதி கூறிய ஒல்லாந்தர் அதனை மீறியதே பிற்காலத்தில் பகைமைக்குக் காரணமாயிற்று. 1639-ல் திரிகோணமலையும் கைப்பற்றப்பட்டபோதிலும், அந்தக் கோட்டையையும் அழிக்காமல் ஒல்லாந்தரே வைத்துக்கொண்டனர். பிறகு நீர் கொழும்பும் காலியும் இவ்வாறே ஒல்லாந்தர் வசமாயின. அவர்கள் கோட்டைகளைக் கைவிடாதிருத்தலைக் கண்ட இராசசிங்கன் காசுடரைக் கண்டிக்கு அழைத்தான். காசுடர் அரசனுக்கு நிலைமையை விளக்கிய பிறகு திரும்பிவரும்பொழுது, சில படைவீரரால் கொலையுண்டிறந்தான். இராசசிங்கன் பத்தேவியாவிற்குத் தூதுவரை அனுப்பித் தனக்கும் காசுடர் மரணத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்று விளக்க நேர்ந்தது.

1640 முதல் 1642 வரை கடுமையான போர்களுக்குப் பிறகு, ஒல்லாந்தர் நீர் கொழும்பையும் காலியையும் மீட்டுக்கொண்டனர். அப்போது போர்த்துகல்

சுபானிய ஆட்சியினின்றும் பிரிந்துவிட்டமையால், போர்த்துக்கீசருக்கும் ஒல்லாந்தருக்குமிடையே பத்து ஆண்டுகளுக்குச் சமாதான ஒப்பந்தம் நிகழ்ந்தது. இந்தக் காலத்தில் சில சந்தர்ப்பங்களில், ஒல்லாந்தரும் போர்த்துக்கீசரும் இணக்கமுற்று இராசசிங்கனை எதிர்க்கும் நிலையும் தோன்றியது. கோட்டைகளைத் தன் வசம் விட்டுவிடவேண்டுமென்று அரசனும், போர்ச்செல வால் ஏற்பட்ட கடனைத் தரவேண்டுமென ஒல்லாந்தரும் இடைவிடாமல் கூறிவந்தனர். தைசன் என்ற தேசாதி பதியின் பிடிவாதம் காரணமாகப் போர் தோன்றும் நிலைமை ஏற்பட்டது. பத்தேவிய அரசாங்கம் போரை விரும்பாமல் மட்சூய்கர் என்ற தேசாதிபதியை அனுப்பி, 1647-ல் அரசனுடன் உடன்படிக்கையைச் செய்துகொண்டது. அதன் பிரகாரம் கடனை அரசன் தரும் வரையிலும் கோட்டைகள் ஒல்லாந்தரிடமிருக்கும் என்றும், அவர்கள் தம் நாட்டினனுன திசாவை ஒருவனை நியமிக்கலாம் என்றும், கறுவா வியாபாரத்தில் ஒல்லாந் தருக்கே ஏகபோக உரிமை என்றும் அரசன் ஒப்புக் கொண்டான்.

ஆயினும், பின்னர் அரசன் போர்ச்செலவு குறித்து விபரங்களைக் கேட்ட தருணங்களில், ஒல்லாந்தர் தகுந்த விடையளிக்கவில்லை. இதிலிருந்து அவர்கள் தமது ஆதிக்கத்தையும் வியாபார உரிமையையும் நிலைநாட்ட வந்தவர்களேயன்றி, அரசனுக்கு உதவிபுரிய வந்தவர் களன்று என்பதும் தெளிவாயிற்று. இதனுல் இராச சிங்கன் மனமுடைந்துபோனுன்; மற்ற ஐரோப்பியருடன் தொடர்பு கொள்ளவும் எத்தனிக்கலானுன்.

1652 முதல் 1658 வரை ஒல்லாந்தர் கடும் போர் நிகழ்த்திப் பேரர்த்துக்கீசக் கோட்டைகளை ஒவ்வொன் ருகக் கைப்பற்றினர். கழுத்துறை, அம்பாந்தோட்டை முதலிய இடங்களைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் முடிவில் கொழும்பு நகரத்தையும் தாக்கினர். அப்போது இராச

சிங்கனும் தனது படையுடன் வந்து, இரயிகம்வத்தையில் தங்கியிருந்தான். ஆனால், ஒல்லாந்தர் 1656-ல் கொழும்பைக் கைப்பற்றியதும், கண்டிப்படைகளை வெளியேற்றிவிட்டுத் தாமே கோட்டையைப் பாதுகாக்கத் தொடங்கினர். அதனால் கோபமடைந்த அரசன் தனது குடிகளை ஒல்லாந்தருடன் வியாபாரம் செய்யக்கூடாதென்று தடுத்தான். அவனது திசாவை மாரின் தூண்டுதலால் கலகங்களும் விளைக்கப்பட்டன. பிறகு மன்னாரும் யாழ்ப்பாணமும் கைப்பற்றப்பட்டதும், ஒல்லாந்தர் இலங்கையின் கடற்கரைப் பிரதேசம் முழுவதற்கும் அதிபதிகளாயினர். அப்போது இராசசிங்கனுக்கு எதிராக உள்நாட்டில் பகைவரின் சூழ்ச்சிகள் வலுத்தமையால், ஒல்லாந்தருக்கு விரோதமாக எதுவும் செய்ய இயலவில்லை. அவர்களும் கடற்கரைப் பிரதேசத்தை முழுதும் தம் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு, இராசசிங்கன் பிற ஐரோப்பியரின் உதவி பெருதவாறு தடுப்பதில் கண்ணுங் கருத்துமாய் இருந்தனர். போர்த்துக்கீசரைப்போலக் கண்டி நாட்டின்மீது படை எடுக்காமலும் அவனை அவமதிக்காமலும் ஒல்லாந்தர் இருந்தமையால், இராசசிங்கன் ஓரளவு திருப்தியடைந்து பெயரளவில் இலங்கை நாட்டின் மன்னன் என்ற உரிமை பாராட்டி வந்தான்.

உள்நாட்டில் அவனது பகைவர்கள் வலுத்தனர். அவனது கொடுமையான ஆட்சியும் தண்டனை முறைகளும் வரிச்சுமையும் மக்களது வெறுப்பை வளர்த்தன. ஓர் முறை 1664-ல் அவனது அரண்மனையில் கலகக்காரர் புகுந்தனராயினும், அவன் அவர்களுடன் போராடி உயிர்தப்பினன். கலகக்காரர் பிறகு தம்மிடையே போரிட்டுக்கொண்டமையால் அவர்களை அரசன் அடக்குவது சாத்தியமாயிற்று. இந்த நிலையில் அரசனது சகோதரனை விசயபாலன் என்பவனின் மகன் என்று கூறிக்கொண்டு ஒரு முசுலிம் பக்கிரி நாட்டில் தோன்றி,

தேவாலயங்களை அழிப்பதிலும் மக்களிடையே பல அற்புதங்களை விளைப்பதிலும் ஈடுபட்டிருந்தான். அவனு லும் கிளர்ச்சிகள் ஓங்கியமையால், அவனையும் கைப் பற்றி இராசசிங்கன் தண்டித்தான். அவனது கொடுமை பொறுக்காமல், தென்னக்கோன் போன்ற சிறந்த திசாவைமார் ஒல்லாந்தருடன் சேர்ந்தனர். இராச சிங்கனது கொடுங்கோன்மை நாளுக்குநாள் அதிக மாகித் தனது பகைவரெனச் சந்தேகித்த எவரையும் அழிக்கும் முயற்சியில் அவன் இடைவிடாது ஈடுபட லானுன்.

இந்த நிலையில் 1659-ல் ஆங்கிலக் கப்பல் ஒன்று மோதி உடைந்தமையால், அதனின்றும் தப்பிய சில ஆங்கிலேயர் ஒரு படகிலேறி, இறுதியில் கற்பிட்டித் துறையில் கரை ஏறினர்கள். அவர்களில் சிலர் மன்னரி லிருந்த ஒல்லாந்தரை நாடிச் செல்ல, மற்றவர்கள் கண்டி நகரத்தை அடைந் தனர். மறு ஆண்டில், கொட்டியாரத்தில் கரை தட்டிய ஆங்கிலக் கப்பலி னின்றும் **ருெபர்ட்** நொக்சு என்ற கப்பல் தலைவனும் அவனைச் சேர்ந்த சிலரும் பலவந்த மாகக் கண்டிக்கு இழுத் துச் செல்லப்பட்டனர். இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் அவர்களை விடுவிக்காததால், அவர்க ளது கப்பல் சென்றுவிட்டது. அப்போது ஆங்கிலேய ருக்கும் போர்த்துக்கீசருக்குமிடையே ஓர் உடன்படிக்கை நிறைவேறியிருந்தது. அதன்படி, இரு நாட்டினரும்



படம் 22. ருெபர்ட் நொக்சு

சேர்ந்து இலங்கையைக் கைப்பற்றினுல் கறுவா வியாபாரத்தைப் பகிர்ந்துகொள்வதென்றும், கொழும்பைப் போர்த்துக்கீசரும் காலியை ஆங்கிலேயரும் வைத்துக் கொள்வதென்றும் ஏற்பாடாகியிருந்தது. இக்காரணத்தினுல், ஒல்லாந்தர் ஆங்கிலேயரைப் பெரிதும் பகைத்தனர். சென்னையிலிருந்த ஆங்கிலேயருடன் தொடர்பு கொள்ள அவன் செய்த முயற்சிகள் யாவும் பயனற்றுப் போயின.

ஆங்கிலக் கைதிகளை அவன் விடுவிக்கவில்லை. ரெபர்ட் நொக்சு இறந்ததும் அவனது மகனும் மற்றெருருவனுமாகச் சிறையினின்றும் தப்பி ஒல்லாந்தரிடம் சென்று, அங்கிருந்து இங்கிலாந்தை அடைந்தனர். பிற்காலத்தில், இளைய ரெபர்ட் நொக்சு தனது பதினெட்டு வருடச் சிறை அனுபவங்களையும் கண்டியரசாங்கம் பற்றிய உண்மைகளையும் ஒரு நூல் வாயிலாக வெளியிட்டான். ஆனுல், இராசசிங்கன் காலத்தில், அவனும் ஆங்கிலேயரும் தொடர்பு கொள்வது இயலாமற் போயிற்று.

இவ்வாறே பிரான்சுக்காரரும், கேரன் என்ற மாலுமியின் முயற்சியால் திரிகோணமலையைக் கைப்பற்றி, கண்டியரசனுடன் தொடர்புகொள்ளப் பிரயத்தனப் பட்டனர். ஆனுல் திரிகோணமலையைத் துறைமுகத்தில் பிரான்சுக்காரருக்கும் ஒல்லாந்தருக்குமிடையே போர் நிகழலாயிற்று. முதலில், பிரான்சுத் தூதர்களுக்கும் அரசனுக்குமிடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டபோதிலும், ஒல்லாந்தர் பிரான்சுக்காரரை முறியடித்துத் துரத்தியமையால் அந்த ஒப்பந்தம் முறிந்துவிட்டது. இவ்வாறு இராசசிங்கன் பிற ஐரோப்பியர்களிடம் உதவி பெறுவதற்காகச் செய்த முயற்சிகள் வீணுயின.

இராசசிங்கனது இறுதிக்காலத்தில், ஒல்லாந்தருடன் அவன் போர் புரிய நேர்ந்தது. 1675-ல் அவனது படைகள் உறூவான் வெலை, மாத்தறை முதலிய இடங்களை

முற்றுகையிட்டன. போர் தொடங்குவதற்குள்ளாகப் பத் தேவிய அரசாங்கம், ஒல்லாந்தர் 1665-க்குப் பிறகு கைப் பற்றிய இடங்களைத் திருப்பிக் கொடுப்பதற்கு உடன்பட் டது. இந்த நிலையில், அரசன் வயது முதிர்ந்தவனாகி விட்டமையால், அவனது அதிகாரிகள் மனம் போனவாறு ஒல்லாந்தருடன் நடந்துகொள்ளலாயினர். ஒல்லாந்தர் அனுப்பிய பல தூதுவர்கள் திரும்பியே வரவில்லை. எனவே, ஒரு சிறு படையுடன் மைரோப் என்பவர் அரச னைச் சென்று கண்டு, அரசனது நிலங்களிலிருந்து வரு டந்தோறும் ஓரளவு கறுவா பெறுவது என்ற நிபந் தனையை ஏற்றுக்கொண்டார்.

இராசசிங்கன் 1687-ல் இறந்தான். அவனது நினை விற்காகக் கொழும்பு நகரத்திற் பெரிய ஊர்வலமொன்று ஒல்லாந்தரால் நடத்தப் பெற்றது. இராசசிங்கன் நிதானமான உயரமும் கறுப்பு நிறமும் கம்பீரமான தோற்றமும் படைத்தவன் ; அவன் புதுவிதமான ஆடை யாபரணங்களை அணிந்தான் ; குதிரைச் சவாரியிலும் துப்பாக்கிச் சுடுவதிலும், பறவைகளையும் மீன்களையும் வளர்ப்பதிலும், நீந்துவதிலும் திறமை வாய்ந்தவன். தந்திரமுந் திறமையுமுடையவனாயினும், அகந்தையும் இறுமாப்பும், சலனபுத்தியும், இரக்கமற்ற குணமும் படைத்தவனாகையால், மக்கள் அவனைக் கண்டு அஞ் சினர். ஆயினும், இலங்கையின் வரலாற்றில், போர்த் துக்கீசரின் ஆதிக்கத்தை அழிக்க முற்பட்டவன் என்ற உரிமையால் அவன் நிரந்தரமானதோர் இடம் பெறு கின்றான்.

### வினாக்கள்

1. இராசசிங்கன் (II) ஆட்சி ஏன் முக்கியமானது ?
2. கன்னொறுவாவில் நிகழ்ந்த இரண்டாம் போரின் விளைவு யாது ?
3. ஒல்லாந்தருக்கும் இராச சிங்கனுக்குமிடையே எவ்

வாறு உடன்படிக்கை ஏற்பட்டது ? எவ்வாறு பின்னர் பகைமை தோன்றியது ?

4. 1647-ல் நிகழ்ந்த ஒப்பந்தத்தை விளக்குக.

5. ஶுபர்ட் நொக்சு (இளையவன்) பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

6. ஏன் ஆங்கிலேயருடனும், பிரான்சியருடனும் இராசசிங்கனுல் ஒப்பந்தங்கள் செய்துகொள்ள முடியவில்லை ?

7. இராசசிங்கனது குணதிசயங்களை விளக்குக.

# 13. இரண்டாம் விமலதர்மசூரியன் (1687—1707)

இரண்டாம் இராசசிங்கனுக்குப் பிறகு அவனது குமாரனுன விமலதர்மசூரியன் பட்டம் பெற்றுன். அவன் இளம் வயதினனுயினும், அடக்கமும் பொறுமையும் படைத்தவன். அவனுக்கு அரச வாழ்க்கையைக் காட்டிலும் துறவிகளின் வாழ்க்கையே உகந்ததாகத் தோன்றியது. இக்காரணத்தால், அவனுக்கு ஆலோசனை கூறுவோர் பெரும்பாலுந் துறவிகளும் குருமார்களுமாகவே இருந்தனர். அவனும் போர்வழியை விடுத்து அமைதியான முறைகளையே பின்பற்றலானுன்.

அவன் ஒல்லாந்தர் வசமிருந்த நாடுகளில் அவர்களது ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டமையால், அதற்கு ஈடாக அவனுடைய தந்தையிடமிருந்து தாம் கைப்பற்றிய பிரதேசங்களை அவர்கள் திருப்பிக் கொடுத்தனர். பிறகு அவனது பிரதான அதிகாரி கொழும்பு நகரத்தை அடைந்து, துறைமுகங்களின் மூலம் கண்டி மக்களின் வியாபாரம் நடைபெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டான். அதற்குப் பதில் ஒன்றும் கூருமல், ஒல்லாந்தர் தமது தூதுவரை அனுப்பி விமலதர்மனுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ள முயன்றனர். அந்த உடன்படிக்கை நிறைவேருமற் போனபோதிலும், ஒல்லாந்

தர் எவ்வாறு பழைய உடன்படிக்கைகளை மீறி ஆதிக்கஞ் செலுத்தலாயினர் என்பதும், அவர்களுக்கு அரசன் கொடுக்கவேண்டியதாகக் கூறப்படுங் கடன் தொகைக்கு அதிகமாக அவர்கள் வருவாய் பெற்று விட்டனரென்பதும் தெளிவாகிவிட்டன.

இந்த அரசனது ஆட்சிக் காலத்தில், மேன்மேலும் கொழும்பிற்குத் தூதுவர் அனுப்பப் பெற்று வந்தனர். அவர்கள் பிடிவாதமாகக் கடற்கரைப் பிரதேசமும் துறை முகங்களும் கண்டியரசனுக்கு அளிக்கப்படவேண்டும் என்றும், கண்டி மக்களுக்கும் வியாபார உரிமைகள் வழங் கப்படவேண்டுமென்றும் வற்புறுத்திக் கொண்டிருந்தனர். ஒல்லாந்த தேசாதிபதிகள் ஒவ்வொருவரும் இந்தக் குறை களுக்குச் செவிசாய்க்க மறுத்தபோதிலும், இறுதியில் தேசாதிபதி வான் ரீ என்பவர் (1692—1697) அரசனுடன் சமாதானமாக வாழும் நோக்கமுடையவராய்த், தமது கொள்கையை மாற்றிக்கொண்டார். அவர் அரசனுடன் கொண்ட நல்லுறவால் வியாபாரச் சங்கத்தாருக்கு ஏராள மாகக் கறுவா கிடைத்தது ; முத்துக் குளிப்பதாலும் இலா பம் அதிகரித்தது. ஆகவே முடிவிற் கெட்டியாரம், கற் பிட்டி, மட்டக் களப்பு, புத்தளம் முதலிய துறைமுகங்கள் மார்க்கமாகக் கண்டியரசனும் மக்களும் வெளிநாட்டா ருடன் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். மேலும், அரசனது புதிய இராணியைத் தஞ்சை நாட்டி லிருந்து அழைத்து வருவதற்காக 1697-ல் ஒல்லாந்து அர சாங்கம் ஒரு மரக்கலம் கொடுத்து உதவியது ; அவ்வாறே பெகுவிலிருந்து பௌத்த பிக்குகளை அழைப்பிப்பதற்கும் ஒல்லாந்தர் உதவி புரிந்தனர்.

இத்தகைய நல்லுறவு நெடுநாட்களுக்கு நீடிக்க வில்லை. ஏனெனில், கண்டி மக்கள் தனது வியாபாரத்தால் பெருஞ் செல்வம் ஈட்டினர். பாக்கு, உப்பு முதலிய வற்றை விற்றுத் தமக்கு வேண்டிய பொருள்களையும் ஒல் லாந்தர் உதவியின்றி அவர்கள் பெற்றமையால் ஒல்லாந்த

வியாபார சங்கத்தின் இலாபங் குறைந்தது. மேலும், புத்தளத்தின் மூலமே கண்டியரின் பொருள்கள் அனுப்பப் படலாமென்றும் ஒல்லாந்தருடைய பிரதேசங்களில் வியா பாரம் செய்யக்கூடாதென்றும் அரசனும் அதிகாரிகளுந் தடை செய்தமையால், ஒல்லாந்தரின் வர்த்தகம் பாழா யிற்று. எனவே, ஒல்லாந்தர், வேற்று நாட்டுக் கப்பல்கள் தம்மிடமில்லாத இலங்கைத் துறைகளை அணுகாத வண் ணம் தடுத்து வந்தனர். மேலும், அவர்கள் தம்மிடமுள்ள துறைமுகங்கள் மூலமாக வியாபாரம் நடைபெறுமாறு செய்யப் பல வழிகளிலும் முயன்றனர்.

விமலதர்மன் சமாதானத்தில் விருப்பமுள்ளவனுகவும் திறமை வாய்ந்தவனுகவும் இருந்தமையால், அவன் இறுதி வரை ஒல்லாந்தருடன் நல்லுறவு கொண்டிருந்தான். அவர்களும் அவனை எதிர்ப்பதற்கஞ்சி அவனுடன் இணங்கியே நடந்துகொண்டனர். உதாரணமாக, அவர் களது மதப் பிரசாரக் கொள்கைகளுக்கு விரோதமான கொள்கைகளைக் கண்டியரசாங்கம் கொண்டிருந்தும், அவர்கள் அதனைப் பொருட்படுத்தவில்லை. அக்காலத் தில் ஒல்லாந்த அரசாங்கம் மக்களைப் புராட்டஸ்தந்து மார்க்கத்திற் றிருப்புவதில் முனைந்திருந்தது. வெகு எளிதில் சிங்களவர் பலரும் மதமாற்ற மடைந்தனர்; ஆனுல், உண்மையில் அவர்கள் தமது பழைய இந்து பௌத்த மதக் கொள்கைகளையே பின்பற்றலாயின ரன்றி, விவிலிய நூற் கொள்கைகளைக்கூட அறிந்தன ரில்லை. இந்த நிலையில், முன்னர் போர்த்துக்கீசரால் பரப்பப்பெற்ற கத்தோலிக்க மார்க்கம் இப்பொழுதும் பரவிக் கிடந்தது. ஆனுல் கத்தோலிக்கக் குருமாரை ஒல்லாந்தர் தண்டித்தமையால், யாரும் பிரசாரம் புரியத் துணியவில்லை. இறுதியில் பூச்யர் **யோசப் வாஸ்** என் னும் கொங்கண நாட்டுப் பெரியார் மாறுவேடம் பூண்டு யாழ்ப்பாணம் வழியாகக் கண்டியை அடைந்தார். அங்கே இருந்தபடியே ஆங்காங்குக் கத்தோலிக்கருடன்

தொடர்பு கொண்டு பிரசாரம் புரிந்து வந்தார். அவரை ஒற்றர் என்று குற்றஞ் சுமத்தி ஒல்லாந்தர் தண்டிக்க விரும்பியபோதிலும், கண்டியரசாங்கத்தினரின் ஆதரவைப் பெற்றிருந்தமையால் அவரைத் துன்புறுத்த முடியவில்லை. இவ்வாறு விமலதர்மன் பௌத்த சமயத்திற் பற்றுள்ளவனாயினும், பிற மதத்தினரையும் பாதுகாத்தான்.

விமலதர்மனது ஆட்சியில் பௌத்தமதம் தழைத்தது. அரக்கனிலிருந்தும், சீய நாட்டினின்றும் அவன் வரவழைத்த பௌத்த பிக்குகள் 'உபசம்பத' மென்ற குரு அபிடேக முறையை மீண்டும் உயிர்ப்பித்தனர். புத்தரிடமிருந்த பக்தி காரணமாக, அவரது தந்தத்தை வைத்துத் '**தலதா மாளிகாவ**' என்ற மூன்றடுக்கு மாளிகையை இந்த அரசன் நிருமாணித்தான். இவனைத் தொல்லைகள் பல சூழ்ந்திருந்த போதிலும், இவன் அமைதியான முறையிலவற்றை விலக்கி, ஒல்லாந்தருடன் நட்புப் பூண்டதும், தன் தந்தையைப் போன்று போர்களாற் றுன்புறாமல் சமாதானமாகவே பல நன்மைகளை அடைந்ததும் போற்றத்தக்கவை. கண்டியை அரசாண்ட பிற்கால அரசர்கள் பலரில், இவனையே இராசதந்திரமும் விவேகமும் நிறைந்தவனாகக் கூறலாம்.

**வினாக்கள்**

1. விமலதர்மன் எத்தகைய குணம் வாய்ந்தவன்?
2. இவன் சமாதானமாகவே ஒல்லாந்த வியாபார சங்கத்தாரிடமிருந்து பெற்ற உரிமைகள் யாவை?
3. வான் ரீயின் கொள்கையால் அரசன் அடைந்த இலாபம் யாது? வர்த்தக சங்கமும் எவ்வாறு பயனடைந்தது?
4. எக்காரணத்தால் வர்த்தக சங்கத்தாருக்கும் அரசனுக்குமிடையே பகைமை தோன்றலாயிற்று?
5. விமலதர்மனது மதக் கொள்கையையும் விசாலமான மனப்போக்கையும் விளக்கி உதாரணங்கள் தருக.
6. பௌத்த மதத்திற்கு அவன் புரிந்த சேவை எத்தகையது?

## 14. பின் வந்த அரசர்கள் (1706—1747)

விமலதர்ம சூரியன் இறந்ததும், அவனது புதல்வனை வீர நரேந்திர சிங்கன் 1706-ல் அரசுகட்டிலேறினன். பதினேழு வயது நிரம்பாத இளைஞனாக அவன் இருந்தமையால், இவனது பகைவர்கள் இவனை நீக்கக் கருதிச் சூழ்ச்சிகள் பல புரிந்தனர். ஆயினும், அவர்களது சூழ்ச்சிகள் பயனளிக்கவில்லை. ஒல்லாந்தரும் இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு, கண்டி நாட்டினரை அவர்களது பண்டங்களைத் துறைமுகங்களுக்கு எடுத்துச் செல்லாதவாறு தடுத்துவிட்டனர். இதனுற் கோபமடைந்த அரசன், 1712-ல் கண்டிக்குச் செல்லும் மார்க்கங்களிலுள்ள முள் அடைப்புகளைப் பலப்படுத்தி, யாரும் ஒல்லாந்தருடன் உறவு கொள்ளாதவாறு தடுத்தான். அப்பொழுதும் அவர்கள் இணங்காமையால், தனது நாட்டில் அவர்கள் வியாபாரம் செய்தலைத் தடுத்தான். இறுதியில், சீயன்கோறளையிலும் மாத்தறையிலும் கறுவா உரிப்பவர்கள் கலகம் விளைத்தபொழுது, அவர்களுக்கு இரகசியமாக ஆதரவு அளிக்கலானன். ஒல்லாந்த வர்த்தக சங்கத்தார் வரிகளை நீக்கிப், பலவாறு திருப்தி செய்யமுயன்றும், கறுவா உரிப்பவர்கள் அரசனிடமே விசுவாசங் காண்பித்து வந்தனர். இதனுல் ஒல்லாந்தர் படைகளை அனுப்பினர்; ஆனுல் கலகக்காரர்கள் மல்வானையில் ஒல்லாந்தப் படைகளைப் பணியச் செய்து கொழும்பு நகரத்தின்மீது படை எடுத்தனர்.

1736-ல் தேசாதிபதியாக வந்த **வான் இம்மாவ்** திறமை வாய்ந்தவன். நிலைமையை ஆராய்ந்த அவன் கண்டியரசனுடன் நட்புக் கொள்வதும், சிங்களவரிடம் நயமாக நடந்துகொள்வதும் அவசியமென்பதை உணர்ந்தான். கறுவா உரிப்பவர்கள் மீதிருந்த வரிகள் யாவும் அவனுல் நீக்கப்பட்டன. அவன் அரசனுக்குத் தூத

னுப்பி, ஒல்லாந்தருடைய பிரதேசங்களில் தான் தலையிடுவதில்லை எனத் தெளிவாகக் கூறுமாறு வேண்டினன். இந்த அறிக்கை வெளியிடப்பட்டதும், கறுவா வெட்டுவோரின் கிளர்ச்சிகள் அடங்கின. ஆயினும், நரேந்திர சிங்கனது ஆட்சிக் காலத்திற்குள் துறைமுகங்கள் திறக்கப்படவில்லை.

நரேந்திர சிங்கன் பௌத்த மதத்திற் பற்றுதலுடையவனயினும், பிற மதத்தவர்களிடமும் நியாயமாக நடந்துகொண்டான். அப்போது புரட்டஸ்தந்துகளாகிய ஒல்லாந்தர், கத்தோலிக்கரைக் கடுமையாகத் தண்டித்து வந்தனர். அதனல் யோசப்வாசு, கான்சால்வாஸ் போன்ற கத்தோலிக்கக் குருமார் கண்டிநாட்டையடைந்து நரேந்திரனின் பாதுகாப்பைப் பெற்றனர். இவர்களில் கான்சால்வாஸ் எழுதிய சிங்கள நூற்களில் தெளிவும், இனிமையும் பொருந்திய அழகிய உரை நடையைக் காணலாம்.

நரேந்திரசிங்கன் குண்டசாலை நகரையும் அங்குள்ள அரண்மனையையும் அமைத்தான். கண்டியிலுள்ள மகா தேவாலயமும் அவனல் நிருமாணிக்கப்பட்டது. அவனது ஆட்சியில், மதுரை, தஞ்சை முதலிய இடங்களிலிருந்த நாயக்க வம்சங்களுடன் தொடர்பு அதிகரித்தது. அவனது தாயும் மனைவியும் அந்த வம்சத்தினராகையால், அவர்களுடன் ஏராளமான நாயக்கப் பரிவாரங்கள் கண்டிக்கு வந்து குடியேறியிருந்தனர். நாயக்கர்களின் வருகையால் ஒருபுறம் சிங்களவரின் பகைமை ஓங்கியதாயினும், தென்னிந்தியாவில் அவர்களுக்கு ஆங்கிலேயருடன் இருந்த தொடர்பால் இங்கும் அத்தகைய தொடர்பு தோன்றுவது சாத்தியமாயிற்று.

1738-ல் நரேந்திரன் நோய்வாய்ப்பட்டான். ஒல்லாந்த மருத்துவரான தானியேல் செய்த முயற்சிகள் பயனிலவாக, அவன் மறு ஆண்டில் மரணமடைந்தான். அவன் ஒல்லாந்தரின் வரம்புகடந்த ஆதிக்கத்தை

வெறுத்தனனாயினும், அவர்களுடன் வெளிப்படையாகப் பகைமை கொள்ளத் துணியவில்லை. எனினும், அவர்களும் பிடிவாதமாகத் துறைமுகங்களைத் திறக்காமலே இருந்து விட்டனர்.

நரேந்திரனது மரணத்திற்குப் பிறகு, 1739-ல் அவனது மைத்துனனான ஸ்ரீ விசயராச சிங்கன் ஆட்சி தொடங்கினான். இவன் நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்தவனாகையால், முதலாம் விமலதர்மன் காலந் தொட்டுத் தொடர்ச்சியாக வந்த பழைய சிங்கள இராசவம்சம் நரேந்திரனுடன் மறைந்து விட்டது. நாயக்கர்களினாதிக்கத்தில் அரச சபையில் புதிய பழக்கவழக்கங்கள் தோன்றின. உதாரணமாக, பிரபுக்களும் தூதர்களும் அரசர்கள் முன்னிலையிற் றாழ்ந்து பணிதல், இராசதானிக்குள் குதிரைமீது எவரும் சவாரி செய்யாதிருத்தல் போன்ற பழக்கங்கள் பெரிதும் போற்றப்பட்டுவந்தன. சிங்கள திசாவைமாரும், இரட்டராளரும் கூட இத்தகைய பழக்கவழக்கங்களை மேற்கொண்டனர். நாயக்கர்களின் முயற்சியால் சட்டதிட்டங்களும் மாறுதலடைந்தன. உதாரணமாக, மன்னன் சந்ததியின்றி இறந்தால், ஆட்சி உரிமையை இராணியின் சகோதரனான அவனது மைத்துனனே அடையவேண்டுமென்று கூறப்பட்டது. நாயக்கர்கள் இவ்வாறு அரசவையில் பெரிதும் அதிகாரம் படைத்திருந்தபோதிலும், மொழி தெரியாத காரணத்தால், அவர்களால் சிங்களவரோடு நன்றாக உறவாட முடியவில்லை. அதனாற் சிங்களத் தலைவர்களே திசாவைமார்களாகவும் அதிகாரிகளாகவும் வேலை பார்த்தனர். இந்த இரு கூட்டத்தாரிடையே பொறுமையும் விரோதமும் வளர்ச்சியுற்றன. இறுதியில், கண்டிராச்சியத்தின் அழிவிற்கு இத்தகைய உட்பகைமையே காரணமாயிற்று.

விசயராசன் அரசுகட்டிலேறியதும், தானுந் தன் மனையாளும் பௌத்த சமயத்தைச் சார்ந்தனர். சிங்களவரை மகிழ்விக்கும் பொருட்டு அவனால் விகாரை

களும், தேவாலயங்களும் புதுப்பிக்கப்பட்டன. அவனுற் பௌத்த பிக்குகளைத் தருவிப்பதற்காக இருமுறை 1741-லும் 1747-லும் சீயநாட்டிற்குத் தூதுவர் அனுப்பப் பெற்றனர். இந்த அரசன் பௌத்த மதத்திற் கொண்ட பற்றுதல் காரணமாகக், கத்தோலிக்கக் கிறித்தவரைத் துன்புறுத்தலானுன். சிலாபத்திலும் புத்தளத்திலு மிருந்த சில கத்தோலிக்கத் தேவாலயங்கள் இவனு லழிக்கப்பட்டன.

இவனது ஆட்சிக் காலத்தின் ருெடக்கத்தில் தேசாதி பதியாக இருந்த **வான் இமாவ்**, கண்டியரசர்களுடன் நட்புகொண்டாலன்றி வியாபாரம் பெருகுவது கடினம் என்றும், அத்தகைய நட்பைப் பெறுவதற்காகத் துறை முகங்களைக் கண்டி வியாபாரிகளுக்குத் திறந்துவிடுதல் அவசியமென்றும் பத்தேவியா அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறினுன். அந்த அரசாங்கம் அதற்கு இணங்காததால், இமாவ் பழைய கொள்கையையே அனுசரிக்க நேர்ந்தது. ஆனுல், கண்டியிலிருந்த நாயக்கர்கள் சிங்களவரைப் போன்று பொறுமையுடனிராமல், ஒல்லாந்தருக்குப் பலவாறு இடரிழைத்தனர். கண்டி நாட்டின் வாயில் களில் முள் அடைப்புகள் அமைக்கப்பட்டன. ஒல்லாந் தருக்குக் கறுவாவும் யானைகளும் அனுப்பும் வழக்கம் நிறுத்தப்பட்டது. ஒல்லாந்தர் அந்திநாகலில் கட்ட விரும்பிய அணை தடைசெய்யப்பட்டது. அவர்களது சிங்களக் குடிகள் வரிகொடாத வண்ணம் தூண்டிவிடப் பட்டனர். சீயன் கோறளையில் ஒல்லாந்தர் வசமிருந்த ஒன்பது கிராமங்களைக் கண்டி அதிகாரிகள் ஆக்கிரமித் தனர். நீர்கொழும்பு, கற்பிட்டி முதலிய இடங்களினின் றுங் கள்ளத்தனமாகப் பொருள்கள் இறக்குமதி செய்யப் பட்டன. இவ்வாறு பல முறைகளில் அவமதிக்கப்பட்ட போதிலும், ஒல்லாந்தர் அரசனேடு போர் புரிய விரும்பாமற் பொறுத்திருந்தனர். இந்த நிலையில் 1747-ல் ஸ்ரீ விசயராசசிங்கன் இளைஞனுயினும், திட

ரென்று மரணமடைந்தான். ஆயினும், நாயக்கர்களின் துணிச்சலான போக்கும் ஒல்லாந்தரின் கொள்கையும் மாறுதலடையவில்லை.

### கண்டியரசர் வம்சாவளி

செயவீரன் (1521–1551)
|
கரலியட்ட பண்டாரன் (1551–1582)
|
* யமசிங்கன் (தொன் பிலிப்பு (1590) — (தொனகதரினு) — விமலதர்மன் I (1590–1604)
|
மகா ஆஸ்தானன் (1604)
|
சேனரதன் (1604–1635)
|
இராசசிங்கன் II (1635–1687)
|
விமலதர்ம சூரியன் II (1687–1706)
|
ஸ்ரீ வீர நரேந்திர சிங்கன் (1706–1739)
|
ஸ்ரீ விசயராசசிங்கன் (1739–1747)
|
கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் (1747–1780)
|
இராசாதிராசசிங்கன் (1780–1798)

(ஸ்ரீ விசயராசசிங்கன் முதல் இராசாதிராசசிங்கன் வரை:) ‘ நாயக்க மன்னர்கள் ’ (1729–1798)

* குறிப்பு: யமசிங்கனைக் கரலியட்ட பண்டாரனின் மருமகன் என்பர்.

### வினுக்கள்

1. நரேந்திர சிங்கன் எவ்வாறு ஒல்லாந்தரைத் தன்னுடன் இணங்குமாறு செய்தான்?

2. அவன் காலத்திலிருந்த சிறந்த கத்தோலிக்கக் குருமார் யாவர்?

3. நரேந்திரன் புதுப்பித்த சிற்பங்கள் யாவை?

4. நரேந்திரனுக்குப் பிறகு ஆட்சி உரிமை பெற்றது யார்? எவ்வாறு பெற்றான்?

5. நாயக்கர்கள் வலுத்தமையால் நேர்ந்த விளைவுகள் யாவை? அவர்கள் எவ்வாறு ஒல்லாந்தரைத் துன்புறுத்தி வந்தனர்?

6. ஸ்ரீ விசயன் புத்தமதத்திற்குச் செய்த தொண்டுகள் யாவை?

## 15. கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனும் பௌத்த சமயப் புனருத்தாரணமும்

1747-ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் ஸ்ரீ விசய இராசசிங்கன் இறந்ததும், அவனது மைத்துனனான **கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன்** அரசுரிமை பெற்றான். இவனும் நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்தவன்; ஸ்ரீவிசயன் இவனது சகோதரியை மணந்தபொழுது, இவனும் இவனது தாய் தந்தையரும் கண்டிக்கு வந்துவிட்டனர். இவன் சிறுவனாக இருந்தமையால், தொடக்கத்தில் ஆட்சிப் பொறுப்பைத் தும்பரா, மாம்பிட்டியா முதலிய சிங்களத் திசாவைகளே ஏற்று நடத்திவந்தனர். நான்கு ஆண்டுகள் இவ்வாறு கழிந்த பின்பு கீர்த்தி ஸ்ரீ தானே ஆளத் தொடங்கினான்.

தமது அரசன் வேறு நாட்டைச் சேர்ந்தவனென்றும், இந்து மதத்தை வளர்ப்பதில் ஊக்கம் செலுத்தக் கூடுமென்றும் சிங்கள பௌத்தர்கள் பெரிதுங் கவலையடைந்தனர். கண்டி நகரத்தில் நாயக்கர்களின் கூட்டம் அதிகமாகக் காணப்பட்டதாலும், விஷ்ணு முதலிய இந்து தேவாலயங்கள் தோன்றியதாலுந் தமது மதத்தின் பெருமை குறைந்துவிடுமென்றும் அவர்கள் கருதினர். இதனால் ஆங்காங்குச் சில கிளர்ச்சிகளுந் தோன்றின. மோலதண்ட என்ற பெயருடன் தோன்றிய சீயநாட்டுப்

பிக்கு ஒருவனை மன்னனுக்குவதற்காகவும் ஒரு கலகம் நிகழ்ந்தது. அதனைக் கோபால முதலியார் என்ற தளபதி அடக்கிக், கலகக்காரர்களைக் கடுமையாகத் தண்டித்தார். அவருக்கு வெகுமதியாக நிலம் அளிக்கப் பட்டதையே கெடபரியா சாசனம் (1760) கூறுகின்றது.

இவ்வாறு சிங்களவரின் உணர்ச்சியை அறிந்து கொண்ட கீர்த்தி ஸ்ரீ, இளைஞனாயினும், திறமையுடன்



படம் 23. தலதாமாளிகை

தனது கொள்கைகளை வகுத்துக்கொண்டான். பௌத்த மதத்தை வளர்த்து, அதற்குரிய உயர்ந்த நிலையை

அளிப்பதே அவனுடைய பிரதான நோக்கமாயிற்று. எனவே, அவன் பௌத்த தேவாலயங்களையும் விகாரை களையும் புதுப்பிக்கும் முயற்சியிலீடுபட்டான். திரு விழாக் காலங்களில் தெய்வ உருவங்களை ஊர்வலமாகக் கொணரும்போது, பௌத்த மதச் சின்னங்களுக்கே முதன்மையான தானம் வழங்கப்படவேண்டு மென்றுங் கட்டளை யிட்டான். இவற்றையன்றி, உண்மையாகவே பௌத்த சமயம் புத்துயிர் பெறுவதற்கான சில ஏற்பாடு களுஞ் செய்தான். கண்டிக்கு அருகிலுள்ள வெளிவித்தா என்னுமிடத்திற் பிறந்த **சரணங்கரா** என்ற பௌத்த பிக்கு அக்காலத்திற் கல்வித்துறையிலும் மதபோதனை யிலுஞ் சிறந்தவராய் விளங்கிவந்தார். அவர் பௌத்த சமயம் அடைந்திருந்த தாழ்நிலையைக் கண்டு பெரிதும் மனம் வருந்தி, பிக்குகளின் வாழ்க்கையைத் திருத்தி அமைத்து அவர்களைப் புண்ணிய சீலர்களாகச் செய்வ திலும், சிறந்த பௌத்த சம்பிரதாயங்களை மீண்டும் உயிர்ப்பிப்பதிலும் ஈடுபடலானார். கீர்த்தி ஸ்ரீயின் ஆதரவைப் பெற்றமையால், அவரது திருத்தங்கள் விரைவிற் பயனளித்தன.

முந்திய அரசனான ஸ்ரீ விசயன் அரக்கனிலிருந்து பிக்குகளை வரவழைத்து உயிர்ப்பித்ததான 'உபசம் பதம்' என்ற சடங்கு, மீண்டும் புறக்கணிக்கப்பட்டி ருந்தது. எனவே, சரணங்கரா அரசனை ஊக்குவித்து, சீய நாட்டிற்குத் தூதுவரை அனுப்பிச் சிறந்த பிக்குகளை வருவிக்குமாறு வற்புறுத்தினார். அவ்வாறே 1753-ஆம் ஆண்டில், உபலிதேரா தலைமையில் பிக்குகளும், தூது வர்களுஞ் சீயநாட்டிற்குச் சென்றனர். அங்கு இவர்கள் சிறப்பாக வரவேற்கப்பட்டனர். பிறகு அவர்களுடன் பல சிறந்த பிக்குகளும் அனுப்பி வைக்கப்பட்டார்கள். வெறும் 'சமனேரு' என்ற நிலையிலிருந்த சரணங்கரா 'உபசம்பதம்' பெற்று, விரைவில் அரசனால் 'சங்க ராசா' என்ற பதவிக்கு உயர்த்தப்பட்டார். அவரு

டைய ஊக்கத்தினுல், இலக்கியமும் மத தத்துவங்களும் ஒன்றையொன்று தழுவி உயர்ந்த நிலையை அடைந்தன. சரணங்கரா 1778-ல் மரணமடைவதற்கு முன்னுல், மத தத்துவங்கள், இலக்கணம், வைத்தியம் முதலிய பல துறைகளிலும் விரிவான நூல்களை இயற்றிவைத்தார். அவரைப் பின்பற்றி மற்றப் பிக்குகளும், அறிஞர்களும் நூல்கள் இயற்றத் தொடங்கியமையால், சிங்கள இலக்கியம் கீர்த்தி ஸ்ரீயின் ஆட்சிக் காலத்தில் பெரிதும் வளர்ச்சியுற்றது.

இத்தகைய இலக்கிய வளர்ச்சியில் முக்கிய இடம் பெற்றது, ' மகாவம்சம் ' எழுதப்பெற்றதே யாகும். பாளி மொழியில் எழுதப்பெற்ற இந்நூல், ஆதியிலிருந்து மகாசேனன் காலம் வரையிலுமுள்ள அரசர்களைப் பற்றி வருணிக்கின்றது. பிறகு, மேகவர்ணன் ஆட்சியிலிருந்து பராக்கிரம பாகு காலம் வரையிலும் தர்மகீர்த்தி என்ற பிக்குவாலும், அவருக்குப் பின்னர் நான்காம் பராக்கிரம பாகு ஆட்சி வரை வேருெரு பிக்குவாலும் இந்த நூல் தொடர்ந்து எழுதப்பெற்றது. ' மகாவம்ச 'த்தின் இந்தப் பகுதிகளைச் ' சூலு வம்சம் ' என்றுங் கூறுவதுண்டு; கிர்த்தி ஸ்ரீயின் கட்டளையால் அவனது ஆட்சிவரையிலுமுள்ள பகுதியைச் சரணங்கராவின் சீடரான புத்த ரட்சித என்ற பிக்கு எழுதிமுடித்தார். இவ்வாறு எழுதப்பெற்றுள்ள ' மகாவம்சம் ' இலங்கை நாட்டின் சரித்திர ஆராய்ச்சிக்கு இன்றியமையாததொரு சாதனமாய் விளங்குகிறது. ஆயினும், இந்தப் பெரு நூலில் அரசர்கள் பௌத்த சமயத்திற்குப் புரிந்த தொண்டுகள் பிரதான இடம் பெற்றிருக்கின்றனவேயன்றி, மற்றச் சம்பவங்களும் சரித்திர மாறுதல்களும் இடம்பெறவில்லை என்பதையும் ஈண்டுக் குறிப்பிடுதல் வேண்டும்.

கீர்த்தி ஸ்ரீயின் ஆட்சியில் இலக்கியம் வளர்ச்சி பெற்றது போலவே, கலைகளும் அபிவிருத்தியடைந்தன.

பௌத்த சமயத்தின்பாற்கொண்ட பற்றுதலால், அவன் பழைய விகாரைகளைப் புதுக்கினான்; அவற்றில் சிறந்த தாகத் திட்டி விகாரையைக் கூறலாம். அவன் எழுப்பிய புதிய விகாரைகளில் 'கங்கரமா' விகாரை மிகவும் உன்னதமானது. ஆங்காங்கு விகாரைகளிலும் தம்புளைக் குகை போன்ற குகைகளிலும் இவன் காலத்தில் வரையப்பெற்ற அழகு நிறைந்த ஓவியங்கள், இன்று மவற்றைக் காண்பவர்களை வியப்படையச் செய்கின்றன.

இவ்வாறு கீர்த்தி ஸ்ரீயின் ஆட்சி பலவகைகளிலும் புகழத்தக்கதாய் இருந்தபோதிலும், அவனது ஆட்சிக் காலத்தில் ஒல்லாந்தருக்குங் கண்டியரசாங்கத்திற்கும் இடையே பகைமை அதிகமாயிற்று. 1748-ல் கண்டியரசாங்கம் கொழும்பிற்குத் தூதுவரை அனுப்பி, முத்துக்களுங் குதிரைகளுந் தருமாறு கேட்டது; ஒல்லாந்த தேசாதிபதியான கோலனெசு அவற்றைக் கொடுக்க மறுத்ததுமன்றித், தனது எல்லையினின்றுங் கண்டிக்குச் சென்றுவிட்ட கறுவா சேகரிப்பவர்களைத் திருப்பி அனுப்புமாறு வேண்டுகோளும் விடுத்தார். பின்னர், தேசாதிபதி உலோட்டன் காலத்தில் அவர்கள் பிடிக்கும் யானைகளைத் தரவேண்டுமென ஒல்லாந்தரிடம் கண்டியரசாங்கம் கோரியதும் பயனற்றுப் போயிற்று. இவ்வாறு பல காரணங்களாற் பகைமை முற்றியதால், அரசனது கட்டளைப் பிரகாரம் கறுவா சேகரிப்பவர்கள் ஒல்லாந்தருக்கெதிராகக் கிளர்ச்சி புரியுமாறு தூண்டிவிடப்பட்டனர்.

அப்போது ஒல்லாந்தரின் நிலம் சம்பந்தமான கொள்கைகள் மக்களிடையே அதிருப்தியை வளர்த்தன. 1740-ஆம் ஆண்டிற்குள் கொழும்பு, மாத்தறைப் பகுதிகளிலுள்ள வயல்கள், தோட்டங்கள் முதலியவற்றின் கணக்குகள் 'தோம்புகள்' என்ற வரிப் புத்தகங்களிற் பதிவு செய்யப்பட்டு, ஒல்லாந்தரின் அதிகாரிகளால் வரிகள் நேரடியாக மக்களிடமிருந்து திரட்டப்பெற்றன.

மேலும், சூருடர் என்ற தேசாதிபதி கறுவா விளையும் காடுகளை அழித்துவிட்டு மக்கள் தென்னையைப் பயிரிடுவது கூடாதென்றும், அவ்வாறு செய்வோரின் கறுவா பயிரிடும் நிலங்களை ஒல்லாந்த அரசாங்கம் எடுத்துக் கொண்டு வேறு நிலங்களை வழங்குமென்றும் உத்தர விட்டார். இத்தகைய திட்டங்களால் வெறுப்படைந்த சிங்கள மக்கள் வேறு வழியின்றிக் கலகம் விளைக்கத் தொடங்கினர். அவர்களுக்கு உதவியாகக் கண்டிப் படைகள் அனுப்பப்பட்டன. அவை கன்வல்லை, மாத் தறை, கழுத்துறை போன்ற இடங்களில் ஒல்லாந்தரை முறியடித்துக் காலித் துறைமுகத்திலும் பல கட்டிடங் களை எரித்தன. இதனுற் றுன்பமடைந்த ஒல்லாந்தர் அரசனை எதிர்க்கப் படை திரட்டலாயினர்.

அதையறிந்த கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் பிற நாட்டினரின் உதவியால் ஒல்லாந்தரை ஒழிக்கவேண்டு மென்று தீர்மானிக்கலானுன். முதலில் மதுரையிலிருந்த முகமதிய நவாப்பின் உதவி நாடப்பட்டது. அந்த முயற்சி பயனளிக்காமையால், சென்னையிலிருந்த ஆங்கிலத் தேசாதிபதியுடன் அரசன் தொடர்பு கொண்டான். அந்தத் தேசாதிபதி யோன்பைபசு என்பவனைத் தூதனுப்பிக் கண்டியின் நிலைமையையும் கண்டியரசன் செய்யக்கூடிய உதவியையும் அறிந்து வருமாறு கூறினுன். 1762-ஆம் ஆண்டில் அந்தத் தூதுவன் கண்டிக்குச் சென்று திரும்பிய போதிலும், ஆங்கிலேயர் யாதொரு உறுதிமொழியுங் கூருமையால் ஒப்பந்தம் நடைபெறவில்லை. இவ்வாறு அரசன் புரியும் சூழ்ச்சிகளை உணர்ந்த புதிய ஒல்லாந்த தேசாதிபதி **வான் எக்**, 1762-ல் மாத்தறையிற் புதிதாகக் கோட்டை அமைத்ததோடன்றிப் புத்தளம், சிலாபம் என்ற துறை களையும் கைப்பற்றினுன். மறு ஆண்டில் அவன் கண்டிக்கு அனுப்பிய படை, பலவாறு துன்பமடைந்து திரும்பிவர நேரிட்டது. ஆனுல், வான்எக் தளர்ச்சி

யுருமல் பத்தேவியாவினின்று துருப்புகளை வரவழைத்து, மீண்டுங் கண்டிமீது படை எடுத்தான். கண்டியிலிருந்த நாயக்கர்களின் எதிரிகளான சிங்களக் கட்சியினரும் மறைமுகமாக ஒல்லாந்தருக்கு உதவிபுரியலாயினர்.

1765-ஆம் ஆண்டில், கலகெதறைக் கணவாய் வழியாக ஒல்லாந்தப் படைகள் கண்டி நாட்டிற் பிரவேசித்தன ; மற்றொரு படை புத்தளம் மார்க்கமாகப் பின் தொடர்ந்தது. அவை கட்டுகாசுத்தோட்டையை அடைந்ததும், அரசன் உடன்படிக்கை செய்ய முற்பட்டான். அவன் நான்கு கோறளை, சப்த கோறளை முதலிய பகுதிகளிலுங் கடற்கரைகளிலும் ஒல்லாந்தருக்குள்ள உரிமைகளை ஏற்றுக்கொள்ள இசைந்ததும், சிங்களக் கட்சியினரின் ஆதரவை நம்பிய வான் எக், 'கண்டியரசன் ஒல்லாந்தருக்குத் தலைவணங்கி அவர்களது சிற்றரசனாக இருக்கவேண்டும்' என்னும் புதிய நிபந்தனையை விதித்தான். அதைக் கண்டியரசன் புறக்கணித்ததும், ஒல்லாந்தர் கண்டி நகரத்தைத் தாக்கி அதனைக் கைப்பற்றி, அரசன் இருக்குமிடத்தைத் தேடிப் பார்த்தனர். அதற்கு முன்னரே அரசன் நகரத்தை விடுத்து வெளியேறிவிட்டான். ஆயினும், உணவு கிடைக்காமல் ஒல்லாந்தரின் படைகள் மிகவும் துன்பமுற்றன. வான்எக் சுரத்தினால் பீடிக்கப்பட்டு நலிவடைந்து, கொழும்பு நகரத்திற்குத் திரும்பினான் ; நோயின் கொடுமையால் விரைவில் மரணமடைந்தான். கண்டியிலிருந்த அவனது படைகளும் பல இடையூறுகளைக் கடந்து ஒருவாறு திரும்பிவந்துவிட்டன. அவனுக்குப் பிறகு தேசாதிபதியாக வந்த **இமான் விலெம் பால்க்** ஊக்கமும் அரசியற் றிறமையும் வாய்க்கப் பெற்றவன். கண்டியர் பஞ்சத்தால் அவதியுற்ற நிலைமையில், ஒல்லாந்தர் நாட்டைச் சூறையாடி நலிவுறச் செய்தனர். அதனால் கீர்த்தி ஸ்ரீ இறுதியில் பணிந்து 1766-ல் ஒல்லாந்தருடன் ஒப்பந்தஞ் செய்துகொள்ள நேர்ந்தது.

அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம், இலங்கையின் கடற்கரையைச் சார்ந்த பகுதிகளனைத்தும் ஒல்லாந்தரின் ஆதிக்கத்தில் அடங்கியவைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. வியாபாரத்தில் ஏகபோக உரிமையும் கண்டி நாட்டில் கறுவா வெட்டும் வாய்ப்பும் ஒல்லாந்தருக்குக் கிடைத்தன. வேறு எந்த ஐரோப்பியர் அல்லது இந்திய மன்னருடனும் ஒப்பந்தம் புரிவதில்லை யென்றும் ஒல்லாந்தரின் தூதுவரைத் தாழ்வாக நடத்துவதில்லை யென்றும் மன்னன் ஒப்புக் கொண்டான். இந்த நிபந்தனைகளுக்குப் பிரதியாக, கண்டி நாட்டில் அரசனது ஆணையே செல்லவேண்டுமென்பதையும் உப்பளங்களினின்றும் கண்டியர் உப்பு எடுத்துச் செல்லலாமென்பதையும் ஒல்லாந்தர் ஏற்றுக்கொண்டனர். மொத்தத்தில், இந்த உடன்படிக்கை ஒல்லாந்தருக்குச் சாதகமாகவே முடிந்ததெனலாம். போர்களாற் சாதிக்க முடியாததை அரசியற்றிறமையால் அவர்கள் பெற்றுவிட்டனர். ஆயினும், இதனுல் பிற்காலத்தில் ஒல்லாந்தருக்குங் கண்டி மன்னர்களுக்கு மிடையே பகைமை வளர்ந்ததேயன்றிச் சற்றுங் குறையவில்லை. இத்தகைய நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டமையால், அரசனது புகழ் மங்கியது. அவன் மீண்டும் மீண்டும் கடற்கரைப் பகுதிகளைப் பெறவும் முத்துக் குளிப்பதிற் பங்கு கேட்கவும் முற்பட்ட சமயங்களில் அவனை ஒல்லாந்தர் அடக்கிவந்தனர்.

கீர்த்தி ஸ்ரீ தனது கண்டி நகரத்தைப் புதுப்பித்தான்; கல்வியையும் கலைகளையும் ஆதரித்தான். ஆயினும் இறுதி நாட்களில், சிங்களவரும் நாயக்கரும் கொண்டிருந்த பிணக்குகளாலும் ஒல்லாந்தரின் ஆதிக்கங் காரணமாகவும் அவன் மனமுடைந்து போனுன். 1780-ஆம் ஆண்டில் அவன் குதிரைமீதிருந்து கீழே விழுந்தமையால் மரணமடைந்தான்.

### வினுக்கள்

1. கீர்த்தி ஸ்ரீ ஆட்சி உரிமை பெற்றது எவ்வாறு?

2. இவன் சிங்களவரைத் திருப்திப்படுத்தும் பொருட்டுச் செய்த ஏற்பாடுகள் யாவை?

3. கீர்த்தி ஸ்ரீக்கு உதவிபுரிந்த பௌத்த பிக்கு யார்? அவர் புரிந்த தொண்டுகளை விவரித்து ஒரு சிறு குறிப்பு எழுதுக.

4. 'மகாவம்சம்' என்பது யாது? யாரால் எழுதப் பெற்றது? அதனைப் பூர்த்தி செய்தவர் யார்?

5. கீர்த்தி ஸ்ரீ கலைகளில் விருப்பமுள்ளவன் என்பதற்கு உதாரணம் கூறுக.

6. அரசன் எக்காரணங்களால் ஒல்லாந்தர்மீது பகைமை கொண்டான்?

7. ஒல்லாந்தர் மீது மக்கள் வெறுப்படையக் காரணங்கள் யாவை?

8. (a) வான் எக் கண்டிமீது படை எடுத்தது எக்காரணத்தால்?

(b) அந்தப் படை எடுப்பு எவ்வாறு முடிந்தது?

9. விலெம் பால்க் என்ற தேசாதிபதி கண்டியரசனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை விவரித்து வரைக.

10. கீர்த்தி ஸ்ரீ மனமுடைந்து போகக் காரணம் யாது?

## 16. ஒல்லாந்தரின் வீழ்ச்சி

1780-ல் கீர்த்தி ஸ்ரீயின் சகோதரனுன **இராசாதி ராசசிங்கன்** கண்டி நாட்டிற்கு அரசனுனன். அவன் சிங்கள மொழியைப் பயின்று சிங்களவருடன் உறவாடி வந்தமையால், கண்டியிலிருந்த திசாவைமாருடன் பெரிதும் நல்லுறவு கொள்ள முடிந்தது. ஆயினும், அவனது நிர்வாகத்திற் றேன்றிய பெரும் மாறுதல், 'பிரதான அதிகாரி' என்ற பதவி பிரதானமாகக் கருதப்பட்டதேயாகும். அந்தப் பதவியிலிருப்போர் அதி காரமும் செல்வமும் பெறக்கூடுமாகையால், அதைப்

பெறும்பொருட்டுச் சிங்களத் தலைவர்களிடையே போட்டியும் பூசலும் அதிகரித்தன.

அப்போது ஒல்லாந்தருக்கும் இடையூறுகள் பல தோன்றின. அமெரிக்காவிற் குடியேற்ற நாடுகளுக்கும் ஆங்கிலேயருக்குமிடையே போர் மூண்டபொழுது, அமெரிக்க நாட்டிற்குச் செல்லும் பிறநாட்டுக் கப்பல்களைச் சோதித்து அனுப்பும் உரிமை தமக்கு உண்டென்று ஆங்கிலேயர் கூறத் தொடங்கினர். அதனை ஒல்லாந்தர் மறுத்தமையால், இரு நாட்டினருக்கு மிடையே



படம் 24. ஒல்லாந்தரின் திரிகோணமலைக் கோட்டை

போர் மூண்டது. அப்போது இலங்கையிலிருந்த தமது பண்டகசாலைகளையும், கோட்டைகளையும் ஆங்கிலேயர் தாக்காதவாறு பாதுகாக்கப் படைகளை ஒல்லாந்தர் சேகரித்தனர். அவர்களது படைகளிற் கீழ் நாட்டினர் பலரும் சேர்ந்திருந்தனர்; தேனியல் டீ மூரான் என்ற

சுவிசுத் தலைவரின் படை ஒன்றும் வந்து சேர்ந்தது. அதுவரை இந்திய விவகாரங்களில் ஈடுபட்டிருந்த ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தகச் சங்கத்தார் ஒல்லாந்தரின் குடியேற்றங்கள்மீது கவனம் செலுத்தத் தொடங்கினர். 1781-ல் சென்னையிலிருந்த ஆங்கிலத் தேசாதிபதி மெக்கார்னியின் முயற்சியால் நாகபட்டினம் கைப்பற்றப்பட்டு, இலங்கையில் திரிகோணமலை முற்றுகையிடப்பட்டது. 1782-ஆம் ஆண்டில் தொடக்கத்தில் எட்வேட் கியூசு என்ற ஆங்கிலக் கடற்படைத் தலைவர் திரிகோணமலைத் துறைமுகத்தையும், கோட்டையையும் கைப்பற்றினர்.

பிறகு மெக்கார்னி கண்டியரசரின் ஆதரவை விரும்பிப் பாய்டு என்பவரைத் தூதனுக அனுப்பினுர். அவர் பல இடையூறுகளைக் கடந்து, கண்டியை அடைந்தபொழுது அங்கிருந்த திசாவைமாரும் மற்றவர்களும் ஒல்லாந்தருடன் நட்புக் கொண்டவர்களாக இருத்தலையும், ஆங்கிலேயரிடம் அனைவரும் பகைமை பாராட்டுதலையும் உணர்ந்தார். கண்டியரசனும் ஆங்கிலேயரிடம் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. எனவே, பாய்டு மனம் வருந்தித் திரும்புகையில், பிரெஞ்சுக்காரர் வசம் சிக்கி, அவர்களாற் கைதியாக மடகாஸ்கர் தீவிற்கு அனுப்பப்பட்டார். அப்போது ஒல்லாந்தரின் உதவிக்குப் பிரான்சுக் கடற்படை ஒன்று வந்து சேர்ந்தது. அந்தக் கடற்படை திரிகோணமலையை ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றி ஒல்லாந்தருக்கு அளித்தது.

இந்த நிலைமையில் ஒல்லாந்தர் கண்டியரசருடன் சமாதானஞ் செய்துகொள்ள விரும்பினர். அதனுல், இராசாதிராசனும் தனது சகோதரன் இழந்த பல உரிமைகளை மீட்டுக்கொண்டான். ஆயினும் கடற்கரைப் பகுதிகளை அவன் வசம் விடுவதற்கு ஒல்லாந்தர் இசையவில்லையாகையால், மீண்டும் விரோதம் ஏற்பட்டது. கண்டியர் உப்பு எடுப்பதையும் வியாபாரம் செய்வதை

யும் ஒல்லாந்தர் தடுக்கலாயினர். இதையறிந்த அரசன் பிரான்சுக்காரருடன் உறவு கொள்ள முயன்ற பொழுது, ஒல்லாந்தர் திசாவைமார்களின் இரகசிய உதவியை நாடலாயினர். அவர்களிற் சிறந்தவனுகிய பிலிமத்தலாவை ஒல்லாந்தருடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தான். அன்றியும், கண்டியைச் சேர்ந்த பிரதேசங்களிற் கறுவா உரிப்பதை விடுத்து, ஒல்லாந்தர் தமது பிரதேசங்களிலேயே ஏராளமாகக் கறுவா உற்பத்தி செய்வதற்கான வழிகளைப் பின்பற்றினர். பிறகு வன்னிப் பிரதேசத்தையுங் கைப்பற்றி அங்குப் பல இடங்களில் கரும்பு விளைப்பதையும் ஒல்லாந்தர் மேற்கொண்டனர்.

1794-ம் ஆண்டில் பிரான்சு நாட்டிற் குடியரசை நிறுவிய புரட்சிப் படைகள் காலந்து நாட்டிலும் புகுந்து, அதைக் கைப்பற்றி அங்கு ஒரு குடியரசை ஏற்படுத்தின. அதனுல் அங்கு அரசுபுரிந்த சுடாத் கோல்டரான (அதிபதி) வில்லியம் இங்கிலாந்தில் அடைக் கலம் புகுந்தான். இந்தக் காரணத்தினுல் பிரான்சுக் காரர்மீதும் ஒல்லாந்தரின் புதிய குடியரசுமீதும் ஆங்கிலேயர் போர் தொடுத்தனர். இதனுல் அச்ச மடைந்து இலங்கையிலிருந்த ஒல்லாந்தர், தாங்கள் ஆங்கிலேயருடன் நட்புப் பாராட்டி, சுடாத்கோல்டரின் ஆணைக்கு இணங்கியவர்களாக நடந்துகொள்வதென்று தீர்மானித்துக் கொண்டனர்.

ஆனுல், ஆங்கிலேயர்கள் 1795-ல் சுடாத்கோல்ட ரிடமிருந்து ஓர் ஆணைப் பத்திரம் பெற்றனர். அதன் பிரகாரம், ஆபிரிக்காவிலும் இலங்கையிலுமுள்ள ஒல் லாந்தக் குடியேற்றங்களில் பிரான்சுக்காரர் பிரவேசிக் காதவாறு ஆங்கிலேயர் தம் படைகளை நிறுத்திப் பாது காப்பதென்றும், போர் முடிந்த பிறகு அந்தப் பிரதேசங் களை ஒல்லாந்தர் வசமே விட்டுவிடுவதென்றுங் கூறப் பட்டது. அந்தக் கடிதத்தின் பிரதியைச் சென்னையி

லிருந்து கோபார்ட் பிரபு கொழும்பிற்கு அனுப்பி வைத்து, ஒல்லாந்தரை அதற்கு இணங்கச் செய்து கொழும்பு முதலிய தலங்களைத் தம்மிடம் விட்டுவைக்குமாறு வற்புறுத்தினர். முதலில் அவர்கள் ஒருவாறு இணங்கியபோதிலும், விரைவில் அதனை மறுத்துத் தமது நாட்டில் தோன்றிய புதிய குடியரசின்பால் விசுவாசம் தெரிவிக்கலாயினர். எனவே, ஆங்கிலேயருக்கும் ஒல்லாந்தருக்குமிடையே போர் மூண்டது. 1795-ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் திரிகோணமலைக் கோட்டை ஆங்கிலேயரால் தாக்கப்பட்டதுமன்றி ஒல்லாந்தப் படையைச் சரண் அடையவும் செய்தனர். ஒல்லாந்த தளபதி போர்ன்பாவ் கோட்டையை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்து வெளியேறினர்.

விரைவில் மற்றக் கோட்டைகளும் ஆங்கிலேயர் வசமாயின. மேயர் பிரேசர் மட்டக்களப்பைக் கைப்பற்றினர். பீட்ரோ முனையும் யாழ்ப்பாணத்திலிருந்த கோட்டையும் வீழ்ச்சியுற்றன. டீமூரானின் படை வீரரும் ஆங்கிலேயருடன் சேர்ந்துகொண்டனர். தளபதி மான்சன் முல்லைத் தீவைக் கைப்பற்றினர். மன்னர், பார்பட் என்ற ஆங்கிலப் படைத்தலைவரால் கைப்பற்றப்பட்டது. கற்பிட்டி முதலிய இடங்களும் நீர் கொழும்பும் ஆங்கிலேயர் வசமாயின. இறுதியில், இசுடுவர்ட் என்ற ஆங்கிலத் தளபதி பெரும்படை ஒன்றைக் கொழும்பு நோக்கிச் செலுத்தினர். ஆங்கிலேயரின் அரசியற்றிறமை காரணமாகக் கொழும்பிற்குள்ளிருந்த டீமூரான் என்பவரின் படையிற் பெரும் பகுதியு மங்கிருந்து வெளிப்பட்டு ஆங்கிலேயருடன் சேர்ந்து கொண்டது.

கொழும்பு முற்றுகையின் பொழுது கண்டி மன்னனின் ஆதரவையும் பெறக் கருதி ரொபேட் அண்ட்ரூசு என்ற ஆங்கிலேயர் தூதுவனாக அனுப்பப்பட்டார். அவர் பலவாறு முயன்றும் ஒப்பந்தம் ஏற்படவில்லை; ஆயினும், அவரது யோசனையின் பிரகாரம் சென்னைக்

குக் கண்டி அரசர் மிகசுதனு, தெனகமுவா என்போரைத் தூதுவராக அனுப்பிவைத்தார். அண்ட்ரூசின் முயற்சி யால் கண்டியரசனுக்கும் ஆங்கில வர்த்தக சங்கத் தாருக்கு மிடையே உடன்படிக்கை ஏற்பட்டது. அதன் படி, கண்டியரசருக்குச் சுயேச்சையாக வியாபாரம் செய்யவுஞ் சொந்தமாகக் கப்பல்கள் வைத்துக் கொள்ள வுந் தனது நாட்டில் மற்றவர்களுடைய தொந்தரவு இன்றி ஆணை செலுத்தவும் உரிமைகள் வழங்கப் பட்டன.

இதற்கிடையில், 1796-ஆம் ஆண்டின் ஞெடக்கத் தில் முற்றுகை இடையீடின்றி நடந்தமையால், எளிதிற் கொழும்பின் புற அரண்கள் கைப்பற்றப்பட்டுக் கோட் டைப் பகுதியிலும் ஆங்கிலேயச் சேனைகள் புகுந்து விட்டன. அதன் பயனுக, பெப்ரவரி மாதம் பதினைந்தாம் திகதியன்று கொழும்பிலிருந்த சபையினர் சரணடைந்து விடுவதென்று தீர்மானித்துவிட்டனர். ஆங்கிலப் படை கள் கொழும்பு நகரத்தையும் அதனைச் சார்ந்த காலி, மாத்தறை, கழுத்துறை போன்ற பகுதிகளையும் ஆக்கிர மித்துக் கொண்டன. இவ்வாறு அதிக உயிர்ச்சேதமின்றி, ஆங்கிலேயர் இலங்கையிலிருந்த ஒல்லாந்தரின் ஆதிக்கப் பிரதேசங்களனைத்தையும் கைப்பற்றினர். இந்த நாட்டில் ஒல்லாந்தரின் சாம்ராச்யம் அத்தமித்துவிட்டமையால், ஆங்கில ஆட்சி உதயமாயிற்று.

ஒல்லாந்தர் வீழ்ச்சியுறுவதற்குப் பல காரணங்க ளிருந்தன. முதலாவதாக, அவர்களது பொருளாதார நிலை சரியாக இருக்கவில்லை. போர்கள் காரணமாக, வருவாய் குறைந்து செலவு அதிகரித்தது. கீழ்த்தர உத்தியோகத்தர்களின் சம்பளம் குறைக்கப்பட்டமை யால், அவர்கள் தமது கடமைகளை மறந்து சொந்த வியாபாரங்களிற் கவனம் செலுத்தலாயினர். இரண்டாவ தாக, அவர்கள் வசமிருந்த சிங்களவர், முசுலிம்கள் முதலிய படைவீரர்களும் விரைவில் எதிரிகளோடு



படம் 25. ஒல்லாந்தரின் இலங்கைப்படம்

சேர்ந்துகொண்டனர். சுயநலம் காரணமாகக் கண்டியரசனை ஒடுக்கியதால், அந்த அரசனும், சிங்களவரும் ஒல்லாந்தருக்கு உதவிபுரிய முன்வரவில்லை. மூன்றுவதாக, தமது நாட்டிலிருந்தும் பிரான்சுக்காரரிடமிருந்தும் அவர்கள் எதிர்பார்த்த உதவி கிட்டவில்லை. மேலும், ஆங்கிலேயர் ஒல்லாந்தருக்குக் கௌரவமான நிபந்தனைகளையே விதித்தனர். அவர்களை நன்கு நடத்துவதாகவும், அவர்களது கடன்களுக்குப் பொறுப்பு ஏற்பதாகவும், மதப் பிரசாரர்களை ஆதரிப்பதாகவும் ஆங்கிலேயர் கூறியமையால், அவர்களை எதிர்த்துப் போர்புரிவதற்கு உறுதியின்றி ஒல்லாந்தரின் படைகள் தவித்தன. இத்தகைய காரணங்களால், ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகளாக இலங்கையுடன் அரசியற்றொடர்பு கொண்டிருந்த ஒல்லாந்தர் வீழ்ச்சியுறுவது சாத்தியமாயிற்று.

### வினுக்கள்

1. 1780-க்குப் பிறகு கண்டி நாட்டின் நிருவாகத்தில் நேர்ந்த பெரும் மாறுதல் யாது?

2. ஆங்கிலேயருக்கும் ஒல்லாந்தருக்குமிடையே பகைமை தோன்றிய காரணங்களை விரித்துக் கூறுக.

3. பாய்டு என்பவரின் தூது ஏன் வெற்றியுறவில்லை?

4. இலங்கையிலிருந்த ஒல்லாந்தக் குடியேற்றங்கள்மீது ஆங்கிலேயர் எக்காரணங்களால் உரிமை பாராட்டினர்?

5. ஒல்லாந்தக் கோட்டைகள் ஆங்கிலேயர் வசம் வந்த வரலாற்றைச் சுருக்கி வரைக.

6. ஒல்லாந்தர் விரைவில் வீழ்ச்சியுற்றதன் காரணங்களை ஆராய்க.

### பயிற்சி

இலங்கைத் தேசப்படத்தில், ஒல்லாந்தரிடமிருந்து ஆங்கிலேயர் கைப்பற்றிய துறைமுகங்களையும் கோட்டைகளையும் குறிப்பிடுக.

# 17. ஒல்லாந்தர் ஆட்சியால் விளைந்த பலன்கள்

இலங்கையின் வரலாற்றில் ஒல்லாந்தரின் ஆட்சி பிரதான இடம் பெறுகின்றது. 1658-ல் முடிவாக போர்த்துக்கீசரை இந்த நாட்டினின்றும் துரத்திவிட்டுத் தமது ஆதிக்கத்தை நிறுவிய ஒல்லாந்தர், 1796-ஆம் ஆண்டில் தாங்களும் அவர்களைப் போல இலங்கையினின்றும் வெளியேற நேர்ந்தது. எனினும், ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகள் வரை நிலவிய அவர்களது ஆட்சியில், இலங்கையின் அரசியலும் மக்களின் பழக்க வழக்கங்களும் பெரிதும் மாறுதலடைந்தன.

முதலில் அவர்களது நிருவாக முறையை ஆராய்வோம். அவர்கள் வசம் கடற்கரைப் பகுதியும், அதை ஒட்டிய பிரதேசங்களுமே இருந்ததாகையால், அவற்றை மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஆட்சிபுரிந்தனர். அவை முறையே, **யாழ்ப்பாணக் கொமாண்டர் பிரிவு, கொழும்புக் கொமாண்டர் பிரிவு, காலிக் கொமாண்டர் பிரிவு** என்று வழங்கப்பட்டன. யாழ்ப்பாணப் பிரிவில் யாழ்ப்பாணத் தீபகற்பமும், மன்னூர் பிரதேசமும், திரிகோணமலையும் மட்டக்களப்பும் கொண்ட கிழக்குக் கரையும் அடங்கியிருந்தன. இங்கு வன்னிப் பகுதியிலும் ஒல்லாந்தரின் மேலதிகாரம் ஒப்புக்கொள்ளப்பட் டிருந்தது. இரண்டாவது பிரிவு, கற்பிட்டியிலிருந்து பெந்தோட்டை ஆறு வரையிலுள்ள கடற்கரைப் பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. ஆயினும், நான்கு கோறளை, மூன்று கோறளை, சப்பிரகமுவ முதலிய மாகாணங்களின் பகுதிகளும் இதில் அடங்கி யிருந்தமையால், இந்தப் பிரிவே மற்ற மாகாணங்களைவிடச் செல்வம் மிகுந்ததாக இருந்தது. மூன்ருவது பிரிவில், தற்காலத்தில் தென் மாகாணமாகக் கூறப்படும் பகுதிகள் அடங்கியிருந்தன. காலி

யிலும் மாத்தறையிலும் முக்கியமான ஒல்லாந்தக் கோட்டைகள் இருந்தன. இவற்றில் கொழும்புக் கோட்டையில் ஒல்லாந்த தேசாதிபதியும் அவருக்கடங்கிய சேனையும் இருந்தனர். வரி வசூலித்தல், நிருவாகம் புரிதல், நீதி விசாரணை முதலியன ஒரு திசாவையிடம் விடப்பட்டிருந்தன. யாழ்ப்பாணப் பகுதியில், ஓர் உதவித் தேசாதிபதி நிருவாகத்தின் தலைவராகவும் தளபதியாகவும் விளங்கி வந்தார். அவருக்கு அடங்கிய திசாவை ஒருவரால் வன்னிப் பிரதேசம் உள்ளிட்ட யாழ்ப்பாணப் பகுதி முழுதும் நிருவகிக்கப்பட்டது. மன்னாரில் கோட்டையும் இராணுவமும் முத்துக் குளிக்கும் துறையும் இருந்தன. காலி-மாத்தறைப் பிரிவில் மற்றோர் உதவித் தேசாதிபதி இருந்தார். காலிக்கோட்டையே அவரது வாசத்தலமாக விளங்கியது. அவருக்கு உதவியாக இருந்த திசாவையின் தலைமைக் காரியாலயம் மாத்தறையில் இருந்தது.

ஒல்லாந்தர் இரண்டு பிரதான நோக்கங்கள் கொண்டவர்களாக இருந்தனர்; தமது வியாபார சங்கத்திற்கும் தமது நாட்டினருக்கும் மாத்திரமே ஏகபோகமாக இலங்கையின் வியாபார உரிமை இருத்தல் வேண்டும். தமது புரட்டசுதந்து மதத்தைப் பரவச் செய்தல் வேண்டுமாகையால், அந்த மதக்குருமார்களுக்கு ஆதரவளிப்பதும், சிங்களவர்களிற் றகுந்தவர்களை அதற்குப் பிரசாரகர்களாகத் தேர்ந்தெடுத்துப் பயிற்சியளிப்பதும் ஒல்லாந்த அரசாங்கத்தினுடைய கடமையாயிற்று.

இலங்கையில் ஒல்லாந்தரின் நிருவாகம் முழுவதும் கொழும்பிலிருந்த ஒல்லாந்த தேசாதிபதியின்கீழ் அமைந்திருந்தது. அந்தத் தேசாதிபதி பத்தேவியாவிலிருந்த தலைமை அதிகாரிக்கு அடங்கி நடக்கவேண்டியவராக இருந்தார். கொழும்பிலிருந்த தேசாதிபதிக்கு ஆலோசனை கூற எட்டு உயர்தர உத்தியோகத்தர் அடங்கிய 'அரசியற் சபை' ஒன்றிருந்தது. நிருவாகத்திற்

காக, ‘அரசியற் பிரிவு’ என்று ஒரு பிரிவில் தேர்ந்த உத்தியோகத்தர் பலர் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் வியாபாரச் சங்கத்தின் ஊழியராக இருந்தமையால், வியாபாரத்தையும் கவனிக்க வேண்டியிருந்தது. அன்றுட நிருவாகத்தைக் கவனிக்க ஒரு காரியாலயம் (Secretariat) இருந்தது. அதன் தலைமை நிருவாகி ‘அரசியற் காரிய தரிசி’ எனப்பட்டார். மேலும், ‘வியாபாரக் காரியாலயம்,’ ‘நிதி பரிசீலனைக் காரியாலயம்,’ ‘சம்பளம் வழங்கப்படும் காரியாலயம்,’ ‘பண்டகசாலை,’ ‘பொது மராமத்திலாக்கா’ என்று பற்பல காரியாலயங்களும் இலாகாக்களும் பிரிக்கப்பட்டிருந்தன.

கறுவா பெறுவதற்காகத் தனியாக ஓர் இலாக்கா நிறுவப்பட்டிருந்தது. ஆண்டுதோறும் 50000 இருத்தலுக்குக் குறையாத கறுவா ஒல்லாந்தரால் சுலபமாகப் பெறமுடிந்ததற்குக் காரணம், மகாபத்த தளபதியும் அந்த அதிகாரிக்குக் கீழிருந்த விதானைமார்களுமேயாவர். கறுவா விளையும் கிராமத்தில் வாழும் வயதுவந்த ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் 682 இருத்தல் கறுவா கொடுக்கவேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டது, அதற்கு ஊதியமாக அவர்களுக்கு உப்பும், அரிசியும் சிறிதளவு பணமும் தரப்பட்டன. ஒல்லாந்த வியாபாரச் சங்கம் தவிர்ந்த வேறு யாரும் கறுவா வியாபாரத்தில் ஈடுபடாதவாறு தடைசெய்யப்பட்டிருந்தது. கறுவாவைப் போலவே பாக்கு, யானைகள் முதலியவற்றைச் சேகரித்து விற்பதிலும் கவனம் செலுத்தப்பட்டது.

மதத்துறையில் பிரசாரம் புரிவதற்கும் ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் மதப் பிரசாரம் புரிந்ததுடன், சமூக சேவையும் புரிந்தனர். இவர்களுடன் கல்வித்துறையில் பணிபுரியும் அதிகாரிகளும் தொடர்பு கொண்டிருந்தனர். கொழும்பு, யாழ்ப்பாணம் முதலிய இடங்களிற் கலாசாலைகளும் மதப் பிரசாரங்களைத் தயாரிக்கும் சங்கங்களு மமைந்திருந்தன.

கல்வி இலாக்கா 'மாகாணக் கல்விச் சபை'களினுல் நடத்தப்பெற்றது. இந்தச் சபைகள் திசாவைமாரின் மேற்பார்வையின்கீழ் அடங்கி இருந்தன. ஒல்லாந்தரின் ஆட்சியில் நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகள் தோன்றி யிருந்தன ; இவையன்றித் திக்கற்றவர்களுக்குத் தனிப் பட்ட பாடசாலைகளும் தொழிற்கல்வி நிலையங்களும் அமைக்கப்பட்டிருந்தன. இவை யாவும் மதக்குருமார் களின் மேற்பார்வையின்கீழ் நடந்தமையால், மதப் பிர சாரத்திற்கும் மதமாற்றம் புரிவதற்கும் பள்ளிகள் பெரி தும் பயன்பட்டன.

ஒல்லாந்தரின் இராணுவ இலாக்கா செவ்வனே அமைக்கப்பட்டிருந்தது. மேசர், காப்டன், இலெப்டி னன்ட் முதலிய அதிகாரிகள் தரைப்படைகளை நிருவகித் தனர். இவ்வாறே கடற்படை ஊழியரும் அவர்களது தகுதிக்கும் வேலைக்கும் ஏற்றவாறு பிரிக்கப்பட்டிருந்தனர். போர்த்துக்கீசரைப் போன்ற இவர்களும் சிங்களப்படை வீரரின் உதவியை நாடியதால், **முதலியார்கள், இலசுகரீன்கள்** போன்று சுதேச அதிகாரிகளும் நியமிக் கப்பட்டிருந்தனர். இராணுவ இலாகாவிற்குத் தேவை யான பல கருவிகளையும் தயார் செய்வதற்காகப் பல வகைத் தொழிலாளரும் தேவையாக இருந்தமையால், 'தொழிலாளர் இலாக்கா' ஒன்றும் நிறுவப்பட்டிருந்தது.

போர்த்துக்கீசரைப்போ லல்லாமல், ஒல்லாந்தர் நீதி பரிபாலனத்திற் பெரிதும் ஊக்கம் கொண்டிருந் தனர். அவர்கள் தங்களுடைய உரோம—ஒல்லாந்த நீதி முறையையுஞ் சட்டங்களையு மிலங்கையில் அனு சரித்தனர். அதனுல் பழைய நீதி நிருவாகத்திலிருந்த குறைபாடுகள் பலவும் நீங்கின. ஆயினும், அவர்கள் இங்கு வசிக்கும் சிங்களவரையுந் தமிழரையுந் திருப்தி செய்யக் கருதி நாட்டின் பழைய சட்டமுறைகளையும் தொகுத்தனர். உதாரணமாகச் தேசாதிபதி **சைமன்** (1703–1707) சிறந்த நீதி நிபுணராகையால், தமிழ்

மக்களின் பண்டைய பழக்க வழக்கங்களும் நீதி முறைமையும் அடங்கிய 'தேச வழமை' என்ற சட்டத் தொகுதியைத் தொகுத்து வைத்தார். அவ்வாறு தொகுக்கும்போது, யாழ்ப்பாண மக்களின் கருத்துக் களையும் அவர்களை ஆட்சி புரிந்த முதலியார், திசாவை மாரின் கொள்கைகளையும் அவர் கேட்டுணர்ந்தது போற்றத் தக்கதாகும். நீதி நிருவாகத்தில் சிகரம் போலக் கொழும்பிலிருந்த உயர்நீதி மன்றம் அமைந் திருந்தது. அது கீழேயுள்ள மன்றங்களிலிருந்து மேல் விசாரணைக்கு வரும் வழக்குகளைப் பரிசீலிக்கவும், ஐரோப்பியரை விசாரிக்கவும் உரிமை வாய்ந்தது. அங்கு நீதிபதிகளாக 'அரசியற் சபை' அங்கத்தினர்களே அமர்ந்திருந்தனர். அன்றியும், மாகாணங்களில் நில வழக்குகளையும் மற்றச் சொத்துக்கள் பற்றிய வழக்கு களையும் விசாரிக்க நீதி மன்றங்களிருந்தன. அவற்றில், திசாவைமார், 'பிசுக்கால்,' மகா முதலியார் முதலிய அதிகாரிகள் இடம்பெற்றிருந்தனர். இவர்கள் யாவரும் நிர்வாக அனுபவம் வாய்ந்தவர்களாயினும், விசேடமான சட்ட ஞானமும் வழக்கறிஞர்களுக்கேற்ற பயிற்சியும் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை.

ஒல்லாந்தர், அரசனைப் போலவே நிலத்தின்மீது உரிமை பாராட்டினமையால், அவர்களும் நிலவரி விதிக்கத் தொடங்கினர். இரயிகம், சால்பிட்டி, கேவாகம், சீயன்கோறளை போன்ற பகுதிகளில் நிலங்களிற் செய்கை பண்ணப்பட்ட பயிர்கள்மீது வரிகள் விதித்தனர். தென்னை, கமுகு, மிளகு முதலியவற்றின்மீது விளைவில் பாதிப் பங்கு வரையிலும் வரிகள் திரட்டப்பட்டன. மேலும், சுங்கவரிகளும் மீன் பிடித்தல், கள்ளிறக்குதல் போன்ற தொழில்கள்மீது விதிக்கப்பட்ட வரிகளும் ஒல்லாந்தருக்கு மிகுந்த வருமானத்தை அளித்தன. யானைகள், உப்பு, முத்துக்கள், கறுவா போன்ற பொருள்களில் ஒல்லாந்தர் மாத்திரமே வியாபாரம்



படம் 26. ஆட்டுப் பட்டித் தெருவிலுள்ள ஒல்லாந்த தேவாலயம்

செய்யக்கூடிய உரிமை படைத்திருந்தனர். அதனால், அவர்களுக்கு ஏராளமான வருவாய் கிடைத்தது. அன்றியும், நிலங்களைப் பயிர் செய்வதற்குத் தென்னிந்தியாவிலுள்ள தஞ்சாவூர் போன்ற இடங்களிலிருந்து ஏராளமான அடிமைகளைக் கொணர்ந்து இலாபகரமாக வேளாண்மை புரியலாயினர். பண்டைய சிங்கள அரசரைப் போன்று '**இராச காரியம்**' என்ற முறைப்படி, கற்பாதைகள் செப்பனிடுவதற்கும் பாலங்கள், மதகுகள் அமைப்பதற்கும், அம்பலங்களைச் சீர்ப்படுத்தவும் மக்களைக் கட்டாயமாக வேலை செய்யுமாறு வற்புறுத்தினர். இவ்வாறு பல வழிகளிலும் ஒல்லாந்தரின் வியாபாரச் சங்கம் பெருமளவில் இலாபமடைந்தமையால், அவர்களது தாய்நாட்டிலும் செல்வமும் செழிப்பும் மிகுதியாயிற்று.

ஒல்லாந்தரின் நிருவாகத் திறமையை விளக்க அவர்கள் தயாரித்த '**தோம்புகளே**' போதுமானவை. போர்த்துக்கீசரும் இத்தகைய கணக்குப் புத்தகங்களைத் தயாரித்தனராயினும், ஒல்லாந்தரைப் போன்று எல்லா விபரங்களும் அடங்கிய புத்தகங்களை அவர்கள் தயாரிக்கவில்லை. ஒல்லாந்தரின் தோம்புகளில் ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள ஒவ்வொருவரின் குடும்பம் பற்றிய விவரங்களும், நிலக் குறிப்பும், வரியின் அளவும் அடங்கியிருந்தன. அதனால், இத்தகைய கணக்குப் புத்தகங்கள் அக்காலத்திய நிலையை விளக்கும் சிறந்த சான்றுகளாக விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

நிருவாகத் துறையில் மட்டுமன்றி, மற்றத் துறைகளிலும் ஒல்லாந்தரின் ஆட்சி, போர்த்துக்கீசரின் அரசியலைக் காட்டிலும் பன்மடங்கு உயர்ந்து விளங்கிற்று. சிற்ப வேலைகளில் ஒல்லாந்தரின் ஆற்றலை அவர்கள் அமைத்த பெரிய கோட்டைகளும் தேசாதிபதி மாளிகை போன்ற மாளிகைகளும் நன்கு விளக்குகின்றன. இத்தகைய கோட்டைகளைக் கொழும்பு, காலி, யாழ்ப்

பாணம், திரிகோணமலை, மன்னர் போன்ற இடங்களிற் காணலாம். கொழும்பு முதலிய நகரங்களில் அவர்கள் அமைத்துள்ள தேவாலயங்களிலும் உயர்ந்த கிரேக்க, இத்தாலிய சிற்ப முறைகளின் இலட்சணங்களைக் காணக் கூடும். மேலும், ஒல்லாந்தருக்கு இந்த நாட்டு மக்களின் நலன்களில் சிறிதளவேனும் கவலை இருந்தமையாலேயே, 'தேச வழமை' போன்ற சட்ட நூல்கள் தொகுக்கப் பெற்றன. தமது பிரதேசங்களிற் குட்ட நோய் விரைவிற் பரவினமை கண்டு அஞ்சிய ஒல்லாந்தர், அத்தகைய நோய்க்கு இரையானவர்களைத் தனிமைப்படுத்திப் பிறருக்கு நோய் பரவாதவாறு தடுக்க முயன்றனர்; சிறந்த தேசாதிபதியாகிய சைமன் தமது நிருவாக காலத்தில் கெந்தலையிற் றகுந்ததொரு ஆசுபத்திரியும் குட்ட நிவாரண நிலையமும் அமைத்தார். அன்றியும், ஒல்லாந்தராலேயே முதன் முதலாகக் குடியேற்றங்கள் அமைத்துத் தோட்டப் பயிர்களைச் செய்கை பண்ணும் முறை பின்பற்றப்பட்டது. அவர்களால் நெல்லும், கரும்பும், புகையிலையும், கோப்பியும், தென்னையும் பயிராக்கப்பட்டன. அவர்கள் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதற்குச் சான்றாக, இன்றளவும் 'கந்தோரு' (காரியாலயம்), 'தக்செரு' (குமாஸ்தா), 'தாரே' (மேல்மாடி), 'சுதோப்புவ' (தாழ்வாரம்) போன்ற ஒல்லாந்த மொழியைச் சேர்ந்த சொற்கள் சிங்கள, தமிழ் மொழிகளில் கலந்து வழங்கப்படுவது குறிப்பிடத்தகும்.

ஒல்லாந்தரது ஆட்சியிலும் பலாத்காரமான முறைகளில் மதமாற்றங்கள் நிகழ்ந்தன. கலாசாலைகளிலும், அகதிகளின் விடுதிகளிலும் (Orphanages) மதப் பிரசாரம் நடத்தப்பெற்று வந்தது. அவர்கள் புரட்டசுதந்துகளாகையால், கத்தோலிக்கரைப் பெரிதும் துன்புறுத்தினர். கத்தோலிக்க குருமார்களுக்குப் பிரசார உரிமையும் தொழுகைச் சுதந்திரமும் மறுக்கப்பட்டது. ஒல்லாந்

தரது மதப் பிரசாரத்தின் பயனாகச் சிங்கள மொழியிலும் தமிழிலும் சுவிசேசங்களும் புதிய ஏற்பாடும் செப மாலைக் கொத்தும் மொழிபெயர்க்கப்பட்டுப் புத்தகங்கள் அச்சிடப்பட்டன. அதனால் இந்த மொழிகளில் புதியதொரு எளிய வசனநடை இலக்கியம் விரைவில் உருவாகியது.

### வினாக்கள்

1. ஒல்லாந்தர் வசமிருந்த பிரதேசங்கள் யாவை? அவை எவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தன?
2. இராச்சியப் பிரிவுகளை எவ்வாறு ஆள்வதற்கு ஏற்பாடு செய்திருந்தனர்?
3. ஒல்லாந்தரின் நோக்கங்கள் யாவை?
4. கறுவா பெறுவதற்காக எத்தகைய நிருவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது?
5. கல்வியும் மதப் பிரசாரமும் ஒல்லாந்தர் ஆட்சியில் எப்படி இணைக்கப்பட்டிருந்தன?
6. ஒல்லாந்தர் செய்திருந்த வரிவசூல் ஏற்பாடுகள் யாவை?
7. டச்சுத் ‘தோம்புகள்’ எப்படி பயன்படுகின்றன?
8. ‘ஒல்லாந்தரால் இலங்கையில் நேர்ந்த மாறுதல்கள்’ அல்லது ‘ஒல்லாந்தர் நிருவாகமும் போர்த்துக்கீசர் ஆட்சியும்’—இதுபற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.

### பயிற்சி

இலங்கைத் தேசப்படத்தில் ஒல்லாந்தர் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளையும், இராச்சியப் பிரிவுகளையும் தெளிவாகக் குறிக்க.

# 18. ஆங்கில ஆட்சியின் ஆரம்பம் (1796–1798)

முதன்முதலாக இலங்கைத் தீவை வந்தடைந்த ஆங்கிலேய வியாபாரி **இரால்ப் பிட்ச்** என்பவராவர். அவர் 1558-ல் கொழும்புத் துறைமுகத்தில் சில நாட்கள் தங்கியிருந்துவிட்டுச் சென்றபொழுது, 'இலங்கை வளம் மிகுந்த நாடு; ஆயினும் இங்குள்ள அரசனுக்கும் போர்த்துக்கீசருக்கும் இடைவிடாது போர் நிகழ்வதால், பெரும் துன்பம் விளைகின்றது' என்று குறிப்பிட்டுள் ளார். அவருக்குப் பிறகு, இலங்காசுடர் என்ற ஆங்கில மாலுமி காலித் துறைமுகத்தில் தங்கியிருந்து சென்ற தாகவும் ஒரு வரலாறு உண்டு. பின்னர் **அண்ட்ரூ** என்ற ஆங்கில நாட்டுப் **பிரான்சிசுத்** துறவி சிலகாலம் இலங் கையை உறைவிடமாகக் கொண்டிருந்தார். 1659-ல் உடைந்த கப்பலொன்றிலிருந்து தப்பி வந்து கற்பிட்டி யில் கரையேறிய பதின்மூன்று ஆங்கிலப் பிரயாணிகள் உடனே கண்டிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அரச ஞன இராசசிங்கன் அவர்களை உபசரித்தனனாயினும், தனது நாட்டினின்றும் வெளியேற அனுமதிக்கவில்லை. மறு ஆண்டில், கொட்டியாரத்தில் நங்கூரம் பாய்ச்சி நின்ற ஒரு பிரித்தானியக் கப்பலின் மாலுமிகளைக் கண்டி நாட்டுத் திசாவை வற்புறுத்தி இராசதானிக்கு அழைத் துச் சென்றான். அங்கு மாலுமிகளின் தலைவனான **ரொபர்ட் நொக்சும்** அவனது புதல்வனான (இளைய) ரொபர்ட் நொக்சும் வேறு சிலரும் சொல்லொணாத துன் பங்களுக்கு ஆளாகினர். வயது முதிர்ந்த தந்தை இறந்துபட்டதும், பதினெட்டு ஆண்டுகள் சிறைவாசத் திற்குப் பின்னர், (இளைய) நொக்சு சிறையினின்றும் தப்பிச் சென்று, ஒல்லாந்தரிடம் அடைக்கலம் புகுந்து, 1679-ல் பத்தேவியாவை அடைந்து, அங்கிருந்து நாடு

திரும்பினுன். தனது பிரயாணக் குறிப்புக்களையும், சிறை அனுபவங்களையும், கண்டி நாட்டிலுள்ள நிலைமையையும் வருணித்து அவன் எழுதிய நூல், ஆங்கிலேயரை இலங்கை நாட்டின்பால் நாட்டம் கொள்ளச் செய்தது.

பின்னர்த் தென்னிந்தியாவில் சென்னை முதலிய இடங்களில் பண்டகசாலைகளை நிறுவியிருந்த ஆங்கிலக் கிழக்கிந்திய வியாபாரச் சங்கம், போர்த்துக்கீசரையும் ஒல்லாந்தரையும்போலத் தானும் இலங்கையின் கறுவா வியாபாரத்தில் கருத்தூன்றியது. ஆனால், சென்னை அரசாங்கம் அனுப்பிய யோன் பைபசு என்ற தூதுவர் 1762-ல் கண்டிக்குச் சென்று கீர்த்தி ஸ்ரீயையும் அவனது நாயக்கப் பிரதானிகளையும் சந்தித்தனராயினும், அந்தச் சந்திப்பினுல் பலன் ஒன்றும் விளையவில்லை. பிறகு, அமெரிக்கச் சுதந்திரப்போர் நிகழ்ந்தபொழுது, ஒல்லாந்தர், "ஆங்கிலேயர் தமது கப்பல்களைச் சோதிக்கலாகாது," என்று கூறியமையால், இரு நாட்டினருக்குமிடையே போர் தொடங்கியது. முதன் முதலாக, இலங்கை நாட்டில் ஆங்கிலேயர் அரசியல் நோக்கத்தோடு போர் புரிந்தது இந்தச் சந்தர்ப்பத்திலேயே ஆகும். 1782-ல் அவர்களது கடற்படை திரிகோணமலையைக் கைப்பற்றியது. அப்போது மீண்டும் அவர்களாற் கண்டிக்குத் தூது அனுப்பப்பட்டது. ஆனுல், கண்டியிலிருந்த அரசன் இராசாதி ராசனும் அதிகாரிகளும் ஆங்கிலேயர்களின் நோக்கங்களைச் சந்தேகித்தமையால், தூது பயன்பெறவில்லை. திரும்புகையில், தூதுவரான பாய்டு பிரான்சுக்காரரால் சிறை பிடிக்கப்பட்டார். பிறகு திரிகோணமலையையும் பிரான்சுக் கடற்படை கைப்பற்றி, ஒல்லாந்தருக்களித்தது.

இவ்வாறு, ஆங்கிலேயர் கண்டியரசனுடன் அரசியல் தொடர்பு கொள்ளவும், இலங்கையில் வியாபார உரிமை பெறவும் செய்த முயற்சிகள் தொடக்கத்தில்

பயனளிக்கவில்லை. ஆனால், விரைவில் ஐரோப்பாவில் நேர்ந்த அரசியல் மாறுதல்கள் அவர்களுக்குத் துணை புரிந்தன. 1794-ம் ஆண்டில் பிரஞ்சுப் புரட்சிப் படைகள் காலந்து நாட்டில் புகுந்து, அங்கிருந்த சுடாத் கோல்டரை (அதிபதியை)த் துரத்திவிட்டு, 'பத்தேவியன் குடியரசை' நிறுவின. ஆங்கிலக் கம்பெனியாருக்கு இதுவே தகுந்த வாய்ப்பாயிற்று. அவர்கள் இலங்கையிலுள்ள ஒல்லாந்தரின் குடியேற்றங்கள் பிரஞ்சுக்காரர் வசமாகிவிடாதவாறு தடுப்பதாகவும், போர் முடிந்ததும் திருப்பித் தந்து விடுவதாகவும் கூறி, அவற்றைப் பெறும் பொருட்டு சுடாத் கோல்டரிடமிருந்து அனுமதிப் பத்திரம் பெற்றனர். ஆனால், இலங்கையிலிருந்த ஒல்லாந்தர் முதலில் ஆங்கிலேயரின் துணையை வரவேற்றனராயினும், பின்னர் தமது நாட்டுக் குடியரசின் ஆணையையே பின்பற்றப் போவதாகக் கூறினர். அதனால், ஆங்கிலக் கடற்படை, தாக்குதலைத் தொடங்கியது. 1795-ல் முதன்முதலாக திரிகோண மலையும், பிறகு முல்லைத்தீவு, கற்பிட்டி, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம், மன்னார் முதலிய கோட்டைகளும் கைப்பற்றப்பட்டன. இறுதியில், கொழும்புத் துறைமுகமும் 1796-ம் ஆண்டுத் தொடக்கத்தில் ஆங்கிலேயர் வசமாயிற்று. இடையில், கண்டிக்கு அண்ட்ரூசு என்பவர் தலைமையில் சென்ற தூது எத்தகைய இலாபமுமடையாமல் திரும்ப நேர்ந்தது. ஆயினும் கண்டியரசர் சென்னை அரசாங்கத்தினரிடம் தூது அனுப்பி உடன்படிக்கை செய்து கொள்ள ஒருப்பட்டார். அந்தத் தூதின் பலனாகக் கண்டியரசர் வருடந்தோறும் பத்துக் கப்பல்கள் நிறையப் பண்டங்கள் அனுப்பிச் சுயேச்சையாக வியாபாரஞ் செய்து கொள்ளலாமென்றும், ஒல்லாந்தரை முடிவாகத் துரத்திய பிறகு அரசனிடமிருந்து ஒல்லாந்தர் அநீதியாகப் பறித்த இடங்களைத் திருப்பித் தருவதுடன் கடற்கரைப் பிரதேசத்திலும் ஒரு பகுதியை மீனும் உப்பும் பெறுவ

தற்காக ஒப்படைப்பதென்றும் சென்னை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

1795-ல் கோட்டைகளைக் கைப்பற்றும்பொழுதே, இலங்கையி லெத்தகைய அரசாங்கத்தை நிலைநிறுத்துவ தென்ற பிரச்னை எழுந்தது. இலங்கைக்குப் படைகளை அனுப்பியது ஆங்கில வியாபார சங்கத்தின் பிரதி நிதியான சென்னைத் தேசாதிபதியெனினும், ஆங்கில மந்திரி சபையே சுடாத் கோல்டரிடமிருந்து கோட்டை களைக் கைப்பற்ற அனுமதி பெற்று, திமூரானின் படை களை விலக்கவும் முயற்சி எடுத்தது. ஆகையால், மந்திரி சபையினரே இலங்கையில் ஒரு நிர்வாகத்தை நிறுவி யிருக்கலாம். ஆனால், போர் முடிந்ததும் இலங்கையி லுள்ள கோட்டைகள் ஒல்லாந்தருக்குத் திருப்பியளிக்கப் படலாம் என்ற எண்ணத்தினால், மந்திரிசபையினர் இது குறித்துச் சிறிதும் சிரத்தை கொள்ளவில்லை. எனவே, சென்னை அரசாங்கம் தானே இலங்கையில் ஓர் ஆட்சி முறையை நிறுவியது. போரினால் நேர்ந்த செலவுகளை விரைவில் ஈடு செய்துகொள்ளவேண்டுமென்னும் ஒரே நோக்கத்துடன் இந்தப் புதிய நிருவாகம் ஏற்படுத்தப் பட்டமையால், வரி வசூலிப்பதிலேயே கண்ணுங் கருத்து மாக இருந்தது.

1795-ம் ஆண்டில் ஒல்லாந்தரின் கோட்டைகள் கைப்பற்றப் படும்பொழுது நிருவாக மாற்றம் வேண்டு மென்பதற்காக, **யோம்சு இசுடுவர்ட்** என்ற ஆங்கிலப் படையின் பிரதம தளபதியே சிவில் (பொது நிருவாகம்) அதிகாரமும் பெற்று தேசாதிபதியாக விளங்கலானார். அதனால், முதலில் நிருவாக அமைப்பு இராணுவத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. திரிகோணமலை, யாழ்ப்பாணம், கொழும்பு முதலிய கோட்டைகளிலுள்ள தளபதிகள் சுற்றுப்புறத்திலுள்ள பிரதேசங்களின் நிரு வாகத்தை ஏற்றுக்கொண்டனர். இந்த அரசாங்கத்தின் கீழ்ச் சகல மதத்தினருக்குமிடையே அமைதி உண்டாக்கப்

பட்டு, கத்தோலிக்க குருமாருக்கும் பிரசார சுதந்திரம் அளிக்கப்பட்டது. இத்தகைய இராணுவ தேசாதிபதி (Military governors) களின் நிருவாகம் நான்கு ஆண்டுகள் நீடித்தது. இசுடுவேர்ட்டுக்குப் பிறகு முறையே **எல்லிசு டோய்ல்** (1797), தளபதி **பிரடரிக் தி மூரான்** (1798) என்பவர்கள் இந்தப் பதவியைத் திறம்பட வகித்தனர்.

மேற்கூறியவாறு, ஐரோப்பியப் போர் முடிவதற்குள்ளாக இலங்கைப் பிரதேசங்களிலிருந்து எத்துணை வரித்தொகையை விரைவாகத் திரட்டக்கூடுமோ அவ்வளவையும் திரட்டுவதொன்றே இந்த அரசாங்கத்தின் நோக்கமாகையால், நிதி நிருவாக முறையைப் புரட்சிகரமாக மாற்றியமைத்து, புதிய ஏற்பாடுகள் பலவும் செய்தனர். சென்னை அரசாங்கத்தைச் சேர்ந்த **ருேபர்ட் அண்ட்ரூசு** வரிவசூல் **மேற்பார்வையதிகாரியாக** (Superintendent of Revenue) நியமிக்கப்பட்டார். அவருக்கு உதவியாக யோன் செர்விசு என்பவரும், பல 'வரி அறவிடும் அதிகாரி' களும் (கலெக்டர்கள்) நியமனம் பெற்றனர். தீவின் கடற்கரைப் பிரதேசம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பெற்று, மூன்று 'கலெக்டர்'களின் மேற்பார்வையில் வரித்தணிக்கை நடைபெற்றது. கிழக்கில், திரிகோணமலையைத் தலைமையிடமாகக் கொண்டு, முல்லைத் தீவு முதல் மட்டக்களப்பு வரையிலுள்ள பகுதியை ஒரு 'கலெக்டர்' கண்காணித்து வந்தார். இவ்வாறே யாழ்ப்பாணப் பகுதி (மன்னூர், கற்பிட்டி வரை)யில் வேருெரு கலெக்டரும், கொழும்புப் பகுதி (சிலாபம் முதல் மாத்தறை வரை)யில் மற்ருெருவரும் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் சென்னை அரசாங்கத்தில் நிருவாக அனுபவம் பெற்றவர்கள்.

வரிவசூல் முறை முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டது. தென்னிந்தியாவினின்றும் திறையிறுக்கும் உத்தியோகத்தர்கள் தருவிக்கப்பட்டமையால், அவர்கள்

அமீல்தார், கொத்தவால், குமாசுதா என்ற இந்தியப் பட்டங்களால் அழைக்கப்பட்டனர். திறையிறுக்கும் அதிகாரிகளின் காரியாலயங்கள் கூடக் 'கச்சேரிகள்' என்னும் இந்தி மொழிச் சொல்லால் வழங்கப்பட லாயிற்று. இக்காரணத்தினுல் சிங்கள அதிகாரிகளான திசாவைமார், விதானைகள், முதலியார்கள் என்போரின் அதிகாரம் அறவே ஒழிந்தது. 'நிலம் வைத்துக்கொண் டிருப்போர் அரசாங்கத்திற்குச் சேவை புரிதல்' என்னும் பண்டைய வழக்கமும் அழிக்கப்பட்டு, 'வரிகளை ரொக்கப் பணமாகவே தருதல் வேண்டும்' என்ற நிபந்தனை தோன்றியது.

புதிய முறைகளால் நிருவாகம் சீர்திருத்தப்பட்ட தெனினும், சென்னை அரசாங்கத்தினருக்கு இலங்கை மக்களின் பழக்கவழக்கங்கள் தெரியாதாகையாலும், தாம் இலங்கையில் நிலைத்திருப்போமென்ற எண்ணம் இல்லாத தாலும், பல தீமைகள் தோன்றவும் இடமுண்டாயிற்று. புதிதாக வந்த அமீல்தார்களும் மற்ற அதிகாரிகளும் சுய நலம் மிகுந்து, சொந்த நன்மைக்காகப் பணம் திரட்டுவ தில் ஈடுபட்டனர். வரித்தொகையில் ஒரு பகுதியையே அரசாங்கத்திற்கு அளித்து மிகுதியைத் தாமே எடுத்துக் கொள்ளவும் இவர்களுக்கு வாய்ப்பு இருந்தது; ஏனெனில், வரியை அறவிடுவதற்கும் இவர்களுக்கு உரிமை இருந்த மையால், அதனை மனம் போனவாறு செய்துவந்தனர். இந்த அமீல்தார்களுக்கு நியாய விசாரணை புரிய வும் அதிகாரம் இருந்தமையால், குடிகளைப் பலவாறு துன்புறுத்துவதற்கும் இவர்களுக்கு நல்ல வாய்ப்பு இருந்தது.

மேலும், முத்துக்குளித்தல் போன்ற தொழில்களால் வந்த வருமானத்திலும் பெரும்பகுதியை யோன் செர்விசு போன்ற பெரிய அதிகாரிகள்கூடக் கள்ளத்தன மாகப் பெற்றுக்கொண்டிருந்தனர். அன்றியும், இலங்கை யர் பரம்பரையாகப் பல நூற்றுண்டுகளாய், நிச்சயிக்கப்

பட்டிருந்த திறையைத் தானியங்களாகவும் மற்றப் பொருள்களாகவும் கொடுத்து வருவது வழக்கம். ஆனால், புதிய அரசாங்கத்தினர் திறையின் அளவை மாற்றியதோடல்லாமல், ரொக்கப் பணமாக அதனைக் கொடுக்க வேண்டுமெனக் கூறிவந்தனர். இதனால் குடிகள் பெரிதும் துன்புறலாயினர். 1796-ல் அரசாங்கத்திற்குச் சேவை புரியும் வழக்கமும் நீக்கப்பட்டமையால், திறைக்குப் பதிலாகச் சரீர ஊழியத்தால் மக்கள் சுலபமாக அரசாங்கத்தாருக்கு உதவியளித்துவிட்டு நிலங்களைப் பயிரிட்டு உண்பதற்கு மார்க்கம் இல்லாமற் போயிற்று.

இவையன்றியும், ஒல்லாந்தரைப் போல விவேகத்துடன் பண்டைய பழக்க வழக்கங்களையும் பரம்பரையாக வேலை பார்த்து வரும் பிரதானிகள் முதலிய சிங்கள அதிகாரிகளையும் புதிய அரசாங்கம் அனுசரித்து நடக்கவில்லை. அதற்கு மாறாகப், பெரும்பாலும் அயல் நாட்டிலிருந்து வந்தவர்கள் திறை இறுக்கும் கடமையைப் புரிந்தனர். இதனால், அதிருப்தியுற்ற சிங்களவரை மேலும் கிளர்ச்சி புரியுமாறு தூண்டிவிடுவதையே வேலையிலிருந்து நீக்கப்பெற்ற விதானைமாரும், அதிகாரிகளும், முதலியார்களும் தமது கடமையாகக் கொண்டனர்.

இவ்வாறு இலங்கை மக்களிடையே வெறுப்பு உணர்ச்சி வளர்ந்து வருகையில், ஒல்லாந்தரைச் சார்ந்தவர்களால் 'ஆங்கிலேயர் இலங்கையினின்றும் பிரஞ்சு கடற்படையால் துரத்தப்படுவர்' என்ற வதந்தி பரப்பப்பட்டது. அதனாற் றுணிச்சலடைந்த மக்களை, 1796-ஆம் ஆண்டு புரட்டாதியில் புதிதாக விதிக்கப்பெற்ற தென்னைமர வரி மேலும் ஆத்திரமடையச் செய்தது. இதன் பிரகாரம், ஒவ்வொரு தென்னைமரத்தின் பலனை அனுபவிப்பதற்காக ஒரு வெள்ளிப் பணம் வீதம் அரசாங்கத்திற்கு மக்கள் திறை செலுத்த நேரிட்டது. பல இடங்களில் மரத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைவிட வரிப்பணம்

அதிகமாக இருந்தமையால், மக்கள் கிளர்ச்சி புரியலாயினர். படைத்துணை இல்லாமல் இந்த வரியைப் பெற முடியாதென்று அறிந்த **டோய்ல்** (தேசாதிபதி) 1797-ல் வரியைத் தாற்காலிகமாக நீக்கிவிட்டுச் சென்னை அரசாங்கத்திற்கும் நிலைமையை அறிவித்தார்.

இதற்கிடையே, சென்னைத் தேசாதிபதியான **கோபார்ட் பிரபு** இலங்கைக்கு விஜயம் செய்து நிலைமையை உணர்ந்திருந்தாராகையால், அமீல்தார்களின் கொடுமைகளைப் பற்றியும் நிருவாக நிலைமை பற்றியும் திறை இறுப்பது குறித்தும் நன்கு விசாரணை செய்யுமாறு, தளபதி **டீ மூரான்** தலைமையின்கீழ் ஒரு பரிசீலனைக் குழுவை அனுப்பினர். அந்தக் குழுவினர், இலங்கையரை நீதிபதிகளாக நியமனம் செய்ய வேண்டுமென்றும், சென்னையிலிருந்து சென்ற வரி உத்தியோகத்தர் பலரையும் திருப்பி அழைக்க வேண்டுமென்றும், நீதி விசாரணையும் வரி வசூலிப்பதும் ஒரே அதிகாரியால் நிருவகிக்கப்படலாகாதென்றும் தீர்மானித்தனர். மேலும், **டீ மூரான்** விரைவில் தேசாதிபதியாகவே நியமிக்கப்பட்டமையால், அவர் ஒல்லாந்தரைப் போன்று பழைய கிராம அதிகாரிகளையும் முதலியார்களையும் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்வதாகவும் பழைய பழக்கவழக்கங்களை மதித்துத் திறை இறுப்பதாகவும் உறுதி கூறி 1798-ல் ஒரு பிரகடனம் வெளியிட்டார். இந்த நிலையில், ஆங்கில நாட்டிலும் இலங்கை அரசாங்கம் பற்றிப் புதிய கருத்துகள் தோன்றிவிட்டன. மந்திரிசபையினர் இலங்கை அரசாங்கத்தைத் தாங்களே கவனிப்பதென்றும், வர்த்தக சங்கத்தினரிடமிருந்து ஆங்கில அரசருக்கே இலங்கை ஆதிபத்தியத்தை மாற்றுவதென்றும் தீர்மானித்து, அதை நிறைவேற்ற **பிரடரிக் நோர்த்** என்பவரைத் தேசாதிபதியாக (தாங்களே) அனுப்பிவைத்தனர். இவ்வாறு, 1798-ல் இலங்கையின் நிருவாகமுறை மீண்டும் மாறுதலடைந்தது.

### வினுக்கள்

1. முதன்முதலாக இலங்கையைக் கண்டறிந்த ஆங்கிலேயர் சிலருடைய பெயர்களைக் குறிப்பிடுக.

2. (இளைய) றெபர்ட் நொக்சு எத்தகைய அனுபவங்கள் அடைந்தான்?

3. எக்காரணங்களினுல் தொடக்கத்தில் ஆங்கிலத் தூதுக்கள் கண்டியரசர்களிடம் எவ்வித சமாதானமும் செய்துகொள்ள இயலாமற்போயிற்று?

4. கண்டியரசருடன் ஆங்கிலேயர் 1795-ல் செய்துகொண்ட ஏற்பாடு யாது?

5. சென்னை அரசாங்கம் எத்தகைய நோக்கத்துடன் நிருவாக அமைப்பை உண்டாக்கியது?

6. புதிய நிருவாக அமைப்பை விளக்கி அதன் குறைகளையும் சுட்டிக்காட்டுக.

7. சிங்கள மக்கள் ஏன் கலகம் புரிந்தனர்? அதன் விளைவாக நேர்ந்த மாறுதல்கள் யாவை?

8. டீ மூரான் கூறிய உறுதிமொழி யாது?

9. 1798-ல் நேர்ந்த அரசியல் மாறுதல் யாது?

## 19. கண்டி இராச்சியப் போர்

ஒல்லாந்தரது ஆட்சியில் இருந்தவாறே பிரித்தானியர் ஆட்சியிலும் கண்டியரசருக்கும் பிரித்தானியருக்கும் பகைமை வளர்ந்து, இறுதியில் போராட்டமும் நடைபெற்றது. சுமார் முப்பது ஆண்டுகளாக அவர்களிடையே விரோதம் வளர்ந்து கண்டி இராச்சியம் எவ்வாறு ஆங்கில ஆதிபத்தியத்தி லிடம்பெற நேர்ந்தது என்னும் வரலாற்றை ஆராய்வோம்.

ஆங்கிலேயர் ஒல்லாந்தரது பிரதேசங்களைக் கைப்பற்றி ஆட்சி புரியத் தொடங்கியபொழுது, கண்டி இராச்சியத்தி னுண்மையான நிலை பற்றியும், அதன் அரசருக்கும் ஒல்லாந்தருக்குமிடையே 1766-ம் ஆண்டில் ஏற்பட்ட உடன்படிக்கையின் விவரங்கள் பற்றியும் அவர்

கள் ஒரு சிறிதும் அறிந்திருக்கவில்லை. இக்காரணத்தினுல், ரெபர்ட் ஆண்ட்ரூசு போன்றவர்கள் கண்டியரசருடன் எப்படியும் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்ற ஆவலுடனிருந்தார்கள் ; அவ்வாறு செய்துகொள்ளாவிடில், கறுவாவும் மற்ற வியாபார உரிமைகளும் பெறமுடியாது என்றே அவர்கள் நினைத்



படம் 27. ஸ்ரீ விக்ரம இராசசிங்கன்

துக் கொண்டிருந்தனர். எனவே, அண்ட்ரூசு 1796-ஆம் ஆண்டு ஆடி மாதத்தில் கண்டி நகரத்திற்கு இரண்டாம் முறையாக விரைந்து சென்று, அரசனது தூதர்கள் சென்னையில் ஏற்றுக்கொண்ட உடன்படிக்கையை ஏற்கு மாறு அரசனை இராஜாதிராஜனை வற்புறுத்தினுர். அந்த உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டிருந்தால், கண்டி

யரசாங்கம் மேலும் வலிமை பெற்றிருக்கும். அவர்களுக்குக் கடற்கரைப் பிரதேசத்தில் ஒரு பகுதியும், வியாபார உரிமையும், வெளி உலகத்துடன் தொடர்பும் கிடைத்திருக்கும், ஆனல், அரசனும் அவனது பிரதானிகளும் பிரித்தானியர் அஞ்சுவதாகக் கருதி, மேலும் பல உரிமைகளேயும் பெறமுயன்றனர். ஒல்லாந்தரின் நண்பர்களாக இருந்தவர்கள் எவ்வாறேனும் இத்தகைய தொடர்பை முறித்துவிடவேண்டும் என்ற எண்ணத்துடன், பிரித்தானியரைத் துரத்தும் பொருட்டுப் பிரான்சுக் கடற்படை வருவதாகப் பொய் வதந்திகளேப் பரப்பினர். அண்ட்ரூசு, அரசன் திட்டமான பதிலொன்றும் கூருமையால், ஏமாற்றமடைந்து திரும்ப நேரிட்டது. ஆனல், பிற்காலத்தில் நிகழ்ந்தவைகளே மனதிற் கொண்டு ஆராயும்பொழுது, அந்த உடன்படிக்கை நிறைவேருமலிருந்தது பிரித்தானியருக்கே நன்மை பயந்தது என்பதையும், உண்மையில் அந்த நிபந்தனைகளே ஏற்காததால் கண்டியரசர்களே நட்டமடைந்தனரென்பதையும் தெளிவாக அறியக்கூடும்.

அண்ட்ரூசு திரும்பிய பிறகு, கண்டியில் நாயக்கருக்கும் சிங்களவருக்குமிடையே பெரும் பகைமை மூண்டது. சிங்களப் பிரதானிகளுக்கு இப்போது திறமை மிக்க தலேவன் ஒருவன் கிடைத்திருந்தான். 'பிரதான அதிகாரி'யாக வேலே பார்த்து வந்த பிலிமத்தலாவையே அவன். சூழ்ச்சித் திறனிலும், இராச தந்திரத்திலும் இணேயற்று விளங்கிய அவன், செல்வமும் செருக்கும் உள்ளவனுய் வாழ்ந்தான். அவனுக்குத் தானே அரசபதவியைப் பெறவேண்டும் என்ற நோக்கமும் இருந்தது. அவன் இரு மாகாணங்களுக்குத் திசாவையாகவும், அவனது சுற்றத்தார்களும் திசாவைமாராகவும், அதிகாரிகளாகவும் வேலே பார்த்தனராகையால், அவனது பகைவரான மற்றத் திசாவைமாரும் நாயக்கர்களும் பெரிதும் பொருமை கொண்டனர். அப்

போது, 1798-ல் தாழ்நிலப் பிரதேசத்திற் பல கிளர்ச்சிகள் தோன்றின; உடனே பிலிமத்தலாவை இராசாதிராசசிங்கனைப் பதவியினின்றும் நீக்கினன். பதவியை இழந்த மன்னன், தனக்குப் பதிலாகப் புதிய அரசன் ஒருவனை நியமிக்கும்வரைத் தனது மைத்துனனை முத்துசாமியை நியமிக்குமாறு கூறினன். ஆனால், பிலிமத்தலாவை அரசராக எவரையும் நியமிக்காமல், 'பிரதான அதிகாரி' என்ற முறையில் ஆட்சி நடத்தி வந்ததோடு, தானே அரச பதவியை அடைவதற்கும் சமயம் பார்த்திருந்தான். அவனை மற்றத் திசாவை மாரும் நாயக்கரும் இடைவிடாது எதிர்த்தமையால், 1798-ஆம் ஆண்டு ஆடி மாதத்தில் அரசன் இறந்ததும், அவனது உறவினரில் ஒருவனாகிய கண்ணுச்சாமி என்பவனைத் தேர்ந்தெடுத்து, '**விக்கிரமராசசிங்கன்**' என்னும் பெயருடன் சிம்மாசனமேறச் செய்தான். விக்கிரமன் பட்டம் பெற்றதும் பிரதான அதிகாரியின் பகைவர்களை அழிக்க முயலவே, நகரத்தில் குழப்பந் தோன்றிப் பலரும் உயிரிழக்க நேரிட்டது. இராசாதிராசனின் மைத்துனர்கள் பலரும் தாமே ஆட்சி உரிமை வாய்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு, ஆங்கிலேயரிடம் அடைக்கலம் புகுந்தனர். அவ்வாறு சரண் புகுந்தவர்களில் யாழ்ப்பாணத்தில் சென்று தங்கிய முத்துச்சாமியும் ஒருவன். இந்த நிலையிலும், ஆங்கிலேயர் கண்டி விவகாரங்களில் தலையிடாமல் பொறுத்திருந்தனர்.

அவர்களுக்கு முன்பாகத், தானே ஆங்கிலேயரின் ஆதரவைப் பெற்றுவிடவேண்டுமென்று விரும்பிய பிலிமத்தலாவை, சீதவாக்கைக்குச் சென்று தேசாதிபதி நோர்த்தைச் சந்தித்தான். அப்போது விக்கிரம ராசசிங்கன் பிலிமத்தலாவையின் சூழ்ச்சிகளைக் கண்டு வெறுப்புற்று, அவனது பகைவருடன் உறவு கொண்டான். அதனால் கோபமடைந்த தலாவை, 'ஆங்கிலேயர் தனக்குப் படை உதவி தந்தால், தான் ஆட்சியைக் கைப்

பற்றி அவர்களுக்குக் கண்டியில் வியாபார உரிமைகளும், அரசியல் உரிமைகளும் வழங்குவதாகக் கூறலானுன். அதை ஆங்கிலேயர் ஏற்காவிடினும், நிலைமையை அறிந்து வருவதற்காகத் தளபதி மக்டோவல் தலைமை யில் ஒரு தூது அனுப்பப்பட்டது. அந்தத் தூதினுல் வேறு பயனென்றும் ஏற்படாவிடினும், அதிகாரியான தலாவையின் நிலைமையும், அவனை எதிர்த்து நின்ற மற்றச் சிங்களத் தலைவர்கள், நாயக்கர் போன்றவர்களின் நிலைமையும் தெளிவாயிற்று. தனக்கு விரைவாக உதவி கிடைக்காமற் போனது குறித்து வருந்திய பிலிமத் தலாவை, வேருெரு சூழ்ச்சியிலிறங்கினுன்; கண்டியரச னுக்கும் பிரித்தானியருக்குமிடையே பகைமை உண் டாக்குவதற்குப் பெருமுயற்சி செய்தான்.

1802-ஆம் ஆண்டில், புத்தளத்திலிருந்து கண்டிக்கு உப்பு, மீன், புகையிலை முதலியன எடுத்துச் சென்று அவற்றை விற்ற பிறகு பாக்கு வாங்கிக் கொண்டு திரும்பிய இசுலாமிய வியாபாரிகள் தடுக்கப்பட்டனர். பிரதான அதிகாரியின் உத்தரவால் அவர்களிடமிருந்த பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவர்கள் ஆங்கிலேயரின் குடிகளாதலால், தேசாதிபதி நோர்த் உடனே கண்டியரசருக்குத் தெரிவித்து நிகழ்ந்தவை களுக்குப் பரிகாரம் தேடுமாறு கேட்டுக்கொண்டார். ஆனுல், கண்டியரசாங்கம் அவரது வேண்டுகோளுக்குச் செவிசாய்க்காது போகவே, நோர்த் கோபமடைந்து, கண்டியி னியற்கை அரண்களையும் பற்றி யோசியாமல் உடனே படை எடுப்புக்கு ஆயத்தம் செய்தார்.

மக்டோவல் தலைமையின்கீழ் ஒரு படை 1803-ல் கொழும்பிலிருந்து சென்று, தம்பதேனி, கலகெதரை மார்க்கமாகக் கண்டியை அடைந்தது. மற்ருேர் படை திரிகோணமலையினின்றும் வதுளை வழியாக முன்னேறி நகரத்தினுள் பிரவேசித்தது. அரசனும் மற்றவர்களும் நகரத்தை விடுத்து வெளியேறினர். உடனே நகரத்தை

ஆக்கிரமித்துக் கொண்ட ஆங்கிலேயர், தம்மிடம் அடைக்கலம் புகுந்திருந்த முத்துச்சாமியை அரசனுக்கினர்; அவனுடன் ஓர் உடன்படிக்கையும் செய்து கொண்டனர். அதன் பிரகாரம் ஆங்கிலேயர் சப்த கோறளைப் பிரதேசத்தையும் கொழும்பிலிருந்து திருக்கோணமலைக்குக் கற்பாதை அமைப்பதற்கான பிரதேசத்தையும் பெற்றுக் கொண்டனர். ஆங்கிலத்தானீகர் (Resident) ஒருவரைக் கண்டியில் நியமிக்கவும், ஆங்கிலேயர் கறுவா வியாபார உரிமை பெறவும் ஏற்பாடாயிற்று. இந்த நிலையில், பிலிமத்தலாவை அரசனைச் சிறை பிடித்துத் தருவதாகவும் தன்னை அரசனுக்க வேண்டுமென்றும் கூறலானுன். அவனுடைய படைகள் பல இடங்களில் கொள்ளையடித்தும் தாக்கியும் துன்பம் விளைத்தன. உடனே பிலிமத்தலாவையுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளத் தேசாதிபதி நோர்த் முற்பட்டார். பழைய அரசனைக் கைது செய்து அனுப்புவதாய் பிலிமத்தலாவை ஒப்புக்கொண்டமையால் அவனை அரசனுக்கிவிட்டு முத்துச்சாமிக்கு உபகாரச் சம்பளம் அளிப்பதற்கு ஆங்கில அரசாங்கம் உடன்பட்டது. இவ்வாறு நோர்த் தேசாதிபதி சில இலாபங்களை உத்தேசித்துத் தமது முந்தைய கொள்கைகளை மாற்றிக்கொண்டது, அவரது பலவீனத்தைக் குறிக்கின்றது.

அப்போது படைவீரரும் மக்டோவல் முதலிய தளபதிகளும் காட்டுச் சுரத்தால் பீடிக்கப்பட்டு நலிவடைந்ததால், இறுதியிற் றளபதி டேவி தலைமையின்கீழ் ஒரு சிறு படைமட்டுங் கண்டியில் நிறுத்தப்பட்டிருந்தது. பிரதான அதிகாரியின் சூழ்ச்சியால் சிங்களப் படைகள் அதனைச் சூழ்ந்து கொண்டு தாக்கின. இறுதியில் ஆங்கிலப் படை சரணடைந்து, அரசன் முத்துச்சாமியுடன் திரிகோணமலைக்குப் போய்விட எத்தனித்தது. மீண்டும் பழைய அரசனது படைகள் நான்கு புறமும் சூழ்ந்து தாக்கிய வண்ணமிருந்தமையால்,

ஆங்கில வீரர் பலரும் கொல்லப்பட்டனர். முத்துச்சாமியும் அவனைச் சேர்ந்தவர்களும் இரக்கமின்றி வதைக்கப்பட்டனர். இறுதியில், டேவியும் வேறு மூவரும் சிறையில் வாட நேர்ந்தது. இவ்வாறு, ஆங்கிலேயரின் ஆதிக்கம் நொடிப்பொழுதில் கண்டி நாட்டினின்றும் மறைந்தது.

பிறகு நாடெங்கும் கலகங்களைத் தடுக்கவும் கண்டியை மீண்டும் தாக்கவும் படைகள் இந்தியாவினின்றும் வருவிக்கப்பட்டன. கண்டி நாட்டை வளைத்து ஆங்கிலப் படைகள் தாக்கினவாயினும், அதனால் பெரும் பயன் ஒன்றும் விளையவில்லை. ஆங்கில நாட்டிலும் அரசாங்க சபையிலும் நோர்த்தின் அரசாங்கத்தை மக்கள் குறை கூறினர். இடையே, பழைய அரசனை விக்கிரம சிங்கனுடன் ஒருவாறு 1805-ல் சமாதானம் செய்துகொள்ளப்பட்டது. தேசாதிபதி நோர்த்தின் தவறான கொள்கையாலும், அவசர புத்தியாலும் இத்தகைய நிலைமை நேர்ந்துவிட்டது.

தேசாதிபதி நோர்த் இங்கிலாந்திற்குத் திரும்பிச் சென்ற பின்னரும், கண்டி நாட்டில் நிலைமை திருந்தவில்லை. இப்போது அரசனுக்கு மவனது அதிகாரிகளுக்குமிடையே இடைவிடாத போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. சப்த கோறளையில் நிகழ்ந்த கலகங்களைப் பிலிமத்தலாவை அடக்கியபோதிலும், அவனும் அரசனை வீழ்த்துவதையே குறியாகக் கொண்டிருந்தான். அரசன் மக்களைத் துன்புறுத்தி அவர்களை அடிமைகளைப் போல நடத்தி வந்தமையால் அவனுக்குப் பகைவர்கள் பலர் தோன்றியிருந்தனர். அவர்களுடன் பிலிமத்தலாவை நட்புக் கொண்டதுடன், தானே அரசனாவதற்குத் திட்டமும் வகுக்கலானான். அதில் முதற்படியாக அவன் கீர்த்திஸ்ரீயின் வம்சத்தினருடன் விவாக சம்பந்தம் செய்துகொள்ள முயன்றான். இதை உணர்ந்த அரசன் அவனை அழைப்பித்துப், பலவாறு நிந்தித்து, பிரதான

அதிகாரிப் பதவியினின்றும் நீக்கிவிட்டான். அவனை அரசன் முதலில் சிறையில் இடுவித்தாறுயினும், அவனது உறவினரின் கிளர்ச்சிகளுக்கு அஞ்சி அவனை விடுதலை செய்தனுப்பிவிட்டான். விடுதலையடைந்த பிலிமத்தலாவை, 1812-ல் அரசனைக் கொல்ல ஒரு சூழ்ச்சி செய்தான். அரசனது வாயிற் காக்கும் ' முகாந்தரம் ' என்னும் அதிகாரியை அரசனைக் கொல்லுமாறு தூண்டி விட்டான். அரசன் விழித்திருந்தமையால் உயிர்தப்பி, காவலாளைப் பற்றிச் சிறைப்படுத்தியதுடன், பிலிமத் தலாவையையும் வேறு பலரையும் விசாரணை செய்யவும் பணித்தான். இறுதியில், அவர்கள் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டமையால், மரண தண்டனை யடைய நேர்ந்தது.

அன்று முதல் அரசனுக்கும் அச்சம் அதிகரித்தது. அதிகாரிகளையும், சிங்களத் தலைவர்களையும் அடக்குவதி லேயே அவன் கவனம் செலுத்தி வந்தான். இந்த நிலை மையில், சிறையில் கிடந்து துடித்த **டேவியைக்** கவனிப் பார் எவருமிலர். ஆங்கில அதிகாரிகள் யாரும் அவனை மீட்டுவருவதற்கு முயற்சி புரியவில்லை. தேசாதிபதி மெயிட்லண்டு அவனை விடுவிக்க முயன்றபோதிலும், கண்டியரசனுக்குத் தூது அனுப்ப விரும்பாமையால், அவரது விருப்பம் நிறைவேறவில்லை. கரலியட்டையில் நோய்வாய்ப்பட்ட டேவி கண்டிக்கு எடுத்துச் செல்லப் பட்டு, அங்கு 1812-ஆம் ஆண்டில் பரிதாபகரமான நிலை யில் உயிர் துறந்தான்.

அந்த ஆண்டிலேயே புதிய தேசாதிபதி **றெபர்ட் பிறௌன்றிக்** பதவி ஏற்றார். அவர் எவ்வாறுயினும் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுதல் வேண்டுமென் னும் நோக்கம் கொண்டவர். அப்போது கண்டியில் பிரதான அதிகாரியாக விளங்கிய **எகெலப்பலை** அரசனுக் கெதிராக சூழ்ச்சியி லிறங்கினான். அரசன் குடிகளை ஓம்பித் தங்களைப் பெரிதும் அடக்கித் துன்புறுத்தியதால்

திசாவைமாரும் பிரதானிகளும் அளவற்ற கோபமடைந் தனர். இவர்கள் யாவரும் ஆங்கில அதிகாரிகளான யோன்டி ஒய்லி போன்றவர்களுடன் தொடர்பு கொண்ட னர். பிறகு எகெலப்பலே சப்ரகமுவ திசாவனியில் மக்க ளைத் துன்புறுத்தி வரி திரட்டியும், பகைவர்களைக் கொன் றும், பாக்கு வியாபாரிகளின் பணத்தைப் பறித்துங் கொடுங்கோலனுக நடந்துகொண்டான். அதனை யறிந்த மன்னன் அவனைப் பதவியினின்றும் நீக்கி விடவே, அவன் கிளர்ச்சி புரியலானுன். அவனுடன் இரகசியமாகத் தொடர்பு கொண்டிருந்தபோதிலும் ஆங்கிலேயர் இன்னமும் பகிரங்கமாக உதவிபுரிய முன்வரவில்லை. அதனுல் அவனது கிளர்ச்சி பய னற்றுப் போயிற்று. அரசனின் படைகளுக்கு அஞ்சி, அவன் ஆங்கிலேயரிடம் சரண் புகுந்தான். இதனுல் பெரிதுஞ் சீற்றமடைந்த அரசன் எகெலப்பலேயின் மனைவி மக்களையும் நெருங்கிய உறவினரையும் கொலை செய்வித்தான். பிறகு ஆங்கிலேயருடன் தொடர்பு கொண்டிருந்த சிங்களத் தலைவர்கள் பலரும் மரண தண்டனை யடைந்தனர்.

இவ்வாறு கண்டியில் குழப்பம் மலிந்திருந்தபொழுது, எகெலப்பலேயின் சூழ்ச்சியால், சில கொழும்பு வியாபாரி கள் கண்டியருகில் சித்திரவதை செய்யப்பட்டனர். அவர்களில் தப்பி வந்தவர்கள் தமது துயரங்களை எடுத் துக் கூறவே, தேசாதிபதி பிரௌன்றிக் ஆத்திரமடைந் தார். 1814-ஆம் ஆண்டின் இறுதியில் கண்டியை நான்கு புறங்களிலுமிருந்து தாக்குவதற்கு ஏற்பாடா யிற்று. மக்களின் ஆதரவைப் பெறும் பொருட்டு, சிங் கள மக்களைக் கண்டியரசனின் கொடுங்கோன்மையினின் றும் பாதுகாப்பதற்காகவே ஆங்கிலப் படைகள் வருவ தாகப் பிரகடனம் செய்யப்பட்டது. டி ஒய்லி போன்ற ஆங்கில அதிகாரிகளின் முயற்சியால் மொல்லி கொட (பிரதான அதிகாரி) போன்றவர்களும் ஆங்கிலேயர்

பக்கம் சேர்க்கப்பட்டனர். படைகள் நெருங்குவதை அறிந்த அரசன் கண்டியினின்று மோடி ஒளிந்தான். ஆங்கிலப் படைகள் கண்டியைக் கைப்பற்றியதும் அரசனைத் தேடுவதில் முனைந்தன. 1815-ஆம் ஆண்டு மாசி 18-ந் தேதியில் எகெலப்பலையின் ஆட்களால் அரசன் கைப்பற்றப்பட்டு, மிகவும் கேவலமான முறையில் இழுத்து வரப்பட்டான். அவனும், அவனது மனைவியரும், உறவினரும் கொழும்பு நகரத்திற்குக் கைதிகளாக அழைத்துச் செல்லப்பட்டனர். பிறகு அங்கிருந்து தென்னிந்தியாவிலுள்ள வேலூருக்கு அரசியல் கைதிகளாக நாடுகடத்தப்பட்டனர். அவர்களுக்கும், பின்னர் அவர்கள் சந்ததியாருக்கும் இலங்கை அரசாங்கம் உபகாரச் சம்பளம் அளித்து வரலாயிற்று.

இதற்கிடையே, டீ ஒய்லியின் முயற்சியால், ஓர் அரசியலேற்பாடு செய்யப்பட்டு, அது கண்டியில் நடைபெற்ற பிரதானிகள் கூட்டத்தில் ஆமோதிக்கப்பட்டது. அதன் பிரகாரம், விக்கிரம ராசசிங்கன் முடி இழந்ததாகவும், அவனது வம்சத்தினரின் அரசியல் உரிமைகள் நீக்கப்பட்டதாகவும், கண்டியில் ஆட்சி உரிமை ஆங்கில மன்னருடையதென்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது. இவையன்றி, பண்டைய அதிகாரிகள்–பிரதானிகளின் உரிமைகளைப் பாதுகாப்பது, பௌத்த சமயத்தைப் பராமரிப்பது, சித்திரவதை போன்ற தண்டனைகளை நீக்கிவிடுவது, கண்டியிலும் ஆங்கில நீதி பரிபாலன முறையையே பின்பற்றுவது என்ற அதிகாரங்களும் உரிமைகளும் கண்டியருக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் விளக்கப்பட்டது. இந்தப் பிரகடனங்களால் எவரும் அதிகத் திருப்தியுறவில்லை. ஏனெனில், பொது மக்கள் அரசனை இழந்ததால், எந்த விதமான புதிய உரிமையும் பெற்றுவிடவில்லை. சிங்களத் தலைவர்களான பிரதானிகளும், முதலியார்களும் தங்களுடைய பெருமையும் அதிகாரமும் குறைந்தமையாலும், மற்றவர்களும் தங்க

ளுக்குச் சமானமாக நடந்து கொண்டமையாலும் வருத்தமடைந்தனர். உதாரணமாக, எகெலப்பலே ஒரு பயனும் அடையவில்லை; மேலும் அவனுடைய பகைவனை மொல்லிகோட எப்பொழுதும்போல் பிரதான அதிகாரியாகவே விளங்கினன்.

இவ்வாறு யாவரும் அதிக மகிழ்ச்சியுருவிடினும், ஆங்கிலேயர் துரிதமாகப் புதிய இராச்சியத்திலும் அரசியல் மாறுதல்களைச் செய்யலாயினர். தேசாதிபதி **பிரௌன்றிக்** கண்டி இராச்சியத்தில் அங்கு நிலவிய பண்டைய சட்டதிட்டங்களே பின்பற்றப்படுமென்று அறிவித்தார். கண்டியில் பிரித்தானியத் தானிகர் ஒருவரும், நியாய விசாரணைக் கமிசனர் ஒருவரும், நிதிவரவு கவனிக்கும் கமிசனரும், படைத்தலைவரும் கொண்ட ஒரு சபை நிருவாகம் புரிந்தது. அதற்கு ஒரு அரசாங்கக் காரியதரிசியும் நியமிக்கப்பட்டார். கண்டி உயர் நீதி மன்றத்தில் சுதேச அதிகாரிகளுக்கும் இடமளிக்கப்பட்டது. ஊவா, நான்கு கோறளைப் போன்ற கண்டி நாட்டு மாகாணங்களில் வரிவசூலிக்கும் அரசாங்க ஏசெண்டுகளும் நியமிக்கப்பட்டனர். ஆனால், சிவில் நிர்வாகம் முன்போல **பிரதான அதிகாரி** மொல்லி கொடவால் கவனிக்கப்பட்டது.

ஆங்கிலேயர் அனைவரையும் சமமாகப் பாவித்து நடத்தியமையாலும், 'இராசகாரியம்' போன்ற சேவா முறைகளைத் தடுத்தமையாலும், பழைய பழக்கவழக்கங்கள் சிலவற்றில் தலையிட்டமையாலும், சிங்கள அதிகாரிகள், பிரதானிமாருக்கு அதிருப்தி அதிகரித்தது. தங்களது உரிமைகள் பறிபோனதாக அவர்கள் கருதத் தொடங்கினர். இதனல் பெரும் கிளர்ச்சிகள் மூண்டன. 1817-ல் வதுளையிலிருந்த ஆங்கிலத் தானிகர் வில்சனும் அவரது உதவியாளரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தக் கலகக்காரருடன் எகெலப்பலையின் மைத்துனனை **'கெப்படிபோல'**வும் சேர்ந்துகொண்டான். காடுக

ளெங்கும் கலகக்காரர் மறைந்து நின்று ஆங்கிலப் படைகளைத் தாக்கினர். வீடுகள் எரிக்கப்பட்டு, பயிர்கள் அழிக்கப்பட்டன. இந்தக் கலகத்தில் சம்பந்தப்பட்டிருக்கக் கூடுமென்று எகெலப்பலையையும் மற்றத் தலைவர்களையும் கைது செய்து கொழும்பிற்கு அழைத்துச் சென்றதுடன், ஆங்கிலேயர் கண்டியில் இராணுவ ஆட்சி நிறுவினர். கலகக்காரரிடையே பிளவுகள் தோன்றியமையாலும், மொல்லிகோட போன்ற சிலர் ஆங்கிலேயருக்கு உதவி வந்தமையாலும், கலகம் அடக்கப்பட்டது. கலகத் தலைவர்கள் தீவாந்திர சிட்சை வழங்கப் பெற்று மொரீசசு தீவிற்கு அனுப்பப் பட்டனர். எகெலப்பலையும் அதே கதியை அடைந்தான். இடையில் தளதாமாளிகாவினின்றும் புத்தரின் தந்தமடங்கிய பேழையைக் கலகக்காரரைச் சேர்ந்த பிக்குகள் எடுத்துச் சென்றுவிட்டனர். அதனை ஆங்கிலேயர் மீட்டுத் தளதாமாளிகையில் வைத்துப் பாதுகாக்கலாயினர். இந்தக் கலகத்தை ஆங்கிலேயர் அடக்கிவிட்டனராயினும், அவர்கள் அதன் பொருட்டு உபயோகித்த பலாத்காரமும் கொடூர தண்டனைகளும் மக்களிடையே வெறுப்பை வளர்த்தன. இந்தக் கலகங்களுக்குப் பழைய தலைவர்களே காரணமாகையால், அவர்களது அதிகாரம் முழுதும் பறிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்தது.

கண்டி இராச்சியத்தை நிருவகிக்கத் தேசாதிபதியின் கீழ்த் தனியாக மூவரடங்கிய ஒரு சபை நிறுவப்பட்டது. அவர்கள் 'கமிசனர்'கள் எனப்பட்டனர். கண்டியிலிருந்த தளபதியும், நீதி இலாகா அதிகாரியும், வரி வசூலிக்கும் அதிகாரியும் அத்தகைய கமிசனர்களாய் விளங்கினர். திசாவைமார் முதலியவர்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. அவர்கள் பொது மக்கள்மீது செலுத்திய ஆதிக்கம் மறைந்தது. பெயரளவில் பழைய மரியாதைகளும், கௌரவமும் அவர்களுக்கு அளிக்கப்பட்டதேயன்றி, அவர்கள் சிவில் அதிகாரிகளுக்கு

அடங்கியே நடக்க நேர்ந்தது. கண்டி இராச்சியத்தைப் பதினெரு பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் அரசாங்க 'ஏசண்டுகள்' நியமிக்கப் பெற்றனர். இதனுல் முன்பு 1815-ல் நாயக்கர்களின் அதிகாரம் ஒடுங்கியது போல இப்போதும் சிங்களப் பிரதானிமார்களின் ஆதிக்க மும் குலேந்தது. கண்டி இராச்சியம், ஆங்கில ஆதிக்கத் தின்கீழ்ச் சிறிது சிறிதாகச் சமநிலப் பிரதேச அரசிய லுடன் ஒன்றுபடுத்தப்பட்டுப் புதிய துறைகளில் முன் னேறத் தொடங்கியது.

### விளுக்கள்

1. ஞெபர்ட் அண்ட்ரூசு கொண்ட நோக்கம் யாது? ஏன் அது நிறைவேறவில்லே?

2. பிலிமதலாவையின் வாழ்க்கை வரலாறு பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.

3. தேசாதிபதி நோர்த் காலத்தில் ஏன் கண்டியுடன் போர் நிகழ்ந்தது? போரின் விளேவு யாது?

4. 'டேவி' என்பவர் யார்? அவரது கதி யாதாயிற்று?

5. 1805-க்குப் பிறகு கண்டி நாட்டிலிருந்த நிலேமை யாது?

6. எகெலெப்பலே செய்த சூழ்ச்சிகளே விளக்குக.

7. முடிவில் எவ்வாறு கண்டி ஆங்கில ஆதிக்கத்தின் கீழ் வந்தது?

8. டீ ஓய்லி செய்த அரசியல் ஏற்பாடு யாது?

9. 1817-ம் ஆண்டு கிளர்ச்சிகளுக்குக் காரணங்கள் யாவை? அதன் பலன்கள் யாவை?

10. அதன் பயனுக நேர்ந்த அரசியல் மாறுதல்கள் யாவை?

# 20. மூன்று தேசாதிபதிகளின் நிருவாகம் (1798–1820)

1798-ம் ஆண்டிலும் ஐரோப்பிய யுத்தம் முற்றுப் பெருததால், இலங்கை நிருவாகத்தைத் திருத்தவேண்டு மென்று ஆங்கில அரசாங்கம் கருதியது. ஆயினும், அது நிரந்தரமான ஓர் ஏற்பாட்டைச் செய்யவில்லை. இலங்கைத் தீவு ஆங்கில மன்னரின் நேராட்சிக்கு உட் பட்ட பிரதேசமாகக் கருதப்பட்டமையால், அங்கு அவ ருடைய பிரதிநிதியாக ஒரு தேசாதிபதி ஆட்சி புரிதல் வேண்டும். ஆனல், நிரந்தரமான அரசியல் அமைப்பை நிறுவும் வரையில், இந்தத் தேசாதிபதி, கிழக்கிந்திய வர்த்தக சபையின் அதிகாரிகளின் உத்தரவுகளுக்கேற்ப நடந்துகொள்ளவேண்டும். இவ்வாறு மன்னரின் ஆட்சி யும் வர்த்தக சபையின் நிருவாகமும் ஒன்ருேடொன்று இணைக்கப்பட்டமையால், இதனை 'இரட்டையாட்சி முறை' என்றும் சிலர் கூறுவர். இக்காரணத்தால், கண்டி முதலிய சுதேச இராச்சியங்களுடன் அரசியல், வியாபாரத் தொடர்புகள் கொள்வதும் உள்நாட்டில் நில வரி முதலியன திரட்டுவதும் இந்தியாவிலுள்ள வர்த்தக சபைப் பிரதிநிதியான மகாதேசாதிபதியின் (Governor General in Council) மேற்பார்வையின் கீழ் நடைபெற நேர்ந்தது.

1798-ல் நோர்த் தேசாதிபதியாக வருவதற்கு முன் னரே, இலங்கை அரசாங்கம் ஓரளவு சீர்பட்டிருந்தது. அதற்குக் காரணம், தேசாதிபதி டீ மூரானின் திறமை யான நிருவாகமேயாகும். தாம் விசாரணைக் குழுவின் தலைவராக இருந்தபோது வெளியிட்டிருந்த திருத்த யோசனைகளை அவர் இப்போது பெரும்பாலும் நிறை வேற்றியிருந்தார். அவரால், 'சேவைசெய்து நிலத்தை அனுபவிக்கும் முறை' திரும்பவும் அமுலாக்கப்பட்டது;

தென்னைமர வரி நீக்கப்பட்டு, முதலியார்கள் போன்ற சுதேச அதிகாரிகள் மீண்டும் நியமிக்கப் பெற்றனர்; கறுவாத் தோட்டங்க ளபிவிருத்தி செய்யப்பட்டன; உப்பு விற்பனை அரசாங்கத்தின் ஏகபோக உரிமையா யிற்று. நிலைமை திருந்தியிருந்தமையால், தேசாதிபதி நோர்த் விரைவில் பல திருத்தங்களைச் செய்வது சாத்திய மாயிற்று.

தேசாதிபதிக்கு உதவிபுரிய ஒரு சிறு சபை அமைக் கப்பட்டது. அரசாங்கத் தலைமை காரியதரிசியும், வர்த்தக இலாகாவின் அதிபதியும், நிதிக்கணக்கு இலாகாத் தலைவரும், நிதிப் பரிசீலனையாளரும் (Civil Auditor) முக்கியமான அதிகாரிகளாக இருந்தனர். அதுவரை அண்ட்ரூசு பார்த்துவந்த நிலவரி இலாகா மேலதிகாரிப் பதவி நீக்கப்பட்டு, அரசாங்கத் தலைமைக் காரியதரிசிக்கு உட்பட்டவர்களாக கொழும்பு, மட்டக் களப்பு, காலி, திரிகோணமலை, யாழ்ப்பாணம் என்ற இடங்களில் நிலவரி வசூலிக்கும் 'கலெக்டர்கள்' நியமிக் கப்பட்டனர். சென்னையிலிருந்து வந்த அமீல்தார்கள் முதலிய உத்தியோகத்தர் பலரும் நீக்கப்பட்டு, மீண்டும் சிங்களவரான முதலியார்கள், விதானைமார்கள் நிய மனம் பெற்றனர். சிறிது காலத்திற்குப் பிறகு 'கலெக் டர்கள்' என்ற பதவியையும் நோர்த் நீக்கிவிட்டு, ஒவ் வொரு பிரதேசத்திலும் வர்த்தகமும் நிலவரியும் கண் காணிக்கும் 'அரசாங்க ஏசண்டு'களை நியமித்து விட்டார். அந்த ஏசண்டுகள் அனைவரும் அங்கத்தினரா கவும், அரசாங்கத் தலைமைக் காரியதரிசித் தலைவராகவும் இடம்பெற்ற ஒரு **வர்த்தக நிலவரிச் சபை** (Board of Revenue and Commerce) நிறுவப்பட்டது. கறுவா வியாபாரத்தை வளர்க்கும் பொருட்டு ஒல்லாந்தரைப் போல நோர்த்தும் ஒரு தனி அதிகாரியை நியமித்தார். மேலும் கறுவா வளர்ப்பதற்குரிய ஆராய்ச்சிகள் செய்வ தற்கும் ஆராய்ச்சியாளர் நியமிக்கப்பட்டதுடன், தாவர

ஆராய்ச்சித் தோட்டங்களும் (Botanical gardens) நிறுவப்பட்டன.

இவையே யன்றி, நோர்த்தின் முயற்சியால் வேறு பல இலாகாக்களும் அமைக்கப்பட்டன. அவற்றில் வைத்திய இலாகா, தபால் இலாகா, நில அளவை (Survey) இலாகா, நிதிப் பரிசீலனை இலாகா, கல்வி இலாகா என்பன பிரதானமானவை. 'மகாமுதலியார்' என்ற உத்தியோகத்தரே தேசாதிபதிகளுக்கு வலக் கை போல விளங்கிவந்தனர்; தேசாதிபதிகளின் உத்தரவு களை நிறைவேற்றுவதும் அவர்களுக்குச் செய்தி கொணருவதும் மொழிபெயர்த்தலும் அவர்களது பிரதான கடமைகளாம்.

நோர்த் புரிந்த சேவைகளில் மிகவும் போற்றற் குரியது, நீதிபரிபாலனத்தை அவர் திருத்தியமைத்த முறையேயாகும். கல்கத்தாவிலிருந்து வந்திருந்த இளம் நியாயவாதியான **எட்மண்டு காரிங்டன்** என்பவரை ஊக்கப்படுத்தி இலங்கை மக்களின் சட்டதிட்டங்களை ஆராயுமாறு தூண்டினர். காரிங்டன், ஒல்லாந்தரின் நியாய விசாரணை முறைகளையும், பழைய சட்டதிட்டங் களையும் ஆராய்ந்து, ஒரு சட்டத் தொகுதியை உண் டாக்கினர். இதுவே 'இலங்கைச் சட்டத் தொகுதி' (Ceylon Code of laws) என்னும் பெயருடன் 1799-ல் வெளியிடப்பெற்றது. மேலும், காரிங்டன் இலங்கை நிலைமைக்கு ஒத்த வகையில் நீதிபரிபாலன அமைப்பு ஒன்று உண்டாக்கவும் திட்டம் வகுத்தார். அதன் பிர காரம், தேசாதிபதியைத் தலைவராகவும், தளபதியையும் தலைமைக் காரியதரிசியையும் அங்கத்தினராகவும் கொண்ட தலைமை நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டது. ஒல்லாந்தர் அமைத்த நீதிமன்றம் இப்போது வேலை செய்யாமையால் கொழும்பு, யாழ்ப்பாணம், காலி முதலிய நகரங்களில் 'போலீசு' நீதிமன்றங்களும், ஒல்லாந்தரது 'லாண்ட்ராட்சை' ஒத்த சிவில் நீதிமன்

றங்களும் நிறுவப்பட்டன. இந்த நீதிமன்றங்களில் ஒரு தலைவர், ஒரு 'தோம்பு' அதிகாரி, முதலியார்கள் என்போர் விசாரணை அதிகாரிகளாக விளங்கினர்.

1801-ஆம் ஆண்டில் மன்னரால் வெளியிடப்பட்ட பிரகடனப் பத்திரத்தின் பிரகாரம், ஓர் உயர்நீதிமன்றமும் அதன் தலைவராகப் பிரதம நீதிபதியும் நிறுவ ஏற்பாடாயிற்று. மறு ஆண்டில் ஐந்து மாகாணங்களில் நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. **'அட்வகேட் பிசுகால்'** என்ற அதிகாரி நியமிக்கப்பட்டு, அரசாங்கத்திற்குச் சட்டங்களை வகுப்பதற்கு யோசனை கூறவும் அரசாங்க வழக்குகளில் வாதாடவும் அதிகாரமளிக்கப் பட்டார்.

ஆனல், தேசாதிபதி நோர்த் வரிவசூலைத் திருத்துவதற்குச் செய்த முயற்சிகள் யாவும் வியர்த்தமாயின. டீ மூரானல் நிறுவப்பட்ட 'சேவா-நில முறை'யை ஒழித்துவிட்டு, நிலவரியைப் பணமாகப் பெறுவதற்கும் முதலியார்களுக்கு நிலமான்யத்திற்கு மாருகச் சம்பளம் கொடுத்துவிடுவதற்கும் நோர்த் முயன்ருர். அவரது முயற்சியின் பயனுக, முதலியார்கள் சம்பளம் பெற்றமையால் அவர்களது அதிகாரமும், இலஞ்ச ஊழலும் குறைந்தன. ஆனல், அரசாங்கத்தின் நிதிவரவு அதிகரிக்கவில்லை. இவ்வாறே 1800-ஆம் ஆண்டில் நோர்த் ஆபரணங்களை அணிவோர்மீது விதித்த வரி ஒன்று மக்களின் எதிர்ப்பை வளர்த்தது.

நோர்த்தின் நிருவாகத்தின்கீழ் 'முத்துக்குளித்தல்' நடைபெற்றும், முந்தைய வருடங்களிற்போல அது அத்துணைப் பலனளிக்கவில்லை. அவரது ஆட்சிக் காலத்தில் கொழும்பில் கொடிய பெரியம்மை நோய் பரவியதால், அதைத் தடுக்க, முதன்முதலாக 'அம்மை குத்துதல்' தொடங்கப்பெற்றது. 1802-ஆம் ஆண்டில் ஆங்கில அரசாங்கம், சென்னையிலிருந்து வர்த்தக சபை அதிகாரிகள் ஆட்சிபுரிவதை நிறுத்திவிட்டு, இலங்

கையை நேரடியாக ஆங்கில அரசுக்கு உட்பட்ட சாம்ராச்சியப் பகுதியாக அமைத்துக்கொண்டது. இந்த மாறுதலால், இலங்கை தனிப்பட்டதோர் அரசாங்கத்தின்கீழ் வந்ததுடன், அதன் நிருவாகமுறை திருந்துவதற்கும் மார்க்கம் ஏற்பட்டது. இலங்கைத் தேசாதிபதியின்மீது வர்த்தக சபையும் இந்தியாவிலிருந்த மகாதேசாதிபதியும் வகித்துவந்த ஆதிக்கம் மறைந்தது. தேசாதிபதிக்கு



படம் 28. கம்பளைப் பாலம்

உதவிபுரிவதற்காகத் தளபதியும், பிரதம நீதிபதியும், தலைமைக் காரியதரிசியும் வேறு இருவரும் கொண்ட ஆலோசனைச் சபை உண்டாக்கப்பட்டது. மேலும், இந்த மாறுதலின் பயனாகச் சிறந்த ஊழியர் அடங்கிய சிவில் நிருவாகம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

நோர்த்தின் நிருவாகத்தில், "இலங்கை அரசாங்க கெசட்" தொடங்கப்பட்டது. அதில் அரசாங்க உத்தரவுகள் மட்டுமன்றி, இலக்கியக் கட்டுரைகளும் காணப்பட்டன. அன்றியும், நீர் கொழும்பின் அருகிலிருந்த பெரிய ஏரியிற் கடல்நீர் நிரம்பிவிடுவதைத் தடுத்து, தூய நீரை வாய்க்கால்கள் மூலம் கொணர்ந்து அதில் பாய்ச்சப் பெரும் முயற்சி செய்யப்பட்டது. இதுவே 'முத்துராச வலைத்திட்டம்' என்று அக்காலத்

தில் வழங்கப்பட்டதாகும். இதை நிறைவேற்றப் பெரும் பொருள் செலவழிக்கப்பட்டதாயினும், கண்டிப்போர் தொடங்கியமையால் இதனை நிறுத்திவிட நேர்ந்தது. இது நிறைவேறியிருந்தால், ஆறுயிரம் ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலம், செய்கை பண்ணுவதற்கு உரிய நிலையை அடைந்திருக்கும்.

இவ்வாறு தேசாதிபதி நோர்த்தின் ஆட்சிக்காலம் பல சம்பவங்களும் மாறுதல்களும் நிறைந்ததாயினும், இறுதியிற் கண்டியில் அவர் தலையிட்டு ஆங்கிலேயரின் புகழுக்கு இழுக்குத் தேடிவிட்டமையால், அவரது திறமையும் புகழும் பிரகாசிக்கவில்லை. 1805-ல் தளபதி வீமிசுடன் அவர் சச்சரவு செய்துகொண்ட காரணத்தால், முன்னரே அதிருப்தியுற்றிருந்த அரசாங்கம் அவரைத் திருப்பி அழைத்துக் கொண்டது.

சர். **தொமசு மெயிட்லண்ட்** என்பார், நோர்த் நீங்கிய பிறகு, தேசாதிபதியாக ஏழு ஆண்டுகள் (1805—1812) விளங்கினர். நிருவாகத்தைச் சீர்ப்படுத்துவதே அவரது பிரதான கடமையாயிற்று. அதனால், அவர் பிலிமத்தலாவையின் சூழ்ச்சிகளில் ஈடுபடாமலும், கண்டி விவகாரங்களில் மனம் செலுத்தாமலும், நிருவாகத் திருத்தங்கள் புரிவதில் ஊக்கம் செலுத்தினர். மன உறுதியும் உழைப்புத் திறனும் வாய்ந்த மெயிட்லண்ட், மாகாணங்களிலுஞ் சுற்றுப் பிரயாணம் செய்து நிலைமையை நிதரிசனமாக உணர்ந்து கொண்டார்.

பிறகு, நிலவரி பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அவர் ஈடுபட்டார். திடீரென்று ‘இராசகாரியம்’ போன்ற சேவா முறைகளை நோர்த் மீளவும் புறக்கணித்து விட்டமையால், பல துன்பங்கள் பெருகின. பொது மக்கள் சாதிக் கட்டுப்பாடுகளை விடுத்துக் கூலியின் பொருட்டு எவ்வித வேலையும் செய்ய முன்வருவரென்று நோர்த் கருதியது சிறிதும் நிறைவேறவில்லை. மேலும், அவர் எதிர்பார்த்த வகையில் வருமானம் பெருகவுமில்லை.

இக்காரணங்களால், பண்டைய சேவா முறைகளையும் மானிய முறைகளையும் மெயிட்லண்ட் மீண்டும் புத்துயிர் பெறச் செய்தார். நாளடைவில், இந்நிலை மாறி மக்கள் சேவை செய்வதற்கு மாருக வரிப்பணம் செலுத்தக் கூடு மென்றும், ஆனல் அது இயற்கையாக நடைபெறவேண் டுமே தவிர நிர்ப்பந்தமாக நிறைவேற்றப்படலாகாதென் றும் அவர் எடுத்துக் கூறினர். இலஞ்சமும் ஊழலும் மிகுந்த சிவில் அதிகாரிகள் நீக்கப்பட்டுத் தகுந்தவர்கள் நியமிக்கப்படலாயினர். பகுதிதோறும் சிவில் அதிகாரி களுக்குத் திறை இறுக்கும் கடமையுடன், நியாய விசாரணை செய்யும் உரிமையும் அளிக்கப்பட்டதால், முதலிமார்கள் குடிகளைத் துன்புறுத்துவதற்கு இடமில்லாமற் போயிற்று. மேலும், சிவில் அதிகாரிகள் மூன்று தரங்களாகப் பிரித் துக் கீழ் வகுப்பிலிருப்போர் அறிவுக் கூர்மையாலும் திறமையாலும் உயர்வடைவதற்கு வசதி செய்தார். அவர் கள் சுய மொழியைக் கற்கவேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டமையால், மொழிபெயர்ப்புக்காக முதலிமார் களின் உதவியை அதிகாரிகள் நாடவேண்டிய அவசிய மில்லாது போயிற்று.

மாகாண அதிகாரிகளாக நியமனம் பெற்ற 'கலெக்டர்'களுக்கு (திறை இறுப்போர்) வரிகளை வசூலிப்பதும், தமது பிரதேசத்தில் அடிக்கடி சுற்றுப் பிரயாணம் செய்து உண்மை நிலையை உணருவதும், வருடந்தோறும் நிருவாகத்தின் நிலைமை பற்றி அறிக்கை அனுப்புவதும் கடமைகளாயின. நிதிக் கணக்குகளைத் தணிக்கை செய்யப் பரிசீலனையாளர் (Auditor General) நியமிக்கப்பட்டார். அதிகாரி களுக்குச் சொந்தமாக வியாபாரம் செய்யும் உரிமை மறுக்கப்பட்டது. பிறகு மெயிட்லண்ட் வருமானத்தைப் பெருக்கக் கடைகள் வைத்திருப்போர்மீது ஒரு வரி விதித்தார். அதை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி

தொடங்கவே, அதை மாற்றி இறக்குமதிகள்மீது ஒரு வரி விதித்தார்.

மெயிட்லண்டின் ஆட்சியில் நீதிநிருவாகமும் திருத்தியமைக்கப்பட்டது. கொழும்பு, புத்தளம், யாழ்ப்பாணம், திரிகோணமலை, காலி என்ற ஐந்து மாகாணங்களில் பிரதேச நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. இவற்றின் நீதிபதிகள் வேறு எவ்வித நிருவாகத்தோடும் தொடர்பற்றவர்களாய் இருந்தனர். மெயிட்லண்டு காலத்தில் முசுலிம்களின் சட்டங்கள் பிரதம நீதிபதி யோன்சுடனால் தொகுக்கப்பட்டன. மேலும், கத்தோலிக்கரின் தொழுகை, கல்விப் போதனை, மதப் பிரசாரம் முதலிய உரிமைகளைக் குறைத்த ஒல்லாந்தர் காலத்திய சட்டங்கள் இவரால் நீக்கப்பட்டன.

இவரது நிருவாகத்தின்போது பிரதம நீதிபதியாக விளங்கிய **சர். அலெக்சாந்தர் யோன்சுடன்** இவருக்குப் பெரிதுமுதவி புரிந்ததுடன், பற்பல ஒப்பற்ற காரியங்களையும் சாதித்துள்ளார். அவர் இளம் வயதில் தென்னிந்தியாவிலிருந்தவராகையால் தமிழ், தெலுங்கு, இந்தி முதலிய மொழிகளைக் கற்றிருந்தார். அவர் அட்வகேட் செனரலாக இலங்கைக்கு வந்தவர் ; 1806-ல் பிரதம நீதிபதியாக நியமனம் பெற்றார். அவரே இலங்கையில் முசுலிம்களின் சட்டங்களை ஒழுங்குபடுத்தித் தொகுத்து வைத்தவர். மேலும், அவர் மக்களிடம் அனுதாபம் கொண்டு அவர்களுடன் நெருங்கிப் பழகியமையால், அவர்களது பழக்கவழக்கங்களையுங் கருத்துக்களையும் நன்குணர்ந்து அவை குறித்து ஒரு விளக்கமான அறிக்கை எழுதினர். அவர் இலங்கை விவசாயத்தை விருத்தி செய்யும் முறைகளை விளக்கிப் பழைய குளங்கள், தூர்ந்து போன ஏரிகள் முதலியவற்றைச் சீர்படுத்துமாறும் ஊக்கப்படுத்தினர். மேலும், ஐரோப்பியரையும் இந்தியரையும் வரவழைத்து, விவசாயத்தில் ஊக்கத்துடன் ஈடுபடச் செய்தல் அவசிய மென்பதும் அவரது

கொள்கை. தாவர ஆராய்ச்சிக்கு உதவும் தோட்டங்களும், தொழில் முறைகளைக் கற்பிக்கும் பள்ளிகளும் நிறுவுமாறு அரசாங்கத்தைத் தூண்டினர். யோன்சுடன் மிகவும் முற்போக்கான கருத்துக்கள் உடையவராகையால் இங்கிலாந்துக்குச் சென்று, இலங்கையின் நிருவாகத்திற்குப் பிரதேச வாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் கொண்ட சட்டசபை ஒன்று அவசியமென்றும், இலங்கையரை சிவில் அதிகாரிகளாக நியமிக்க வேண்டுமென்றும், அடிமை முறைகளை ஒழித்துவிட வேண்டுமென்றும் எடுத்துக் கூறினர். விசாரணையின்றி எவரையும் சிறைப்படுத்துவது ஒழிந்து ஜூரி விசாரணை முறை அமுலில் வரவேண்டுமென்றும் அவர் கூறியது நோக்கற்பாலது. அவரது கொள்கைகள் யாவும் அப்போது ஏற்கப்படவில்லையாயினும், பிற்காலத்தில் அவற்றை ஒட்டியே திருத்தங்கள் செய்யப்பட்டன. 1810-ல் இலங்கையில் ஜூரி விசாரணை முறை ஏற்படுத்தப்பட்டது. அவர் இலங்கையை விடுத்துச் சென்ற பிறகும், இங்கிலாந்தில் 'ருேயல் ஆசிய சங்கம்' அமைத்துக் கீழ்த்திசை நாடுகள் பற்றிய ஆராய்ச்சியை வளர்த்தார். 1833-ல் அவரது முயற்சியாலேயே மகாவம்சம், இராசாவலியம் போன்ற புராதன நூல்கள் வெளியிடப்பெற்றன என்பதும் உணரற்பாலது.

மெயிட்லண்டின் ஆட்சி, முந்திய தேசாதிபதிகளின் ஆட்சியைக் காட்டிலும் சிறப்பு மிகுந்தது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். 'சுதேச மக்களின் நலன்களையும் சந்தோசத்தையும் அதிகரிக்கச் செய்வதே எனது ஆட்சியின் நோக்கம்' என்று அவர் தாமே கூறியதற்கேற்பப் பல சிறந்த திருத்தங்கள் செய்து உதவினர். அவருக்குப் பிறகு **ருெபர்ட் பிரௌன்றிக்** 1812-ல் தேசாதிபதியானர். அவரது ஆட்சியில் கண்டி இராச்சியம் எவ்வாறு கைப்பற்றப்பட்டுப் புதிய நிருவாகத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டது என்ற வரலாற்றை

நீங்கள் முந்திய அத்தியாயத்திலிருந்து அறிந்துகொண்டிருக்கிறீர்கள். அதுவே அவரது நிருவாகத்தில் முதன்மையான சம்பவமாகும். மேலும், யோன்சுடனின் ஆலோசனைப் பிரகாரம் அவர் கொழும்பிற்கருகில் 'ரேயல் தாவர ஆராய்ச்சித் தோட்டம்' ஒன்றை அமைத்தார். புகையிலை வியாபாரத்தை அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாக்கினர். கற்பிட்டியில் ஒரு மாகாண நீதிமன்றம் அமைத்தார். இராணுவ வீரனின் ஊதியத்தை அதிகப்படுத்தினர். ஆனல், கண்டி நாட்டில் நிகழ்ந்த சம்பவங்கள் காரணமாக, உள்நாட்டு விவகாரங்களில் அவர் அதிகக் கவனம் செலுத்த இயலாமற் போயிற்று.

### விஞக்கள்

1. 1798-ஆம் ஆண்டில் நிலவிய 'இரட்டையாட்சி முறை'யை விளக்குக.

2. நோர்த் செய்த சீர்திருத்தங்கள் யாவை? அவற்ருல் விளைந்த பலன்கள் யாவை?

3. காரிங்டன் புரிந்த சேவை யாது?

4. முத்துராச வலைத்திட்டம் ஏன் நிறைவேறவில்லை?

5. தோமசு மெயிட்லண்டின் குணதிசயத்தை விளக்குக.

6. அவர் புரிந்த சீர்திருத்தங்கள் யாவை?

7. அவர் ஆட்சியில் நீதி நிர்வாகம் எவ்வித மாறுதல்களை அடைந்தது?

8. 'சர் அலெக்ஸாந்தர் யோன்சுடன் செய்த சேவை என்பது பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

9. ரெபர்ட் பிரௌன்றிக் செய்த முக்கியமான சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக.

# 21. நிருவாக அபிவிருத்தி (1821—1850)

1821-ஆம் ஆண்டில் தேசாதிபதி பிரௌன்றிக் சென்றதும், **சேர். எட்வர்டு பார்னெசு** தேசாதிபதியானுர். இவர் முன்பு உதவி தேசாதிபதியாகவும், தளபதியாகவும் பணி செய்தவர். ஆகையால், இலங்கை நாட்டின் நிருவாகத்திலிருந்த குறைகளையும், அவற்றைத் தீர்க்கும் முறைகளையும் நன்கறிவார். கண்டி இராச்சியத்தைப் பிற பகுதிகளுடன் இணைத்து, நாட்டில் ஒற்றுமையும் ஒழுங்கும் நிலவச் செய்யவேண்டுவதே முதற்றேவை என்பதை இவர் உணர்வாராகையால், முதலில் கற்பாதைகள் முதலிய போக்குவரவுச் சாதனங்களை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டார். அவை அபிவிருத்தியடைந்தால், உள்நாட்டில் விரைவாக வியாபாரம் பெருகுமென்பதும் பல பகுதிகளுக்கும் படைகளைச் சுலபமாக அனுப்ப இயலுமென்பதும் அவர் உணர்ந்திருந்தார். அவரது முயற்சிகளின் பயனுக, இயற்கை அரண்கள் கொண்ட கண்டி இராச்சியம் நீண்ட காலமாக அனுபவித்து வந்த சுதந்திரம் மறைந்து, அது இலங்கையின் மற்றப் பகுதிகளோடு ஒன்ருக இணைந்துவிட்டது.

பார்னெசு பதவி வகிப்பதற்கு முன்னர் ஒரு பிரதேசத்தினின்றும் மற்ரெரு பிரதேசத்திற்குப் பிரயாணம் செய்வது மிகவும் கடினமானதாயிருந்தது. உதாரணமாகக் கொழும்பிலிருந்து கண்டிக்குப் பிரௌன்றிக்கும் அவரது மனைவியாரும் சென்றபொழுது, அவிசாவலை வரையிலும் சென்ற ஒல்லாந்தர் அமைத்த கற்பாதையைப் பயன்படுத்திக் கொண்டனர் ; ஆனுல், அவிசாவலையைக் கடந்ததும், அவர்களைப் பல்லக்குகளில் சுமந்து செல்ல வேண்டியதாயிற்று. இவ்வாறே தாழ்ந்த நிலப் பிரதேசத்திலும் கற்பாதைகள் இல்லாமையால், துன்பமும் பிரயாணச் செலவும் அதிகரித்தன. ஒரு முறை பிரதம நீதிபதி சுற்றுப் பிரயாணம் செய்தபொழுது, பல்லக்கு

சுமக்க 160 ஆட்களும் மூட்டைகளைச் சுமந்து செல்ல நானூறு ஆட்களுடன் இரண்டு யானைகளும் படை வீரரும் தேவையாக இருந்தனவாம். பார்னெஸின் பெரு முயற்சியால் இந்த நிலைமை திருந்தியது.

முதலில் கண்டியிலிருந்து கொழும்புவரை செல்லும் இரு மார்க்கங்கள் அமைக்கப்பட்டன. முன்னரே பிரௌன்றிக் தீர்மானித்திருந்தபடி, முதலாவது கற் பாதை நான்கு கோறளை வழியாகச் சென்று, கடுக ஞவைக் கணவாயைக் கடந்து கண்டியை அடைந்தது. இந்தப் பாதையில் செல்வோர் கொழும்புக் கருகில் களனியாற்றைப் படகுகளால் அமைத்த பாலமொன்றினுல் கடந்தனர்; இவ்வாறே மாவலிகங்கைமீதும் இருநூறு அடிகளுக் கதிகமான தூரத்தைக் கடக்க ஒரே வளைவு (Arch) கொண்ட மரப்பாலமொன்று **பிரேசர்** என்பவரின் திறமையால் அமைக்கப்பட்டது. மற்ருெரு கற் பாதை கொழும்பிலிருந்து சப்தகோறளை வழியாகக் குருநாகலை அடைந்து அங்கிருந்து கண்டிக்குச் சென்றது. இந்தப் பாதையிலுள்ள சிறப்ப விசேடம் யாதெனில், 500 அடி நீளம் கொண்ட மலைக்குடைவு (Tunnel) ஒன்று தோற்றுவிக்கப்பட்டதேயாகும்.

இத்தகைய கற்பாதைகள் தோன்றியதன் பலனுகக் கண்டி மற்ற நகரங்களுடன் இணைக்கப்பட்டுவிட்டது. அங்கிருந்து நாளந்தா வழியாகத் தம்புளைக்கும், மட்டக் களப்பிற்கும், வதுளை வழியாகத் தெல்தேனியாவிற்கும், றம்பொடைக் கணவாய் வழியாக நுவரெலியாவிற்கும், குருநாகல் மார்க்கமாகச் சிலாபத்திற்கும், புத்தளத் திற்கும், திரிகோணமலைக்கும் பற்பல கற்பாதைகள் பிரிந்து சென்றன. இவையன்றித் தீவின் துறைமுகங்கள் அனைத்தையும் இணைத்துக்கொண்டு, சுமார் 760 மைல் கள் நீளமுள்ள ஒரு கற்பாதை தீவின் சுற்றளவை ஒட்டிச் செல்கிறது. இந்தக் கற்பாதைகளை அமைக்கும் பொருட்டுப் பண்டைய வழக்கமான "இராசகாரியம்"

என்ற கட்டாய சேவை முறை பயன்படுத்தப்பட்டது. அதிகக் கூலி வழங்காமல் இவ்வாறு ஆட்களைப் பலவந்த மாக வேலை செய்யுமாறு நிர்ப்பந்தப்படுத்தியும், சேனை வீரர்களைத் துணைகொண்டும் இந்தப் பெரும்பாதைகள் நிறுவப்பட்டுள்ளன.

கற்பாதைகள் தோன்றியமையால், இலங்கைத் தீவு முழுதும் வியாபிக்கக்கூடிய ஒரு 'தபால் முறை' ஏற்படுத்துவதும் சுலபமாயிற்று. முதலில், தினந் தோறும் ஊழியர்களால் கடிதங்கள் எடுத்துச் செல்லப் படும் முறை அனுசரிக்கப்பட்டபோது, வரவுக்கு அதிக மாகச் செலவு ஆயிற்று. அதனால் அந்த முறையை மாற்றி, மூன்று நாட்களுக்கு ஒரு முறை தபால்களை எடுத்துச் செல்லும் முறையை அனுசரித்தனர். முக்கிய மாகத் திரிகோணமலைக்கும் கொழும்பிற்குமிடையே நிறுவப்பட்ட ஒழுங்கான தபால்முறை பெரிதும் பய னளித்தது. 1833-ல் குதிரைக் கோச்சுவண்டிகளால் தபால் எடுத்துச் செல்லப்படும் ஏற்பாடு அமுலில் வந்தது. முதன்முறையாகக் கண்டிக்கும் கொழும்பிற்கு மிடையே அத்தகைய வண்டிகள் செல்லலாயின.

கற்பாதைகள் அமைக்கப்பட்டு உள்நாட்டுப் பகுதி களுக்கும் துறைமுகங்களுக்கும் தொடர்பு தோன்றிய மையால், இலங்கை விவசாயம் எதிர்பாராத வகையில் மாறுதலடைந்துவிட்டது. இதுவரையில் உணவுப் பொருள்களும் கறுவா போன்றவைகளுமே இலங்கை யில் செய்கை பண்ணப்பட்டன. இவ்வாறு செய்தவர் களிற் பெரும்பாலோர் சிறிய அளவில் நிலம் வைத் திருந்த குடியானவர்களே ஆகும். ஆனால், இலங்கையில் மலைநாட்டின் இயற்கை அமைப்பையும் சுவாத்தியத்தை யும் நன்கு ஆராய்ந்த ஐரோப்பியர் அவை தேயிலை, கோப்பி, இறப்பர் முதலிய தாவரங்களின் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருப்பதை நாளடைவில் உணர்ந் தனர். இத்தகைய பயிர்களை இலாபகரமாகப் பயிரிடு

வதற்குப் பரந்த நிலப்பரப்புத் தேவையானதால், பெரிய தோட்டங்கள் தோன்றின. அவற்றில் வேலை செய்வ தற்குப் போதிய தொழிலாளர்களை வெளி நாடுகளி னின்றும் பெற நேர்ந்தது. மேலும், கோப்பி, தேயிலை போன்ற பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தமையால், இலங்கையின் பொருளாதாரநிலை உலகப் பொருளாதாரத்தின் ஓர் அம்சமாயிற்று. இத் தகைய பெரும் மாறுதல்களுக்கு அடிப்படையான காரணம் எது என்பதை சிந்தித்துப் பாருங்கள். பார்னெசு முதலியவர்கள் பெரிதும் முயன்று பற்பல கற்பாதைகளை அமைத்ததனாலேயே, மலைநாட்டிற்குள் ஐரோப்பியர் தாராளமாகப் பிரவேசிப்பதும், மலைநாட்டுப் பொருள் களைத் துறைமுகங்களுக்குக் கொணருவதும் சாத்திய மாயிற்று.

பிற்காலத்தில் தேயிலையும், இறப்பரும், இலங்கையின் தோட்டப் பயிர்களில் முதன்மை பெற்றனவாயினும், ஆரம்பத்தில் அவுரி (Indigo), கரும்பு, கோப்பி முதலி யனவே தோட்டப் பயிர்களாகப் பயிரிடப்பெற்றன. வியாங்கொடையில் (Veyangoda) அவுரியும்; தும்பறை, கழுத்துறை, வத்தகாமா பகுதிகளில் கரும்பும் செய்கை பண்ணப்பட்டன. ஆனால், விரைவில் கோப்பியே பிர தானமான பயிராயிற்று. 1810-ல் அலெக்சாந்தர் யோன்சுடனின் முயற்சியால் ஐரோப்பியர் இலங்கையில் நிலம் வாங்கக் கூடாதென்றிருந்த தடை நீக்கப் பட்டது. தோட்டப் பயிர்களை விருத்தி செய்வதற்காக, 4000 ஏக்கர்கள் வரை ஐந்தாண்டுகளுக்கு வரி விதிக் காமல் நிலம் அளிக்க அரசாங்கமும் முன்வந்தது. **கென்ரி பர்டு** என்பவரே, இலங்கையில் முதன்முதல் கோப்பித் தோட்டம் அமைத்த ஐரோப்பியர். பிறகு, பார்னெசு தாமே முன்னின்று காடுகளை அழித்துத் தோட்டங்கள் அமைக்க வழிகாட்டினர். இத்தகைய தோட்டப் பயிர்களுக்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு

வரி விதிப்பதில்லை என்றும், தோட்டத் தொழிலாளர்களை மற்றவர்களைப்போல 'இராசகாரிய'மென்ற கட்டாய சேவை புரியுமாறு நிர்ப்பந்தம் செய்வதில்லை என்றும் அரசாங்கம் ஒப்புக்கொண்டது.

பார்னெசின் நிருவாக காலத்தில் புதுமுறைக் கல்வி உயிர்ப்பிக்கப்பட்டது. ஆங்கிலேயர் வருவதற்கு முன்னர், ஒல்லாந்தர் சிறிய கிராமப் பள்ளிகளையே மதப்பிரசாரத்திற்கு ஏற்ற இடங்களாக உபயோகித்து வந்தனர். இது புரட்டசுதந்து சமூகத்தின் வளர்ச்சிக்குக் காரணமாயிற்று. ஆனால், இத்தகைய பாடசாலைகளின் பொருட்டு வருடந்தோறும் 1500 பவுன்கள் செலவாகுமென்பதை யறிந்த ஆங்கில அரசாங்கம் இவற்றைப் பாதுகாக்க மறுத்துவிட்டது. இக்காரணத்தால், ஆங்கிலக் கல்விபோதனை குறைந்ததுமட்டுமன்றி, புரட்டசுதந்து கிறிஸ்தவர் தொகையும் ஏழில் ஒரு பங்காகக் குறைந்து விட்டது. அதனால் ஆங்கில நாட்டிலேயே கிளர்ச்சி தோன்றி, மீண்டும் ஆங்கில போதனைப் பாடசாலைகளைத் தொடக்கி வைத்தனர். ஆனால், 1830-ஆம் ஆண்டிற்கூட நிலைமை திருப்திகரமாக இல்லை. யாழ்ப்பாணப் பகுதியில் நான்கு பாடசாலைகள் இருந்தன; கண்டி இராச்சியத்தில் ஒன்றுகூட இல்லை! ஆங்காங்கு இருந்த பள்ளிகளிலும் வெகு சிலவே ஒழுங்கு முறைப்படி நடத்தப்பட்டன. அதனால் அரசாங்கம் தானே பாடசாலைகள் நடத்துவதற்கு மாறாக, புரட்டசுதந்து இயக்கத் தலைவர்களிடமே கல்விப் பொறுப்பை ஒப்படைத்தது. அரசாங்கம் அவற்றிற்கு நிலமும் பண உதவியும் பிற வசதிகளும் கொடுத்துதவியது. 1816-ல் யாழ்ப்பாணத்தில் பெண்களுக்குத் தனியாகக் கல்விச் சாலைகள் அமைக்கப் பெற்றன. புதிதாக ஓர் அச்சியந்திர சாலையும் நிறுவப்பட்டமையால், சுவிசேஷங்கள் முதலியன தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. இந்தியாவில் கல்கத்தாவிலுள்ள பிரதம குருவே, இலங்கையிலுள்ள

புரட்டசுதந்து சமூகத்திற்கும் குருவாகக் கருதப்பட்டார். இவ்வாறு புரட்டசுதந்து கிறித்தவர் கல்விச் சாலைகள் மூலம் தமது கொள்கைகளைப் பரப்ப வசதி ஏற்பட்டதால், கத்தோலிக்கர், இந்துக்கள், பௌத்த மதத்தினர் முதலியவர்களின் ஆதிக்கம் குறைந்து இவர்களது செல்வாக்கு அதிகரித்தது. ஆங்கிலக் கல்வியின் வளர்ச்சியோடு புரட்டசுதந்து இயக்கத்தின் அபிவிருத்தியும் தொடர்ந்தது.

பொதுவாக நோக்குமிடத்து, இலங்கை மக்களின் பழக்கவழக்கங்களும் பொருளாதார நிலையும் புதிய நிர்வாகத்தின்கீழ்ச் சிறிது சிறிதாக மாறிக்கொண்டே வந்தது. கண்டி இராச்சியம் ஆங்கிலேயர் வசம் வந்த பிறகு, போர்கள் இல்லாத அமைதிகரமான நிலைமை நிலவியதால், நாட்டின் சனத்தொகையும் பெருகியது. இதற்கு மற்ருெரு முக்கியமான காரணமாக அரசாங்கம் மருத்துவ வசதிகளைப் பெருக்கி, அம்மை குத்துதல் போன்ற நோய் தடுப்பு முறைகளை அனுசரிக்கத் தொடங்கியதால், பொதுச் சுகாதார நிலைமை அபிவிருத்தியடைந்தது என்றும் கூறலாம். நாணயச் செலாவணியிலும் அரசாங்கம் மாறுதல்கள் செய்தது. தென்னிந்தியாவிலிருப்பதைப் போன்று ரூபாயும் கால் ரூபாயும் இலங்கையில் உபயோகிக்கப்படலாயின; ஒல்லாந்த நாணயங்கள் சிறிது சிறிதாக வழக்கொழிந்தன. இறுதியில், 1831-ல் இலங்கையில் செப்பு நாணயங்களின் செலாவணி நிறுத்தப்பட்டது. சமூக வாழ்க்கையில் நேர்ந்த மாறுதல்களில், 'அடிமை முறை' தகர்க்கப்பட்டதைக் குறிப்பிடுதல் அவசியம். மேற்கத்திய நாடுகளில் இருந்தது போன்ற கொடூரமான முறையாக இது இல்லாவிடினும், 'அடிமைகள் இருப்பது சமூகத்திற்கே இழுக்கு' என்பதைக் கருதிய தேசாதிபதி மெயிட்லண்டு 1806-ல் அடிமைகள் வைத்திருப்போர் தம்மைப் பதிவு கொள்ளுமாறு கூறினர். 1816-ல்

யோன்சுடன் முயற்சியால், அடிமைகளின் குழந்தைகள் தாமும் பிறந்தது முதல் அடிமைகளாக வாழ்வது தடுக்கப் பட்டது. 1821-ல் அரசாங்கம் அடிமைகள் பலரை விலை கொடுத்து வாங்கி விடுதலை செய்தது.

1829-ஆம் ஆண்டில் ஆங்கில மன்னரின் உத்தரவின் பிரகாரம் **கோல்புரூக்** என்பவரை விசாரணை புரியும் 'கமிசனராக' நியமித்தனுப்பினர். இலங்கையில் நிலவும் நிர்வாகமுறை, சட்டதிட்டங்கள், அவை சம்பந்தமான பழக்க வழக்கங்கள் முதலியவற்றை விசாரித்தறிந்து, அவற்றைத் திருத்தியமைப்பதற் கேற்ற யோசனை களைக் கூறுவதே, இந்த விசாரணைக் 'கமிசனர்' புரியவேண்டிய வேலையாகும். இலங்கையில் நீதிமன்றங் களின் அமைப்பையும், அவற்றின் நிர்வாகத்தையும் தனித்து ஆராய்ந்து யோசனைகள் கூறுமாறு **காமிரான்** என்பார் விசாரணைக் 'கமிசனராக' அனுப்பப்பட்டார். இரு விசாரணைக் 'கமிசனர்களும்' இந்நாட்டிற்கு வந்த பொழுது, அவர்களுக்கு எண்ணற்ற மனுக்களும், விண்ணப்பங்களும் அனுப்பப்பட்டன. மேலும், அவர் கள் பலரையும் நேரில் விசாரித்தறிந்ததும் உண்மைகளை உணர்ந்து கொண்டார்கள். இறுதியில், 1832-ல் இரு வரும் தனித்தனி தாம் ஆராய்ந்து முடிவு கண்ட தீர்மானங்களை அறிக்கைகள் மூலம் அரசாங்கத்தினிடம் சமர்ப்பித்தனர்.

அவற்றில், கோல்புரூக் கூறியிருந்தவைகளின் சுருக்கம் பின்வருமாறு :—“ கண்டியைக் கடற்கரைப் பிரதேசங்களுடன் ஐக்கியப்படுத்தி எங்கும் ஒரே வகை யான ஆட்சி நிலவச் செய்தல் வேண்டும். கொழும்பு, காலி, கண்டி, திரிகோணமலை, யாழ்ப்பாணம் என்ற ஐந்து இராசதானிகள் கொண்ட ஐந்து மாகாணங் களாக இலங்கையைப் பிரிக்கலாம். தேசாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அளவு கடந்தவை ; கண்டி இராச்சியத்தைப் பொறுத்த வரையில் அவருக்கு

எல்லையற்ற அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமை மாறவேண்டும். தேசாதிபதியின் நிருவாக சபை நன்கு அமைக்கப்பட்டு, அவருக்கு யோசனை கூறி உதவும் நிலையில் இருக்கவேண்டும். மேலும், ஒரு சட்டசபையும் நிறுவப்பட்டு, அதில் பொது விவகாரங்கள் குறித்து விவாதம் புரிவது மக்களின் நலனுக்கு உகந்ததாகும். ஆனால், சட்டசபையில் தேசாதிபதி அமருவதும் பங்கெடுத்துக்கொள்வதும் கூடாது. ‘இராச காரியம்’ போன்ற சேவை முறைகள் மக்களை அடிமைகளாக்குவதால், அவை ஒழியவேண்டும். அவ்வாறே ஏகபோக உரிமைகளும், சிங்களவரிடையேயுள்ள வகுப்பு, குல உயர்வு தாழ்வுகளும் மறையுமாறு செய்தல்வேண்டும். சிவில் நிருவாகத்தில் இலங்கையரைச் சேர்த்துக் கொள்வது, கல்வி வளருமாறு செய்தல், மக்களின் கருத்துக்களை உணரும் பொருட்டுச் சுயேச்சை பொருந்திய பத்திரிகைகள் வெளியிடப்படுவதற்கு வசதி செய்தல் முதலியன அவசியமான திருத்தங்களாகும்'' என்று கோல்புரூக்கினால் குறிப்பிடப்பட்டுள்ளன.

காமிரான் தமது அறிக்கையில் இவற்றை ஆமோதித்ததுடன், நீதிமன்றம் அரசாங்க நிருவாகத்திற்கு அடங்கி நடக்கும் நிலைமை கூடாதென்றும், இலங்கை முழுவதிலும் ஒரே வகையான நீதிமன்றங்களும் நியாய விசாரணை முறையும் அமையவேண்டுமென்றும் விளக்கியுள்ளார். மேலும், உயர் நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகளும், மாவட்டங்களில் மற்ற விசாரணை மன்றங்களை நீக்கிவிட்டு மாவட்ட நீதிமன்றங்களும் (District courts) நியமிக்கப்படவேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். முதன் முதலாக, ஐரோப்பியர்—கீழ் நாட்டினர் என்ற பேதமின்றி அனைவரும் ஒரே வகையான நீதிமன்றங்களால் விசாரிக்கப்படவேண்டுமென்று குறிப்பிட்ட பெருமையும் இவரையே சாரும்.

இந்த இருவரது அறிக்கைகளும் இலங்கையின்

வரலாற்றில் ஒரு முக்கியமான இடம் பெறுகின்றன. ஏனெனில், இவை தேசாதிபதிகளின் அதிகாரத்தைக் குறைக்க வழிதேடின. அந்த வகையில், இலங்கை நாட்டில் புதிய சனநாயக அரசியல் வளர்ச்சிக்கு அத்திவார மிட்டன எனலாம். மேலும், இவை நாட்டின் நிரு வாகத்தை ஐக்கியப்படுத்தி, ஒழுங்கு நிலவச் செய் வதற்குத் தகுந்த வழிவகுத்தன. 'அரசாங்கம் மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டே தோன்றியது'; ஆகையால், மக்களின் விருப்பங்களை உணர்ந்து அவற் றிற்கு ஏற்றவாறு நிருவாகத்தை நடத்தவேண்டும்,' என்ற உயரிய கொள்கையை இந்த அறிக்கைகளே முதன் முதலாக வலியுறுத்தியவை.

இந்த அறிக்கைகளைத் தழுவி உடனே அரசியல்—சமூகத்திருத்தங்கள் பலவும் செய்யப்பட்டன. 1831-ல் பார்னெசு விலகியதும், **சேர் றொபர்ட் கோர்ட்டன்** தேசாதிபதியாக வந்தார். அவரது ஆட்சிக் காலத்தில், ஆங்கில அரசாங்கத்தின் உத்தரவைப் பின்பற்றி, 'இராச காரியம்' போன்ற நிர்ப்பந்த சேவா முறைகள் ஒழிக்கப்பட்டன. இந்தப் பெரும் மாறுதலினால் ஏழை மக்கள் அடிமை வாழ்வு நீங்கித் தலை நிமிர்ந்து வாழவும், சுதேச அதிகாரிகளும், பிரதானிகளுஞ் செலுத்தி வந்த சர்வாதிகாரம் ஒழியவும் சந்தர்ப்பமேற்பட்டது. ஆனால், பிற்காலத்தில் பொதுக் காரியங்களுக்கு இத்தகைய சேவை அவசியமான பொழுது, அனைவரும் வருடத்தில் பதினைந்து நாட்கள் கற்பாதைகள் அமைக்க உதவ வேண்டும், அல்லது ஒரு வரியைச் செலுத்தி அந்த விதியினின்றும் விலக்கப்படவேண்டும் என்று 1848-ஆம் ஆண்டில் ஒரு திருத்தம் செய்யப்பட்டது. இவ்வாறே 1832-ல் முசுலிம்களும், செட்டிமார்களும் இலங்கையில் நிலம் வாங்கலாகா'தென்று ஒல்லாந்தர், காலத்தினின் றும் பின்பற்றப்பட்டு வந்த ஒரு சட்டம் நீக்கப்பட்டது. 1846-க்குப் பிறகு, அரசாங்கம் கறுவா வியாபாரத்தில்

கொண்டிருந்த ஏகபோக உரிமை தவிர்க்கப்பட்டது. 1833-ல் வெளியிடப்பட்டதொரு பிரகடனத்தால், காமிரான் கூறியவாறு, மூன்று நீதிபதிகளடங்கிய உயர் நீதிமன்றம் அமைக்கப்பட்டு, நாடு முழுவதிலும் அதிகாரம் செலுத்தும் உரிமை பெற்றது ; ஆங்காங்கு மாவட்ட நீதிமன்றங்களும் நிறுவப்பட்டன. பிற்காலத்தில் ஜூரிமார் அமர்ந்து விசாரணை புரியும் முறையும் அமுலாக்கப்பட்டது.

1833-ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் மாற்றி அமைக்கப்பட்டது. தேசாதிபதிக்கு ஆலோசனை கூறி உதவி புரிய ஒரு நிருவாக சபையும், பதினைந்து உறுப்பினரடங்கிய சட்டசபையும் நிறுவப்பட்டன. அவர்களில் ஒன்பதுபேர் உத்தியோகப் பொறுப்புள்ளவர்கள் ; மீதமுள்ள அறுவரும் உத்தியோகத்தரல்லாதவர்கள். இத்தகைய சட்டசபை முதன் முதலாக 1834-லிருந்து பணியாற்றத் தொடங்கியது. யோசப் ரீத், யோகான்சு பிலிப்சு (சிங்களவர்), ஜெருபர்ட் செப்ரே, கில்லபிராண்டு (பறங்கியர்), பர்டு, முதலியார் குமாரசுவாமி (தமிழர்) என்ற அறுவரே ஆங்கில வர்த்தகர்களுக்கும் மற்றச் சமூகத்தினருக்கும் உத்தியோகப்பற்றற்ற பிரதிநிதிகளாய் நியமிக்கப்பட்டனர். இந்தச் சட்டசபையில் விவாதிக்கப்படாமல் இலங்கைக்கு உரியதான எந்தச் சட்டமும் இனி இயற்றப்படமாட்டாது என்ற நிலை ஏற்பட்டது. அக்காலத்தில் பிரித்தானியருக்கு அடங்கிய வேறு எந்த ஆசிய நாட்டிலும் இத்தகைய திருத்தம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கோர்ட்டன் சென்ற பிறகு மெக்கென்சி (1837–1841) தேசாதிபதியாக விளங்கினர். அவரது நிருவாகம், பணமுடையினல் பெரிதும் இடர்ப்பட்டது. முத்துக்குளித்தலால் இலாபமொன்றும் வரவில்லை ; கறுவா வியாபார உரிமை மறைந்தமையால், அந்த வருமானமும் குறைந்தது. ஆனல், கற்பாதைகள், சிறைச்சாலைகள், கல்விச்

சாலைகள், சுகாதார வசதிகள் முதலியவற்றைப் பராமரிக்கச் செலவு அதிகம் செய்ய நேர்ந்தது.

அவருக்குப் பிறகு சேர் **காலின் காம்பெல்** தேசாதிபதியாக விளங்கியபொழுது (1841–1847), அடிமை முறை முடிவாக ஒழிக்கப்பட்டது. சிவில், நியாய விசாரணை முதலியன சம்பந்தமான இலாகாக்களைத் திருத்தியமைத்துப் போலீஸ் விசாரணை மன்றங்களை ஏற்படுத்தினர். இவரது நிருவாக காலத்தில் கோப்பித் தோட்டங்கள் அபிவிருத்தியடைந்து ஆங்கில வர்த்தகர்களுக்கு இலாபம் அதிகரித்ததோடு, அரசாங்கத்தின் வருமானமும் பெருகியது. இவர் பதவியிலிருந்து விலகியதும், **தொரிங்ரன் பிரபு** தேசாதிபதியானர். இவரது ஆட்சியில் துன்பங்கள் பல விளைந்தன. இவர் அவசரபுத்தியும் பிடிவாதமும் உடையவர்; எந்த விசயத்தையும் நிதானமாக ஆராய்ந்து முடிவுக்கு வரும் பழக்கம் அற்றவர். இவரது நிருவாகத்தில் கிறித்தவருக்கு அதிக உரிமைகளும் நலன்களும் விளைந்தது கண்டு சிங்கள பௌத்தர்கள் பெரிதும் சீற்றமடைந்தனர். மேலும், இவரால் விதிக்கப்பெற்ற நாய்வரி, துப்பாக்கிவரி, கற்பாதைவரி முதலியன பொதுமக்களுக்கு மிகவும் துன்பம் விளைத்தன. கிறித்தவர் எலியட், பெர்கூசன் முதலியவர்கள் பத்திரிகைகள் வாயிலாகப் பொதுக்கூட்டங்களிலும் இத்தகைய அநீதிகளைப் போக்குமாறு நற்புத்தி கூறி வற்புறுத்தியதொன்றும் பலனளிக்கவில்லை.

இந்த நிலையில் கண்டியிலும் அதைச் சூழ்ந்துள்ள பிரதேசங்களிலும் சிறு கிளர்ச்சிகள் எழுந்தன. 1818-ல் தோன்றிய பெரும் கிளர்ச்சியை இன்னமும் மறவாத ஆங்கிலேயரும் அரசாங்கத்தினரும் இந்தச் சிறு கிளர்ச்சிகளையும் கண்டு அஞ்சினர். உதாரணமாக, 1835-ல் கூடப் பிரதான அதிகாரியும் மற்றவர்களும் ஆங்கிலேயருக்கு எதிராகச் சதிசெய்வதாகக் கூறப்பட்டதும், சற்றும் யோசனையின்றி அவர்களையும் மற்றவர்களையும்

தண்டிக்கவும், படைகளைத் தயாரிக்கவும் அரசாங்கமும் முற்பட்டது. எனவே, 1848-ல் துப்பாக்கி வரியை நீக்குமாறு வற்புறுத்திச் சில இடங்களில் பொதுக்கூட்டங்களும் சிறு கிளர்ச்சிகளும் நடந்தபின்பும், அரசாங்கம் அஞ்சியதில் வியப்பில்லையல்லவா ? உடனே தொரிங்ரன் பீதியடைந்து, மாத்தளை, கண்டி, தம்புள்ள, குருநாகல் போன்ற இடங்களில் இராணுவ ஆட்சியை நிறுவிக் கலகக்காரர்களை விசாரணையின்றிச் சுட்டுத்தள்ளுவதில் முனைந்தார் ! சுமார் இருநூறு பேர்கள் இவ்வாறு மரணமடைந்தனர் ; பௌத்த குருமாரில் ஒருவரும் அநீதியாகக் கொல்லப்பட்டார். இதனால் ஆங்கிலேயரே தேசாதிபதியின் நிருவாகத்தைக் கண்டித்தனர். 'இன்னும் ஒருவன் அநீதியாகச் சுடப்பட்டால், நான் என் வேலையை இராசிநாமாச் செய்துவிட்டுப் போய்விடுவேன் !' என்று பிரதம நீதிபதி **சேர் அந்தோனி ஒலிபாண்ட்** கூறினர். எலியட், பெர்கூசன் முதலியவர்களும் ஆங்கில அரசாங்கத்தினரிடம் இலங்கையின் நிருவாக ஊழல்களை எடுத்துக் கூறினர். முடிவில், ஆங்கிலப் பாராளுமன்றம் அமைத்த விசாரணைக் குழுவினர் தொரிங்ரனது நிருவாகத்தால் அநீதி இழைக்கப்பட்டுவிட்டதெனத் தீர்மானித்து, அவரை வேலையிலிருந்து நீக்கிவிடுமாறு கூறினர். அவ்வாறே தொரிங்ரன் 1850-ல் ஆங்கில நாட்டிற்குத் திரும்ப நேர்ந்தது.

இவ்வாறு தொரிங்ரன் திரும்பியதற்கு இந்தச் சம்பவங்களே பிரதான காரணங்களாயினும், அப்போது பொதுமக்களின் கருத்துக்கள் செவ்விய முறையில் உருவாகி வந்தமையும் ஒரு பொதுக் காரணமாகக் குறிப்பிடலாம். இவ்வாறு பொதுமக்களின் கருத்தை உருவாக்கி வெளிப்படுத்தும் கருவிகளாக அக்காலத்திய ஆங்கிலப் பத்திரிகைகள் அமைந்தன. **கொழும்பு சேர்னல், கொழும்பு ஒப்சேவர், கெரால்டு, சிலோன் டைம்ஸ்** முதலியன அக்காலத்தில் அரும்பணி புரிந்தன. பெர்

கூசன், எலியட் போன்ருேர் இவற்றை நடத்தித் தமது கருத்துக்களை அச்சமின்றி வெளியிட்டனர். மேலும், சோர்ச்னூர், சேர் அலெக்சாந்தர் யோன்சுடன் போன்ற ஆங்கில அதிகாரிகள் சிறந்த சிங்கள இலக்கண நூல்களும், சரித்திர ஆராய்ச்சிகளும் வெளியிட்டுதவினர். இதனுல் இலக்கிய வளர்ச்சியும் நீடித்தது.

**விஞக்கள்**

1. பார்னெசின் கருத்து .யாது? அவர் புரிந்த சேவை யாது?

2. கண்டிக்குச் செல்லும் இரு பாதைகள் யாவை? இலங்கைத் தேசப்படத்தில் பிரதான கற்பாதைகளையும் நகரங்களையும் குறிப்பிடுக.

3. கற்பாதைகளால் நேர்ந்த விவசாய மாறுதலை விளக்குக.

4. அப்போது கல்வி இலாகாவின் நிலை எவ்வாறு இருந்தது?

5. கோல்புருக் விசாரணைக்குப் பிறகு செய்த சிபாரிசுகள் யாவை?

6. காமிரான் கூறிய தென்ன? பிறகு நேர்ந்த மாறு தல்கள் யாவை?

7. 1833-ஆம் ஆண்டு எவ்வாறு முக்கியமானதாகும்?

8. ஏன் தொரிங்ரன் திரும்பிச் செல்ல நேர்ந்தது? விளக்குக.

# 22. அமைதியும் முன்னேற்றமும் (1850—1914)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நமது நாடு விரைவாக முன்னேற்றமடைந்தது. இதற்குப் பல காரணங்களிருப்பினும், ஊக்கம் படைத்த தேசாதிபதிகள் இங்கு வந்து பல சீர்திருத்தங்களையும் ஏற்பாடுகளையும் செய்தமை ஒரு முக்கியமான காரணமாகக் கொள்ளத் தகும். அத்தகைய தேசாதிபதிகளில், **சேர் கென்றி வார்டு** (1855–1860), **கெர்குலிசு றெபின்சன்** (1865–1872), **வில்லியம் கிறிகரி** (1872–1877), **ஆர்தர் கோர்டன்** (1883–1890), **ஜோசப்றிட்ச்வே** (1896–1903), **கென்றி பிளேக்** (1903–1907), **கென்றி மெக்கெல்லம்** (1907–1913) என்போர் பிரதானமானவர்கள்.

இவர்களில், கென்றிவார்டு பல துறைகளிலும் அனுபவம் பெற்ற அரசியல் வாதி. அவர் இலங்கை முழுதும் சுற்றிப் பார்த்து, நாட்டின் நிலைமையை நன்குணர்ந்து கொண்டார். அவரால் நீர்ப்பாசன ஏற்பாடுகளும், தோட்டங்களில் விவசாயம் வளருவதற்கான உதவிகளும் செய்யப்பட்டன. குறைந்த செலவில் தபால்களைக் கொண்டு போகும் முறை (Penny postage), கற்பாதைகளை விஸ்தரித்தல், புதிய பாலங்களும் கால்வாய்களும் அமைத்தல், முதன்முறையாக தந்தி அனுப்பும் ஏற்பாடு, புகை இரதப் பாதைத் தொடக்கம் என்பன அவரது ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தவை. கெர்குலிசு றெபின்சனது ஆட்சியில் கண்டிக்குப் புகையிரதப்பாதை போடுவிக்கப்பட்டதுடன், கல்வியும் ஆராய்ச்சியும் வளரப் பல ஏற்பாடுகள் செய்தார். கொழும்பு, காலி போன்ற நகரங்களில் நகரசபைகளின் நிருவாகத்தை நிறுவியதும், அவரது திறமைக்குச் சான்றாகும். வில்லியம் கிறிகரியின் ஆட்சியில் கொடிய

நோயொன்றல் கோப்பிச்செடிகள் நலிந்தபோதிலும், நாட்டின் பொருளாதார நிலை உயர்ந்தது. இளவரசர் ஏழாவது எட்வர்டு அப்போது இந்த நாட்டிற்கு விஜயம் செய்தார். கொழும்பில் துறைமுகம் பெரிதாகக் கட்டப்பட வேண்டுமென்னும் திட்டத்தைத் தொடங்கியவர் கிறிகரியே யாகும்.

தேசாதிபதி **ஆர்தர் கோர்டன்** நிருவாகத்தில் அரசாங்க வருமானம் குறைந்தமையால், செலவுகளைக் குறைக்க முயன்றார். அப்போது 'ஓரியண்டல் பாங்கிங் கார்ப்பொரேசன்' வெளியிட்ட காகித 'நோட்டு'களின் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லாமற் போனதால், வர்த்தகமும் அரசாங்கக் காரியங்களும் தம்பித்து நின்று விடுமோ என்ற நிலைமை தோன்றிவிட்டது. உடனே கோர்டன், குடியேற்றநாட்டுக் காரியதரிசியின் கருத்துக் களையும் பொருட்படுத்தாமல், அந்தக் காகித நோட்டு களின் செலாவணிக்கு அரசாங்கம் பொறுப்பாளியாக இருக்குமென்று கூறி நிலைமையைச் சீர்திருத்த வழி செய்தார். இவர் காலத்தில் நீர்ப்பாசன ஏற்பாடுகள், புதைபொருள் ஆராய்ச்சி இலாகா (Archaelogical Department) தோன்றுதல், நிருவாக சபையில் ஒரு கண்டிச் சிங்களவருக்கும் ஒரு முகமதியருக்கும் முதன் முறையாக இடமளித்தமை முதலியன நடைபெற்றன.

**றிட்ஜ்வே** தேசாதிபதியாக இருந்தபொழுது, புகை யிரதப் பாதைகளின் அபிவிருத்தியும் மருத்துவக் கல்லூரி போன்ற தாபனங்கள் நிறுவப்படுதலும் நிகழ்வுற்றன. **ஹென்ரி பிளேக்கின்** ஆட்சியில், விவசாய சங்கங்கள் அமைக்கப்பட்டதெனினும், ஐரோப்பிய அதிகாரிகளுக்கு மட்டும் சம்பள உயர்வு அளிக்கப்பட்ட காரணத்தால் சுதேச அதிகாரிகளிடையே அதிருப்தி நிலவியது. பிறகு **மெக்கெல்லம்** நிருவாகம் புரிந்தபொழுது, புதிய அரசி யல் சீர்திருத்தம் வழங்கப்பட்டது. அதன் பயனாக, தேர்தல் முறையும், வரவு செலவுத் திட்டத்தை உத்தி

யோகப் பற்றற்ற உறுப்பினர் பரிசீலனை செய்யும் உரிமையும் இந்த நாட்டினர் கிடைக்கப்பெற்றனர். கல்வித்துறையில் சீர்திருத்தம் செய்ய ஒரு விசாரணைக் குழு இவரால் நியமிக்கப்பட்டது. விவசாயக் கல்லூரி ஒன்றையும் இவர் அமைத்தார். கொழும்புத் துறைமுகச் சீரமைப்புத் திட்டம் இவர் காலத்திற் பூர்த்தி யடைந்தது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலிருந்து இலங்கை விரைவாகப் பலதுறைகளிலும் முன்னேற்றமடைந்தது. நெடுங்காலமாக உள்நாட்டிலும் துறைமுகங்களிலும் தகுந்த போக்கு வரவு வசதிகளின்றி, வியாபாரம் பெருகுவதும் அரசியல் ஒற்றுமை நிலவுவதும் தடைபட்டிருந்தன. ஆனால், அந்த நிலைமை மாறி, ஆங்கில ஆட்சியின்கீழ்ப் புதிய கற்பாதைகளும், புகை



படம் 29. கொழும்புத் துறைமுகம்

யிரதப் பாதைகளும், துறைமுக வசதிகளும் தோன்றிவிட்டன. துறைமுகங்களில் நீண்ட காலமாகச் சிறந்ததாகக் கருதப்பட்ட காலித் துறைமுகம் பாறைகள் சூழப்

பெற்றிருத்தலால் 1860-க்குப் பிறகு புறக்கணிக்கப் பட்டுக் கொழும்புத் துறைமுகம் விருத்தி செய்யப் பட்டது. அங்கு பண்டங்களை இறக்குவதற்கும் ஏற்று வதற்கும் அதிக வசதியின்றி வியாபாரிகள் துன்புற்ற நிலையில், தோட்ட முதலாளிகளும் வியாபாரிகள் சங்க மும் முறையிட்டன. நாட்டின் இராசதானியாகை யாலும், மொத்த ஏற்றுமதியில் எண்பது சதவீதம் இங்கிருந்தே சென்றமையாலும், சூயசுகால்வாய் திறக் கப்பட்டதாலும் கொழும்புத் துறைமுகத்தைச் சீர்திருத்து வது அவசியமாகிவிட்டது. 1875-ல் இளவரசரான ஏழாம் எட்வர்டால் அத்திவாரக்கல் நடப்பெற்று, பத்து ஆண்டு களில் ஏழு இலட்சம் பவுன்கள் செலவில் 4000 அடி நீளமான சுவர் எழுப்பப்பெற்றது. 1885-க்குப் பிறகு, வருடந்தோறும் 30 இலட்சம் ரூபா துறைமுக வசதிகள் காரணமாகக் கொழும்பு வருமானமாகப் பெறலாயிற்று. 1894-லும் 1912-லும் மேலுங் கப்பல்கள் தங்குவதற்குப் பல புதிய வசதிகள் செய்யப்பட்டமையால், இன்று கொழும்பு உலகின் சிறந்த செயற்கைத் துறைமுகங்களில் ஒன்ருக விளங்குகிறது.

பார்னெசு தேசாதிபதியாக இருந்தபொழுது புதிய கற்பாதைகளை அமைத்து, நாட்டை ஒன்று படுத்திஞ ரென்று கூறினேமல்லவா? அந்தக் கொள்கையை அரசாங்கம் தொடர்ந்து பின்பற்றிவந்தமையால், பத் தொன்பதாம் நூற்ருண்டின் இறுதிக்குள்ளாகச் சுமார் நான்கு ஆயிரம் மைல்களுக்கு அதிகமான கற்பாதை களும் பாலங்களும் அமைக்கப்பட்டுவிட்டன. கோப்பித் தோட்டங்களின் சொந்தக்காரர்கள் சுலபமாகத் தமது பொருள்களைத் துறைமுகத்திற்கு அனுப்புவதற்கு வசதிகள் வேண்டுமென்ற நோக்கத்தால், புகையிரதப் பாதைகள் அமைப்பதற்கு உதவியாகத் தாங்கள் புதிய வரி செலுத்துவதற்குத் தயாராக இருந்தனர். ஆயினும், பல இடையூறுகள் தோன்றின. இறுதியில்

1864-ல் ஏறக்குறைய 9 இலட்சம் பவுன் செலவில் கண்டிக்குச் செல்லும் புகை இரதப்பாதை அமைக்கப்பட்டது. மூன்று வருடங்களுக்குப் பிறகு இதன் வழியாகப் பொதுவாகப் பிரயாணிகள் செல்வதற்கும் அனுமதிக்கப்பட்டது. மலைப்பிரதேசத்தின் வழியாகக் கணவாய்களையுஞ் சிகரங்களையுங் கடந்து செல்லும் இந்தப் புகையிரதப்பாதை வெகு அற்புதமானது. 1875-க்குப் பிறகு மலைநாட்டின் பல பகுதிகளுக்குச் செல்லும் கிளைப்பாதைகள் இந்தப் பாதையுடன் இணைக்கப்பட்டன. சுமார் இருபது ஆண்டுகளில், நாவலப்பிட்டி, களுத்துறை, அம்பலாங்கொடை, காலி, மாத்தறை, அப்புத்தளை, பண்டாரவளை மாத்தளை, அவிசாவலை முதலிய இடங்கள் ஒன்றின்பின் ஒன்ருக இந்தப் பாதையுடன் இணைக்கப்பட்டுவிட்டன. இறுதியில், 1905-ல் யாழ்ப்பாணமும் கொழும்பும் புகையிரத வீதியொன்ருல் தொடர்புபடுத்தப்பட்டன. 1909-ல் நீர் கொழும்பும் புத்தளமும் கொழும்பு நகரத்துடன் புகை யிரதப்பாதையால் சேர்க்கப்பட்டன. பின்னர் தலைமன்ஞரிலிருந்து தனுட்கோடியை அடையும் ‘கப்பல்—புகை இரத இணைப்பு’ ஏற்பாடும் செய்யப்பட்டது.

கல்வித் துறையிலும் இந்நாடு இப்போது சில ஆண்டுகளில் பெரிதும் முன்னேற்றமடைந்தது. ஒல்லாந்தரைப்போலவே ஆங்கில அரசாங்கமும் கல்வி கற்பிக்கும் பொறுப்பைப் புரட்டசுதந்துக் குருமார்களிடம் நெடுங்காலமாக விட்டுவைத்தது. இதனுல், பெரும்பாலோர் ஆங்கிலக் கல்வி பெறுவது சாத்தியமாகவில்லை. 1841-ல் நிறுவப்பட்ட ஒரு விசாரணைக் குழுவும் கிறித்தவ மத போதனை செய்யும் கல்லூரிகளுக்குமட்டுமே அரசாங்கம் உதவிநிதி அளிக்கும் என்று திட்டம் செய்தது. இதன் பயனுகப் பறங்கியரும் கிறித்தவரும் முன்னேறிய அளவிற்கு, பௌத்த மதத்தினரும் இந்துக்களும் அபிவிருத்தி அடையவில்லை. எனவே, 1865-க்குப் பிறகு

**மார்கன்** என்பவர் நிலைமையை விசாரித்தறிந்து, ஒரு கல்வி இலாகாவை நிறுவ வேண்டுமென்றும், மேற்படிப்பு விழைவோரை ஆங்கில நாட்டிற்கு உதவிச் சம்பள மளித்து அனுப்பிவிடலாமென்றும், கல்விக்கூடங்களில் மதப் பிரசாரம் செய்யுமாறு நிர்ப்பந்தப் படுத்தலாகா தென்றும் யோசனை கூறினர். 1869-ல் புதிய கல்வி இலாகா அமைக்கப்பட்டது. கல்விக் கூடங்களின் வேலையைத் தணிக்கை செய்து, அவற்றிற்கு உதவிநிதி அளிப்பது இந்த இலாகாவின் கடமையாயிற்று. மதக் கல்வியை அரசாங்கம் ஆதரிப்பது என்ற பழைய கொள்கை மறைந்ததாயினும், வித்தியாபதி (டைரக்டர்) என்ற தலைமை அதிகாரி தமது கருத்துக்களுக்கேற்ப எந்த மாறுதலையும் செய்யும் அதிகாரம் படைத்திருந்த தொன்றே இந்த ஏற்பாட்டிற் காணப்பட்ட பெரும் குறை யாகும். மேலும், ஆங்கிலம் ஒன்றிற்கே பிரதான இடம் அளிக்கப்பட்டதால், சுதேச மொழிகளின் வளர்ச்சி தடைப்பட்டது. இந்தக் கல்வியைக் கற்றவர்கள் ஆங்கி லேயரின் பண்பாட்டையும் நடை உடைகளையும் பின் பற்றத் தொடங்கியமையால், சிங்கள, தமிழ் நாகரிகமும் நாட்டுப் பற்றும் குன்றின.

ஆயினும், முப்பது ஆண்டுகளுக்குள்ளாகக், கல்வி நாட்டின் மூலை முடுக்குகளிலும் சென்று பரவியது என்பதை மறக்க முடியாது. இந்தக் காலத்தில் அரசாங்கக் கல்விக் கூடங்களின் தொகை எட்டு மடங்கு அதிக மாயிற்று. இவையன்றி, நிதி உதவி பெற்ற கல்விக் கூடங்களின் தொகை ஐம்பது மடங்கு அதிகரித்தது. புதிய முறைகளில் கல்வி போதிக்கப்பட்டதாயினும், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாதது ஒரு பெருங் குறையே யாகும். இந்தக் குறையை நீக்க 1902-ல் ஓர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தாபிக்கப்பட்டது. உயர்தரக் கல்வி கற்பிக்கும் பொருட்டு மிகவும் திறமை சாலியான மாணவருக்கு அரசாங்கம் உதவியளித்து

இலண்டன் சர்வகலாசாலை முதலிய சர்வகலாசாலைகளுக்கு அனுப்புவது என்ற கொள்கை நெடுநாட்களாக அமுலில் இருந்து வந்தது. இத்தகைய உதவிபெற்று சிலர் வாழ்க்கையில் முன்னேற்றமடைந்த போதிலும், பலருக்கும் உயர்தரக் கல்வி கிடைப்பதற்கு வசதி இல்லை. எனவே, கிளர்ச்சி வலுத்து இலங்கையில் சர்வகலாசாலை ஒன்று ஆரம்பித்தல் வேண்டும் என்று பலரும் கூறலாயினர். அதற்கு முதற்படியாக உயர்தரக் கல்வி பயிலுவதற்காக ஒரு கல்லூரியை 1911-ல் அமைத்தனர் எனினும், பௌத்த மதத்தினர் கிறித்தவராக மாறி உயர்தரக் கல்வியும், அரசாங்க உத்தியோகங்களும் பெறுவதைச் சற்றும் விரும்பவில்லை. பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் கர்னல் ஆல்காட் என்ற



படம் 30. பாராளுமன்றம்

அமெரிக்க அறிஞர் இந்த நாட்டை அடைந்ததும் புத்த மதத்தினரின் கல்வி இயக்கமும் துரிதமாகப் பரவ

லாயிற்று. அவர் பிரம்மஞான சபை (Theosophical Society)யைச் சேர்ந்தவராகையால், அந்தச் சபையையும் இங்கு நிறுவி அதன் உதவியால் பிரசாரம் செய்யலானார். அவரது முயற்சிகளின் விளைவாக, புத்தமதத்தினரின் ஆதரவில் பல கல்விக் கூடங்கள் நன்கு நடைபெற்றன. இவ்வாறு புத்தமதத்தினரின் கல்வி இயக்கம் வளர்ச்சியுற்றதோடு, அதுவே தேசீய உணர்ச்சி ஓங்கவும், பழைய பண்பாடு புத்துயிர் பெறவும் காரணமாயிற்று.

இந்தக் காலத்தில் நாட்டில் விவசாய அபிவிருத்தியும் ஏற்பட்டது. முன்னர்க் குறிப்பிட்டவாறு, மலை நாட்டிற்கும் துறைமுகங்களுக்கும் இணைப்பு ஏற்பட்டதும், பணம் படைத்த மேல் நாட்டினர் தோட்ட விவசாயத்தில் ஈடுபட்டனர். முதலில் கோப்பித் தோட்டங்கள் வளர்ச்சியுற்று, 1872-ஆம் ஆண்டளவில் உன்னத நிலையை அடைந்தன. ஆனால் திடீரென்று ஒரு கொடுமையான வியாதி பரவிக் கோப்பித் தோட்டங்களை அழிவுறச் செய்தமையால், 1880-க்குப் பிறகு அந்தத் தோட்டங்களில், தேயிலை, இறப்பர் முதலியன பயிர் செய்யப்பட்டன. தேயிலைப் பயிர் செய்கைக்கு அதிகத் தொழிலாளர் தேவையாதலின், தென்னிந்தியாவினின்றும் அவர்கள் வருவிக்கப்பட்டனர். சில ஆண்டுகளுக்குள்ளாகச் சுமார் மூன்று இலட்சம் ஏக்கர்கள் பரப்புள்ள நிலத்தில் தேயிலை பயிராயிற்று. 1903-ல் ஆறு கோடி ரூபாய் பெறுமானமுள்ள தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. இவ்வாறு இலங்கையின் பொருளாதாரத்தில் தேயிலை முதன்மையான இடம் பெற்றுவிட்டது. தாவர ஆராய்ச்சியாளர்களின் முயற்சியால் தென்னமெரிக்காவினின்றும் கொணர்ந்து சோதிக்கப்பட்ட இறப்பர் மரங்கள் நன்கு வளர்ந்தன. அதனால் இறப்பர் செய்கை பண்ணுவதும் 1904-க்குப் பிறகு விரைவில் அதிகரித்தது. இவ்வாறு தென்னைச் செய்கையும்

சிலாபம், புத்தளம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு முதலிய பகுதிகளில் விரைவாய் அபிவிருத்தியடைந்தது.

ஆங்கில தேசாதிபதிகள் நீர்ப்பாசன ஏற்பாடுகளிலும் கவனம் செலுத்தினர். பண்டைக் காலத்தில் அமைக்கப்பட்ட குளங்களும் கால்வாய்களும் தூர்ந்து கிடப்பதைக் கண்டு மனம் வருந்திய தேசாதிபதி கென்றி வார்டு அவற்றைச் சீர்திருத்துவதில் ஊக்கம் கொண்டார். அவரது முயற்சியின் பலனுகக் கல் முனையிலிருந்து மட்டக் களப்பு வரையிலுள்ள நிலப்பரப்பு, சிறந்த விளைநிலமாயிற்று. 1880 வரை அரசாங்கத்தினர் கிழக்கு, தெற்கு மாகாணங்களில் நீர்பாசன வசதிகளைப் பெருக்கினர். ரொபின்சன், கிறிகரி முதலியவர்கள் இந்தத் துறையில் கவனம் செலுத்தினரெனினும், ஆர்தர் கோர்டன் காலத்திலேயே 30 இலட்சம் ரூபாய் செலவில் குளங்களும் நீர்த் தேக்கங்களும் செப்பனிடப் பெற்றன; மேலும், நீர்ப் பாசனத்தை மேற்பார்வையிட, மத்திய சபை (Central Board) ஒன்றும் நிறுவப்பட்டது. 1900-ல் தனியாக நீர்ப்பாசன இலாகா ஒன்று தேசாதிபதி றிட்ச்வேயால் அமைக்கப்பட்டது. இந்த இலாகா தோன்றிய பிறகு, விரைவில் கந்தளை, திசுச, ரூகம், வாளவி கால்வாய் முதலிய பதினெட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 1906-ல் மத்திய சபை நீக்கப்பட்டு, இந்த இலாகா மற்ற இலாகாக்களுக்குச் சமமாக உயர்த்தப்பட்டது. நீர்ப் பாசன வசதிகள்பற்றிப் புதிய சட்டசபையும் கவனம் செலுத்தலா யிற்று. மின்னேரி, வடமாகாணத்திலுள்ள 'இராட்சத ஏரி', வடமத்திய மாகாணத்திலுள்ள காலவீவா, கிழக்கிலுள்ள கந்தளை முதலியன பெரிய ஏரிகள்; இவற்றினின்றும் பல மைல்கள் நீளமுள்ள கால்வாய்கள் மூலமாக நீர் பாய்ச்சப்படுகிறது. மேலும், வடபிரதேசத்தில் ஆயிரக்கணக்கான கிராமங்கள்தோறும் உள்ள குளங்களும் சீர்திருத்தப்பட்டிருக்கின்றன.

இந்தப் பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதி

யிலேயே அரசியற் றுறையில் பெரிதும் முன்னேற்றம் காணப்பட்டது என்பதையும் குறிப்பிடுதல் வேண்டும். 1833-ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட நிருவாகத்தில், தேசாதிபதியின் சபையில் சிறுபான்மையரான ஐரோப்பியருக்கும், சுதேச மக்களுக்கும் சம எண்ணிக்கையுள்ள தானங்களே வழங்கப்பட்டிருந்தன. இதனுல் தோட்ட முதலாளிகளான ஐரோப்பியருக்கே உண்மையான அதிகாரமிருந்தது. தங்கள் வியாபார நலன்களைப் பாதுகாப்பதிலேயே அவர்கள் கருத்தூன்றியிருந்தமையால், நாட்டின் பொது நலன்களில் நாட்டம் கொள்ளவில்லை. அவர்கள் மேலும் அதிகாரம் பெறக் கருதி, இடைவிடாமல் கிளர்ச்சி செய்துகொண்டிருந்தனர். அதன் பயனுக, 1839-ல் சட்டசபைக்கு வரவுசெலவுத் திட்டத்தை ஆராய்ந்து குறை நிறை கூறுவதற்கு உரிமை அளிக்கப்பட்டது. 1848-ல் ஆங்கிலக் குடியேற்ற நாட்டுக் காரியதரிசி, "அரசாங்கச் செலவுகள் ஒவ்வொன்றையும் தேசாதிபதியே செய்வராயினும், அவற்றைக் குறித்துச் சட்டசபை நன்கு பரிசீலனை செய்த பிறகே அவை செய்யப்படும்," என்று உறுதி கூறினர்.

இதனுல், ஒரு முக்கியமான உரிமையைச் சட்டசபை பெற்றுவிட்டதென்றுலும், தேசாதிபதி செயல் முறையில் இதனைப் பின்பற்றுமல், முக்கியமான சந்தர்ப்பங்களிற்றுமே செலவினங்களைப் பற்றி முடிவு செய்து வருவது சாத்தியமாயிற்று. உதாரணமாக, 1864-ல் இத்தகையதொரு நிலை ஏற்பட்டது. அப்போது இலங்கையின் இராணுவச் செலவுகளைத் தாம் ஏற்க முடியாதென்றும், இலங்கை அரசாங்கமே அதனை ஏற்க வேண்டுமென்றும் ஆங்கில அரசாங்கத்தார் கூறிவிட்டமையால், ஜோர்ஜ் வால் முதலிய அங்கத்தினர்கள் சட்டசபையில் இதனைக் குறித்து விவாதிக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். அரசாங்கம் மறுக்கவே, அதனைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றிய பின்பு உத்தியோகப் பற்றற்ற

ஆறு உறுப்பினர்களும் இராசிநாமாச் செய்துவிட்டனர். பிறகு அவர்களும் மற்றத் தலைவர்களும் 'சிலோன் லீக்' (Ceylon league) என்ற பெயருடன் ஒரு சங்கம் அமைத்துப் பிரசாரம் புரியலாயினர். ஆனால், 1869-ல் தேசாதிபதி, தமது அரசாங்கம் குடிகள் அனைவரின் பொது நலனுக்காகப் பாடுபடுமென்றும், ஆங்கிலக்கல்வி பரவாத நிலையில் தேர்தல் முறைகளை அனுசரித்தால் தோட்டச் சொந்தக்காரர் போன்ற செல்வாக்குப் படைத்த சிறுபான்மையோர் அதிகாரம் பெற்றுத் தமது நலன்களை மட்டுமே கவனிப்பார்களென்றும் தெளிவுபடுத்தினர். இதற்குப் பிறகு 'சிலோன் லீக்,' தனது பிரசாரத்தைப் பலப்படுத்த இயலவில்லை.

நாளடைவில், சுதேசிகளாகிய சிங்களவர், தமிழர், ஆங்கிலக் கல்வி கற்று முன்னேற்றம் அடைந்துவிட்டமையால், அவர்கள் 'சுயாட்சி உரிமை' வேண்டுமென்னும் கிளர்ச்சியில் ஈடுபடலாயினர். அதனால் 1889-ல் சட்ட சபையில் உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர் தொகை ஆறிலிருந்து எட்டாக உயர்ந்தது. 1909-ல் மேலும் சீர் திருத்தங்கள் வேண்டுமென்ற கிளர்ச்சி ஓங்கியது. குடியேற்ற நாட்டுக் காரியதரிசியும் நிலைமை மாறியதை உணர்ந்து ஓரளவு சீர்திருத்தம் புரிய முன் வந்தார். அதன் பயனாக, 1910-ஆம் ஆண்டு நவம்பரில் பதினொரு உத்தியோகத்தரும் உத்தியோகப் பற்றற்றவர் பதின்மரும் அடங்கிய சட்டசபையை அமைக்குமாறும், அந்த உத்தியோகத்தரல்லாத பதின்மரில் நால்வர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் அரசாங்க உத்தரவு பிறந்தது. இந்த அடிப்படையில் அமைக்கப்பட்ட புதிய சட்டசபை, 1912-ல் முதன் முதலாகக் கூடியது. தேர்தல் முறையை வழங்கியது இதுவே முதன் முறையாகையால், இந்தச் சீர்திருத்தம் முன்னேற்றத்தையே குறிக்கின்றது எனலாம்.

இத்தகைய மாறுதல்களுக்கிடையே 'தல சுய ஆட்சி'

(Local self-Government) முறையும் மாறுதலடைந்து வந்தது குறிப்பிடத் தக்கதாகும். பண்டைக் காலத்திலிருந்து கிராமத்தார்கள் பொது அம்பலங்களில் கூடி, கிராம நிருவாகத்தைப் பற்றி ஆராய்ந்தனரென்பதற்குச் சான்று இருக்கிறது. முக்கியமாகக் 'கன்சபாவ' எனப்படும் கிராமக் கோடுகள் வழக்குகளை விசாரிக்கும் உரிமைகளைப் பெற்றிருந்தன. ஆனால், அந்நியர் ஆட்சியில் அவை நீக்கப்பட்டு, ஆங்காங்கு 'போலீஸ் கோர்ட்டு'கள் உண்டாக்கப்பட்டுவிட்டன. எனினும் **கென்ரி வார்டு, கெர்குலிசு ரொபின்சன்** முதலிய தேசாதிபதிகள் மிகவும் ஊக்கம் கொண்டு, இந்தக் கிராமச் சபைகளைப் புத்துயிர் பெறச் செய்து, இவற்றிற்குக் குளங்களைப் பராமரிக்கவும் வழக்குகளை விசாரிக்கவும் உரிமைகள் வழங்கினர். 100 ரூபாய்க்குள்ளே வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறும் உரிமையை இவை பெற்றன. டொனமூர் திட்டத்தின் கீழ் 1932-ல், இந்தக் கிராமச் சபைகளுக்கு வரி விதிக்கும் உரிமையும், தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையும் வழங்கப் பட்டன. இவ்வாறே நகரங்களிலும் நகர சபைகளும் வளர்ச்சியுற்றன. நகரங்களில் குடிதண்ணீர், சுகாதார வசதி, தெருக்கள் சுத்தம் செய்தல் போன்ற பிரச்னைகளைக் கவனிக்க வேண்டியிருப்பதால், நகரசபைகள் (Municipal Councils) அவசியமாகின்றன. முதன் முதலாக, 1820-ல் கொழும்பிலும், 1824-ல் காலியிலும் இத்தகைய பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் சில வரிகளை விதித்தது. ஆனால், அவ்வாறு வரி விதிப்பது கூடாதென்று கோல்புரூக் தம் அறிக்கையிற் கூறினமையால், 1834-ல் ஐவர் கொண்ட 'கமிட்டி' ஒன்றினிடம் இந்த நிதியின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. 1865-ஆம் ஆண்டில்தான் முடிவாக முனிசிப்பல் சபைகளை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது. கொழும்பு, கண்டி, காலி என்னும் பிரதான பட்ட

ணங்களில் இவ்வாறு நகர சபைகள் தோன்றின. இச் சபைகளிற் பாதி உறுப்பினருக்கு அதிகமாகத் தேர்ந் தெடுக்கப்பட்டோர் இருக்கவியலாது. அனுபவம் பெற்ற சிவில் அதிகாரி ஒருவர் ஒவ்வொரு சபைக்கும் தலைவராக நியமிக்கப்பட்டார். கண்டியிலும் காலியிலும் அரசாங்க ஏசண்டே இந்தப் பதவியைப் பெற்ருர். இந்தச் சபைக ளின் ஆதரவில் நகரங்கள் வளர்ச்சிபெற்று, ஏராளமான வருமானமும், வசதிகளும் அடையப் பெற்றிருந்தன. மாளிககந்த போன்ற நீர்த்தேக்கங்களும், கழிவுநீர் பாய் வதற்கேற்ற அமைப்புகளும் இவற்ருல் நிறுவப்பட்டவை. 1876-ல் சிலாபம், கழுத்துறை, குருநாகல் போன்ற பல சிறிய நகரங்களிலும் தல சபைகளை (Local boards) அமைக்குமாறு அரசாங்கம் உத்தரவிட்டது. நகரசபை களுக்கு வெளியேயுள்ள கற்பாதைகள் முதலியவற்றைக் கண்காணிக்க மாவட்டக் குழுவினர் நிறுவப்பட்டு, 1861 முதல் அவற்றின் உறுப்பினர் சிலரைத் தேர்ந்தெடுக்கப் படும் முறையும் அனுசரிக்கப்பட்டது. பிற்காலத்தில், டொனமூர்த் திட்டப்படி ‘தலத் தாபன இலாகா’ ஒன்று நிறுவப்பட்டது. நகர சபைகளின் வேலைகளை மேற்பார்வையிடுவதே இதன் கடமையாகும். முக்கிய மாகத் தேர்தல் முறையே எங்கும் அனுசரிக்கப்பட லாயிற்று.

இன்றுள்ள நிலையில், கொழும்பு, காலி, கண்டி முதலிய பெரிய நகரங்களில் ஆண் பெண் இருபாலாருக் கும் வாக்குரிமை உண்டு. அந்த நகரங்களில் வரு டாந்தர வருமானம் ரூபாய் பத்துக்குக் குறையாமல் பெறக்கூடிய சொத்துப் படைத்தவர்களுக்கும், மாதம் ஒரு ரூபாயேனும் வாடகை கொடுத்துக் குடி இருப்பவர் களுக்கும் இந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இவர் களால் நகரசபை அங்கத்தினரும் நகரசபைத்தலைவருந் தேர்ந்தெடுக்கப்படுவதால், சுய ஆட்சி முறைகளில் மக்கள் பயிற்சி பெறுவதற்கு இது பெரிதும் உதவு

கிறது. இவ்வாறே இலங்கையில் 1933-க்குப் பிறகு அமைக்கப்பட்டுள்ள ஏறக்குறைய முப்பது நகர சபைகளிலும் (Urban District Council) பெரும்பாலோர் தேர்ந்தெடுக்கப்படும் முறையே அனுசரிக்கப்பட்டு வருகிறது.

நாட்டின் ஆதிக்கம் ஆங்கிலேயர் வசம் வந்தபிறகு இவ்வாறு பல துறைகளிலும் இலங்கை முன்னேற்றமடைந்தமையால், அதன் அரசியலும் பொருளாதார நிலையும் மற்ற நாடுகளின் முன்னேற்றத்தோடு இணைக்கப்பட்டுவிட்டன. உதாரணமாக, பிரித்தானியர் முதல் உலகப் போரில் இறங்கியதும், அண்மையிலுள்ள இந்தியாவில் தேசீய இயக்கங்கள் வலுத்ததும் இலங்கையின் நிலையைப் பாதிக்கத் தவறவில்லை. அதனாலேயே, விரைவில் ஆங்கில அரசாங்கமும் இலங்கை மக்களிடையே பெருகிய தேசீய உணர்ச்சியையும், சுதந்திர ஆவலையும் உணர்ந்துகொள்ளுங் காலம் நெருங்கியது.

### வினாக்கள்

1. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கு விளங்கிய சிறந்த தேசாதிபதிகள் யாவர்? அவர்களது வேலைகளைப்பற்றி ஒரு குறிப்பு எழுதுக.
2. கொழும்புத் துறைமுகத்தின் வளர்ச்சியை விளக்குக.
3. முதன் முதல் எங்கு எவ்வாறு புகை இரதப்பாதை தோன்றியது?
4. கல்வித்துறையில் நிகழ்ந்துள்ள முன்னேற்றத்தைக் குறிப்பிடுக.
5. ஆல்காட் புரிந்த தொண்டு யாது?
6. இலங்கையின் செல்வநிலையில் தோட்ட விவசாயம் எவ்வாறு இடம் பெற்றது?
7. நீர்ப்பாசன வசதிகள் எவ்வாறு பெருக்கப்பட்டன?
8. 1912-ஆம் ஆண்டு அரசியல் மாறுதலை உண்டாக்கக் காரணமான முக்கிய சம்பவம் எது?
9. "இலங்கையில் தல சுய ஆட்சி" (Local self-Government)—இதுபற்றி ஒரு குறிப்பு எழுதுக.

# 23. டொனமூர் அறிக்கையும் அரசியல் மாறுதல்களும்

இலங்கையின் அரசியல் முன்னேற்ற மார்க்கத்தில் 1912-ஆம் ஆண்டு வழங்கப்பெற்ற சீர்திருத்தங்கள் ஓர் முக்கியமானபடி எனலாம். அந்தச் சீர்திருத்தங்களால் யாருக்கும் திருப்தி உண்டாகவில்லையெனினும், முதன் முதலாகத் '**தேர்தல் முறை**'க்கு அதில் இடம் கொடுக்கப் பட்டிருந்தது. அப்போதைய சட்டசபைக்குக் கல்வியறிவு படைத்த சிங்களவர், பறங்கியர் முதலியவர்களின் பிரதி நிதிகளாக நால்வர் தேர்ந்தெடுக்கப்படலாம். இத்தகைய நால்வரில் ஒருவராகச் **சேர். பொன்னம்பலம் இராம நாதன்** தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அவரும் மற்றத் தலைவர்களும் அரசியல் சீர்திருத்தங்களுக்காகப் போராடத் தொடங்கியிருந்தனர்.

அப்போது நிகழ்ந்த ஒரு முக்கியமான சம்பவம், இந்த அரசியற் கிளர்ச்சிக்கு ஒரு பெரும் தூண்டுகோலாகி விட்டது. கம்பளை நகரத்தில் பௌத்தமத ஆலயத்தினர் ஆண்டுதோறும் திருவிழாக் கொண்டாடுவதும், அந்தத் திருவிழாவின்போது தெருக்களின் வழியாக ஊர்வல மாகச் செல்வதும் நெடுநாளைய வழக்கமாக இருந்து வந்தது. ஆனால், 1915-ஆம் ஆண்டில் இத்திருவிழா நிகழ்வதற்கு முன்னால், அந்த ஆலயத்தின் அதிபர் களுக்கு ஓர் எச்சரிக்கை செய்யப்பட்டது. அதாவது, அந்த நகரத்திற் புதிதாகத் தோன்றியுள்ள மசூதிக்கு அரு கில் முரசு முதலிய வாத்தியங்களை முழக்கிக்கொண்டு ஊர்வலஞ் செல்லலாகாது என்பதேயாகும். இவ்வாறு புதிதாக எச்சரிக்கை விடப்பட்டமையால் வெகுண்ட ஆலய அதிபர்கள், திருவிழாவையே நிறுத்திவைத்துத் தம் உரிமையை நிலைநாட்டும் பொருட்டு நீதிமன்றத்தில் வழக்காடத் தொடங்கினர். மாவட்ட நீதிமன்றம் அவர்

களுக்குச் சார்பாகத் தீர்ப்பளித்தபோதிலும், உயர் நீதிமன்றம் அரசாங்கத்தையே ஆதரித்தது. அதற்கு மேலும் வழக்காடும் பொருட்டு ஆங்கில அரசரின் 'பிரிவிகவுன்சிலுக்கு' ஆலய அதிபர்கள் மனுச் செய்து கொண்டிருந்தனர். இந்தத் தருணத்தில் சில பொறுப் புணர்ச்சியற்றவர்களின் பிரசாரத்தால் வகுப்புத் துவேசம் வளர்க்கப்பெற்று, வைசாக பௌர்ணமியன்று ஊர்வலம் வருகையில் மசூதிக்கு அருகே ஏதோ குழப்பம் நிகழ்ந்தது. அதனுல் சிலர் கைது செய்யப்படவே, ஊர்வலத்தில் திரண்டிருந்த மக்கள் சினம்கொண்டு பெரும் கலகம் விளைக்கலாயினர். அதைத் தொடர்ந்து, கேகாலைப் பிரதேசம் முழுதும் பெரும் கிளர்ச்சிகள் மூண்டு பரவின. பிறகு வடமேற்கு மாகாணம் வரை கலக உணர்ச்சி தொற்றுநோய் போன்று பரவியது. உடனே இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, படைகள் கலகப் பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டன. அவர்கள் கலகங்கள் அடங்கிய பிறகும், எவரையும் விசாரணையின்றிச் சுட்டு வீழ்த்திக்கொண்டே சென்றனர். அவர்களுடைய செயல்முறையைக் குறித்துச் சேர்யோன் அண்டர்சன், "ஜெர்மானியர் பெல்சியம் நாட்டில் புரிந்த கொடூரச் செயல்களைக் கண்டு பயிற்சி பெற்றவர்கள் போலும் இவர்கள்!" என்று கூறித் திகைப்பும் வியப்பும் அடைந்துள்ளார். அப்போது அரசாங்க அதிகாரிகள் வெறிபிடித்தவர்கள்போல நடந்துகொண்டனர். அவர்களால், மிகவும் பெருமை வாய்ந்த பௌத்தமதத் தலைவர்களும், உயர் குடும்பங்களைச் சேர்ந்த சிங்களவரும் கைது செய்யப்பட்டுப் பற்பல துன்பங்களுக்கு ஆளாக நேர்ந்தது.

இவ்வாறு அநீதி இழைக்கப்படுவதைப் பொறுக்க இயலாத சிங்களத் தலைவர்கள் **யேம்சு பீரிசு** தலைமையின்கீழ்ப் பொதுக்கூட்டம் நடத்திக் குடியேற்ற நாடுகளின் மந்திரிக்கு ஒரு விசாரணைக்குழுவை அனுப்புமாறு

வேண்டுகோள் விடுத்தனர். முதலில், பெரீரா, ஜயதிலக என்பவர்களும் பின்னர் சேர். பொன்னம்பலம் இராம



படம் 31. சேர். பொன். இராமநாதன்

நாதனும் தமது குறையை எடுத்துரைக்க இங்கிலாந் திற்குச் சென்றனர். ஆயினும், அப்போதிருந்த

தேசாதிபதி சால்மர்சும் குடியேற்ற நாட்டு மந்திரியும், எவரும் விசாரணையின்றிக் கொல்லப்படவில்லை என்று கூறி உண்மையை மறைக்க முயன்றனர். ஆனால், அல்பர்ட் விக்கிரமசிங்க போன்றவர்கள் பலரும் விசாரணை யின்றிச் சுடப்பட்டிருப்பதற்குச் சாட்சியங்கள் காட்டி மெய்ப்பிக்கத் தொடங்கியதும், அரசாங்கம் திகைப் படைந்து தலைவர்களின் வேண்டுகோளுக்கிணங்கியது. இறுதியில், பிரதம நீதிபதியும் மற்றொருவரும் அடங்கிய "**கேகாலைச் சம்பவங்களின் விசாரணைக் குழு**", அதிகாரிகளையும் மற்றவர்களையும் விசாரிக்கத் தொடங் கியது. அதன் தீர்ப்பின் பிரகாரம், கேகாலையில் பலரும் அநீதியாகவும் யாதொரு முகாந்தரமுமின்றிச் சுட்டு வீழ்த்தப்பட்டனரென்பது தெளிவாயிற்று. இதனால், சிலர் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனரே யன்றி, வேறு எவ்விதத் தண்டனைகளும் வழங்கப்படவில்லை. இதனாற் சிங்களவர் அதிருப்தியுற்றதுடன், மற்றோர் உண்மையும் தெளிவாயிற்று. அதாவது, இலங்கை அரசாங்கம் நாட்டு மக்களின் தலைவர்களைச் சிறிதும் கலந்துகொள்ளாமல், நிலைமையை நன்கு உணராத ஐரோப்பிய அதிகாரிகளின் கூச்சலுக்குச் செவிசாய்ப்பதாலேயே இத்தகைய சம்ப வங்கள் நிகழ்கின்றன என்பதை யாவரும் உணர்ந்து கொண்டனர்.

இனி, பொது மக்களின் குரல் அரசாங்கத்தின் செவி களில் எட்டுமாறு செய்ய வேண்டுமென்ற நோக்கத் தோடு, **சேர். பொன்னம்பலம் அருணாசலமும்**, பீரிசும் 'சீர்திருத்த சங்கம்' (Reform League) ஒன்று நிறுவினர். பின்னர் அதுவே **இலங்கைத் தேசீய காங்கிரசாக** உருவெடுத்தது. சிவில் நிர்வாகத்திலும் மற்றத் துறைகளிலும் உயர்ந்த பதவிகளில் ஐரோப்பிய ருக்குச் சமமாக அறிவும் திறமையுமுள்ள சுதேசிகளும் நியமிக்கப்பட வேண்டுமென்ற கிளர்ச்சியும் அப்போது எழுந்தது. காங்கிரசு சபை, பிரதேசவாரியாகப் பிரதி

நிதிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களைக் கொண்ட சட்ட சபை அமைக்கவேண்டும் என்றும், வகுப்புகளுக்குத் தனித்தொகுதிகள் கூடாதென்றும், வரவு செலவுத்திட்டம் முதலியவைகளைத் திருத்தியமைக்கும் அதிகாரம் பிரதி நிதிகளுக்கு வழங்கப்படவேண்டுமென்றும் தீர்மானங் கள் செய்தது. ஆனால், தனிப்பட்ட வகுப்புத் தலைவர்கள் பலரும் இந்த தீர்மானங்களை எதிர்த்து வாதாடினர்.

1920-ஆம் ஆண்டிற் குடியேற்ற நாட்டு மந்திரி விசேடப் பிரகடனம் ஒன்றினால் பின்வரும் அரசியல் மாறுதல்களை வெளியிட்டார் :—புதியதொரு சட்டசபை நிறுவப்படும் ; அது தேசாதிபதியின் தலைமையின் கீழ் இயங்கும் ; அதில் மொத்தம் 37 உறுப்பினரில், உத்தியோகத்தர் பதினான்கு பேர்களும், உத்தியோகப் பற்றில்லாதவர்கள் இருபத்துமூன்று பேர்களும் இருப் பார்கள். அவர்களில் தேர்வு செய்யப்படும் பதினாறு உறுப்பினரில், பிரதேசவாரியாக நிகழும் தேர்தலிற் பதி னொரு பேரும், வகுப்பு வாரியாக ஐவரும் தெரிவு செய்யப் படுவர். அந்த ஐவரும் பின் வரும் தொகுதிகளின் பிரதிநிதிகளாக இருப்பார்கள்.

| தொகுதி | | உறுப்பினர் தொகை |
|---|---|---|
| ஐரோப்பியர் | ... | 2 |
| பறங்கியர் | ... | 1 |
| வியாபாரச் சங்கத்தினர் | ... | 1 |
| தாழ்நிலப் பிரதேச உற்பத்தியாளர் | ... | 1 |
| வகுப்புவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் | ... | 5 |

மற்றச் சில வகுப்புக்களின் பிரதிநிதிகளை நியமன அங்கத்தினர்களில் அரசாங்கம் சேர்த்து நியமித்து விடும். இவ்வாறு கண்டியைச் சேர்ந்த இந்தியர் ஒருவரும் முசுலிம் ஒருவரும் நியமனம் செய்யப்

படுவர். தேசாதிபதியின் சிறிய நிர்வாக சபையையும் வித்தரித்து, மேலும் மூன்று உத்தியோகப் பற்றில்லாத வர்களை அரசாங்கம் நியமிக்கும். பெரும்பாலும் சட்ட சபையின் விருப்பத்தை ஒட்டியே அரசாங்கம் நடக்கு மாயினும், அதன் தீர்மானங்களையும் சட்டங்களையும் தடுக்கவல்ல விசேட அதிகாரம் தேசாதிபதிக்கு வழங் கப்படும். இந்த நிபந்தனைகளை வெறுத்த காங்கிரசு சபை தேர்தல்களிலும் சட்டசபை நடவடிக்கைகளிலும் ஈடு படுவதில்லை என்று தீர்மானித்தது. அதனால் கவலை யடைந்த தேசாதிபதி மேலும் சீர்திருத்தங்கள் பெற முயல்வதாக உறுதிகூறி, காங்கிரசையும் தேர்தலில் ஈடுபடச் செய்தார்.

சட்டசபை 1921-ல் முதன் முதலாகக் கூடியதும், யேம்சு பீரிசு தேவையான அரசியல் திருத்தங்கள் குறித்து ஒரு தீர்மானத்தைப் பிரேரணை செய்தார். அதன் பிரகாரம், நாற்பத்தைந்து அங்கத்தினர் கொண்ட சட்ட சபையை அமைத்து, அதில் ஆறு உத்தியோகப் பற்றுள் ளவர்களை மட்டுமே நியமிக்கவேண்டும்; 28 பேர் பிரதேச ரீதியாகத் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்; சிறு பான்மை வகுப்புகளுக்குத் தனியான பிரதிநிதித்துவம் அளித்தல்வேண்டும்; தேசாதிபதியின் அதிகாரம் குறைக் கப்பட்டு, நிருவாகச் சபையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிமார் இடம்பெற்று இலாக்காக்களுக்குப் பொறுப்பு வகிக்கவேண்டும். இவ்வாறு மேலும் சீர்திருத்தங்கள் வேண்டுமென்ற கிளர்ச்சி நீடித்தமையால், 1924-ஆம் ஆண்டு சில திருத்தங்கள் செய்யப்பட்டன.

இந்தத் திருத்தங்களை ஒட்டிச் சட்டசபை பெரிதாக வித்தரிக்கப்பட்டது. அதன் மொத்த உறுப்பினர்கள் நாற்பத்தாறு பேர்; அவர்கள் அந்தச் சபையில் பின் வருமாறு இடம் பெறுவர் :—

| | | | |
|---|---|---|---|
| (i) | உத்தியோகத்தர்களான அங்கத்தினர்கள் (இராணுவ அதிகாரி, குடியேற்றக் காரியதரிசி உள்பட) | ... | 12 பேர் |
| (ii) | பிரதேசங்கள் தோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் | ... | 23 பேர் |
| (iii) | வகுப்புவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்கள் 3. ஐரோப்பியர் பறங்கியர் 2, ஒரு இலங்கைத் தமிழர் | ... | 6 பேர் |
| (iv) | வகுப்பு ரீதியாக நியமனம் செய்யப்படுவோர் (3 முசுலிம், 2 இந்தியர்) | ... | 5 பேர் |
| | மொத்த அங்கத்தினர் | ... | 46 பேர் |

இவர்களிற் றேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்கள் ஆங்கில சாம்ராச்சியப் பிரசைகளாய், இருபத்தைந்து வருடங்களுக்கு மேற்பட்ட வயதினராய், ஆங்கில மொழியை எழுதவும் படிக்கவும் அறிந்தவர்களாய், ஓரளவு சொத்துரிமை உடையவர்களாய் இருத்தல் வேண்டும் என்று விதிக்கப்பட்டது. இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாகவும், ஏதேனும் ஓரளவு வருமானம் அல்லது சொத்து படைத்தவர்களாகவும், ஆங்கிலம், சிங்களம் அல்லது தமிழ் என்ற மொழிகளில் ஒன்றேனும் கற்றவர்களாகவும் இருப்பவர்களுக்கே வாக்குரிமை அளிக்கப்பட்டது.

சட்டசபைக்குத் தேசாதிபதி தலைவராகவும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் துணைத்தலைவராகவும் விளங்குவார்கள். மிகவும் முக்கியமானதொரு சட்டம் அல்லது தீர்மானம் என்று தேசாதிபதியால் எது தீர்மானிக்கப் படுகிறதோ, அதன்மீது நியமன அங்கத்தினர்கள் மட்டுமே ஓட்டளிக்குமாறு அனுமதிக்கப்படுவார்கள்.

தேசாதிபதியின் நிருவாக சபையில், குடியேற்றக் காரிய தரிசி, அரசாங்க வழக்கறிஞர் (Attorney General), மேல் மாகாணத்தின் அரசாங்க ஏசெண்டு என்ற மூவரும் வேறு அறுவரும் அங்கம் வகித்தனர். பிரதான அதிகாரி களை நியமிப்பது, மரணதண்டனை விதிக்கப்பட்டோ ருக்கு மன்னிப்பு வழங்குவது போன்ற செயல்களில் நிருவாக சபையின் ஆலோசனைகளைத் தேசாதிபதி கேட்டறிதல் வேண்டும்.

இந்தத் திட்டம் நன்கு பலனளிக்கவில்லை. ஏனெனில், சட்டசபையிலிருந்த, தேர்ந்தெடுக்கப்பட்டோர் அடங்கிய பெரும்பான்மையாளர் தமது சபை பெற்றிருந்த வரவு செலவுத் திட்டம் பற்றிய அதிகாரங்களைப் பயன்படுத்தி, நிருவாக சபைக்கும் அரசாங்கத்திற்கும் இடையூறுகள் விளைத்தனர். இதனால் நிருவாகம் தடைப்பட்டமையால், புதிய சீர்திருத்தங்கள் வழங்க ஒரு விசாரணைச் சபையை அனுப்புமாறு **கியூ கிளிப்போர்ட்** என்ற தேசாதிபதி வேண்டுகோள் விடுத்தார். அதன் பயனாக 1927-ல் **டொனமூர்ப் பிரபுவின்** தலைமையின்கீழ் வேறு மூவரும் கொண்ட ஒரு விசாரணைக் குழு அனுப்பப்பட்டது. நிருவாகம் தடைப்பட்டதற்குரிய காரணங்களை விளக்கி, தகுந்த சீர்திருத்தங்கள் பற்றிச் சிபாரிசு செய்வதே அதற்குரிய கடமை.

அவர்கள் நன்கு ஆராய்ந்து, இலங்கை அரசியலின் முக்கியமான குறைபாடு தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கும் உத்தியோகப் பற்றுள்ள உறுப்பினருக்கு மிடையே காணப்பட்ட பெரும் கருத்து வேற்றுமையேயாகும் என் பதை விளக்கினர். உத்தியோகப்பற்றுள்ளோர் சிறு பான்மையராக இருந்தமையால் அதிகாரம் வகிக்க முடிய வில்லை; தேர்ந்தெடுக்கப்பட்டோர் பெரும்பான்மைப் பலமிருந்தும் அதிகாரம் வகிக்காமையால், இடைவிடாது அரசாங்கத்தைக் குறைகூறுவதொன்றையே குறிக்கோ ளாகக் கொண்டிருந்தனர். இந்த நிலைமையை மாற்றி,

தேர்ந்தெடுக்கப்பட்டோருக்குமோரளவு அதிகாரமும் பொறுப்பும் வழங்கப்பட்டால், அவர்கள் நிதான புத்தியுடன் நடந்துகொள்ள நேரிடும். ஆகையால், அவர்கள் பின்வரும் சீர்திருத்தங்களைச் செய்யுமாறு யோசனை கூறினர் :—(1) பிரதேசங்களின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐம்பது பேரும் நியமன அங்கத்தினர் எண்மரும் கொண்ட சட்டசபையை நிறுவுதல் அவசியமாகும். அவர்களை ஏழு குழுக்களாக (Committees) ப் பிரித்து, உள்நாட்டு நிர்வாகம், விவசாயம், தல நிர்வாகம், சுகாதாரம், கல்வி, பொது மராமத்துகள், உள்நாட்டுப் போக்குவரத்து என்ற விஷயங்களில் அவற்றிற்குப் பொறுப்பு அளித்தல் வேண்டும் ; அந்தக் குழு ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தலைவரைத் தேசாதிபதி நியமிப்பார். அந்தக் குழுத் தலைவர்களே மந்திரிகள் எனப்படுவர். இவர்களோடு பிரதம காரியதரிசி, நிதிக் காரியதரிசி, சட்ட இலாகாக் காரியதரிசி என்ற மூன்று அதிகாரிகளும் மந்திரிகளாகக் கருதப்படுவார்களாகையால், பத்து மந்திரிகளடங்கிய 'மந்திரி சபை' (Board of Ministers) நிறுவப்படும். இந்தச் சபைக்குப் பிரதம காரியதரிசி தலைவராகவும், மற்ற மந்திரிகளில் ஒருவர் உபதலைவராகவும் விளங்குவர் ; அந்த உபதலைவரே சட்டசபையில் அரசாங்கக் கட்சித் தலைவராகவும் இயங்க வேண்டும். (2) வாக்குரிமையானது இருபத்தொரு வயதுவந்த ஆண்மக்கள் அனைவருக்கும் முப்பது வயதுக்குக் குறையாத பெண்களுக்கும் வழங்கப்படுதல் வேண்டும் ; சட்டசபை உறுப்பினராக விளங்க விரும்புவோர் ஆங்கிலம் கற்றறிந்தவராக இருத்தல் அவசியம். (3) பொதுவாக, சட்டசபையின் தீர்மானங்களை தேசாதிபதி ஏற்றுக்கொள்ளுதல் அவசியமாகும். அவருக்கு எந்தத் தீர்மானத்தையும் நீக்கும் அதிகாரம் (Veto) உண்டெனினும், சாதாரணமாக அது கையாளப்படமாட்டாது. சட்டசபையின் எந்தத் தீர்மானத்தையும் புனரா

லோசனை செய்யுமாறு திருப்பி அனுப்பும் உரிமையும் அவருக்கு உண்டு.

1928-ஆம் ஆண்டில் ஆங்கிலப் பாராளுமன்றம் இந்தச் சீர்திருத்தங்களைப்பற்றி ஆராய்ந்தது. இறுதியில், வகுப்புவாரியாகத் தேர்ந்தெடுக்கும் முறை ஒழிக்கப் பட்டதுடன், தேசாதிபதிக்கும் விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இருபத்தொரு வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் வாக்குரிமை உண்டு என்ற திருத்தமும் செய்யப்பட்டது; இந்த 'டொனமூர் திருத்தங்கள்' மிகவும் முக்கியமாகக் கருதப்படுகின்றன. ஏனெனில், அரசியற் கட்சிகள் வளர்ச்சியுருத நிலையில் குழுக்கள் (கமிட்டிகள்) மூலமாக நிருவாகம் நடைபெறுவதே சிறந்த முறையாகும்; மேலும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதால் பொறுப்புணர்ச்சியுடனும் நிதான புத்தியுடனும் அவர்கள் சேவைபுரிய இடமுண்டாகும். இந்த இரு நன்மைகளும் விளைந்தன வெனினும், இந்தச் சீர்திருத்தங்களின் விளைவாக ஒருவகை 'இரட்டை ஆட்சி முறை' (Dual Government) தோன்றிவிட்டது என்பதையும், பிரதானமான அதிகாரங்கள் தேர்ந்தெடுக்கப்படாத மூன்று அதிகாரிகளிடையே தங்கிவிட்டன என்பதையும் சிந்தித்தல் வேண்டும்.

இந்தத் திட்டப்படி 1931-ஆம் ஆண்டில் பொதுத் தேர்தல்கள் நடத்தப்பெற்றன. சிறுபான்மையோர் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டு விட்டன என்ற கருத்தினுல் யாழ்ப்பாணத் தமிழர்கள் இந்தத் தேர்தலில் ஈடுபட மறுத்துவிட்டனர். ஆயினும், நிருவாகம் தடைப்படாமல் நடக்கலாயிற்று. உள்நாட்டு மந்திரியும் சட்டசபையில் அரசாங்கக் கட்சியின் தலைவருமான **சேர். சய திலக**, மந்திரி சபையின் உபதலைவராக விளங்கினர். இந்த மந்திரி சபையின் ஆட்சிக் காலத்தில், மேலும்

அதிகாரங்கள் வேண்டுமென்று பெரீரா முதலியவர்கள் புரிந்த கிளர்ச்சி பலனளிக்கவில்லை. தேசாதிபதி தாம்சன் அதற்குச் சிறிதும் இடமளிக்காததால், மீண்டும் 1936-ல் மறுதேர்தல் நிகழ்ந்தது. இந்தத் தேர்தலில் சமவெளிச் சிங்களவர் 31 பேரும், கண்டிச் சிங்களவர் எட்டுப் பேரும், தமிழர் எண்மரும், இரண்டு இந்தியரும், ஓர் ஐரோப்பியரும் தெரிந்தெடுக்கப்பட்டனராயினும், சிங்களவரே மந்திரிகளாக அமருவதற்கேற்றவகையில் குழுக்கள் (கமிட்டிகள்) பிரிக்கப்பட்டன. அதனால் சிங்களவர் மட்டுமே கொண்ட மந்திரிசபை அமைந்தது. மீண்டும் சீர்திருத்தங்களுக்காகச் சிறுபான்மை வகுப்பினரும் மற்றவர்களும் கிளர்ச்சிகள் தொடங்கியதும், ஆங்கிலக் குடியேற்ற நாட்டுக் காரியதரிசி 1940-ல் சகல கட்சிகளும் ஒன்று சேர்ந்து மகாநாடு நடத்தித் தீர்மானங்களைக் கூறுமாறு பணித்தார். ஆனால், யுத்த நிலைமையால் அந்த மகாநாடு நடைபெறவில்லை.

### வினாக்கள்

1. 1912-ஆம் வருட சீர்திருத்தங்களால் விளைந்த ஒரு நன்மை யாது?
2. 1915-ஆம் ஆண்டில் நிகழ்ந்த கிளர்ச்சிக்குக் காரணத்தையும், அதன் முடிவையும் விளக்குக.
3. இலங்கை தேசீய காங்கிரசு யார் முயற்சியால், எப்போது உருவெடுத்தது? அதன் நோக்கங்கள் யாவை?
4. 1920-ஆம் ஆண்டு வழங்கப்பெற்ற சீர்திருத்தங்களை விளக்கிக் கூறுக.
5. 1924-ஆம் ஆண்டில் செய்யப்பெற்ற மாறுதல்கள் யாவை?
6. ஏன் அந்தத் திட்டம் பலனளிக்கவில்லை?
7. டொனமூர் குழு செய்த சிபாரிசுகளை விளக்குக. அதனால் நேர்ந்த நன்மை தீமைகள் யாவை?

# 24. சோல்பரி விசாரணைக் குழுவும் அரசியற் திருத்தங்களும்

இரண்டாம் உலகப் போர் நிகழ்ந்துகொண்டிருந்த பொழுது, தென்கிழக்கு ஆசிய நாடுகள் ஒவ்வொன்றிலும், ஐரோப்பிய ஆதிபத்தியங்களுக் கெதிராகச் சுதந்திரக் கிளர்ச்சிகள் வலுத்துக் கொண்டிருந்தன. அவற்றின் எதிரொலி இலங்கையிலுந் தோன்றியது. நெடு நாட்களாக, மக்களின் பிரதிநிதித்துவம் சரியான முறையில் அமையவில்லை யென்றும், பிரதிநிதிகளுக்குப் போதிய அதிகாரம் இல்லையென்றும் தலைவர்கள் செய்த கிளர்ச்சியும் பிரசாரமும் யுத்த காலத்தில் வலுவடைந்தன.

பொதுத் தேர்தல் நிகழ்வதற்குரிய காலம் நெருங்கியது. ஆனால், அப்போது ஐரோப்பிய யுத்தம் நெருக்கடியான கட்டத்தை அடைந்திருந்தமையால், இலங்கையில் 1941-ல் நிகழவேண்டிய தேர்தலை நடத்த முடியாதென்று ஆங்கில அரசாங்கம் தீர்மானித்தது. சிங்கள மந்திரிகளும், 'அரசியல் சட்டத்தைத் திருத்தியமைக்காமல், தேர்தல்கள் நிகழ்த்துவதில் பயனில்லை' என்று கூறிவிட்டனர். எனவே, தேசாதிபதி நாட்டின் நிலையை விளக்கித் தேர்தலைப் பிறகு வைத்துக்கொள்ளலாமென்றும் நாட்டின் அரசியலைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் எழுதினர். அதனால், ஆங்கில அரசாங்கமும், வாக்குரிமைப் பிரச்னைகளை ஆராய்வதன் பொருட்டுத் தேர்தலை இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தது. யப்பானியர் போரில் இறங்கி, கீழ்த்திசை நாடுகளை ஒவ்வொன்ருகக் கைப்பற்றி வந்தமையால், 1941-ஆம் ஆண்டின் இறுதியிலும் நிலைமை மாறவில்லை. மறு ஆண்டில், இலங்கைக்குக் 'குடியேற்ற நாட்டு அந்தசு' (Dominion Status) போருக்குப்

பின்பு கிடைக்கவேண்டுமென்று சட்டசபை அறிவித்தது. அதை முழுதும் ஏற்காவிடினும், 'போர் முடிந்ததும் இலங்கைக்கு அரசியல் திருத்தம் வழங்குவதென்ற பிரச்னையை ஆராய்வோம்' என்று ஆங்கிலக் குடியேற்ற நாட்டு மந்திரி உறுதி கூறினர். இது மீண்டும் 1943-ஆம் ஆண்டில் தேசாதிபதி சட்டசபைக்கு அனுப்பிய செய்தியிலும் வற்புறுத்தப்பட்டிருந்தது.

1944-ஆம் ஆண்டில் இலங்கை அரசியல் சரித்திரத்தில், ஒரு முக்கிய நிகழ்ச்சி இடம்பெற்றது. இலங்கை மக்கள் பல இன்னல்களைப் பொறுத்தும், தியாகங்கள் புரிந்தும் போரில் பிரித்தானியருக்கு உதவியுள்ளதைப் பாராட்டி ஆங்கில அரசாங்கம் ஓர் அறிக்கை விடுத்தது. அந்த அறிக்கையில், ஆங்கில அரசாங்கம் விரைவில் ஒரு விசாரணைக் குழுவை இலங்கைக்கு அனுப்புவதாகக் கூறப்பட்டிருந்தது. அவ்வாறே மூவரடங்கிய விசாரணைச் சபை ஒன்று இலங்கைக்கு 1944 டிசம்பர் மாதத்தில் வந்து சேர்ந்தது. நிருவாக அனுபவம் மிகுந்தவரான **சோல்பரி பிரபு,** இந்தச் சபையின் தலைவராக இருந்தார்; **சர்.** ரீசு என்பவரும் **சர். பரோசு** என்பவரும் இந்தச் சபையில் அங்கம் வகித்தனர். இந்தக் குழுவினர் மக்களிடமிருந்து அரசியல் திருத்தங்கள் புரிவதற்கேற்ற யோசனைகளை மனுக்கள் மூலமாகப் பெற்றுக் கொண்ட



படம் 32.
சோல்பரி பிரபு

னர் ; பிறகு பல்வகைக் கருத்துக்கள் கொண்ட தலைவர்களையும் நேரில் சந்தித்து விசாரணை புரிந்தனர். இத்தகைய விசாரணையின் பயனாக, 1945-ஆம் ஆண்டு ஆடி மாதத்தில் தமது பிரசித்திபெற்ற அறிக்கையை (Report) இந்தக் குழுவினர் சமர்ப்பித்தனர்.

சோல்பரிக் குழுவினர், இலங்கை மக்களுக்கு உள்நாட்டு நிருவாகத்தில் முழுச் சுதந்திரமும் அளிக்கப்பட வேண்டும் என்றே முடிவாகக் கூறியிருந்தனர். அதன் பொருட்டு அரசியல் அமைப்பில் பல மாறுதல்கள் தேவை என்பதையும் குறிப்பிட்டிருந்தனர். இலங்கையின் பாராளுமன்றம் இரு சபைகள் கொண்டதாக இருத்தல் வேண்டும் ; அவை **பிரதிநிதிகள் சபை, செனெட் சபை** என்பனவாம். இலங்கையில், ஆங்கில அரசரின் பிரதிநிதியாகக் 'கவர்னர் ஜெனரல்' என்ற **மகாதேசாதிபதி** இருப்பார். இருசபைகளும் நிறைவேற்றிய எந்த ஒரு சட்டத்தையும் அவரும் ஏற்றுக்கொண்ட பின்னரே, அது அமுலுக்கு வரக்கூடும். மேலும், இராணுவம், வெளிநாடுகளுடன் உறவு போன்ற விசயங்களிலும், ஏதேனும் ஒரு சமயத்தினர் அல்லது வகுப்பினருக்கு இடையூறு விளைக்கக்கூடிய விசயங்களிலும் அவர் தமது விசேட அதிகாரத்தைப் பிரயோகித்து, அவற்றை நேராக ஆங்கில அரசரின் மேற்பார்வைக்கு அனுப்புவதுடன், சட்டத்தையும் அமுலாகாமல் நிறுத்தி வைக்கலாம். இலங்கைப் பாராளுமன்றம், எந்த ஒரு தனி மதத்தினர் அல்லது வகுப்பினரை மட்டும் பாதிக்கும் சட்டங்களை அவர்களது சம்மதமின்றி நிறைவேற்றலாகாது.

கீழ்ச் சபையாகிய **பிரதிநிதிகள் சபையில்** 101 அங்கத்தினர் இருப்பார்கள். இவர்களில் 95 உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவர் ; மீதமுள்ள அறுவரும் கவர்னர் ஜெனரலால் நியமிக்கப் பெறுவர். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தச் சபைக்கு தேர்தல் நிகழ்த்தப்பட வேண்டும். இந்தப் பிரதிநிதிகள் பிரதேசவாரியாகத்

தேர்ந்தெடுக்கப் படுவர். ஏறக்குறைய '75000 மக்கள்' அல்லது '1000 சதுர மைல் பரப்புள்ள பிரதேசம்' என்ற அடிப்படைமீது தொகுதிகள் பிரிக்கப்பட வேண் டும். சிறுபான்மை வகுப்பினரின் பிரதிநிதிகள் இந்தச் சபையில் இடம்பெறுமாறு செய்யும் பொருட்டுத் தகுந்த இடங்களில் 'பல உறுப்பினரை ஒரு தொகுதியினின்றும் தேர்ந்தெடுக்கும் முறை' (Multiple-Member constituency) யையும் பின்பற்றலாம் என்று இந்தக் குழு வினர் அறிவித்துள்ளனர்.

மேற் சபையாகிய **செனட் சபையில்** முப்பது உறுப் பினர் இருத்தல்வேண்டும். அவர்கள் '**செனெற்றர்கள்**' எனப்படுவர். இந்தச் சபையில் உறுப்பினராக இருக்க **முப்பத்தைந்து வயதிற்கு மேற்பட்டவர்களே** அனு மதிக்கப்படுவர். இந்தச் சபை உறுப்பினரில் பதினைந்து பேர்களைக் கவர்னர் ஜெனரல் நியமனம் செய்வார்; சமு தாயத்திற்கு ஏதேனும் ஒரு துறையில் மகத்தான சேவை புரிந்தவர்களே இவ்வாறு நியமனம் பெற அருகதை உடையவர்கள். மீதமுள்ள பதினைந்து உறுப்பினர் களும் பிரதிநிதிகள் சபையால் '**ஒற்றை மாற்றுச் சீட்டு முறை**' (Single transferable vote) யால் தேர்ந் தெடுக்கப்படுவர். இந்தச் சபையை நிரந்தரமானது எனக் கூறலாம். ஏனெனில், இது எந்தச் சமயத்திலும் பூரணமாகக் கலைக்கப்படுவதில்லை. இதன் அங்கத்தினர் களில் மூன்றிலொரு பகுதியினர் மூன்று ஆண்டுகட்கு ஒரு முறை விலகுவர்; அந்தத் தானங்களுக்கு மட்டுமே தேர்வு அல்லது நியமனம் நடைபெறும். செனட் சபை யின் அதிகாரம் ஒரு வரையறைக் குட்பட்டதாக இருக்க வேண்டும். அதாவது, சட்டங்களைத் துரிதமாக அமு லாவதினின்றும் தடுத்து ஒரு கால எல்லைவரை நிறுத்தி வைப்பதற்கு அதிகாரம் உண்டெனினும், சட்டங்களை இந்தச் சபையில் முதன்முதலாகப் பிரேரணை செய்யவோ அல்லது மாற்றவோ உரிமை இல்லை.

ஆங்கில மந்திரி சபையாகிய 'கபினெற்' அனுசரித்துவரும் முறைகளைப் பின்பற்றி இங்கும் ஒரு 'கபினெற்' நிறுவப்படும். பிரதிநிதிச் சபையில் பெரும்பான்மை பலம்பெற்ற கட்சியின் தலைவரே 'பிரதம மந்திரி' என்ற முறையில், அதனை அமைக்கும் உரிமை வாய்ந்தவர். இதனுல் மந்திரிகள் சட்டசபைக்குப் பொறுப்பு வகித்தல் வேண்டும் என்பதும், அவர்களிடையே கூட்டுப் பொறுப்பு இருத்தல் அவசியம் என்பதும் தெளிவாக்கப்பட்டது. மேலும் மந்திரிகளில் இருவரேனும் 'செனெட் சபை'யின் உறுப்பினராக இருத்தல்வேண்டும். மந்திரிகளை மகாதேசாதிபதி பிரதம மந்திரியின் சிபார்சின் பேரில் நியமிப்பாராயினும், ஒவ்வொருவருக்கும் இலாக்காக்களைப் பிரித்து வழங்குவது பிரதம மந்திரியின் பொறுப்பு ஆகும். பிரதம மந்திரி மற்றப் பொறுப்புகளுடன், அயல் நாடுகளுடன் உறவையும், தற்காப்பு விசயங்களையும் கவர்னர் ஜெனரலின் மேற்பார்வையின்கீழ்க் கவனித்து வருவார்.

இவ்வாறு விளக்கமாகச் சோல்பரி குழுவினர் செய்திருந்த சிபாரிசுகள் முற்போக்கானவை என்பதில் சந்தேகமில்லை. பெரும்பாலும், இலங்கைப் பிரதிநிதிகளும், அவர்களது மந்திரிகளும் விரும்பிய அரசியல் சீர்திருத்தத்தின் பல அம்சங்களும் இந்த அறிக்கையிற் காணப்பட்டன. முதலாவதாகக் கவர்னர் ஜெனரலுக்கிருந்த பல விசேட அதிகாரங்கள் மறைந்தன; இரண்டாவதாக, உள்நாட்டுப் பரிபாலனத்தின் முழுப்பொறுப்பும் மக்களின் பிரதிநிதிகளிடமே விடப்பட்டது. முந்திய அரசியலமைப்பில் இருந்ததுபோன்று, மந்திரிகளுடன் நியமனம் பெற்ற இராசாங்க அதிகாரிகளும் நிருவாகத்தை நடத்துவது என்ற நிலைமை இப்போது இல்லை. மூன்ருவதாகத் தனித்தொகுதி முறை இல்லாவிடினும், சிறுபான்மை இனத்தினர் பிரதிநிதிச் சபையில் இடம் பெறுவதற்கான மற்ற மார்க்கங்கள் கூறப்பட்

டிருந்தன. மேலும், சிறுபான்மையினரின் மதத்திற்கும் சமூக வாழ்க்கைக்கும் ஊறு விளையாதபடி தடுக்க மகா தேசாதிபதிக்கு விசேட அதிகாரமும் வழங்கப்பட் டிருந்தது.

ஆயினும், முழுக் 'குடியேற்ற நாட்டு அந்தசு' தமது நாட்டிற்குக் கிடைக்கவில்லையே என இலங்கைத் தலைவர்கள் வருந்தினர். காலஞ்சென்ற திரு டீ. எசு. **சேனநாயக்கா** இங்கிலாந்தில் குடியேற்ற நாட்டு மந்திரி யைச் சந்தித்து, இந்நாட்டு மக்கள் யுத்தகாலத்தில் புரிந் துள்ள உதவியையும், அவர்களது சுதந்திர ஆவலையும்



படம் 33. திரு டீ. எசு. சேனநாயக்கா

நினைவுறுத்தினர். எனவே, 1945 அக்டோபர் திங்களில் தாம் வெளியிட்ட அறிக்கையில் ஆங்கில அரசாங்கம் விரைவில் குடியேற்ற நாட்டந்தசு வழங்குவதாக உறுதி கூறியதோடு, சிற்சில மாறுதல்களுடன் சோல்பரிக் குழு

வினரின் அரசியற்றிருத்தங்களை ஏற்குமாறு அறிவித்தது. 1946-ஆம் ஆண்டில் இவற்றை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசாங்கம் நிறுவப்பட்டது.

**வினுக்கள்**

1. யுத்தகாலத்தில் இலங்கையில் எத்தகைய அரசியல் நிலைமை உருவாகி இருந்தது?

2. எப்போது, எந்தக் காரணங்களால் 'சோல்பரி குழு நியமிக்கப்பட்டது? அதன் உறுப்பினர் யாவர்?

3. 'சோல்பரி குழுவினரின் சிபாரிசுகள்' என்ற தலைப்பின்கீழ் ஒரு சிறு வியாசம் வரைக.

4. அவற்றை எந்த வகையில் சிறந்தவைகளாகக் கூறலாம்?

5. 1945-ஆம் ஆண்டு அறிக்கை எவ்வாறு முக்கியமானது?

## 25. தேசீய அரசாங்கம்

1946-ல் தோன்றிய புதிய அரசாங்கம் உள்நாட்டு நிருவாகத்தில் பெரும் அளவிற்குச் சுதந்திரம் பெற்றிருந்தது. அதனுல், பல முற்போக்கான ஏற்பாடுகளைச் செய்யவும், சீர்திருத்தங்களை நிறைவேற்றவும் அதற்குப் போதிய அதிகாரமும் பொது மக்கள் ஆதரவும் இருந்தது. ஆயினும், தமது நாடு மற்ற நாடுகளைப்போலச் சுயேச்சையாக விளங்கவில்லையே என்று இலங்கை மக்களும், தலைவர்களும் ஓரளவு கவலைகொண்டிருந்தனர். கானடாவையும் அவுசுத்திரேலியாவையும் போலக் 'குடியேற்ற நாட்டந்தசும்,' பிரித்தானியரின் 'காமன் வெல்த்' என்ற சாம்ராச்சியக் கூட்டுறவில் மற்ற நாடுகளுக்குச் சமமான தானமும் வேண்டுமெனத் தலைவர்கள் இடைவிடாது வற்புறுத்தி வந்தனர். அப்போது பிரித்தானியரிடையிலும் இத்தகைய கோரிக்கைகளுக்குச்

சாதகமான சூழ்நிலை உருவாகிக்கொண்டிருந்தது. பதவி வகித்த தொழிற் கட்சியினர் இந்தியா, இலங்கை, பர்மா முதலிய நாடுகளுக்குச் சுதந்திரம் கொடுத்தேனும், அவற்றின் நட்பையும் நல்லுறவையும் பெற முயன்றனர். இக்காரணங்களால், 1947-ஆம் ஆண்டு ஆனி மாதம் 18-ந் திகதியன்று மகாதேசாதிபதி சட்டசபையைக் கூட்டுவித்து, இலங்கையை ஒரு குடியேற்ற நாட்டந்தசுப் பெற்ற நாடாகவும், 'காமன்வெல்த்'தின் அங்கத்தினராகவும் பாவிக்க ஆங்கில அரசாங்கம் சித்தமாயிருப்பதை வெளியிட்டார். பிறகு, பதினான்கு ஆண்டுகளாகப் பணிபுரிந்துவந்த சட்டசபை இறுதியாகக் கூடிக் கலைந்தது. விரைவில், பொதுத் தேர்தல் நிகழ்த்தப்பெற்று, 'இலங்கைப் பாராளுமன்றம்' முதன்முறையாக டிசம்பர் மாதத்தில் கூடியது. காலஞ்சென்ற திரு. டீ. எசு. சேனநாயக்கா பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கு முன்னரே ஆங்கிலப் பாராளுமன்றத்தில் இலங்கைச் சுதந்திரச் சட்டம் நிறைவேறியிருந்தமையால், அதை ஒட்டி இலங்கையிலும் பாராளுமன்றத்தில் பிரதமர் பிரேரித்த சுதந்திரத் தீர்மானம் பெருவாரியான ஒட்டுகளால் நிறைவேறியது.

1948-ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் நான்காம் திகதியன்று இலங்கை ஓர் 'டொமீனியனாக' ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆயினும், பத்தாம் திகதியன்று ஆங்கில மன்னரின் பிரதிநிதியாக அவரது சகோதரரான கிளசுடர் கோமகனும், அவரது மனைவியும் புதிய டொமீனியன் பாராளுமன்றத்தைத் தொடங்கிவைத்தனர். மன்னர் எழுதியனுப்பியிருந்த செய்தியை அப்போது கிளசுடர் கோமகன் வாசித்தார். அதன் சுருக்கம் பின்வருமாறு:—

(1) 1796-ல் கொழும்பு நகரம் சரணடைந்தமையாலும், 1802-ல் ஒல்லாந்தர் தம் ஆட்சி உரிமையை இழந்தமையாலும் ஆங்கிலச் சாம்ராச்சியத்தின் பகுதியாகக்

கடலோரப் பிரதேசங்கள் விளங்கின. பிறகு 1815-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தால் கண்டியும் ஆங்கிலச் சாம்ராச்சியத்தின் பகுதியாயிற்று. இவ்வாறு இலங்கையின் நிருவாகம் ஒன்றுபடுத்தப்பட்ட பிறகு, படிப்படியாக இலங்கை அரசியற் சுதந்திரம்பெற்று வந்திருக்கிறது. 1912-ஆம் ஆண்டில் நிறைவேறிய சட்டத்தால், தேர்தல் முறையும், 1931-ல் டொனமூர் சட்டத்தில் சுயஆட்சிக்குரிய பல அதிகாரங்களும், 1944-ல் சோல்பரி குழுசெய்த சிபார்சுகளின் பலனுக 1947-ல் புதிய அரசாங்கமும் தோன்றியுள்ளன. ஆகவே, சுயாட்சி முறையின் வளர்ச்சி முற்றுப்பெற்றதற்கு அடையாளமாக, இப்போது இலங்கை 'குடியேற்ற நாட்டந்தசு' பெற்றுவிட்டது.

(2) இனி, 'பிரிட்டிசு காமன்வெல்த்'தில் இலங்கை அங்கம் வகித்துக்கொண்டிருக்குமாகையால், அதனேடு 'காமன்வெல்த்' மந்திரி மூலமாகவே இங்கிலாந்து தொடர்புகொள்ளமுடியும்.

(3) சேர். கென்றி மூர் முதலாவது கவர்னர்-ஜெனரலாக விளங்குவார். அவரது நியமனம், இலங்கை மந்திரி சபையைக் கலந்துகொண்ட பிறகே செய்யப்பட்டது.

(4) அரசாங்க சேவை புரியும் அதிகாரிகளுக்கு ஊதியம் அளிப்பது, மக்கள் சபையால் வரவு செலவுத் திட்டம் வகுக்கப்படும்போது நிர்ணயிக்கப்பட வேண்டியதாகும்.

(5) இலங்கை மந்திரி சபையினர், தமது புதிய பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் உணர்ந்து, மக்கள் நலனுக்கு உகந்த திட்டங்களை வகுத்தல் வேண்டும்; நாட்டில் முன்னேற்றமும் வெளியுலகில் அமைதியும் உண்டாக்கப் பாடுபடவேண்டும்.

அரசரின் தெளிவும் உருக்கமும் நிறைந்த சொற்பொழிவானது, இலங்கையின் வரலாற்றில் அப்போது

தொடங்கப்படும் புதிய அத்தியாயத்திற்கு ஒரு முகவுரை யாக அமைந்தது எனலாம். அந்தச் சொற்பொழிவில், இலங்கை அடைந்துள்ள புதிய நிலையும், அதனுல் தோன்றியுள்ள புதிய உரிமைகளும் கடமைகளும் தெளி வாக வலியுறுத்தப்பட்டிருந்தன.

இந்த அரசியல் மாறுதலின் விளைவாக, மகா தேசாதி பதியின் அதிகாரமும் நிலையும் மாறுதலடைந்தன. இங்கிலாந்தில் அந்த நாட்டு மன்னருக்கு என்ன அதி காரங்கள் உள்ளனவோ, ஏறக்குறைய அத்தகைய அதி காரங்களே இவருக்கு இலங்கையில் அளிக்கப்பட்டிருந் தன. அவர் ஆங்கில மன்னரின் பிரதிநிதியாக விளங்கு வார். அவருக்கு விசேட அதிகாரங்கள் எதுவும் இல்லை யாகையால், அரசாங்கப் பொறுப்பு முழுதும் பாராளு மன்றத்தின் தனி உரிமை ஆகிவிட்டது.

மேலும், ஆங்கில நாட்டிற்கும் இலங்கைக்கு மிடையே இருந்த உறவிலும் பெரும் மாறுதல் தோன்றி யது. முன்னர் இருந்ததுபோல இரு நாடுகளுக்கு மிடையே ‘உயர்வு—தாழ்வு’ கூறத்தக்கதாக உறவு எது வும் இனி இருக்க முடியாது. ஏனெனில், இலங்கைச் சுயஆட்சி உரிமைபெற்ற காமன்வெல்த் நாடுகளில் ஒன்ருகி விட்டதல்லவா? இனிமேல், இலங்கையிலுள்ள பாராளுமன்றம் கேட்டுக்கொண்டாலன்றி, ஆங்கில நாட்டு மந்திரி சபையும் பாராளுமன்றமும் இலங்கை அரசியல் சம்பந்தமாகச் சட்டங்கள் செய்வதற்கு உரிமை கிடையாது. மேலும், முன்போலன்றி, இந்த இருநாடு களிடையிலும் தொடர்பு கொள்வதற்கு ‘ஐகமிசனர் கள்’ என்ற இராசதூதர்கள் நியமிக்கப்படுவார்கள். இலங்கையில் தங்கும் ஆங்கில ‘ஐகமிசனர்’ தம் நாட்டினரின் சார்பிலும், இங்கிலாந்திலிருக்கும் இலங்கை ‘ஐகமிசனர்’ இந்த நாட்டின் சார்பிலும் பேசுவதற்கு அதிகாரம் பெற்றிருப்பார்கள்.

மேலும், இலங்கை சர்வ சுதந்திரம் படைத்த நாடாகி

விட்டமையால், பிற நாடுகளிற் றனது தூதர்களை நியமிக்கவும், உடன்படிக்கைகள் செய்துகொள்ளவும் இலங்கை அரசாங்கத்திற்குப் பூரண உரிமை உண்டு. 'காமன்வெல்த்'தில் அங்கம் வகிக்கும் நாடு என்ற முறையில் மற்ற 'காமன்வெல்த்' நாடுகளைக் கலந்து அவைகளுடன் விவாதித்த பின்னரே, அத்தகைய உடன்படிக்கைகள் முதலியன செய்துகொள்ள வேண்டும் என்ற பொதுவான நிபந்தனை ஒன்றுமட்டும் உண்டு. அன்றியும், இலங்கை தனது பாதுகாப்பிற்காகப் பிரித்தானிய சர்க்காருடன் ஒரு தற்காப்பு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அதன் பிரகாரம், இலங்கையை அன்னியர் தாக்காதவாறு பாதுகாக்கும் பொறுப்பு ஆங்கிலேயருக்கு உண்டு; அவர்களுக்குப் படைத்தளங்களும் வசதிகளும் அளிப்பது இலங்கை அரசாங்கத்தின் கடமையாகும்.

இவ்வாறு 1948-ல் இலங்கை சுயஆட்சி பெற்ற 'டொமீனியனாக' மாறிவிட்டதிலிருந்து, அதன் வரலாற்றில் புதியதோர் சகாப்தம் தோன்றிவிட்டதென்பதில் ஐயமில்லை. காலஞ் சென்ற திரு. டீ. எசு. சேனநாயக்காவும் அவருக்குப் பிறகு அவருடைய புதல்வரான திரு. டட்லி சேனநாயக்காவும் பிரதமர்களாக விளங்கி, நாட்டைத் திறம்பட நிர்வகித்துள்ளனர். இவர்களது முயற்சியால், சிங்களமும், தமிழும் இந்த நாட்டின் சுதேச பாசைகள் என அங்கீகரிக்கப்பட்டன; கல்வி வளர்ச்சியுற்றது; 'இலங்கைச் சர்வகலாசாலை' திருத்தியமைக்கப் பெற்று, புகழுடன் திகழலாயிற்று. பண்டைய சிங்கக் கொடி, நாட்டின் தேசீயக் கொடியாக அங்கீகரிக்கப்பட்டது. 'கொழும்புத் திட்டத்தில்' இந்த நாடும் பங்கெடுத்துக் கொண்டமையால், நாட்டின் நீர்ப்பாசனத் திட்டங்களும் தொழில்களும் ஓரளவு அபிவிருத்தியடைந்துள்ளன. 'காமன் வெல்த்' நாடுகளுடன் உறவு ஓங்கி வளர்ந்து வருவதுடன், ஐக்கிய அமெரிக்கா, பொதுவுடமைச் சீனா, பர்மா முதலிய நாடுகளுடனும் நல்லுறவு

பெருகி வருகிறது. திரு. டட்லிக்குப் பின் பிரதமராக இருந்த சேர். யோன். கொத்தலாவலையின் பெரு முயற்சியால் ஆசிய நாடுகள் ஒன்றுபட்டு 1955-ல் பாண்டுங் மகாநாட்டில் கூடித் தமக்குள் ஒற்றுமையையும் அமைதியையும் நிலை நாட்டியதானது, உலக வரலாற்றில்



படம் 34. தேசாதிபதி சேர். ஒலிவர் குணதிலகாவும், பிரதம மந்திரி சேர். யோன். கொத்தலாவலையும்

இடம் பெறத்தக்க சம்பவமாகும். அன்றியும் 1955-ம் ஆண்டு ஆடி மாதம் தொடங்கி இலங்கையின் மகா தேசாதிபதியாக மேன்மை தங்கிய சேர். ஒலிவர் குண

திலக அவர்கள் இருந்துவருகிருர். இவரே இப்பதவியை ஏற்ற முதலாவது இலங்கையராவர்.

திரு. கொத்தலாவலையின் ஆட்சியில் இலங்கைக்கும் பிறநாடுகளுக்குமிடையே தொடர்பு அதிகரித்ததாயினும், உள்நாட்டுப் பிரச்சனைகள் பல தீர்க்கப்படாமலே இருந்து விட்டன. அதனுல் மக்கள் அதிருப்தியுற்றனர். 1956-ம்



படம் 35. திரு. S. W. R. D. பண்டார நாயக்கா அவர்கள்

ஆண்டில் நிகழ்ந்த பொதுத் தேர்தலில் அவரது ஐக்கியக் கட்சி தோல்வியுற்று, திரு. **பண்டார நாயக்க** அவர்களின் 'பெருமுன' கட்சி பெரும் வெற்றியடைந்தது. இதன் பயனுக, **பண்டார நாயக்க** பிரதமரானுர். "சோசலிசம்" எனப்படும் சமதர்மக் கொள்கையில் இவர் மிகுந்த பற்றுடையவர். இவரது முயற்சியால், இலங்கையின்

அயல்நாட்டுக் கொள்கை பெரிதும் மாற்றப்பட்டுள்ளது. 'இந்தியப் பிரதமரைப் போன்று நடுநிலை வகிப்பதும்,



படம் 36. திரு. S. J. V. செல்வநாயகம் அவர்கள்

சனநாயகத்தைப் பாதுகாப்பதும் தமது கொள்கைகள்' என இவர் அறிவித்துள்ளார். மேலும், காமன்வெல்த் அமைப்பிலடங்கிய ஒரு குடியரசாக இலங்கையை மாற்று வதற்கும் இவர் முயற்சி செய்து வருதல் குறிப்பிடத்

தக்கது. இவரது ஆட்சிக் காலத்தில் இந்தியரின் குடியேற்றம், பிரசாவுரிமை போன்ற பிரச்சனைகளும் தீர்க்கப் படலாமென்று மக்கள் நம்புகின்றனர். ஆயினும், இவரது கட்சியினர் மொழிப் பிரச்சனையைக் குழப்பி நாட்டின் ஒற்றுமையைக் குலைக்க வழிதேடியிருப்பது, வருந்தத் தக்கது. சிங்கள மொழியை மட்டும் அரசாங்க மொழியாக்கித் தமிழைப் புறக்கணித்தமையால் தமிழ் மக்கள் மனம் நொந்து அரசியல் கிளர்ச்சி தொடங்க நேர்ந்துள்ளது. அண்மையில் நிகழ்ந்த மாநாடுகளிலும் திரு. S. J. V. **செல்வநாயகம், வன்னியசிங்கம்** முதலிய தலைவர்கள் 'மொழிப் பிரச்சனையால், நாடு பிளவுற்று, தமிழ்ப் பகுதிகள் சுயாட்சியுரிமை பெற்ற பிரதேசமாய்த் திகழ நேரிடும்' என்று எச்சரித்துள்ளனர். ஆயினும், திரு. பண்டார நாயக்கா அவர்களது அரசியல் நுண்ணறிவால் நாட்டின் ஒற்றுமையும் சிறப்பும் பாதுகாக்கப்படும் என்று நம்புவோமாக.

இவ்வாறு, சிறிய நாடாயினும், இலங்கை பிற நாடுகளுடன் சிறந்த முறையில் முன்னேறி வருவது போற்றற்குரியதாகும்.

### வினாக்கள்

1. யுத்த காலத்திற்குப் பிறகு இலங்கை மக்கள் விரும்பிய அரசியல் மாறுதல்கள் யாவை ?
2. 1947-ல் நிகழ்ந்த முக்கியமான சம்பவங்கள் யாவை ?
3. அரசர் பெருமானது பிரசங்கத்தில் காணப்பட்ட கருத்துக்களைச் சுருக்கி வரைக.
4. புதிய நிலைமையால், மகாதேசாதிபதியின் அதிகாரமும் இலங்கை—இங்கிலாந்து உறவும் எந்த வகைகளில் மாறுதலடைந்தன ?
5. இலங்கையின் புதிய அந்தசுப் பற்றித் தெளிவாக விளக்கிக் கூறுக.
6. இலங்கை 1948-க்குப் பிறகு அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து ஓர் சிறு குறிப்பு வரைக.
7. இலங்கையின் புதிய பிரதமர் யார் ? இவரது கொள்கைகள் யாவை ?

# இரண்டாம் பகுதி

# "உலக சரித்திரம்"

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | மத்திய கால நாகரிகத்தின் மறைவும் நவீன நாகரிக உதயமும் | ... 231 |
| 2. | மதச் சீர்திருத்தம் | ... 240 |
| 3. | ஐரோப்பிய வல்லரசுகள் | ... 250 |
| 4. | இங்கிலாந்திற் சனநாயக வளர்ச்சி | ... 257 |
| 5. | சாம்ராச்சிய வேட்கையும் ஐரோப்பிய யுத்தங்களும் | ... 271 |
| 6. | பிரசியாவின் எழுச்சி | ... 281 |
| 7. | மகா பீற்றரின் அருஞ் செயல்கள் | ... 288 |
| 8. | அமெரிக்கச் சுதந்திரப் போர் | ... 295 |
| 9. | பிரான்சியப் புரட்சி | ... 304 |
| 10. | தொழிற் புரட்சியும் சமூக மாறுதல்களும் | ... 318 |
| 11. | இத்தாலி ஒற்றுமையுறுதல் | ... 330 |
| 12. | சேர்மனியும் பிசுமார்க்கும் | ... 340 |
| 13. | பிரித்தானிய சாம்ராச்சியத்தின் வளர்ச்சி | ... 350 |
| 14. | கீழ்த்திசைப் பிரச்னை | ... 363 |
| 15. | ஆசியாவிற் றேசீய உணர்ச்சியின் தோற்றம் | ... 374 |
| 16. | அமெரிக்க உள்நாட்டுப் போர் | ... 358 |
| 17. | முதல் உலகப் போருக்கு முன்னர் ஆபிரிக்காவிலும் ஐரோப்பாவிலுமிருந்த அரசியல் நிலைமை | ... 392 |
| 18. | போரும் அதன் விளைவுகளும் | ... 398 |
| 19. | சருவ தேச சங்கம் | ... 406 |
| 20. | ரூசியாவில் பொதுவுடமை அரசாட்சி | ... 409 |
| 21. | புதிய சர்வாதிகார இயக்கங்கள் | ... 414 |
| 22. | இரண்டாம் உலகப்போர் | ... 420 |
| 23. | சமாதான ஏற்பாடு | ... 429 |
| 24. | இன்றைய உலகம் | ... 436 |

## 1. மத்திய கால நாகரிகத்தின் மறைவும் நவீன நாகரீக உதயமும்

ஐரோப்பிய சரித்திரத்தில் கிரேக்கரும் உரோமரும் உன்னத நிலையடைந்திருந்த காலத்தைப் '**புராதன வரலாறும்** (Ancient history), பிறகு கி. பி. ஐந்தாம் நூற்றுண்டிலிருந்து பதினுன்காம் நூற்றுண்டு வரைக் கிறித்தவ சமயம் பரவி மதக்குருமாரின் ஆதிக்கம் ஓங்கி யிருந்த காலத்தை '**மத்தியகால வரலாறும்**' வருணிக்கின்றன. சரித்திராசிரியர் கிராண்ட் என்பார் கூறிய வாறு, 'ஐரோப்பாவின் மத்தியகாலச் சரித்திரம், மதக் குருமாரின் ஆதிக்க எழுச்சியினின்றும் தொடங்கி அவர்களது ஆதிக்க வீழ்ச்சியுடன் முடிவடைகிறது.' இதனுல், மத்தியகாலமென்று கூறப்படும் சுமார் ஆயிரம் ஆண்டுகளிலும் கிறித்தவ மத இயக்கமும் மதகுருமாரின் ஆதிக்கமும் மிக அதிகமாகப் பரவி வளர்ந்திருந்தமை உணரத் தகும். சுருங்கக் கூறின், அக்காலத்திய நாகரிகம் மதக் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு உருவாகி யிருந்தது.

ஐந்தாம் நூற்றுண்டில் கொன்சுதாந்தைன் முதலிய உரோம சக்கராதிபதிகளின் ஆதரவு பெற்ற கிறித்தவ சமயமானது, பிறகு இரு நூற்றுண்டுகளில் மேற்கு ஐரோப்பிய நாடுகளெங்கும் பரவியது. அப்போது ஆங்காங்குக் குருபீடங்கள் அமைக்கப்பட்டனவாயினும், உரோமாபுரியிலிருந்த மதகுருவான 'போப்' கிறித்தவ மண்டலத்தின் ஏக தலைவராக அங்கீகரிக்கப்பட்டு, ஒவ்வொரு நாட்டிலுமுள்ள மதக்குருமார் அவரது ஆணை வழிப்படி ஒழுகினர். நாளடைவில், ஒவ்வொரு தேசத்தின் மன்னரும் மக்களும் பணியுமளவில், போப்புகளின் அதிகாரம் வளர்ச்சி பெற்றிருந்தது.

இத்தகைய நிலைமை காரணமாகச் சமுதாய வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும், கிறித்தவமதக்

கொள்கைகள் ஊடுருவிச் சென்றன. துறவி மடங்களே பெரும்பாலும் கல்வி கற்ருேரின் உறைவிடமாக இருந்தமையாலும், மதக்குருமாரே கல்வி போதிக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததாலும், அவர்கள் விவிலிய நூலை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளைப் போதித்துச் சில நம்பிக்கைகளை மக்களிடை வளர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். அதனுல், தமது கொள்கைகளுக்கு மாறுபட்ட கருத்துக்கள் அடங்கிய புராதன நூல்களையும், பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞான ஆராய்ச்சியையும், அவர்கள் புறக்கணித்ததில் வியப்பொன்றுமில்லை. மேலும், இலக்கியம், காவியம், சித்திரம், சிற்பம் போன்ற கலைகளும் அவர்களது கொள்கைகளுக்கு அடிமைப்பட்டிருந்தன. இதனுல் மக்கள் விசாலமான அறிவைப்பெற முடியாமற் போனதால், இந்தக் காலத்தை 'அஞ்ஞான இருள் சூழ்ந்த காலம்' (Dark Ages) என்றும் பிற்காலத்தினர் வருணித்ததுண்டு.

பற்பல சம்பவங்கள் காரணமாக, இத்தகைய நிலை பதினுன்காம் நூற்ருண்டிற்குப் பிறகு நீடிக்கவில்லை. ஏனெனில், ஒவ்வொரு துறையிலும் திறமை மிக்க அறிஞரும் கலைஞரும் தோன்றி, நவநவமான வழிகளில் அறிவைப் பெருக்கி, கலைகளை வளர்த்தனர். இதனுற் புது வெள்ளம்போலப் புதிய அறிவியற் கலைகள் பெருகி, மக்களிடையே அறிவியல் ஆர்வத்தையும் ஆராய்ச்சித் திறனையும் வளர்த்தன. இத்தகைய அறிவு வளர்ச்சியின் வேகத்தில், பண்டைய மதக் கல்வியும் குருமார் வளர்த்த நம்பிக்கைகளும் மங்கி மறைந்துபோனதில் ஆச்சரியமில்லை. இதனையே ஐரோப்பிய சரித்திரத்தில் 'மறுமலர்ச்சிக் காலம்' (Renaissance) என்பர். இந்த மறுமலர்ச்சியின் அம்சங்களைப் பற்றி வருணிப்பதற்கு முன்னர், இது எக்காரணங்களால் தோன்றியது என்பதை ஆராய்தல் நலம்.

1453-ல் கொன்சுதாந்திநோபில் நகரத்தைத் துருக்கியர் கைப்பற்றியதும், அங்கிருந்த அறிஞர்களும் தத்துவாசிரியர்களும் தமது நூற்களேயும் கலேச் செல்வங்களேயும் சுமந்துகொண்டு மேற்கு ஐரோப்பாவை நோக்கி ஓடினர். அங்கே தாம் சென்ற இடங்களிற் கிரேக்க இலத்தீன் மொழிகளேயும் அவற்றிலுள்ள இலக்கியங்களேயு மவர்கள் போதித்தமையால், மக்களிடையே அந்த இலக்கியங்களில் காணப்பட்ட தத்துவங்களேக் கற்பதில் ஆர்வம் வளர்ந்தது. இவ்வாறு கொன்சுதாந்திநோபிலின் வீழ்ச்சி 'மறுமலர்ச்சிக்கு' ஆதாரமாக இருந்ததெனினும் அதனேயே பிரதான காரணமாகக் கூறுவதற்கில்லே. அன்றியும், சேர்மனியில் கூடன்பர்க் என்பார் முதன் முதலாக 1450-ம் ஆண்டில் அச்சு இயந்திரத்தை அமைத்து நூல்களே வெளியிடலானுர். இவ்வாறு ஆயிரக்கணக்கான புத்தகப் பிரதிகள் வெளியானமையால், மக்கள் கல்வி கற்பதும் பல விடயங்களே அறிந்துகொள்வதும் சுலபமாயிற்று.

மேலும், பல நாடுகளிலும் சிறந்த அறிஞரும் கலேவாணரும் தோன்றி அறிவு விளக்கம் தரக்கூடிய நூல்களேயும், சிற்ப சித்திரங்களேயும் உலகிற்கு அளித்தனர். இதுவே மறுமலர்ச்சி இயக்கத்திற்கு மூல காரணமாகும். இனி, இத்தகைய பெரியோரால் இந்த இயக்கம் எவ்வாறு வளர்க்கப்பட்டதென்பதை ஆராய்வோம்.

கலேவளர்ச்சிக்குப் பெயர்போன இத்தாலி நாட்டிலேயே இந்த இயக்கம் தோன்றியது. பதினுன்காம் நூற்ருண்டிற் கவிகளிற் சிறந்த தாந்தே ஓர் ஒப்பற்ற காவியம் எழுதிமுடித்தார். பீட்றிசு (Beatrice) என்ற காதலியைப் பின் தொடர்ந்து கவிஞன் சுவர்க்கலோகத்திற்கும் நரகத்திற்கும் புரிந்த யாத்திரையை விளக்குவதான 'தெய்வீக நன்னூல்' (Divine Comedy) என்ற இந்தக் காவியம் இலத்தீன் மொழியில் ஈடு இணேயற்ற காவியமாக விளங்குகின்றது. இதில்,

கிரேக்க காவியங்களைத் தழுவிய முறையில் வருணனை களும் வரலாறும் அமைக்கப்பட்டிருத்தலால், பண்டைய கிரேக்க நாகரிகத்திற்கு மறுமலர்ச்சி இயக்கம் கடன்பட் டிருத்தலை உணரலாம். இவருக்குப் பிறகு சரளமான இலத்தீன் நடையில் **பொக்காச்சியோவின்** 'பத்து இரவுகள்' என்ற கதைகளும், **புளூடார்க்கின்** 'வாழ்க்கை வரலாறுகள்' என்ற வசன நூலும் புது முறையில் அமைந்தன. மேலும், **புளோரன்சு** முதலிய இத்தாலிய நகரங்களில் பிரபுக்களின் ஆதரவினால் கலைகள் வளர்ச்சி யுற்றன. **இலியநாடோ டா வின்சி**, புளோரன்சு நகரில் விளங்கிய கலைவல்லுநர். இவர் தீட்டிய 'சித்திரங் களில் மோனலிசா'வும் 'ஏசுநாதரின் இறுதி நாள் போசனமும்' தலைசிறந்தவை. இலியநாடோ சிற்பங்கள் அமைப்பதிலும் இயந்திரங்கள் தயாரிப்பதிலும் புகழ் பெற்றிருந்தார். பறவைகளைப் போல வானத்தில் மனி தனும் பறக்க இயலும் வகையில் புதிய இயந்திரமொன்று அவரால் புனையப்பட்டதென்றும் கூறுவர். அவருக்குப் பிறகு தோன்றிய **மைக்கேல் ஏஞ்சலோ, இராபேல்** போன்ற ஓவிய நிபுணர்கள் ஒப்பற்ற சித்திரங்களைத் தீட்டி வைத்தனர். இவர்களில் மைக்கேல் ஏஞ்சலோ சிறந்த சிற்ப உருவங்களை அமைப்பதிலுந் திறமை படைத்தவராக விளங்கினர்.

இவ்வாறே பிற நாடுகளிலும் இலக்கியமும் கலை களும் வளர்ச்சியுற்றன. இங்கிலாந்தில் **சாசர்** முதன் முதலாகத் தெள்ளிய ஆங்கில நடையில் கவிதைகள் புனைந்தார். பதினான்காம் நூற்றாண்டில் '**மதச் சீர் திருத்தத்தின் விடிவெள்ளி**'யாகத் தோன்றிக் கிறித்தவ சமயத்தைத் தூய்மைப்படுத்த முயன்ற **விக்ளிப்** விவிலிய நூலை மொழிபெயர்த்தார். பதினாறாம் நூற்றாண்டில் ஆங்கில மன்னன் எட்டாம் கென்றியின் அமைச்சராக விளங்கிய **சர் தாமசு மூர்** 'கனவு உலகம்' (Utopia) என்ற வசன நூலை வெளியிட்டார். ஏறக்குறைய அதே

காலத்தில், **இராசுமசு** 'அறிவீனத்தின் புகழ்ச்சி' என்ற நூலில் மூடநம்பிக்கைகளையும் அவற்றை மதக்குருமார் பயன்படுத்துவதையும் தெளிவுபடுத்தினர். இவரும் **கோலேயும்** இங்கிலாந்திற் கிரேக்க, இலத்தீன் மொழி களின் போதனைக்கு அடிகோலினர். இந்த நூற்றாண் டின் இறுதியில், எலிசபெத்தின் உன்னதமான ஆட்சிக் காலத்தில், உலகம் புகழும் **சேக்சுபியரும், கவி இசு பென்சரும்,** அறிஞர் **பிரான்சிசு பேக்கனும்** தோன்றி னர். சேக்சுபியரின் சோக நாடகங்களும் (tragedies) இன்பச்சுவை ததும்பும் நாடகங்களும் (comedies) உல கெங்கும் புகழ்பெற்றவை. அவருடைய கதாபாத்திரங்க ளான **காம்லெட், இலீயர், இயாக்கோ, மாக்பெத், அந் தோனி, போல்சிடாப்** (Falstaff) **கிளியோபாட்ரா** முதலியவை உன்னத சிருட்டிகளாகவும் மனிதர்களது பல்வகை மனப்பான்மைகளைத் தெளிவாகப் பிரதிபலிப் பவைகளாகவும் இருக்கும் விந்தையை அனைவரும் போற்றுகின்றனர். அவர்களுக்குப் பிறகு **யோன் மில் டன்** தோன்றித் தமது 'சுவர்க்கம் நீத்தல்' என்ற பெருங் காவியத்தால் மொழியை வளம்படுத்தினர். இங்கி லாந்திலும் **இரயினல்ட்சு** போன்ற கலைஞர்களின் ஓவியங் கள் சிறப்புற்றிருந்தன. பிரான்சு, சேர்மனி, காலந்து முதலிய நாடுகளிலும் இத்தகைய மறுமலர்ச்சி தோற்ற மளித்தது.

மக்களிடையே பகுத்தறிவு வளர்ந்ததற்கேற்ப, விஞ் ஞான ஆராய்ச்சியும் அபிவிருத்தியடைந்தது. உலகம் உருண்டை வடிவமானதென்றும் பூமியே சூரியனைச் சுற்றுகிறதென்றும் **கொபர்நிகசு** வெளியிட்டான். வான சாத்திர நிபுணனன **கலீலியோ** போப்பின் எதிர்ப்பை யும் பொருட்படுத்தாமல், தூரதிருட்டிக் கண்ணாடியைப் புனைந்து அதன் உதவியால் கிரகங்களின் நிலையை ஆராய்ந்தான். **கெல்பர்** என்ற செர்மனியனும் இந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தினன். இங்கி

லாந்தில் **இரேசர் பேக்கன்** என்ற பாதிரி பதின்மூன்காம் நூற்ருண்டிலேயே பரிசோதனை புரிந்து ஆராய்ச்சி புரியும் முறையைத் தெளிவுறுத்தினுன். இவ்வாறு விஞ்ஞானமும் வளர்ந்ததால், மூட நம்பிக்கைகளும் தவருன கருத்துக்களும் மறைந்து, மதத்தாபனத்திலும் சமுதாயத்திலும் பல மாறுதல்கள் தோன்ற ஆரம்பித்தன.

அறிவு வளர்ச்சி காரணமாக, மக்கள் பிறநாடுகளைப் பற்றி அறிய ஆர்வமும் துணிவும் கொண்டனர். அப்போது நெடுங்காலமாக ஐரோப்பியர் பயன்படுத்திவந்த தரை மார்க்கம் துருக்கியர் வசப்பட்டதால், கீழைத் தேசங்களுக்குப் புதிய கடல் மார்க்கம் கண்டுபிடிப்பதில் ஐரோப்பிய மாலுமிகள் ஈடுபட்டனர். அன்றியும், சில புதிய கருவிகளும் **மார்க்கோபோலோ** போன்ற யாத்திரீகர்கள் எழுதி வைத்திருந்த தேசப்படங்களும் யாத்திரைக் குறிப்புக்களும் அவர்களது ஆர்வத்தைப் பெருக்கின. சீன நாட்டினரால் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட **"கொம்பசு"** என்ற **திசையறி கருவியும்** ஒரு தலத்தின் பாகையை அளவிட உதவும் **அசுரலோப்** என்ற கருவியும் அவற்றில் முக்கியமானவை. மேலும் போர்த்துக்கீச அரசனுன **கென்றி**, சுபானிய அரசனுன பெர்டினண்டு போன்றவர்களும் அத்தகைய மாலுமிகளை ஆதரித்தனர். அவர்களில் 'புயல் முனை'யைக் கண்டறிந்த **பார்த்தலோமியோடயசும்**, 1492-ல் அமெரிக்காவைச் சென்றடைந்த **கொலம்பசும்**, 1498-ல் நன்னம்பிக்கை முனை வழியாக இந்தியாவை யடைந்த **வாசு கொடகாமாவும்** பிரதானமானவர்கள். பின்னர் இங்கிலாந்திலிருந்து **யோன் கபொட்டும், செபஸ்தியன் கபொட்டும்** ஆங்கில மன்னனுன ஏழாம் கென்றியின் உதவி பெற்று, வடகிழக்குத் திசை நோக்கிச் சென்று, 'நியூபவுன்லாந்து' முதலிய பிரதேசங்களை ஆராய்ந்தனர். அப்போது ஒல்லாந்த மாலுமி **அமெரிகோ வெசுபூசியும்** அமெரிக்காவின் சிற்சில பகுதிகளை ஆராய்ந்த

மையால், அந்தக் கண்டம் "அமெரிக்கா" எனப் பெயர் பெற்றது. எனினும் அமெரிக்கக் கடல்மார்க்கம் சுபானியர் வசத்திலும் கீழை நாடுகளுக்குச் செல்லும் கடல்மார்க்கம் போர்த்துக்கீசர் வசத்திலும் தனி உரிமையாக விடப்பட்டிருந்தன. கிறித்தவ மண்டலத்தின் ஏக குருவாக அக்காலத்தில் விளங்கிய போப்பும் இத்தகைய தனி உரிமையை அங்கீகரித்து அறிக்கை வெளியிட்டார். இவ்வாறு 'புது உலகம்' கண்டுபிடிக்கப்பட்டதால், ஐரோப்பியரின் வியாபாரமும் சாம்ராச்சியமும் விரிவடைந்தன. அவர்களது நாகரிகம் கடல்கடந்து பரவியது. ஐரோப்பா உலக ஆதிபத்தியம் பெறும் காலமும் நெருங்கியது.

இந்த மறுமலர்ச்சிக் காலத்தில், ஒவ்வொரு நாட்டிலும், சமுதாயத்திலும், அரசியலிலும் பெரும் மாறுதல்கள் தோன்றி விட்டன. மத்திய காலத்திலெங்கும் நிலமானிய முறையே (Feudalism) பரவியிருந்தது. அதனுற் பிரபுக்களின் ஆதிக்கம் ஓங்கி, மன்னராட்சியின் பெருமை தடைப்பட்டது. ஆனல் பதினைன்காம் நூற்றுண்டிலிருந்து மக்கள் ஒற்றுமைப் பட்டதாலும், தேசீய உணர்ச்சி வளரத் தொடங்கியதாலும், 'மன்னனே நாட்டின் காவலன்; அவனே சமுதாய ஒற்றுமையின் சின்னம்' என்பன போன்ற கருத்துக்கள் பரவின. அதனல் மன்னனுட்சி வலுத்து, பிரான்சிலும், சுபெயினிலும் தடையற்ற கொடுங்கோன்மை மிக்க அரசுகளும், இங்கிலாந்தில் தாராள மனப்பான்மை கொண்ட தியூடர் வல்லரசும் நிலைபெற்றன. தியூடர்கள் ஆற்றலும் செல்வாக்கும் படைத்தவர்களாயினும், நீண்ட காலமாக வளர்ந்து வந்த பாராளு மன்றத்தையும் ஜனநாயக ஏற்பாடுகளையும் அழித்துவிட விரும்பவில்லை. ஆகையால், பிரான்சு நாட்டிலிருந்த "சுடேட்சு ஜெனரல்" சபையும் சுபானியரின் "கார்ட்டீச்" முதலிய மன்றங்களும் தமது அதிகாரத்தை இழந்த போதிலும், இங்கிலாந்தில் மட்டும், மன்னனுட்சியின் நிழலில் பாராளு

மன்றம் வலிமையும், நிர்வாகப் பயிற்சியும் பெற்றது என்பது குறிப்பிடத் தக்கது.

இவ்வாறே இங்கிலாந்தில் நிலமானிய முறை அழிவுற்று, பிரபுக்களின் ஆதிக்கம் குறைந்து, நடுத்தர வகுப்பினர் தியூடர் காலம் முதல் பெருமை பெற்றனர். பிரான்சு போன்ற மற்ற நாடுகளில் இத்தகைய பெரும் மாறுதல் அப்பொழுதே ஏற்படவில்லையாயினும், நிலமானிய முறை பலவீனமடைந்து விட்டதென்பதற்கு அறிகுறிகள் தோன்றின. நில மானிய முறையின் அழிவிற்குத் 'தேசீய உணர்ச்சி'யின் அபிவிருத்தியையும் காரணமாகக் கூறலாம். ஏனெனில், ஒரு சிறிய பிரதேசத்தினிடமும் அதன் தலைவரிடமும் நம்பிக்கை வைப்பதற்கு மாருக, மக்கள் ஒரே கலாச்சாரத்தால் பிணிக்கப்பட்டுத் தமது நாடு முழுவதையும் விசுவாசத்துடன் நேசிக்கலாயினர். இத்தகைய தேசீய உணர்ச்சி வளர்ந்தமையால், 'ஒரு தேசீய இனம் தனக்குரியதான நாட்டில் சுதந்திரமாக வாழவேண்டும்; அது ஒரே அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும்' என்ற இலட்சியமும் (Nation-State as an ideal) உதித்தது. 'தேசீய உணர்ச்சி காரணமாக ஒரு நாட்டு மக்களினது தன்மையின் பொருட்டு ஒருவன் எத்தகைய குற்றம் புரிவதும் பாவமாகாது' என்று "பிரின்சு" என்ற நூலில் மாக்கியவெல்லி போதித்தமையால், ஒவ்வொரு தேசமும் தனது முன்னேற்றத்தையே பிரதானமாகக் கருதியது. இதனுல் ஒரு பக்கத்தில் முன்னேற்றந் தோன்றியதாயினும், மற்ருெரு பக்கத்தில் சுயநலம் வளர்ந்து, நாடுகளிடையே போட்டியும் பூசலும் மலிந்தன. இதுவே, பதினும் நூற்ருண்டின் ருெடக்கத்திலிருந்து ஐரோப்பாவில் நிகழ்ந்த போர்களுக்கு மூல காரணமாகும்.

மேலும், குறுகிய பிரதேசங்களிலும், நகரங்களிலும் மட்டுமே நிகழ்ந்துவந்த வியாபாரமும் பண்டமாற்றும்

இப்போது பெருகிச் சர்வதேச வியாபாரமாக விருத்தி யடைந்தது. சமுதாயத்தில், அறிவும் ஆராய்ச்சித் திறனும் பெருகிய காரணத்தால், மதச் சீர்திருத்தம் உண்டாகிப் பற்பல மாறுதல்களும் தோன்றின.

இவ்வாறு தோன்றிய மாறுதல்களின் தொகுதியையே 'நவீன நாகரிகம்' என்றழைக்கிறோம். இந்த நாகரிக வளர்ச்சியே உலகில் ஐரோப்பிய ஆதிபத்தியத்திற்கு வழிவகுத்தது.

### வினாக்கள்

1. 'புராதன காலம்', 'மத்திய காலம்' என்பவைகளை ஐரோப்பிய சரித்திரத்தில் எவ்வாறு கணக்கிடுகிறோம்?
2. மத்திய காலத்தில் கல்வியின் நிலை எவ்வாறிருந்தது?
3. இச் சொற்றொடர்களை விளக்குக:—
   (a) இருள்சூழ்ந்த காலம். (c) தெய்வீக நன்னூல்,
   (b) மறுமலர்ச்சி. (d) கனவு உலகம் (யுடோபியா)
4. இத்தாலியில் தோன்றிய பேரறிஞரையும் கலைஞரையும் குறிப்பிடுக.
5. இங்கிலாந்தில் தோன்றிய அறிஞர் திலகங்கள் யாவர்?
6. விஞ்ஞானத் துறையில் பணியாற்றிய பெரியார் சிலரைக் கூறுக.
7. புதிய கடல் மார்க்கங்களைக் கண்டுபிடித்த மாலுமிகள் யாவர்?
8. மறுமலர்ச்சிக் காலத்தில் மன்னனாட்சி வலுத்தது ஏன்?
9. மறுமலர்ச்சியின் பயனாகச் சமுதாயத்தில் தோன்றிய மாறுதல்கள் யாவை?
10. தேசிய உணர்ச்சி என்பது யாது? அது பெருகியதால் ஏற்பட்ட நன்மை தீமைகள் யாவை?

## 2. மதச்சீர்திருத்தம்

கி. பி. ஐந்தாம் நூற்றுண்டிலிருந்து உரோம சக்க ராதிபதிகளின் ஆதரவில் தழைத்தோங்கிய கிறித்தவ மதம், மேற்கு ஐரோப்பாவெங்கும் பரவியிருந்தது. அப் போது உரோமாபுரியில் விளங்கிய 'போப்' என்னும் குருபீடம் உன்னத நிலையை எய்தியது. நாளடைவில், போப்புகளின் அதிகாரம் வளர்ச்சியுற்று, கிறித்தவ மண்டல மெங்கும் அவர்களது ஆணை செல்லத் தொடங் கியது. அவர்களை எதிர்த்த சேர்மனிய சக்கராதிபதி களும் இறுதியில் தோல்வியுற்று, அவர்களிடம் பணிய நேர்ந்தது. உதாரணமாகப் **போப் மூன்றும் இன்ன செண்ட்** என்பார் ·பிரான்சு அரசனையும், கங்கேரி மன்ன னையும் பணியவைத்ததுடன், பிரித்தானிய மன்னனுன யோனையும் தனக்குக் கப்பங் கட்டுமாறு செய்தார். இவ்வாறு போப்புகளின் அதிகாரம் ஓங்கியதெனினும், பதினன்காம் நூற்றுண்டளவில் அவர்களது ஆதிக்கத்தை எதிர்க்கும் இயக்கங்களும் உருவாயின. அத்தகைய இயக்கங்களில், இங்கிலாந்தில் **யோன்விக்கிளிப்** தோற்று வித்த '**இலாலர்டுகள்**' இயக்கமும், பொகீமிய நாட்டில் **யோன் இகூசு** புரிந்த சீர்திருத்தப் பிரசாரமும் பிரதான மானவை. யோன்விக்கிளிப் பதவியினின்றும் விலக்கப் பட்டமையாலும், அவரைப் பின்பற்றுவோர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாலும் 'இலாலர்டு இயக்கம்' விரைவில் மறைந்தொழிந்தது. இவ்வாறே யோன் இகூசு போன்ற வர்களும் எரிக்கப்பட்டமையால், அவரது சீர்திருத்த பிரசாரமும் வெற்றியுறவில்லை. இவற்ருல் குருமாரின் ஆதிக்கம் எள்ளளவும் குறைவுபடவில்லையாயினும், இவை சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கின. ஒரு சரித்திர அறிஞர் கூறியவாறு, 'இவற்றை மதச் சீர்திருத்தமாகிய சூரியோதயத்திற்கு முன் தோன்றிய விடி வெள்ளிகளாகக்' கருதலாம்.

பதினைந்தாம் நூற்றாண்டில், முன் அத்தியாயத்தில் கூறியவாறு மேற்கு ஐரோப்பாவில் பண்டைய கிரேக்கரது அறிவியல் நூல்களும் புதிய பகுத்தறிவு வாதமும் பரவியமையால், மத்திய காலத்தில் மக்களிடையே வளர்க்கப்பட்ட மூட நம்பிக்கைகளும், சம்பிரதாயங்களும் மறைய நேர்ந்தது. சிறிது கல்வி கற்றவர்களும் அச்சடிக்கப்பட்ட விவிலிய நூற்பிரதிகளை வாங்கிப் படித்து, ஆராய்ந்து, குருமார்களின் தவறான போதனைகளைக் கண்டிக்கத் தொடங்கினர். அன்றியும், அக்காலத்தில் விளங்கிய அலெக்சாந்தர், யூலியசு முதலிய போப்புகள் ஆடம்பரமாக வாழ்ந்து கொண்டு, அரசபோகத்திலிருந்தனர். அவர்களைப் பின்பற்றி மற்றக் குருமார்களும் ஆடம்பர வாழ்க்கையிலும், தீய நடத்தைகளிலும் ஈடுபட்டிருந்தனர். இக்காரணங்களால் அவர்களது செல்வாக்குக் குறைந்தது. அவர்களிடம் மக்கள் அன்பும், மரியாதையும் காட்டத் துணியவில்லை. அன்றியும், குருமார்களின் அளவற்ற செல்வத்தையும், அதிகாரத்தையும் கண்டு பொறாமையுற்ற ஐரோப்பிய மன்னர்கள் அவர்களது வீழ்ச்சியிலேயே நாட்டம் கொண்டிருந்தனர்.

இத்தகைய சூழ்நிலையே மதச் சீர்திருத்தத்திற்கு உதவியாக அமைந்தது. 1517-ஆம் ஆண்டில் சேர்மனியில் நிகழ்ந்த ஒரு சம்பவம் இந்த இயக்கத்திற்குத் தொடக்க நிலையாக அமைந்தது. அப்பொழுது **மாட்டின் லூதர்** என்பார் போப்பின் ஆணையை எதிர்த்து வாதாடினர். இவர் 1483-ல் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தவர். நன்கு கல்வி கற்று, குருமாருக்குரிய மத நூல்களிற் றேர்ச்சி பெற்று, எட்டு ஆண்டுகள் துறவியாக விளங்கி, இறுதியில், 'விட்டன்பர்க்' சர்வகலாசாலையிற் பேராசிரியராக அமர்ந்திருந்தார். அப்பொழுது அவர் சாக்சனி இராச்சியத்தின் தலைவருக்கு உற்ற நண்பராகவும் ஆலோசகராகவும் விளங்கினர். அவர் விவிலியநூலை மொழி பெயர்ப்பதிலும், மத ஆராய்ச்சியிலும் ஈடுபட்

டிருந்தமையால், மதத்திலுள்ள குறைகளும், குருமாரின் பிரசாரத்திலுள்ள தவறுகளும் அவருக்குப் புலப்பட்டன. முற்காலத்தில் அர்ச். அகசுதின் விளக்கிய கொள்கையான "விசுவாசத்தின் மூலம் உயர்வடைதல்" என்ற கருத்தையே உலூதரும் தம் கொள்கையாகக் கொண்டார். மேலும் 1510-ல் உரோமாபுரிக்கு யாத்திரை செய்து, அங்கிருந்த குருமாரின் கேவலமான நிலையையும் அவர் உணர்ந்தார். இந்த நிலையில், 1517-ல் போப்பின் தூதனுன 'டெட்சல்' என்பான் சேர்மனியில் '**பாவ மன்னிப்புப் பத்திரங்களை**' விற்கலானுன். அப்போது உரோமாபுரியிற் கட்டப்பட்ட தேவாலயத்தின் செலவுகளுக்காகவே இந்தப் பத்திரங்கள் விற்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. உலூதர் இவற்றை விற்பது தகாது என்று வாதித்து ஓர் அறிக்கையை வெளியிட்டார். தொண்ணூற்ருறு கேள்விகளடங்கிய அந்த அறிக்கையே புதிய '**புரட்டசுதந்து**' மதத்திற்கு அடிப்படையாக அமைந்தது. இவ்வாறு பாவ மன்னிப்புப் பத்திரங்களைப் பொருள் கொடுத்து வாங்குவதால் மனிதரின் பாவங்கள் மறைந்துவிட மாட்டா; இது கிறித்துவின் போதனைகளுக்கும் முரணுனதாகும் என்று உலூதர் கூறியமையால், போப்பும் சேர்மனிய சக்கராதிபதியான சார்ல்சும் சினமடைந்து 'வேர்ம்சு' நகரில் ஒரு சபை கூட்டி அவரை விசாரித்தனர். அங்கும் உலூதர் சிறிதும் அஞ்சாமல் தமது கொள்கையை வலியுறுத்திஞர். போப் லியோ என்பார், 1520-ல் உலூதரை கிறித்தவ மதத்தினின்றும் நீக்கியதாக அறிவித்தார். உடனே போப்பின் ஆணை அடங்கிய கடிதத்தை உலூதர் தீ மூட்டி எரித்துவிட்டார். அதனுல் அவர் தேசப் பிரட்டம் செய்யப்பட்டாராயினும், அவரது எதிர்ப்பு சேர்மனியின் பல பகுதிகளிலும் கிளர்ச்சியைத் தூண்டிற்று. அவரைப் பின்பற்றியவர்கள் 'புரட்டசுதந்துகள்' எனப் பெயர் பெற்றனர்.

இந்த மதச் சீர்திருத்த இயக்கம் விரைவில் பிறநாடு களிலும் பரவியது. பிரான்சிலும் சுவிட்சர்லாந்திலும் வசித்தவரான **கல்வின்** என்பார் தீவிரமான கொள்கைக ளடங்கிய ஓர் இயக்கத்தைத் தோற்றுவித்தார். கடவுளுக்கு தூய அன்போடு தொண்டும் துதியும் புரிதலே மனித வாழ்க்கையின் நோக்கமென்றும், குருமார்களும் சடங்கு களும் நீக்கப்பெற்று மக்களின் பக்தி உணர்ச்சியைப் பெருக்க வேண்டுமென்றும் இவர் கூறினர். அது பிற நாடுகளில் 'கல்வினிசம்' என்றும், இங்கிலாந்தில் 'பியூரிட்டன் மார்க்கம்' என்றும் வழங்கப்பட்டது. இந்தக் கொள்கைகளும் சேர்மனியின் சில பகுதிகளில் இடம் பெற்றன. **செனிவா நகரம்** முழுவதற்கும் பியூரிட்டன் சித்தாந்தங்களை அடிப்படையாகக் கொண்ட ஆட்சிமுறை ஒன்றைக் கல்வின் நிறுவினர். பிற்காலத்தில் கல்வினது கொள்கைகளை **யோன் நொக்சு** என்பார் சுகொத்லாந்தில் பிரசாரம் செய்து குருமார்களற்ற 'பிரசுபிட்டீரியன்' மார்க்கத்தை நிலை நிறுத்தினர். சுவிட்சர்லாந்தில் **சுவிங்ளி** என்பார் கல்வினைப்போன்று ஒரு தீவிர இயக் கத்தை உண்டாக்கினர். இவ்வாறு பல அறிஞர்களால் பற்பல நாட்டிலுஞ் சீர்திருத்த இயக்கங்கள் பல தோன்றி வளர்ந்தபொழுது, இங்கிலாந்தில் மட்டும் மன்னனது ஆட்சியால் மதச் சீர்திருத்தம் தோன்றியது.

இங்கிலாந்தில் **விக்ளிப்** தோன்றி மறைந்ததிலிருந்து மக்களிடையே சீர்திருத்த உணர்ச்சி பெரிதும் பரவி இருந்தது. ஆயினும், இலங்காசுடர் வம்சத்தோன்றல் களும், தியூடர் வம்சத்து மன்னர்களும் போப்புகளும் பழைய கதோலிக்க மதத்திற்குச் சார்பாக நடந்துகொண்ட மையால், நாட்டில் கிளர்ச்சி எதுவும் தோன்றவில்லை. 1520-ல் எட்டாம் கென்ரி மன்னன் உலூதரை எதிர்த்துக் கட்டுரையொன்று எழுதியதற்காகச் 'சமயத்தின் காவலன்' என்னும் விருதை போப்பிடமிருந்து பெற்ருன். ஆனுல் எதிர்பாராத வகையில் இவனே இங்கிலாந்திற் போப்பின்

ஆதிபத்யத்திற்கு உலைவைக்குமாறு நேர்ந்துவிட்டது. தனக்கு ஆண்மகவு இல்லாத காரணத்தாற் பட்டத்தரசியான 'கதரினை'ப் புறக்கணிக்க அனுமதி கோரினன். அவள் வல்லமை பொருந்திய சுபானிய நாட்டு இளவரசியாகையால், போப் எளிதில் அனுமதி கொடுக்கவில்லை. அப்போது சுபானிய சக்கராதிபதியான **ஐந்தாம் சார்ல்சு** பிரஞ்சுப் படைகளை முறியடித்து, உரோமாபுரியைக் கைப்பற்றவே அவனது படை வீரர்கள் நகரைச் சூறையாடினர். அதன் பயனுகப் போப் **கிளமெண்ட்** சார்லசின் ஆதிக்கத்தின்கீழ் இருக்க நேர்ந்தமையால், எட்டாம் கென்ரியின் விவாக ரத்துக் கோரிக்கையை நிறைவேற்ற இயலவில்லை. கென்ரியின் மந்திரியான **தொமசு உல்சி**யும் போப்பின் காலதாமத ஏற்பாடுகளுக்கு உடந்தையாக இருந்தமையால், கென்ரி கோபமடைந்து, உல்சியைப் பகைத்து அவனது வாழ்விற்கு உலைவைத்தான். பிறகு போப்பைப் பயமுறுத்தும் வகையில், கென்ரி, 1529-ல் பாராளும் மன்றத்தைக் கூட்டி, அதன் உதவியால் போப்பின் அதிகாரங்களைச் சிறிது சிறிதாகக் குறைக்கும் வகையில் சட்டங்கள் இயற்றலானுன். வருடாந்தர வருமானங்களில் போப்பிற்குரிய பங்கை நிறுத்தவும் (Act of Annates), மதச் சம்பந்தமான வழக்குகளில் உரோமாபுரிக்கு அப்பீல்கள் (Act of Appeals) செல்லாமலும் செய்தான். அப்பொழுதும் போப் இணங்காததால், 1536-ல் ஆங்கில மதத்தாபனத்திற்கும் போப்பிற்குமிருந்த உறவு நீக்கப்பட்டு, 'நாட்டின் மன்னனே திருச்சபைக்குத் தலைவன்' என்று அறிவிக்கப்பட்டது. இவ்வாறு ஒரு மதச் சீர்திருத்த இயக்கத்தை உண்டாக்கிய போதிலும், பழைய கொள்கைகளில் அதிக மாறுதல்களைச் செய்ய கென்ரி விரும்பவில்லை. அவன் துறவி மடங்களை அழித்து அவற்றின் சொத்துக்களைத் தனது நண்பர்களுக்குப் பங்கிட்டளித்தான். தனது கொள்கைகளை எதிர்த்தவர்களுக்கு மரண தண்டனையும் விதித்தான்.

அவ்வாறு தண்டனையடைந்தவர்களில் அறிஞர் தொமசு மூரும் ஒருவர். அவனுக்குப் பிறகு ஆறும் எட்வேர்ட் காலத்தில் தீவிரமான புரட்டசுதந்துக் கொள்கைகளை நிலைநிறுத்த முயன்றனர். மன்னனின் பிரதிநிதிகளாக விளங்கிய நோர்த்தம்பர்லாந்து கோமகனும் சாமர்செட் பிரபுவும் தீவிரமான முறையில் தோத்திரப் புத்தகங்களை வெளியிட்டதன்றி, இசுகோத்லாந்திய பிரசாரகரான யோன் நோக்சையும் இங்கிலாந்திற் பிரசாரம் புரிய அனுமதித்தனர். ஆனால் கதரினது மகளான மேரி 1553-ம் ஆண்டில் பட்டம் பெற்றதும், பழைய கத்தோலிக்க மதத்தை நிலைநாட்டி, புரட்டசுதந்துகளின் தலைவர்களைச் சுட்டெரித்தாள். ஆனால், அவளது ஆட்சி சொற்ப காலமே நீடித்தது.

அவளுக்குப் பிறகு, 1558-ல் ஆட்சிபெற்ற **எலிசபேத் ராணி**, தன் தந்தையைப் போன்று திறமை வாய்ந்தவள். அவரைப் போலவே இவளும் ஒரு நடுநிலையான கொள்கையைப் பின்பற்றி, கத்தோலிக்கரும், மிகவும் தீவிரமான புரட்டசுதந்துகளும் மேலோங்காதவாறு செய்தாள். அவளது திறமை காரணமாக, மிதமான ஆங்கிலப் புரட்டசுதந்துத் திருச்சபை நிலைபெற்றது. ஆங்கில மாலுமிகளின் தொந்தரவாலும், அந்த நாட்டில் கத்தோலிக்கத் திருச்சபையை நிலைநாட்ட வேண்டுமென்னும் நோக்கத்தாலும், சுபானிய அரசனான இரண்டாம் பிலிப்பு



படம் 37. எலிசபேத் ராணி

'ஆர்மடா' என்ற பெரும் கப்பற்படையைத் தயாரித்து, இங்கிலாந்தின்மீது ஏவினுன். 1588-ல் ஆங்கிலக் கால்வாயில் அந்தப்படை பிரித்தானிய மாலுமிகளால் முறியடிக்கப்பட்டு அதன் ஒரு பகுதியே சுபெயினுக்குத் திரும்பி வந்தது. இந்த வெற்றியால் ஆங்கில புரட்டசுதந்து மதம் நிலைபெற்றது கண்டு மனம் பூரித்த எலிசபேத், 'கடவுள் புயற்காற்றை அனுப்பிப் பகைவர்களைச் சிதறவடித்தார்' என்று பறைசாற்றினுள். அவளது ஆட்சியிலும், அதற்குப் பிறகு ஏறக்குறைய ஒரு நூற்றுண்டு காலத்திலும் கதோலிக்கர் புரிந்த பற்பல சூழ்ச்சிகள் பயனற்றுப் போயின. எலிசபெத்துக்குப் பிறகு ஆட்சி செலுத்திய சுடுவர்ட் வம்சத்தரசர்களான முதலாம் யேம்சும், முதலாம் சார்ல்சும் பியூரிட்டானியரின் எதிர்ப்பையும் கத்தோலிக்கரின் சூழ்ச்சிகளையும் பொருட்படுத்தாமல் ஆங்கிலத் திருச்சபையையே ஆதரித்தனர். இதனுல் கோபமடைந்த பியூரிட்டன்களிற் சிலர் அமெரிக்கா முதலிய நாடுகளுக் கேகினர். ஆனுல் அவர்களது தலைவர்களான காம்டன், பிம், குரோம்வெல் போன்றவர்கள் அரசர்களது யதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் புரட்சி செய்து, அரசர்களற்ற குடியரசை 1649-ல் நிலைநாட்டினர். அந்தக் குடியரசு நிலைத்திருந்த பதினெரு ஆண்டுகளில் பியூரிட்டானிய மதம் ஓங்கியதாயினும், முடிவில் 1660-ல் அரசன் இரண்டாம் சார்ல்சு ஆட்சி பெற்றபொழுது ஆங்கிலத் திருச்சபையும் புத்துயிர் பெற்றது. ஆயினும் இரண்டாம் சார்லசும் இரண்டாம் யேம்சும் கத்தோலிக்கருக்கு ஆதரவு காட்டத் தொடங்கியமையால், மக்கள் அவர்களை வெறுக்கலாயினர். இதனுலும், அரசியல் காரணங்களாலும், 1688-ல் பெரும்புரட்சி நிகழ்ந்தது. இரண்டாம் யேம்சு நாட்டை விட்டோடியதால், அவனது மகளான மேரியும் அவளது கணவன் மூன்றும் வில்லியமும் புரட்டசுதந்து சமயத்தினர் என்ற முறையில் அரசபதவியளிக்கப் பெற்றனர். இறுதியில் 1689-ல் ஆங்கில

புரட்டஸ்தந்து மதமே அரசாங்க மதமென அறிவிக்கப் பட்டது. பத்தொன்பதாம் நூற்ருண்டில் கத்தோலிக்கர் பூரண மதச் சுதந்திரம் பெற்றனர்.



படம் 38. இரண்டாவது பிலிப்பு

இவ்வாறு பதினாறும் நூற்ருண்டின் முற்பகுதியில் மேற்கு ஐரோப்பாவில் புரட்டசுதந்து மதம் புது வெள்ளம்போல எவராலும் தடுக்க இயலாத வேகத்துடன் பரவியபொழுது, கத்தோலிக்கரிடையே ஒரு புத்துணர்ச்சி பிறந்தது. அதற்கு முக்கியமான காரணம், **இக்னேசியசு லயோலா** என்பவர், தோற்றுவித்த 'ஏசு சபை' என்ற இயக்கமேயாகும். ஆதியில் போர்வீரராக இருந்து, போர்க்களத்திற் காயமடைந்த லயோலா, தாம் கண்ட கனவொன்றிற் கடவுள் தம்மை அழைத்து மதத்தைப் பாதுகாக்கும் போர்வீரர்களைத் திரட்டுமாறு கூறியதாக வெளியிட்டார். அவர் போப்பின் அனுமதி பெற்று, 1534-ல் ஏசு சபையை அமைத்தார். இந்தச் சபையினர் எளிய துறவிகளாக விளங்கிக் கல்வி போதித்தல், சமூக

சேவை புரிதல், மதப்பிரசாரம், முதலிய பல துறைகள் வாயிலாகக் கத்தோலிக்க மார்க்கத்தை நிலைநிறுத்த முயன்றனர். இவர்கள் அரசியற் சூழ்ச்சிகளிலு மீடுபட்டமையால், பல நாடுகளிலுங் கத்தோலிக்கர் சீர்திருத்த இயக்கங்களை எதிர்த்து நிற்பது சாத்தியமாயிற்று. உதாரணமாக, சேர்மனியிலும், பிரான்சிலும் உள்நாட்டுக் கலகங்களைக் கிளப்பியதும், சுபெயினில் இன்குவிசிசன் (Inquisition) என்ற மத விசாரணை மன்றத்தால் ஆயிரக்கணக்கான புரட்டசுதந்துகளை ஒழித்ததும் இவர்களின் முயற்சிகளின் விளைவுகளாம்.

புரட்டசுதந்து இயக்கத்தின் பிறப்பிடமாகிய சேர்மனி, விரைவில் மதவெறியர்களின் போர்க்களமாயிற்று. உலூதருக்குப் பிறகு பதினரும் நூற்ருண்டின் மத்தியில், சேர்மனியில் இரு கட்சியினருக்குமிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் பிரகாரம், சேர்மனியில் ஒவ்வொரு சிற்றரசனும் தான் பின்பற்றும் கொள்கையையே தனது குடிகளும் பின்பற்றுமாறு அநுமதிக்கலாம் என்று தீர்மானம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தம் அரை நூற்ருண்டாகப் பின்பற்றப்பட்டு வந்ததாயினும், 1618-ல் பொகீமியப் பிரதேசத்தில் தோன்றிய கலகத்திஞல் முறிவடைந்தது. உடனே சேர்மனிய சக்கராதிபதியின் தலைமையின்கீழ் கத்தோலிக்கரும், பலதீன் இளவரசஞன பிரடரிக்கின் தலைமையின் கீழ் புரட்டசுதந்து மக்களும் திரண்டனர். முப்பது ஆண்டுகள் நீடித்த இந்தப் போரில், வெற்றி தோல்விகள் மாறிமாறி ஏற்பட்டன. இங்கு போரிட்ட வீரரில் சுவீடன் அரசஞன கசுடவசு அடால்பசு என்பவனையும் கத்தோலிக்க தளபதியான வாலன்சுதீனையும் சிறப்பாகக் குறிப்பிடலாம். போரின் இறுதி நிலையில் பிரான்சின் இராச தந்திரியான கார்டினல் ரிச்லு, தான் கத்தோலிக்க குருவாக இருந்தும், புரட்டசுதந்துகளான சேர்மனியர்களுக்கு உதவி புரியலாஞன். ஏனெனில், சுபானிய வல்லரசின் ஆற்றலைக் குறைப்ப

தொன்றே அவனது நோக்கமாக இருந்தது. அவனது தலையீட்டின் பயனாகக் கத்தோலிக்கர் வெற்றிபெற முடியாமற் போயிற்று. சேர்மனிய நாட்டில் மக்கள் நரக வேதனை அடைந்ததொன்றே, இப்போரினால் கண்ட பலன். இறுதியில் 1649-ல் வெசுட்பேலியா உடன்படிக்கையால், ஆங்காங்குப் பிரதேச மக்கள் தாம் விரும்பிய மதத்தைப் பின்பற்ற உரிமை பெற்றதுடன், சமரச மனப் பான்மையும் உதித்தது.

இவ்வாறே பிரான்சிலும் உள்நாட்டுக் கிளர்ச்சி தோன்றியதாயினும், அங்கு கியூனேக்கள் என்றழைக்கப்பட்ட புரட்டசுதந்து வகுப்பினர், சிறுபான்மையராக இருந்தமையால் எளிதிலொடுக்கப்பட்டனர். உதாரணமாக, 1572-ல் பார்த்தோலமியூ தின விழாவன்று எண்ணற்ற கியூனேக்கள் படுகொலை புரியப்பட்டனர். பிறகு நான்காம் கென்ரி காலத்தில் ஒரு சமரச ஒப்பந்தம் ஏற்பட்டதாயினும், முதலில் கார்டினல் ரிச்லுவாலும் பின்னர்ப் பதினான்காம் உலூயி மன்னனாலும் கியூனேக்கள் முறியடிக்கப்பட்டு, நாட்டினின்றும் துரத்தப்பட்டனர். இதன் பயனாகப் பிரான்சு நாடு தனது சிறந்த கலைஞரையும் தொழில் வல்லுநரையும் இழந்ததாயினும், கத்தோலிக்க மதத்தில் உறுதி பூண்ட நாடாக நிலை பெற்றது.

மேற்கூறிய வரலாறுகளிலிருந்து, எவ்வாறு பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் மதச் சீர்திருத்த இயக்கம் மேற்கு ஐரோப்பாவில் தோன்றி வளர்ந்தது என்பதனை ஒருவாறு உணரலாம். இந்த இயக்கத்தின் பயனாக, வடமேற்கு ஐரோப்பிய நாடுகள் பலவும் புரட்டசுதந்து இயக்கத்தைப் பின்பற்றின. ஆனால், இலயோலாவும் மற்றவர்களும் வளர்த்த சீர்திருத்த எதிர்ப்பு இயக்கம் (Counter reformation) காரணமாகப் பிரான்சும் சுபெயினும் கத்தோலிக்க மார்க்கத்தையே பின்பற்றும் நாடுகளாய் நிலைத்து விட்டன.

### வினுக்கள்

1. மதச் சீர்திருத்தத்திற்கு வழிவகுத்த பெரியோர்கள் யாவர் ?

2. மார்ட்டின் உலூதர் எப்போது, எவ்வாறு மதச் சீர் திருத்தம் தொடங்கினுர் ?

3. புதிய புதிய புரட்டசுதந்து மார்க்கங்களேக் கண்டறிந்த வர்கள் யாவர் ?

4. சேர்மனியின் முப்பதாண்டுப் போரில் சிறந்து விளங்கிய தலேவர்கள் யாவர் ?

5. ஆர்மடாவின் தோல்வியால் நேர்ந்த பலன்கள் யாவை?

6. 'மதச் சீர்திருத்த எதிர்ப்பு இயக்கம்'—எவ்வாறு வளர்ந்தது?

7. இங்கிலாந்தில் மதச் சீர்திருத்தம் நேர்ந்த வரலாற்றைச் சுருக்கி வரைக.

### பயிற்சி

ஐரோப்பா தேசப்படமொன்றில், புரட்டசுதந்து கத்தோலிக்க மதம் பரவியுள்ள நாடுகளேக் குறி.

## 3. ஐரோப்பிய வல்லரசுகள்

மத்திய கால ஐரோப்பாவில் தேசீய உணர்ச்சி உருவாகவில்லே. அப்போது பெரும்பாலும் நிலமானிய முறையே பின்பற்றப்பட்டமையால், மக்கள் ஒரு குறிப்பிட்ட தலேவனுக்கு விசுவாசம் செலுத்தினரேயன்றி, ஒரு பிரதேசத்தினிடம் அல்லது நாட்டினிடம் பற்றுக்கொள்வது என்ற மனப்பான்மை உதயமாகவில்லே. மேலும், அப்போது மத விடயங்களில் எவ்வாறு 'போப்' என்ற ஏக தலேவனே வணங்கினரோ, அவ்வாறே அரசியல் துறையிலும் ஏக சக்ராதிபத்தியத்தைப் போற்றுதல் வழக்கமாக இருந்தது. இதுவே கி. பி. 800-ஆம் ஆண்டில், **சார்லமேன்** காலத்திலிருந்து 'பரிசுத்த உரோம சக்ராதி

பத்தியம்' தோன்றிப் பெருமையுடன் விளங்கியதற்குக் காரணமாகும்.

ஆனால், ஒவ்வொரு நாட்டிலும் அரச வம்சங்கள் நிலைத்து, அரசர்களின் அதிகாரங்கள் ஓங்கவே, அந்தச் சக்ராதிபத்தியத்தின் மகிமை குறைந்தது. உதாரண மாகப், பதினோராம் நூற்றாண்டில் பிரித்தானிய நாட்டில் விளங்கிய நோர்மானிய மன்னர்கள் கூட, இந்தச் சக்ராதி பத்தியத்தின் தலைவர்களைத் தமக்குச் சமமானவர் களாகவே கருதினர். நோர்மானிய மன்னர்கள் நிலம் படைத்த பிரபுக்களின் அதிகாரங்களை ஒடுக்கி, தமது அதிகாரங்களை வளர்த்துக் கொண்டமையால், பிரித் தானிய நாட்டில் ஐக்கிய உணர்ச்சியும் தேசீயமும் விரை வில் அபிவிருத்தி யடைந்தன.

ஒரு சரித்திர அறிஞர் கூறியவாறு, இங்கிலாந்திலும் பிரான்சிலும் தேசீய உணர்ச்சியானது இந்த இரு நாடு களுக்குமிடையே தோன்றிய பகைமை உணர்ச்சியின் அடிப்படையாகப் பிறந்த தெனலாம். ஏனெனில், 1066-லிருந்து இங்கிலாந்தை ஆளப் புகுந்த நோர் மானியர், பிரான்சு இனத்தினர்; அவர்கள் இங்கி லாந்தில் முடி மன்னர்களாக விளங்கிய போதிலும், பிரான்சில் நிலம் படைத்திருந்தமையால் நிலமானியத் திட்டப்படி, அந்த நாட்டு மன்னருக்கடங்கிய நிலப் பிரபுக்களாகவே இருக்க நேர்ந்தது. இதனால், சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு இரு நாட்டரசர்களிடையிலும் பகைமை ஓங்கி, அடிக்கடி பெரும் போர்களும் விளைந் தன. உதாரணமாக, 1204 முதல் 1206 வரையில் பிரான்சு மன்னன் பிலிப் அகசுதசு, ஆங்கில அரசனை யோனை ஒரு வழக்குக் காரணமாகத் தன் சபைக்கு அழைத்த போது வராத காரணத்தால், நிலமானிய முறைப்படி அவனது நிலங்களைத் தன் வசப்படுத்திக் கொண்டான். " இவ்வாறு யோன் பிரான்சிலிருந்த நிலங்களை இழந்தது எமது நல்ல அதிட்டம்; இனி எமது அரசர்கள் இரு நாடு

களிலுங் கவனம் செலுத்திக் கொண்டிராமல், எமது நாட்டின் அரசர்களாகவே இலங்குவர். இதுவே எமது நாட்டில் தேசீயம் வளர்வதற்கு முதற்படியாகும்,'' என்பர் ஓர் ஆங்கில அறிஞர். பின்னர் இரு நாடுக ளிடையிலுந் தோன்றிய பகைமை, **மூன்ருவது எட் வேர்ட்** காலத்திலும் **ஐந்தாம் கென்றி** காலத்திலும் **நூருண்டுப் போராக** விளைந்தது. மத்திய காலச் சரித்திரத்தில் தேசீய உணர்ச்சி ததும்பும் வகையில் நிகழ்ந்த முதற்போர் இதுவேயாகும். இதன் பலனுகப் பிரித்தானிய மக்கள் தாம் பிரான்சுக்காரர் முதலிய பிற இனத்தவரினின்றும் வேறுபட்டவர் என்ற உணர்ச்சி விஞ்சி நின்றது.

பதினைந்தாம் நூற்ருண்டு, மன்னனுட்சி வலுத்துத் தேசப்பற்றுப் பெருகி நின்ற காலம் என்பர். பிரித்தானி யரைப் பொறுத்த வரையில் இது முற்றிலும் உண்மையாக இருந்தது. 1485-ல் குழப்பங்களை அடக்கி வெற்றி பெற்ற ஏழாம் கென்றி வலிமை பொருந்திய மன்ன னுட்சியை நிலைநிறுத்தினுன். நிலப் பிரபுக்களின் அதிகாரத்தைக் குறைத்து, நடுத்தர வகுப்பினரை அரசியற்றலைவர்களாக உயர்த்தினுன். பாராளு மன் றத்தைக் கருவியாகப் பயன்படுத்திச் சிறந்த சீர்திருத் தங்கள் செய்தான். இவனது புதல்வனுன எட்டாம் கென்றி தன் அதிகாரத்தை முழுதும் பயன்படுத்தி நாட்டில் மதச் சீர்திருத்தமுஞ் செய்வித்தான். இவனது புதல்வி **எலிசபேத்** திறமை மிகுந்தவள். அவளது ஆட்சிக் காலம் 'பொற்காலம்' எனப்படுகின்றது. ஏனெனில், உள் நாட்டிற் பகைவர்கள் ஒடுக்கப்பட்டனர்; செல்வமும் செழிப்பும் தோன்றின; வல்லமை மிகுந்த சுபானிய 'ஆர்மடா' தோற்கடிக்கப்பட்டதால், பிரித் தானியரின் பெருமை ஓங்கியதுடன், சாம்ராச்யத் திற்கு மடிகோலப்பட்டது. இவ்வாறு ஐரோப்பாவின் ஒரு மூலையிலிருந்த சிறு நாட்டினரான பிரித்தானியர்

உலகையாளும் வல்லமையும் பெருமையும் பெற, இந்தச் சம்பவங்களே காரணமாயிருந்தன.

வல்லரசுகளில் மற்றென்றன பிரான்சு மேற்கூறிய வாறு நூருண்டுப் போரின் விளைவாகத் தேசீய உணர்ச்சிக்கு உறைவிடமாயிற்று. அந்தப் போரில், பிரான்சு தோற்று நாடுமுழுதும் பிரித்தானியர் வசமாகும் நிலையிலிருந்த பொழுது, **யோன் ஒப் ஆர்க்** என்ற வீரப் பெண்மணி தோன்றித் தான் தெய்வங்களின் துணை பெற்று வந்ததாக எடுத்துரைத்துப் பிரித்தானியரை முறியடித்துப் பிரான்சு மக்களிடையே ஓர் எழுச்சியை உண்டாக்கினுள். இவளையே 'பிரான்சுத் தேசீய உணர்ச்சி யின் சின்னம்' எனக் கூறலாம். இதற்குப் பிறகு, பிரான்சு விரைவில் ஒற்றுமை யடைந்தது. பிற்காலத்தில் முதலாம் பிரான்சிசு, நான்காம் கென்றி, போன்றவர் களால் மன்னனுட்சி நிலைநிறுத்தப்பட்டு, முடிவில் இறிச்லூ, மசாரின், பதினுன்காம் உலூயி என்ற மூவ ராலும், ஐரோப்பாவில் பிரான்சு நிகரற்ற வல்லரசாக்கப் பட்டது. காடினல் இறிச்லூ பிரான்சில் மன்னனது அதிகாரத்தை ஓங்கச் செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு, பிரபுக்களின் பலத்தைப் பெரிதும் ஒடுக்கினுன் ; கியூனேக்கள் போன்ற கூட்டங்களை அடக்கி வைத்தான். செர்மனியிலும் ஒல்லாந்து நாட்டிலும் பிரவேசித்து சுபானியரின் அதிகாரத்தை அழிக்க வழி தேடினுன். நாட்டில் பிரசைகளின் உரிமைகளைக் குறைத்து 'சுடேட்சு செனரல்' சபையைக் கூட்டாமலே புறக்கணித்தான். இவ்வாறு அரசனது அதிகாரத்தை இறிச்லூ வளர்த்தமை யால், பின் வந்த மசாரினும், பதினுன்காம் உலூயியும் அவனது அடிச்சுவடுகளையே பின்பற்றினர். இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கும், பிரித்தானியரின் அபி விருத்திக்கும் ஒரு முக்கியமான வேறுபாடுயாதெனில், இங்கிலாந்தில் மன்னனுட்சி வலுத்த போதிலும் மக்களது உரிமைகள் அழியவில்லை ; ஆனுல், பிரான்சில் கொடுங்

கோன்மை நிலைபெற்று 'சுடேட்சு **செனரல்**,' முதலிய மன்றங்கள் பாழ்படுத்தப்பட்டன.

இவ்வாறே சுபெயின் நாட்டிலும் மன்னனாட்சி நிலை பெற்றதும், மக்களது உரிமைகள் மறைந்தன. நெடுங் காலமாக ஒற்றுமை சிதைவுற்றுப் பற்பல சிற்றரசுகளின் கீழும், அரேபியர் ஆதிக்கத்திலும் துன்புற்ற சுபானியர், பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் ஒரே அரசின்கீழ் ஐக்கியமடைந்தனர். காசுடில் மன்னன், **பெர்டினண்ட்** அரசன் அரகான் (Aragon) நாட்டு **இசபெல்லாவை** மணந்ததாலும், **கிரனடா** போரில் வெற்றி கொண்டு அரேபியரைத் துரத்தியதாலும் நாடு ஒன்றுபட்டது. **கிராண்ட்** என்ற சரித்திராசிரியர் கூறியவாறு, 'சுபெயின் ஒன்றுபட்டுத் தேசீய உணர்ச்சி தோன்றும் நிலையிலேயே சம்பவங்களின் கோவையால் பெருஞ் சாம்ராச்சிய மாகவும் மாறிவிட்டது' எனலாம். ஏனெனில், இந்தப் பெர்டினண்டின் காலத்திலேயே **கொலம்பசு** (1492-ல்) அமெரிக்காவிற்குக் கடல்மார்க்கத்தைக் கண்டுபிடித்துத வினான். அதனால், விரைவில் **பிசாரோ** முதலியவர்களின் முயற்சியால் அமெரிக்காவில் சுபானிய ஆதிக்கம் வளர்ச்சி பெற்றது.

பிற்காலத்தில், **ஐந்தாம் சார்ல்சு** காலத்திலும், **இரண்டாம் பிலிப்பு** ஆட்சியிலும் சுபானிய ஆதிக்கம் ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் அமெரிக்காவிலும் பரவிக் கிடந்தது.

சுபானிய அரசன் ஐந்தாம் சார்ல்சு காபசுபக்கு என்ற செர்மானிய வம்சத்தைச் சேர்ந்தவன். 1519-ல் அவன் பரிசுத்த ரோம சக்கராதிபதியாகவும் தேர்ந்தெடுக் கப்பட்டதால், அவனுக்கு ஐரோப்பாவில் சேர்மனி, மத்ய ஐரோப்பா, இத்தாலி, ஒல்லாந்தநாடு முதலிய பல பகுதிகளிலும் ஆட்சி உரிமை இருந்ததுடன், அமெரிக்கா விலும் விரிவான சாம்ராச்ய மிருந்தது. ஆயினும் இந்தப் பரந்த சாம்ராச்சியத்தைக் காப்பதே பெரும் தொல்லை

யாயிற்று. சேர்மனியில் உலூதரின் இயக்கம் காரண மாகச், சார்ல்சு புரட்டசுதாந்தரோடு இடைவிடாது போர் நிகழ்த்த நேர்ந்தது. தன் பகைவனுன முதலாம் பிரான்சிசை இத்தாலியில் முறியடித்த போதிலும், சேர்மனி யில் அவன் தலையிடுதலை நிறுத்தக் கூடவில்லை. அவனது சகோதரனும், மகனுன பிலிப்பும் அங்கேரியரை முறியடித் தனர். எனினும், சேர்மானியப் போர் நீடித்து, 1552-ல் சார்ல்சு தப்பியோட நேர்ந்தது. பிறகு அவன் அரசுரிமை நீத்து, ஆறு ஆண்டுகள் துறவி மடத்திலிருந்து, 1558-ல் இறந்தான். அவனது போன்ற பெரும் சாம்ராச்சியத்தை ஆண்ட சுபானிய மன்னன் வேறு எவருமில்லை யெனலாம். அவனுக்குப் பிறகு அந்த சாம்ராச்சியம் இரு கூறுகப் பிரிக்கப்பட்டு, சார்ல்சின் சகோதரன் பரிசுத்த ரோம சக்கராதிபத்தியத்தையும், சார்ல்சின் மகனுன இரண்டாம் பிலிப்பு சுபானிய சாம்ராச்சியத்தையும் பெற் றனர். இந்தப் பிரிவினைக்குப் பிறகு, இரண்டாம் பிலிப்பு தன்னை கத்தோலிக்க மதக்காவலனுகக் கருதிப் புரட்டசுதாந்தரை அழிப்பதையே வாழ்க்கையின் பெருந் நோக்கமாகக் கொண்டான். அவன் 'இலெபான்டோ' என்ற இடத்துக் கடற் போரில் துருக்கியரை அழித்து வாகை சூடிய போதிலும், மற்ற நாடுகளிற் றேல்வியையே கண்டான். புரட்டசுதாந்தரான ஒல்லாந்தர் இவனது ஆட்சியை எதிர்த்துப் போரிட்டனர். ஆங்கில அரசி எலிசபெத்தும், பிரான்சு மன்னர்களான நான்காம் கென்றி முதலியவர்களும் அவர்களுக்கு உதவினர். இதனுலும், எலிசபெத்தின் மதக் கொள்கையாலும் கோப மடைந்து 1588-ல் பிலிப் அனுப்பிய 'ஆர்மடா' கடற் படை சிதறுண்டது. ஒல்லாந்தர் சுதந்திரம் பெற்றதும், பிரித்தானியர் மேம்பாடுற்றதும் பிலிப்பின் புகழுக்கு இழுக்கை விளைத்த போதிலும், சுபானிய ஆதிக்கம் பதினேழாம் நூற்றுண்டிலும் சிதைவுறுமலிருந்தது. பின்னர்ச் சிறிது சிறிதாக, இந் நாடு வலிகுன்றிய தெனி

னும், பதினும் நூற்ருண்டில் ஐரோப்பாவில் முதன்மை யான வல்லரசாகத் திகழ்ந்த தென்பதில் ஐயமில்லே.

ஐரோப்பாவின் பிற பகுதிகளிலுஞ் சுதந்திர நாடுகள் தோன்றின வெனினும், அவற்றில் சிலவே வல்லரசு களாகத் திகழ்ந்தன. சேர்மனி பல சிற்றரசுகளடங்கிய ஒரு பிரதேசமாக இருந்ததே தவிர, அங்கே தேசிய உணர்ச்சியும் ஐக்கியமும் தோன்றவில்லே ; இத்தாலியும் இதே நிலேயிலிருந்தது : ஒல்லாந்தும் பெல்சியமும் சுபானியருக்கு அடிமைப்பட்டிருந்தன. ரூசியா இன்ன மும் ஒன்றுபட்டு விரிவடையவில்லே. சுவீடன் நாடு மட்டும், '**வாசா**' வம்சத்தினர் தலேமையின்கீழ் வல் லரசாகத் திகழ்ந்தது ; அங்கு **கசுடாவசு அடால்பசு, பன்னிரண்டாம் சார்ல்சு** போன்ற பேரரசர்கள் தோன்றி நாட்டை வலுப்படுத்தினர்.

பதினும் நூற்ருண்டில் எட்டாம் கென்றியும் அவரது மந்திரியான **தோமசு உல்சி** என்ற மதியூகியும் பிரித்தானிய நாட்டில் விளங்கினர். இவர்கள் சில சந்தர்ப்பங்களில் சுபானியருடன் சேர்ந்து பிரான்சின் வல்லமையைக் குறைக்கவும், மற்றச் சமயங்களில் பிரான் சுடன் சேர்ந்து சுபெயினே ஒடுக்கவும் வழிதேடினர். இந்தக் கொள்கைக்குச் '**சமபலக் கொள்கை**' (Balance of Power) எனப் பெயரிட்டனர். இதன் பிரகாரம், ஐரோப்பாவில் எந்த வல்லரசும் அளவுக்கு மிஞ்சி ஓங்கிவிடாமல், மற்ற நாடுகள் ஒன்று சேர்ந்து சமபல நிலேயைக் காக்கவேண்டும். மேலும், அக்காலத் தில் **மாக்கிய வெல்லி** தனது "அரசிளங்குமரன்" (The Prince) என்ற நூலில் வெளியிட்டவாறு, ஒவ் வொரு நாடும் தன் பெருமையையும் செல்வத்தையும் பாதுகாத்துக் கொள்ளும்பொருட்டு எந்த உபாயத் தையும் கையாளலாம் என்ற கொள்கையும் பரவி விட்டது. பிற்காலத்தில், ஐரோப்பிய நாடுகள் இந்தக் கொள்கை களேயே பின்பற்றின என்பதும், இதனுலேயே போர்கள்

நிகழ்ந்தன என்பதும், சரித்திரத்தை ஆராய்வோருக்கு எளிதில் விளங்கும்.

**வினுக்கள்**

1. பிரித்தானியரிடையே தேசீயம் வளரக் காரணங்கள் யாவை ?
2. பிரான்சில் எவ்வாறு மன்னனுட்சி வலுத்தது ?
3. ' சமபலக் கொள்கை ' என்முல் என்ன ?
4. சுவீடனில் தோன்றிய பேரரசர்கள் யாவர் ?
5. சுபெயின் யார் 'காலத்தில் ஒன்றுபட்டது ? எப்போது உன்னத நிலே எய்தியது ?

## 4. இங்கிலாந்திற் சனநாயக வளர்ச்சி

உலகில் சன நாயக ஆட்சிமுறை வளர்ந்துள்ள நாடுகளில் இங்கிலாந்து முதன்மை பெற்று விளங்குகிறது. அதனுடைய அரசியல் அமைப்பையும், அங்கு வாழ்கின்ற மக்களின் சுதந்திர விருப்பத்தையும் பிற நாட்டினர் பார்த்து வியந்து, தம் நாடுகளிலும் அத்தகைய ஆட்சிமுறையை நிறுவ முயன்றிருக்கின்றனர். இவ்வாறு சன நாயக ஆட்சிமுறைக்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் இங்கிலாந்தில், அத்தகைய ஆட்சி முறையை நிறுவுவதற்காகப் பல நூற்றுண்டுகள் பிரபுக்களுடனும் அரசர்களுடனும் மக்கள் போராடியிருக்கின்றனர் என்பதையும் உணர்தல் வேண்டும். உதாரணமாக, 1215-ம் ஆண்டில் **யோன்** என்ற கொடுங்கோலனே எதிர்த்துப் போராடி இறுதியில் மக்கள் வெற்றிபெற்ற பிறகே **மகா சாசனத்தில்** அவன் கையெழுத்திட்டான். "மன்னன் தன் மனம் போனவாறு வரி விதிப்பது கூடாது. மக்களின் பிரதிநிதிகளேக் கலந்தாலோசித்த பிறகே புதிய வரிகள் விதிக்கப்படவேண்டும். எவரையும் நியாய விசாரணே யின்றித் தண்டிப்பதும் கூடாது," என்பன போன்ற

உரிமைகள் அந்தச் சாசனத்தில் வற்புறுத்தப்பட்டிருந்தன. இத்தகைய கொள்கைகளின் அடிப்படையிலேயே, '**பாராளுமன்றம்**' உண்டாக்கப்பட்டு, அதற்கு நாளடைவில் வலிமையும், உரிமைகளும் அதிகரித்தன. அந்தப் பாராளுமன்றத்தில் பொதுமக்களின் பிரதிநிதிகளும் இடம்பெற்றனர். இவ்வாறு பிரபுக்கள் மட்டுமன்றி, பொதுமக்களின் பிரதிநிதிகளும் அந்த மன்றத்தில் இடம் பெற்றதற்குச் **சைமன்** என்ற பிரபுவே காரண கர்த்தாவாக விளங்கினர். பிரான்சியரான இவர் மன்னனுன **மூன்றும் கென்ரியின்** உறவினராக இருந்தும், அவனை எதிர்த்து மக்கள் உரிமைகளை நிலைநாட்டியமை வியக்கத்தக்கது. 1265-ல் இவர் மக்களின் பிரதிநிதிகளடங்கிய மன்றத்தை நிறுவியதால், "மக்கள் சபையின் பிதா" என்று இன்றளவும் பாராட்டப்படுகிருர். அரசன் தனது அதிகாரங்கள் பலவற்றை அதனேடு பகிர்ந்து கொள்ள நேர்ந்தது.

1485-ஆம் ஆண்டில், உள்நாட்டுக் குழப்பத்தை அடக்கி, **ஏழாவது கென்ரி** என்ற மன்னன் தனது தியூடர் வம்சத்தின் ஆதிக்கத்தை நிலைநாட்டினன். அப்போது ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் வலிய மன்னனுட்சி (Despotism) நிலைபெற்றமையால், இங்கிலாந்திலும் தியூடர்கள் ஆற்றலும் அதிகாரமும் மிகுந்த மன்னர்களாக விளங்கினர். அவர்களது ஆட்சிக் காலத்திற் செல்வ வளர்ச்சியும் அமைதியும் பலதுறைகளிலும் முன்னேற்றமும் தோன்றினவாதலின், மக்களனைவரும் அவர்களுக்கு இடைவிடாத ஆதரவு தந்து அவர்களது கட்டளைகளுக்கு இணங்கி நடந்தனர். அளவற்ற அதிகாரம் படைத்தவர்களாயிருந்தும், தியூடர் மன்னர்கள் மக்களைத் திருப்தி செய்வதிலும் பாராளுமன்றத்தின் துணைகொண்டு ஆட்சி புரிவதிலும் கவனஞ் செலுத்தினர். இந்தக் காரணத்தால், "தியூடர் வல்லரசுக் காலத்திலும் பாராளுமன்றம், நிருவாகத்தில் பங்கெடுத்துக் கொண்டது. தியூடர்களும் எந்தத் திட்டத்தையும்

பாராளுமன்றத்தின் உதவிகொண்டே நிறைவேற்றி வந்தமையால், இதனைப் பாராளுமன்றம், ஆட்சித் துறையில் பயிற்சிபெற்ற காலமாகக் குறிப்பிடலாம்,'' என்பார் **திரெவிலியன்** என்ற சரித்திரப் பேரறிஞர்.

இவ்வாறு ஒரு நூற்றாண்டுக் காலமாகத் தியூடர் வல்லரசின் நிழலில் ஒதுங்கி இருந்து வளர்ச்சியுற்ற பாராளுமன்றம், நாளடைவில் மக்களின் நலன்களைப் பேணுவதிலும் தனது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதிலும் அதிக சிரத்தை காட்டியது. அதன் பயனாக, ஆற்றலும் புகழும் மிகுந்த **எலிசபெத் ராணி** யின் இறுதி நாட்களில் அவளது திட்டங்களைக் குறை கூறி எதிர்ப்பதற்கும் இந்த மன்றம் முயன்றது. எலிசபெத் திறமை மிகுந்தவளாகையால், மிகவும் சாதுரிய மாகத் தனது திட்டங்களை வற்புறுத்தாமல் பாராளுமன் றத்தின் கொள்கைகளை அனுசரித்து நடந்து வந்தாள். உதாரணமாக, இந்த மன்றத்தின் அனுமதியின்றி எலிசபெத் வியாபார உரிமைகளை (monopolies) விற்கத் தொடங்கியபொழுது, இந்த மன்றம் அதனை எதிர்த்தது. உடனே எலிசபெத் அதன் எதிர்ப்பை மதித்து வியாபார உரிமைகளின் விற்பனையை நிறுத்தி விட்டாள். அதனால் பெருமகிழ்ச்சி யடைந்த பாராளுமன்றம் தனது நன்றிக்கு அறிகுறியாக, அரசியின் செலவுகளுக்குப் பெருந்தொகை ஒன்றை அளித்தது. இவ்வாறு எலிசபெத் மக்களின் ஆதரவை எளிதில் பெற்றாள். ஆனால், அவள் 1603-ல் மரணமடைந்த பொழுது தியூடர் வம்சமும் முடிவடைந்த மையால், சுகொத்லாந்து அரசனாகிய சுடுவர்ட் வம்சத் திய **முதலாம் யேம்சு** ஆங்கில நாட்டின் அரசனானான். இந்த ஆட்சி மாறுதலால், பல முக்கியமான விளைவுகள் ஏற்பட்டன.

சுடுவர்ட் அரசர்கள் ஆங்கிலமக்களின் மனப் பாங்கையும் கொள்கைகளையும் அறியாதவர்கள். மேலும், தியூடர்களைப்போல மக்களின் நலன்களைப் பேணவும்

அவர்களது விருப்பத்தை ஒட்டி நடக்கவும் சுடுவர்ட் மன்னர்களுக்குத் திறமையில்லை. அவர்களது பிடிவாதமும் மூர்க்க குணமும் சுயநலமும் அதிகார ஆசையும் அவர்களைப் பாராளுமன்றத்தின் பகைவர்களாகச் செய்துவிட்டன. 'காலப் போக்கின் மாறுதலையறிந்து அதன்படி ஒழுகும் சக்தியற்றவர்கள் அவர்கள்,' என்றே அவர்களை ஒரு சரித்திராசிரியர் வருணித்துள்ளார்.

1603-ஆம் ஆண்டில் முதலாம் யேம்சு அரசுரிமை பெற்றதும், பாராளுமன்றத்தின் திறப்புவிழாவில் நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினன். "அரசன் கடவுளின் பிரதிநிதியாகக் கருதப்படவேண்டும்; அவனது அதிகாரங்களை வரையறுக்க முயல்வதும் நிருவாகத்தில் குறுக்கிடுவதும் தவருன செயல்கள். ஆதலின், பாராளுமன்றம் அரசனுடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து நடத்தல் அவசியம்.'' இதுவே அவனது முக்கிய கொள்கையாகும். அவன் கத்தோலிக்கருக்கும் பியூரிட்டன்களுக்கும் தொழுகையிற் சுதந்திரம் வழங்க மறுத்து ஆங்கில திருச்சபையையே அனைவரும் பின்பற்றுமாறு வற்புறுத்தினன். தொழுகைச் சுதந்திரம் விரும்பிய பியூரிட்டன்கள், 'மதகுருமார்களின் ஆதிக்கமே வேண்டாம்' என்ற கருத்தடங்கிய **மிலினரி விண்ணப்பத்தைச்** சமர்ப்பித்தனர். அதனை யேம்சு ஏற்கவில்லை. அதனுல் மனம் நொந்த பியூரிட்டன் தலைவர்களிற் பலர் 'புதிய உலகமாகிய' அமெரிக்காவிற்குச் சென்றனர். அவர்களில், 1623-ல் சென்ற "யாத்திரீகத் தந்தையர்'' (Pilgrim Fathers) பிரதானமானவர்கள். மேலும், பியூரிட்டன்கள் பாராளுமன்றத்திற் பெரும்பான்மையோராக விளங்கியமையால், அரசனுக்கு இடை விடாத எதிர்ப்பு இருந்து வந்தது. சிறுபான்மையோரான கத்தோலிக்கரும் அரசனைக் கொல்ல சூழ்ச்சிகள் புரியலாயினர். அவன் பாராளுமன்றத்தைக் கேளாமல் பட்டம் பதவிகளை விற்றும், கட்டாயக் கடன்கள் வாங்கியும் அரசு செலுத்தியமையால், மக்கள்

அவனை வெறுத்தனர். அவ்வாறு பாராளுமன்றத்தின் அனுமதியின்றி ஆட்சி புரிதல் தகாதென்று எதிர்த்த வர்கள்மீது குற்றம் சாட்டி அவர்களைச் சிறையிடுவித்தான். நீதிபதிகளும் அரசனுக்குப் பயந்து நடந்தனர். அதனால், **பிரான்சிசுபேகன்** என்ற அறிஞர், "இந்த நீதிபதிகள் அரசனது அரியணையைத் தாங்கும் பொம்மைச் சிங்கங் கள்!" என்றே கூறினர். இங்கிலாந்துடன் பகைமை கொண்ட சுபெயின் நாட்டுடன் அவன் உறவுகொள்ள முயன்றது, வெறுப்பை வளர்த்தது. சுபானியரைத் திருப்தி செய்வதற்காக **வால்ட்டர் ராலே** என்ற தேச பக்தி மிக்க வீரரையும் யேம்சு கொல்வித்தான். அன்றி யும், தனது மருமகனை **பிரடரிக்கை** சேர்மானிய கத்தோலிக்கரும் சுபானியரும் சேர்மானிய நாட்டி னின்றும் வெளியேற்றியபோது, நாட்டிலுள்ள புரட்டசு தாந்தரின் கூக்குரல்களையும் மதியாமல், யேம்சு சுபானிய உதவியையே நாடினன். ஆனல், முடிவில் யேம்சு தனது தவற்றை உணர்ந்துகொண்டபோதிலும், சுபானியருடன் போராட மனமில்லை. 1625-ல் ஒருவாருக அவன் துணிந்து போரில் இறங்கியபோதிலும், விரைவில் மரணமடைந் தான். அவனது மகனை **முதலாம் சார்ல்சு** பாராளுமன் றத்தைக் கூட்டாமல், இலியட் போன்ற தலைவர்களைச் சிறையிலிட்டும் மக்களிடமிருந்து 'கப்பல்வரி' போன்ற வரிகளை வசூலித்தும் இராணுவ ஆட்சி நடத்தியும் மக்களைத் துன்புறுத்தினன். அவனது பிரதிநிதியான **'வெண்ட் வொர்த்'** அயர்லாந்தில் கொடுங்கோன்மை செலுத்துகையில், நண்பனை மதகுரு **லோட்** ஆங் கிலத் திருச்சபையை ஏற்காதவர்களைக் கடுமையாகத் தண்டித்தான். இவனல் சுகொத்லாந்துடன் இருமுறை போர் நிகழ்ந்து அவற்றில் சார்ல்சு தோல்வியுற்றுன். எனவே, 1640-ல் பாராளுமன்றத்தைக் கூட்டியதும், அது தனது வெறுப்பைக் காட்டத் தொடங்கியது. முதலில் அரசனது நண்பர்களான வெண்ட் வொர்த்தையும்

லோடையும் ஒழித்து, மதச் சுதந்திரம் வழங்கியது. பிறகு பாராளுமன்றத்தின் அனுமதியின்றி வரிவிதிக் கப்படலாகாது என்றும் மக்களது உரிமைகள் பறிக்கப்படலாகா தென்றும் கூறியதுடன், இராணுவத்தையும் தனது அதிகாரத்தின்கீழ் கொண்டுவர முயன்றது. இதனுல் கோபமடைந்த மன்னன் 1642-ல் காம்டன், பிம் முதலிய தலைவர்களைக் கைப்பற்றவும் பாராளுமன்றத்திற் கெதிராகப் போர் தொடங்கவும் முயலவே, உள்நாட்டுப் போர் விளைந்தது. முதலில் மன்னனது சேனைகள் ஒக்சுபோர்டு முதலிய இடங்களைக் கைப்பற்றின வாயினும், மன்னனிடம் போதிய பொருள் இல்லாமையால் அவனது முயற்சிகள் பயனற்றுப் போயின. மேலும், அரசனுக்கு இலண்டன் முதலிய நகரங்களில் ஆதரவில்லாமையாலும், ரூபர்ட் முதலிய சேனுபதிகள் சேனைகளைத் திறம்பட நடத்தாமையாலும், அரசனுடைய பலம் குறைந்தது. அப்போது பியூரிட்டன் மதத்தைச் சார்ந்த குடியானவரான **ஒலிவர் குராம்வெல்** தமது செஞ்சட்டைப் படைகளைத் திறம்பட நடத்தி வந்தார். அவரது திறமை காரணமாக, **மாசுடன்மூர், நேசுபி** என்ற இடங்களில் மன்னனது படைகள் தோல்வியுற்றன. **ஒலிவர் குராம்வெல்** என்ற அந்த சிறந்த தளபதியால் மன்னனது படைகள் முடிவாக முறியடிக்கப் பட்டு, மன்னனும் 1649-ல் சிரச்சேதம் செய்யப்பட்டான். பிறகு நிலைபெற்ற குடியரசாட்சியில் குராம்வெல் இராணுவ வலிமைபெற்ற



படம் 39. ஒலிவர் குராம்வெல்

சர்வாதிகாரியாக விளங்கினன். அவனுல் இங்கிலாந்து பெருமை பெற்றதெனினும், அரசியல் அமைப்பு எவ்வித முன்னேற்றமும் அடையவில்லை.

1660-ல் மீண்டும் மன்னனுட்சி நிலைபெற்றது. **இரண்டாம் சார்ல்சு** முதலில் மக்களது விருப்பத்திற் கிணங்க நடந்தானுயினும், பிற்காலத்திற் பிரெஞ்சு மன்னனுடன் கொண்ட உறவால் மக்களின் பகைமையைத் தேடிக்கொண்டான். அவனது ஆட்சி முடிவடையும் தருணத்தில், கத்தோலிக்கனை அவனது சகோதரன் **இரண்டாம் யேம்ஸ்** அரசனுகக்கூடாதென்று ஒரு சாராரும் அவனை அரசனுக்கலாம் என்று மற்றொரு சாராரும் முறையிட்டமையால், இந்த நாட்டில் இரு பெரும் அரசியற் கட்சிகள் தோன்றிவிட்டன. அவை முறையே **விக், டோரி** என்ற பெயர்களால் அழைக்கப்பட்டன. 1685-ல் அவன் இறந்ததும், இரண்டாம் யேம்சு ஆட்சிப் பீடத்திலமர்ந்துகொண்டு, தனது உறுதி மொழிக்கு மாருகக் கத்தோலிக்கருக்குப் பல உரிமைகள் அளிக்க முயன்றதுடன் தனது விசேட அதிகாரங்களை உபயோகித்துப் பாராளுமன்றத்தின் ஆதிக்கத்திற்கு இடையூறு விளைத்தான். இதனுல் மக்கள் பெரிதும் அதிருப்தியுற்று, அவனது மருமகனும் ஒல்லாந்தரின் அதிபதியுமான வில்லியத்தை அரசனுக வரவேற்கத் தயாராயினர். இதை அறிந்த இரண்டாம் யேம்சு 1688-ல் நாட்டை விட்டோடவும், **மூன்ருவது வில்லியமும்** அவனது மனைவியான மேரியும் **பாராளுமன்றத்தின் சம்மதம் பெற்று** அரசு கட்டிலேறினர். இவ்வாறு சுடுவர்ட் மன்னர்களின் தெய்வீக அரசுரிமைக் கொள்கை ஒழிக்கப்பட்டு மக்கள் சம்மதம் பெற்ற **வரம்புடை முடியரசு** நிறுவப்பட்டதால், இந்த ஆட்சி மாறுதலை 'மாபெரும் புரட்சி' என்று சரித்திர வல்லுநர் வருணிப்பர்.

இது முதல் பாராளுமன்றத்தின் சம்மதம் பெருத எவரும் அரசனுவது இயலாதென்பதும், மக்களுக்குக்

கொடுமை விளைப்பவர்களை நீக்கும் உரிமை உண்டு என்பது முறுதிப்படுத்தப்பட்டன. மூன்ருண்டுகளுக்கு ஒரு முறை பாராளுமன்றம் கூடுவது அவசியம் என்றும், வரவு செலவுத் திட்டத்தை ஒவ்வோர் ஆண்டிலும் பாராளுமன்றத்தின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும், நிதியும் இராணுவமும் பாராளுமன்றத்தின் அதிகாரத்துக்குமட்டுமே உட்பட்டவை என்றும் சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டன. மேலும், நீதிபதிகளை மனம் போனவாறு அரசன் நீக்கமுடியாதென்றும், அவர்கள் இலஞ்சம் வாங்குதல் போன்ற குற்றங்கள் புரிந்தால் பாராளுமன்றம் அவர்களை நீக்குமாறு தீர்மானிக்குமென்றும் தெளிவாக்கப்பட்டது. கத்தோலிக்கர் எவரும் அரசனுகவோ அரசியாகவோ இருக்கக்கூடாதென்று விதிக்கப்பட்டதால், வில்லியத்திற்குப் பிறகு **ஆன்** அரசியும், அவளுக்குப் பிறகு "கெனேவீரிய" வம்சத்தைச் சேர்ந்த புரட்டசுதாந்த அரசர்களுமே ஆட்சி புரிவர் என்று பாராளுமன்றம் நிர்ணயித்தது. இவை யாவும், சேர்ந்து '**உரிமை மசோதா**' என வழங்கப் பெற்றன. மூன்ரும் வில்லியத்தின் ஆட்சிக் காலத்தில் பல பெரும் மாறுதல்கள் நிகழ்வுற்றன. அவற்றில், பத்திரிகைகளுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டமையும், 'கட்சி ஆட்சி முறை' (Party Government) என்பது முதன் முதலாக நிறுவப்பட்டதும் பிரதான சீர்திருத்தங்களாகக் கருதப்படுகின்றன. ஏனெனில், பத்திரிகைகள் முழுச் சுதந்திரம் பெற்றதால், அரசாங்கத்தின் குற்றங்களைத் தைரியமாக வெளியிடுவதற்கும், அவ்வாறே மக்களின் குறைகளை எடுத்துச் சொல்வதற்கும் அவற்றிற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

கட்சி ஆட்சி முறையின்கீழ், ஆங்கிலப் பாராளுமன்றத்தில் நீண்டகாலமாக நிர்வாகம் நடந்துவருகிறது. ஒரு கட்சி, தேர்தலில் பல வெற்றிகள் பெற்றுப் பாராளுமன்றத்திற் பெரும்பான்மைப் பலத்துடன் விளங்கினுல்,

அந்தக் கட்சியினர் மந்திரிசபையை அமைத்து நிர்வாகம் புரியத் தொடங்குவர். அதனுல், அந்தக் கட்சி 'அரசாங்கக் கட்சி' எனப்படும். பாராளுமன்றத்தில் சிறுபான்மை தானங்களே பெற்ற மற்ருெரு கட்சி, 'எதிர் கட்சி'யாக விளங்கி, நிருவாகத்திலுள்ள குற்றங் குறைகளை எடுத்துக் கூறிப் பணிபுரிகின்றது. இந்த ஆட்சி முறையின்கீழ், இன்று எதிர்க்கட்சியாக உள்ளதொரு கட்சி பிற்காலத்திற் றேர்தலில் வெற்றிகள் பல பெற்று, பெரும்பான்மைப் பலத்துடன் அரசாங்க நிருவாகத்தைக் கைப்பற்றுவதற்கும் இடமுண்டு. மூன்ரும் வில்லியம் தனக்கு அனுசரணையாக இருந்த விக் கட்சியினரையே மந்திரிகளாகத் தெரிந்தெடுத்துக் கொண்டமையால், டோரிக் கட்சியினர் எதிர்க் கட்சியாக அமர நேர்ந்தது. இதனுற் கட்சி ஆட்சிமுறை அக்காலத்திற் ருேன்றிவிட்டது. மேலும், மந்திரிசபையில் ஒரே கட்சி இடம் பெற்றமையால், மந்திரிசபை முழுதும் ஒரு கருத்தையே வெளியிடவும், அதனுல் மந்திரிகளனை வரும் சேர்ந்து கூட்டுப் பொறுப்புடன் (Collective responsibility) விளங்கவும் இடமுண்டாயிற்று. இவைகளே 'கபினெட் முறை'யின் அடிப்படை அம்சங்களாயின.



படம் 40. மூன்ருவது வில்லியம்

1715-க்குப் பிறகு கனேவர் வம்சம் அரசுரிமை

பெற்றதிலிருந்து, மந்திரி சபைக் கூட்டங்களுக்கு அரசன் தலைமை வகிக்கும் வழக்கம் மறைந்தது. ஏனெனில், தொடக்கத்தில் கனேவர் வம்சத்தரசர்கள் சேர்மனியர்கள்; ஆங்கில மொழி அறியாதவர்கள். ஆகவே, அரசன் மந்திரி சபையோடு தொடர்பில்லாமல் ஒதுங்கியதும், மந்திரி சபைகள் சுயேச்சையாக வேலை செய்யலாயின. அவற்றிற்கு ஒரு குறிப்பிட்ட மந்திரி தலைமை வகித்ததால், நாளடைவில், அந்த மந்திரியே **பிரதம மந்திரி** என அழைக்கப்பட்டு, அதிக அதிகாரங்களையும் கிடைக்கப் பெற்ருன். இவ்வாறே '**கபினெட்**' **முறை** என்ற மந்திராலோசனை முறை வழக்கத்தில் வந்தது. இது ஆங்கில அரசுக்குரிய சிறப்புகளில் ஒன்ருகும். இத்தகைய முறை **சர். ருெபர்ட் வால்போல்** (1721—1742) நிர்வாகம் புரிந்த காலத்திலிருந்து சிறப்புற்றதால், ஆங்கில நாட்டு வரலாற்றில் அவரையே முதற் பிரதமராகக் குறிப்பிடுவது வழக்கம்.

இந்த 'கபினற்' முறையின் சிறப்பான அம்சங்கள் எவை என்று ஆராய்ந்தால், அரசியல் நிபுணர்கள் வகுத்தவாறு கூட்டுப் பொறுப்பு, இரகசிய மந்திராலோசனை, பிரதமரின் உயர்வு, பாராளு மன்றத்துடன் நெருங்கிய தொடர்பு என்ற நான்குமேயாகும். ஒரு மந்திரி சபையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு மந்திரியும் தன் இலாகாவிற்குப் பொறுப்பு வகிப்பதுடன், மந்திரி சபை செய்யும் எல்லாத் தீர்மானங்களுக்கும் பொறுப்புள்ளவனுகிருன். அதனுல், ஏதேனும் ஒரு இலாகா பற்றிய பிரச்னைமீது மந்திரிசபை தோற்கடிக்கப்பட்டால், மந்திரிசபை முழுதும் இராசிநாமா செய்து விலகநேரிடும். இதுவே 'கூட்டுப் பொறுப்பு' என்பதன் பொருள். மேலும், இந்தக் கபினெற் கூட்டங்கள் இரகசியமாக நடைபெறுவன வாகையால், தீர்மானங்கள் பெரும்பாலும் எழுதப்படுவதுமில்லை. இதனுற் கபினெற் கூட்டங்களிற் பூரண விவாதம் நடைபெறுவதற்கு இடமிருக்கிறது.

அன்றியும், ஆங்கிலப் பிரதமர் ஓர் உன்னதமான தானத்தை வகிக்கின்ருர். அவரே தமது கட்சியின் தலைவராகவும், பாராளு மன்றத்தில் •முதன்மை வகிப்பவராகவும், அரசருக்கு ஆலோசனை கூறுபவராகவும், நிர்வாகத் தலைவராகவும் விளங்குகிருர். **பேசட்** என்ற அறிஞர் கூறியவாறு 'பிரதமரே ஒருபுறம் மன்னனுக்கும் மந்திரிசபைக்குமிடையிலும், மற்ருேர்புறம் மந்திரி சபைக்கும் பாராளுமன்றத்திற்கு மிடையிலும் இணைப்புச் சங்கிலியாக விளங்குகிருர்' அவர் மற்ற மந்திரிகளை நியமிக்கவும், நீக்கவும் அதிகாரம் படைத்தவர். அன்றியும், கபினெற் முறையின்கீழ்க் கட்சிக்கும் மந்திரிசபைக்குமிடையே நெருங்கிய தொடர்பிருக்கின்றது. ஏனெனில், பெரும்பான்மைக் கட்சியின் தலைவர் என்ற முறையில் தான் பிரதமர் தமது கட்சியைச் சேர்ந்த மற்ற மந்திரிகளை நியமித்துக்கொள்கின்ருர். இத்தகைய கபினெற் முறை ஒரு சிறந்த சனநாயக ஏற்பாடு என்பதில் ஐயமில்லை. அதனுலேயே பிற்காலத்திய பல நாடுகளின் அரசியலமைப்புகளில் இது இடம் பெற்றிருக்கின்றது.

இந்த முறையை அவமதித்துத் தானே யதேச்சாதிகாரம் பெறவேண்டுமென்று மூன்ரும் **சோர்ச்** மன்னன் முயன்றதுண்டு. அவன் யதேச்சாதிகாரம் படைத்த மன்னனுய் விளங்க விரும்பினுன். அதன் பொருட்டுப் பாராளுமன்றத்தில் தனது நண்பர்களே இடம்பெறும் வண்ணம் தலையிடத் தொடங்கினுன். இவ்வாறு பாராளுமன்றத்தில் அவனைச் சார்ந்தவர்களே பெரும்பான்மை பலம் பெற்றமையால், இராக்கிங்காம், கிரென்வில் பிரபு, பியூட் போன்றவர்கள் பிரதமர்களாகப் பதவி பெற்று அவனது கட்டளைகளை நிறைவேற்றி வந்தனர். இக்காரணத்தால் அமெரிக்கக் ·குடியேற்றங்களை இங்கிலாந்து இழக்க நேர்ந்தது. ஆனுல், அமெரிக்க குடியேற்றங்களை இழந்த பிறகு, அவன்மீது மக்கள் கொண்ட வெறுப்புக் காரணமாக நிர்வாகத்தினின்றும் ஒதுங்கிக்கொண்

டான். அதுமுதல் நான்காம் வில்லியம், விக்டோரியா ராணி போன்ற சிறந்த மன்னர்களும், இளையபிட், பீல், டிசுரேலி, கிளாட்சுடன் முதலிய திறமை மிக்க பிரதமர்களும் இந்த முறையை மீண்டும் நிலைநாட்டினர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில், இங்கிலாந்து சனநாயக நாடு என்ற பெருமைக்கே இடமில்லாத நிலையில், சமுதாயத்தின் பெரும் பகுதியினர் வாக்குரிமையற்று இருந்தனர். தொழிற் புரட்சி காரணமாகப் **பர்மிங்காம், கிளாசுகோ** முதலிய பெரும் தொழிற்சாலை நகரங்கள் தோன்றியிருந்தன; மேலும், ஆலை முதலாளிகள், தொழிலாளர் முதலியவர்களின் தொகையும் அதிகரித்தது. ஆனால், சனசந்தடியற்ற கிராமங்களும் நிலம் படைத்தவர்களும் மட்டுமே பெற்றிருந்த வாக்குரிமை, இத்தகைய நகரங்களுக்கும் அங்கு வாழ்ந்த மக்களுக்கும் வழங்கப்படவில்லை! ஆகவே, நகரங்களிலுள்ள முதலாளிகளும் நடுத்தர வகுப்பினரும் புரிந்த கிளர்ச்சியால், 1832-ல் முதன் முதல் சீர்திருத்தச் சட்டம் நிறைவேறியது. இந்தச் சட்டத்தினுல் ஆலை முதலாளிகளும் நடுத்தர வகுப்பினரும் வாக்குரிமை பெற்றனர். மொத்த வாக்குரிமை பெற்றவர் தொகை இரண்டு மடங்காகப் பெருகிற்று. ஆயினும், நகரங்களில் வாழ்ந்த தொழிலாளரும் கிராமங்களில் வாழ்ந்த விவசாய வகுப்பினரும் வாக்குரிமை பெறவில்லை. எனவே, மீண்டும் கிளர்ச்சிகள் தோன்றின. 1840-ல் "**சார்டிசுட் இயக்கம்**" தோன்றியது. குறைந்த நேர வேலை, வருடந்தோறும் பாராளுமன்றத்திற்கு தேர்தல் நடத்தல், இரகசியமாக 'ஒட்' செய்தல், வயது வந்தவர்கட்கு வாக்குரிமை, சமமான தொகுதிகள், பாராளுமன்ற அங்கத்தினருக்கு ஊதியம் முதலியவைகளடங்கிய "மக்கள் விண்ணப்பம்" (Peopels Charter) ஒன்றை அவர்கள் அனுப்பியமையால், அந்த இயக்கம் இப்பெயர் பெற்றது. **தானியேல் ஓகானர்** போன்ற தலைவர்கள் மிக முயன்றும், இந்தக் கொள்கைகளை அரசாங்கம்

ஏற்கவில்லை. (1840—1848) இந்த எட்டாண்டுகளில் இந்த இயக்கம் மறைந்தது. இத்தகைய சார்டிசுட் இயக்கம் போன்ற தொழிலாளர் இயக்கங்களின் பயனாக 1867-ல் அவர்களும் வாக்குரிமை பெற்றனர். பின்னர் கிளாட்டனால் 1884-ல் ஏழை விவசாயிகளுக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. பின்னர்ப் பெண்கள் கிளர்ச்சி புரிந்து, முதலாம் உலகப் போருக்குப் பின் அவர்களும் இந்த உரிமையை அடைந்தனர். 1918-ம் ஆண்டிற் பெண்களின் யுத்தகாலச் சேவையைப் பாராட்டி, அவர்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. ஆனால் முப்பது வயதிற்கு மேம்பட்டவர்களுக்கே இந்த உரிமை வழங்கப்பட்டமையால், மீண்டும் கிளர்ச்சி தொடர்ந்தது. முடிவாக 1928-ல் இருபத்தோரு வயதுள்ள பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டதால், பெண்களும் ஆண்களுக்கு நிகரான நிலையடைந்தனர். நாட்டில் உண்மைச் சனநாயகம் நிலைபெற்றது.

1909-ல் **லோயிட் சோர்ச்** தயாரித்த வரவு செலவு திட்டம் புரட்சிகரமானது என்ற காரணத்தால் பிரபுக்கள் சபை நிராகரித்தது. உடனே பொது சபையைக் கலைத்து மீண்டும் தேர்தல் நிகழ்த்திப் பெரும்பான்மை பலம் பெற்ற லிபரல் கட்சியினர், தமது திட்டங்களை நிறைவேற்றியதுடன், பிரபுக்கள் சபையின் அதிகாரத்தைக் குறைக்கவும் வழி தேடினர். அதன் பயனாகவே 1911-ல் **பாராளுமன்றச் சட்டம்** நிறைவேறியது. பண சம்பந்தமான எந்த மசோதாவையும் பொதுச் சபை நிறைவேற்றிய பிறகு பிரபுக்கள் சபை அதைத் தடுக்க உரிமையில்லையென்று முடிவாயிற்று. இவ்வாறு, 1911-ல் நிறைவேறிய 'பாராளுமன்றச் சட்டத்தினால்', பிரபுக்கள் சபையின் அதிகாரம் மிகவும் குறைக்கப்பட்டுப் பொதுசன சபையின் அதிகாரம் மேலோங்கியது.

இதுகாறும் விளக்கிய வரலாற்றினின்றும் ஆங்கில அரசியலமைப்பின் மேன்மையை ஒருவாறு உணர்ந்து

கொண்டிருப்பீர்கள். உலகிலுள்ள பல நாடுகளும் இதன் சிறப்பான அம்சங்களைப் பின்பற்ற முயல்வதொன்றே, இதன் பெருமைக்குச் சான்றாகும்.

### வினாக்கள்

1. தியூடர் வல்லரசின் சிறப்புகள் யாவை?

2. 'சுடுவர்ட் அரசர்களின் குணாதிசயமே அவர்களது வீழ்ச்சிக்குக் காரணம்'—விளக்குக.

3. யேம்ஸ் கூறிய 'தெய்வீக அரசுரிமைக் கொள்கை'யை விவரிக்க.

4. முதலாம் சார்ல்சு காலத்தில் எந்த நிகழ்ச்சிகள் இறுதியாக உள்நாட்டுப் போருக்குக் காரணமாயின?

5. குராம்வெல் ஆட்சியின் சிறப்புகளைக் குறிப்பிடுக.

6. ஆங்கில நாட்டுப் பெரும் புரட்சிக்கு எந்தச் சம்பவங்கள் காரணமாயின? அந்த புரட்சியின் விளைவுகள் யாவை?

7. கட்சியாட்சி முறை என்றால் என்ன?

8. காபினெற் ஆட்சிமுறையின் சிறப்புகளை விளக்குக.

9. வாக்குரிமை விரிவாக்கப்பட்ட வரலாற்றை விளக்குக.

10. பெண்கள் எப்போது, எவ்வாறு, வாக்குரிமை பெற்றனர்?

11. 'சாட்டிசுடு' இயக்கம் என்பது யாது? அதன் தலைவர்கள் யாவர்? அதன் கொள்கைகள் யாவை?

12. 1911-ஆம் ஆண்டில் பாராளுமன்றச் சட்டம் நிறைவேறக் காரணம் யாது? அதன் முடிவு யாதாயிற்று?

# 5. சாம்ராச்சிய வேட்கையும் ஐரோப்பிய யுத்தங்களும்

முதல் அத்தியாயத்திற் கூறியவாறு புதிய கடல் மார்க்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டதும், ஐரோப்பியர் ஆசிய நாடுகளுடனும், அமெரிக்க மக்களுடனும் வியா பாரம் செய்யத் தொடங்கினர். இவ்வாறு வியாபாரம் செய்ய முற்பட்ட நாடுகளில், மத்தியதரைக் கடலோர மிருந்த வெனீசு, சினேவா முதலிய வியாபாரத் தலங் களின் வலிமை குறைந்து, அத்திலாந்திக் சமுத்திரக் கரையிலுள்ள நாடுகளே முதன்மை பெற்றன. 1460-ல்



படம் 41. கென்றி

'மாலுமித்தலைவன்' என்றழைக்கப்பட்ட கென்ரி ஆதிக் கம் பெற்றதிலிருந்து, போர்த்துக்கீசர் கீழைத் தேசங்

களுடன் தொடர்பு கொள்ள முனைந்து, பல முயற்சிகள் செய்தனர். 1483-ல் பார்த்தலோமியோ டயசு என்பவன் ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையோரமாக வந்து, கடலலைகள் கொந்தளித்துக் கொண்டிருந்த "புயல் முனை"யை அடைந்தான். பிறகு 1497-ல் வாசுகோடகாமாவின் முயற்சியால் அந்த நோக்கம் ஈடேறியது. அவன் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிவந்து இந்திய மாலுமிகளின் உதவியால் இந்தியாவின் மேற்குக் கடற்கரையை அடைந்தான். கள்ளிக்கோட்டைத் துறைமுகத்தில் போர்த்துகீசர் ஓர் பண்டகசாலையும் அமைத்துக்கொண்டனர். மேலும், பதினாறும் நூற்றாண்டில் ஆசிய நாடுகளிற் றங்கள் வியாபாரமும் சாம்ராச்சியமும் நிலைக்குமாறு அவர்கள் செய்து கொண்டனர். சுபானியர், அதே காலத்தில் அமெரிக்காவின் பெரும்பகுதியைக் கைப்பற்றி, குடியேற்றங்கள் நிறுவி, அங்கிருந்து பொன்னும் வெள்ளியும் கொண்டு வந்து குவித்தனர். குடியேற்றங்கள் நிறுவிய சுபானிய தலைவரில் கோர்ட்டிசு என்பவனும், பிசாரோவும் முக்கியமானவர்கள். அவர்கள் சற்றும் இரக்கமின்றிச் சுதேசிகளைக் கொன்று குவித்தனர். அக்காலத்தில் போப்பின் ஆணையால் அத்திலாந்திக் சமுத்திரத்தின் மேற்கிலுள்ள நாடுகளில் சுபானியரும், கீழைத் தேசங்களில் போர்த்துக்கீசரும் ஆதிக்கம் செலுத்துமாறு அனுமதிக்கப்பட்டனர். இவர்களது செல்வமும் அதிகாரமும் ஓங்குவதைக் கண்டு பொறாமையுற்ற ஆங்கிலேயர், ஒல்லாந்தர், பிரன்சுக்காரர் முதலியவர்களும் வியாபாரப் போட்டியிலும் குடியேற்றங்கள் அமைப்பதிலும் ஈடுபட்டனர். இதனால் இவர்களுக்கும் சுபானிய, போர்த்துக்கீச அதிபதிகளுக்குமிடையே போராட்டங்கள் நிகழ்ந்தன. பின்னர் இவர்களும் தமக்குள் போட்டியிட்டுக்கொண்டு யுத்தங்களிலிறங்கினர். இந்தக் காரணத்தினால், பதினாறும் நூற்றாண்டிற்குப் பிறகு நிகழ்ந்த பெரும் ஐரோப்பிய போர்கள் மற்றக்

கண்டங்களுக்கும் பரவியதன்றி, அவை சாம்ராச்சியங்களை வித்தரிக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

பதினும் நூற்றுண்டில் சுபானியர் வலிமை பெற்றிருந்தமையால், அவர்களைக்கண்டு மற்ற ஐரோப்பியர் அஞ்சினர். அப்போது ஆட்சிபுரிந்த இரண்டாம் பிலிப்பு மன்னன் திறமை வாய்ந்தவனெனினும், கத்தோலிக்க மதத்தில் கொண்டிருந்த பற்றுதல் காரணமாகத் தனது வல்லரசு சிதறுண்டு போகும் நிலையை உண்டாக்கி விட்டான். ஒருபுறம் புரட்டசுதந்துகளான ஒல்லாந்தர் அவனை இடைவிடாது எதிர்த்தனர்; மற்ருேர் புறம் சிறந்த மாலுமிகளான ஆங்கிலேயர்கள் அத்திலாந்திக் சமுத்திரத்தில் சுபானியக் கப்பல்களை வழிமறித்தும், அவை கொணரும் பொன்னைக் கொள்ளையடித்தும் துன்பம் இழைத்தனர். அன்றியும் கத்தோலிக்க மதத்தை நிலைநாட்டவும் எலிசபெத்தை வீழ்த்தவும் முயன்ற சுகொட்மேரி தனது சூழ்ச்சி தோல்வியுற்றதும் 1587-ல் மரணதண்டனை அடைந்தாள். இதனுல் கோபமடைந்த இரண்டாம் பிலிப், இங்கிலாந்தில் எலிசபேத்தின் ஆட்சியைத் தகர்த்து, கத்தோலிக்க மதத்தை நிலைநாட்டுவதாகச் சபதம் கூறிக் காடிசு துறைமுகத்தில்பெரும் கடற்படை ஒன்றைத் தயாரிக்கலானுன். ஒரு நாள் சிறந்த மாலுமியாகிய பிரான்சிசு டிறேக் துணிகரமாகச் சென்று, அந்தத் துறைமுகத்திற்குள்



படம் 42. பிரான்சிசு டிறேக்

புகுந்து, தீயிடப்பட்ட பஞ்சுப் பொறிகளடங்கிய கப்பல் களை அனுப்பினுன். அவை சுபானியக் கப்பல்களை அணுகியதும் தீ பரவி, அவற்றில் பல நாசமடைந்தன. அப் போது 'சுபானிய அரசனின் தாடியைக் கொளுத்தி எரித்த தாக' டிறேக் இந்தச் சம்பவம் குறித்துப் பெருமைபேசிய தால், பிலிப் மேலும் கோபமடைந்து மீண்டும் முயற்சி செய்து, சுமார் 130 கப்பல்களடங்கிய **ஆர்மடா** என்ற கடற்படையை 1588-ல் அனுப்பினுன். அதன் சேனுதி பதியான மெடினு சிடோனியாவின் அனுபவக் குறைவாலும், புயற்காற்றின் வேகத்தாலும், எலிசபேத் உண்டாக்கிய ஒற்றுமை உணர்ச்சியாலும், **பிரான்சிசுடிறேக்** போன்ற மாலுமிகளின் திறமையாலும் இந்தக் கடற் படை முறியடிக்கப்பட்டது. ஆர்மடாவின் தோல்வி சுபானிய ஆதிபத்தியத்தின் வீழ்ச்சிக்கு அறிகுறியாகும். ஏனெனில், இதன் பயனுக ஒல்லாந்தர் சுயேச்சை பெற்றதுடன், புரட்டசுதந்துகளான ஆங்கிலேயர் தைரியமடைந்து அமெரிக்காவிற் குடியேற்றங்கள் நிறுவலாயினர்.

பதினேழாம் நூற்ருண்டில், ஒல்லாந்தரே ஆங்கிலேயருக்குப் பிரதான எதிரிகளாயினர். ஏனெனில், இந்த இருநாட்டினரும் கடல் வாணிபத்திலும் கடற் போர்களிலும் சிறந்து விளங்கியமையால், இவர்களிடையே வியாபாரப் போட்டியும் பூசலும் நேர்ந்தன. சிறந்த தேசீய வீரனுன குராம்வெல் தலைவனுக விளங்கிய பொழுது, ஆங்கிலக் கால்வாயில் ஒல்லாந்த மாலுமிகள் தமது கொடியை இறக்கிவிட்டுக் கப்பல்களைச் செலுத்த வேண்டுமென்று கூறப்பட்டது. மேலும் **நாவாய்ச் சட்டத்தால்** ஆங்கில நாட்டில் இறக்குமதியாகும் பொருள் களும், அங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களும் ஆங்கிலக் கப்பல்களிலேயே செல்லவேண்டுமென விதித்து, தமது கப்பல் கட்டும் தொழிலுக்குப் பாதுகாப்பு அளித்தமையால் ஒல்லாந்தர் போரில் இறங்கினர். அவர்கள் ஒருமுறை **வான்டிராப்** என்ற மாலுமித் தலைவனது

திறமை காரணமாக லண்டன் நகரையே முற்றுகை யிட்டனராயினும், முடிவில் ஆங்கில மாலுமி **பிளேக்** அவர்களை முறியடித்தான். இதனால் நேர்ந்த உடன் படிக்கையால், வட அமெரிக்காவில் இரு சிறு குடியேற் றங்களும் போருக்கு நட்ட ஈட்டுத்தொகையும் ஆங்கிலேய ருக்குக் கிடைத்தன. ஆங்கிலேயரின் கடலாதிக்கம் ஓங்கி யது. ஆனால் இரண்டாம் சார்ல்சு ஆட்சியில் ஒல்லாந்த ரோடு நிகழ்ந்த போர்களால் யாதொரு பயனும் விளைய வில்லை.

இந்த நூற்றாண்டின் இறுதியிலிருந்து ஒரு நூற் றாண்டிற்கு மேலாகப் பிரான்சுக்காரரே பிரித்தானியரின் பெரும் பகைவர்களாயினர். அமெரிக்காவிலும் இந்தியா போன்ற கீழைத் தேசங்களிலும், குடியேற்றங்களும் ஆதிபத்தியமும் அமைப்பதே இவர்களது பூசல்களுக்குக் காரணம். பதினான்காம் உலூயி உன்னத நிலைபெற்று விளங்கியபொழுது, ஒல்லாந்தரையும் ஆங்கிலேயரையும் பிரித்து, இருவரையும் அழிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தான். அவனது நோக்கத்திற்கு மாறாக, பிரித்தானிய மக்கள் தமது மன்னனை இரண்டாம் யேம்சை நீக்கிவிட்டு, அவனது மருமகனும் ஒல்லாந்தரின் அதிபதியுமான மூன்றாம் வில்லியத்தை மன்னனாக ஏற்றுக் கொண்டனர். அப்போது உலூயி, இரண்டாம் யேம்சை ஆதரிக்க முயன்றதால் போர் விளைந்தது. 1689 முதல் 1697 வரை "ஒக்சுபோர்க்குக் கூட்டுறவினரின் போர்" என்ற இப்போர் நீடித்தது. இது ஆங்கில ஆட்சி பற்றிய பிரச்னையால் எழுந்ததால், இதனை "ஆங்கில அரசுரி மைப் போர்" என்றும் வழங்குவர். உலூயி ஒல்லாந்து நாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றிய போதிலும் வில்லியத்தின் பிடிவாதமான எதிர்ப்பினால் பின்வாங்க நேர்ந்தது. முடிவில் **றிசுவிக்** சமாதானத்தால் உலூயி, வில்லியத்தை ஆங்கில மன்னனாக ஏற்றுக்கொண்டதும், போர் முடிவுற்றது.

ஆயினும், சில ஆண்டுகளில் மீண்டும் இருவரும் போரிலீடுபட்டனர். சுபானிய அரசனுன சார்ல்சு நோய் வாய்ப் பட்டிருந்தமையால், குழந்தைகளற்ற அவனுக்குப் பிறகு யார் அரசுரிமை பெறுவது என்பது பெரும் பிரச்னேயாயிற்று. அப்போது அவனுக்கு நெருங்கிய உறவினர்களாக இருந்தவர்கள் மூவர். அவனுடைய சகோதரியான மேரியா தெரீசா பதினுன்காம் உலூ யியை மணந்திருந்தாளாகையால், அவளது பேரனுன பிலிப் சுபானிய அரசுக்கு உரிமை பாராட்டினுன். சார்ல்சின் மற்ருெரு சகோதரியான ஆசுதிரிய சக்கர வர்த்தினியின் வார்சுகளான பவேரிய இளவரசனும், ஆச்டியூக் சார்ல்சு என்பவனும் அவ்வாறே உரிமை பாராட்டினர். பிரான்சிய இளவரசனுன பிலிப் அந்த அரசுரிமையை பெற்ருல், பிரான்சு மிகப் பெரும் வல்லர சாகி பதினுன்காம் உலூயியின் பலம் மிகவும் அதிகரித்து விடுமென அஞ்சிய மூன்ரும் வில்லியம் ஆசுதிரிய சக்கர வர்த்தியுடன் நட்புறவுகொண்டு பதினுன்காம் உலூயியை எதிர்க்கலானுன். சமாதானமாகப் போக விரும்பிய உலூயி, அவர்களுடன் "முதல் பாகப் பிரிவினே ஒப் பந்தம்" செய்து கொண்டான். அதன்படி, பவேரிய இளவரசன் சுபானிய அரசனுல், சுபானிய சக்கராதி பத்தியத்தின் சில பகுதிகளே உலூயியும் வேறு சில பகுதி களே ஆசுதிரிய சக்கரவர்த்தியும் அடையலாம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. பிறகு திடீரென்று பவேரிய இளவரசன் இறந்தமையால், மீண்டும் ஒரு ஒப்பந்தம் செய்ய நேர்ந்தது. இதனே "இரண்டாவது பாகப் பிரி வினே ஒப்பந்தம்" என்பர். இதன் பிரகாரம் ஆர்ச்டியூக் சார்ல்சு சுபானிய சிங்காதனத்தை அடையும் பட்சத்தில், உலூயி இத்தாலியிலும் நெதர்லாந்துகளிலுமுள்ள சுபா னிய பகுதிகளேப் பெறலாமென்று தீர்மானிக்கப்பட்டது. இந்த ஏற்பாடுகளால் சுபானிய இராச்சியம் சிதறுண்டு போகுமென அறிந்த சார்ல்சு ஒரு சாசன பத்திரம் எழுதி

வைத்து, அதன் பிரகாரம், தனக்குப்பின் அரசுரிமைக்குப் பதினன்காம் உலூயியின் பேரனை பிலிப்பைத் தெரிந் தெடுத்தான். உடனே உலூயி அதற்கிணங்கியதால், மூன்ரும் வில்லியமும் ஆசுதிரிய மன்னனும் போர் தொடுத்தனர். பிரான்சும் சுபானிய சாம்ராச்யமும் ஒரே ஆட்சியின்கீழ் வராமல் தடுப்பதே அவர்களது நோக்க மாக இருந்தது. இப்போர் தொடங்கியதும், வில்லியம் இறந்தனனயினும், திறமை மிக்க **மால்பரோ பிரபு** என்ற தளபதியால் **பிளென்கீம்** (1704), **இராமிலீசு** முதலிய இடங்களில் பிராஞ்சு-சுபானிய படைகள் முறியடிக்கப் பட்டன. இத்தாலியிலும் பிரான்சியப் படைகள் **யூசினல்** துரத்தப்பட்டன. அட்மிரல் ரூக், ஜிப்ரால்டரைக் கைப் பற்றினர். இவ்வாறு உலூயி கண்ட கனவு இந்தப் போரினல் அழிய நேர்ந்தது. அவனும் மனமுடைந்து, 1713-ல் **யூட்ரெக்ட்** சமாதானத்தால், ஆங்கிலேயருக்குப் பல இடங்களை விட்டுக்கொடுத்தான். சிப்ரால்டர், **மைனர்க்கா** முதலிய இடங்களும், தென் அமெரிக்காவில் சுபானிய குடியேற்றங்களுடன் வியாபார உரிமையும் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. யூட்ரெட் சமாதானத் தால் ஆங்கிலேயரின் படை பலமும் புகழும் நிலைநாட்டப் பெற்றதுடன் சாம்ராச்சியத்திற்கும் வித்திடப்பட்டது.

பதினெட்டாம் நூற்ருண்டிலும் இடைவிடாது ஐரோப் பியப் போர்கள் நிகழ்ந்தவண்ணமிருந்தன. 1740-ல் தொடங்கிய **ஆசுதிரிய வாரிசுரிமைப் போரில்**, பிரான் சுக்கு எதிராகப் பிரித்தானியரும் ஆசுதிரியரும் போரிட்டனர். இந்தப் போரின் முக்கிய நிகழ்ச்சிகள் குறித்துப் "பிரசியாவின் எழுச்சி" என்ற அத்தி யாயத்தில் விரிவாகக் காணலாம். எட்டாண்டுகள் போர் நிகழ்ந்தபின் 1748-ல் நிகழ்ந்த உடன்படிக்கையால், அவரவர்கள் இழந்த பிரதேசங்களைத் திரும்பப்பெற்ற னர். ஆனல் ஆசுதிரியாவுக்கு மட்டும் அதனிடமிருந்து பிரசியா கைப்பற்றிய சைலீசிய மாகாணம் திருப்பி

அளிக்கப்படவில்லை. இதனால் கோபமடைந்த ஆசுதிரிய அரசி மேரியாதெரிசா, தன்னைக் கைவிட்டனரென்று ஆங்கிலேயர்மீது கோபமடைந்தாள். அப்போது அவளது மந்திரியான கானிட்சு பிரபுவின் தூண்டுதலால், 1756-ல் தொடங்கிய **ஏழாண்டுப் போரில்** பிரான்சுடன் சேர்ந்தாள். வட அமெரிக்காவில் தமக்குச் சொந்தமான கனடாவையும் தெற்கிலுள்ள லூயிசியானாவையும் ஒன்றாக இணைக்கும் பொருட்டு, அலகினி மலைகளுக்கு மேற்குப் பக்கத்தில் வரிசையாகக் கோட்டைகளைப் பிரான்சியர் அமைக்கலாயினர். இதனாற் பதின்மூன்று குடியேற்றங்களில் வாழ்ந்த ஆங்கிலேயர் மேற்கில் பரவுவதற்கியலாது என்ற நிலை ஏற்பட்டது. எனவே, பிரான்சியர் தமது கடைசிக் கோட்டையான 'டூகெய்னை' அமைக்கும்போது விழிப்புற்ற இந்தக் குடியேற்றங்கள் தாய் நாட்டிடம் முறையிட்டன. இதனாலும் இந்தியாவில் நிகழ்ந்த வியாபாரப் போட்டியாலும், டூப்ளேயின் இராச தந்திரத்தினாலும் இந்தப் பெரும் போர் மூண்டது. பிரித்தானிய மந்திரியான **மூத்தபிட்டின்** திறமையால் இது பெரும் சாம்ராச்சியப் போராக மாறுதலடைந்தது. அவர் பிரசியாவிற்கு ஊக்கமளித்து ஆசுதிரிய-பிரான்சுப் படைகளை ஐரோப்பியப் போர்க்களங்களில் ஈடுபட்டிருக்கச் செய்துவிட்டு, கடற்படை வலிமையாலும் **உல்ப், கிளைவ்** போன்ற தளபதிகளின் திறமையாலும் இந்தியாவிலும் அமெரிக்காவிலும் பிரான்சுப் பிரதேசங்களைக் கைப்பற்றிப் பரந்த ஆங்கிலச் சாம்ராச்சியத்திற்கு விதையிட்டார். முதலில் தோல்வியும் சோர்வும் கொண்டிருந்த ஆங்கிலேயர் மூத்தபிட்டின் துணிவையும் திறமையையும் கண்டு பெரும் ஊக்கம் கொண்டனர். 1757-ல் கிளைவ் பிளாசிச் சண்டையில் வெற்றி கொண்டதும், விரைவில் பிரான்சியரின் ஆதிக்கம் குன்றியது. அவர்களது தலைநகரான புதுச்சேரியையும் ஆங்கிலேயர் கைப்பற்றிவிட்டனர். அமெரிக்காவில் தளபதி **உல்ப்** 1759-ல்

மான்ட்காமைத் தோற்கடித்துக் கியூபெக்கை கைப்பற்றிய தால் கனடா முழுதும் ஆங்கிலேயர் வசமாயிற்று. முடிவில் இந்தப் போர் 1763-ல் நிகழ்ந்த பாரிசு உடன்படிக்கை யால் முடிவுற்றது. அந்த உடன்படிக்கையின் பிரகாரம் பிரான்சு, கனடாவையும் இந்தியாவில் பல பகுதிகளையும் விட நேர்ந்தது. இவ்வாறு ஏழாண்டுப் போரில் வளர்க்கப் பட்ட ஆங்கில சாம்ராச்யம், அமெரிக்கச் சுதந்திரப் போரில் ஓரளவு சிதறுண்டு போயிற்று. அந்தப் போரில் பிரான்சும் சுபெயினும் ஈடுபட்டதைக் குறித்துப் பின் னொரு அத்தியாயத்தில் நீவிர் வாசிப்பீர்கள். இந்த நூற் றுண்டின் இறுதியில் தோன்றிய பிரான்சுப் புரட்சிப் போரிலும் நெப்போலிய யுத்தத்திலும் பிரித்தானியர் ஈடு பட்டனர். இவை சாம்ராச்சியப் போர்கள் அல்லவா யினும், இவற்றின் முடிவில் மால்டா, திரினிடாட், இலங்கை முதலிய பிரதேசங்கள் ஆங்கில சாம்ராச்சி யத்தின் பகுதிகளாயின.

பத்தொன்பதாம் நூற்றுண்டில், ரூசியா வலிமை பெற்று ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியின் தன் ஆதிக் கத்தை நிலைநிறுத்த முயன்றதால், பிரிட்டன், பிரான்சு, ஆசுதிரியா முதலிய நாடுகள் அச்சமடைந்து துருக் கியை ஆதரிக்கத் தொடங்கின. உண்மையில் துருக்கி பலவீனமடைந்ததால் அதிலடங்கிய பால்க்கன் நாடுகள் விடுதலை பெற முயன்றபொழுது, அவற்றின் காவலனுக ரூசியா தலையிடலாயிற்று. பால்க்கன் பிரதேச கிறித்த வர்களைக் காப்பாற்றுவதே ரூசியாவின் நோக்கமென கூறப்பட்டதாயினும், துருக்கியின் கருங்கடல் பிரதேசங் களைக் கைப்பற்றுவதே அவர்களது உண்மை நோக்கமா யிருந்தது. இதனுல் ஒரு புறம் துருக்கியைக் காப்பாற்று வதும், மற்றொரு புறத்தில் அதற்கு மாருகப் பால்க்கன் நாடுகளுக்குச் சுதந்திரமளிப்பதும் மேற்கு நாடுகளின் கடமையாயிற்று. இதுவே '**கீழ்நாட்டுப் பிரச்னை**'

என வழங்கப்பட்டது. இதைப் பற்றி விரிவாக வேருெரு அத்தியாயத்தில் நீங்கள் படித்துணர்வீர்கள்.

சாம்ராச்சிய வேட்கையே இத்தகைய ஐரோப்பியப் போர்களுக்குப் பிரதான காரணம். சமீப காலத்தில் நிகழ்ந்த உலகப் பெரும் போர்களுக்கும் இதுவே முக்கிய காரணமாகயிருத்தலைப் பின்வரும் அத்தியாயங்களி னின்றும் உணரலாம்.

### விஞக்கள்

1. அமெரிக்காவில் சுபானிய குடியேற்றங்கள் நிறுவிய வர்களி லிருவரைக் குறிப்பிடுக.

2. இரண்டாம் பிலிப்பு எக்காரணங்களால் 'சுபானிய ஆதிக்கத்தின் வீழ்ச்சிக்குக் காரணமானவன்' என்று கூறப் படுகிருன் ?

3. ஒல்லாந்தருக்கும் ஆங்கிலேயருக்கும் போர் நேர்ந்தது எதனுல் ? அதன் விளைவு யாது ?

4. பிரான்சியருக்கும் ஆங்கிலேயருக்குமிடையே போர்கள் நிகழ பொதுப்படையான காரணங்கள் யாவை ?

5. றீஸ்விக் சமாதானத்தால் முடிவுபெற்ற போர் யாது ? எக்காரணத்தால் அது தோன்றிற்று ?

6. சுபானிய வாரிசுரிமைப் போர் எதனுல் நிகழ்ந்தது ?

7. சுபானிய வாரிசுரிமைப் போரில் புகழ்பெற்ற ஆங்கிலத் தளபதி யார் ? அவர் பெற்ற வெற்றிகள் சில குறிப்பிடுக.

8. 'யூட் ரெக்ட்' சமாதானம் எப்போது நிகழ்ந்தது ? அது எவ்வாறு முக்கியமானதாகும் ?

9. ஏழாண்டுப் போர் தோன்றிய காரணங்கள் யாவை ? அதன் முடிவையும் விளக்குக.

10. 'கீழ்நாட்டுப் பிரச்னை' என்ருல் என்ன ?

### பயிற்சி

1. ஆர்மடா சென்ற மார்க்கத்தைப் படத்தில் குறிக்க.

2. யூட் ரெக்ட் சமாதானத்தால் ஆங்கிலேயர் பெற்ற இடங்களை உலகப் படத்தில் குறிப்பிடுக.

3. உலகப் படமொன்றில், ஏழாண்டுப் போர் நிகழ்ந்த இடங்களையும், போர் முடிவில் ஆங்கிலேயர் பெற்ற இடங் களையும் குறிப்பிடுக.

## 6. பிரசியாவின் எழுச்சி

பதினெட்டாம் நூற்ருண்டிலும் சேர்மனி ஓர் அரசாங்கத்தின் கீழ் ஒன்றுபடுத்தப் படவில்லை ; பல்வேறு சிறிய இராச்சியங்களாகவே சிதறிக் கிடந்தது. இதன் பயனுக, ஆசுத்திரியா அவற்றில் சில இராச்சியங்கள் மீது ஆதிபத்தியம் செலுத்துவது சாத்தியமாக இருந்தது. இந்த நிலையில், சேர்மனியின் கிழக்குப் பகுதியிலிருந்த பிரசியா படிப்படியாகப் பெரியதொரு நாடாக உருவாகிக் கொண்டு வந்தது. பிற்காலத்தில் இந்தப் பிரசியா நாடே எவ்வாறு சேர்மனி முழுதும் ஐக்கியப்படுவதற்குக் காரணமாக அமைந்தது என்பதைக் குறித்து வேருெரு அத்தியாயத்தில் படித்தறிந்து கொள்வீர்கள். ஆனுல், இங்கே பிரசியா வல்லரசுகளில் ஒன்ருக எவ்வாறு உருவாயிற்று என்பதை ஆராய்வோம்.

பதினைந்தாம் நூற்ருண்டின் ஞெடக்கத்தில், கோகென் சோலான் வம்சத்தைச் சேர்ந்த பிரடரிக் என்ற ஒரு பிரபு, சக்கரவர்த்தியான சிகிசு மண்டினுல் பிராண்டன்பர்க் என்ற பிரதேசத்திற்கு அரசனுக்கப் பெற்ருன். ஒரு நூற்ருண்டிற்குப் பிறகு இந்த வம்சத்தைச் சேர்ந்த ஒருவன் பிரசியா என்ற பகுதிக்கு அரசனுனன். நாளடைவில் இரு பகுதிகளும் ஒன்ருய்ச் சேர்க்கப் பெற்றன ; அதன் பயனுக, மேற்கில் றைன் நதிக்கரையிலிருந்த சிறிய பிரதேசங்கள் சில பிரசிய அரசருக்குச் சொந்தமாயின. பதினேழாம் நூற்ருண்டின் மத்தியில் அரசுபுரிந்த பிரடரிக் வில்லியம், பலம் பொருந்திய சுவீடன் நாட்டின் படைகளைச் சிதற அடித்து, ‘மகா எலெக்டர்’ (Great Elector) என்னும் பட்டம் பெற்ருன். பிரான்சிலிருந்து ஓடிவந்த ‘கியூனேக்கள்’ என்ற நெசவுத் தொழில் வல்லுநருக்கு இடமளித்து ஆதரித்தான் ; அவர்களது உழைப்பின் பலனுகப் பெர்லின்

நகரம் பெருமையுற்றது. அவன் பெரும்படை ஒன்றினை யும் தயாரித்து வைத்தான். அவன் 1688-ல் இறந்த பிறகு ஆட்சி உரிமையைப் பெற்ற அவனது மகனும், அவனுக்குப் பிறகு அரசுபுரிந்த பேரனை பிரடரிக் வில்லியமும் பேராற்றல் வாய்ந்தவர்கள். அவர்களது நிருவாகத்தின்கீழ்ப் பிரசியாவின் செல்வமும் புகழும் ஓங்கியது போலவே, இராணுவ பலமும் அதிகரித்தது. பிரடரிக் வில்லியம் 83000 பேர் கொண்ட நிரந்தரப் படை ஒன்றைத் தயாரித்தான். "நான் அரசனுகையால் யதேச்சாதிகாரம் செலுத்துவேன்!" என்று அவன் கூறியதினின்றும் அவனது கொள்கையை உய்த்துணரலாம். பிரசியாவில் தேசபக்தியும், ஒழுங்குணர்ச்சியும் தோன்ற அவனே காரணமாவான்.



படம் 43. மகா பிரடரிக்

அவனது புதல்வனை பிரடரிக், '**மகா பிரடரிக்**' என்று புகழ் பெற்றவன். "பிரடரிக், நவீன காலத்தில் அரசு கட்டிலேறிய மன்னர்களிடையே இணையற்ற அரசியல் ஞானியாகப் பிரகாசிக்கின்ருன்," என்பர் ஆக்டன் பிரபு. அவனது அரசாட்சியிற் பிரசியா மத்திய ஐரோப்பாவிற் பிரதானமான வல்லரசாயிற்று. அவன் இளம் வயதிற் கொண்டிருந்த கொள்கைகளுக்குங் குணுதிசயத்திற்கும் மாருகப் பிற்காலத்தில் சுயநலமும், நாடு பிடிக்கும் ஆசையும், இரக்கமற்ற தன்மையும் உடையவனுக மாறிவிட்டான். அவன் பிரஞ்சு மொழியில் பாண்டித்தியமும், பிரஞ்சுத் தத்துவாசிரியர்களின் நூல்களில்

பெரு விருப்பமும் படைத்தவன். சங்கீதத்திலும் ஓரளவு தேர்ச்சி பெற்றிருந்தான். ஆனல் காலம் செல்லச் செல்ல, அவனுக்கு யுத்தத்திலும் அரசியலிலுமே ஆர்வம் அதி கரித்தது. இளைஞனக இருந்தபொழுது அவனுக்கிருந்த கலை விருப்பமும், பரந்த நோக்கமும், பண்பாடும், வயது முதிர்ந்ததும் மறைந்தொழிந்தன. 1740-ல் அவன் சிம்மாசனமேறியதும், பிரசியாவைச் சூழ்ந்துள்ள பகுதி களைக் கைப்பற்றுவதிலேயே கவனம் செலுத்தலானன். அதனல் பெரும் ஐரோப்பியப் போர்கள் தோன்றிப் பல நாடுகளும் துன்புற நேர்ந்தது.

பிரடரிக் பட்டம் பெற்ற அதே வருடத்தில், ஆசுத்திரிய சக்கரவர்த்தி ஆறும் சார்ல்சு மரணமடைந் தான். உடனே அவனது புதல்வியாகிய மேரியா தெரீசா ஆசுத்திரியாவின் அரசியாக்கப்பட்டாள். அவளது அரசுரிமையை யாரும் தடுக்கலாகாது என்ற எண்ணத்தாலும் தனக்குப் பிறகு ஆசுத்திரிய சாம் ராச்சியஞ் சிதைவுறலாகாது என்ற கருத்தாலும், சார்ல்சு 'தத்துவார்த்த அனுமதி' (Pragmatic Sanction) என்ற பத்திரமொன்றில் ஐரோப்பிய அரசர்கள் பலரை யுங் கையெழுத்திடச் செய்திருந்தார். எனினும், அவர் இறந்த பிறகு, அந்தச் சாசனத்தின் நிபந்தனைகளைப் புறக்கணித்து ஆசுத்திரிய சாம்ராச்சியத்தைச் சீர்குலையச் செய்வதையே நோக்கமாக ஐரோப்பிய வல்லரசுகள் கொண்டிருந்தன. மேரியா தெரீசா திறமையும் மன உறுதியும் வாய்ந்தவளாயினும், இளமைப் பருவத்தின ளாகையாலும் ஆசுத்திரியாவின் படைபலம் போதாதாகை யாலும், பிரான்சும் பிரசியாவும் அவளது நாடுகளை அபகரிக்க முற்பட்டன. பிரான்சு ஆசுத்திரியாவைச் சேர்ந்த நெதர்லாந்துகளிலும், பிரசிய மன்னன் பிரடரிக் தனது நாட்டிற்கு அருகிலுள்ள சைலீசியப் பிரதேசத் திலும் நாட்டம் கொண்டனர். ஐரோப்பாவில் வல்லரசு களிடையே சமபலம் நிலவ வேண்டுமென்னும் கொள்கை

(Balance of Power)யை உடைய இங்கிலாந்தும் ஒல்லாந்தும் ஆசுத்திரியாவை ஆதரித்தன.

இந்த நிலையில், 1740-ஆம் ஆண்டில் போர் தொடங்கி, அது 1742-க்குப் பிறகு வலுத்தது. சுமார் எட்டு ஆண்டுகள் நீடித்த இந்த யுத்தத்தையே 'ஆசுத்திரிய வாரிசுரிமைப் போர்' எனச் சரித்திராசிரியர்கள் வருணிப்பர். இந்தப் போரில் ஆசுத்திரியா இங்கிலாந்தின் உதவியைப் பெற்ற போதிலும், சைலீசியாவினின்றும் பிரடரிக்கின் சேனையை அப்புறப்படுத்த இயலவில்லை. போர் முடிவுறும் முன்பே பிரடரிக்கை சைலீசியாவினின்றும் அப்புறப்படுத்த முடியாதென உணர்ந்த ஆசுத்திரிய அரசி 1742-ல் **பிரெசுலா** ஒப்பந்தத்தால் அதனைப் பிரசியராச்சியத்தின் பகுதியாக ஒப்புக்கொண்டாள். ஆகவே, போரின் முடிவில் 1748-ல் **ஏய்-லா-சாபோவில்** உடன்படிக்கை ஏற்பட்டபொழுது, மற்ற நாடுகள் ஒவ்வொன்றும் தாம் இழந்த பகுதிகளை மீட்டுக் கொண்டபோதிலும் ஆசுத்திரியா மட்டும் சைலீசியாவைப் பெற முடியாமற் போயிற்று. யுத்தத்தினிடையே 1744-ல் "பிராங்பர்ட் யூனியன்" என்ற ஏற்பாட்டின் மூலமாகத் தன்னோடு பவேரியா, பாலடின் முதலிய செர்மானியப் பிரதேசங்களின் இளவரசர்களையும் பிரடரிக் இணைத்துக் கொண்டான். இது பிற்காலத்தில் செர்மனி ஐக்கியமடைவதற்கோர் நல்ல அறிகுறியாயிற்று. இவ்வாறு, பிரடரிக் தனது சுயசரிதத்தில் கூறியுள்ளவாறு, வளமும் சுரங்கச் செல்வமும் நிறைந்த சைலீசியப் பகுதியைப் பிரசியாவுடன் இணைத்ததன் வாயிலாகத் தனது நெடுநாளையக் கனவை நிறைவேற்றிக் கொண்டான். சைலீசியா சேர்ந்ததால் பிரசியராச்சியம் 15500 சதுர மைல்கள் பரப்பும் $1\frac{1}{4}$ கோடி சனத்தொகையும் உடையதாயிற்று.

ஆனல், மேரியா தெரீசா பிரான்சுடன் சேர்ந்து, மீண்டும் சைலீசியாவைப் பெற்றுவிட முயன்ருள். 1756-ல் தோன்றிய 'ஏழாண்டுப் போருக்கு' இதுவே

மூல காரணமாகும். ஆசுத்திரிய சேனைகளும் ருசிய சேனைகளும் பிரடரிக்கின் படைகளை முறியடித்து, பெர்லினிலும் புகுந்தன. இடைவிடாத தோல்விகள் காரணமாக மனமுடைந்து, ஒரு தருணத்தில் தற்கொலை புரிந்து கொள்ளவும் பிரடரிக் மன்னன் தயாராக இருந்தனனும்! ஆயினும், மறு ஆண்டில் (1757) ரோசுபாக் என்ற இடத்தில் பிரஞ்சுப் படைகளையும் உலூதன் என்னும் இடத்தில் மற்றப் பகைவரையும் பிரடரிக் முறியடித்தான். அப்போது மூத்த பிட் இங்கிலாந்திற் பிரதமராக விளங்கிப் போரைத் தீவிரமாக நடத்த முயன்றது, அவனுக்கு எதிர்பாராத வகையில் பேருதவியாயிற்று. ஆங்கிலேயர் தந்த பணமும் தளவாடமும் கொண்டு மீண்டும் பிரடரிக் கடும்போர் புரிந்தனனுயினும், 1760-லிருந்து ரூசியரும் ஆசுத்திரியரும் அவன்மீது வெற்றி கொண்டனர். அப்போது ரூசிய இராணி எலிசபெத் இறந்து விடவே, பிரடரிக்கின் நண்பனுன மூன்ருவது பீற்றர் அரியணை ஏறினுன். அவன் விரைவில் இறந்தனனுயினும், ரூசியர் போரில் ஈடுபடாமல் ஒதுங்கி விட்டனர். இதனுல், பிரடரிக் தனது நாட்டைப் பாது காத்துக்கொள்ள முடிந்தது. 1763-ல் பாரிசு நகரில் நடந்தேறிய உடன்படிக்கையாலும் சைலீசியாவைப் பிரசியாவின் ஒரு பகுதியாகவே அனைவரும் ஒப்புக் கொள்ள நேர்ந்தது. இவ்வாறு எண்ணற்ற தோல்விகளின் முடிவிலும், தளராத உறுதியும் ஊக்கமும் காரணமாகத் தனது பிடிவாதத்தைச் சாதித்துக்கொண்ட பிரடரிக்கைக் கண்டு உலகமே வியந்தது.

பின்னர் 1772-ஆம் ஆண்டில், போலந்தில் குழப்பங்கள் மலிந்து அரசாங்கம் சீர்குலைந்திருந்த பொழுது பிரடரிக்கின் யோசனையை ஏற்று, பிரசியா, ரூசியா, ஆசுத்திரியா என்ற மூன்று நாடுகளும் அந்தச் சிறு நாட்டின் பகுதிகளைத் தத்தம் நாடுகளுடன் இணைத்துக் கொண்டன. இதனையே ‘ **போலந்தின் முதலாவது**

பாகப் பிரிவினை' என்று சரித்திரம் கூறும். பிரசியா பெற்ற இராச்சியப் பகுதி அளவில் சிறியதாயினும் செல்வவளத்தில் மேம்பட்டதாக இருந்தமையால், பிரசியா அதனுல் பெரிதும் நன்மையடைந்தது. பிராண்டன்பர்க்குப் பகுதியுடன் பிரசியப் பகுதிகள் ஒருங்கே இணைக்கப்பட்டுவிட்டதால், புதிய பிரசியா ஐக்கியமடைந்த ஒரு வல்லரசாகத் திகழலாயிற்று.

போர்க்களத்திற் பெற்ற வெற்றிகளைக் காட்டிலும் அமைதியான சீர்திருத்தங்களாலேயே, பிரசியாவுக்குப் பிரடரிக் மன்னன் மேலும் புகழ் தேடித் தந்தான். நாட்டின் பொருளாதாரத்திற்கு விவசாயமே இன்றியமையாததாகையால், எளிய குடியானவர்களுக்குப் பணத்தைச் சிறிது சிறிதாகத் திருப்பிப் பெறும் வகையில் அரசாங்கம் கடன் கொடுத்துதவியது; அவர்களுக்கு விதையும் கருவிகளுங்கூடக் கடனுக அளிக்கப்பட்டன. பண்டைக் காலத்திலிருந்தே வழக்கத்திலிருந்து வந்த நிலமானிய முறைகள் காரணமாக அடிமைகள்போல வாழ்ந்த குடியானவர்கள், உரிமைகள் பெற்றுச் சுதந்திரமாக வேளாண்மை புரியலாயினர். பிரடரிக் அளித்த ஆதரவினுல், பெர்ளின் முதலிய நகரங்களிற் றொழில்கள் வளர்ந்து பொருளுற்பத்தி பெருகியது. உதாரணமாக, லினென், பட்டு முதலியவற்ருல் ஆடைகள் நெய்வது அங்கு ஒரு முக்கியத் தொழிலாயிற்று. தொழில் வளர்ச்சியை விரும்பிய பிரடரிக், கிறித்தவர்களின் பெரும்பகைவரான துருக்கியர் தனது நாட்டிற்கு வந்து புதிய தொழில்களை நிறுவுவதானுல், அவர்களுக்கு மசூதிகளும் கட்டிக்கொடுத்துத் தொழுகைச் சுதந்திரமளிப்பதாகக் கூறினுன். வியாபாரம் பெருகுவதற்கும், அரசாங்கம் தேவையான உதவிகளை யளித்தது. அவன் சித்திரவதைகளைத் தண்டனைகளாகக் கருதலாகாதென்றும் அவை நீதிக்குப் புறம்பானவை என்றும் விதித்

தான். மேலும், தனது நாட்டில் சகல மதத்தினருக்கும் தொழுகைச் சுதந்திரம் அளித்தான்.

அவன் இத்தகைய முற்போக்கான கொள்கைகள் கொண்டிருந்தமைக்கு, அவனுக்கும் சிறந்த பிரான்சுத் தத்துவ ஞானிகளுக்கு மிடையே இருந்த கூட்டுறவையே காரணமாகச் சரித்திராசிரியர்கள் கூறுவர். இத்தகைய தத்துவஞானிகளிற் சிரேட்டரான வால்டேர் அவனது ஆத்தானத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேலாகத் தங்கி யிருந்தார். மதத்திலும் அரசியலிலும் புரட்சிகரமான மாறுதல்களை விரும்பிய வால்டேர், பிரடரிக்கின் வலிய மன்னுட்சியை ஆதரித்தமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும், சில்லர் போன்ற சேர்மானிய அறிஞர்களும் சிறந்த கவிஞர்களும் அவனது சபையில் இடம் பெற் றிருந்தனர். அவனது அரசவையும் ஆட்சி முறையும் மற்ற மன்னர்களுக்கு எடுத்துக்காட்டாக இலங்கின. அவன் ஆற்றல் மிகுந்தவனுயினும், ஆடம்பர வாழ்க்கை யிலும் அதிகாரத்தைச் செலுத்துவதிலும் ஈடுபடாமல், அல்லும் பகலும் நாட்டின் நிருவாகத்தைச் சீர்ப் படுத்துவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தான். "தேச சேவையும் நிருவாகமுமே அவனுடைய பக்திக் குரிய ஒரு மதம் ஆகிவிட்டன போலும்!" என்று ஒரு சரித்திராசிரியர் குறிப்பிடுகின்றுர். "மன்னர்களுக்கு அவன் ஓர் உதாரண புருடன்," என்று கார்லைல் என்ற ஆங்கில அறிஞர் வருணிக்கின்றுர். பிரசியாவை ஒரு வல்லரசாக உருவாக்கிப் பிற்காலத்தில் சேர்மானிய சாம் ராச்சியத்திற்கு முதுகெலும்பாக அதனை விளங்குதற் குரிய நிலையில் வைத்த பெருமை, பிரடரிக் மன்னனுக்கே உரியது. பிரடரிக் 1786-ல் மரணமடைந்த பின்னரும், அவனது சந்ததியார்கள் அவனுடைய கொள்கைகளையே பின்பற்றி அதன் பலத்தையும், பெருமையையும் விருத்தி செய்தனர்.

### வினுக்கள்

1. பிரசிய இராச்சியம் வளர்ச்சியுற்ற வரலாற்றை விளக்குக.

2. 'மகா பிரடரிக்' எத்தகைய குணுதிசயம் வாய்ந்தவன்?

3. அவன் எவ்வாறு 'சைலீசியா'வை அடையப் பெற்ருன்?

4. ஏழாண்டுப் போரின் முக்கிய நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுக.

5. போலந்துப் பிரிவினையால் பிரடரிக் அடைந்த இலாபம் யாது?

6. பிரடரிக் புரிந்த சீர்திருத்தங்களையும், அவனைக் குறித்து அறிஞர் கூறியுள்ள புகழ்ச்சி உரைகளையும் விளக்குக.

## 7. மகா பீற்றரின் அரும்பெருஞ் செயல்கள்

இன்று கிழக்கு ஐரோப்பாவிற் சிறந்த வல்லரசாகத் திகழும் ருசியா, புதுயுக ஆரம்பத்திலும் இவ்வாறு ஓர் ஐக்கியமடைந்த நாடாக இருக்கவில்லை. தார்த்தாரியரின் படை எடுப்புகளால் அதன் பல பகுதிகளும் நலிவுற்றிருந்தன. ஆனுல் பதினும் நூற்ருண்டிலிருந்து, ஆற்றல் மிகுந்த அரசர்கள் பலர் ஒருவர் பின் ஒருவராக ருசியாவைப் பரந்த சாம்ராச்சியமாக்குவதிலும், அதன் செல்வத்தையும் இராணுவ வலிமையையும் ஓங்கச் செய்வதிலுங் கண்ணுங் கருத்துமாய் இருந்தனர்; அதனுல், பதினேழாம் நூற்ருண்டில் ருசியா உரம்பெற்றுச் சிறந்ததோர் வல்லரசாக எழுந்தது.

தொடக்கத்தில், மாசுகோ நகரும் அதைச் சுற்றிலுமிருந்த பகுதியும் மட்டுமே ருசிய மன்னர்களின் வசமிருந்தது. நாளடைவில், கருங்கடலையும் கசிபியன் கடலையும் சூழ்ந்துள்ள பகுதிகளில் ருசியரின் சனச்செறிவு அதிகரித்தமையால், அந்தப் பகுதிகளைக் கைப்பற்ற ருசிய மன்னர்கள் முயன்றனர். பதினும்

நூற்ருண்டிலிருந்த **இவான்** ("பயங்கர மன்னன்") நோவ்கரோடு என்ற நகரத்தைக் கைப்பற்றி மக்களை வதைத்தான். அவன் பிரபுக்களின் அதிகாரத்தை ஒடுக்கியமையால், மன்ஞட்சி வலுத்தது. அவன் கொடுமைகள் பல இழைத்தனனுயினும், மேற்கு ஐரோப்பாவிற்கும் ருசியாவிற்குமிடையே வியாபாரம் வளர்ந்தோங்குவதற்கு வழிசெய்தவன் என்பதை மறக்க லாகாது. இவனுடைய வம்சம் மறைந்த பிறகு, 1613-ல் **உரோமனுவ்** வம்சம் தாபிக்கப்பட்டது. இந்த வம்சத்தைச் சேர்ந்த மன்னர்களால் ருசியா மேன் மேலும் வலிமையும் பெருமையும் அடைந்தது. அவர் களில் சிறந்தவனே, **"ருசிய சாம்ராச்சியத்தின் தந்தை"** எனப் புகழ்பெற்ற **மகா பீற்றர்** சக்கராதிபதி யாவான்.

பீற்றர் 1689-ஆம் ஆண்டில் அரசுகட்டிலேறினன். அவன் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தபொழுது, ருசியா வெளிநாட்டினரின் தாக்குதல்களாலும் உள்நாட்டில் மிகுந்திருந்த பூசல்களாலும் மிகவும் பலவீனமான நிலையிலிருந்தது. உள்நாட்டுப் பூசல்களுக்குப் பிரதான காரணம், பிரபுக்களின் ஆதிக்கமேயாகும். அவர்கள் அரசர்களைச் சூழ்ந்து கொண்டு, அவர்களை விருப்பம்போல ஆட்டிவைத்தனர். பிரதான பதவிகளில் அவர்களே அமர்ந்துகொண்டு நிருவாகத்தைப் பாழ்படுத்தி வந்தனர். அவர்களைப் போலவே, வலிமை மிகுந்த **சுட்ரெல்ட்சி** என்ற அந்தரங்கமான படை அரசனைப்



படம் 44. மகா பீற்றர்

பாதுகாக்கும் உரிமை வாய்ந்ததாகையால், அளவற்ற அதிகாரம் செலுத்தி வந்தது. மேலும், மக்கள் பெரும்பாலும் கல்வியறிவின்றி அறியாமையில் ஆழ்ந்திருந்தனர். மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்பு கொள்ளாமையால், ருசிய மக்கள் புதிய கலாச்சாரத்தின் அம்சங்களையே அறியாது அநாகரிகமான பழக்கவழக்கங்கள் கொண்டிருந்தனர். இவை யாவும் சிந்தனுசக்தியும் சீர்திருத்த உணர்ச்சியும் செயற்றிறமையும் படைத்திருந்த பீற்றர் மன்னனைப் பொறுமை இழக்கச் செய்தன.

பீற்றருக்கு இரு பெரும் இலட்சியங்கள் இருந்தன; முதலாவதாக, ருசிய மக்களை நாகரிகமடையச் செய்து, மேற்கு ஐரோப்பிய மக்களுக்குச் சமானமான நிலையை அடையுமாறு செய்தல் வேண்டும். இரண்டாவதாக, ருசிய நாட்டை ஐக்கியப்படுத்தி மாபெரும் வல்லரசாகத் திகழுமாறு செய்தல் அவசியமாகும். இந்தப் பெரும் நோக்கங்களைத் தன் வாழ்நாளில் பூர்த்தி செய்தமையே மகா பீற்றருக்கு அழியாப் புகழைத் தேடிக் கொடுத்தது.

1689-ல் அரசுரிமையைப் பெற்றதும் உள்நாட்டு நிலைமையைப் பீற்றர் சீர்திருத்தத் தொடங்கினன். முதன் முதலாக, பிரபுக்களின் அதிகாரத்தையும் ஆணவத்தையும் குறைத்தான். நிருவாகப் பதவிகள் கல்வியும் திறமையும் படைத்தோருக்கன்றி, உயர்குடியிற் பிறந்தோருக்கு அளிக்கப்படுவது நிறுத்தப்பட்டது. இலஞ்ச ஊழல்கள் ஒழிக்கப்பட்டன. அப்போது சுட்ரெல்ட்சி என்ற பாதுகாப்பாளர் ஆணவத்துடன் அவனை எதிர்த்தமையால், அவர்களை எதிர்த்துப் புறங்கண்டதுமன்றி, அவர்களில் பலரையும் சித்திரவதை செய்தான். கொடூரமான இந்தச் செயலாற் படைவீரர்களும் அரசனைக் கண்டு அஞ்சி ஒடுங்கினர். 'கோலுக்'குகள் என்ற வகுப்பினரின் கலகங்களும் இரக்கமற்ற முறையில் ஒடுக்கப்பட்டன. இவ்வாறு எதிர்ப்புக்களை அடக்கியதும், அரசன் தனது சீர்திருத்

தங்களைத் தொடங்கினன். ரூசியப் பிரபுக்களும் மற்றவர்களும் நீண்ட அங்கிகள் அணிவது விடுத்து, ஐரோப்பிய உடைகளை அணியச் செய்தான். மேலும் ஐரோப்பிய பழக்க வழக்கங்களை மேற்கொள்ளுமாறு ஆணையிட்டான். ரூசியர் நீண்ட தாடிகள் வளர்ப்பதை அநாகரிகமென்று கண்டித்து, தாடிகள் வளர்ப்போர்மீது வரிகள் விதித்தான். இந்த ஆணையை மதகுருமார் எதிர்த்தும், பயனில்லாது போயிற்று. மாதர்கள் அந்தப்புரங்களிற் றனித்து வாழச் செய்வதைப் புறக்கணித்து வெளியில் வந்து, கல்வி கற்குமாறும், சமூக வாழ்க்கையிற் பங்கு கொள்ளுமாறும் பணித்தான். அதனல், அவர்கள் விருந்துகளிலும் நடனங்களிலுங்கூடக் கலந்துகொள்வது சாத்தியமாயிற்று. ரூசியர் நீண்ட காலமாக புரட்டாதி முதற் றிகதியிலிருந்து கணக்கிட்டு வந்த கால அளவை முறையை (Calendar) மாற்றி, மற்ற ஐரோப்பியரைப் போலக் "கிரெகரி பஞ்சாங்க முறையை" (தை முதல் திகதியிலிருந்து ஆண்டுத் தொடக்கத்தைக் கணக்கிடுவது) ஏற்குமாறு செய்தான்.

மேலும், பீற்றர் ரூசிய கலாசாலைகளில் கணிதத்திற்கும் விஞ்ஞான போதனைக்குமுரிய இடமளிக்குமாறு செய்தான். அதனல், மதகுருமார் போதித்து வந்த குறை மிகுந்த மதக் கல்வியைமட்டும் பெற்று மூட நம்பிக்கையி லாழ்ந்து விடாமல், சிறந்த பகுத்தறிவும் விஞ்ஞான அறிவும் ரூசியர் பெறுவது சாத்தியமாயிற்று. நிருவாகத்திலிருந்த குறைகளை உணர்ந்த பீற்றர், சேர்மனிய அறிஞரான இலெய்ப்னிட்சு என்பவரின் ஆலோசனையைப் பின்பற்றி நிருவாக அமைப்பை ஒழுங்குபடுத்தினன். அன்றியும், ரூசிய நகரங்களைச் சீர்திருத்தி அமைத்த பெருமையிலும் பீற்றருக்குப் பெரும்பங்கு உண்டு. 1702-ம் ஆண்டில் அவன் அமைத்த **பீட்டர்பர்க்கு நகரம்**, மற்ற ஐரோப்பிய நகரங்களுக்கு இணையாக அமைந்தது.

இத்துணைச் சீர்திருத்தங்கள் புரிந்த பிறகும், பீற்றர் திருப்தியுறவில்லை. ருசியாவின் பகைவர்கள் வலிமை பெற்றிருப்பதைக் கண்டு மனம் கொதித்தான். எனவே, 'ருசியாவிற்கு வடக்கிலுள்ள பால்திக் கடலிலும் தெற்கிலுள்ள கருங்கடலிலும் ஆதிபத்தியம் பெறவேண்டும்; அதன் பொருட்டு ஒரு பெருங் கடற்படையை நிறுவ வேண்டும்' என்பதொன்றே அவனது பெரும் கவலையாயிற்று. கப்பல்கள் கட்டுவதையும், கப்பற்படை அமைக்கும் முறையையும் நேரில் கண்டறிதல் வேண்டுமென்ற ஆவலால், அவன் மாறுவேடந் தாங்கி மூன்ருண்டுகள் ஒல்லாந்து, இங்கிலாந்து, பிரான்சு முதலிய நாடுகளிற் பிரயாணம் செய்தான். பிரபுக்கள் குடும்பங்களைச் சேர்ந்த ஐம்பது இளைஞர்களை அந்த நாடுகளுக்கு அனுப்பிக் 'கப்பற் கட்டும் கலை'யில் பயிற்சி பெறச் செய்தான். ஒல்லாந்தரிடையே கப்பல் கட்டும் தளமொன்றில் கூலியாளாகவும் வேலை பார்த்தானென்ருல், இந்த மன்னனது ஊக்கத்தையும், விடாமுயற்சியையும் என்னென்பது! இறுதியில், நாட்டிற்கு மீண்டதும், சிறந்ததொரு கப்பற்படை அமைத்து, அதனை டோன் நதி வழியாகச் செலுத்தி, 1697-ல் செண்டா என்ற இடத்தில் துருக்கியரை முறியடித்து, இறுதியில், கருங் கடலோரத்திலுள்ள 'அசாவ்' என்ற கோட்டையைத் துருக்கியர் வசமிருந்து கைப்பற்றினுன். 1722-ஆம் ஆண்டில் கருங் கடலோரமுள்ள பாகு (Baku) என்ற இடமும் பீற்றரால் கைப்பற்றப்பட்டது. இவ்வாறு ருசிய நாட்டின் எல்லைகள் கருங்கடலை நெருங்கின.

அக்காலத்தில், பால்திக் கடலின் வடபாலுள்ள சுவீடன் நாடு இராணுவ பலத்தில் நிகரற்று விளங்கியது. 1697-ல் அந்த நாட்டின் அரசுரிமை பெற்ற பன்னிரண்டாவது சார்ல்சு மன்னன் இளைஞனுயினும், மன உறுதியும் ஆற்றலும் படைத்தவன். 1699-ல் ருசியாவும், போலந்தும், டென்மார்க்கும் சுவீடன் நாட்டைத் தாக்கிய

போது, அவனது அற்புதமான ஆற்றலை உணர நேரிட்டது. அவனது படைகள் டென்மார்க்கின் தலைநகரான கோபனேகனை முற்றுகையிட்டன; பிறகு, 1700-ல் **நார்வா** என்ற இடத்தில் ரூசியரின் படை முறியடிக்கப் பட்டது. போலந்தும் சில நாட்களில் அவன் வசமாகியது. அவன் போலந்தில் இருந்தபொழுது பீற்றரின் படைகள் சுவீடனைச் சேர்ந்த பிரதேசங்களைத் தாக்கியமையால், அவன் நேராக மாசுகோவைத் தாக்கும் பொருட்டுப் படை எடுத்தான். கிராட்னோ, பெரசினு, சுமொலென்சுக் முதலிய இடங்களில் வெற்றிகள் பெற்றுனு யினும், அவனது படைகள் நெடுந்தூரம் செல்ல நேர்ந்தமையாலும், ரூசியாவில் தோன்றிய கடுங் குளிராலுஞ் சொல்லொணுத் துன்பமடைந்தன. இறுதியில் புல்டோவா என்ற இடத்தில், 1709-ஆம் ஆண்டில் ரூசியரை எதிர்த்துப் போரிட்டான். இந்தப் போர்க்களத்திற் பீற்றரின் படைகள் விடாமுயற்சியுடன் போராடி, இறுதியில் வெற்றிமாலை சூடின. மாபெரும் வீரரான சார்லசு தப்பியோடுமாறு நேர்ந்துவிட்டது. அவன் இறந்த பிறகு, ரூசிய நாடு பால்திக் கடல் வரை வித்தரிக்கப்பட்டது. பின்லாந்து குடாவைச் சுற்றியுள்ள நாடுகள் அனைத்தும் ரூசியர் வசமாயின. சார்லசு இறந்த பிறகு, 1721-ல் சுவீடன் நாடு பீற்றருடன் நையாசுடெட் என்ற இடத்தில் செய்து கொண்ட உடன்படிக்கையால், ரூசியா பால்திக் பிரதேசத்தில் பெற்ற நாடுகளும் உரிமைகளும் உறுதிபடுத்தப்பட்டன. தனது வெற்றியை நிலை நாட்டும் ஞாபகச் சின்னமாகத் தன் பெயரால் ஒரு பெரும் நகரத்தை (பீற்றர்சு பர்க்கு) பீற்றர் அந்தப் பிரதேசத்தில் நிருமாணித்தான்.

மகா பீற்றர் உலக சரித்திரத்தில் காணப்படும் பெரும் மன்னர்களின் வரிசையில் வைத்துப் போற்றப் படத் தக்கவன். இரக்கமற்ற சிந்தையும் இரும்பை ஒத்த கடினமான நெஞ்சுறுதியும் வாய்ந்தவனுயினும், ரூசி

யாவை நாகரிக மேம்பாடுறச் செய்து, வல்லரசாகத் திகழச் செய்த பெருமை அவனையே சாரும். அதனுலேயே, 1721-ல் ரூசிய மக்கள் மனமுவந்து, " ரூசியச் சக்கரவர்த்தியும் எமது தாய் நாட்டின் தந்தையுமான ஒப்பற்ற பீற்றர் " என்று பட்டம் வழங்கிப் போற்றினர். பீற்றர் 1725-ல் இறந்த பின்பும், காதரைன் போன்ற திறமைசாலிகளின் முயற்சிகளால் ரூசிய நாடு மேன் மேலும் விருத்தியடைந்தது.

### வினுக்கள்

1. ரூசியாவில் பதினேழாம் நூற்ருண்டில் இருந்த நிலைமை யாது?

2. பீற்றரின் இருபெரும் இலட்சியங்கள் யாவை?

3. அவன் புரிந்த சீர்திருத்தங்களைப் பற்றி ஒரு குறிப்பு வரைக.

4. கடற்படை கட்டுவதற்கு அவன் செய்த முயற்சிகளைக் குறிப்பிடுக. அதன் உதவியால் அவன் சாதித்தது யாது?

5. பீற்றருக்கும் சுவீடன் மன்னனுன சார்லசுக்கும் நிகழ்ந்த போராட்டத்தை விளக்குக. அதன் முடிவு யாது?

6. பீற்றரிடம் ரூசிய மக்கள் எவ்வாறு நன்றி பாராட்டினர்?

7. "பீற்றரின் குணுதிசயங்களும் பெருமையும்"—இப் பொருள் பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.

# 8. அமெரிக்கச் சுதந்திரப் போர்

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் சுபானிய அரசனின் ஆதரவு பெற்ற மாலுமி கொலம்பசு அமெரிக்காவைக் கண்டறிந்தானல்லவா? அது முதல் சுபானிய மக்கள் மேற்குத் திசையில் செல்லுங் கடல் மார்க்கத்திற்கும், இரு அமெரிக்கக் கண்டங்களாகிய 'புது உலகத்திற்கும்' தாமே உரியவர்களென்று கூறிக்கொண்டு, பிற நாட்டினரை அங்குச் செல்லாவண்ணம் தடுக்க முயன்றனர். அதனால் ஐரோப்பாவில் நிகழ்ந்த போர்களுக்கு இதுவும் ஒரு முக்கியக் காரணமாயிற்று. பதினாறும் நூற்றாண்டின் இறுதியில், எலிசபேத் ராணியால் ஊக்கப்பட்ட ஆங்கில மாலுமிகள் சுபானியக் கடற்படையாகிய 'ஆர்மடா'வைப் புறங்கண்டதுமன்றி, அமெரிக்கக் கண்டத்திலும் புகுந்து பொன்னும் வெள்ளியும் கொள்ளையடித்தனர். பிறகு வட அமெரிக்காவின் கிழக்குக் கரையோரமாக '**வேர்சீனியா**' என்ற குடியேற்றமும் அமைத்துக் கொண்டனர். இங்கே குடியேறிய ஆங்கிலேயர் விரைவில் தாய்நாட்டுக்குத் திரும்பிவிட்டமையால், மீண்டும் முதலாம் யேம்சு மன்னன் காலத்தில் இதனைப் புதுப்பித்தல் அவசியமாயிற்று.

அந்த யேம்சின் காலத்திலேயே, மதச் சுதந்திரம் விரும்பித் தாய் நாட்டினின்றும் வெளியேறிய '**யாத்திரீகத் தந்தையர்**' (Pilgrim Fathers) போன்ற 'பியூரிட்டன்' வகுப்பினர் வெர்சீனியாவுக்கு வடக்கில் மசூசெட்சு, கனெக்டிகட், ரோட்தீவு போன்ற குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர். அவர்கள் விடா முயற்சியும், எளிய வாழ்க்கையும் சுதந்திர விருப்பமும் உடையவர்களாதலின், விரைவில் அந்தப் பிரதேசங்களில் வேளாண்மையும் தொழில்களும் தழைத்தோங்கி, போசுடன் முதலிய சிறந்த நகரங்களும் பிரதேச பரிபாலன சபைகளும் தோன்றின. இந்தக் குடியேற்றங்

களை ஒரே தொகுதியாகப் 'புதிய இங்கிலாந்துக் குடியேற்றங்கள்' (New England Colonies) என்றும் அழைப்பதுண்டு. முதலாம் சார்ல்சு ஆட்சி புரிந்த பொழுது, இந்தப் பியூரிட்டன்களைப் பின்பற்றிக் கத்தோலிக்க மதத்தினர் பலரும் பால்டிமோர் பிரபு தலைமையின் கீழ் அமெரிக்காவிற்குச் சென்று வேர்சீனியாவிற்குத் தென்பால் 'மேரிலாந்து' என்ற குடியேற்றத்தை அமைத்தனர். சார்ல்சு மன்னன் 1649-ல் கொல்லப்பட்டதும், ஒலிவர் கிராம்வெல்லின் ஆட்சி நடைபெற்றதல்லவா? அப்பொழுது ஒல்லாந்தர்மீது போர் தொடுத்து 1664-ல் ஆங்கிலேயர் அவர்களை முறியடித்ததும், அவர்களிடமிருந்து டெலாவேர், நியூசெர்சீ, நியூஅம்சுடர்டாம் என்ற குடியேற்றங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். இவற்றில் நியூஅம்சுடர்டாம் 'நியூயார்க்' என்ற புதிய பெயரளிக்கப் பெற்றது. பிறகு, இரண்டாம் சார்ல்சு காலத்தில், அமைதியை நாடும் குவேக்கர் கூட்டத்தின் தலைவனான வில்லியம் பென் என்பவனால் 'பென்சில்வேனியா'வும், மற்றவர்களால் வட, தென் கரோலினாக்களும் நிறுவப்பட்டன. இறுதியில், இரண்டாம் சோர்ச் மன்னரின் காலத்தில் 1732-ல் தளபதி ஓகில் **தோப்** என்பவரால் 'சோர்சியா'வும் தாபிக்கப்பட்டமையால், வட அமெரிக்காவில் புகழ்பெற்ற 'பதின்மூன்று அமெரிக்கக் குடியேற்றங்கள்' இவ்வாறு தோன்றிவிட்டன. இவை, சென்ற்லோரன்சு நதியின் முகத்துவாரத்திலிருந்து பிளாரிடாத் தீபகற்பத்தின் வடபாகம் வரை, அலகினி மலைத் தொடருக்கும், அத்திலாந்திக் சமுத்திரத்திற்கும் இடையேயுள்ள பகுதியில் வியாபித்திருந்தன.

அப்போது ஆங்கிலேயரின் பகைவர்களாக விளங்கிய பிரான்சுக்காரர்கள் இந்தக் குடியேற்றங்களுக்கு வடக்கிலுள்ள கனடாவையும், இவற்றின் தென்பாலுள்ள மிசிசிபி பள்ளத்தாக்கையும் முன்னரே கைப்பற்றியிருந்தனர். மிசிசிபி பாயும் பிரதேசத்திற்குப் பிரான்

சுக்காரர்கள் 'லூயிசி யாஞ' பிரதேசமென்று புதிய பெயரிட்டழைத்தனர். அவர்கள் தாமே வடஅமெரிக்கா வின் மற்றப் பகுதிகளைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்னும் நோக்கமுடையவர்கள். ஆதலினுல், பதின்மூன்று குடியேற்றங்களில் வாழ்ந்த ஆங்கிலேயர் அலகினி மலையைக் கடந்து உள்நாட்டிற் புகாதவாறு தடுக்க, லூயிசியாஞவிலிருந்து கியூபெக்வரை கோட்டை களும் அரண்களும் தொடர்ச்சியாக அமைக்கலாயினர். அவர்களது எண்ணம் முற்றுப்பெற்றிருந்தால், அமெரிக் காவினின்றும் ஆங்கிலேயரின் ஆதிக்கம் என்ருே மறைய நேர்ந்திருக்கும்! ஆனல், கடைசிக் கோட்டை யான 'டுகெய்னே' அவர்கள் அமைக்கும்போது ஏழாண் டுப் போர் தொடங்கியதால், நிலைமை விரைவில் மாறுத லடைந்தது. 1760-ல் கனடா முழுதும் ஆங்கிலேயர் வசமாகிவிட்டது. இக்காரணத்திஞல் பிரான்சுக்கார ருக்கு அஞ்சியிருந்த பதின்மூன்று குடியேற்ற நாடு களின் மக்கள் அந்த அச்சம் நீங்கி, மேற்குப் பகுதியில் சஞ்சரிப்பதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. இந்தப் புதிய நிலைமை காரணமாகவே, ஆங்கிலேயரின் ஆதரவை நம்பியிருந்த குடியேற்ற நாட்டு மக்கள் இனி எவ்வித அச்சமுமின்றித் தாய்நாட்டின் உதவியையும் நாடாமல், சுயேச்சையாக வாழ்வதற்கேற்ற துணிவும் ஆர்வமும் அடையப்பெற்றனர். இதஞலேயே கிரீன் என்ற சரித்திராசிரியர், "உல்ப் என்ற ஆங்கிலத் தளபதி ஆபிரகாம் மலைச் சிகரத்தில் நிகழ்ந்த போரில் பிரன்சுக் காரரைப் புறங்கண்டு கனடாவைக் கைப்பற்றிய அன்றே, சுதந்திர அமெரிக்க ஐக்கியநாடு உதயமாகி விட்டதெனலாம்", என்று கூறுகிருர்.

அன்றியும், ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியக் கொள்கை தாய்நாட்டிற்கு அனுசரணையான முறை யிலும் குடியேற்றங்களுக்குப் பாதகமான வகையிலும் அமைந்திருந்தது. உதாரணமாக, அமெரிக்கக் குடி

யேற்றங்கள் தாய்நாட்டிற்கு மூலப்பொருள்களை அனுப்பி விட்டு, அவற்றினும் பன்மடங்கு அதிக விலை கொடுத்து உற்பத்திப் பொருள்களை அதனிடமிருந்து பெறவேண்டும்; மற்ற நாடுகளுடன் வியாபாரத் தொடர்புகொள்ளலாகாது. தாய்நாட்டிற்கு ஏற்றுமதியாகும் பொருள்களும் அங்கிருந்து இறக்குமதி செய்யப்படுவனவும் பிரித்தானியக் கப்பல்களிலேயே அனுப்பப்படவேண்டும். இத்தகைய குறுகிய நோக்குள்ள கொள்கைகளால், தாய் நாடு இலாபமடையவும் குடியேற்றங்கள் துன்புறவும் நேர்ந்தது. இந்த நிலையில், தாய்நாடு குடியேற்றங்கள் மீது வரிகள் விதித்துப் புதிய சுமைகளை நிலைநிறுத்தவும் முயன்றது.

ஆங்கில மன்னரான மூன்றும் சோர்ச் பிடிவாத குணமும் குறுகிய நோக்கமும் படைத்தவனாகலின், அவனும் அவனது கைப்பாவைகளாக இயங்கிய மந்திரிகளும் அமெரிக்காவிற் பிரான்சுக்காரரை முறியடிக்க நேர்ந்த போர்ச் செலவில் ஒரு பங்கை அமெரிக்கரிடமிருந்து வசூலிக்கத் தீர்மானித்தனர். அதனால் 1765-ல் கிரென்வில் என்ற மந்திரி 'முத்திரைக் காகிதச் சட்டத்தை' (Stamp Act) நிறைவேற்றினர். அமெரிக்கர்கள் எத்தகைய சட்ட ரீதியான காரியங்களுக்கும் இத்தகைய அரச முத்திரை இட்ட காகிதங்களையே பயன்படுத்த நேர்ந்தமையால், தாய்நாடு ஓரளவு வருமானத்தை எதிர்பார்த்தது. ஆனால் அமெரிக்கர் இந்தச் சட்டத்திலடங்கிய பொருளாதாரக் கொள்கைமட்டுமன்றி அரசியற் கொள்கையையும் எதிர்த்தனர். 'சுயேச்சையான குடியேற்றங்கள்மீது, அவைகளுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படாத தாய்நாட்டுப் பாராளுமன்றம் வரி விதிக்கும் உரிமையற்றது' என்று வாதித்து, அவர்கள் முத்திரைக் காகிதங்களைச் சுட்டெரித்தனர். மறு ஆண்டில் இந்தச் சட்டம் நீக்கப்பட்ட போதிலும், குடியேற்றங்கள் மீது வரி விதிக்கும் உரிமை தனக்கு உண்டென்று ஆங்கிலப்

பாராளுமன்றம் அறிக்கையிட்டது. இதனுற் கோப மடைந்த அமெரிக்கரை மேலும் துன்புறுத்தும் வகையில் 1767-ல், கண்ணுடி, காகிதம், தேயிலை போன்ற பொருள் கள்மீது இறக்குமதி வரிகள் விதிக்கப்பட்டன.

அமெரிக்கர் பிரித்தானியப் பொருள்களை வாங்க மறுத்துப் பெரிய கிளர்ச்சி செய்தனர். 1770-ல் நோர்த் பிரபு தேயிலைவரி ஒன்று நீங்கலாக மற்ற வரிகளை நீக்கிவிட்டார். தீர்க்க தரிசனம் படைத்த சாதாம் பிரபு, பேர்க் போன்றவர்கள் அமெரிக்கருடன் சமாதானம் செய்துகொள்ளுமாறு கூறிய நன்மொழிகள் விழலுக் கிறைத்த நீராயின. 1773-ல் தேயிலை வரியை எதிர்த்த அமெரிக்கர் மாறுவேடம் பூண்டு, போசுடன் துறைமுகத் தில் நின்ற கப்பலிற் புகுந்து, தேயிலைப் பெட்டிகளைக் கடலி லெறிந்து ஆரவாரம் செய்தனர். "போசுடன் தேநீர் விருந்து" என்ற பரிகாசப் பெயர் கொண்ட இந்தச் சம்பவத்தால் அளவுகடந்த கோபம் மூண்ட மூன்ரும் சோர்ச் அந்தத் துறைமுகத்தை மூடியதுடன், 'மசசூசெட்சு' மாகாணத்தின் உரிமைச் சட்டத்தை நீக்கி இராணுவ ஆட்சியை ஏற்படுத்தினுன். அந்த நிலையிலுந் தாய்நாட்டைப் பகைத்துக்கொள்ள விரும் பாத அமெரிக்க மக்கள் சமாதான விண்ணப்பமொன்றை அனுப்பினுர்கள். "**ஒலிவ் கிளையின் விண்ணப்பம்**" (Olive branch petition) என்ற அதனையும் சோர்ச் மன்னன் தனது ஆணவத்தால் புறக்கணித்தான். உடனே அமெரிக்கக் குடியேற்றங்களின் பிரதிநிதிகள் 1775-ல் **பிலடெல்பியா** நகரில் மகாநாடு கூடிச் '**சுதந் திரப் பிரகடன அறிக்கை**'யை வெளியிட்டனர். **செபர் சன்** தயாரித்த இந்த அறிக்கையில், 'ஒவ்வொரு நாடும் சுயேச்சையாகத் தனக்குகந்த அரசியலமைப்பை வகுத் துக் கொண்டு அரசாளும் இயற்கை உரிமையைப் படைத் திருக்கிறது' என்ற கொள்கை தெளிவாக வலியுறுத்தப் பட்டது.

பின்னர் பதின்மூன்று குடியேற்றங்களுக்குமிடையே ஒற்றுமையுண்டாக்க ஒரு பொதுவான ஏற்பாடு செய்யப் பட்டு, **சோர்ச் வாசிங்டன்** பிரதம சேனுதிபதியாக நியமிக்கப்பட்டார். உடனே அமெரிக்கர் இராணுவ ஏற்பாடுகள் செய்வதிலும், பிற நாடுகளுக்குத் தூது அனுப்புவதிலும் முனைந்தனர். முதல் இரண்டாண்டு களில் வெற்றி தோல்வி காணுது போர் நீடித்ததாயினும், 1777-ல் ஆங்கிலத் தளபதி பர்காயின் தமது படையுடன் **சாரடோகா** என்ற இடத்தில் அமெரிக்கரிடம் சரண் புக நேர்ந்தது. இந்த நிகழ்ச்சி அமெரிக்கச் சரித்திரத்தையே மாற்றி அமைத்தது எனலாம். ஏனெனில், அமெரிக்கரின் ஆற்றல் கண்டு வியந்த பிரான்சு, சுபெயின் முதலிய நாடுகள் அவர்களுக்கு உதவியாகப் போரில் இறங்கின. பிரான்சில் அப்போது தூதராகச் சென்றிருந்த **பெஞ்சமின் பிராங்ளின்** தமது வாக்குச் சாதுரியத்தால் இந்த வெற்றியின் மகிமையைப் பெரிதும் விளக்கியதால், அந்த நாட்டினரின் உற்சாகம் ஓங்கியது. இவ்வாறு குடியேற்ற நாட்டுப் போர், உலகப் பெரும் போராயிற்று. மேலும், தமது கப்பல்களைப் பிரித்தானியர் பரிசோதிக்க முற்பட்டதால் சினமடைந்த ரூசியா, டென்மார்க், சுவீடன் முதலிய நாடுகள் **நடுநிலைத் தற்காப்புக் கூட்டுறவு** என்ற ஒப்பந்தத்தை வகுத்துக்கொண்டு ஆங்கிலேயரை எதிர்த்தனர். இவ்வாறு தனித்துப் போராட நேர்ந்தமையால், பிரித்தானியக் கடற்படைகூடத் தோல்வியடைந்தது.



படம் 45. சோர்ச் வாசிங்டன்

இந்த நிலையில் 1781-ல் ஆங்கிலத் தளபதி காரன்வாலிசு பிரபு **யோர்க் ரவுன்** என்ற இடத்தில் தமது படையுடன் தோல்வியுற்றுச் சரணடைய நேர்ந்தது. இந்தப் பெரும் நிகழ்ச்சியுடன் போர் முடிவடைந்த தெனலாம்.

அமெரிக்க சுதந்திரப் போர், பதின்மூன்று குடியேற்ற நாடுகளுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்ததுடன், உலகில் ஏகாதிபத்திய ஆதிக்கத்தில் அமைக்கப்பட்டுத் துன்புறும் பிற அடிமை நாடுகள் சுயேச்சை பெற ஒரு வழிகாட்டியாகவும் அமைந்தது. மேலும், அமெரிக்காவில் எழுந்த சுதந்திர நாதத்தின் எதிரொலி விரைவில் பிரான்சு நாட்டிலுங் கேட்டதாகையால், அங்கும் பெரியதொரு அரசியற் புரட்சி தோன்றக் காரணமாயிற்று. பிரான்சினின்றும் அமெரிக்காவிற்குச் சென்றிருந்த **இலாபாயத் (Lafayette)** முதலிய தளபதிகளும் சேனை வீரரும் புதிய அரசியற் கொள்கைகளுடன் நாட்டுக்குத் திரும்பி, அவற்றைத் தம் நாட்டிலும் பரவச் செய்யலாயினர். ஆங்கில நாட்டிலும் மூன்றும் சோர்ச் மன்னரின் அதிகாரம் இந்தத் தோல்வியின் விளைவாகக் குன்றியதால், அங்கு மீண்டும் **வரம்புடை முடியரசிற்கு (Constitutional Monarchy)** அடிகோலப்பட்டு மந்திரிகளின் சுயேச்சையான ஆட்சி நிலைபெற்றது. அக்காரணத்தால், " இந்தச் சம்பவம் வரவேற்கத் தக்கதொரு வரப்பிரசாதமாகும் " என்பர் ஒரு சரித்திராசிரியர். அன்றியும், தமது குறுகிய நோக்குள்ள ஏகாதிபத்தியக் கொள்கையால் நேர்ந்த தீமையை உணர்ந்த பிரித்தானியர், தகுந்த காலத்தில் குடியேற்றங்களுக்குப் பொறுப்பாட்சி அளித்து அவற்றைத் தாய் நாட்டுடன் இணைந்திருக்கச் செய்யும் சமரசக் கொள்கையைப் பின்பற்றத் துணிந்தனர். இதுவே 'புதிய சாம்ராச்சியக் கொள்கை' யாக விரைவில் மலர்ச்சி பெற்றது. இவ்வாறு உலக வரலாற்றிலேயே இடம் பெறும் மகத்தான சம்பவமாக இந்தச் சுதந்திரப் போர் விளங்கலாயிற்று.

இந்தப் போரில் அமெரிக்கர் வெற்றி பெறுவதற்கு சாதகமான காரணங்கள் பல இருந்தன. அவர்களது சுதந்திர வேட்கையும் உற்சாகமும் அளவுகடந்திருந்தன; அதனுல், அவர்கள் எத்தகைய சிரமங்களேயும் பொருட் படுத்தவில்லே. மேலும், சோர்ச் வாசிங்டன் போன்ற அரிய தலேவர்கள் அவர்களுக்கு வாய்த்திருந்தனர். உற் சாகமின்றிப் போரிட்ட ஆங்கில வீரர்களுக்குச் சரியான தலேவர்களும் இல்லே. அந்தச் சேனதிபதிகளும் இலண் டனிலிருந்து யுத்த மந்திரி உத்தரவு அனுப்பும்வரை காத்திருக்க நேர்ந்தது. பரந்த அத்திலாந்திக் சமுத் திரத்தைக் கடந்து போருக்குத் தேவையான பொருள்களே எடுத்துச் செல்வதும் ஆங்கிலேயருக்குச் சிரமத்தை அளித் தது. முடிவாகப் பிரான்சு முதலிய நாடுகள் யாவும் ஒன்று சேர்ந்தமையால் பிரித்தானியர் கடலாதிக்கத்தையு மிழந்து தவித்தனர்.

1783-ல் பாரிசு ஒப்பந்தத்தில் அமெரிக்கக் குடியேற் றங்களின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டதாயினும், அவைகளினிடையே ஒற்றுமை நிலவவில்லே. சுமார் நான்கு ஆண்டுகள் வரை, பதின்மூன்று நாடுகளேயும் தனித்தனி அரசாங்கங்கள் வைத்துக்கொள்ள அனுமதிப் பதா, அன்றி அவற்றை ஒன்ருக இணேத்து ஒரே அர சாங்கம் அமைப்பதா என்ற விவாதம் தொடர்ந்து நடை பெற்றது. இறுதியில், **காமில்டன், செபர்சன், மாடி சன்** போன்ற தலேவர்கள் ஒன்று சேர்ந்து, ஒரு **சமட்டி அரசாங்கம்** (Federal Government) நிறுவினர். இந்தச் சமட்டியின் கீழ், மத்திய அரசாங்கமும் குடியேற் றங்களின் அரசாங்கங்களும் தனித்தனி இயங்க இட முண்டு. தற்காப்பு, நிதி, அயல் நாடுகளுடன் உறவு முதலிய பொதுவான அதிகாரங்களே மத்திய அரசாங்க மும், மற்ற அதிகாரங்களேக் குடியேற்றத்தின் அரசாங்க மும் வகிப்பதென்று அதிகாரப் பங்கீடு செய்யப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் தலேவராக, மக்களால் தேர்ந்

தெடுக்கப்பட்ட **சனாதிபதி** விளங்குவார். அவர் தமக்கு உதவியாக ஒரு மந்திரிசபை அமைத்துக் கொள்வாரெனினும், அந்த மந்திரிகள் அவருக்குப் பொறுப்பானவர்களேயன்றி, பொது மன்றமாகிய **காங்கிரசிற்குப்** பொறுப்புள்ளவர்களல்லர். இவ்வாறு நிர்வாக அதிகாரமுடைய மந்திரிகளுக்கும், சட்டங்கள் நிறைவேற்றும் காங்கிரசிற்கும் தொடர்பின்றிச் செய்யப்பட்டது.

மேலும், இந்தக் 'காங்கிரசு' இரு சட்டசபைகள் கொண்டது. அவற்றில், மக்களின் பிரதிநிதிகளடங்கிய **பிரதிநிதிகள்** சபையைக் காட்டிலும், இராச்சியங்களின் பிரதிநிதிகளடங்கிய **செனெட்சபை** அதிகாரம் மிகுந்தது. இவையன்றி, அமெரிக்க **உயர்நீதிமன்றம்** அரசியல் அமைப்பின் அடிப்படை விதிகளுக்கு முரணான சட்டங்களை நீக்கிவிடும் உரிமை வாய்ந்தது. இவ்வாறு, சனாதிபதியின் நிர்வாக அதிகாரமும், காங்கிரசின் சட்டமியற்றும் உரிமையும், சட்டங்களைப் பரிசீலனை செய்ய உயர் நீதிமன்றம் பெற்றுள்ள உரிமையும் அமெரிக்க அரசியலின் சிறப்பான அம்சங்களாகும். இவற்றைப் பிற்காலத்தில் வேறு பல நாடுகளும் பின்பற்றித் தமது அரசியலமைப்பை மாற்றிக் கொண்டன. சுதந்திர இயக்கத்தின் தனிப்பெரும் தலைவனான சோர்ச் வாசிங்டன் முதல் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். அவனது ஆட்சிக் காலத்தில் அரசியல் அமைப்பு உரம் பெற்று, அமெரிக்க ஐக்கிய நாடு சிறந்த சனநாயக நாடுகளில் ஒன்றாகத் திகழ்ந்தது.

### வினாக்கள்

1. "ஆங்கிலேயர் பதின்மூன்று குடியேற்றங்களை நிறுவிய வரலாறு"—இந்தப் பொருள்பற்றி ஒரு பக்கத்திற்கு மேற்படாமல் ஒரு தெள்ளிய கட்டுரை வரைக.

2. அமெரிக்கர் பிரான்சுக்காரரிடம் அஞ்சியது ஏன்? எப்போது அந்த அச்சம் விலகியது?

3. அமெரிக்கர்மீது பிரித்தானியர் சுமத்திய பொருளாதார ஏற்பாடுகளும், வரிச்சுமைகளும் யாவை? அவை எவ்வாறு அரசியல் பிரச்னையாக மாறின?

4. அமெரிக்கச் சுதந்திரப் போரில் நிகழ்ந்த இரு முக்கிய சம்பவங்களையும் அவற்றின் விளைவுகளையும் விளக்குக.

5. இந்தப் போரில் அமெரிக்கர் எக்காரணங்களால் வெற்றியுற்றனர்?

6. அமெரிக்கச் சுதந்திரப் போரால் விளைந்த பெரும் பயன்கள் யாவை?

7. சுதந்திரம் பெற்றதும் அமெரிக்கர் செய்துகொண்ட அரசியல் ஏற்பாடுகள் யாவை?

8. குறிப்பு எழுதுக:—முத்திரைக் காகிதச் சட்டம், சுதந்திரப் பிரகடனம், வாசிங்டன், சமட்டி அரசாங்கம்.

## 9. பிரான்சியப் புரட்சி

பதினெட்டாம் நூற்றுண்டில், ஐரோப்பாவில் பிரான்சு முதன்மை பெற்ற வல்லரசாக இருந்தது. அங்கு அறுபது ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி புரிந்த **பதினன்காவது உலூயி** நிகரற்றதொரு மன்னுட்சியை (Monarchy) தாபித்தான். ஏனெனில் ஆங்கில நாட்டிலிருந்தது போன்ற பாராளுமன்றம், அந்த நாட்டில் வளர்ச்சியுறவில்லை. பொதுமக்களின் குறைகளை வெளியிடுவதற்கேற்ற சாதனங்கள் எதுவும் இல்லாததால், அரசனது அதிகாரத்தைக் கட்டுப்படுத்த இயலவில்லை. அரசனது உத்தரவுகளை நிறைவேற்றி வைப்பதையே கடமையாகக் கொண்ட மாகாண அதிகாரிகளும் (Intendants) அளவற்ற அதிகாரம் படைத்திருந்தமையால், அவர்கள் ஆங்காங்குச் சிற்றரசர்கள்போல ஆட்சி செலுத்தினர். இத்தகைய வலிய மன்னுட்சியின்கீழ்ப் பிரபுக்களும் மத குருமாரும் செல்வச் செழிப்புடன் ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபட்டிருக்க, எளிய பொதுமக்கள் தமது உரிமைகளை இழந்து வறுமையால் வாடினர். உலூயி மன்னனது

பெருமையின் சின்னமாக, மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் நிறைந்து வர்சேல்சு நகரம் துலங்கியது; அங்கு இலக்கியமும் கலைகளும் வளர்ந்தோங்கின. ஆனால், மக்கள் வறுமையிலாழ்ந்து கொடுங்கோன்மைக்கு இரையாகிக் கிடந்தனர்.



படம் 46. பதினாலாம் உலூயி

மன்னனது கொடுங்கோன்மைக்கும் அதிகமாகப் பிரபுக்களுடைய கொடுங்கோன்மையும் மதகுருமார்களின் ஆதிக்கமும் ஓங்கியிருந்தன. பதினான்காவது உலூயி 1715-ல் இறந்த பிறகு, அவனது பேரனை பதினைந்தாவது உலூயி அரசு புரிந்தான்; இவனது ஆட்சியின்போது அரசவையில் பெண்களின் ஆதிக்கமும் சூழ்ச்சிகளும் பெருகிவிட்டன. இவனைப்போலவே பதினாறுவது உலூயி மன்னனும் திறமை குறைந்தவன். ஆயினும், அவன் நாட்டின் நிர்வாகத்தைச் சீர்திருத்த வேண்டுமென்னும் நன்னோக்கம் படைத்தவன். ஆனால், பொருளாதார நிலைமை சீர்கேடடைந்தமையாலும், பிரபுக்களின் பிடிவாதத்தாலும் அவனது ஆட்சியிலும் மக்களின் துயரம் அதிகரித்தது. பொருளாதாரச் சீர்கேட்டிற்கு முக்கியமான காரணம், அரசாங்கம் பற்பல வரிகளை விதித்து வரிப்பணத்தை ஆடம்பரச் செலவுகளிலும், போர்களிலும் வீணாக்கியதே யாகும். இந்த வரிகளால் பெற்ற வருமானமும் போதாது, அரசாங்கம் கடன் வாங்கியதால் மிகவும் நெருக்கடியான நிலை தோன்றியது. அந்த நிலையினும், பிரபுக்களும் செல்வம் மிகுந்த குருமார்களும் வரி செலுத்தாமலிருக்க உரிமை பாராட்டி,

வரிச்சுமை முழுதும் எளியவர்கள் மீதே தங்குமாறு செய்துவிட்டனர். மேலும், ஆங்காங்கு மாகாணங்களில் ஆட்சி செலுத்திய அதிகாரிகள் தம் மனம் போனவாறு வரிகளை அதிகப்படுத்தினர். இந்த வரிகளில், ஒவ்வொருவ ரிடமிருந்தும் கட்டாயமாக வசூலிக்கப்பட்ட உப்பு வரியும், தலைவரியும் (Taille) பிரதானமானவை.

வரிச்சுமையின் கொடுமை ஒருபுறமிருக்க, பிரபுக்கள் புரிந்த அட்டூழியங்கள் கணக்கிலடங்கா. குடியானவர்களை அடிமைகள் போல நடத்தி, அவர்களது தானியங்களில் பெரும் பகுதியைப் பறித்துக் கொண்டனர். தமக்கு விரோதமானவர்களைச் சிறைகளிலிட்டு வதைத்தனர். கூலி கொடுக்காமல் குடியானவரிடமிருந்து வேலை வாங்கு வதும், வேட்டையாடும்போது அவர்களது பயிர்களை அழிப்பதும் சர்வ சாதாரணமாய் நிகழ்ந்துவந்தது. இவ் வாறு பற்பல கொடுமைகளுக்காளான பொதுமக்கள் கொதித்தெழுந்து மன்னுட்சியையும், பிரபுக்களது ஆதிக் கத்தையும் அழிக்க முற்பட்டதில் வியப்பில்லையல்லவா ?

இத்தகைய சூழ்நிலையில், பல பேரறிஞர்கள் தோன் றிப் புதிய கருத்துக்களையும், கொள்கைகளையும் விளக்கிப் பிரசாரம் செய்தனர். இவர்களில், **வால்டேர்** நுண்ணறிவு படைத்தவராதலின், தமது கட்டுரைகளால் அரசாங்கத் தின் அவல நிலையையும் மதகுருமாரின் ஆடம்பரங்களை யும் பரிகசித்து எழுதினர். அவரது சொல்லம்புகள் இளைஞர்களின் சிந்தனையைத் தூண்டி வளர்த்தன. 1762-ம் ஆண்டில் மற்றொரு சிந்தனையாளரான **உரூசோ** தமது 'சமுதாய ஒப்பந்தம்' என்ற நூலில், எவ்வாறு பொது மக்களின் விருப்பமே அரசாங்கத்தின் ஆணி வேராகு மென்பதையும், கொடுங்கோன்மையை நீக்க மக்களுக்கு உரிமை உண்டென்பதையும் தெளிவாக எடுத் துரைத்தார். **மாண்டெசுகு** என்பார் 1743-ல் வெளி யிட்ட தமது 'சட்டங்களின் உட்கருத்து' என்ற நூலில், எவ்வாறு அரசியல் அதிகாரங்கள் ஒருவரிடம் தங்காமல்




படம் 47. 1789-ஆம் ஆண்டில் ஐரோப்பா

பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்ற உண்மையை விளக்கினர். இத்தகைய கருத்துக்கள் வெகு விரைவில் நாடெங்கும் பரவின. முக்கியமாகக் கூர்ந்த அறிவு படைத்த நடுத்தர வகுப்பினரும், அநீதிகளுக்கு இரை யாகிக் கிடந்த குடியானவரும் இந்தக் கருத்துக்களை ஏற்றுப் புத்துணர்ச்சியும், விழிப்பும் எய்தினர்.

புரட்சி தோன்றுவதற்குச் சில காலத்திற்கு முன்பே அரசாங்க நிலைமை சீர்கேடடைந்து வந்தது. அரசனுன **பதினாரும் உலூயி** வரிச்சுமையைக் குறைத்துப் பொரு ளாதார நிலையைத் திருத்தியமைக்க வேண்டும் என்னும் நோக்கம் கொண்டிருந்த போதிலும், திறமையும் அழகும் படைத்த ஆசுத்திரிய இளவரசியான அவனது மனைவி **மேரியாந்தோய்நெத்தும்** அரசவையிலிருந்த பிரபுக் களும் கொண்டிருந்த பிடிவாதத்தால் அத்தகைய சீர் திருத்தங்கள் நிறைவேருமற் போயின. பதினாரும் உலூயி, 1776-ல் **டர்கோ** என்பவரைப் பிரதம ஆலோ சகராக நியமித்தான். அவர் திறமை மிக்கவராகையால், விரைவில் நாட்டின் பொருளாதார நிலைக்குப் பிரபுக்களும் குருமார்களுமே காரணம் என்பதை அறிந்துகொண்டார். அவர்கள்மீதும் வரி விதிக்கப்பட வேண்டுமென்று அவர் கூறியதால், பிரபுக்களின் சூழ்ச்சியால் அவர் 1775-ல் பதவியினின்றும் விலக்கப்பட்டார். அவரால் நன்மை விளையுமென நினைத்த பொது மக்கள், அவர் நீக்கப்பட்ட தும் அதிருப்தியடைந்தனர். பிறகு சுவிட்சர்லாந்து தேசத்தினரான **நெக்கர்** என்பவரை அரசர் மந்திரியாக நியமித்தார். சொற்ப வட்டிக்கு தேவையான அளவு பணம் கடன் வாங்கி, நெக்கர் நிலைமையைச் சமாளித்தார். ஆனல் சிக்கனமாக இருந்தும் பயன்படாததால், பொது மக்களுக்கு உண்மையான பொருளாதார நிலையை விளக்கும் பொருட்டு ஒரு "வரவு செலவு திட்டத்தை" 1781-ல் வெளியிட்டார். விரைவில் அவர் பதவியினின்றும் நீங்கினராயினும், பிரான்சு நாட்டின் உண்மையான

நிலையையும் அதன் பிரதான பிரச்னைகளையும் இந்த அறிக்கை தெளிவாக விளக்கியது. அதனுல் மக்களின் கவலைகளும் பெருகின. மக்களுக்கு உகந்த டர்கோ, நெக்கர் போன்ற மந்திரிகள் பிரபுக்களின் சூழ்ச்சியால் நீக்கப்படவே மக்களின் சினம் அதிகரித்தது. இந்த நிலையில் செய்வதொன்றும் அறியாது, சுமார் நூற்றைம் பது ஆண்டுகளுக்கு மேலாகக் கூட்டப்படாமலிருந்த **சுறேற்சு செனரல்** என்ற பாராளு மன்றத்தை அரசன் 1789-ல் கூட்டினுன். பிரபுக்களும் குருமாரும் தனித்தனி சபைகளில் இருந்தமை கண்டு, அவர்கள் பொதுமக்க ளுடைய பிரதிநிதிகளுடன் ஒரே சபையில் அமர வேண்டு மென்று **மீராபோ** போன்ற தலைவர்கள் கிளர்ச்சி செய்த னர். முதலில் மறுத்தபோதிலும், இறுதியில் மன்னன் இந்த ஏற்பாட்டிற்கு இணங்கவே, 'தேசீய சபை' என்ற பெயருடன் அந்த மன்றம் அரசியல் அமைப்பை மாற்றி யமைக்கும் பணியில் ஈடுபட்டது. இதனை விரும்பாத பிரபுக்களிற் பலர் அயல்நாடுகளுக்கு ஏகினர். இந்த நிலையில் பாரிசு நகரத்தில் அதிருப்தியுற்ற கலகக்காரர் களின் கூட்டம் பெருகி, **பாசுடில்** என்ற பழைய சிறைக் கூடத்தைத் தாக்கி, அங்குள்ளவர்களை விடுவித்தது. 1789-ஆம் ஆண்டு ஆடி மாதம் 14-ம் திகதியன்று நிகழ்ந்த இஃது ஒரு பெரும் சம்பவம் அன்றெனினும், மன்னரின் கொடுங்கோன்மையின் வீழ்ச்சிக்கு அறிகுறியான பெரும் நிகழ்ச்சியாகக் கருதப்பட்டது. இதனையே புரட்சியின் அடுத்த நிலையின் தொடக்கமாகக் கருதலாம்.

புரட்சி பிற நகரங்களிலும் பரவியது. அப்போது பட்டினியால் துன்புற்ற பாரிசு நகர மாந்தர் பெரும் கூட்டமாகச் சென்று, அரச குடும்பத்தினரை வார்சேல்சி னின்றும் பாரிசு நகரத்திற்கு இழுத்துச் சென்றனர். தேசீயசபை மன்னனது அதிகாரத்திற்கு வரம்பு அமைத் துப் புதிதாக உண்டாக்கிய அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டது போல நடித்தானுயினும், உலூயி மன்னன்

அதில் நாட்டம் கொள்ளவில்லை. 1791-இல் அவனது மனைவியின் யோசனைப்படி அவனும் அவளும் மாறு வேடம் தரித்து நாட்டினின்றும் தப்பியோட முயன்ற பொழுது, அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுச் சிறை பிடிக்கப்பட்டனர். தேசீய சபை, உலூயி மன்னன் மீது தேசத் துரோகக்குற்றம் சாட்டி, அவனை அரச பதவியினின்றும் சிறிது காலம் நீக்கி வைத்தது. அப்போது பிற நாடுகளில் தங்கி இருந்த பிரபுக்களின் சூழ்ச்சியாலும், பொதுவாகப் பிற மன்னர்கள் பிரஞ்சு அரசர்மீது கொண்ட பரிவாலும், ஆசுத்திரியா, பிரசியா முதலிய நாடுகளின் மன்னர்கள் பிரான்சுமீது படை எடுத்தனர். இந்தப் படை எடுப்புகள் காரணமாக, 1792-ல் பிரான்சில் 'பயங்கர ஆட்சி' தோன்றியது.

முதலில் அரசன் பகைவருடன் தொடர்பு கொண்டிருக்கக் கூடுமென்று சந்தேகித்து, அவனை அரச பதவியினின்றும் நீக்கினர். பிறகு பாரிசு நகரில் கலகக்காரர்களின் கூட்டம் ஒன்று கிளம்பி, அங்குமிங்கும் அலைந்த வண்ணம் பொது விரோதிகளாகக் கருதப் பட்டவர்களை வரையும் கொன்று குவித்தது. ஆனால், **வால்மி** என்ற இடத்தில் பிரசியப் படைகள்மீது புரட்சிக்காரர்கள் வெற்றி கண்டதும், சிறிது காலம் அமைதி தோன்றியது. அப்போது அரசனைச் சிறைப்படுத்திவிட்டுக் குடியரசு ஒன்றை மிதவாதிகள் நிறுவினர். ஆனால், **கிராண்டின்** தாபனத்தைச் சேர்ந்த அந்த மிதவாதிகளை வீழ்த்தி விட்டு, **யாக்கோபின்** என்ற தீவிரவாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றினர். அவர்களது தலைவர்களில், **தாந்தனும்**, **ரோப் சுபியரும்**, **மாரத்தும்** பிரதானமானவர்கள். இவர்கள் ஆட்சியல் பெல்சியத்திலிருந்து பிரஞ்சுப் படைகள் பின்வாங்கியதால், நாட்டிலுள்ள துரோகிகளை ஒழிக்கவேண்டுமென்னும் கருத்து மேலோங்கியது. இதற்காகப் 'பாதுகாப்புச் சபை' ஒன்று நிறுவப்பட்டது. அந்தச் சபையினர் சற்றும் இரக்கமின்றித் தாம் சந்தேகப்

பட்டவர்களனைவரையும் சிரச்சேதம் செய்வித்தனர். 1793-ல் உலூயி மன்னனும் இந்தத் தண்டனை விதிக்கப் பட்டார்; சில காலத்திற்குப் பின் அரசியும் கொல்லப்பட் டாள். 1794-ல் படையெடுப்பு அபாயம் நீங்கிய போதி லும், யாக்கோபின் தலைவர்களுக்குள் பொருமையும், பூசலும் தோன்றின. இதன் பயனுய்த் தலைவர் மூவரும் மடிந்தனர்; பயங்கர ஆட்சியும் முடிவடைந்தது. குடியர சாட்சி சிறிது காலம் நீடித்ததாயினும், 1795-ல் டைரக்டர் கள் சபை தனது ஆட்சியைத் தொடங்கியது. ஐந்து டைரக்டர்களடங்கிய நிர்வாக சபையும் இரண்டு சபைகள் கொண்ட சட்ட நிரூபண மன்றமும் ஆட்சியை நடத்தி வந்தன. ஆனல், விரைவில் அந்தச் சபையின் ஆட்சி பயனற்றுப் போயிற்று. 1799-ல் நெப்போலியன் முயற் சியால் 'கான்சுலேட்' என்னும் சபை நிறுவப்பட்டது. மூன்று உறுப்பினரடங்கிய இந்தச் சபையில் முதற் கான் சலாக விளங்கிய நெப்போலியன் வசமே உண்மையான அதிகாரம் தங்கியிருந்தது. இதற்கிடையே நெப்போலி யனது சர்வாதிகாரமும் நிலைபெற்றது.

நெப்போலியன் இராணுவக் கல்லூரியில் பயின்று, இளம் வயதிற் பீரங்கிப் படைத் தலைவனுய் விளங்கினுன். அவன் 1794-ல் ஆங்கில சேனைவீரர் பிரான்சில் புகாதபடி தடுத்தும், 1795-ல் உள்நாட்டுக் கலகங்களை அடக்கியும் புகழ்பெற்ருன். அப்போது ஆசுத்திரியாவும், பிரசியா முதலிய நாடுகளும் பிரான்சை எதிர்த்தமையால் 1796-ல் நெப்போலியன் அல்ப்சு மலைகளைக் கடந்து, ஆசுத்திரியப் படைகளை அழித்து, வட இத்தாலியிலும், சுவிட்சர்லாந் திலும் குடியரசுகளை நிலைநிறுத்தினுன். 1797-ல் நிகழ்ந்த **காம்போ-போர்மியோ** சமாதானத்தால் ஆசுத்திரியர் சரணடைந்தனர். இத்தாலியிலிருந்த சிற்றரசர் யாவரும் சிதறடிக்கப்பட்டதால், நெப்போலியனது பெருமை ஓங்கியது. பிறகு, 1798-ல் இந்தியா முதலிய கீழ்த்திசை நாடுகளிலும் பிரித்தானிய ஆதிக்கத்தை வேரறுக்க

வேண்டும் என்னும் நோக்கத்துடன் எகிப்துமீது படை எடுத்தான். அங்குப் பிரமிட் போரில் எகிப்தியரை முறியடித்தான். ஆனல், பிரஞ்சுக் கடற்படை ஆங்கில மாலுமி நெல்சனல் எகிப்துக்கருகில் தோற்கடிக்கப்பட்டதால், நெப்போலியன் தரை மார்க்கமாகப் பாலத்தீனம், சிரியா வரை சென்று, அங்குச்சில வெற்றிகள் பெற்ற போதிலும், முடிவில் பயனின்றித் திரும்ப நேர்ந்தது. 1799-ல் நாட்டிற்குத் திரும்பியதும், டைரக்டர் சபையை நீக்கி விட்டு மூவர் கொண்ட 'கான்சூலேட்' அமைத்தான்; அதில் தானே முதல் கான்சலாக விளங்கிச் சகல அதிகாரங்களும் கைவரப்பெற்றுன்.



படம் 48. நெப்போலியன்

அவன் கான்சலாகவும் பின்னர்ச் சக்கரவர்த்தியாகவும் ஆட்சி புரிந்த காலத்தில், பிரான்சு நாடு மீண்டும் உன்னத நிலைபெற்றது. பழமையும் புதுமையும் ஒன்று கூடச் செய்வதே தனது நோக்கம் என்று அவன் கூறியதற்கேற்ப, அவனது சீர்திருத்தங்களில் பழைய ஏற்பாடுகளும் புரட்சிக் கருத்துக்களும் கலந்து மிளிர்ந்தன. அவன் போப்புடன் 1801-ல் சமாதானம் செய்து கொண்டு நாட்டில் மதப்பற்று உண்டாகச் செய்தான். கைத்தொழில்களும் வியாபாரமுமோங்க ஊக்கமளித்தான். நாட்டிற் பெரும்பாலோரான கமக்காரர்கள் அடிமை வாழ்வு நீங்கி, வேளாண்மை புரிந்து நல்வாழ்வு எய்துவதற்கு ஏற்ற நன்மைகள் புரிந்தான். அதனல் அவனது வீழ்ச்சிக் காலபரியந்தம் அவர்கள் அவனிடம்

அளவில்லாத நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டிருந்தனர். சர்வகலாசாலேகள் நன்கு அமைத்ததுடன், பாரிசு நகரில் ஐரோப்பிய கலேச் செல்வங்களேத் திரட்டி வைத்தான். அனேவருக்கும் கல்வி போதிக்கப்படுமாறு செய்ததுடன், பெண் கல்வி பரவவும் வழிதேடினுன். விஞ்ஞான பூர்வமான 'மெட்ரிக்' அளவை முறைகள் கையாளப்படுமாறு செய்தான். எல்லாவற்றையும்விடப் பிரதானமாகக் கருதப்படுவது 'நெப்போலியனது நீதி நெறி' என்றழைக்கப்படும் புதிய சட்டத்தொகுதியே யாகும். இதனுல் பிரான்சு நாடு முழுதும் ஒரே வகை யான அரசியல் ஏற்பாடும் நீதி நிருவாகமும் நிலவ வழியுண்டாயிற்று. நெப்போலியன் தானே கூறியது போல, அவனது ஒப்பற்ற வெற்றிகளால் மட்டுமன்றி, அவனது அரசியற் சீர்திருத்தங்களாலும் அவனேப் பிரான்சு மக்கள் எக்காலமும் போற்றுவரென்பது திண்ணம்.

பிரஞ்சுப் புரட்சியின் ஆரம்ப காலத்தில் பிரித் தானியர், பிரஞ்சு மக்களின் இலட்சியங்கள் குறித்து அனுதாபம் கொண்டிருந்த போதிலும், உலூயிமன்னன் கொல்லப்பட்ட பிறகு அது பகைமை உணர்ச்சியாக மாறியது. ஏனெனில், இங்கிலாந்திலும் அத்தகைய பயங்கரப் புரட்சி ஏற்படுமோ என்று மந்திரி **பிட்** முதலி யவர்கள் அஞ்சினர். அதுமுதல் நெப்போலியனே எதிர்க்கப் பல நாடுகளே ஒன்று சேர்ப்பதும், கடற் படையைப் பலப்படுத்துவதுமே பிரித்தானியரின் பிரதான வேலேயாயிற்று. மீண்டும் மீண்டும் ஆசுத்திரியரும் பிரசி யரும் அடங்கிய கூட்டுறவுகளேப் **பிட்** வகுத்தார். ஆனுல் அவை நெப்போலியனின் பேராற்றலால் சிதறுண்டன. 1799-ல் பிரான்சுமீது படையெடுத்த ஆசுத்திரியா-ருசியப் படைகளே மறு ஆண்டிற்குள் **மாரேங்கோ, கோகென் லிண்டன்** முதலிய இடங்களிற் பிரஞ்சுப் படைகள் வெற்றி கொண்டன. ஆயினும் 1803-ல் நெப்போலிய

னுடன் பிரித்தானியருக்கு தாற்காலீகமாக **ஏமியான்சு** ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனல், மறு ஆண்டிலேயே மால்டா தீவு குறித்து மீண்டும் போர் தோன்றியது. 1805-ல் நெப்போலியனது கடற்படை நெல்சனல் 'திறபால்கரில்' அழிக்கப்பட்டதாயினும், நெப்போலியன் ஆசுத்திரியரை ஆசுடர்லிட்சு என்னுமிடத்தில் முறியடித்தான். இந்த வெற்றியின் செய்தியைக் கேள்வியுற்றதும், தனது "மூன்ருவது கூட்டுறவும்" (Third Coalition of Pitt) அழிந்ததே யென்ற ஏக்கத்தால் மனமுடைந்து **பிட்டும்** 1806-ல் உயிர் துறந்தான். ஆனல் பிரித்தானியர் பிடிவாதமாகப் போரை மேலும் நடத்தினர்கள். பிறகு பிரசியரையும் ரூசியரையும் வென்று 1807-ல் ரூசிய மன்னனுடன் ஒப்பந்தம் செய்துகொண்டான். இது 'டில்சிட் ஒப்பந்த'மெனப்படும். இதன்படி உலகின் மேற்குப் பகுதியில் பிரஞ்சு ஆதிக்கமும் கீழ்த்திசையில் ரூசிய ஆதிக்கமும் நிறுவப்படுவதற்கு அடிகோலப்பட்டது. அப்போது ஆங்கில நாட்டுப் பொருள்கள் ஐரோப்பாவிற்கு வராவண்ணம் தடையும் விதித்தான். "பெர்லின் கட்டளைகள்" எனப்படும் அவனது நிபந்தனைகளைச் சுவீடன், ரூசியா முதலிய நாடுகளும் ஏற்றுக்கொண்டன. பிரித்தானியா இதற்கு மாருக கடல் முற்றுகையிட்டு, ஐரோப்பியர் வியாபாரம் தடைப்படுமாறு செய்தது. மறு ஆண்டில் அவன் சுபெயினில் தலையிட்டு அதன் மன்னனை விலக்கித் தனது சகோதரனை அரசனுக்கிய பொழுது, சுபானிய மக்கள் தேசீய உணர்ச்சியுடன் போராடத் தொடங்கினர். இதைப் பயன்படுத்திக் கொண்டு ஆங்கிலேயர் **வெலிங்டன் பிரபு** தலைமையில் அனுப்பிய சேனை விக்டோரியா, சலமான்கா, டூலூன் முதலிய இடங்களில் சிறிது சிறிதாக வெற்றி பெற்று, பிரான்சுப் படைகளைத் துரத்திக்கொண்டு பிரான்சிலும் புகுந்தது. ஆனல், இந்தத் 'தீபகற்பப் போர்' நிகழும் போதே, ரூசிய மன்னன்மீது பகைமை கொண்டு நெப்




படம் 49. 1810-ல் ஐரோப்பா

போலியன் பெரும் படையுடன் மாசுகோவரைச் சென்ருன். போரில் வெற்றி பெற்ற போதிலும், கடுங்குளிராலும் ரூசியரின் இடைவிடாத எதிர்ப்பாலும் நலிந்து, அவனது படை மெலிவுற்றுத் திரும்பியது. அதனுல் தைரியமடைந்த ஆசுத்திரியரும், பிரசியரும், ரூசியரும் ஒன்றுகூடி 1814-ல் 'தேசங்களின் யுத்தம்' எனப் புகழ் பெற்ற **லீப்சிக்** போரில் அவனை முறியடித்தது, அரச பதவியினின்றும் நீக்கி, எல்பா தீவிற்கு அனுப்பினர். ஆயினும், அதிசயிக்கத்தக்க வகையில் அங்கிருந்து திடீரென மீண்ட நெப்போலியன் முதலில் பிரசியரை முறியடித்துப் பிறகு **வாட்டர்லூ** என்ற இடத்தில் ஆங்கிலேயரை எதிர்த்தான். பிரசியரின் உதவி பெற்ற வெலிங்டன் இங்கு முடிவாக நெப்போலியனைத் தோற்கடித்தமையால், நெப்போலியன் கைதியாகக் கெலினுத்தீவிற்கு அனுப்பப்பட்டு, அங்கு 1821-ல் மரணமடைந்தான். சிறந்த தளபதியாகவும், அரசியல் நிபுணனுகவும் அவனை இன்றும் உலகம் மதிக்கின்றது.



படம் 50. மெட்டர்நிக்

அவனது வீழ்ச்சிக்குப் பிறகு வியன்னுவில் கூடிய சமாதான மகா நாட்டில், ஆசுத்திரியப் பிரதமரான மெட்டர்நிக், பிரித்தானிய மந்திரியான கானிங், ரூசிய மன்னரான அலெக்சாந்தர் என்போர் செல்வாக்குப் பெற்றனர். அவர்கள் பிரான்சின் எல்லைகளைக் குறுக்கிப் படைப் பலத்தைக் குறைத்து, அதனிடம் அடிமைப்பட்ட நாடுகளை விடுதலை செய்வித்தனர். இதனுல் ஏறக்குறையப் போருக்கு முன்பிருந்த நிலையே மீண்டது. ஆயினும்,

இந்த மகாநாடு பிரான்சுப் புரட்சியால் தோன்றி வளர்ந்த 'தேசீய உணர்ச்சி', 'மக்கள் சுதந்திரம்' என்ற இரு கொள்கைகளையும் புறக்கணித்தபடியால், பல நாடுகளிலும் பிற்காலத்தில் கிளர்ச்சிகள் தோன்ற வழிவகுத்து விட்டது. இதன் பிறகு 'பரிசுத்த ஒப்பந்தம்' போன்ற ஏற்பாடுகளால் மெட்டர்நிக்கும் ருசிய மன்னனும் ஐரோப்பாவில் தேசீய உணர்ச்சியையும் சனநாயக இயக்கங்களையும் ஒடுக்க முயன்றனர். அந்த முயற்சிகளுக்குப் பிரிட்டன் இடந்தராததால் அவை பயனற்றுப் போயின. 1820-லும், பிறகு 1830-லும் பல நாடுகளிற் கிளர்ச்சிகள் தோன்றின. 1830-ல் பிரான்சில் உலூயி பிலிப்பே ஆட்சியும், வரம்புடை முடியரசு முறையும் தோன்றின. அப்பொழுதே பெல்சியமும் விடுதலை பெற்றது. மீண்டும் 1848-ல் ஆசுத்திரியா, இத்தாலி முதலிய நாடுகளிலும் புரட்சி தோன்றி மெட்டர்நிக் நாட்டை விட்டோடுமாறு நேர்ந்தது. பிரசியாவிலும் ஆசுத்திரியாவிலும் புரட்சி ஒடுக்கப்பட்ட போதிலும், சேர்மனியும் இத்தாலியும் புத்துயிர் பெற்று எழுந்தமை தேசீய உணர்ச்சியின் வெற்றிக்குச் சான்ருக இலங்குகிறது.

### வினுக்கள்

1. பிரான்சுப் புரட்சி தோன்றக் காரணங்கள் யாவை?
2. புரட்சிக்கு அனுகூலமான நிலை உண்டாக்கிய அறிஞர்கள் யாவர்?
3. பாசுடில் வீழ்ச்சி எவ்வாறு முக்கியமான சம்பவமாகும்?
4. பயங்கர ஆட்சி என்பது யாது? அப்போது தலைவர்களாயிருந்தவர்கள் யாவர்?
5. நெப்போலியன் முதல் 'கான்சலாக' விளங்குவதற்கு முன் பெற்ற வெற்றிகள் யாவை?
6. நெப்போலியனது அரசியல் ஏற்பாடுகளின் சிறப்பை விளக்குக.
7. நெப்போலியன் சக்கரவர்த்தியான பிறகு பெற்ற வெற்றிகளைக் கூறுக.

8. நெப்போலியன் எங்கு, எக்காரணங்களால், முடிவாகத் தோல்வியுற்ருன் ?

9. அவன் வீழ்ச்சிக்குப் பிறகு நேர்ந்த அரசியல் மாறுதல்கள் யாவை ?

10. பிரான்சுப் புரட்சியின் பலாபலன்கள் யாவை ?

### பயிற்சி

1789, 1810, 1820—இந்த ஆண்டுகளில் ஐரோப்பா இருந்த நிலையைப் படங்களில் குறி.

## 10. தொழிற் புரட்சியும் சமூக மாறுதல்களும்

இன்றைய சமுதாயம் இயந்திர நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிற தென்பதை அறிவீர்கள். பொருள்கள் யாவும் இயந்திரங்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன ; அவற்றை ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்கு எடுத்துச் செல்வதற்கும், மின்சாரத்தாலும் நீராவியாலும் பெட்ரோலியம் போன்ற எண்ணெய்களின் புகையாலும் இயங்குகிற இயந்திர வாகனங்களே பயன்படுகின்றன. இவ்வாறு இயந்திரங்களின் உதவியால் மனித நாகரிகமும், சமுதாய வாழ்க்கையும் எவ்வாறு திருத்தியமைக்கப்பட்டன என்பதை ஈண்டு ஆராய்வோம்.

மனிதர் தமது கைகளையும், உடல் உழைப்பையும் பயன்படுத்திப் பொருள் உற்பத்தி புரிதலையே ' கைத்தொழில் ' (handicrafts) என்றழைக்கிருேம். உலக நாடுகள் எல்லாவற்றிலும் இந்த முறையிலேயே நெடுங் காலமாக உற்பத்தி நிகழ்ந்து வந்தது. ஆனுல், பதினெட்டாம் நூற்ருண்டில், நெசவுத் தொழிலில் பிரித்தானியர் முதன் முதலாகப் புதிய இயந்திரங்களை உபயோகித்து உற்பத்தி செய்யத் தொடங்கியதிலிருந்து,

பண்டைய 'கைத் தொழில்கள்' சிறிது சிறிதாக மறையவும் புதிய ஆலைத் தொழில் முறைகளால் உற்பத்தி பெருகவும் நேர்ந்துவிட்டது. மேலும், இயந்திரங்களை இயக்கும் சக்திகளும் (Motive power) மாறுபடலாயின. இந்த இயந்திரங்களை உபயோகிக்க நேர்ந்தமையால், சமுதாயத்தில் முதலாளிகள், ஆலைத் தொழிலாளர் போன்ற புதிய வகுப்புகள் தோன்ற நேர்ந்தது. இவ்வாறு இங்கிலாந்திலும் பிற நாடுகளிலும் தோன்றிய பொருளாதார-சமுதாய மாறுதல்களனைத்தையும் ஒன்று சேர்த்துத் 'தொழிற் புரட்சி' (Industrial Revolution) என்றே வழங்குகிறோம். "தொழிற் புரட்சி" என்ற சொற்றொடரை முதன் முதலாகப் பயன்படுத்திய சரித்திராசிரியர் **டாயின்பீ** அதனை விளக்கும் வகையில், பின்வருமாறு கூறினர்: இயந்திரங்களைப் பயன்படுத்தியதால் தோன்றிய மாறுதல்கள் மெதுவாக ஒன்றையடுத்து மற்றொன்றாக உருவாயின என்பது உண்மையே. ஆயினும், சில ஆண்டுகளில் சமுதாயம் அடியோடு மாறிவிட்டது என்பதையும் நினைவிற் கொள்வது நலம். அவ்வாறு சமுதாயமே மாறிவிட்டதென்பதை உணர்த்தவே, அதனைப் 'புரட்சி' என்றழைக்கிறோம்.

இங்கிலாந்தில் 1733-ஆம் ஆண்டில் **சோர்ச் கே** என்பவர் முதன் முதலாகப் 'பறக்கும் சட்டில்' (flying shuttle) என்ற நூல் நூற்பு இயந்திரத்தைப் புனைந்தார். இதனால் நெசவு மட்டும் துரிதமாக நடைபெற்றது. ஆனால் நூற்பது மெதுவாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கார்ட்ரைட், ஆர்க்ரைட், கார்கிரீவ்சு, கிராம்ப்டன் முதலியவர்கள் புதிய இயந்திரங்களைப் புனைந்து நூல் நூற்பதும், புடவை நெய்வதும் விரைவில் நடைபெறுமாறு செய்தனர். பின்னர், இந்த இயந்திரங்கள் காற்றின் விசையாலும் நீரின் சக்தியாலும் இயங்கிவரத் தொடங்கின. **யேம்சு வாட்** என்பவர் நீராவியால் சக்கரங்களைச் சுழலச் செய்து இயந்திரங்களை இயக்கலா

மென்பதை எடுத்துக் கூறியதும், **நியூகோமன்** என்ற தொழில் வல்லுநர் நீராவி இயந்திரத்தின் உதவியால் நீரிறைக்கும் முறையைக் கண்டறிந்தார். இந்த இயந்திரம் தோன்றியதிலிருந்து நிலக்கரி எடுத்தல் சுலபமாகி விட்டது. பிறகு **சோர்ச் சிடீபன்சன்** தமது 'ராக்கெட்' வண்டியை நீராவியி னுதவியால் ஓடச் செய்ததும், புகை இரத வீதிகளும், புகை வண்டிகளும் ஏற்படுவது எளிதாயிற்று. பின்னர், அமெரிக்க மாலுமியான **புல்டன்** என்பார் நீராவியை உபயோகித்துக் கப்பல்களை ஓட்டலா மென்பதை நிரூபித்ததும், கப்பல் கட்டும் தொழிலில் பெரும் மாறுதல்களும் அபிவிருத்தியும் தோன்றிவிட்டன.

இதற்கிடையே, இரும்பை உருக்காக மாற்றி அழுத்தமும் நயமும் படைத்த பொருள்களைச் செய்யும் முறையைக் **கென்ரி பெசமர்** முதலியவர்கள் கண்டு பிடித்தனர். பெசமர் முறையின் மூலம் உலையில் அதிக வெப்பம் காட்டி, இரும்பை எளிதில் உருக்கி, எஃகாக மாற்றலாமென்று கூறப்பட்டது. இதனுல் உலகிலேயே சிறந்த உருக்குச் சாமான்களைத் தயாரிப்பதற்கு ஏற்ற தொழிற்சாலைகள், பிரிட்டனில் பல பகுதிகளிலும் நிறுவப் பட்டன. பர்மிங்காம், கிளாசுகோ, நியூகாசில் முதலிய இடங்கள் எஃகு உற்பத்தியால் பெரிதும் புகழடைந்தன. நிலக்கரியும் இரும்பும் ஏராளமாகக் கிடைக்கப் பெற்ற இங்கிலாந்தின் வட பகுதி, '**கரும் பிரதேசம்**' (Black Country) என்னும் பெயரால் வழங்கப்படலாயிற்று.

மூலப் பொருள்களை விரைவாகத் தொழிற்சாலைகளில் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கும், அங்கிருந்து துறை முகங்களுக்கு உற்பத்திப் பொருள்களை எடுத்துச் செல்வ தற்கும் சிறந்த போக்குவரவு வசதிகள் வேண்டுமல்லவா? பதினெட்டாம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் இங்கி லாந்து நாட்டில் கற்பாறைகள் நன்கு அமைக்கப்பட வில்லை. அவற்றில் பள்ளம் மேடுகள் நிறைந்திருந்தன. அவற்றைச் சீர்திருத்த எவ்வித ஏற்பாடும் செய்யப்பட

வில்லை. இக்காரணத்தால், மெகாடம், டெல்போர்டு போன்றவர்களின் முயற்சிகளால் நிகழ்ந்த கற்பாதைகளின் அபிவிருத்தியும், பிரிட்சுவாடர் பிரபு, பிரின்லி போன்றவர்களின் திறமையின் பயனாக ஏற்பட்ட கால்வாய் மார்க்கங்களும் போற்றத்தக்கவை. இவர்களது முயற்சியால் அமைக்கப் பெற்ற ''லிவர்பூல்—மாஞ்செசுடர் கால்வாய்'' பிரசித்தமானது. அதுவே மாஞ்செசுடரின் உயர்விற்கு அடிகோலியது. புகையிரதப் பாதைகளும் இவைகளும் நாட்டின் தொழிலபிவிருத்திக்குப் பெரிதும் உபயோகப்பட்டன. பிற்காலத்திற் றோன்றிய தந்தி' எளிய தபால் முறை, டெலிபோன், கம்பியில்லாத் தந்தி முதலியனவும் இவ்வாறே தொழில்களையும் வியாபாரத்தையும் ஓங்கச் செய்தன. தந்தியைச் சாமுவேல் மோர்சு என்பவரும், தபால் முறையை கில் என்பவரும் கண்டு பிடித்தனர். டெலிபோன் முறையை ஆல்வா எடிசனும், பிற்காலத்தில் கம்பி இல்லாத் தந்தியை மார்கோனியும் கண்டறிந்தனர்.

நீராவியைப் பயன்படுத்தி இயந்திரங்களை இயக்கச் செய்த வரலாற்றைக் கூறினேமல்லவா? அத்தகைய புதிய சக்தி ஒன்று தோன்றியதின் பயனாக, காற்றையும் நீரோட்டத்தையும் நம்பித் தொழிற்சாலைகளை அமைத்தலென்னும் பழக்கம் மறைந்தது. நீராவியை உண்டாக்குவதற்கு அதிகச் செலவில்லையாதலாலும், அதனைத் தேவையான இடத்தில் வேண்டும்பொழுதில் உற்பத்தி செய்யக் கூடுமாகையாலும், அதுவே முக்கியமான இயக்கும் சக்தியாக நீண்ட காலம் விளங்கியது. சென்ற நூற்றுண்டின் இறுதியில், பெட்ரோலியம் போன்ற எண்ணெய்களை எரிப்பதாலுண்டாகும் வாயுவின் உதவியாலும் மின்சக்தியாலும் ஆலைகளைச் செவ்வனே இயக்கலாம் என்பதை அறிந்தது முதல், இவற்றை நீராவியினும் அதிகமாக உபயோகிக்கலாயினர்.

இத்தகைய 'தொழிற் புரட்சி' காரணமாக விளைந்த

பலன்களைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன்னல், இந்த மாறுதல்கள் உண்டாவதற்குக் காரணம் யாது என்பதையும் அவதானித்தல் நலம். பிரித்தானியாவிலும் பிற நாடுகளிலும் பிரித்தானியர் உற்பத்தி செய்த பொருள்களுக்கு மதிப்பு அதிகரித்ததையே பிரதான காரணமாகக் கூறலாம். அப்போது இந்தியாவில் மொகலாய ஆதிபத்தியம் அழிந்தமையால் எண்ணற்ற சிற்றரசுகள் தோன்றிச் சுயேச்சை பெற்று விளங்கின. இதனல், பிரித்தானியர் சிறிதுசிறிதாக இந்திய நாடெங்கும் தமது வியாபாரத்தைப் பெருக்கவும், பின்னர் ஆதிபத்தியத்தை நிலைநாட்டவும் சந்தர்ப்ப மேற்பட்டது. அன்றியும், அவர்கள் தமது நெசவுத் தொழிலைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் பல சட்டதிட்டங்களை வகுத்துக் கொண்டனர். இதனல், உள்நாட்டிலும் அவர்கள் உற்பத்தி செய்த பருத்தி, கம்பளிப் புடவைகளுக்கு மதிப்பு தோன்றியது. இவ்வாறு உலகின் பல பகுதிகளிலும் பிரித்தானியப் பொருள்களின் தேவை அதிகரித்தமையால், வெகு விரைவில் பெருவாரியாகப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கேற்ற முறைகளைக் கையாள நேர்ந்தது. புதிய இயந்திரங்கள் புனைந்தமைக்கு இதுவே காரணமாயிற்று.

தொழிற் புரட்சியால் நேர்ந்த மாறுதல்கள் மிகவும் முக்கியமானவை. ஏனெனில், சமுதாய வாழ்க்கையை அவை அடியோடு மாற்றியமைத்துவிட்டன. பெரும் அளவில் உற்பத்தி பெருகியதை அவற்றில் முதன்மையாகக் குறிப்பிடலாம். ஏனெனில், இதனல் பொருள்களை உடனுக்குடன் நுகருவதற்காக அன்றி, அவற்றை ஏராளமாகக் குவித்து வைத்துக் கொண்டு ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை (Exchange) செய்துகொள்ளும் நிலை ஏற்பட்டது. இதனையே 'பரிவர்த்தனைப் பொருளாதாரம்' (Exchange Economy) என்பர். இக் காரணத்தால், மிகக் குறைந்த அளவில் நடைபெற்று

வந்த சர்வதேச வியாபாரமானது, தொழிற்புரட்சிக்குப் பிறகு அளவு கடந்து பெருகிற்று.

ஒவ்வொரு நாட்டிலும், சமுதாயத்தில் இரு பெரும் பிரிவுகள் தோன்றின. மூலதனம் படைத்தவர்கள் இயந்திர சாதனங்களை அமைத்து ஆலைகளை நிறுவியமையால், பொருள்களின் விற்பனையால் கிடைத்த இலாபத்திற் பெரும்பாகம் அவர்களுக்கே உரியதாயிற்று. அவர்கள் ' முதலாளிகள் ' எனப்பட்டனர். தமது ஆலைகளில் வேலை செய்வோருக்கு வேலை வழங்கவும் மறுக்கவும் அவர்கள் உரிமை படைத்திருந்தனர். ஆலைகளில் தமது உடல் உழைப்பை நல்கி அதற்கு ஈடாக ஊதியம் பெற்றவர்கள் ' தொழிலாளர்கள் ' என்றழைக்கப்பட்டனர். ஆரம்ப காலத்தில், இங்கிலாந்து முதலிய நாடுகளில் இவர்களது நிலை மிகவும் துன்பகரமாக இருந்தது. ஆலைகளில் நெடுநேரம் உழைத்தும், குறைவான கூலி பெற்றும், நோய்களுக் கிலக்காகியும் பெரிதும் இடர்ப்பட்டனர். இதனால், முதலாளிகளுக்கும் தொழிலாளருக்குமிடையே பகைமை உணர்ச்சி தோன்றுவதற்கும் இடமுண்டாயிற்று.

மேலும், தொழிற்புரட்சியின் விளைவாக ஒவ்வொரு நாட்டிலுஞ் சனச்செறிவில் பல மாறுதல்கள் நேர்ந்தன. தொழிற்சாலைகளும், சுரங்கங்களும் நிறைந்த பிரதேசங்களை நாடி மக்கள் செல்லத் தொடங்கியதால், அத்தகைய பகுதிகளில் மக்கள் செறிவும் இதர பாகங்களில் சன நெருக்கக் குறைவும் தோன்றியது. இதனால், தொழிற்சாலைகளைச் சூழ்ந்து புதிய நகரங்கள் தோன்றலாயின. உதாரணமாக, இங்கிலாந்தில் வளம் நிறைந்த தென்கிழக்குப் பகுதியிலேயே பல நூற்றுண்டுகளாகச் சனச்செறிவு அதிகமாய் இருந்து வந்தது. ஆனால், இப் புரட்சிக்குப் பின்னர் வடமேற்குப் பகுதிகளில் மக்கள்கூட்டம் அதிகமாயிற்று. அங்கே தோன்றிய **பர்மிங்காம், கிளாசுகோ** போன்ற புதிய தொழிற்சாலை நகரங்கள்

பெரிதும் வளர்ச்சிபெற்றன. இத்தகைய சனத்தொகை மாற்றத்தால் மற்ருேர் விளேவும் ஏற்பட்டது. புதிதாகத் தோன்றிய நகரங்களும், ஆலே முதலாளிகளும், நகரங் களில் வாழ்கின்ற நடுத்தர வகுப்பினரும், தொழிலா ளரும், பாராளு மன்றத்திற்குப் பிரதிநிதிகளே அனுப்ப வும் வாக்குரிமை பெறவும் பெருங் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். இதனுல் தமது உரிமைகளுக்கும் அதி காரத்திற்கும் பங்கம் வருமெனக் கருதிய நிலச்சுவான் தாரர்களும் பிரபுக்களும் பலவாறு தடுத்தபோதிலும், 1832-ஆம் ஆண்டுக்குப் பிறகு பாராளு மன்றம் நிறை வேற்றிய பல சீர்திருத்தச் சட்டங்களால் மற்ற வகுப் பினரும் வாக்குரிமை பெற்றனர். இவ்வாறு அரசியல் மாறுதல்களுக்கும் தொழிற் புரட்சி காரணமாக அமைந்தது.

தொழிற் புரட்சியினுல் சமுதாய வாழ்க்கை பற்றிய கொள்கைகளிலும் பெரும் மாறுதல்கள் தோன்றின. ஆரம்ப காலத்தில், பிரித்தானிய நாட்டிலும் மற்ற நாடு களிலும் தொழிலாளரின் துன்பங்கள் பெருகிவிட்டன. ஆலேகளின் சொந்தக்காரர்கள் ஈவிரக்கமின்றி ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனேவரையும் ஒவ்வொரு நாளும் பல மணி நேரம் வேலே செய்யுமாறு நிர்ப்பந்தம் செய்து குறைவான கூலி அளித்தார்கள் ; பெண்கள் இரவிலும் வேலே செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த னர் ; தொழிற்சாலேகளில் இயந்திரங்களினுல் உண்டாகும் விபத்துக்களேத் தடுக்க எவ்வித ஏற்பாடுமில்லே, அங்குப் பெரும்பாலும் ஈரக்கசிவாகவும், காற்ருேட்ட மில்லாமலும் இருந்தமையால் தொழிலாளர் நோய்நொடிகளால் நலிவுற நேர்ந்தது. இன்னேரன்ன துன்பங்களேக் கண்ணுரக் கண்டும், அக்காலத்திய சனசமுதாயமும் அரசாங்கமும் முதலாளிகளின் சுதந்திரத்தில் தலேயிடலாகாதென்று ஒதுங்கியிருந்துவிட்டன. இவ்வாறு தொழிலிலும் வியா பாரத்திலும் ஒரு கட்சியையும் சாராமல் அரசாங்கம்

நடுநிலை வகித்தல் வேண்டுமென்பது அக்காலத்தில் **ஆதம் சுமித்** போதித்த கொள்கையாகும். இதனால் தொழிலாளர் துன்பங்கள் பெருகவே, பல அறிஞர்கள் இந்தக் கொள்கையை எதிர்க்கலாயினர். இவர்கள் தொழிலாளர் சார்பாக அரசாங்கம் தலையிட்டு அவர்களுக்குத் தேவையான நிலையை உண்டாக்க வேண்டுமென்னும் கொள்கை உடையவர்கள். இவர்கள் அனைவரும் (**சோஷலிசுடுகள்**) 'சமதர்மவாதிகள்' என்று பொதுவாக அழைக்கப்பட்டனராயினும், இவர்களிடையே பற்பல கருத்து வேற்றுமைகள் உண்டு. இவர்களில் **ராபர்ட் ஓவன், சென்ற் சைமன், புரூதோன், பூரியர், கார்ல் மார்க்சு** என்பவர்களைச் சிறப்பாகக் கூறலாம். இவர்களது சித்தாந்தங்களில் மார்க்சின் கொள்கையாகிய 'பொதுவுடைமைத் தத்துவம்' (Communism) அதி தீவிரமானது; முதலாளிகளின் ஆதிபத்தியத்தைத் தகர்த்துத் தொழிலாளர் ஆட்சிக்கு அடிகோலுவதே அதன் இலட்சியமாகும்.

இத்தகைய தீவிர சித்தாந்தங்கள் மட்டுமன்றித் தொழிலாளர்களின் நிலை உயருவதற்காகப் பல சீர்திருத்தங்களும் செய்யப்பட்டன. உதாரணமாக இங்கிலாந்தில் நெப்போலியப் போர்க்காலத்தில் உள்நாட்டில் கிளர்ச்சிகள் தோன்றக் கூடுமோ என்ற அச்சத்தால் தொழிலாளர் சங்கங்கள் ஏற்படுத்திக்கொண்டு ஒன்றுகூடுவது கூடாதென்று தடுக்கப்பட்டிருந்தது. 1825-ஆம் ஆண்டில் அந்தத் தடைகள் நீக்கப்பட்டு, அதுமுதல் தொழிலாளர் சங்கங்கள் அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். பின்னர் **டிசுரேலியின்** முயற்சியால் அமைதியான முறையில் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையும் அவர்களுக்கு உண்டு' என்பது உறுதியாக்கப்பட்டது. மேலும், தொழிலாளர் தலைவர்கள் அரசியலிலும் பிரவேசிக்கத் தொடங்கியதால், அந்த நூற்றாண்டின் இறுதியில் **கீல்கார்டி** போன்ற தலைவர்களின் கீழ்த் 'தொழிற் கட்சி'

(Labour Party) தாபிக்கப்பட்டு, அது பாராளுமன்றத்திலும் இடம் பெற்றது. அன்றியும், 1833-லிருந்து தொடர்ச்சியாகத் தொழிலாளர் நன்மைக்குகந்த பல சட்டங்கள் பாராளுமன்றத்தினல் இயற்றப்பட்டன. தொழிற்சாலையில் காணப்படவேண்டிய சுகாதார ஏற்பாடுகள், விபத்துக்களைத் தடுக்கும் முறை, ஆலையில் குழந்தைகளை வேலை செய்யாது தடுத்தல், மற்றவர்கள் வேலை செய்யும் கால நிர்ணயம், துன்புற்ற தொழிலாளருக்கு நட்டஈடு, விடுமுறை, சிறுவருக்குக் கல்வி, முதலிய பல பிரச்னைகள் இவற்றல் தீர்மானிக்கப்பட்டன. அதனல், தொழிலாளரின் நிலை உயர்ந்து, சமுதாய வாழ்விலும் அவர்கள் தமக்குரிய பெருமையை அடைந்தனர்.

ஆலைத் தொழில்கள் விருத்தியடைந்தமையால், ஆலைச் சொந்தக்காரர்களுக்கு ஏராளமான வருமானம் கிடைத்தது. அவர்கள் மேன்மேலும் பேராசையுற்று அதிகப் பொருள் ஈட்டுவதில் முனைந்தனர். அதனல் 'உலோகாயத மனப்பான்மை' (Materialism) வளர்ச்சியுற்று, கடவுள் பக்தியும், மதப்பற்றும், நல்லொழுக்கமும், தர்ம சிந்தனையும், சிறிது சிறிதாகக் குன்றின. அதற்கேற்றவாறு, தொழிலாளர் நிலையும் மோசமாக இருந்தது. அவர்களிற் பெரும்பாலோர் குடிப்பதும் ஒருவர்க் கொருவர் சண்டையிட்டுக் கொள்வதும், கொள்ளை கொலைகளில் ஈடுபடுவதுமாகக் காலங் கழித்தனர். ஆகையால் இரு சாராருக்கும் மதப்பற்றை ஊட்டி, நல்லொழுக்கங் கற்பித்து, சமுதாய வாழ்வைச் சீர்திருத்துவது அவசியமாயிற்று. அத்தகைய பெரும் சேவையைப் புரிந்தவர்களில் **யோன் வெசுலி, எலிசபெத் பிரை, யோன்கொவர்டு, வில்பர்போர்சு, ஆசிலி, பிளாரன்ஸ் நைட்டிங்கேல்** போன்றவர்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

யோன்வெசுலி குருமாரின் ஆடம்பரங்களை வெறுத்து,

எளிய வாழ்க்கையைப் பின்பற்றும் மதப் பிரசாரகர்களைத் தயாரித்தார். இவர்கள் கிராமங்கள்தோறும் சென்று விவிலிய நூலை வாசித்துக் காட்டி, மக்கள் மனத்திற் கடவுள் பக்தியும் மதாபிமானமும் தோன்றச் செய்தனர். இவர்கள் மிகவும் கட்டுப்பாட்டுடன் வாழ்க்கை நடத்தியமையால், 'ஒழுங்கு படைத்தவர்கள்' (Methodists) என அழைக்கப்பட்டனர். இந்த இயக்கத்தின் பயனாக மக்களிடம் அன்பும் அனுதாபமும் வளர்ந்தமையால், மற்றும் பல சீர்திருத்த இயக்கங்களும் விரைவில் தோன்றின. வில்பர் போர்சு தம் வாழ்நாள் முழுதும் போராடி, இறுதியில் ஆங்கில சாம்ராச்சியத்தில் அடிமை முறை நிலவாமல் ஒழிப்பதில் வெற்றி கண்டார். 1833-ல் சாம்ராச்சியமெங்கும் அடிமை ஒழிப்புச் சட்டத்தை பிரித்தானிய பாராளுமன்றம் அமுலாக்கியது. எலிசபெத் பிரையும், யோன் கோவர்டும் சிறைக்கூடங்களிற் கைதிகள் மிருகங்களைப்போல நடத்தப்படுவதைத் தடுத்துச் 'சிறைக்கூடங்கள் மக்கள் சீர்திருந்துவதற்காக ஏற்பட்டவை' என்னுங் கருத்து வளரும் முறையில் தொண்டு புரிந்தனர். மார்டின் என்பவர் மற்றப் பிராணிகளுக்கு மனிதன் கொடுமை இழைப்பதை நிறுத்தும் வகையில், 'மிருக கட்ட விலக்குச் சங்கம்' (S. P. C. A.) நிறுவினர். குழந்தைகளைத் தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களிலும், புகைபோக்கிகளிலும் வேலை செய்யுமாறு துன்புறுத்தும் கொடுமையை நீக்கவும், அவர்களுக்கு இலவசமாகக் கல்வி போதிக்கவும் ஏற்பாடு செய்தமையால் ஆசிலி என்ற சாப்சுபரி பிரபு 'குழந்தைகளின் இரட்சகன்' எனப் புகழ் பெற்ருர். 1855-ல் கிரிமியப் போர்க்களத்தில் காயமடைந்து தவிப்பவர்களுக்கு உதவிபுரிய பிளாரன்சு நைட்டிங்கேல் முன்வந்ததிலிருந்து, அத்தகைய தொண்டு புரியப் பெண்பாலார் பலரும் முற்பட்டனர். இதுவே "செஞ்சிலுவை இயக்கம்" தோன்றக் காரணமாயிற்று. மேலும், விஞ்ஞானிகளும், சிறந்த மருத்துவர்களும்கூட

நோய்களைத் தடுக்கவும், நோய்வாய்ப்பட்டோரின் துன் பங்களைக் குறைக்கவும் புதிய மருத்துவ முறைகளைக் கண்டறிந்தனர். **எட்வர்ட் சென்னர்** அம்மை நோயை தடுக்க அம்மை குத்தும் முறையையும், **பாசுடர்** நோய் களுக்கு ஆதாரமான நுண்கிருமிகளை அகற்றும் வழியை யும், **லிசுடர்** சத்திர சிகிச்சையிற் சிறந்த முறைகளையும், **சிம்ப்சன்** 'குளோரபாரம்' என்ற மயக்க மருந்தையும், **இராண்ட்சன்** 'எக்சுரே' என்னும் நுண்கதிர்களையும் கண்டுபிடித்தனர். இவ்வாறு புதிய சிகிச்சை முறைகள் தோன்றியமையால், மனிதரின் துன்பங்கள் குறைந்தன. மேலும் இத்தகைய விஞ்ஞான வளர்ச்சியால் நாகரிக அபிவிருத்தி தோன்றிச் சமுதாய வாழ்க்கையே அடியோடு மாறுதலடைந்துவிட்டது.

தொழில்களில் உற்பத்தி முறை மாறியதைப்போல, வேளாண்மையிலும் புதிய முறைகள் தோன்றலாயின. இங்கிலாந்தில், சிறிய நிலங்களை ஒன்று சேர்த்துப் பெரிய புலங்களாக அமைத்து, அவற்றில் இயந்திர சாதனங் களின் உதவியால் உழுவது, விதைவிதைப்பது, களை பிடுங்குவது போன்ற காரியங்கள் செய்யப்பட்டன. செயற்கை எருவகைகளை உபயோகிப்பதும், கால்நடை களைப் பெருக்குவதும் புதிய நிலச்சுவான்தாரர்களால் பெரிதும் அனுசரிக்கப்பட்டன. இத்தகைய புதிய முறை களால் விளைச்சல் அதிகரித்ததாயினும், தாமே உழுது சீவிக்கும் சிறு குடியானவர்களுக்கு அத்தகைய சமூகங் களில் இடம் இல்லாது போயிற்று. தொழிற் புரட்சியால் குடிசைத் தொழில்களும் சுயேச்சையான தொழிலாளரும் மறைய நேர்ந்ததுபோல, விவசாயத்தில் நேர்ந்த புரட்சி யால் பெரிய நிலப்பிரபுக்கள் இலாபமடையவும் உழைப்பு மிக்க உழவர்கள் மறையவும் நேர்ந்தது.

## வினுக்கள்

1. தொழிற்புரட்சி என்ருல் என்ன?

2. இங்கிலாந்தில் புதிய இயந்திரங்களைப் புனைந்தவர்கள் சிலரது பெயர்களைக் குறிப்பிடுக.

3. நீராவியை இயக்கும் சக்தியாகப் பயன்படுத்தியவர்கள் யாவர்?

4. போக்குவரவு வசதிகளை விருத்தி செய்தவர்கள் யாவர்?

5. தொழிற் புரட்சி எக்காரணத்தால் தோன்றியது?

6. தொழிற் புரட்சியால் நேர்ந்த பொருளாதார—அரசியல் மாறுதல்களைக் குறித்துச் சுருக்கமாக ஒரு கட்டுரை வரைக.

7. ஆதம்சுமித் போதித்த கொள்கை யாது? அதற்கு மாருன கருத்துக்களைக் கூறிய அறிஞர்கள் யாவர்?

8. 'உலோகாயத மனப்பான்மை' என்ருல் என்ன? அதனுல் விளைந்த பெருந் தீமை யாது?

9. தொழிற் புரட்சியை ஒட்டி விவசாயத்தில் நிகழ்ந்த மாறுதல்கள் யாவை?

## பயிற்சிகள்

1. பத்தொன்பதாம் நூற்ருண்டில் சமுதாய நன்மைக்காக உழைத்த பெரியோர்களின் பெயரை வரிசையாகக் குறிப்பிட்டு, அவர்கள் கண்டறிந்த புதியமுறை அல்லது கருவியின் பெயரையும் எழுதி, ஓர் அட்டவணை தயார் செய்.

2. ஐரோப்பா தேசப்படத்தில் இரும்பு—நிலக்கரி சுரங்கங்கள், ஆலைகள் முதலியன காணப்படும் இடங்களைக் குறிக்க.

## 11. இத்தாலி ஒற்றுமையுறுதல்

புராதன காலத்தில் உரோம சாம்ராச்சியத்தின் பெருமையால் புகழொளி வீசிய இத்தாலி நாடு, மத்திய காலத்திலிருந்து ஒற்றுமை குலைந்து, பல சிற்றரசர் களின் ஆட்சியிலும் அன்னியர் ஆதிக்கத்திலும் அடங்கிக் கிடந்தது. பிரான்சு நாட்டின் ஒப்பற்ற வீரனாகிய நெப்போலியன் இந்த நாட்டின்மீது முதன் முறையாகப் படையெடுத்து ஆசுத்திரியரைத் துரத்திவிட்டு ஒரு குடியரசை நிறுவியபொழுது, இத்தாலிய மக்கள் தமது நாடு 'ஒற்றுமையும் சுதந்திரமும் பெற்றுப் பெருமை யுடன் திகழும் காலமும் வரு'மென்று ஆவலுடன் எதிர் பார்க்கத் தொடங்கினர். ஆனால், நெப்போலியனது வீழ்ச்சிக்குப் பின்னர்க் கூடிய 'வியன்னா காங்கிரசு' வட இத்தாலியை மீண்டும் ஆசுத்திரியருக்கு அளித்துத் தென்பகுதியில் பல்வேறு சிற்றரசுகளை நிலைக்கச் செய் தது. ஆசுத்திரிய நாட்டுத் தலைவனாகிய மெட்டர்நிக் என் பவனைக் கண்டு அஞ்சிய மக்கள் சுதந்திர இயக்கங்களில் வெளிப்படையாக ஈடுபடவில்லை; ஆயினும், தேசீய உணர்ச்சி மிகுந்த இத்தாலிய வாலிபர்கள் 'கார்பனரி' போன்ற சுதந்திர இயக்கங்களில் இரகசியமாகச் சேர்ந்து நாட்டின் விடுதலைக்காகப் பல முயற்சிகள் செய்துவந்தனர்.

அப்போது இத்தாலிய சுதந்திர இயக்கத்திற்கு உறுதுணையாக மூன்று பெருந்தலைவர்கள் தோன்றினர். அவர்கள் மூவரும் குணாதிசயங்களிலும் கையாண்ட முறை களிலும் ஒருவர்க்கொருவர் மிகவும் மாறுபட்டிருந்த போதி லும், நாட்டில் சுதந்திர அரசியலை நிறுவவேண்டுமென்ற பொதுநோக்கம் உடையவர்களாக இருந்தனர். அவர் களில், மாசினியை 'இத்தாலியத் தேசீய இயக்கத்தின் தீர்க்கதரிசி' என்றே சரித்திராசிரியர்கள் கூறுவர். இளம்




படம் 51. 1859-ல் இத்தாலி

வயதிற் சட்டக்கல்வி கற்றுத் தேர்ச்சியுற்ற மாசினியின் செம்மையான உள்ளத்தில், இத்தாலியப் பொதுமக்கள் படுந் துன்பங்களின் எதிரொலியே தேசீய உணர்ச்சியாக உருவெடுத்தது. அன்னியரை வெளியேற்றிக் குடியரசு அமைக்குமாறும் உலகிற்கே இத்தாலியை வழிகாட்டியாக இருக்கும்படி செய்யுமாறும் இளைஞர்களுக்கு அவர் பல அழைப்புகள் விடுத்தார். அவரால் 1831-ல் நிறுவப் பெற்ற 'யௌவன இதாலி' என்ற வாலிபர் இயக்கத்தில் பலரும் சேர்ந்து அவரது அரசியற் றத்துவங்களைப் பின் பற்றத் தொடங்கினர். ஆயினும், மாசினி உணர்ச்சி மிகுந்த பிரசாரகரேயன்றி, செயற் றிறமை படைத்தவ ரல்லர். இக்காரணத்தினுல், இத்தாலியில் மக்களின் புரட் சியை உண்டாக்குவதற்கு அவர் வகுத்த திட்டங்கள் அதிகம் பயன்படவில்லை; மெட்டர்நிக் முதலியவர்கள் இத்தாலியத் தேசீய இயக்கங்களை அடக்கு முறைச் சட்டங் களால், எளிதில் அடக்கிவிட்டனர். மாசினிக்கு ஒப்பாக இருந்த மற்றெரு தலைவர் **கவூர்** ஆகும். இவர் மாசினி யைப் போல் உணர்ச்சி வசப்பட்டு நடப்பவரல்ல; கூர்மையான அறிவும் இராசதந்திரமும் படைத்தவர். மேலும், இவர் குடியரசு ஆட்சியை விரும்பாமல், இங்கி லாந்தில் காணப்படுவது போன்ற 'வரம்பிலடங்கிய முடியாட்சியையே' இத்தாலியில் நிறுவ நினைத்தார். இவர் இளம் வயதிலிருந்து **பைட்மாண்ட்** அரசரிடம் மந்திரியாக விளங்கி வந்தாராகையால், தமது அரசன் தலைமையின் கீழ் இத்தகைய முடியாட்சியை இத்தாலி முழுதும் ஏற்றுக்கொள்ளுமாறு செய்தல்வேண்டும் என்ற ஒரே நோக்கமுடையவராக இருந்தார். மாசினியையும் கவூரையும் போல இத்தாலியச் சுதந்திரத்திற்குப் பாடு பட்ட மற்றப் பெரியோர்களிற் **கரிபால்டியைப்** பிரதான மாகக் கூறலாம். இவன் உணர்ச்சி மிகுந்தவனுயினும், எதையும் அஞ்சாத நெஞ்சத்துடன் செய்து முடிக்கவல்ல பேராற்றல் வாய்ந்தவன். கவூரின் இராசதந்திரம்போல

இவனது துணிகரமான வீரச் செயல்களும் இத்தாலியின் சுதந்திரத்தை நிலைநாட்ட உதவின.

1848-ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் எங்கும் விடுதலை இயக்கங்களும், தேசீய உணர்ச்சியுந் தலையெடுத்தன. பிரான்சு நாட்டில் உலூயி பிலிப்பின் ஆட்சி ஒழிந்து, புதியதொரு குடியரசு நிறுவப்பெற்றது; **உலூயி நெப்போலியன்** அதன் தலைவனானான். ஆசுத்திரியாவில் **மெட்டர்நிக்கின்** ஆட்சி முடிவடைந்து, அவன் இங்கிலாந்து நாட்டிற்கு ஓடநேர்ந்தது. பிரசியாவில் முதலிற் பல சீர்திருத்தங்கள் வழங்கப்பெற்றுப் பின்னர் அவை மாற்றப் பட்டன. இந்த இயக்கங்கள் இத்தாலிய நாட்டிலும் பரவின. சில பகுதிகளில் மக்களுக்கு வாக்குரிமை முதலியன வழங்கப்பெற்றன. அவற்றில் பிரதானமாக விளங்கியது **சார்டீனியா-பைட்மாண்ட்** இராச்சியம் ஆகும். இவற்றின் அரசரான **சார்ல்சு அல்பர்ட்** ஆங்கில அரசியல் முறை போன்ற திட்டம் ஒன்றைத் தமது மக்களுக்கு வழங்கினார். இந்தச் சார்ல்சு அல்பர்ட்டை "இத்தாலியின் காம்லெட்" (Hamlet of Italy) எனச் சரித்திராசிரியர்கள் வழங்குவர். இவருடைய சந்தேக புத்தியும் தயக்கமும் துணிவற்ற தன்மையும் இவருக்கு இத்தகைய பெயர் தோன்றுவதற்குக் காரணங்களாம். ஆயினும் 1848-ல் முடிவாகத் துணிவு கொண்டு இவர் அரசியற் சீர்திருத்தம் வழங்கியமையால், கோபமடைந்த ஆசுத்திரியர் தமது படைகளை அனுப்பிச் சார்லசு அல்பர்ட்டை 'கசுடோசா' முதலிய இடங்களில் முறியடித்தனர். அதனால் மனமுடைந்த அல்பர்ட், தனது அரசுரிமையை மகனான **விக்ரர் இமானுவேலுக்கு** வழங்கிவிட்டுத் தான் ஆட்சிப் பீடத்தினின்றும் வெளியேறினான். இந்த விக்ரர் இமானுவேல் ஒருவனே பிற்காலத்தில் இத்தாலி முழுவதையும் ஒரு குடைக்கீழ் கொணரும் அரிய பாக்கியத்தைப் பெற்றான். ஆயினும், 1848-ஆம் ஆண்டில் நிகழ்ந்த கிளர்ச்சிகள் யாவும் பய

னற்றுப்போய், மீண்டும் சிற்றரசர்கள் ஆசுத்திரியரின் ஆதரவுடன் தமது கொடுங்கோன்மையைத் தொடர்ந்து நடத்தினர்.

பைட்மாண்ட் அரசனுன விக்ரர் இமானுவேலும் அவனுக்கு மந்திரியாக அமர்ந்த கவூர் பிரபுவும் ஆட்சித் தொடக்கத்திலிருந்தே தமது அரசாங்கத்தைப் பலப் படுத்திக் கொள்வதில் முனைந்தனர். ஆங்கில முறை யைத் தழுவிப் பாராளு மன்றமும் அரசாங்க நிருவாகமும் நிறுவப்பட்டதுடன், சேனையுந் திருத்தி யமைக்கப் பட்டது. பைட்மாண்டின் முன்னேற்றத்தைக் கண்டு ஆசுத்திரியாவும் மற்ற நாடுகளும் திகைத்திருக்கும் நிலையில், இராசதந்திரியாகிய கவூர் மற்ற இத்தாலிய தேசபக்தர்கள் உணராத ஓர் உண்மையை நன்கு உணர்ந் திருந்தான். அதாவது, சார்டீனிய அரசரின் தலைமை யின்கீழ் இத்தாலியை ஒன்றுபடுத்துவதே சாத்தியமான முறையாகும்; அப்பொழுதும் அயல் நாட்டினரின் உதவி யின்றி ஆசுத்திரியரின் பலம் பொருந்திய ஆதிக்கத்தை அழிப்பதற்கு இயலாதாகையால், அதற்கேற்ற கொள் கையை வகுக்கவேண்டும். இந்த நோக்கத்துடன் நாட்டின் படைப் பலத்தை விருத்தி செய்த வண்ணமே, கவூர் அண்டை வல்லரசான பிரான்சின் உதவியைப் பெற பெரும் முயற்சிகள் செய்யலானுன். அப்போது பிரான் சின் சக்கரவர்த்தியாக விளங்கிய உலூயி நெப்போலியன் ஆங்கிலேயரின் உதவியுடன் ரூசியாமீது படை எடுத்து அதனைத் தாக்கியமையால், கருங்கடலிலுள்ள கிரிமிய தீபகற்பத்தில் கடும் போர் விளைந்தது. கவூர் பிரபு தானும் ஒரு படையை அனுப்பிப் பிரான்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் உதவி புரிந்தமையால், இத்தாலியர் பால் உலூயி நெப்போலியன் அனுதாபம் கொள்ளலா னுன். அன்றியும், உலூயி நெப்போலியனை வெடிகுண்டு எறிந்து கொல்ல முயன்ற இத்தாலிய தேசபக்தனுன ஆர்சினி இறக்குந் தருவாயில் விடுத்த உருக்கமான

வேண்டுகோளும், அவனது உள்ளத்தில் பதிந்திருந்தது. பிறகு 1858-ஆம் ஆண்டில் உலூயி நெப்போலியனைக் கவூர் சந்தித்து, ஆசுத்திரியாவுக் கெதிராக விளையும் சுதந்திரப் போரில் இத்தாலியருக்கு உதவி புரியுமாறு வேண்டினன். அந்த உதவிக்கு ஈடாக சாவோய், நைசு என்னும் பகுதிகளைப் பிரான்சுக்கு வழங்குவதாகவும் கவூர் உடன்பட்டான்.

மறு ஆண்டில் கவூர் எதிர்பார்த்திருந்த பெரும் போர் மூண்டது. சார்டீனிய அரசாங்கத்தின் முற்போக்கை உணர்ந்த ஆசுத்திரியர் தாமே அதனைத் தாக்கி நசுக்கத் திட்டம் வகுத்தனர். "சதுரங்கத்தில் காய்களை எறிந்து விட்டோம்; இனி விளையப்போகும் நிகழ்ச்சிகளுக்குத் தயாராக இருக்க வேண்டும். ஆனல், இதுவே நமது மன்றம் இங்குக் கூடும் கடைசிக் கூட்டமாகும்!" என்று பைட்மாண்ட் பாராளுமன்றத்தில் கவூர் அறிக்கையிட்டான். பிறகு நிகழ்ந்த பெரும்போரில், நெப்போலியனது படைகள் ஆசுத்திரியரை மாசெந்தா, சோல் பெரினோ என்ற இடங்களில் முறியடித்தன. கரிபால்டியும் இந்தப் போர்களில் ஈடுபட்டு வீரச் செயல்கள் புரிந்தான். இனி இத்தாலி சுதந்திரமடைந்துவிடும் என்று கவூர் குதூகலித்திருக்கையில், நெப்போலியன் யாரும் எதிர்பாராத வகையில் திடீரென்று ஆசுத்திரியருடன் சமாதானம் செய்துகொண்டான். அதன் பயனாக இத்தாலியர் 'லம்பார்டி' என்ற வட சமவெளிப் பிரதேசத்தைப் பெற்றபோதிலும், வெனிசு நகரத்தைச் சூழ்ந்த மாகாணம் ஆசுத்திரியர் வசமே இருந்துவிட்டது. தனது கனவு குலைந்ததால், கவூர் பெரும் ஏமாற்றமடைந்து சிறிது காலம் பதவியிலிருந்தும் விலகியிருந்தான். அப்போது கரிபால்டி முதலியவர்களின் முயற்சியின் பயனாகத் தசுகனி, பார்மா, மோடெனு என்ற மூன்று பகுதிகளிலுமிருந்த மக்கள் தத்தம் அரசர்களை எதிர்த்துப் பெருங் கிளர்ச்சி புரியலானார்கள். அந்தக் கிளர்ச்சி

களில் கரிபால்டியும் "அல்ப்சுவீரர்கள்" என்ற அவனது தொண்டர்களும் பெரும் பங்கு கொண்டமையால், அவர்களில் பெரும்பாலோர் தாங்கள் சார்டீனிய அரசனின் கீழ்க் குடிகளாக இருக்கவேண்டுமென்று விருப்பம் தெரிவித்து வாக்களித்தனர். இவ்வாறு இத்தாலியில் ஏறக்குறையப் பாதிப் பாகம் சார்டீனிய அரசரான விக்ரர் இமானுவேலின் ஆட்சியின்கீழ் வந்தது. உடனே கவூரும் நம்பிக்கையுடன் மீண்டும் தலைமை தாங்கினன். அப்போது நெப்போலியனுக்குக் கவூர் தன் இரகசிய ஒப்பந்தப்படி சாவோய், நைசு என்ற பகுதிகளை அளித்து விடவே, அதனைக் கண்டு கோபமடைந்த கரிபால்டி, 'இதாலிக்குத் துரோக மிழைத்தவன்' (Betrayer of Italy) என்று உலூயி நெப்போலியனுக்குப் பெயர் வழங்கினன். பிறகு அவன் கவூரின் தூண்டுதலால், தனது ஆயிரம் செஞ்சட்டை வீரருடன் 1860-ஆம் ஆண்டில் சிசிலித் தீவில் புகுந்தான். அங்கிருந்த ஆங்கிலக் கடற்படை **பாமசுடன்** என்ற ஆங்கிலப் பிரதமரின் உத்தரவின் பிரகாரம் அவனைத் தடுக்காமல் நடுநிலை வகித்தது. அவனது பகைவரின் படைகள் சரணடைந்தமையால், சிசிலித் தீவு எளிதில் அவன் வசமாயிற்று.

உடனே அங்கிருந்து புறப்பட்டு, அவனும் செஞ்சட்டையினரும் தென் இத்தாலியிற் புகுந்து நேப்பிள்சு இராச்சியத்தைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றினர்கள். கரிபால்டி நெருங்கி வருவதையறிந்த நேப்பிள்சு மன்னன் பயந்து தலைநகரத்தை விட்டகன்ருன். இந்த நிலையில், அங்கு மாசினி சென்று மன்னுட்சியில்லாத குடியரசை வகுக்குமாறு கரிபால்டியைத் தூண்டிவந்தமையால், 'எங்கே கரிபால்டி சுயேச்சையாக ஒரு குடியரசைத் தாபித்து விடுவானே' என்றஞ்சிய கவூர் பிரபு விக்ரர் இமானுவேலைத் தூண்டி, போப்பரசரின் ஆட்சியிலடங்கிய மத்திய இத்தாலியின் வழியாக நேப்பிள்மீது

படை எடுக்குமாறு ஊக்கப்படுத்தினன். மன்னனது படைகளிடம் போப்பின் படைகள் தோற்றபோதிலும், போப்பிற்கு உலூரி நெப்போலியன் உதவக் கூடுமென்ற பயத்தால், அவை உரோமாபுரிமீது படை எடுக்கவில்லே. அவை நேராகத் தெற்கே சென்று நேப்பிளே அடைந்தன. கரிபால்டியும், விக்ரர் இமானுவேலும் அங்குத் சந்திக்க நேர்ந்தது. சரித்திரப் புகழ்வாய்ந்த இந்தச் சந்திப்பின் போது, கரிபால்டி மிகவும் பெருந்தன்மையுடனும் தன்னலமற்ற இயல்போடும் தான் கைப்பற்றிய நாடுகளே விக்ரர் இமானுவேலுக்கு வழங்கினன். கரிபால்டியைப் போன்ற தியாக



படம் 52. கரிபால்டி

குணம் படைத்த தேசபக்தரைக் காண்பது அரிது. நாட்டிற்காக உழைத்த பின்னர் மன்னன் அளிக்க விரும்பிய விருதுகளேயும் வெகுமதிகளேயும் பெற மறுத்து, அரசியல் வாழ்வை நீத்துச் சென்ருன். எஞ்சிய நாட்களில், தன்னந்தனியே தீவொன்றில் வாழ்ந்துகொண்டு, கதைகள் புனேந்தெழுதி அதனுற் கிடைத்த சொற்ப வருவாயைக் கொண்டு எளிய வாழ்க்கை நடத்திவந்தான். இத்தகைய பெரும் தேசாபிமானியை இத்தாலிய மக்கள் கவனிக்காமல் புறக்கணித்தது விந்தையேயாகும். பிறகு நிகழ்ந்த வாக்கெடுப்பினுலும், இமானுவேலின் ஆட்சி இத்தாலியின் தென்பாகத்தில் உறுதிப்படுத்தப்பட்டது. 1861-ஆம் ஆண்டு ஐக்கிய இத்தாலியின் முதலாம் பாராளுமன்றங் கூடியது. உரோமாபுரியும் வெனீசும்

இன்னும் கைப்பற்றப்படாமையால், பிளாரன்சு நகரம் இராசதானியாக அமைந்தது.

மீண்டும் இத்தாலியின் மற்றப் பகுதிகள் சுதந்திர மடைந்து நாடு ஒற்றுமையடைய அயல்நாட்டினரின் உதவி அவசியமாயிற்று. 1861-ல் இடைவிடாத உழைப் பின் காரணமாக உடல் நொந்துபோன கவூர் திடீரென்று மரணமடைந்தான். இத்தாலிய தேசபக்தர் வரிசையிலும் சென்ற நூற்றாண்டில் விளங்கிய ஐரோப்பிய இராச தந்திரிகளிடையிலும் கவூருக்கு முதன்மையான தானம் உண்டு என்பதை மறக்கலாகாது. கவூர் இறந்த பிறகும், அதே கொள்கைகளைக் கடைப்பிடித்த இமானு வேல் பிரான்சிற்கும் ஆசுத்திரியாவுக்குமெதிராக பிசு மார்க்கின் தலைமையின்கீழ் அப்போது உருவாகி வந்த பிரசிய வல்லரசுடன் தொடர்புகொண்டான். அதன் பயனாக, 1866-ல் ஆசுத்திரிய-சேர்மனியப் போர் நிகழ்ந்த பொழுது, இத்தாலியரும் வெனீசிலிருந்த ஆசுத்திரியரை எதிர்த்துப் போராடினர். அவர்கள் ஆசுத்திரிய சேனையிடம் தோற்றபோதிலும், பிரசியர் பெற்ற பெரும் வெற்றிகள் காரணமாக, இறுதியில் நன்மையே அடைந்தனர். சேர்மனியரும் ஆசுத்திரி யரும் செய்துகொண்ட உடன்படிக்கையால், வெனீசு இத்தாலியின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்பட்டது. முடிவாக, 1870-ஆம் ஆண்டில் பிரசியரின் தலைவனான பிசுமார்க்கு பிரான்சுமீது போர் தொடுக்கவே, லூயி நெப்போலியன் அச்சமடைந்து, உரோமாபுரியைக் காத்து வந்த பிரான்சுப் படைகளை நாட்டிற்குத் திரும்பி வருமாறு உத்தரவிட்டான். ‘இதுவே தருணம்’ எனக் கண்ட விக்ரர் இமானுவேல், உரோமாபுரியைத் தருமாறு போப்பைக் கேட்கவே அவர் அதற்கு இணங்கவில்லை. உடனே இமானுவேலின் படைகள் வெகு சுலபமாக உரோமாபுரியில் பிரவேசித்து அதனை ஆக்கிரமித்ததும், போப் வாடிகன் அரண்மனையில் தங்கியிருந்துகொண்டு,

இத்தாலிய அரசாங்கத்தைச் சபித்தார். எனினும், 1871-ல் இத்தாலிய நாடு விடுதலை பெற்று ஒற்றுமை யடைந்து விட்டதற்கறிகுறியாக, பாராளுமன்றம் உரோமாபுரியில் கூடியது. இவ்வாறு நெடுங்காலமாக இத்தாலியர் கண்ட கனவு நிறைவெய்தியது. இத்தாலி யும் விரைவில் சிறந்த வல்லரசாகித் தேசீய உணர்ச்சிக்கு உறைவிடமாகத் திகழ்ந்ததோடு, பிரான்சையும் பிரித் தானியாவையும் போலச் சர்வதேச வியாபாரத்திலும் சாம்ராச்யம் நிறுவுவதிலும் ஈடுபடத் தொடங்கியது.

இத்தாலி இவ்வாறு புத்துயிர் பெற்று எழுந்ததற்கு, மாசினியின் தீர்க்கதரிசனமும், கரிபால்டியின் தியாக மும், கவூரின் இராசதந்திரமும் துணைநின்றன என் பதை மறக்கலாகாது. மேலும், இத்தாலிய மன்னரான விக்ரர் இமானுவேலும், தேசீய உணர்ச்சியும் விடா முயற்சியும் அரசியற் றிறமையும் வாய்ந்தவராக விளங் கினர். இத்தாலியின் எழுச்சி சுயேச்சை பெருத மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இலங் கியதோடு, மத்திய ஐரோப்பாவிலிருந்த 'அரசியற் சமநிலை'யை (Balance of power) யும் மாற்றிவிட்டது என்பதனைப் பின்னொரு அத்தியாயத்தில் காண்பீர்கள்.

### வினுக்கள்

1. இத்தாலிய விடுதலை இயக்கத்திற்குப் பாடுபட்ட முப் பெருந் தலைவர்கள் யாவர்? அவர்கள் எந்த முறைகளில் சேவை புரிந்தனர்?

2. சார்ல்சு அல்பர்ட் செய்த ஏற்பாடு யாது? அது ஏன் பயனற்றுப் போயிற்று?

3. எக் காரணங்களால் உலூயி நெப்போலியன் இத்தாலி யரின் இயக்கத்தில் ஊக்கம் கொண்டான்?

4. லூயி நெப்போலியன் இத்தாலியருக்குப் புரிந்த உதவி யாது? ஆயினும், அவர்கள் ஏன் அவனை வெறுத்தனர்?

5. கவூரின் இராஜதந்திரத்தை விளக்கச் சில உதாரணங் கள் வரைக.

6. கரிபால்டி எவ்வாறு இத்தாலியின் தென்பகுதியைக் கைப்பற்றினன்?

7. கரிபால்டியின் தியாக குணத்திற்கு ஓர் உதாரணம் காட்டுக.

8. உரோமாபுரியும் வெனீசும் எவ்வாறு இத்தாலியர் வசம் வந்தன?

**பயிற்சி**

1858-லும் 1871-லும் இத்தாலி இருந்த நிலையை விளக்க படங்கள் வரைக.

## 12. சேர்மனியும் பிசுமார்க்கும்

நெடுங்காலமாக சேர்மனிய இனத்தினர் நாகரிக மேம்பாடுற்று உயர்நிலை எய்தியபோதிலும், சேர்மனிய இராச்சியம் ஐக்கியமடைந்த ஒரு நாடாகத் திகழவில்லை. அதில், பெரிய இராச்சியங்களுக்கிடையே சிற்றரசுகள் பலவும் கலந்திருந்தன. பதினெட்டாம் நூற்றுண்டில், அதன் கிழக்குப் பகுதியில் அடங்கிய பிரசியா, பிரடரிக் வில்லியம், மகா பிரடரிக் போன்ற மன்னர்களின் ஆட்சியின் கீழ் வளர்ச்சி பெற்றது. மற்றச் சிற்றரசுகள் பிரசியாவையோ, அன்றி ஆசுத்திரியாவையோ சார்ந்திருந்தன. நெப்போலியன் படையெடுத்த போது இவ்வாறு சிதறிக் கிடந்த சேர்மனிய இராச்சியங்கள் கைப்பற்றப்பட்டு, சேர்மனியின் பெரும்பாகம் அவனது



படம் 53. பிசுமார்க்கு




**1870 ஆண்டில் ஜெர்மானிய சக்கராதிபத்தியம்**

படம் 54.

ஆதிக்கத்தின்கீழ் வந்தது. அதனுல் நேர்ந்த ஒரு நன்மை யாதெனின், சேர்மனியர் தம்மை ஒன்று பட்ட ஒரு தேசீய இனமாகக் கருதத் தொடங்கி யதேயாகும். ஆயினும், நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பின்னர், ஆசுத்திரிய மந்திரியான மெட்டர் நிக்கின் சூழ்ச்சியால் மீண்டும் சிற்றரசுகள் பல உயிர்ப்பிக்கப் பட்டன. பிரசியாவின் வளர்ச்சியைக் கண்டு அச்ச மடைந்த ஆசுத்திரியா தனது ஆதிக்கத்தைச் செலுத்து வதற்காகச் செய்த ஏற்பாடே இது என்பதை விரைவில் சேர்மனியர் உணர்ந்து கொண்டனர். அதனுல், தொடக்கத்திலிருந்து பிரசியரின் தலைமையின்கீழ் ஆசுத் திரியாவை நீக்கிவிட்டு சேர்மனிய ஐக்கியத்தைத் தாபிப் பதற்குப் பல முயற்சிகள் செய்யப்பட்டன. 1833-ல் **சோல்வெரின்** என்ற சுங்கவரி ஐக்கியத்தை நிறுவி, சேர்மனிய இராச்சியங்கள் யாவும் ஒன்றுகூடப் பிரசியா வழி வகுத்தது. மேலும், தொழிற் புரட்சி காரணமாக, புகையிரத வீதிகளாலும், வியாபாரத்தாலும் நாட்டின் பல பகுதிகளும் இணைய நேர்ந்தது. ஆனுல், இந்த ஐக்கியத்தில் ஆசுத்திரியா சேர்க்கப்படவில்லை.

இந்த நிலையில், தேசீய உணர்ச்சியும், சுதந்திர விருப்பமும் சேர்மனியில் ஓங்கியதால், எங்கும் கிளர்ச்சி கள் தோன்றவே, பிரசிய மன்னன் அச்சமடைந்து மக்களுக்கு உகந்த சனநாயக ஆட்சியை நிறுவினுன். ஆனுல், பிறகு ஆசுத்திரியாவுக்கு அஞ்சி, அந்தச் சீர் திருத்தங்களை நீக்கிவிட நேர்ந்தது. பிறகு பிராங் பர்ட்டில் கூடிய சேர்மனிய மகாசபையிலும் ஆசுத்திரியா வின் செல்வாக்கு அதிகமாக இருந்தது. அந்தச் சபை 1849-ல் பிரசிய அரசனை நான்காவது பிரடரிக் வில்லியத்திற்கு அகில சேர்மனிய ஆதிபத்தியம் அளிக்க முன்வந்தபொழுது, அந்த மன்னனும் அவனது பிரதி நிதியாக விளங்கிய பிசுமார்க்கும் அதனை ஏற்க மறுத் தனர். " இது கழிவு நீரிலிருந்து எடுக்கப்பட்ட மகுடம்;

இதனை ஏற்கலாகாது,'' என்றே பிசுமார்க்குக் கூறினன். ஏனெனில், அந்தச் சபையில் ஆசுத்திரியரின் செல்வாக்கு மிகுந்திருப்பதையும், பிரசியாவிற்குப் பகைவர்கள் அங்குப் பெருகியிருப்பதையும், அவன் உணர்ந்து கொண்டிருந்தான். இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட்ட போதிலும், **சேர்மனியை பிரசியாவின் தலைமையின் கீழ்ப் பூரணமாக ஒன்றுபடுத்தி வலிமை யடையச் செய்வதே** அவனது வாழ்க்கையின் பெருநோக்கமாயிருந்தது. அதன்பொருட்டு 'ஆசுத்திரியாவின் வலிமையைக் குறைப்பதும், பிரான்சை ஒடுக்குவதும், சேர்மனிய மக்களை ஒன்றுபடுத்துவதும் அவனது திட்டங்களில் முதன்மை யிடம் பெற்றன.

1861-ல் தனது சகோதரன் மரணமடைந்ததும், முதலாவது வில்லியம் பிரசியரின் அரசனானன். இவன் பிசுமார்க்கைப் போலவே, பிரசியாவைப் பலப்படுத்தி அதன் உதவியால் சேர்மனியை ஐக்கியப்படுத்த முடியும் என்று உறுதியாக நம்பினன். அதன் பொருட்டு **ரூன், மோல்கே** என்ற சிறந்த படைத்தலைவர்களின் உதவியால் பல சீர்திருத்தங்கள் புரிந்து, பிரசியச் சேனையைப் பலப்படுத்தினன். அப்போது பிரசிய சட்டசபை சேனையின் செலவிற்குப் போதிய பண உதவி அளிக்க மறுத்தது. எனவே, தனது படைத்தலைவர்கள் கூறிய யோசனைப்படி, அந்த எதிர்ப்பைச் சமாளிக்கும் பொருட்டுப் பிரான்சிற்குத் தூதனுக அனுப்பப்பட்டிருந்த பிசுமார்க்கைத் திரும்ப அழைத்துப் பிரதம மந்திரியாக நியமித்தான். பிசுமார்க் அந்தப் பதவியில் அமர்ந்ததும், "இக்காலத்திய பெரும் பிரச்னைகளைச் சட்டசபையின் தீர்மானங்களாலும், விவாதங்களாலும் தீர்க்க முடியாது; அவற்றை வாளின் உதவி கொண்டு, இரத்தம் சிந்தியே தீர்மானிக்க வேண்டும்,'' என்று முழங்கினன். பிறகு எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல், சேனையின் செலவுகளை அதிகப்படுத்தினன்.

அவனது திறமையான நிர்வாகத்தின்கீழ்த் தொழில்கள் பெருகி வியாபாரம் வளர்ச்சியடைந்தது. அவன் ஊட்டிய தேசீய உணர்ச்சியும், போர்ப் பெருமையும் பிரசியரைப் புதியதோர் ஊக்கமும் புத்துணர்ச்சியும் கொள்ளச் செய்தன. இக்காரணங்களால் தமக்குள்ளிருந்த வேற்றுமைகளை மறந்து எல்லாக் கட்சியினரும் அவனது திட்டங்களை ஆதரிக்கத் தொடங்கினர்.

இவ்வாறு பிரசியா போருக்கு ஆயத்தமானதும், 1863-ல் தேனியர் நாட்டின்மீது படையெடுக்க நேர்ந்தது. இதற்குக் காரணம், **சிலெசுவிக்-கோல்சுடீன்** என்ற இரு சேர்மனிய மாகாணங்கள் தேனிய அரசரின் கொடுங்கோன்மை காரணமாகச் சுயேச்சைபெற விரும்பியதேயாகும். பிராங்பர்ட் மகாசபை தேனியரைக் கண்டித்து, ஆசுத்திரியாவையும் பிரசியாவையும் இந்த இருமாகாணங்களுக்கு உதவியாகப் படைகள் அனுப்புமாறு கேட்டுக்கொண்டது. எனவே, இரு நாடுகளும் தமது படைகளை அனுப்பி அந்த மாகாணங்களைக் கைப்பற்றின. பிரிட்டன், பிரான்சு முதலிய நாடுகள் இந்தப் படையெடுப்பை வெறுத்தபோதிலும், எதிர்க்க முன்வரவில்லை. விரைவில் இந்த மாகாணங்கள் தேனியராட்சியினின்றும் சுயேச்சை பெற்றன. இதனால், பிரசியாவின் பெருமையும் ஓங்கியது.

பிரசியா தனக்குச் சமமான வல்லரசாக விளங்குவதை ஆசுத்திரியா விரும்பவில்லை; அதன் படைபலம் பெருகுவதைக் கண்டும் ஆசுத்திரியர் அஞ்சினர். அன்றியும், சிலேசுவிக்-கோல்சுடீன் மாகாணங்களில் கலகங்கள் நேர்ந்தபோது, அவற்றிற்குப் பிரசிய அரசாங்கமே காரணமென்று ஆசுத்திரியா கருதியது. ஆசுத்திரியாவை வீழ்த்தாமல் சேர்மனியப் பிரதேசத்தில் ஒற்றுமை நிலவச் செய்வது அசாத்தியம் என்பதைப் பிசுமார்க்கும் நன்குணர்வான். இக்காரணங்களால், இருநாடுகளுக்கிடையே பெரும்போர் மூண்டது. பிரான்சின் அரசனை மூன்றும்

நெப்போலியனும், மற்றவர்களும் இந்தப் போர் நெடுநாட்களுக்கு நீடிக்குமென்று கருதி நடுநிலைமை வகித்து வந்தனர். மேலும், ருசியாவுடனும், இத்தாலியுடனும் பிசுமார்க் நேச ஒப்பந்தங்கள் செய்திருந்தமையால், அவை பிரசியாவுக்கு உதவியாக இருந்தன. இவ்வாறு எந்த நாட்டின் உதவியும் பெருது தனித்திருந்த ஆசுத்திரியாவை முறியடிப்பது பிரசியாவிற்கு எளிதாயிற்று. போர் தொடங்கியதும், இத்தாலிய படைகளை ஆசுத்திரியச் சேனைகள் எளிதில் முறியடித்தனவாயினும், 1866-ஆம் ஆண்டில் போர் தொடங்கிய இருமாதங்களுக்குள்ளாகப் பொகீமியாவிற் புகுந்த பிரசியச் சேனை, ஆசுத்திரியரைச் சாடோவாவிகி முறியடித்துவிட்டது. ஆசுத்திரியரை அடியோடு வீழ்த்தவேண்டுமென்றும், அவர்களது தலைநகரான வியன்னுவைக் கைப்பற்ற வேண்டுமென்றும், பிரசிய அரசன் விரும்பியதையும் தடுத்து, பிசுமார்க்கு ஆசுத்திரியருடன் பிராக் நகரத்தில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான். ஆசுத்திரியரை முறியடித்த போதிலும், அவர்களுக்கும் பிரசியருக்குமிடையே நட்புறவு ஏற்படச் செய்வதே அவனது இலட்சியமாக இருந்தது. இந்த உடன்படிக்கையால் இத்தாலியர் வெனீசு நகரத்தைப் பெற்றமையால், அவர்கள் பிசுமார்க்கிற்கு நன்றி செலுத்தினர். சேர்மனிய கூட்டுறவில் பிரசியாவின் முதன்மையான தானத்தை ஆசுத்திரியர் ஒப்புக்கொள்ளுமாறு செய்ததால், பிசுமார்க்கின் நோக்கம் நிறைவேறியது. சேர்மனிய கூட்டுறவில் கனேவர், பவேரியா, பேடன், உட்டம்பர்க் முதலிய நாடுகள் சேர்ந்துகொண்டு, பிரசியாவின் தலைமையை ஏற்றுக் கொண்டன. இவ்வாறு சேர்மனிய ஐக்கியம் தோன்றியபொழுதே, ஆசுத்திரியா பிரசியாமீது வெறுப்படையாதிருக்கும் வகையில் அதிக நிபந்தனைகளின்றிப் பிசுமார்க்கு ஒப்பந்தம் செய்தமையால், பிற்காலத்தில் ஆசுத்திரியா பிரான்சுடன் சேருவதற்குச் சந்தர்ப்பம் இல்லாது போயிற்று.

இதன் பின்னர், பிரசியாவிற்கும் பிரான்சுக்கு மிடையே விரோதம் அதிகரித்து வந்தது. ஏனெனில், சேர்மனி ஒன்றுபட்ட வல்லரசாய்த் திகழ்வதை மூன்ரும் நெப்போலியன் ஒருபோதும் விரும்பமாட்டானென்பதை பிசுமார்க் அறிவான். ஆகையால் தென் சேர்மனிய இராச்சியங்களே இணைப்பதற்கு முன்னர்ப் பிரான்சுடன் கடும்போர் புரிய நேரிடலாம் என்பதை முன்கூட்டியே யோசித்து, அதற்கேற்ற இராச தந்திர முறைகளேக் கையாண்டுவந்தான். போர் மூளும்போது பிரான்சு எவருடைய உதவியுமின்றித் தனித்திருக்குமாறு செய்யப்படவேண்டுமென்றே பிசுமார்க்கு விரும்பினன். ஆசுத்திரியப் போரில் பிரசியா பெற்ற வெற்றியைக் கண்டு பிரமிப்பும் அச்சமும் அடைந்த உலூயி நெப்போலியன், பிரசியா பெற்ற பிரதேசங்களுக்கு ஈடாகத் தான், தென் சேர்மனியிற் சில பகுதிகளேயேனும் பெல்சியத்தையேனும் பெறவேண்டுமென்று பிசுமார்க்கிடம் வற்புறுத்தினன். இதுவரைப் பிரான்சியரையே தமது சுதந்திரத்தைப் பாதுகாப்போராகக் கருதிவந்த தென் சேர்மனிய நாட்டினரை அவர்களிடமிருந்து பிரிக்க இந்த வேண்டுகோள் பெரிதும் பயன்பட்டது. பிசுமார்க் நெப்போலியனது நோக்கத்தை வெளியிட்டதும், அந்த நாடுகள் பிரசியாவுடன் இரகசியமாக நேச உடன்படிக்கைகள் செய்துகொண்டு, போரிற் கலக்காமல் இருந்துவிட்டன. அவ்வாறே பெல்சியத்தைக் கைப்பற்றும் நோக்கம் நெப்போலியனுக்கு உண்டென்பதை உணர்ந்ததும், பிரித்தானியர் சினமடைந்து நடுநிலேமை வகிக்கலாயினர்.

1870-ஆம் ஆண்டில் சுபெயின் நாட்டின் அரசி வெளியேற்றப்படவே, சுபானியமக்கள் ஓர் அரசனேத் தேர்ந்தெடுப்பது அவசியமாயிற்று. முடிவில் அவர்கள் பிரசிய அரசனின் உறவினனுன ஒருவனேத் தேர்ந்தெடுக்கவே, இது பிசுமார்க்கின் சூழ்ச்சி என்று உலூயி நெப்போலியன் கருதினன். அதனுல் அவனேத் தேர்ந்

தெடுக்கலாகாது என்று தடுக்கலானுன். இவ்வாறு அவமதிக்கப்பட்ட சேர்மனியர் பெருஞ்சினமடைந்து, பிரான்சைத் தாக்குமாறு அறைகூவினர். பிரான்சிலும் இத்தகைய போர்வெறியின் எதிரொலி தோன்றியது. இக்காரணங்களால், இருபெரும் நாடுகளுக்குமிடையே பெரும்போர் மூண்டது.

சேர்மனியரின் படைப்பலத்தை உணராத உலூயி நெப்போலியன் தான் நோய்வாய்ப்பட்டிருந்தும் அதனைப் பொருட்படுத்தாமல், தானே முன்னின்று படைகளை நடத்திச் சென்றுன். மேலும், பாரீசு நகரத்திலிருந்து அரசாங்கத்தை நடத்தும் அதிகாரம் அளிக்கப் பெற்றிருந்த அவனது மனைவியான உயூசின் அரசி செய்த தவறுகளும் துன்பங்களைப் பெருக்கின. அதற்கு முன்னரே சேர்மனியப் படைகள் ஒரு பிரான்சுப் படையை மெட்சு என்ற கோட்டையில் வளைத்துக் கொண்டு தாக்கத் தொடங்கிவிட்டன. அந்த நிலையில் நெப்போலியன் எதிர்பார்த்தவாறு வேறெந்த ஐரோப்பிய நாடும் அவனுக்கு உதவிபுரிய முன்வராதது, பிசுமார்க்கினது இராசதந்திரத்தின் வெற்றிக்கு அறிகுறியாயிற்று. பிரான்சிடம் அனுதாபம் கொண்ட பிரித்தானியர், பெல்சியத்தைப் பெறவேண்டுமென்று உலூயி நெப்போலியன் பேராசை கொண்டிருந்தமையை அறிவிக்குங் கடிதத்தைப் **பிசுமார்க்** வெளியிட்டதும் திடுக்குற்று ஒதுங்கியிருந்துவிட்டனர். பிசுமார்க்கினுற் போலந்தை அடக்குவதற்கு உதவிபெற்ற ரூசியாவும், அவனிடமிருந்து தாராளமான நிபந்தனைகளைப் பெற்ற ஆசுத்திரியரும், இத்தாலியரும் நடுநிலை வகித்தனர். எனவே, வலிமையும் ஒருங்கும் மிகுந்த சேர்மனியப் படைகள் மெட்சு அரணைத் தாக்கிய பொழுது, அதற்குப் பாதுகாப்பு அளிக்க முன்வந்த உலூயி நெப்போலியனது படையையும் செடான் என்ற இடத்தில் முறியடித்துவிட்டன. இந்த வெற்றியின் காரணமாக, நெப்போலியன்

சிறை பிடிக்கப்பட்டுச் சரணுகதியடைந்தான். அவனை அரச பதவியினின்றும் நீக்கிவிட்டுப் பாரிசு நகரத்து மக்கள் குடியரசு நிறுவினர். கம்பெட்டா என்ற இளம் தலைவனின்கீழ்ப் பாரீசு நகரத்தினர் மிகவும் வீராவேசத் துடன் போராடினராயினும், இறுதியில் நகரத்தை முற்றுகையிட்ட சேர்மனியரிடம் சரண்புக நேர்ந்தது. இவ்வாறு பிசுமார்க்கு வலிமை பொருந்திய பிரான்சு வல்லரசையும் பணியச் செய்தான்.

1871-ஆம் ஆண்டில் அழகு மிகுந்த வெர்சேல்சு நகரத்திலே, பழைய பிரான்சு அரசர்களுக்குரிய அரண் மனையின் கண்ணுடி மண்டபத்தில், பிரசிய அரசனை முதலாம் வில்லியம் ஒன்றுபட்ட சேர்மனியின் சக்கர வர்த்தியெனப் பிரகடனம் செய்யப்பட்டது. அப்போது தென் சேர்மனிய நாடுகளும் அவரது தலைமையை ஏற்ப தாக ஒப்புக்கொண்டன. இவ்வாறு புதிய சேர்மனிய சாம்ராச்யம் உதயமாயிற்று; அந்தச் சாம்ராச்யத்தில் பிரசியாவின் ஆதிபத்தியம் நிலைத்திருக்கும் வகையில், பிசுமார்க்கு ஓர் அரசியல் அமைப்பைத் தயாரித்தான். தனது பெரும் இலட்சியம் நிறைவேறிவிட்டதெனினும், பிசுமார்க்கு திருப்தியடைந்துவிடவில்லை. பிரான்சு தனக்கு நேர்ந்த பழியினை நெடுங்காலம் மறவாதிருக்கக் கூடுமாகையால், அதனை ஒடுக்குவதிலும் மற்ற வல்லரசு களினின்றும் பிரிப்பதிலும் கவனம் செலுத்தினுன். போரின் விளைவாகப் பிரான்சு நாடு அல்சேசு, லோரைன் என்ற மாகாணங்களை இழந்ததுடன், பெருந் தொகையை நட்ட ஈடாக அளிக்கவும் நேர்ந்தது. தனது அரசியற் சூழ்ச்சிகளால் சேர்மனிக்கு இத்தாலியையும், ஆசுத்திரியாவையும் துணைவர்களாகச் சேர்த்து வைத்த துடன், பிசுமார்க்கு பிரான்சைத் தனித்திருக்கச் செய்து பலவீனப்படுத்துவதிலும் முனைந்திருந்தான்.

சேர்மனி ஐக்கிய மடைந்த பிறகும், பிசுமார்க்கு அதன் பிரதம மந்திரியாக இருபது ஆண்டுகள் பதவி

வகித்தான். அப்போது அதன் உள்நாட்டு நிலைமையைத் திருத்தியமைத்து அதனை வல்லரசாகத் திகழச் செய்வ தொன்றே, அவனது கடமையாக இருந்தது. அவன் புரிந்த சேவைகளில், வியாபாரத்திற்கும் தொழிலுக்கும் பாதுகாப்பு அளித்தமையும், தொழிலாளர் நலன்களை அபி விருத்தி செய்தமையும், கத்தோலிக்கருடன் ஒப்பந்தஞ் செய்துகொண்டமையும் பிரதானமாகக் கருதப்படுகின் றன. சேர்மனியெங்கும் புகையிரத வீதிகளை அமைத்துப் புதிய தொழில்களுக்கு மூலதனம் வழங்கிப் பிறநாட்டுப் பொருள்கள் சேர்மனியில் விற்பனையாகாத வண்ணம் காப்புவரிகள் (Protective duties) விதித்து, சேர்மனிய ரின் தொழில்களும், வாணிபமும் வளர்ந்தோங்கச் செய் தான். பிசுமார்க்கு உள்நாட்டில் **சோசலிசுடுகள்** என்ற தீவிரவாதிகளை ஒடுக்கிய போதிலும், தொழிலாளரின் ஒத்துழைப்பைப் பெறும் பொருட்டு அவர்களுக்கு முது மைக் கால உபகாரச் சம்பளம், நோய்வாய்ப்பட்ட பொழுது விடுமுறையுடன் கூடிய உதவிச் சம்பளம், முதலியன அளித்து அவர்களைச் சமாதானப்படுத்தினன். முதலில் கத்தோலிக்கருடன் விரோதம் செய்துகொண்ட போதிலும், பிறகு போப்புடனும் மற்றக் குருமாருடனும் அவன் ஒப்பந்தம் செய்துகொண்டு நாட்டில் அமைதி நிலவச் செய்தான். இவ்வாறு தன் வாழ்க்கையிற் பெரும் பகுதியையும் சேர்மனியின் உயர்விற்காகவே செலவிட்ட பிசுமார்க்கு, அக்காலத்திய ஐரோப்பிய இராச தந்திரி களிற் சிறந்து விளங்கியவன் என்பதில் ஐயமில்லை. அவ னது வாழ்க்கை வரலாறே சேர்மனி ஐக்கியமடைந்த சரித்திரமாகக் கருதப்படத்தக்கதென்று கூறுவோமாயின், அது மிகையாகாது.

### வினக்கள்

1. ஐக்கியமடைவதற்கு முன்பு சேர்மனி இருந்த நிலை யைக் காட்டும் படம் ஒன்று வரைக. அதில் ஒவ்வொரு பகுதியும் இணைக்கப்பட்ட ஆண்டையும் குறிப்பிடுக.

2. 'பிசுமார்க்கு சேர்மனியருக்குப் புரிந்த சேவை' என்னும் பொருள்பற்றி ஒரு பக்கத்திற்கு மேற்படாமல் விடயங் களைச் சுருக்கி ஒரு கட்டுரை வரைக.

3. ஐரோப்பா தேசப்படத்தில் சடோவா, பிராக் (Prague) செடான், பாரீசு, பெர்லின், மெட்சு, வியன்னு, வெனீசு முதலிய இடங்களைக் குறிப்பிட்டு, இவை பற்றிச் சிறு குறிப்பு களும் தனித்தனி வரைக.

(1) 'சிலெசுவிக்கு–ஒல்சுடீன் பிரச்னே' என்பது யாது? அது எவ்வாறு முடிவடைந்தது?

(2) பிரான்சைத் தனித்திருக்கச் செய்யப் பிசுமார்க்கு கையாண்ட உபாயங்கள் யாவை?

(3) பிரான்சுடன் பிரசியா போர்புரியக் காரணம் யாது? போரின் முடிவு என்ன?

(4) பிசுமார்க்கு ஐக்கியமடைந்த சேர்மனியை முன் னேற்றமடையச் செய்வதற்குக் கையாண்ட ஏற் பாடுகள் யாவை?

# 13. பிரித்தானியச் சாம்ராச்சியத்தின் வளர்ச்சி

பிரித்தானியர் தாம் முதன் முதலில் தாபித்த அமெரிக்கச் சாம்ராச்சியத்தை எவ்வாறு இழந்தனர் என் பது குறித்து முன்னேர் அத்தியாயத்தில் படித்தோம். அவ்வாறு சாம்ராச்சியத்தின் ஒரு பகுதியை அவர்கள் இழந்ததை 'முதலாவது சாம்ராச்சியத்தின் மறைவு' என்றும், பிறகு கனடா, அவுசுத்திரேலியா, நியூசிலந்து முதலிய பிரதேசங்களிற் பிரித்தானிய ஆதிபத்தியம் வளர்ந்ததை 'இரண்டாம் சாம்ராச்சியத்தின் தோற்ற' மென்றும் சரித்திராசிரியர்கள் கூறுவர். இந்த அத்தியா யத்தில் எவ்வாறு இந்த இரண்டாம் சாம்ராச்சியம் ஓங்கி வளர்ந்தது என்பதையும், இதன் அமைப்பில் தோன்றிய மாறுதல்களையும் காண்போம்.

1763-ல் பாரிசு உடன்படிக்கையால் கனடா பிரித்தானியர் வசமாயிற்று. அப்போது குவீபெக் பகுதியில் பிரான்சுக்காரரே அதிகமாக வசித்தனர். இதன் கிழக்கிலிருந்த நோவாசுகோசியா, நியூபவுண்லாந்து என்ற பிரதேசங்களில் ஆங்கில மக்கள் அதிகமாக இருந்தனர். பின்னர்க் குடியேறிய பிரித்தானிய மக்கள் ஏரிப் பிரதேசத்தினருகிலும் அட்சன் விரிகுடாவைச் சுற்றியுள்ள பகுதியிலும் வசித்தனர். நாளடைவிற் கனடா மேற்கில் பசுபிக் சமுத்திரம் வரை வளர்ந்து கொண்டே சென்றது. 1783-ல் பதின்மூன்று குடியேற்றங்கள் பிரித்தானிய ஆட்சியிலிருந்து விலகிய காலத்திலுங் கனடியர் விலக முயலவில்லை. அதனால் மகிழ்ச்சியுற்ற பிரித்தானிய அரசாங்கம், கனடாவை ஒன்றுபடுத்துவதிலும், கனடியரை நிர்வாகப் பயிற்சி பெற்றவர்களாகச் செய்வதிலும் முனைந்தது. இதன் பயனாகக் கனடாவை ஆங்கிலம் பேசப்படும் 'மேற்குக் கனடா' என்றும், பிராஞ்சு வழங்கப்படும் 'கிழக்குக் கனடா' என்றும் பிரித்து இரு மாகாணங்களுக்கும் பிரதிநிதிச் சபைகள் அமைக்கப்பட்டன. ஆனால், அதிகாரம் மிகுந்த நிர்வாகசபை, இராசப் பிரதிநிதியின் ஆதிக்கத்தின்கீழ் வேலை செய்ததால், கனடியர் பொறுப்பாட்சி வேண்டுமென்று கலகம் செய்தனர். 1837-ல், விக்டோரியா பட்டம் பெற்ற பொழுது, இந்தக் கிளர்ச்சி வலுவடைந்ததால், திறமை மிக்க **டர்காம்** பிரபுவை இந்த நாடுகளுக்கு அனுப்பி ஓர் அறிக்கை வெளியிடுமாறு அரசாங்கம் உத்தரவிட்டது. மறு ஆண்டில் வெளிவந்த **டர்காம் அறிக்கை,** சரித்திரத்திற் பிரசித்தி பெற்றதாகும். அதனைச் 'சாம்ராச்சியத்திற்குரிய மகாசாசனம்' (The magna Carta of the Empire) என்று சரித்திராசிரியர்கள் புகழ்வர். அந்த அறிக்கையின் மூலம் கனடிய மாகாணங்களை ஒன்றுபடுத்த வேண்டுமென்றும், பிரித்தானியச் சாம்ராச்சிய அமைப்பிற்குட்பட்ட பொறுப்பாட்சி வழங்குதல் வேண்டு

மென்றும் தெளிவுபடுத்தப்பட்டது. அவ்வாறே 1840-ல் கனடிய மாகாணங்களுக்குத் தனித்தனியே பொறுப் பாட்சி அளிக்கப்பட்டது. பின்னர், இந்த மாகாணங் களில் வாழ்ந்த பிரான்சுக்காரரும், பிரித்தானியரும் ஐக்கியமடைய முயன்று வந்தனர். இதன் பயனாக 1867-ல் பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டத்தால் குவீ பெக், ஒன்ரேறியா, முதலிய நான்கு மாகாணங்கள் கொண்ட கனடா இராச்யம் அமைக்கப்பட்டது. இது ஒரு சமட்டி அரசியலைக் கொண்டதாயினும், இந்தச் சமட்டியில் மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரங்கள் அதிகம். நாளடைவில் மேற்கிலுள்ள மாகாணங்களும் சேர்க்கப்படவே, கனடா, அல்பட்டா, பிரித்தானிய கொலம்பியா, மானிடோபா, சசுகட்செவான், ஒன்ரே றியோ, குவிபெக், நியூபிரன்சுவிக், நோவாசுகோசியா, பிரின்சு எட்வேட் தீவு என்ற ஒன்பது மாகாணங்கள் கொண்ட ஒரு பெரும் இராச்சியமாக அமைந்தது. பிற் காலத்தில் இதன் தொழில்வளமும், செல்வமும் பெருகிய தால், சாம்ராச்சியத்தின் முக்கியமானதோர் பகுதியாக விளங்கலாயிற்று. கனடாவே முதன் முதல் ‘டொமினி யன் அந்தசு’ என்ற பெருமையைப் பெற்ற நாடாகும். இவ்வாறு அமெரிக்கக் குடியேற்றங்களை இழந்த பிறகு, குடியேற்ற நாடுகளுக்குப் பொறுப்பாட்சி அளிக்கும் விசாலமான புதிய கொள்கையைப் பிரித்தானியர் கடைப் பிடிக்கத் தொடங்கியதற்குக் கனடியச் சரித்திரமே சான் றாகும். வட அமெரிக்காவில், ஐக்கிய அமெரிக்கா 1783-ல் ஆங்கில அரசாங்கத்துடன் போரிட்டுச் சுதந்திரம் பெற்ற தாயினும், கனடா தாய்நாட்டினரிடம் பற்றுதல் கொண் டிருந்தது. இதனால், 1812-ல் கனடாவிற்கும் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்குமிடையே போர் தொடங்கியது. அமெரிக்கரின் தலைநகரமான வாசிங்டன்கூடப் பிடிபட்ட தெனினும், இறுதியிற் கனடியர் துரத்தப்பட்டனர். பிறகு நேர்ந்த சமாதான உடன்படிக்கையின்படி கனடாவும்

ஐக்கிய அமெரிக்காவும் தமது எல்லையை வகுத்துக் கொண்டன. உலகிலேயே இந்த இருநாடுகளையும் பிரிக்கும் எல்லைக் கோட்டைப்போல, வேறு எந்த எல்லைக் கோடும் சமாதானமான முறையில் பாதுகாக்கப்பட வில்லை.

கண்டங்களிற் சிறியதான அவுசுத்திரேலியா, சில நூற்றுண்டுகளுக்கு முன்னரே தாசுமேன் (Tasman) முதலிய ஒல்லாந்த மாலுமிகளுக்குத் தெரிந்திருந்த தாயினும், 1770-ல் பிரித்தானிய மாலுமியான காப்டன் குக் என்பவனுல் கண்டுபிடிக்கப்பட்டது. அமெரிக்கக் குடியேற்றங்களை இழந்து சாம்ராச்சியத்தைப் பெருக்கு வதில் விருப்பமின்றியிருந்த பிரித்தானியர், அப்போது இந்தத் தீவைப் பயன்படுத்த முயலவில்லை. சில ஆண்டுகளுக்குப் பிறகு இங்குத் தீவாந்தர சிட்சை விதிக்கப் பெற்ற குற்றவாளிகளை மட்டும் அனுப்பிவந் தனர். பிறகு இங்குள்ள நிலவளத்தைக் கண்டு சாதாரண சனங்களும் இங்குக் குடியேறலாயினர். இவர் கள் நியூசவுத்வேல்சு என்ற குடியேற்றத்தை அமைத் தனர். பிறகு குற்றவாளிகளை அனுப்புவது நிறுத்தப் பட்டதால், மேற்கு அவுசுத்திரேலியாவிலும் குடியேற்றங் கள் தோன்றின. குடியேற்றங்களை அமைக்க உதவியவர் களில் சேர். சோர்ச்கிரே பிரதானமானவர். 1860-ஆம் ஆண்டளவில் இந்த நாட்டில், மேற்கு அவுசுத்திரேலியா, தென் அவுசுத்திரேலியா, விக்டோரியா, குவீன்சுலாந்து, நியூ சவுத்வேல்சு என்ற மாகாணங்கள் அமைக்கப் பட்டன.

1850-க்குப் பிறகு பொன்னும் வெள்ளியும் இந்த நாட்டில் ஏராளமாகக் கிடைப்பதை அறிந்த பிரித்தானி யரும், மற்றவர்களும் பெரும் அளவில் இங்குக் குடியேறி னர். சில ஆண்டுகளில், இந்த மாகாணங்களுக்குப் பொறுப்பாட்சி வழங்கப்பட்ட போதிலும், இவை தமக் குள் ஐக்கியமின்றிச் சச்சரவிட்டுக் கொண்டிருந்தன.

ஆனால், 1870-க்குப் பிறகு பிரான்சுக்காரர், சேர்மானியர் போன்ற ஐரோப்பியரும் சீன-யப்பானியரும் பசுபிக் தீவுகளிற் கருத்தைச் செலுத்தியமையால் அச்சமடைந்த அவுசுத்திரேலிய மக்கள் ஐக்கியமடைந்து, ஒரு மத்திய அரசாங்கத்தை நிறுவிக்கொள்ள விரும்பினர். 1900-ம் ஆண்டில் பிரித்தானிய பாராளுமன்றம் ஒரு சட்டத்தை இயற்றி, அவுசுத்திரேலிய இராச்சியத்தை அங்கீகரித்தது. கனடாவைப்போல இதுவும் ஒரு 'டொமினியன்' ஆகும். ஆனால், இங்குள்ள சமட்டி அரசியலில், மத்திய அரசாங்கம் அத்துணை அதிகாரம் வாய்ந்ததல்ல. கன்பெரா நகரில் மத்திய அரசாங்கத்தின் பாராளுமன்றமும், காரியாலயங்களும் உள்ளன. அவுசுத்திரேலியர் முதல் உலகப் போரிலும், இரண்டாம் உலகப் போரிலும் கலந்துகொண்டு, பிரித்தானிய மன்னரிடம் தமக்குள்ள விசுவாசத்தை நன்கு வெளிப்படுத்தினர். இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் அவுசுத்திரேலியாவில் பற்பல தொழிற்சாலைகளும் நிறுவப்பட்டு, நன்கு வளர்ச்சியடைந்துள்ளன.

இந்த நாட்டிற்கு அருகிலுள்ள நியூசிலாந்து என்ற தீவுகளை, அதன் சுவாத்தியநிலை காரணமாக இங்கிலாந்துடன் ஒப்பிடுவதுண்டு. இவைகளும் காப்டன் குக்கினல் கண்டறியப்பட்டவையாகும். இங்கு 'மயோரிகள்' எனப்படும் சுதேசிகள் வாழ்ந்தனர். முதலில் அவர்களுடன் போர் நிகழ்ந்ததாயினும், **எட்வர்டு-கிரே** போன்றவர்களின் முயற்சியால் அவர்கள் சமாதானப்படுத்தப்பட்டனர். 1870-லிருந்து இரு வகுப்பினரிடையினும் சமாதானம் நிலவியது. அமெரிக்காவில் செவ்விந்தியர் முதலிய சுதேசிகள் கொடுமைப்படுத்தப்பட்டது போலன்றி, மயோரிகளுக்குச் சில பகுதிகளில் நிலம் சொந்தமாக வைத்திருக்கும் உரிமையும் வழங்கப்பட்டிருப்பதாலும் அவர்கள் நன்கு நடத்தப்படுவதாலும் விசுவாசமுள்ள பிரசைகளாக விளங்கி வருகின்றனர். இங்குக்


போர்த்துகல்
அரேபியா
எகிப்து
நைஜீரியா
அபிசீனியா
பெல்ஜியம்
கொங்கோ
காபிண்டா
அங்கோலா
சான்சிபர்
நெட்டால்
பிரித்தானிய ஆட்சி
பிரான்சிய ஆட்சி
போர்த்துக்கல் ஆட்சி
ஸ்பெயின் ஆட்சி
பெல்ஜிய ஆட்சி
இத்தாலிய ஆட்சி
சுயராச்சிய நாடுகள்
அபிரிக்கா

படம் 55. ஆபிரிக்கா

குறைந்த சனத்தொகை இருப்பதாலும், தாவரவளம் மிகுந்திருப்பதாலும், ஆட்சி ஏற்பாடுகளும் சமுதாய வாழ்க்கையும் சிறந்த முறையில் அமைந்துள்ளன. நியூசிலாந்து 'டொமினியன்களில்' ஒன்ருகச் சிறப்படைந்து விளங்குகிறது.

ஆனல், தென் ஆபிரிக்காவில், பெரும் போராட்டத்திற்குப் பிறகே, 'தென் ஆபிரிக்க யூனியன்' அமைக்கப்பட்டது. நெப்போலிய யுத்தத்திற்கு முன்னர் நன்னம்பிக்கை முனைப் பிரதேசத்தில் ஒல்லாந்தர் தங்கியிருந்தனர். அவர்களில் கமக்காரரர்கள் **'போயர்கள்'** எனப்பட்டனர். இவர்கள் சுதேசிகளை அடிமைகளாக வைத்துக்கொண்டு வேளாண்மை செய்து இலாபமடைந்தனர். நெப்போலிய யுத்தத்திற்குப் பின் **வியன்ன காங்கிரசு** (1815) செய்த ஏற்பாட்டினல் இந்தப் பிரதேசம் ஆங்கிலேயர் வசம் வந்தது. 1833-ல் ஆங்கிலேயர் தம் சாம்ராச்சியமெங்கும் அடிமை வியாபாரத்தை ஒழித்தமையால், இந்தப் 'போயர்கள்' கோபமடைந்தனர். அடிமை வியாபார ஒழிப்பால், அவர்களுடைய வேளாண்மைக்கு இடையூறு நேர்ந்ததாலும், ஆங்கிலேயர் மேன்மேலும் குடியேறித் தொழில்களையும் வியாபாரத்தையும் கைப்பற்றத் தொடங்கியதாலும், 1836-ல் போயர்கள் பலர் நன்னம்பிக்கை முனை நாட்டிலிருந்து புறப்பட்டு, உள்நாட்டில் 'நேத்தால்' பிரதேசத்தை அடைந்து, அங்குக் குடியேற்றம் அமைத்தனர். இதுவே 'பெரும் பிரயாணம்' (The Great Trek) எனப்படும். அங்கும் பிரித்தானிய ஆதிபத்தியம் தொடரவே, அவர்கள் வேறு இரு குடியேற்றங்களைத் தாபித்துக் கொண்டனர். இக் குடியேற்றங்கள் 'திரான்சுவால்,' 'ஆரஞ்சுக் குடியரசு' என வழங்கப் பெற்றன. தொடக்கத்தில், இவற்றைச் சுதந்திரக் குடியரசுகளாகப் பிரித்தானிய அரசாங்கமும் அங்கீகரித்தது. ஆங்கிலேயருக்கும், ஆபிரிக்கச் சுதேசிகளான சுலுக்களுக்கும் 1878-ல் போர் நிகழ்ந்து, அதன் பயனக திரான்சு

வாலுக்கு அருகிலுள்ள சுலுக்லாந்து பிரித்தானியருடைய தாயிற்று. இதனுல் சுலுக்களின் பயம் நீங்கி திரான்சு வால் போயர்கள் சுய ஆட்சி பெற முயன்று பிரித்தா னியரை எதிர்த்துப் போர்புரிந்தனர். இது 'முதற் போயர் யுத்தம்' எனப்படும். இதன் முடிவில் திரான்சுவாலின் வெளிநாட்டு உறவு நீங்கலாக மற்ற அதிகாரங்கள் அதன் குடிகள் வசமே விடப்பட்டன.

இதற்குப் பிறகு **செசிசுரோட்சு, போல்குருகர்** என்ற இருவர் ஆபிரிக்கச் சரித்திரத்தில் பிரசித்தி அடைந் தனர். இவர்களில், ஏழைத் தொழிலாளியாகச் சென்று பெரும் வைரச்சுரங்கச் சொந்தக்காரனுக உயர்ந்து விளங்கிய செசிசுரோட்சு, பிரித்தானிய ஏகாதிபத்தி யத்தை விருத்தி செய்வதில் முனைந்தான். ஆபிரிக்காவில் வடக்கே கெய்ரோவிலிருந்து தெற்கே நன்னம்பிக்கை முனைவரைப் பிரித்தானியச் சாம்ராச்சியம் பரந்து கிடக்க வேண்டுமென்றும், அதற்கு முதற்படியாக, ஒரு புகை இரதப் பாதையால் இரு நகரங்களையும் இணைக்க வேண்டு மென்றும் ரோட்சு கனவு கண்டான். இவன் திரான்சு வாலுக்கு வடக்கே 'ரொடீசியா' என்ற பெருங் குடி யேற்றத்தை அமைத்தமையால், போயர்கள் அச்ச மடைந்து, தம் குடியரசுக்குப் போல் குருகரைத் தலைவ ராக்கிக் கொண்டனர். மேலும், அப்போது திரான்சு வாலில் கிடைத்த பொன்னை நாடிக் குழுமிய பற்பல ஐரோப்பியச் சாதியினருக்கும் வாக்குரிமையை வழங்க மறுத்தனர். இதன் பயனுக, ஆங்கிலேயர் சீற்றமடைந்து போயர்களை எதிர்க்கத் தருணம் பார்த்திருந்தனர். செசில் ரோட்சு நன்னம்பிக்கை முனைக் குடியேற்றத்தின் பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், இரகசியமாக ஆங்கிலக் கிளர்ச்சியாளருக்கு உதவி புரிந்தான். முக்கிய மாக, டாக்டர் யேமிசன் என்ற பாதிரி சில துணைவர்க ளோடு படையெடுத்தான். அந்தப் படையெடுப்பைப் போயர்கள் தடுத்து முறியடித்தனர். போயர்களின்

வெற்றியைக் கண்ட சேர்மானிய சக்கராதிபதியான கெய்சர் வில்லியம் போல் குரூகருக்குச் சந்தோஷச் செய்தி அனுப்பினர். இதன் பயனுக, டிரான்சுவாலில் கலகம் விளைந்ததும், குரூகர் தலைமையில் இரு போயர் குடியேற்றங்களும் பிரித்தானியருக் கெதிராகப் போர் தொடுத்தன. இதுவே ' இரண்டாம் போயர் யுத்த 'மாகும். 1899-லிருந்து 1902-ல் உடன்படிக்கை ஏற்படும்வரை இரு குடியரசுகளும் மூர்க்கமாகப் போரிட்டன. போயர்களின் தளபதிகளான போதாவும், சுமட்சும் திறமைசாலிகளா கையால், பிரித்தானியச் சேனை பெரிதும் இடர்ப்பட்டது. முடிவில், சேனுதிபதி கிச்னர் பிரபுவின் சாதுரியத்தால் போயர்கள் முறியடிக்கப்பட்டுச் சமாதானத்தை நாடினர். அவர்களது குடியரசுகள் சாம்ராச்சியத்தின் பகுதிகளாகி விட்டன. பிறகு போயர்கள் ஆங்கிலச் சாம்ராச்சியத்தில் அடங்கியிருக்க இசைந்தமையால், மாகாணங்களுக்குப் பொறுப்பாட்சி வழங்கப்பட்டது. 1907-ஆம் ஆண்டில் நான்கு மாகாணங்களுஞ் சேர்ந்த ' தென்னுபிரிக்க யூனியன் ' வகுக்கப்பட்டு, அதற்கு ' டொமினியன் பதவி ' அளிக்கப்பட்டது. பின்னர்ப் போதா, சுமட்சு முதலிய போயர் தலைவர்கள் மனப்பூர்வமாக ஒத்துழைத்து, தென்னுபிரிக்க யூனியனையும் சாம்ராச்சியத்தின் ஓர் அங்கமாக நிலைத்திருக்குமாறு செய்துள்ளனர்.

சாம்ராச்சியத்தினின்றும் விலகி நிற்கும் அயர் லாந்து சமீப காலம் வரை சாம்ராச்சியத்தின் ஒரு பகுதி யாகவே விளங்கியுள்ளதென்பதையும் மறக்கலாகாது. சுமார் 700 ஆண்டுகளாகவே அயர்லாந்தின் பெரும் பகுதி பிரித்தானியர் ஆட்சியின்கீழ் இருந்து வந்திருக்கிறது. பெரும்பாலும் பிரித்தானியரின் அடக்குமுறையால், ஐரிசு மக்கள் துன்புற்றிருக்கின்றனர். இதனுல், சுதந் திரம் பெறுவதற்காகப் பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஓகானல், பார்னெல் முதலிய தலைவர்களின்கீழ் ஐரிசு காரர்கள் பெரும் முயற்சி செய்து வந்துள்ளனர். ஆனுல்,

அவர்களுக்குச் சுய ஆட்சி அளிப்பதற்காகப் பிரித்தானிய பிரதமர் கிளாசுடன் செய்த முயற்சி சித்திபெறவில்லை. பிறகு **சின்பீன்** என்ற கட்சி தோன்றி, நாட்டில் கலகம் விளைத்தது. முதல் உலக யுத்தம் முடிவுற்றதும், ஐரிசு தலைவர்களான **மைக்கேல் கொலின்சு, கிரிபித்சு, ஈமன் டிவேலரா** முதலியவர்கள் சுயாட்சி கோரி போராட்டம் தொடங்கினர். வட அயர்லாந்திலுள்ள புரட்டசுதந்து மக்கள் அதனை எதிர்த்தமையால், வட அயர்லாந்தாகிய **அல்சுடர்** பிரிக்கப்பட்டுத் தென் அயர்லாந்திற்குச் சுயாட்சி அளிக்கப்பட்டது. இவ்வாறு பிரிவினை செய்யப் பட்டதற்குக் காரணம், புரட்டசுதந்துகளும் சுகொட்லாந்திய மக்களின் வழித் தோன்றல்களுமாகிய அல்சுடர் மக்கள் பிரித்தானியருடன் நீடித்த தொடர்பை விரும்புவதேயாகும். பிரிவினையைக் **கொலின்சு** முதலியவர்கள் ஏற்றுக்கொண்டதும், டிவேலரா போன்ற தீவிரவாதிகள் அவர்களை எதிர்க்கவே, ஐரிசு மக்களிடையே போர் மூண்டது. சிறிது காலத்திற்குப் பின்னர்ச் **சின்பீன்** கட்சியினரும் அரசாங்கத்தை ஏற்று நடத்த முன்வந்தனர். 1921-ல் தென் இராச்சியம் சுய ஆட்சி பெற்ற பிறகும் சுதந்திர ஐரிசுகாரர்கள் வடபகுதியைச் சேர்த்துக்கொள்ள முயன்றனர். ஆயினும், அது இயலாததால், 1928-ல் டிவேலரா பிரதமரானதும், தென் அயர்லாந்தை பிரிட்டனுடன் சற்றுந் தொடர்பற்ற குடியரசாகச் செய்து விட்டார். பிறகு இரண்டாம் உலகப் போர்க் காலத்திலுஞ் சுதந்திர அயர்லாந்து நடுநிலையே வகித்தது.

இவ்வாறே ஆபிரிக்காவிலும் ஆசியாவின் பல பகுதிகளிலும் பிரித்தானியச் சாம்ராச்சியம் நிலைபெற்ற வரலாற்றை இந்த நூலில் ஆங்காங்குப் படித்திருப்பீர்கள். இனிச் சாம்ராச்சிய அமைப்பில் நேர்ந்த மாறுதல்களைச் சுருக்கமாகக் கூறுவோம் :

சென்ற நூற்றுண்டின் மத்தியில் ' டர்காம் அறிக்கை ' வெளியானதிலிருந்து, ' சாம்ராச்சியக் கொள்கை '

(Colonial policy) மாறியது. இனிக் குடியேற்றங்கள் வளர்ச்சியுறும்போது அவற்றிற்குப் பொறுப்பாட்சி அளித்துப் பிரித்தானியருடன் தொடர்பு கொள்ளச் செய்து வைப்பதே இதன் சாராம்சம். இவ்வாறு தாய் நாட்டின் சுயநலத்தின் பொருட்டுக் குடியேற்றங்களைத் துன்புறுத்தி, அவற்றின்மீது வரி விதித்தும் வியாபாரத் தடைகள் விதித்தும் கொடுமைப்படுத்துவது என்ற "பழைய குடியேற்ற நாட்டுக் கொள்கை" அடியோடு மறைந்தது. ஒவ்வொரு குடியேற்ற நாட்டிலும் அரசியல் வளர்ச்சிக்கு இடமளித்துச் சிறிது சிறிதாகச் சுயாட்சி உரிமை தந்து, இரண்டு நாடுகளுக்கும் நலம் காணும் வகையில் வியாபார ஏற்பாடுகளும் பாதுகாப்பு ஏற்பாடு களும் செய்துகொள்ளுதலே நலம் என்ற புதிய கருத்து தோன்றிவிட்டது. இந்தப் புதிய கொள்கையின் அடிப் படையிற் சாம்ராச்சிய உறவை நீடித்திருக்கச் செய்யலாம் என்பதைப் பிரித்தானியர் நன்கு உணர்ந்தனர். விக் டோரியா ராணியின் வைரவிழாக் காலத்தில் டொமீனியன் பிரதமர்கள் ஒன்று கூடியதிலிருந்து, அத்தகைய 'சாம் ராச்சிய மகா நாடுகள்' கூடிப் பொதுப் பிரச்னைகளை விவாதிப்பது வழக்கமாயிற்று. இந்த மகா நாடுகள் சாம்ராச்சியத்தில் ஒற்றுமையை வளர்த்தன. முதல் உலகப் போர்க் காலத்திலிருந்து சாம்ராச்சியப் பிரதமர் களைக் கலந்தாலோசிப்பது அவசியமானபடியால், அவர் களுக்கு அயல்நாட்டுக் கொள்கை வகுப்பதிலும் இடம் கிடைத்தது. யுத்தம் முடிந்ததும், குடியேற்றங்கள் மீதிருந்த அதிகாரங்களைத் தாய்நாடு மேலும் குறைத்துக் கொண்டது. அயல்நாட்டு உறவுகளைத் தீர்மானித்தல், மற்ற நாடுகளுடன் வியாபார உறவு கொள்ளுதல், சாம் ராச்சியப் பாதுகாப்பு போன்ற பொதுவான அதிகாரங் களைத் தாய்நாடு குடியேற்ற நாடுகளிடம் கொடுத்து, அவற்றைத் தனக்குச் சமமாகக் கருதும் நிலையை ஏற்றுக் கொண்டது. இதனால், 1926-ல் **போறப்பர் அறிக்கை**

யாலும், 1931-ஆம் ஆண்டில் வெசுட் மினிசுடர் சட்டத்தாலும், சாம்ராச்சியம் என்ற பெயர் மறைந்து, 'டொமீனியன்கள் அடங்கிய ஆங்கில காமன் வெல்த்' என்ற புதிய பெயர் இந்த அமைப்பிற்குக் கொடுக்கப்பட்டது. 'இந்த டொமீனியன்கள் தமக்குள்ளும் பிரித்தானியாவுடனும் சம அந்தத்து வகிப்பவை; இவைகளை இணைத்து வைப்பது பிரித்தானிய மகுடம் ஒன்றே' என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. பிறகு 1932-ல் ஒட்டாவா முதலிய இடங்களில் நிகழ்ந்த சாம்ராச்சியச் சலுகை மகாநாடு (Imperial preference) களிற் சாம்ராச்சிய நாடுகள் தமக்குள் வியாபார உறவை வளர்ப்பதற்கேற்ற வழிகள் வகுக்கப்பட்டன. இந்தப் புதிய அமைப்பிலும், 1950-ல் இந்தியா குடியரசாகத் திகழ்வதென முடிவு செய்ததும், ஒரு முக்கியமான மாறுதல் செய்யப்பட்டது. அதன் பலனாக, ஆங்கில மன்னரிடம் விசுவாசம் செலுத்தும் நாடே 'காமன்வெல்த்'தில் அங்கம் வகிக்க வேண்டுமென்ற கருத்து மாறி, ஆங்கில மன்னர் 'காமன் வெல்த்தின் தலைவர்' என்ற அந்தத்து ஒன்றுமட்டும் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இந்தவகையில், இந்தக் 'காமன்வெல்த்' ஒரு விசித்திரமான அமைப்பு என்பதில் தடையில்லை; இத்தகைய ஒரு கூட்டுறவு இத்துணை உறுதியாக நிலைத்திருப்பது சரித்திரம் இதுவரை கண்டறியாத அதிசயமாகும்; அறிஞர்கள் கூறுவதுபோலச் சர்வதேச ஒற்றுமைக்கும் இதுவே வழிகாட்டியாகும்.

## இன்றுள்ள ‘காமன்வெல்த்’ அமைப்பு
## (விளக்கப் படம்)

**ஆங்கில மன்னர்**

- காமன்வெல்த் தலைவராக ஏற்பவை
  - இந்தியக் குடியரசு
  - பாகித்தான்
- மன்னரிடம் விசுவாசமுள்ளவை
  - பிரித்தானியா
  - கனடா
  - அவுத்திரேலியா
  - நியூசீலந்து
  - தென்னாப் பிரிக்க யூனியன்
  - இலங்கை

[N. B : நம் இலங்கை நாடும் விரைவில் குடியரசாக மாறி, பிரித்தானிய மன்னரைக் காமன்வெல்த் தலைவராகமட்டும் ஏற்கக்கூடுமென்ற நிலை விரைவில் தோன்றக்கூடும்.]

### வினாக்கள்

1. தென்னாபிரிக்காவில் ஆங்கிலேயர் எவ்வாறு நிலை பெற்றனர்?
2. தென்னாபிரிக்க யூனியன் எவ்வாறு வளர்ச்சியுற்றது?
3. அவுத்திரேலிய சமட்டி எவ்வாறு உருவாயிற்று?
4. கனடாவில் பொறுப்பாட்சி தோன்றிய வரலாற்றை விளக்குக.
5. அயர்லாந்தின் இன்றைய நிலை யாது?
6. ‘புதிய சாம்ராச்சியக் கொள்கை’ என்பது யாது? இதற்கும் பழைய சாம்ராச்சியக் கொள்கைக்குமுள்ள வேறுபாடுகள் யாவை?
7. புதிய சாம்ராச்சியக் கொள்கை எவ்வாறு உருவாகியது?
8. ‘காமன்வெல்த்’—இதன் அமைப்பை விளக்குக.

### பயிற்சி

உலகப் படத்தில் பிரித்தானியக் காமன்வெல்த் பகுதிகளையும் மற்றைய சாம்ராச்சியப் பகுதிகளையும் குறிப்பிடுக.

# 14. கீழ்த்திசைப் பிரச்னை

ஐரோப்பாவின் தென்கிழக்குப் பகுதியில் துருக்கியர் ஆதிக்கம் செலுத்திவந்தமையால், அவர்களுக்கும் அவர்களுக்கடங்கியிருந்த ஐரோப்பியக் கிறித்தவர்களுக்குமிடையே இடைவிடாது சச்சரவுகள் நிகழ்ந்தன. இக்காரணத்தால், பிற ஐரோப்பிய நாட்டினர் இந்தப் பிரதேசத்தின் பிரச்னைகளில் ஈடுபடலாயினர். இதுவே "கீழ்த்திசைப் பிரச்னை" (Eastern Question) எனப்பட்டது.

பதினான்காம் நூற்றாண்டில் "கோன்சுதாந்திநோப்பிள்" என்ற நகரத்தை இராசதானியாகக் கொண்டு ஆட்சிபுரிந்த "கீழ்த்திசைச் சக்கரவர்த்திகள்" (Eastern Emperors) தமக்கு உதவிபுரியுமாறு துருக்கியரை ஆசியாவினின்றும் அழைப்பித்தனர். அதனால் அங்குப் புக நேர்ந்த துருக்கியர், பின்னர் அங்கேயே நிலைபெற்றுவிட்டனர். அப்போது கிரேக்க சக்கராதிபத்தியம் தனது பண்டைப் பெருமையை இழந்து பல துண்டுகளாகச் சிதறிக் கிடந்தமையால், துருக்கியர் தம் ஆதிக்கத்தை நிறுவுவது எளிதாயிற்று. 1393-ம் ஆண்டிற்குள் பல்கேரியர் வாழும் மாகாணங்களை அவர்கள் கைப்பற்றினர்; 1459-ல் செர்பியா இராச்சியமும், 1461-ல் போசுனியாவும் அவர்கள் வசமாயின. இதற்கும் முன்னரே 1453-ல் கோன்சுதாந்திநோப்பிள் துருக்கியர் வசமானதும், கிரேக்க சாம்ராச்சியம் மறைந்தொழிந்தது.

"கோன்சுதாந்திநோப்பிளின் வீழ்ச்சி, உலக சரித்திரத்தில் பிரதானமானதொரு சம்பவம்," என்பார் மேரியட் என்ற சரித்திராசிரியர். ஏனெனில், அதன் வீழ்ச்சி காரணமாகக் கிரேக்க-உரோம சாம்ராச்சியங்களின் இறுதிச் சின்னங்களும் மறைந்தன; கீழ்நாடுகளுடன் வர்த்தகம் புரிய ஐரோப்பியர் உபயோகித்த தரைமார்க்கம் தடைப்பட்டது; அதனாற் புதிய கடல் மார்க்கங்கள் தோன்றுவதற்கும் இடமுண்டாயிற்று; ஐரோப்பாவில்

கிரேக்க இலக்கியங்கள் பரவி, புதியதோர் கலை மறு மலர்ச்சியும் மதச்சீர்திருத்த உணர்ச்சியும் உதயமாவ தற்கும் ஏற்ற சூழ்நிலையை உண்டாக்கின. இவ்வாறு கோன்சுதாந்திநோப்பிளின் வீழ்ச்சி, புதுயுகத்தின் ஆரம்ப அறிகுறியாகவே அமைந்து விட்டது.

பிறகு ஒரு நூற்றுண்டிற்குள்ளாக, துருக்கிய சாம் ராச்சியம் ஐரோப்பாவில் மட்டுமன்றிச் சிரியா, எகிப்து, அரேபியா, மெசபொட்டேமியா என்ற பகுதிகளில் பரவி விட்டது. **சுலைமான்** (1526–66) என்ற சுல்தானின் ஆட்சிக்காலத்தில் துருக்கிய ஆதிபத்தியம் பல்வகை களிலும் சிறப்புற்றிருந்தது. துருக்கியச் சட்டங்களை திருத்தியமைத்த பெருமையும் இந்த மன்னனுக்குரிய தாகும். இவன் 1526-ல் **மோகாக்சு** என்ற இடத்தில் அங்கேரிய தலைவர்களை முறியடித்துச் சில ஆண்டுகளில் அந்த நாடு முழுவதையும் கைப்பற்றிவிட்டான். இதனுல் ஆசுதிரிய சாம்ராச்சியத்திற்கும் ஆபத்து நேர்ந்தது. அதன் தலைநகரமான வியன்னுவையும் அவன் கைப்பற்ற முயன்ருன். ஆனுல் ஐரோப்பியர் ஒன்றுபட்டு அதனைக் காத்தமையால், இருபத்துநான்கு தினங்கள் முற்றுகையிட்டும் பயன்படாமல் சுலைமான் திரும்ப நேர்ந்தது. எனினும், கிழக்கு ஐரோப்பாவில் நெடுந்தூரம் துருக்கியராதிபத்தியம் பரவி விட்டது.

ஆனுல், பதினேழாம் நூற்றுண்டின் இறுதியில், துருக்கியரை மத்திய ஐரோப்பாவினின்றும் துரத்த லாயினர். 1683-ல் வியன்னுவைக் கைப்பற்ற முயன்ற **காராமுசுதபாவைப்** போலந்து மன்னன் **சோபிசுகி** தோற்கடித்தான்; 1697-ல் சென்டா என்ற இடத்தில் **உயூசின்** மீண்டும் துருக்கிய சேனையை முறியடித்தார். இந்தக் காலத்திலிருந்தே துருக்கிய சாம்ராச்சியத்தின் அழிவுநிலை தோன்றிவிட்டதெனலாம்.

பதினெட்டாம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்து **“கீழ்த்திசைப் பிரச்னை”** என்பதன் பொருளே மாறுத

லடைந்து விட்டது. ஏனெனில், துருக்கியருக்குப் பதிலாக ருசியர் கிழக்கு ஐரோப்பாவில் உயர்வு பெற்று விட்டனர். அவர்களுக்கும் துருக்கியருக்குமிடையே அரசியற் காரணங்களாலும் மதவேற்றுமையாலும் பகைமை தோன்றியது. இந்தப் பகைமை உணர்ச்சியே இனிக் கீழ்த்திசைப் பிரச்னையின் ஆணிவேராகும்.

1696–ம் ஆண்டிலேயே பீற்றர் மன்னன் கருங்கடலையடுத்துள்ள 'அசாவ்' கடலைத் துருக்கியரிடமிருந்து கைப்பற்றினன் என முன்னேர் அத்தியாயத்திற் கூறினேமல்லவா? 1711-ம் ஆண்டில் அதனைக் கைவிட நேர்ந்ததாயினும், மீண்டும் அது ருசியரின் உடைமை ஆயிற்று; 1739-ல் 'பெல்கிரேடு ஒப்பந்தத்தால்' அது ருசியருக்கே உரியதென ஒப்புக் கொள்ளப்பட்டது. இவ்வாறு கருங்கடலிற் பிரவேசித்த ருசியர் அந்தக் கடலின்மீது பெரும் அளவில் ஆதிபத்தியம் பெறுவதற்குப் பல ஆண்டுகளாயின. இரண்டாவது கதரைன் என்ற இராணியின் திறமையாலேயே அந்த ஆதிபத்தியம் கிடைத்தது. 1762-ல் தனது திறமையற்ற கணவனை விலக்கிய பிறகு அரசுரிமை பெற்ற அவள், முப்பத்து நான்கு ஆண்டுகள் ஆட்சி புரிந்தாள். அவளது ஆட்சிக் காலத்தில் போலந்து அழிக்கப்பட்டதாலும் துருக்கி ஒடுக்கப்பட்டதாலும் ருசிய சாம்ராச்சியமும் ஆதிபத்தியமும் மேற்கிலும் தெற்கிலும் பரவின.. 1764-ல் அவள் போலந்தைப் பிரடரிக்குடன் பங்கிட்டுக் கொண்டதற்கு ஒரு காரணம், அங்குத் துருக்கியர் செலுத்திய ஆதிபத்தியத்தை அழிப்பதேயாகும். இதனுற் சினங்கொண்ட துருக்கியர் 1768-ல் ருசியர்மீது போர் தொடுத்தனர். அவர்கள் நீசுடர் நதிக்கரையில் முறியடிக்கப்பட்டு, புகாரெசுடு நகரமும் ருசியர் வசமாயிற்று. ருசியக் கடற்படை 'மோரியா'வில் வெற்றி பெருவிடினும், சியாசு என்ற இடத்துத் துருக்கியக் கடற்படையைப் புறங் கண்டது. 1771-ம் ஆண்டிற்குள் கிரிமியத் தீபகற்பமும்

மோல்டேவியா, வாலாச்சியா மாகாணங்களும் ரூசியரால் கைப்பற்றப்பட்டன. 1774-ம் ஆண்டில் கைனுர்ச்சி என்ற இடத்து நிகழ்ந்த ஒப்பந்தத்தால் போர் நிறுத்தப் பட்டு, மோல்டேவியா முதலிய தென் மாகாணங்கள் துருக்கியர் வசம் விடப்பெற்றன. ஆயினும் அங்குக் குழப்பம் நேர்ந்தால் ரூசியர் தலையிடும் உரிமையைத் துருக்கியர் ஏற்றுக் கொண்டனர். மற்றப் பிரதேசங்களை ரூசியர் வைத்துக் கொண்டமையால், அவர்களுக்குக் கருங்கடல்மீது ஆதிபத்தியஞ் செலுத்த வாய்ப்புக் கிடைத்தது. கருங்கடலில், எப்போதுங் கப்பல்களைச் செலுத்தவும் துருக்கிய சாம்ராச்சியத்தில் வியாபாரம் புரியவும், கிரேக்கக் கிறித்தவரின் உரிமைகளைக் காக்கவும் ரூசியர் உரிமை பெற்றனர். இந்த ஒப்பந்தத்தால் துணிவு பெற்ற கதரைன் பால்கன் தீபகற்பத்திலிருந்து துருக்கிய ரைத் துரத்தவும் 1782-ல் திட்டம் வகுத்தாள். அது முழுவதும் நிறைவேருவிடினும், கிரிமியத் தீபகற்பத்தில் கோட்டைகொத்தளங்கள் அமைக்கப்பட்டன. கிரேக்கர், உரூமேனியர் போன்றவர்களின் கிளர்ச்சிகளும் ஆதரிக்கப் பட்டன. மீண்டும் இதனுற் போர் தோன்றியது. 1789-ல் ரூசியர் சில கோட்டைகளையும் ஆசுதிரியர் பெல்கிரேடு, போசுனியா முதலிய பிரதேசங்களையும் கைப்பற்றினர். 1791-ல் துருக்கியர் ஆசுதிரியருடன் சிசுடோவாவிலும் 1792-ல் ரூசியருடன் சாசுசியிலும் புரிந்துகொண்ட உடன்படிக்கைகளால், சில இடங்களைத் திரும்பப் பெற்றன ராயினும், ரூசியரின் வலிமையும் ஆதிபத்தியமும் குறைக்கப்படவில்லை. “நான் ரூசியாவிற்கு வந்தபோது எளிய சிறு பெண்ணுக இருந்தேன்; ரூசியா அரசியாக ஏற்றுக்கொண்டு என்னைப் போற்றியது. நானும் அசாவ், கிரிமியா, உக்ரேன் முதலிய பிரதேசங்களைப் பெற்றுத் தந்து எனது நன்றியைச் செலுத்திவிட்டேன்!” என்று இராணி கதரைன் கூறியவாறு, ரூசியா கருங்கடற் பகுதியிலும் பால்கன் தீபகற்பத்திலும் வேரூன்றியது.

மறு நூற்ருண்டில், இங்கு ரூசிய ஆதிபத்தியம் மேலும் வளர்ச்சியுற்று, பிரான்சும், பிரித்தானியாவும் தலையிடுமளவிற்கு வந்துவிட்டது. பிரான்சியப் புரட்சியால் தூண்டப் பெற்ற செர்பியர், 1804-லிருந்து கலகம் விளைத்து, இடைவிடாது போராடி, இறுதியில் 1817-ல் ஓரளவு சுயேச்சை பெற்றனர். 1821-ல் **அலெக்சாந்தர் ஐப்சிலாந்தி** என்ற கோமகனின் தலைமையில் கிரேக்கர் புரட்சி தொடங்கினர். **பில்கே-கெடெய்ரியா** ("நண்பர்கள் குழு") போன்ற இரகசியக் கூட்டங்களும் கிளர்ச்சி புரிந்தன. ஆயினும் ஐப்சிலாந்தியின் கலகம் வெற்றி பெறவில்லை; மோரியாவில் நிகழ்ந்த வேருெரு கிளர்ச்சி ஏழாண்டுகள் தொடர்ந்து நடைபெற்றது. பிரித்தானிய மக்களும் மற்ற ஐரோப்பியரும் கிரேக்கரை ஆதரித்துப் பிரசாரம் புரிந்தனர். கவிஞர் **பைரன்** போன்ருேர் தாமே முன்னின்று போர் புரியவும் முன்வந்தனர். இறுதியில், பிரித்தானியரும் பிரான்சியரும் ரூசியரும் தலையிட்டமையால், 1829-ல் **நவரிநோவில்** துருக்கியக் கடற்படை அழிக்கப்பட்டுக் கிரேக்கர் பாதுகாக்கப்பட்டனர். **ஏட்ரிநோப்பிள்** ஒப்பந்தத்தால், கிரேக்கர் சுதந்திரமடைந்தனர்; மோல்டேவியாவும் வாலாச்சியாவும் ரூசியரின் ஆதரவில் சுயேச்சை பெற்ற நாடுகளாக அமைக்கப்பட்டன. கருங்கடலிலும் டோன்யூப் நதியிலும் தடையற்ற கப்பற் போக்குவரத்து துருக்கியரால் அனுமதிக்கப்பட்டது.

இந்த நிலையில், துருக்கிய சாம்ராச்சியத்திற்குள்ளாகவே, இடையூறுகள் தோன்றின. கிரேக்கரின் விடுதலைப் போரை ஒடுக்குவதற்காக, எகிப்திலிருந்து அதன் இராசப் பிரதிநிதியான **மெகமதாலியின்** படைகள் தருவிக்கப்பட்டிருந்தன. இந்த மெகமதாலி அல்பேனியாவிற் பிறந்து, தனது சுயமுயற்சியால் உயர்வடைந்து, எகிப்தின் தலைவனுக ஏறக்குறைய ஐம்பதாண்டுகளுக்கு (1805 முதல் 1849 வரையிலும்) விளங்கியவன். அவன் சிறந்த நிருவாக ஏற்பாடுகளைச் செய்வித்தான். கிரேக்க

யுத்தத்தில் புரிந்த சேவையின் பொருட்டு அவன் கிரீட்டுத் தீவை (Crete)யும் பெற்ருன். அவனது சேனைகள் சிரியா நாட்டிலும் புகுந்து கிளர்ச்சிகளை ஒடுக்கின. இறுதியில் அவை கோன்சுதாந்திநோப்பிளையே சமீபித்துவிட்டன. அதனுல் அச்சமுற்ற துருக்கிய சுல்தான் மற்ற நாட்டின ரின் உதவியை வேண்டினுன். ருசியா உடனே படை உதவி அனுப்பியதால் பயமடைந்த பிரான்சியரும் பிரித்தானியரும் மெகமதாலியைச் சமாதானப்படுத்தி, அவனுக்குச் சிரியாவிலும் மெசபோட்டேமியாவிலும் சில பகுதிகளைத் தந்து, எகிப்திலும் ஆட்சி உரிமை யளித்தனர்.

அப்போது ருசியரின் நிர்ப்பந்தத்தினுல், அவர்களுடன் துருக்கியர் உங்கியார்-சுகெல்லசி என்ற இடத்தில் 1833-ல் ஒப்பந்தம் புரிய நேரிட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி துருக்கியர் ருசியரின் பாதுகாப்பை ஏற்கவும், ருசியப் படைக் கப்பல்களை யன்றி மற்ற நாட்டுப் படைக் கப்பல்களை கருங்கடல் மார்க்கமாக அனுப்பாதிருக்கவுஞ் சம்மதித்தனர். ஆனுல் ஆங்கிலப் பிரதமர் பாமர்சுடன் பிரபு இந்த ஏற்பாட்டை எதிர்த்தார். இதன் பின்னர் மெகமதாலியுடன் துருக்கிய அரசர் மீண்டும் போரிட நேர்ந்து, சிரியாவையும் அரேபியப் பகுதிகளையும் பிரித்தானியரின் உதவியாற் கைப்பற்றிக் கொண்டார். இந்த உதவிக்கீடாக, யுத்தக்கப்பல் எதனையும் 'போசுபரசு நீரிணை' மூலமாக அனுமதிப்ப தில்லை என்று துருக்கியர் ஒப்புக்கொண்டனர்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, உலூயிநெப்போலியன் பிரான்சு நாட்டில் ஆட்சி புரிந்தபொழுது, கீழ்த்திசைப் பிரச்னை மீண்டும் எழுந்தது. பாலத்தீன நாட்டிலிருந்த துறவி மடங்களைக் "கிரேக்க வைதிக மதத்தாபனம்" (Greek Orthodox Church) எனப்பட்ட கீழைநாட்டுக் கிறித்தவர் நிருவகிப்பதா, அன்றி உரோமாபுரி மதத் தாபனத்தைச் சேர்ந்தோர் நிருவகிப்பதா என்ற வினுவே

அந்தப் பிரச்னேக்கு மூலகாரணமாயிற்று. ருசியர் கீழைநாட்டுக் கிறித்தவராகையால், அந்த இயக்கத்தினரையே ஆதரித்தனர். ஆனுல், துருக்கிய சுல்தான் உலூயி நெப்போலியனின் தூண்டுதலின்பேரில், துறவி மடங்களே உரோமாபுரிக் கிறித்தவருக்கு அளிப்பதற்குச் சம்மதித்தார். ருசிய மன்னர் நிக்கோலசு இந்த ஏற்பாட்டைப் புறக்கணித்துத் தம்மையே துருக்கிய சாம்ராச்சியத்திலுள்ள கிறித்தவரின் பாதுகாவலராகக் கருதுமாறு வேண்டுகோள் விடுத்தார். இதனுல் ருசியரின் ஆதிபத்தியம் ஓங்குமென்பதையும், கிழக்கிலுள்ள தமது சாம்ராச்சியத்திற்கும் ஊறு விளேயுமென்பதையும் உணர்ந்த பிரித்தானியர், ருசியரைத் தடுக்க விரும்பினர். அப்போது போர் மூளுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் ருசிய மன்னர் நிக்கோலசு 1853-ல் பின்வருமாறு கூறினுர் :—

"துருக்கியரின் ஆதிபத்தியம் ஒடுங்கிவிட்டது. "ஐரோப்பாவின் நோயாளி"யான துருக்கிய அரசாங்கம் இன்று படுக்கையில் கிடக்கிறது. அந்த நோயாளி இறப்பதற்கு முன்னரே, அவனது ஈமச் சடங்குகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளேச் செய்து முடிக்கவேண்டும். ஆகவே, பிரித்தானியர் எகிப்தையும் சைப்ரசுத் தீவையும் கைப்பற்றிக் கொள்ளலாம். நாமும் பால்கன் நாடுகளில் நமது ஆதிபத்தியத்தை நிறுவி விடுவோம். இவ்வாறு துருக்கிய சாம்ராச்சியத்தைப் பங்கிட்டுக் கொள்வதே சிறந்த ஏற்பாடாகும்."

ஆனுல், பிரித்தானியர் இந்த ஏற்பாட்டையும் ஏற்கவில்லே. எனவே, 1854-ல் போர் மூண்டது. இந்த யுத்தம் கிரிமியத் தீபகற்பத்திலேயே நடைபெற்றதாகையால், "கிரிமியப் போர்" என்று வழங்கப்படுகின்றது. உலூயி நெப்போலியனது படைகளும் பிரித்தானியப் படைகளும் கிரிமியத் தீபகற்பத்திற் புகுந்து, வலிய அரண்கள் படைத்த **செபசுதபூல்** கோட்டையைத்

தாக்கின. ஆனல், அங்கிருந்தோரின் பிடிவாதமான போரும், கற்பனைக்குமெட்டாத ருசிய நாட்டுக் கடுங் குளிரும் மேற்கத்திய வல்லரசுகளின் படைகளின் அழிவிற்குக் காரணமாயின. ஆல்மா, பாலக்லாவா, இங்கர்மென் போன்ற இடங்களில் பிரித்தானியப் படைகள் திறம்படப் போர் புரிந்தனவாயினும், செபசுதபூல் கோட்டை வீழ்ச்சியுறவில்லை. 1855-ம் ஆண்டு தொடக்கத்தில் (இத்தாலிய) சார்டீனியப் படைகள் கவூர் பிரபுவால் அனுப்பப்பெற்றன. அவற்றின் உதவியால் மேலைநாட்டுப் படைகள் செர்நயா என்ற இடத்தே மாபெரும் வெற்றி பெற்றன. இடையே ருசியாவில் நிக்கோலசு மன்னன் இறந்தமையால், புதிய மன்னனுகிய இரண்டாம் அலெக்சாந்தர் போரை நிறுத்திச் சமா தானத்தை விழைந்தான். உலூயிநெப்போலியனும் சமா தானத்திற்குத் தயாராக இருந்தமையால், அனைவரும் பாரிசு நகரத்தில் 1856-ம் ஆண்டில் ஒப்பந்தம் புரிந்தனர். துருக்கியரின் உள்நாட்டு அரசியலில் பிரவேசிப்பதில்லை என அனைவரும் ஒப்புக்கொண்டனர். தனது பிரசைக ளுக்கு உரிமைகள் வழங்குவதாகத் துருக்கியரசரும் ஒப்புக்கொண்டார். ருசியா கிரிமியத் தீபகற்பத்தை மீட்டுக்கொண்டு மற்றப் பகுதிகளின் மீதுள்ள ஆதிபத்தி யத்தை விடுத்தது. கருங்கடலில் அனைவரது கப்பல் களும் புகலாமென்றும், அங்கு அரண்கள் அமைக்கலாகா தென்றும் விதிக்கப்பட்டது. ஆனல், விரைவில் கருங் கடற் பிரதேசத்தைப் பற்றிய நிபந்தனைகளை ருசியா மீறிவிட்டது. இக்காரணத்தால், கிரிமியப் போர் பயனற்ற தாகிவிட்டதென்றும், பிரித்தானியரும் பிரான்சியரும் வீண் செலவு செய்து ஏராளமான உயிர்களையும் பலி கொடுத்துவிட்டனர் என்றும் மக்கள் தூற்றினர். ஆயினும், ருசியா நெடுங்காலமாக வருந்திப் பெற்ற சலுகைகள் பலவற்றையும் பாரீசு ஒப்பந்தத்தால் இழந்து விட்டதென்பதில் ஐயமில்லை.

1875-ம் ஆண்டில் போசுனியா, எரிசகோவினு போன்ற மாகாணங்களில் கலகங்கள் தோன்றின. அவை பின்னர்ச் செர்பியாவிலும் மாண்டநீகிரோவிலும் பரவின. உடனே ரூசியா, சேர்மனி, ஆசுதிரியா என்ற மூன்று நாடுகளும் சேர்ந்து, துருக்கியரசரைச் சீர்திருத்தங்கள் வழங்குமாறு கேட்டன. பல்கேரியாவிலும் கலகங்கள் எழுந்தபோது, கிறித்தவ மக்களின் படுகொலைகள் பற்றிக் கிளாட்சுடன் முதலிய இராசதந்திரிகள் விளக்கிக் கூறி, ஐரோப்பியரைத் தட்டியெழுப்பினர். 1877-ல் ரூசியா பல்கேரியரின் சார்பில் போருக்கெழுந்தது. அதனோடு புதிதாகச் சுதந்திரம் பெற்ற உரூமேனிய நாடும் சேர்ந்து கொண்டது. ரூசியர் கோன்சுதாந்திநோப்பிளை நெருங்கியதும், துருக்கியரசர் அவர்களுடன் சான்சுடிபானோ என்ற இடத்தில் ஒப்பந்தம் புரிந்தார். அப்போது பிரித்தானியப் பிரதமராகிய டிசரேலி அந்த ஒப்பந்தத்தை ஏற்க மறுத்துச் சமாதான மாநாடு ஒன்று கூட்டினர். பெர்லின் நகரில் கூட்டிய அந்த மாநாட்டில் சேர்மானியத் தலைவரான பிசுமார்க்கு தலைமை வகித்தார்.

1878-ம் ஆண்டில் நிறைவேறிய பெர்லின் சமாதானத்தின் நிபந்தனைகள் பின்வருமாறு:—(1) ரூசியா கருங்கடலின் கிழக்குக் கரையிற் கைப்பற்றிய நாடுகளை வைத்துக் கொள்ளலாம். (2) தென் பெசரேபியாவையும் அது பெற்றது. (3) பிரித்தானியர் சைப்ரசுத் தீவைப் பெற்றனர். (4) கிளர்ச்சி புரிந்த மாகாணங்கள் ஆசுதிரியப் பாதுகாப்பில் வைக்கப்பட்டன. (5) உரூமேனியா, செர்பியா முதலியவை விடுதலைபெற்றன. இந்த சமாதானத்தின் விளைவாகச் சேர்மனிக்கும் ரூசியாவிற்குமிடையே நட்புறவு குறைந்தது. சேர்மனி துருக்கியுடன் அதிகத் தொடர்பு கொள்ளத் தொடங்கியது. இவ்வாறு முதல் உலகப் போருக்கு முன்பு காணப்பட்ட வல்லரசுகளின் அரசியலுறவுகளுக்கு இந்த ஒப்பந்தம் அடிப்படையாயிற்று.

இந்தக் கீழ்த்திசைப் பிரச்னையினால் விளைந்த பலன்கள் யாவை என ஆராய்ந்தால், பிரித்தானியர் தமது கீழ்த்திசைச் சக்கராதிபத்தியம் அழிந்துவிடாமலும் ரூசியரால் அதற்குப் போகும் கடல் மார்க்கத்தைத் தடுக்கப்படாமலும் பாதுகாத்துக் கொண்டது பிரதானமானதாகும். துருக்கியரின் சாம்ராச்சியம் குன்றி, அவர்கள் ஐரோப்பிய மண்ணில் கோன்சுதாந்திநோப்பிள் ஒன்றையே உடைமையாக வைத்திருக்க நேர்ந்தது. துருக்கியர் இதனாற் கோபமுற்று, பிரித்தானியருக்கும் ரூசியருக்கு மெதிராகச் சேர்மனியருடன் தமது உறவைப் பெருக்கிக் கொண்டனர். பால்கன் தீபகற்பத்தில் புதிதாகச் சுதந்திரமடைந்த நாடுகள் தமக்குள் போரிட்டுக் கொண்டன. ஒருவாறாக அவற்றின் போர்கள் உலகப் போருக்கு முன்னர் நிறுத்தப்பட்டனவாயினும், அவற்றிற்கிடையே குமுறிய அரசியற் பூசல்கள் உலகப் போருக்குப் பின்னரும் தொடர்ந்தன.

### வினாக்கள்

1. "கீழ்த் திசைப் பிரச்னை" என்பதன் பொருளை பொதுப் படையாக விளக்குக.
2. கோன்சு தாந்தி நோப்பிள் எப்போது வீழ்ச்சியுற்றது? அதன் வீழ்ச்சியால் நேர்ந்த மாறுதல்கள் யாவை?
3. சுலைமானின் பெருமையை விளக்குக.
4. துருக்கியரின் வீழ்ச்சி எப்போது, எங்கு ஆரம்பமாயிற்று?
5. பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து "கீழ்த்திசைப் பிரச்னை" என்பதால், நாம் அறியக்கிடப்பது யாது?
6. கருங்கடலில் ரூசிய ஆதிபத்தியம் பெருகிய வரலாற்றைச் சுருங்கக் கூறுக.
7. கைனர்ச்சி ஒப்பந்தத்தின் பலன்கள் யாவை?
8. இரண்டாம் கதரைனின் பெருமையை விளக்குக.
9. "கிரேக்கரின் சுதந்திரப் போர்"—இது பற்றி ஒரு குறிப்பு வரைக.

10. எகிப்தில் மெகமதாலி ஆட்சி எவ்வாறு நிலைபெற்றது?

11. கிரிமியப் போர் எக்காரணங்களால் தொடங்கப் பெற்றது? அதற்கு உலூயி நெப்போலியனது அரசியற் கொள்கை எவ்வாறு பயன்பட்டது?

12. துருக்கியைப் பற்றி ரூசிய மன்னர் நிக்கோலசு கூறியது யாது?

13. கிரிமியப் போரின் பிரதான நிகழ்ச்சிகள் யாவை?

14. கிரிமியப் போர் எவ்வாறு முடிவுற்றது? (அல்லது) பாரிசு சமாதானத்தின் நிபந்தனைகள் யாவை?

15. 1877-ல் ஏன் ரூசியா துருக்கிமீது போருக்கெழுந்தது?

16. "பெர்லின் மாநாடு" எக்காரணங்களால், எப்போது கூடியது? அதில் பெரும் பங்கு பற்றிய தலைவர்கள் யாவர்? அந்த மாநாடு செய்த முடிவுகள் யாவை?

17. பெர்லின் மாநாட்டிற்குப் பின்னர்த் துருக்கி யரசாங் கத்தின் கொள்கையிற் றோன்றிய மாறுதல்கள் யாவை?

## பயிற்சிகள்

1. ஐரோப்பா படத்தில் 1700-ல் துருக்கி சாம்ராச்சியத் தின் நிலையையும், 1878-க்குப் பிறகுள்ள அதன் நிலையையும் ஒப்பிட்டுக் காட்டுக.

2. ஐரோப்பா படமொன்றில், பீற்றர் மன்னன் காலத்தி லிருந்து ரூசியா தென் திசையிலும் மேற்கிலும் வளர்ச்சி பெற்றது விளக்கி வரைக.

3. கருங்கடலின் படமொன்று வரைந்து அதனைச் சூழ்ந் துள்ள நாடுகளைக் குறிப்பிடுவதுடன், பின்வருவனவற்றையும் வரைக:—கிரிமிய தீபகற்பம், செபஸ்தபூல், அசாவ் கடல், டோன்யூப் முகத்துவாரம், பாகு, பாட்டும், போசுபரசு நீரிணை, டோர்டனல்சு நீரிணை, கோன்சுதாந்தி நோப்பிள்.

# 15. ஆசியாவிற் றேசீய உணர்ச்சியின் தோற்றம்

பதினரும் நூற்ருண்டிலிருந்து கடல்மார்க்கமாகப் போர்த்துக்கீசரும், அவர்களைத் தொடர்ந்து ஒல்லாந்தர், தேனியர், பிரித்தானியர், பிரான்சுக்காரரர் போன்ற இதர ஐரோப்பிய சாதியினரும் கீழ்த்திசை நாடுகளுடன் வியாபாரம் புரியத் தொடங்கியதும், அதனல் அவர்களிடையே பொருமையும் பூசலும் விளைந்து இடைவிடாது போர்கள் நிகழ்ந்ததும் குறித்து முன்னரே விளக்கியுள்ளோம். முதலில், கொள்ளையடித்துச் செல்வம் திரட்டுவதையே போர்த்துக்கீசர் போன்ற ஐரோப்பியர்கள் தொழிலாகக் கொண்டிருந்தனர்; ஆனல், பதினெட்டாம் நூற்ருண்டிலிருந்து, ஆங்காங்கு அரசியல் ஆதிபத்தியத்தை நிறுவி ஆட்சி செலுத்துவதை மேற்கொள்ளலாயினர். இவ்வாறு செய்வதால், அடிமைப்பட்ட நாடுகளில் பிறரது போட்டியின்றி நீடித்த வியாபாரம் செய்து அதிக இலாபமடையலாம் என்பதை அவர்கள் கண்டு கொண்டனர்.

இதன் பயனக, ஐரோப்பியர் கீழைத் தேசங்களில், தமது கல்வி முறைகளையும், நிர்வாக ஏற்பாடுகளையும், சட்டதிட்டங்களையும் பரப்ப நேர்ந்தது. அதனல், ஐரோப்பியரின் நாகரிகம் எங்கும் பரவியது. அவர்களது வாழ்க்கை முறைகளை ஆசிய நாட்டினர் பின்பற்றியதால்; நாளடைவில், ஐரோப்பிய நாடுகளில் வளர்ந்தது போன்ற தேசீய உணர்ச்சியும் சனநாயக ஆர்வமும் இந்த ஆசிய மக்களிடையிலும் உதித்தன. இத்தகைய ஆசியத் தேசீய உணர்ச்சியில் ஒரு விசேடமும் காணப்பட்டது. ஆசிய மக்கள் தேசீய உணர்ச்சி பற்றியும் சுயாட்சியின் பெருமை குறித்தும் ஐரோப்பியரிடமிருந்தே உணர்ந்து கொண்டனரெனினும், அவர்களது தேசீயம் தம்மை ஆளுகிற ஐரோப்பிய வர்க்கத்தை

வெறுக்கும் உணர்ச்சியாகவே உருவெடுத்தது. இதனால் ஆசிய நாடுகள் பலவற்றிலும், அவைகளின் பண்டைய மொழி, கலாச்சாரம், அரசியல், மதாபிமானம் முதலியன பெரும் அளவிற்கு விருத்தியடைந்தன. உதாரணமாக, இலங்கையில் வாழும் மக்களிற் பெரும்பாலோர் ஆங்கிலக் கல்வியையும் நாகரிகத்தையும் புறக்கணிக்கவில்லை யாயினும், தமது சிங்களம் தமிழ் மொழிகளையும், புத்த மதத்தையும் பழக்கவழக்கங்களையும், இன்னமும் பின் பற்றுகிறார்கள் அல்லவா? இவ்வாறே பர்மா, இந்தியா, இந்தோனேசியா போன்ற நாடுகளிலும், அவைகளின் தேசீய உணர்ச்சியில் ஐரோப்பிய நாகரிகத்தின் அம்சங் களும் தமது பண்டைய பண்பாடும் கலந்து மிளிர் வதைக் காணலாம். இனி, இத்தகைய தேசீய உணர்ச்சி ஆசிய நாடுகளில் உதயமானதைக் குறித்தும், அதனால் அங்கு அரசியல் வளர்ச்சி ஏற்பட்டது குறித்தும் விவர மாக ஆராய்வோம்.

சீனா, ஆசியா நாடுகளில் மிகப் பெரியது; புராதன நாகரிகத்தின் உறைவிடமாக விளங்கிய பெருமை யுடையது. முற்காலத்தில் சீனரது பண்பாடும் வாழ்க்கை முறையும் ஐரோப்பியரது கலாச்சாரத்தைப் பார்க்கிலுமுயர்வாகக் கருதப்பட்டமையால், பதினாறும் நூற்றாண்டுக்குப் பிறகும் ஐரோப்பியருடன் வியா பாரம் செய்ய மறுத்துவிட்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில், இந்தியாவிலிருந்து பிரித்தானியர் கள்ளத் தனமாக அபினைச் சீனாவில் புகுத்தி வியாபாரம் செய்து வந்தனர். 1839-ல் பிரித்தானிய வணிகரைத் துன்புறுத்தி இந்தக் கள்ள வியாபாரத்தைத் தடுத்தமையால், பிரித் தானியர் போரிடலாயினர். இந்த ‘அபினிப் போரினது’ முடிவில், 1842-ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தால் கொங்கொங் துறைமுகம் பிரித்தானியர் வசமாயிற்று. பிறகு, மற்ற ஐரோப்பிய இனத்தினரும் சீன அரசாங்கத்தினரிடம் சலுகைகள் பெற்றதுடன், கிறித்த

வப் பாதிரிகளும் மதப் பிரசாரம் புரிய அனுமதிக்கப் பட்டனர். 1894-ஆம் ஆண்டில் சீனர் கொரியா நாட்டில் தலையிட்டமையால், அவர்களுக்கும் யப்பானியருக்கும் பெரும்போர் நிகழ்ந்து அப்போரில் பெருந்தோல்வி யடைந்தனர். போர்மோசா முதலிய சில தீவுகளும் யப்பானியர் வசமாயின. அதைத் தொடர்ந்து, சீனரிட மிருந்து அந்நியர் பல துறைமுகங்களையும் பிரதேசங் களையும் பெற்றனர். ரூசியர் மஞ்சூரியாவையும் ஆர்தர் துறைமுகத்தையும், சேர்மனியர் கியோச்சௌவை யும், பிரித்தானியர் வேய்ஆய்வேயையும் பிரான்சுக் காரர் இந்தோசீனத்தை அடுத்துள்ள பகுதிகளையும் பறித்துக் கொண்டனர். பிறகு அமெரிக்க ஐக்கிய நாட் டினரும் பிரவேசிக்கவே, சீனர் அந்நியரனைவருக்கும் வியாபார உரிமைகள் அளிக்க வேண்டியதாயிற்று. 1898-ல் சீனத்தில் கிறித்தவ மதப் பிரசாரத்தைத் தடுப் பதற்காகவும், அன்னியரைத் துரத்துவதற்காகவும் நிறுவப்பட்ட 'குத்துச் சண்டைக்காரர்கள் இயக்கம்' (Boxers movement) 'தசேகினி' என்ற சீன அரசி யின் இரகசிய ஆதரவையும் பெற்று வளர்ந்தது. இவர் கள் அந்நியரை அழிக்கத் தொடங்கவே, 1900-ல் அந்நிய நாடுகள் யாவும் தமது படைகளை அனுப்பிச் சீனரை அடக்கினர். பிறகு, மேலும் அதிகமான உரிமைகளையும் பெற்றனர்.

பின்னர் யப்பானியரின் வெற்றிகளைக் கண்ட சீனர், தாமும் மேனாட்டு முறைகளைப் பின்பற்றத் தீர்மானித் தனர். இதன் பலனாகக் குடியரசும் பலமான நல்லாட்சியும் விரும்பிய கட்சி ஒன்று, அமெரிக்காவிலும் யப்பானிலும் பயிற்சி பெற்ற சன்யாட்சென் தலைமையின்கீழ் வெற்றி பெற்று, 1911-ல் மஞ்சூரிய வம்ச சக்கரவர்த்தியை நீக்கி விட்டுக் 'குடியரசு' அமைத்தது. இந்தக் கட்சியே 'கோமிண்டாங்' எனப்பட்டது. 1916-ல் சன்யாட்சென் இறந்ததும், நாடெங்கும் குழப்பம் மலிந்தது. வர்சேல்சு

உடன்படிக்கையால் சீனநாட்டில் யப்பான் விசேட உரிமைகள் பெற்றது; பல துன்பங்களுக்குப் பிறகு, 1927-ல் சியாங்கைசேக் தலைமையின்கீழ்க் 'கோமிண் டாங்' என்ற தேசீயக் கட்சியினர், 'யுத்தப் பிரபுக்களை' ஒடுக்கி, நாட்டின் பெரும் பகுதியிற் குடியரசின் ஆதிக்கத்தை நிறுவினர். ஆனால், 1931-ல் யப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றியது; மீண்டும் 1937-ல் மத்திய சீனாவின் கடற்கரைப் பகுதிகளையும் தன் வசமாக்கிக் கொண்டது. நான்கிங், சாங்காய் என்ற நகரங்களை இழந்த பின்பும் சுங்கிங் நகரிலிருந்து கொண்டு, சியாங்கைசேக் பிடிவாதமாகப் போரை நடத்தி வந்தார். சீனாவில் அமெரிக்கருக்கும் ஐரோப்பிய ருக்கும் இடமில்லாமற் செய்து அதன் வியாபாரம் முழு வதையும் கைப்பற்றுவதே யப்பானின் நோக்கம். இந் தப் போர் மேலும் தொடர்ந்து நடைபெற்றமையால், இறுதியில் இரண்டாவது உலகப் போராக மாறிவிட்டது.

சிறிய நாடாயினும் புகழ் மிகுந்ததாகிய யப்பான் நாடு, ஐரோப்பியரின் தொடர்பின்றி நீண்ட காலமாகச் சுயேச்சையுடன் இருந்து வந்தது. அங்குக் கிறித்தவ பிரசாரமும் அனுமதிக்கப்படவில்லை. 'மிக்காடோ' என்ற யப்பானியச் சக்கரவர்த்தி பெரிதும் போற் றப்பட்டாலும், 'சோகுன்' என்ற மந்திரியும், 'தைமியோ' என்றழைக்கப்பட்ட பிரபுக்களுமே உண் மையில் அதிகாரம் மிகுந்தவர்களாக இருந்தனர். 1853-ல் அட்மிரல் பாரி என்ற ஓர் அமெரிக்கக் கடற்படைத் தலைவனுக்கு அஞ்சி அந்நியருடன் உடன்பாடுகள் செய்த தால், கோபமடைந்த பிரபுக்கள் 'சோகுனை' நீக்கி விட்டு, மிக்காடோவிற்குப் பூரண அதிகாரம் அளித் தனர். அப்போது 'முட்சி இட்டோ' என்ற மன்னன் முடிசூடியமையால், யப்பானிய சரித்திரத்தில் ஒரு புதிய சகாப்தம் தோன்றியது. மேல்நாட்டு நாகரிகத்தைப் பூரணமாகப் பின்பற்றிப் பாராளுமன்றமும் ஆட்சி

யமைப்புகளும் உண்டாக்கப்பட்டன. ஆனல், அரசரின் அதிகாரம் குறையவில்லை. ஏனெனில், பழைய 'சிண்டோ மதம்' உயிர்ப்பிக்கப்பட்டதால், அரசனைத் தெய்வமாகக் கருதி வழிபடும் வழக்கம் தோன்றியது. மேல் நாட்டு முறைகளைப் பின்பற்றிக் கல்விமுறை, போக்குவரவு, இராணுவம் முதலியவற்றை யப்பான் அமைத்துக் கொண்டது.

பிறகு யப்பானியத் தேசீயவாதிகள் பிறநாடுகளைப் போல, தமது நாட்டின் வியாபாரத்தையும், ஆதிக்கத்தையும் வளர்ப்பதிற் கவனம் செலுத்தலாயினர். 1876-ல் கொரியரிடமிருந்து யப்பானியர் இரு துறைமுகங்களைப் பெற்றனர். பிறகு 1894-ல் சீனர்மீது போர் தொடுத்து, பல தீவுகளையும், வியாபார உரிமைகளையும் பறித்துக் கொண்டனர். மஞ்சூரியாவிலும் யப்பானைச் சூழ்ந்துள்ள பகுதிகளிலும் ரூசியர் தம் ஆதிக்கத்தை நிலை நிறுத்தியமையால், அச்சமடைந்த யப்பானியர் 1902-ல் பிரித்தானியருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, 1904-ஆம் ஆண்டில் திடீரென்று ரூசியாவைத் தாக்கினர். பிறகு ஓர் ஆண்டிற்குள் யாவரும் வியக்கத் தக்க வகையில், ரூசியரைத் தோற்கடித்து ஆர்தர் துறைமுகத்தையும் கைப்பற்றினர். இது நவீனகால வரலாற்றில் முக்கியமானதொரு சம்பவமாகும். இவ்வாறு ஆசிய நாடுகளிலொன்று ஐரோப்பியரைத் தோற்கடித்தமையால், இந்த வெற்றி ஆசிய மக்களிடையே தேசீய உணர்ச்சி ஓங்குவதற்குப் பெரும் தூண்டுதலாக அமைந்தது. யப்பானியரின் செல்வாக்கு மேலும் பெருகிவிடுமென்று அஞ்சிய அமெரிக்கச் சனதிபதி தியோடர் ரூசுவெல்டு தாமே முன்வந்து இரு நாட்டினருக்குமிடையே சமாதானம் செய்து வைத்தார். முடிவில் சாகலின் தீவில் தென்பாகமும், கொரியாவில் விசேட உரிமைகளும் யப்பானியருக்குக் கிடைத்தன ; ரூசியா மஞ்சூரியாவில் செல்வாக்கிழந்தது.

1910-ஆம் ஆண்டில் கொரியாவை யப்பானியர் தம்

கைவசப்படுத்திக் கொண்டனர். முதல் உலகப் போரில் நேச நாடுகளுடன் யப்பான் சேர்ந்தமையால், சேர் மனியரின் பசுபிக் தீவுகளும், கியாசௌ துறைமுகமும், சீனத்தில் விசேட உரிமைகளும் அவர்களுக்குக் கிடைத் தன. பிறகு 1931-ல் சீனமீது படையெடுத்து முதலில் மஞ்சூரியாவையும், பிறகு சாங்காய் முதலிய நகரங்களை யும் பறித்துக்கொண்ட யப்பான், இரண்டாம் உலகப் போரில் அச்சு நாடுகளின் (Axis powers) சார்பில் ஈடு பட்டதும், பசுபிக் சமுத்திரப் பிரதேசம் பெரும் போர் அரங்கமாகி விட்டது.

ஆசிய நாடுகளில் புகழ் பெற்ற தொன்முகிய இந்தியா, சீனத்தைப் போலப் புராதன நாகரிகம் படைத்தது. 1498-ம் ஆண்டில் வாசுகோட காமா இந்தியாவிற்குக் கடல் மார்க்கமாக வந்து, மேற்குக் கரை யிலுள்ள கள்ளிக்கோட்டையிலிறங்கி அங்கிருந்த சாமொ ரின் மன்னனுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொண் டான். அவனுக்குப் பிறகு வந்த அல்மெய்டா, ஆல்பு கூர்க்கே முதலியவர்களால் போர்த்துகீச ஆதிக்கம் வலிமை பெற்றுக் கோவா அவர்களது பிரதான துறை முகமும் இராசதானியுமாயிற்று. மேற்குக் கடற்கரையில் பதினும் நூற்ருண்டில் போர்த்துக்கீசரும், பிறகு ஒல் லாந்தரும் வியாபாரத் தலங்களை அமைத்துக்கொண்ட மையால் அவர்களிடையே பகைமை தோன்றிற்று; அதனுல், போர்த்துக்கீச ஆதிக்கம் அழிந்து ஒல்லாந்தர் வலிமை பெற்றனர்; இவர்களுக்குப் போட்டியாக, 1600-ல் தோன்றிய 'ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தக சங்கமும்,' 1664-ல் தோன்றிய பிரான்சு வர்த்தக சங்கமும் இங்கு வியாபாரத்தில் ஈடுபட்டன. 1707-ல் ஔரங்கசீப்பின் மரணத்திற்குப் பின்பு மொகலாய சாம்ராச்யம் பலவீன மடையவே, நாட்டில் ஒற்றுமை குலைந்து, பல சிற்றரசு கள் தோன்றியிருந்தன. அதனுல் ஆங்கிலேயரும் பிரான்சுக்காரரும் வியாபாரத்திற்கு மட்டுமன்றி, ஆதி

பத்தியத்திற்கும் போட்டியிட்டனர். 1748-ம் ஆண்டி லிருந்து 1763-ம் ஆண்டு வரை ஐரோப்பாவில் போர்கள் நிகழ்ந்தபோது, இந்தியாவிலும் ஆங்கிலேயரும் பிரான் சியரும் போரிட்டனர். டூப்ளே என்ற பிரெஞ்சுத் தேசாதி பதி பல முயற்சிகள் செய்தபோதிலும், கடற்படை வலி யால் பிரித்தானியரின் ஆதிக்கமே வேரூன்றியது. முடி வில், ஆங்கிலேயரே வெற்றியடைந்து தமது சாம்ராச்யத் தைத் தாபிக்கலாயினர். 1757-ல் பிளாசி சண்டையிற் கிளைவ் பெற்ற வெற்றியால் வங்காளத்தில் நிலை நிறுத்தப் பட்ட பிரித்தானிய வர்த்தக சங்கத்தின் ஆதிக்கம், ஒரு நூற்றுண்டுக் காலத்தில் இந்தியா முழுதும் பரவியது. வாரன் கேசுடிங்சு, வெல்லசலி பிரபு, கேசுடிங்சு பிரபு முதலிய தேசாதிபதிகள், மைசூர் மன்னர், மகாராட்டிரத் தலைவர்கள், சீக்கியர் போன்ற உள்நாட்டு அதிபர்களை ஒடுக்கிப் பிரித்தானியச் சாம்ராச்சியத்தைப் பெருக்கினர். வில்லியம் பென்டிங்கு என்ற தேசாதிபதி சமூகச் சீர் திருத்தங்கள் புரிந்து, ஆங்கில மொழிக் கல்விக்கும் அடி கோலினர். இக்காரணங்களால் பிரித்தானிய ஆதிபத் தியம், 1856-ல் டல்கௌசி கவர்னர் ஜெனரலாக விளங் கியபோது நிகரற்று விளங்கியது. ஆயினும், கிறித்தவ பாதிரிகளின் மதமாற்றப் பிரசாரங்களும், கல்வி கற்றவர் களிடையே தோன்றிய அதிருப்தி உணர்ச்சியும் இராணு வத்தினரிடையிலும் பரவியது. அக்காரணத்தால் மறு ஆண்டிலேயே இந்திய தேசீய உணர்ச்சிக்கு அறிகுறி யாகச் 'சிப்பாய்க் கலகம்' என்று வருணிக்கப்படும் சுதந் திரப் போர் மூண்டமையால், பிரித்தானிய வர்த்தக சங்கம் தனது ஆதிபத்தியத்தை ஆங்கில மன்னருக்கு அளித்து விட்டது. 1858-ல் விக்டோரியா ராணியார் வெளியிட்ட பிரகடனத்தில், பாரபட்சமற்ற நல்லாட்சியும், சுதேச மன்னருக்குப் பாதுகாப்பும், அனைவருக்கும் மதச் சுதந் திரமும் அளிப்பதாகக் கூறியிருந்தார்.

ஆயினும், கல்வி கற்ற நடுத்தர வகுப்பாரிடையே

தேசீய உணர்ச்சி வளர்ந்தது. மேலும், ஐரோப்பியரைப் போலவே தமது அரசியலைத் தாமே நடத்த வேண்டுமென்னும் அவாவும் அவர்களிடம் காணப்பட்டது. இந்த உணர்ச்சியைச் சமாதான வழிகளில் திருப்பவே, கியூம் போன்றவர்கள் 1885-ல் **இந்தியத் தேசீயக் காங்கிரசைத்** தாபிக்க உதவினர். முதலில் ஐரோப்பியருக்குச் சமமாக நிர்வாகப் பதவிகளில் இந்தியர் பங்கு பெறுவதையே முக்கிய இலட்சியமாகக் கொண்டிருந்த காங்கிரசுத் தாபனம், 1905-க்குப் பிறகு தீவிரவாதிகளுக்கு இடமளித்தது. அப்போது யப்பான் ரூசியா மீது பெற்ற வெற்றியினால் கீழைத் தேசங்கள் கொண்ட புத்துணர்ச்சியும், திலகர் போன்றவர்களின் பிரசாரமும் இந்தியரை ஊக்கி, அந்நியப் பொருள்களை அவர்கள் பகிட்காரம் செய்து சுதேசிப் பொருள்களையே ஆதரிக்கும் இயக்கம் வளரச் செய்தது. 1909-ல் பிரித்தானிய அரசாங்கம் அளித்த மிண்டோ—மார்லி சீர்திருத்தங்கள் மூலமாக இந்தியர் சட்டசபைகளிலும் நிர்வாக சபையிலும் இடம் பெற்றனராயினும், இந்தியருக்குத் திருப்தியளிக்காமையால், விரைவில் **மகாத்மா காந்தியின்** தலைமையின் கீழ்ச் சாத்வீகச் சட்ட மறுப்பு இயக்கங்களுக்கு நாடு தயாராயிற்று. முதல் உலகப் போரில் பிரித்தானியருடன் ஒத்துழைத்தும் பயனில்லாமையால், இந்தியர் வெறுப்படைந்தனர். 1917-ல் திலகரும் பெசண்டு அம்மையாரும் அமைத்த ‘கோம் ரூல்’ இயக்கங்களாலும் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. இந்த நிலையில், 1919-ல் நிகழ்வுற்ற ‘சாலியன் வாலாபாக் படுகொலை’ போன்ற சம்பவங்கள் பிரித்தானிய ஆட்சி



படம் 56. மகாத்மா காந்தி

மீது வெறுப்பை வளர்த்தன. 1919-லும், பிறகு 1935-லும் அளித்த சீர்திருத்தங்களுங் குறைபாடுள்ளனவாகக் கருதப்பட்டமையால், அமைதியான முறையிற் சட்டமறுப்புப் போர்கள் தொடர்ந்து நடந்தன. இடையில், 1929-ம் ஆண்டில் சவாகர்லால் நேரு தலைமையின் கீழ் நடைபெற்ற காங்கிரசு மகாநாட்டில் "பரிபூர்ண சுதந்திரமே காங்கிரசின் இலட்சியம்" என்பது திட்டமாக அறிவிக்கப்பட்டது. பிறகு நிகழ்ந்த உப்புச் சத்தியாக்கிரகத்தில் (1930) இலட்சக்கணக்கான மக்கள் சிறை சென்றும், உயிர் நீத்தும் தியாகம் புரிந்தனர். 1935-ம் ஆண்டில் அரசாங்கச் சீர்திருத்தச் சட்டத்தின்படி மத்திய சமட்டி அரசியலும் மாகாணங்களில் சுயாட்சியும் வழங்கப்பட்டு, 'படித்தோர் அனைவருக்கும் வாக்குரிமை' என்ற அடிப்படையில் தேர்தல் நடைபெற்றது. 1937-ல் பல மாகாணங்களிலும் தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரசு மகாசபை நிர்வாகத்தை ஏற்றதாயினும், 1939-ல் இந்திய அரசாங்கம் மக்களின் சம்மதமின்றி உலகப்போரில் கலந்து கொண்டதை ஆட்சேபித்துக் காங்கிரசுக் கட்சியினர் இராசிநாமா செய்தனர். மீண்டும் தேசீயப் போராட்டம் தோன்றியது. 1942-ல் கிரிப்சு திட்டம் வகுக்கப்பட்டு, அதனுற் போர் முடிவுக்குப் பின் சுயநிர்ணய உரிமை அளிக்கப்படுமென்ற உறுதி கூறப்பட்டதாயினும், அப்போதைய அரசியலில் மாறுபாடில்லாததால் அதனை அரசியற் கட்சிகள் புறக்கணித்தன. மீண்டும், இதுவரையிற் கண்டறியாத மூர்த்தண்யத்துடன் தேசீயப் போராட்டம் நடைபெற்றது. அது அடக்கப்பட்டதாயினும், போர் முடிந்ததும் தொழிற்கட்சி அரசாங்கத்தால் 1945-ல் 'காபினெட் தூது கோட்டியினர்' இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர். இந்தியக் காரியதரிசி பெதிக் லாரன்சு, சுடாபோட் கிரிப்சு, அலெக்சாந்தர் என்ற மூன்று மந்திரிகளே இந்தக் கோட்டியின் உறுப்பினர்கள். இவர்கள் மக்கள் பிரதிநிதிகள் கொண்ட

'அரசியல் நிர்ணய சபை' அமைக்குமாறு யோசனை கூறினர்.

அப்போது நிகழ்ந்த தேர்தலில் காங்கிரசு கட்சி பெருவாரியான தாபனங்களைக் கைப்பற்றிய போதிலும், முசுலீம் வகுப்பினரின் பிரதிநிதியாக 'முசுலீம் லீக்' கட்சியும் பலம் பெற்றுத் திகழ்ந்தது. இந்தியாவை இரு கூருகப் பிளந்து வடமேற்கிலும், வடகிழக்கிலும் 'பாகித்தானம்' என்ற முசுலீம்களின் நாடு அமைக்கப் பட்டாலன்றித் தமக்குப் பாதுகாப்பு இல்லையென்று லீக் கட்சி பிடிவாதமாகக் கூறியமையால், 1947-ல் இராசப் பிரதிநிதி **மவுண்ட்பேட்டன் பிரபு** முயற்சியின் பேரில் நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டு, '**இந்திய யூனியன்**', '**பாகித்தான்**' என்ற இரு 'டொமீனியன்கள்' உண்டாக்கப்பட்டன. **சின்னு** கராச்சியைத் தலைநகரமாகக் கொண்ட பாகித்தானின் தேசாதிபதியானுர். தொடக்கத்திலிருந்து இந்திய யூனியனின் பிரதமராகத் திகழ்ந்து வரும் **சவாகர்லால் நேரு** முயற்சியால், 1950-ல் இந்தியா 'குடியரசு', ஆகிவிட்ட போதிலும், காமன்வெல்த்தில் தொடர்ந்து அங்கம் வகித்து வருகிறது. சுதந்திரம் பெற்றதிலிருந்து பல இன்னல்களை இந்தியா தீரமாக எதிர்நோக்கிச் சமாளித்திருக்கிறது. இலட்சக்கணக்கான அகதிகளை உணவும் இருப்பிடமும் அளித்துக் காப்பாற்றியுள்ளது. புகை இரதப் பாதைகளையும் மற்றப் போக்குவரத்துச் சாதனங்களையும் அபிவிருத்தி செய்திருக்கிறது; கல்விச் சீர்திருத்தம் புரிந்திருக்கிறது. தாமோதர அணை, துங்கபத்திரா அணை, பக்ரா நங்கல் திட்டம் போன்ற



படம் 57.
சவாகர்லால் நேரு

அணைத் திட்டங்களை அமைத்து விவசாயத்தையும் மின் சார சக்தியையும் பெருக்கியுள்ளது. அதன் ஐந்தாண்டு திட்டங்களின் வெற்றியைக் கண்டு உலகமே வியக்கின்றது. மேலும், உள்நாட்டில் பெரும் சீர்திருத்தங்களும், அயல் நாடுகளிடையே நல்லுறவும் தோற்றுவிப்பதில் சுதந்திர இந்திய நாடு வெற்றியடைந்திருப்பதானது, மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

இந்த மூன்று நாடுகளைப் போலவே, பர்மா, இலங்கை, இந்தோனேசியா முதலிய தேசங்களிலும் தேசீய உணர்ச்சி வளர்ந்ததன் பயனாக, அவைகளும் இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு விடுதலையடைந்து சுதந்திர நாடுகளாகத் திகழ்வதை நீவிர் அறிவீர்கள். இலங்கையிற் போர்த்துகீசர், ஒல்லாந்தர் ஆட்சிகளுக்குப் பிறகு ஏறக்குறைய 1800 லிருந்து ஆங்கிலேயர் ஆட்சி நடந்து வந்தது என்பதையும், எவ்வாறு சிறிது சிறிதாக இலங்கை சுயாட்சி பெற்றதென்பதையும் இந்த நூலின் முதற்பகுதியில் படித்திருப்பீர்கள். பர்மா நாட்டில் இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் யப்பானியர் ஆக்கிரமிப்பால் துன்பம் நேர்ந்ததாயினும், 1945-க்குப் பிறகு **ஆங்சான், யூநூ** முதலிய தலைவர்கள் தேசீய இயக்கங்கள் நடத்திப் பர்மாவை சுதந்திர நாடாகச் செய்துவிட்டனர். ஆனால், இந்தோனேசியாவில் மேலும் உக்கிரமாகப் போராட்டம் நடைபெற்றது. ஒல்லாந்தர் பிடிவாதமாகப் போரிட்டனராயினும், 1949 முதல் ஐக்கிய நாடுகள் தாபனம் தலையிட்டமையால் இந்தோனேசியர் **டாக்டர் சுகர்ணு** போன்றவர்களின் தலைமையின்கீழ்க் குடியரசு அமைக்க முடிந்தது. இவ்வாறே துருக்கி நாடு **கமால் பாசாவின்** முயற்சியால் பெருமை பெற்ற வரலாற்றை வேறோர் அத்தியாயத்தில் விளக்கியுள்ளோம். ஆசிய நாடுகள் சுதந்திரமடைந்து மேன்மையுற்றிருப்பதால், உலகத்தில் வறுமையும் பிற்போக்குத் தன்மையும்

இராணுவ ஆதிக்கமும் குறைந்து, சுபிட்சமும் அமைதியும் நிலவும் என்பதில் தடையில்லை.

**வினுக்கள்**

1. சீன அந்நிய நாட்டினரால் அடைந்த துன்பங்களையும், அங்குத் தேசீயம் வளர்ந்த வரலாற்றையும் விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.

2. யப்பானிய நாட்டில், 1850-க்குப் பிறகு நேர்ந்த மாறுதல்கள் யாவை ?

3. யப்பானியர் எவ்வாறு தம் ஆதிபத்தியத்தைப் பெருக்கினர் ?

4. இந்தியரிடையே தேசீய உணர்ச்சி வளர்ந்த வரலாற்றை விளக்கி, ஒரு கட்டுரை வரைக.

5. குறிப்புகள் வரைக :—குத்துச்சண்டைக்காரர் இயக்கம், சியாங்கைசேக், சட்டமறுப்பு இயக்கம், அபினிப் போர், சவாகர்லால் நேரு.

## 16. அமெரிக்க உள்நாட்டுப் போர்

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் பல நாடுகளிலும் காணப்பட்ட அரசியல் நிலைமையே, 1914-ஆம் ஆண்டிற் றொடங்கிய மாபெரும் போருக்கு மூலகாரணமாயிற்று என்பதை அனைவரும் அறிவர். எனவே, அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், கீழைத் தேசங்களிலும் ஐரோப்பாவிலும் எத்தகைய அரசியல் நிலைமை இருந்ததென்பதை ஈண்டு சுருக்கமாக ஆராய்வோம் :

அமெரிக்க ஐக்கிய நாடுகள் பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்பு சமட்டிமுறை தழுவிய குடியரசு அமைப்பை வகுத்துக்கொண்டன என்று கூறினேமல்லவா? அந்தக் குடியரசின் முதலாம் சனுதிபதியாக விளங்கி நாட்டை ஒற்றுமைப் படுத்தியவர், சோர்ச் வாசிங்டன். அவருக்குப் பிறகு மாடிசன், செபர்சன்




படம் 58. உள்நாட்டுப் போர்க்காலத்திய அரசியல் நிலைமை

போன்றவர்கள் சனுதிபதிகளாக விளங்கி அரசியலமைப்பை வலுப்படுத்தியதோடு, சிறிது சிறிதாக மேற்குப் பகுதியிலுள்ள பிரதேசங்களேயும் இணைத்துக் கொள்ளலாயினர். 1803-ல் மிசிசிபி நதி பாயும் உலூயியான பிரதேசத்தைப் பிரெஞ்சுக்காரரிடமிருந்து செபர்சன் விலைக்கு வாங்கிவிட்டார். பிறகு 1812-ல் கனடாவிலிருந்த பிரித்தானியருக்கும் ஐக்கிய நாட்டினருக்குமிடையே பெரும் போர் மூண்டதெனினும், விரைவில் அது நிறுத்தப்பட்டு நிலையான சமாதானம் செய்யப்பட்டது. அதன் பின்னர் எந்த நிலையிலும், கனடாவிற்கும் ஐக்கிய நாடுகளுக்குமிடையே போர் மூளவில்லை என்பது போற்றற்குரியதாகும். பிறகு 1823-ல் தென் அமெரிக்க நாடுகள் சுபானிய, போர்த்துக்கீச ஆதிபத்தியங்களேச் சைமன் டி பொலிவர், மார்ட்டின் முதலியவர்களது தலைமையின்கீழ் எதிர்த்துப் போர்புரிந்து சுதந்திரம் பெற்ற பொழுது, அவற்றை அடக்க மெட்டர்நிக் தலைமையின் கீழ் ஐரோப்பிய நாடுகள் முற்பட்டதும், சனுதிபதி மன்ரோ ஒரு பிரசித்தமான கொள்கையை வெளியிட்டார். 'புதிதாக எந்த ஐரோப்பிய நாடும் தனது அதிகாரத்தை வட-தென் அமெரிக்கக் கண்டங்களில் பரப்பலாகாது' என்னும் "தலையிடாக் கொள்கையை" அவர் எடுத்துக் கூறியமையால், இது "மன்ரோ கொள்கை" எனவும் பிரசித்திபெற்றது. இந்தக் கொள்கை காரணமாக, ஐக்கிய நாடுகளும், மற்ற அமெரிக்க தேசங்களும் ஐரோப்பிய வல்லரசுகளின் பேராசைக்கு இரையாகாது தப்பினர்; மேலும் இதன் பயனுகப் 'புது உலகமாகிய' அமெரிக்காக் கண்டங்களிலுள்ள நாடுகள் யாவும், ஐக்கிய அமெரிக்க நாட்டின் தலைமையை ஏற்றுக் கொண்டன.

பிறகு முப்பது ஆண்டுகளில், ஐக்கிய நாடு பெரிதும் வளர்ச்சியுற்றது. எலிவிட்னி போன்றவர்கள் கண்டு பிடித்த புது இயந்திரங்களின் உதவியால் பருத்தி

வியாபாரமும், பின்னர் நெசவுத் தொழிலும் ஓங்கின. புதுத் தொழிற்சாலை நகரங்களும், துறைமுகங்களும் பிரசித்தமடைந்தன. அன்றியும், அமெரிக்கர் சிறிது சிறிதாக மேற்குத் திசையில் பரவிப் புதிய குடியேற்றங்களை அமைத்துக்கொண்டனர். இறுதியிற் றெக்கிமலைகளையும் கடந்து, அப்பாலுள்ள கலிபோர்னியப் பள்ளத்தாக்கையும் தம் வசமாக்கினர். அங்குப் பொன், வெள்ளி, பழவகைகள், எண்ணெய் முதலியன ஏராளமாகக் கிடைத்தமையால், சனச்செறிவு அதிகரித்து, **லோசு ஏஞ்சல்சு, சான்பிரான்சிசுகோ** முதலிய பெரும் நகரங்கள் தோன்றின. இவ்வாறு ஐக்கிய நாட்டின் செல்வமும், அரசியல் அமைப்பும் வளர்ச்சி பெற்றனவாயினும், அதன் மக்களின் சமுதாய வாழ்விலே முளைத்தெழுந்த 'அடிமை வியாபாரம்' என்னும் நோயானது வளர்ச்சியடைந்து சொல்லொணாத தீமையை விளைத்தது. மேலும், இந்தப் பிரச்னை நாட்டின் ஐக்கியத்தைக் குலைப்பதாகவும் இருந்தது. ஏனெனில், கத்தோலிக்கரும் புராட்டசுதந்து மிதவாதிகளும் பெரும்பான்மையோராக இருந்த வெர்சீனியா, கரோலினா, மேரிலாந்து முதலிய தென்னாடுகளிலேயே விவசாயத்திற்கு அவசியமாகக் கருதப்பட்ட அடிமை முறை பழக்கத்திலிருந்தது. ஆனால் விவசாயத்தைவிடத் தொழில்வளர்ச்சியில் உயர்ந்த நிலை பெற்று மிகுந்த பியூட்டன்களடங்கிய வட நாட்டினர் அடிமை முறையை வெறுத்தனர். இக்காரணங்களால், இரு பகுதிகளுக்குமிடையே பகைமை தோன்றிப் புதிதாக அமைக்கப்படும் குடியேற்றங்களில் தத்தம் கொள்கையை நிலைநாட்டப் பெரிதும் முயன்றனர். இதனால் சச்சரவு மூளாதிருக்க 'மிசுசூரி' ஒப்பந்தமும் நிறைவேறிற்றாயினும், கலிபோர்னியாக் குடியேற்றம் நிகழ்ந்த பொழுது சச்சரவு ஆரம்பித்தது. வட நாட்டினர் எழுதிய 'தொம் மாமனின் குடிசை' (Uncle Tom's Cabin) போன்ற நூல்களாலும், ஆபிரகாம் இலிங்கன் போன்றவர்களின்

பிரசாரத்தாலும், செனட் சபைத் தேர்தல்களில் இது முக்கியமான பிரச்னையாயிற்று. முதலில் செனட் தேர்தலில் அடிமை முறையை ஆதரித்த டக்ளசு என்பவர் வெற்றிபெற, இலிங்கன் தோற்க நேர்ந்தது. ஆயினும், முடிவில், 1860-ல் இலிங்கன் சனாதிபதியாகத் தேர்ந் தெடுக்கப் பட்டதும், உடனே வெர்சீனியா முதலிய ஏழு நாடுகள் மத்திய அரசாங்கத்தி லிருந்து விலகி, செபர் சன்டேவிசு தலைமை யில் ரிச்மண்டு நகரில் புதியதோர் கூட்டரசை



படம் 59. ஆபிரகாம் இலிங்கன்

நிறுவிக்கொண்டன. பின்னர்த் தொடங்கிய உள்நாட்டுப் போரில், டெக்சாசு முதலிய நான்கு நாடுகள் அவற்றுடன் சேர்ந்தன. தென்னாடுகள் இருபர்ட் லீ முதலிய சிறந்த படைத்தலைவர்களைப் பெற்றிருந்தமையால் ஆரம்பத்தில் வெற்றிகளை அடைந்த போதிலும், முடிவில் இலிங்கனது இராச தந்திரமும், கடற்படை வலிமையும், தொழிற் செல்வமும் வட நாட்டினருக்கு வெற்றி யளித்தன. 1864-ல் போர்முடிவதற்கு முன்பு, இலிங்கன் மீண்டும் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இலிங்கனது இராச தந்திரத்திற்குப் போரின் நோக்கத்தை அவர் விளக்கிய முறையே சிறந்த உதாரணமாகும். கெட்டிங் பாக்கு என்ற இடத்தில் ஆபிரகாம் இலிங்கன் புரிந்த உன்னதமான சொற்பொழிவில், ' மக்களுக்காக, மக்களின் பொருட்டு நடத்தப்படும் மக்களின் அரசாங்கம் நிலை

பெறுவதற்காகவே' போரிட்டதாகக் கூறினர். அவரால் அடிமை முறையைவிட நாட்டின் ஒற்றுமைக்கும் சன நாயக அமைப்பிற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. போர்முடிவில், எங்கும் சமாதானம் நிலவச் செய்து நாட்டை முன்னேற்றமடைய ஏற்பாடு செய்யவேண்டு மென்று விரும்பிய இலிங்கனைத் தென்னாட்டைச் சேர்ந்த ஒரு நடிகன் சுட்டுக் கொன்றான். இவ்வாறு, அடிமைகள் வாழவும், சனநாயகந் தழைக்கவும் இலிங்கன் தமது உயிரையும் தியாகம் செய்தார்.

1865-க்குப் பிறகு சில காலம் குறுகிய வேற்றுமை உணர்ச்சி நிலவிய போதிலும், வெகுவிரைவில் அமெரிக் காவில் ஆலைத் தொழில்களும், புகையிரத வீதிகளும், கற்பாதைகளும் தோன்றிச் செல்வம் பெருகியதால், அமெரிக்க ஐக்கிய நாடு, 'புது உலகத்தில்' ஒரு வல்லரசாயிற்று. தமது பொருள்களை விற்கவும், மூலப் பொருள்களை எளிதில் வாங்கவும் இடம் தேடிய அமெரிக்கர், பலவீனமடைந்த சுபானிய ஆதிக்கம் நிலைத்திருந்த தீவுகள் சிலவற்றிற் கவனம் செலுத்தலா யினர். இவ்வாறு அமெரிக்கா ஏகாதிபத்திய ஆர்வமும் கொண்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், 'தியோடர் ரூசுவெல்ட்' போன்ற தலைவர்களின் முயற்சியால் கியூபாத் தீவும் பசுபிக் சமுத்திரத்திற் பிலிப்பைன் தீவுகளும் கைப்பற்றப்பட்டன. பிறகு சீனாவில் வியாபாரத்திற்கு இடம்பெறவும், பனாமாவில் கால்வாய் வெட்டவும் அமெரிக்கர் முனைந்தனர். முதல் உலகப்போரில் அமெரிக்கர் தலையிட்டதற்குத் தமது சர்வதேச வியாபாரத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் நோக்கமும் ஒரு சிறந்த காரணமாகும். ஆயினும் சுமார் ஒரு நூற்றாண்டுக் காலமாய் 'மன்றோ கொள்கை'யைப் பின்பற்றி, ஐரோப்பாவில் தலையிடாதிருந்த அமெரிக்கர் 1914-ல் தலையிடுமாறு நேர்ந்ததற்குச் சேர்மானியரே காரணம். எனினும் இது முதல் அமெரிக்கரின் வியாபார

முஞ் செல்வமும் பெருகியதால், பல நாட்டினரும் அவர்களிடம் கடன் பட்டனர். அவர்களது செல்வாக்கும் உலகெங்கும் அதிகரித்தது.

### வினுக்கள்

1. "மன்ரோ கொள்கை" என்பது யாது? அதனைப் பின்பற்றியதால் நேர்ந்த பலன்கள் யாவை?

2. அமெரிக்க உள்நாட்டுப் போருக்குக் காரணங்கள் யாவை?

3. அந்தப் போரின் நிகழ்ச்சிகளை விளக்குக; (படத்திலும் வரைந்து காட்டுக.)

4. அந்தப் போர்க்காலத்தில் இலிங்கன் புரிந்த சேவையின் பெருமையை விளக்குக.

5. அந்தப் போரின் விளைவுகள் யாவை?

6. முதல் உலகப் போருக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் இருந்த நிலையை விளக்குக. எவ்வாறு அந்த நிலையை அவை எய்தின?

7. குறிப்பு வரைக:—எலிவிட்னி, தியோடர் ரூசுவெல்டு, வில்சன், இருபர்ட்லீ, செபர்சன் டேவிசு.

# 17. முதல் உலகப் போருக்கு முன்னர் ஆபிரிக்காவிலும் ஐரோப்பாவிலுமிருந்த அரசியல் நிலைமை

வெகு காலமாக, 'இருட்கண்டமாய்'க் கருதப்பட்டு வந்த ஆபிரிக்காவில் பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஐரோப்பியர் புகுந்து, பல பிரதேசங்களைத் தன்வச மாக்கிய செயல், ஏகாதிபத்தியங்களின் சரித்திரத்தில் ஒரு முக்கியமான பகுதியாகும். 1815-க்குப் பிறகு ஒல்லாந்தக் குடிகளான போயர்களிடமிருந்து தென்முனை நாட்டைப் பிரித்தானியர் கைப்பற்றினரென்று முன்னேர் அத்தியாயத்தில் படித்தறிந்துகொண்டீர்கள். பிறகு போயர்களால் நேத்தால், திரான்சுவால், ஓரஞ்சுக் குடியரசு என்ற குடியேற்றங்கள் அமைக்கப்பட்டு, அவைகளும் இருபோயர் யுத்தங்களின் முடிவில் ஆங்கிலச் சாம்ராச்சியத்திற் சேர்ந்துவிட்டன. பிறகு ருெடீசியா என்ற பெரும் மாகாணம் செசில்ரோட்சினுல் அமைக்கப்பட்டது. இவ்வாறு பிரித்தானியர் தென் ஆபிரிக்காவிற் குடியேற்றங்கள் நிறுவியது கண்டு பொருமையுற்ற மற்ற ஐரோப்பிய இனத்தினரும் தமது ஆதிபத்தியத்தை நிலைநாட்ட முயன்றனர்.

போர்த்துக்கீசர் முன்னரே தம்வசமிருந்த சிற்சில கடற்கரைப் பகுதிகளை விரிவுபடுத்தினர். இதன் பயனுக அங்கோலா, மொசாம்பிக் போன்ற போர்த்துக்கீசர் குடியேற்றங்கள் தோன்றின. நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பிறகு, பிரான்சுநாடு ஆபிரிக்காவின் வடகரையிலுள்ள அல்சீரியாவின் உள்நாட்டு நிர்வாகத்தில் தலையிட்டது. முடிவில் 1848-ல் அதனை ஆக்கிரமித்துக் கொண்டு, பிரான்சுக் குடியரசின் ஒரு பகுதியாக்கி விட்டது. பின்னர், அதற்கருகிலுள்ள டியூனிசு மீதும்

கவனம் செலுத்தியது. அப்போது ஐக்கியமடைந்த இத்தாலி நாட்டினரும் அங்குத் தம் சாம்ராச்யத்தை நிறுவ முயன்றதால், இரு நாடுகளுக்குமிடையே போட்டி தோன்றி, 1881-ல் பிரான்சுக்காரர்கள் அந்த நாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். பிரான்சுக்கு எதிரான 'மூவல்லரசு ஒப்பந்தத்தில்' இத்தாலி சேர்ந்ததற்கு இதுவே முக்கிய காரணம். 1883-ல் மடகாசுகர் தீவையும் கைப்பற்றினர். பின்னர், சிறிது சிறிதாகச் **சகாரா பாலைவனமும்**, நைசீரியா நீங்கிய மேற்கு ஆபிரிக்காவின் பெரும்பகுதியும் பிரான்சின் ஆட்சிக்குள் வந்தன.

நைல் நதிக்கரையிலுள்ள **எகிப்து** நாட்டிலும், பிரான்சுக்காரரும், பிரித்தானியரும் பிரவேசித்தனர். நெடுங்காலமாக எகிப்திய மன்னர்களான '**கேடிவ்**'களுக்குப் பிரான்சுக்காரர்கள் பெருந்தொகைகளைக் கடன் கொடுத்து வந்தனர். 1869-ல் **டிலெசப்சு** என்ற நுட்ப மதியுடைய பிரான்சு எந்திர வல்லுநரால் சூயசு கால்வாய் வெட்டப்பட்டதும், அதனை நிர்வகிக்க ஒரு வியாபாரச் சங்கம் நிறுவப்பட்டது. இதில் பிரான்சுக்காரரும் 'கேடிவ்' மன்னனும் பங்குபற்றியிருந்தனர். 1876-ல் கேடிவ் கடன் தொல்லையால் துன்புற்ற சமயத்தில் பிரித்தானிய பிரதமரான டிசுரேலியனது முயற்சியால் பிரித்தானிய அரசாங்கம் அந்தப் பங்குகளை விலைக்கு வாங்கியது. இதனால் இரு நாட்டினரும் கேடிவ் மீது ஆதிக்கம் செலுத்தினர். கேடிவ் இசுமேல் நீக்கப்பட்டு, அவனது மகள் கேடிவாக நியமிக்கப்பட்டார். அப்பொழுதும் எகிப்திய மக்களுக்கு தமது அரசாங்கத்தின்மீதும் அன்னியர்மீதும் கோபம் பெருகியது; இதனால் **அராபி பாசா** என்பவரின் தலைமையின்கீழ்த் தேசீய இயக்கத்தினரின் கழகங்கள் நிகழ்வித்தன. அப்போது பிரான்சுக்காரர்கள் எகிப்தினின்றும் விலகிக்கொள்ளவே, ஆங்கிலேயர் அராபிபாசாவை **டெல்-எல்-கபீர்** என்ற இடத்தில்

முறியடித்து இலங்கைக்குத் தேசப்பிரட்டம் செய்தனர். பிறகு எகிப்து அரசனுக்கு, உதவியாக நாட்டின் நிர்வாகத்தைக் கவனிக்க 'ரெசிடெண்டு' என்ற ஓர் அதிகாரியும் நியமிக்கப்பட்டார். பேரிங், குரோமர் பிரபு முதலியவர்களின் நிர்வாகத்தின்கீழ் எகிப்து மேன்மையும் செல்வ வளமும் பெற்றது. பின்னர் அடுத்துள்ள **சூடான்** நாட்டிலும், 'மாதி' என்ற மதத்தலைவரின் எதிர்ப்பை ஒடுக்கித் தமது பாதுகாப்பின்கீழ் கொணர்ந்தனர்.

காடுகளும், நீர்வீழ்ச்சிகளும், நோய்விளைக்கும் உயிர்ப் பிராணிகளுமுள்ள மத்திய ஆபிரிக்காவில் நீண்ட காலமாய்ப் புகாதிருந்த ஐரோப்பியர், **லிவிங்சுடன், ச்டான்லி** முதலியவர்களின் யாத்திரைகளுக்குப் பிறகு அங்கும் பிரவேசிக்கத் தொடங்கினர். **கெனியா, உகண்டா, நைசீரியா, கோல்டு கோசுடு** முதலிய பிரித்தானியக் குடியேற்றங்கள் இத்தகையவர்களின் ஆராய்ச்சிகளுக்குப் பிறகு தோன்றியவை. ஏரிகள் சூழ்ந்த மத்திய பகுதியில் **தாங்கனீகா, கிழக்காபிரிக்கா,** மேற்கில் **சேர்மனிய தென்மேற்கு ஆபிரிக்கப் பகுதி** முதலியவற்றைச் சேர்மானியர் 1890-ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆக்கிரமித்துக்கொண்டனர். பெல்சிய அரசனை லியபால்டின் முயற்சியால் **கொங்கோப்** பிரதேசம், பெல்சிய மக்களின் வசமாயிற்று. அங்கு அவர்கள் சுதேசிகளைத் துன்புறுத்திய கொடூரங்களை வருணிப்பதற்கியலாது. வடக்கிலுள்ள **லிபியா, எரிட்ரியா, சோமாலிலாந்து** என்னும் பகுதிகள் பிற்காலத்தில் இத்தாலியர் வசம் வந்தன. அபிசீனியாப் பிரதேசம் ஒன்றே நீண்ட காலத்திற்கு ஐரோப்பியர்வசம் வராத சுயேச்சை படைத்த நாடாக விளங்கியது. இவ்வாறு ஆபிரிக்கா முழுவதையும் பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஐரோப்பியர் பங்கிட்டுக் கொண்டது, அவர்களது சாம்ராச்சிய ஆசைக்குப் பெரும் உதாரணமாகும். இத்தகைய சாம்ராச்சிய ஆசையே உலகப் பெரும் போருக்கும் ஒரு காரணமாயிற்று.

இனி, ஐரோப்பாவிற் காணப்பட்ட அரசியல் நிலைமையையும் அதன் விளைவாகப் போர் தோன்றியதையும் விளக்குவோம். பிசுமார்க்கின் பெரு முயற்சியால் சேர்மனிய இராச்சியம் உருவாயிற்றல்லவா? அப்பொழுது பிரான்சின் பகைமை நீடிக்குமென்பதை உணர்ந்த பிசுமார்க்கு அதனுடன் வல்லரசுகள் சேராவண்ணம் தடுத்துச் சேர்மனியைப் பலப்படுத்துவதில் முனைந்தான். அவனது முயற்சியால், சேர்மனி, ஆசுத்திரியா, ரூசியா என்ற மூன்று நாடுகளினது அரசர்களின் கூட்டுறவான 'மூன்று சக்கரவர்த்திகளின் சங்கம்' உருவாயிற்று. பிறகு ரூசியாவும் ஆசுத்திரியாவும் இடைவிடாது சச்சரவு புரிந்து வந்தமையாலும், இத்தாலி டூனிசு கிடைக்காத வருத்தத்தினால் பிரான்சுமீது கோபமடைந்ததாலும் பிசுமார்க்கு முடிவாக 1882-ல் 'மூவல்லரசு ஒப்பந்தம்' (Triple Alliance) ஒன்றால் சேர்மனி, இத்தாலி, ஆசுத்திரியா என்ற மூன்று நாடுகளையும் இணைத்து வைத்தான். ஆனால், பிரான்சுடன் ரூசியாவும் பிரித்தானியாவும் சேராதிருக்கத் தன்னால் இயன்ற முயற்சிகளைச் செய்து வந்தான். பிரித்தானியரின் பகைமையை உண்டாக்காதிருக்கும் பொருட்டு, சேர்மனிக்குக் குடியேற்றங்கள் அமைப்பதற்கும் முயலாதிருந்தான். 1890-ல் அவன் விலகிய பிறகு, சர்வாதிகாரம் செலுத்த முயன்ற **கெய்சர் இரண்டாம் வில்லியம்** ஆடம்பரமும் போர்வெறியும் படைத்தவன்; இராசதந்திர நுட்பங்களை அறியாதவன்; அவனது தவறுகளால், பிசுமார்க்கின் நோக்கம் சிதறுண்டு, பிரான்சும் சேர்மனியின் பகைவர்களை ஒன்றுதிரட்டும் முயற்சியிலீடுபட்டது.

முதலில், பிரான்சு ரூசியாவின் நட்பைப் பெற விரும்பி, அதற்குத் தேவையான பொழுதில் புகையிரத வீதிகளை அமைக்க ஏராளமான பொருள் கடனாகக் கொடுத்துதவியது. இதனாலும் ஆசுத்திரியருடன் சேர்மனியர் கொண்ட நெருங்கிய நட்பாலும், ரூசியா முடி

வாகப் பிரான்சுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளத் தீர்மானித்தது. அவ்வாறே 1898-ல் ‘இரு வல்லரசு ஒப்பந்தம்’ (Dual Alliance) நிறைவேறியது. பின்னர், நடுநிலை வகித்த பிரித்தானியரைத் தன்பக்கம் இழுக்கச் சேர்மனி



படம் 60. கெய்சர் வில்லியம் II

யும் பிரான்சும் முயன்றன. ஆனால், கெய்சரின் அகம்பாவமான பேச்சுக்களும், செய்கைகளும் பிரித்தானியரைப் பிரான்சுடன் நட்புக் கொள்ளுமாறு செய்துவிட்டன. முக்கியமாகக் கீல் கால்வாயில் வலிமை மிக்க கடற்படையை சேர்மனி திரட்டி வந்தமையும், துருக்கியரோடு நட்புக் கொண்டு **பெர்லின்-பாக்தாத் புகையிரத வீதி** அமைக்க முயன்றதும், தென்னாபிரிக்கப் போயருக்கு ஆதரவு கொடுத்தமையும், ஆபிரிக்காவில் சாம்ராச்சியம் அமைக்க முயன்றமையும் பிரித்தானியரை அச்சமுறச் செய்தன.

இந்த அச்சத்தாலும், ஏழாம் எட்வர்டின் பெரு முயற்சியாலும், 1904-ல் பிரான்சும் பிரித்தானியாவும் 'நேசக் கூட்டுறவு' (Entente Cordiale) ஒப்பந்தஞ் செய்வது சாத்தியமாயிற்று. பிறகு, பிரான்சு முன்னின்று ரூசியருக்கும் பிரித்தானியருக்கு மிடையே இருந்த கருத்து வேற்றுமைகளை நீக்கி, 1907-ல் 'ஆங்கில-ரூசியன் கன்வென்சன்' என்ற நேச ஒப்பந்தம் நிறைவேறத் துணைபுரிந்தனர். இவ்வாறு ஐரோப்பாவில் வல்லரசுகள் இருகட்சிகளாகப் பிரிந்து போருக்கு ஆயத்தம் செய்யலாயின.

கெய்சரின் படைபலமும், கர்வமும் அதிகரித்தமையால், எந்தச் சிறு சம்பவமும் போர்வெறியைத் தூண்டக் கூடும் என்ற நிலை தோன்றியது. 1914-ல் ஆசுத்திரிய கோமகன் ஒருவன் செர்பியத் தலைநகரில் சுட்டு வீழ்த்தப் பட்டமையால், ஆசுத்திரியர் செர்பியா மீது பல நிபந்தனைகளை விதித்தனர். அவற்றை ரூசியரின் ஆதரவு கொண்டு செர்பியா நிராகரித்தது. உடனே ஆசுத்திரியா போர் தொடுக்கவே, சேர்மனியும் போரில் இறங்கியது. செர்பியாவுக்கு உதவியாக ரூசியா போரில் ஈடுபட்டதும், பிரான்சும் மத்திய வல்லரசுகள்மீது போர் தொடுத்தது. முதலில் தயங்கிய பிரித்தானியர், பெல்சியத்தின் சுதந்திரத்திற்குச் சேர்மனி உத்தரவாதம் அளிக்க மறுக்கவே, தாமும் போரில் ஈடுபட்டனர். இவ்வாறு 1914-ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் முதலாம் உலகப் போர் தோன்றியது.

## வினாக்கள்

1. எகிப்து நாட்டில் ஆங்கிலேயர் ஆதிபத்தியம் நிறுவிய வரலாற்றை விளக்குக.

2. ஆபிரிக்காவில் ஐரோப்பிய இனத்தினர் பகிர்ந்து கொண்ட பிரதேசங்களைக் காட்டும் அட்டவணையொன்று தயார் செய்க.

3. ஆபிரிக்காத் தேசப்படத்தில் பல்வேறு இனத்தினர் ஆளும் பகுதிகளைத் தெளிவாகக் குறிப்பிடுக.

4. 1880-க்குப் பிறகு ஐரோப்பாவில் இரண்டு வல்லரசுக் கட்சிகள் தோன்றிய வகையைத் தெளிவாக விளக்குக.

5. முதல் உலகப்போருக்குக் காரணங்கள் யாவை?

6. குறிப்பு வரைக:—டிலெசப்சு, அராபிபாசா, அபிசீனியா, கெய்சர் வில்லியம் II, பெர்லின்-பாக்தாத் புகை இரத வீதி.

## 18. போரும் அதன் விளைவுகளும்

1914-ஆம் ஆண்டிற் போர் தொடங்கிய பொழுது, விரைவாகப் போரை நடத்தி வெற்றிபெறுதல் வேண்டும் என்பதே, சேர்மனியின் நோக்கமாயிருந்தது. ஆனால் ஒரே சமயத்தில் இரண்டு போர் முனைகளில் சேர்மனியர் போரிட விரும்பவில்லை. எனவே, நடுநிலை வகித்த பெல்சியத்திற் புகுந்தேனும், பிரான்சைத் தாக்கி அதனைப் பணியவைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சேர்மனியப் படைகள் வெள்ளம் போலப் பெல்சியத்திற் புகுந்தன. லீச், நாமூர் போன்ற இடங்களிற் கடும் போர் நிகழ்ந்து, அந்த நகரங்கள் அழிக்கப்பட்டன. பிறகு சேர்மனியர் பிரான்சுக்குள் விரைந்து முன்னேறினர். ஆங்கிலப்-பிரான்சுப் படைகள் தடுத்தும், அவை பாரிசுக்கு இருபது மைல் தூரத்தில் நெருங்கிவிட்டன. ஆயினும், அவை மார்ன்நதிக் கரையிலேயே தடுத்து நிறுத்தப்பட்டுப் பாரிசு நகரம் பாதுகாக்கப்பட்டது. பிறகு, இரு கட்சியினரும் அகழிகள் வெட்டி வைத்துக் கொண்டு நீண்ட காலப் போருக்குத் தயார் செய்து கொண்டனர்.

அப்போது கீழ்த்திசையில் ரூசியப் படைகள் முன்னேறியதால், அவற்றைத் தடுப்பது அவசியமாயிற்று.

**வான்யிண்டன்பர்க்** என்ற தளபதி ரூசியரைத் **தானன்பாக்** என்ற இடத்தில் முறியடித்து, போலந்தில் புகுந்தார். ரூசியப் போலந்தும் சேர்மனியர் வசமா யிற்று. ஆங்கிலக் கடற்படை, சட்லந்துக் கருகில் சேர்மனியக் கடற்படையை முறியடித்து, அதனைப் போர் முடியும் வரையில் வெளியில் நடமாடாத வண்ணம் முற்றுகை செய்தது. அதனால் சேர்மனியர் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்தி ஆங்கிலேயரின் வியாபாரக் கப்பல்களுக்கு இடையூறு விளைவித்து வந்தனர்.

கீழ்த்திசைப் போரில் ரூசியா தோல்வியுற்றதால், உள்நாட்டில் கொந்தளிப்பு தோன்றியது. போர் நிறுத்தம் செய்யவேண்டுமெனப் படைவீரரும், மக்களும் விரும்பினர். இதனால், 1917-ல் புரட்சி தோன்றிச் 'சார்' ஆட்சி வீழ்ச்சியுறவே, சேர்மனியர் **லெனின்** என்ற பொதுவுடமைத் தலைவரை ரூசியாவிற்குள் அனுப்பி வைத்தனர். அவர்கள் எதிர்பார்த்தவாறே ரூசியாவில் பொதுவுடமை அரசாங்கம் தோன்றி, அது 1918-ல் **பிரசுடு லித்தோவ்க்** என்ற இடத்தில் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி, ரூசியா பல பிரதேசங்களை இழந்ததாயினும், போர் நிறுத்தத்தாற் புதிய அரசாங்கம் நிலைத்தது.

இவ்வாறே, துருக்கிக்கு எதிராக விளைந்த போரிலும் 'நேச நாடுகள்' முதலில் தோல்வியுற்றன. 1915-ல் துருக்கியிடமிருந்து 'டார்டனல்சு நீரிணையைக்' கைப் பற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் பிரித்தானிய-பிரான்சுக் கடற்படைகள் **காலிபொலி** தீபகற்பத்திற் புகுந்தன. ஆனால், அங்குத் துருக்கியர் வீரப் போர் புரிந்து, அவர்களைப் பின்வாங்கச் செய்தனர். அப் போது பல்கேரியரும் சேர்மனியருடன் சேர்ந்ததால் அவர்களது படைகள் செர்பியரை முறியடித்துத் துரத் தின. இவ்வாறு பால்கன் தீபகற்பத்திலும் நேச நாடு களின் நிலை திருப்திகரமாக இல்லை. பின்னர் மெச




படம் 61. முதலாம் உலகப் போர்க்களங்களைக் காட்டும் படம்

பொத்தோமியாவையும், பாரசீகத்தையும் துருக்கியர் தாக்க முயன்றனர். அவர்களுக்கு எதிராக மெசபொத்தோமியாவிலிருந்தும், பாலத்தீனத்திலிருந்தும் இரு படைகள் முன்னேறின. 1917-க்குப் பிறகு அவை பல வெற்றிகள் பெற்றுப் பாலத்தீனம், சிரியா முதலிய பிரதேசங்களைக் கைப்பற்றிவிட்டன.

சேர்மனியப் படைகள் கிழக்காப்பிரிக்காவில் செய்த முயற்சிகளைத் தளபதி **சுமட்சு** முதலியோர் முறியடித்து விட்டனர். பசுபிக் தீவுகளை யப்பானும் பிரித்தானியர்களும் கைப்பற்றினர். எனவே, மேற்குத்திசைப் போர்க்களமே பிரதானமான பகுதியாக விளங்கிற்று. அங்கு முன் கூறியவாறு அகழிப்போர் நீடித்து நடந்தது. 1916-ல் **வர்டுன் கோட்டையைச்** சேர்மனியர் பிடிக்க முயன்றதும், பிறகு நேச நாட்டினர் சோம் நதிக் கரையில் முன்னேறியதும் பயனற்றுப் போயின. இந்த நிலையில் ஆங்கிலப் பிரதமர் **ஆசுக்வித்** விலகி, **லோயிட் சோர்ச்** பிரதமரானார். வேல்சு பிரதேசத்தைச் சேர்ந்தவரான இவர், பொக்கிச மந்திரியாக இருந்து, பிரபுக்கள் சபையினருடன் (1909—1911) போராடிப் புகழ்பெற்றவர். இவரது துணிவும் நாவன்மையும் ஆற்றலும் மக்களை வசீகரித்தன. "சேர்மானியர் தனிப்பட்ட சண்டைகளில் வெற்றி பெறலாம்; ஆனால் யுத்தத்தில் முடிவான வெற்றி, எங்களுடையவே!" என்று முழங்கியவர் இவர். அவரது ஊக்கம் மிகுந்த நிர்வாகத்தின்கீழ்த் தளபதி **போசு** நேசப்படைகளுக்குத் தனித் தலைவனாக நியமனம் பெற்றார். 1918-ஆம் ஆண்டில் சேர்மனியர் பாரிசைக் கைப்பற்ற மீண்டும் செய்த முயற்சி போசினால் தடுத்து நிறுத்தப்பட்டது.

அந்த நிலையில், சேர்மானியர் செய்த தவறுகளால், அமெரிக்கர் போரில் பிரவேசித்தனர். நீண்ட காலமாக நேசநாடுகளிடம் அனுதாபம் கொண்டிருந்தும் போரில் இறங்க மறுத்த அமெரிக்கரைச் சேர்மனியர் உதாசீனம்

செய்தனர். அவர்களது வியாபாரக் கப்பல்கள் நேச நாடுகளுக்குப் பொருள்களைச் சுமந்து செல்வதைத் தடுப்பதற்காக நீர்மூழ்கிக் கப்பல்களைச் சேர்மனி ஏவியது. இதன் பயனாகப் பல அமெரிக்கக் கப்பல்கள் சேதமடையவே, அமெரிக்கா சேர்மனிக்கு எச்சரிக்கை அனுப்பியது. அப்போதும் சேர்மனியர் அமெரிக்கக் கப்பல்களுக்குத் துன்பம் விளைவிக்கவே, சனாதிபதி வில்சன் போரில் ஈடுபட்டார். அமெரிக்கப் படைகளின் வரவால், மேற்குத் திசையில் நிலைமாறியது. சேர்மனியப் படைகள் பின்வாங்கவே, அவற்றைப் பின்தொடர்ந்து நேசப் படைகள் சேர்மனியில் புகுந்தன. அப்போது சேர்மனியிற் புரட்சி நிகழ்ந்து, சக்கரவர்த்தி முடியிழக்க நேர்ந்ததால், 1918-நவம்பரில் போர் நிறுத்தம் நிகழ்ந்தது. இதற்கு முன்பே கிரேக்கர் பல்கேரியரை முறியடித்தமையால், பால்கன் தீபகற்பத்திலும் நேச நாடுகள் வெற்றியுற்றன; துருக்கியரும் போரிலிருந்து விலகி விட்டனர். 1915-ல் மத்திய வல்லரசுகளின் கட்சியிலிருந்து விலகிய இத்தாலியும் ஆசுத்திரியரைத் தோற்கடித்தது. இவ்வாறு உலகப் பெரும் போர் முடிவுற்றது.



படம் 62.
சனாதிபதி வில்சன்

சுமார் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு தமது மன்ரோக் கொள்கையைப் புறக்கணித்துப் போரில் ஈடுபட்ட அமெரிக்கர் ஐரோப்பிய விவகாரங்களிலிருந்து விலக விரும்பிய போதிலும், சனாதிபதி வில்சன் ஐரோப்பாவிற்கு வந்து லோயிட்சோர்சுடனும், பிரான்சுப் பிரதமர் கிளமென்சோவுடனும் சமாதான மகாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டார். அப்போது அவர்

வகுத்துக்கொடுத்த பதினான்கு அம்சத் திட்டம் புகழ் பெற்றது. அந்தப் பதினான்கு அம்சங்களாவன :—(1) இரகசிய ஒப்பந்தங்கள் கூடாது ; வெளிப்படையாகவே நாடுகள் ஒப்பந்தங்கள் புரிதல் வேண்டும். (2) கடல்களில் எல்லா நாடுகளுக்கும் போக்குவரத்து சுதந்திரம். (3) வியாபாரத்திற்குத் தடைகள் இருக்கலாகாது. (4) ஆயுதங்கள் குறைப்பு. (5) சாம்ராச்ய உரிமைகளைச் சமரசமாகத் தீர்த்துக் கொள்ளுதல். (6) ருசியாவில் அந்நியர் தலையிடலாகாது. (7) பெல்சியத்திற்கு விடுதலை. (8) பிரான்சு நாட்டுடன் அல்சேசு-லோரனை இணைத்தல். (9) இத்தாலிய எல்லைகளை வரையறுத்தல். (10) ஆசுத்திரிய-அங்கேரிய சாம்ராச்சிய மக்களனைவருக்கும் சுதந்திரமாக அரசியல் வகுத்துக்கொள்ளும் உரிமை. (11) பால்கன் பிரதேசத்தில் சுதந்திரமும் அமைதியும். (12) டார்டனல்சு வழியே கப்பல்கள் செலுத்த அனைவருக்கும் உரிமை. (13) போலந்திற்குச் சுதந்திரம். (14) சர்வதேச சங்கம் அமைத்தல். அந்தச் சங்கம் அமைப்பதைத் தவிர்த்த மற்ற நிபந்தனைகளை ஐரோப்பிய வல்லரசுகள் முழுமனதுடன் ஏற்கவில்லை. எனவே, 1919-ல் வார்சேல்சு ஒப்பந்தம் உருவாகியது. இதன்படி பகைவர்களின் சாம்ராச்யங்கள் சிதைக்கப்பெற்றன. சேர்மனியிலிருந்து அல்சேல்-லோரைன் பிரதேசம் பிரிக்கப்பட்டு, பிரான்சுடன் சேர்க்கப்பட்டது. சுடேடன் பகுதி செக்கோசுலேவேக்கியாவில் சேர்க்கப்பட்டது. கிழக்கு சேர்மனி துண்டிக்கப்பட்டு, மெமல்-டான்சிக் பகுதி சர்வதேச சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. விடுதலை பெற்ற போலந்து நாட்டினர் சுதந்திரமாக பால்டிக் கடல் வழியே போக்குவரத்து நடத்துவதற்காகச் சேர்மனியைச் சேர்ந்த ஒரு பகுதி அதற்கு வழங்கப்பட்டது. இதுவே "பொலிசு இடைவழி" (Polish Corridor) என உலகப் பிரசித்தமடைந்தது. ஆசுத்திரியா மட்டும் சிறு நாடாக அமைக்கப்பட்டு, அதன் பழைய சாம்ராச்சியத்தி

லிருந்து கங்கோ, செக்கோசுலேவேக்கியா, யுகோசுலேவியா, ரூமேனியா முதலிய நாடுகள் சுயேச்சைபெற்றன. இவ்வாறு சுயநிர்ணய உரிமை (Self-determination) இந்தச் சிறு நாடுகளுக்கு வழங்கப்பட்டது. துருக்கி, சின்னுசியா மட்டும் அடங்கிய தனி இராச்யமாயிற்று. சிரியா, பாலத்தீனம் என்பவை அதனின்றும் பிரிக்கப்பட்டுச் சர்வதேச சங்கத்தின் ஆதரவில் **மாண்டேட் நாடுகளாக** முறையே பிரான்சிடமும் பிரித்தானியரிடமும் ஒப்படைக்கப்பட்டன. சேர்மனியின் ஆபிரிக்கக் குடியேற்றங்களும் இத்தகைய நிலேயை அடைந்தன. சேர்மனி பெரும் நட்டஈடு செலுத்த நேர்ந்தது. அதனேச் செலுத்தும் வரை ரூர் பிரதேசத்தில் படைகளே வைத்திருக்கப் பிரான்சு உரிமை பெற்றது. சேர்மனிய படைபலம் மிகவும் குறைக்கப்பட்டு, றைன்லாந்து பகுதியிற் கோட்டைக் கொத்தளங்கள் நீக்கப்பட்டன. இவ்வாறு சேர்மனி ஒடுக்கப்பட்டதால், இந்த உடன்படிக்கை பழி வாங்கும் உணர்ச்சியுடன் செய்யப்பட்டது என்று கூற இடமுண்டு. 1920-ல் சேர்மனியின் **விமார்குடியரசு** தோன்றிக் கிண்டன்பர்க் போன்ற தலேவர்களின்கீழ்ச் சனநாயக ஆட்சி நிலேத்தபோதிலும், சேர்மனியர் இந்த நிபந்தனேகளின் கொடுமையாலும், பொருளாதாரக் கட்டங்களாலும், நாசிக்கட்சியினர் போன்ற தீவிரவாதிகளே விரும்பத் தொடங்கினர். இவ்வாறு இந்த வார்சேல்சு உடன்பாடு நாசிகளின் வளர்ச்சிக்கும் இரண்டாம் உலகப் போருக்கும் வித்திட்டதென்றே கூறலாம்.

## வினுக்கள்

1. மேற்குத் திசைப் போர்க்களத்தில் நிகழ்ந்த சம்பவங்களே விளக்குக.

2. துருக்கியருடன் நேர்ந்த போரின் விவரங்களே விளக்கி வரைக.

3. போரில் நேசநாடுகள் வென்றதற்குக் காரணங்கள் தருக.

4. போரின் முடிவான பலன்கள் யாவை?

5. "பதினான்கு அம்சத் திட்டங்கள்' என்பன யாவை? அவற்றை வகுத்தவர் யார்? அவற்றில் எவை ஏற்றுக்கொள்ளப் பட்டன?

6. 'வார்சேல்சு' உடன்படிக்கையின் முக்கியமான நிபந் தனைகள் யாவை? அது எவ்வாறு இரண்டாம் உலகப் போருக் குக் காரணமாகிறது?

### பயிற்சி

1. வார்சேல்சு உடன்படிக்கையால் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களை ஐரோப்பாப் படத்தில் குறிப்பிடுக.

2. குறிப்பு வரைக: வீமார்குடியரசு, வில்சன், கிளமென்சோ, கிண்டன்பர்க்.

## 19. சருவ தேச சங்கம்

1919-ல் வார்சேல்சு உடன்படிக்கை ஏற்பட்டபிறகு, மறு ஆண்டில் சனாதிபதி வில்சனது புகழ்பெற்ற பதி னான்கு அம்சத் திட்டத்திலொன்றான சருவதேச சங்கம் தாபிக்கப்பட்டது. இது உலக வரலாற்றில் முக்கிய மான சம்பவமாகக் கருதப்படவேண்டும். ஏனெனில், மனிதவர்க்கம் போர்முறையை ஒழித்து அமைதியான வழிகளில் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குச் செய்த திட்ட மான முதல் முயற்சி இதுவேயாகும். இந்தச் சங்கத்தின் முதன்மையான குறிக்கோள் நாடுகளிடையே நல்லுற வும், உலகில் அமைதியும் தோன்றச் செய்வதே எனினும், தொழிலாளர் நலன்களைப் பாதுகாத்தல், பெருந் தொத்து நோய்கள் பரவாதவாறு தடுத்தல் போன்ற சமுதாய முன்னேற்றத்திற்குகந்த இலட்சியங்களையும் இந்தச் சங்கம் கொண்டிருந்தது.

இந்தச் சங்கத்தில் ஐம்பத்தொரு நாடுகள் அங்கம் வகித்தன. இதன் தலைமைக் காரியாலயம் **செனீவா** நகரில் இருந்தது. இந்தச் சங்கத்தி னமைப்பில், ஒவ் வொரு நாடும் அனுப்பிய பிரதிநிதிகளடங்கிய **பொதுச் சபையும்**, பதினான்கு உறுப்பினர் கொண்ட **நிருவாக சபையும்** இருந்தன. நிருவாக சபையில் பிரித்தானியா, பிரான்சு, இத்தாலி முதலிய ஐந்து பேரரசுகளுக்கு நிரந்தரமாகத் தானங்களிருந்தன; மற்ற ஒன்பது தானங் களுக்குப் பிற நாடுகளிடையே இருந்து உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த நிருவாக சபை எந்த அவசரமான காரியத்தையும் உடனே தீர்மானித்து நட வடிக்கை எடுக்க வல்லது; பொதுச்சபையிற் பிரதி நிதிகள் பிரச்னைகளை வெளிப்படையாக விவாதித்துத் தீர்மானங்கள் செய்வர். இந்தச் சர்வதேச சங்கத்தின் பிரதம நிர்வாகியாகப் 'பொதுக் காரியதரிசி' (Secretary-

general)யும் அவருக்குக் கீழ்ப் பல நாடுகளைச் சேர்ந்த நிருவாகிகளும் இருந்தனர்.

சருவதேச சங்கம் சமாதான முறைகளில் நாடுகளிடையே தோன்றிய சச்சரவுகளைத் தீர்த்து வைத்தது. உதாரணமாக, இத்தாலியும் கிரீசும் தமக்குள் போரிடத் தொடங்கியபொழுது, இச் சங்கம் போரை நிறுத்திச் சமாதானத்தை உண்டாக்கியது. இவ்வாறே துருக்கியும் கிரீசும் தமது நாடுகளிலிருந்த மக்களைப் பரிவர்த்தனை செய்துகொண்ட பொழுது, அது நன்முறையில் நடக்க உதவியது. ஆயினும், பெரிய வல்லரசுகள் சச்சரவுகளில் ஈடுபட்டபொழுது, அவற்றை அடக்கிச் சமாதான முண்டாக்க இந்தச் சங்கத்தால் இயலவில்லை. மற்றத் துறைகளிலும், இந்தச் சங்கம் குறிப்பான சேவை செய்தது. மலேரியா போன்ற நோய்களின் காரணங்களை ஆராய்ந்து அவை பற்றிய விவரங்களை எல்லா நாடுகளுக்கும் அளித்தல், தொழிலாளருக்கு அடிப்படை உரிமைகளையும் நலன்களையும் நிர்ணயித்து ஒரு சாசனம் (Charter) தயாரித்தல் முதலிய திட்டங்களைச் சங்கம் நிறைவேற்றியது. இந்தச் சங்கத்தின் கிளைத் தாபனங்களில் **சர்வதேச தொழிலாளர் தாபனம் (I. L. O.)** பிரதானமானது. மேலும், வென்ற நாடுகளிடம் தோல்வியுற்றவர்களின் குடியேற்றங்களை விட்டுவிடாமல், அவற்றைச் சர்வதேச சங்கம் 'மாண்டேட்' நாடுகளாக வல்லரசுகளிடம் ஒப்படைத்து அடிக்கடி அபிவிருத்தி குறித்த அறிக்கைகளைப் பெற்று வந்தது. இன்னும் முன்னரே ஏக் நகரில் நிறுவப்பட்டுள்ளதாகிய உலக நீதிமன்றமும், இந்தச் சங்கத்தின் உறுப்பாகக் கருதப்படலாயிற்று.

இந்தச் சங்கம் திறம்படப் பணியாற்றியபோதிலும், 1930-ஆம் ஆண்டிற்குப் பிறகு விரைவில் பலவீனம் அடைந்தது. வல்லரசுகள் தமது அதிகாரத்தைக் குறைத்துக் கொள்ளாதிருந்ததும், உக்கிரமான தேசீய உணர்ச்சி வளர்ச்சியுற்றதும், பெரும் வல்லரசுகள் பல

சங்கத்தினின்றும் விலகியதும் இத்தகைய அழிவு நிலைக்குக் காரணங்களாம். உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாடு சங்கத்திற் சேரவில்லை; ரூசியா, சேர்மனி, யப்பான் முதலியன சில காலத்திற்குப் பிறகு இதினின்றும் விலகிவிட்டன. இதனுற் சங்கம் பலவீனமுற்றது. மேலும், பெரிய வல்லரசுகள் சங்க விதிகளுக்கு முரணுக நடந்துகொண்டபோதிலும், அவற்றை அடக்கி நல்வழிப் படுத்துவதற்குப் போதிய அதிகாரமும், வலிமையும் சங்கம் படைத்திருக்கவில்லை. உதாரணமாக, யப்பான் சீனு மீது படையெடுத்த பொழுதும், இத்தாலி அபிசீனிய நாட்டைக் கைப்பற்றிய சந்தர்ப்பத்திலும், சர்வாதிகாரிகள் சுபெயினில் உள்நாட்டுக் கலகத்தைப் பெருக்கிய காலத்திலும் சங்கம் எந்தத் திட்டமான நடவடிக்கையையும் எடுக்க இயலவில்லை. அன்றியும், சேர்மனி, இத்தாலிபோன்ற நாடுகளிற் சர்வாதிகாரிகள் தோன்றி மக்களிடையே தீவிரமான தேசீய உணர்ச்சியையும் இராணுவ பலத்தையும் பெருக்கியமையால், உலகில் சமாதான விருப்பம் குறைந்து, மீண்டும் போருக்கேற்ற சூழ்நிலை தோன்றிவிட்டது. இதனுல், 1938-க்குப் பிறகு சங்கம் பலவீனமடைந்து மறைய நேர்ந்தது.

இவ்வாறு சருவதேச சங்கம் நலிவுற்ற காலத்தில், ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் சர்வாதிகார ஆட்சி முறை தோன்றி வளர்ந்தது. உலகப் போரினுற் பெரிதும் துன்பமடைந்த ஐரோப்பிய மக்கள் விரைவாக முன்னேற்ற மடைய விரும்பியதும், வேலையில்லாமை போன்ற பிரச்னைகளைச் சனநாயகங்களால் எளிதில் சமாளிக்க முடியாமற் போனதும் இத்தகைய மாறுதலுக்கு முதன்மையான காரணங்களாகக் கருதப்படுகின்றன. இத்தகைய சர்வாதிகார அரசியல், முதன்முதலில் ரூசியாவில் நிலைபெற்றது; பின்னர்த் துருக்கியிலும் இத்தாலியிலும் தோன்றியது; இறுதியில் சேர்மனியில்

அது உச்சநிலையை அடைந்து, போருக்கே காரணமாகி விட்டது.

**வினாக்கள்**

1. சருவதேச சங்கம் எப்பொழுது, எந்த நோக்கங்களுக்காக நிறுவப்பட்டது?
2. சருவதேச சங்கத்தின் அமைப்பை விளக்குக.
3. சருவதேச சங்கம் நிறுவப் பாடுபட்டவர் யார்?
4. அந்தச் சங்கம் புரிந்துள்ள நன்மைகள் யாவை?
5. அது எக்காரணங்களால் பலவீன மடைந்து விட்டது?

## 20. ரூசியாவில் பொதுவுடமை அரசாட்சி

1919-ம் ஆண்டில் ரூசியாவில் பொதுவுடமை ஆட்சி நிறுவப்பட்டதை நீவிர் அறிவீர்கள். அது எவ்வாறு நிகழ்ந்ததென்பதை இனி ஆராய்வோம்.

உலகப்போர் நிகழ்ந்து கொண்டிருந்த பொழுதே, ரூசியாவின் உள்நாட்டு அரசியலிற் குழப்பம் அதிகரித்தது. இதற்குப் பிரதான காரணம், நீண்ட காலமாக ரூசிய அரசனும் பிரபுக்களும் புரிந்த கொடுங்கோன்மையே யாகும். பத்தொன்பதாம் நூற்றுண்டினிடைப் பகுதியில் அரசு செலுத்திய ரூசிய சார் (மன்னன்) முதலாம் நிக்கொலசு சீர்திருத்தங்களை அழித்து எதேச்சாதிகாரஞ் செலுத்தினுன். ஆனுல், ரூசிய அரசியலிலும் இராணுவ அமைப்பிலும் ஊழல்கள் மலிந்தமையால், கிரிமியப் போரில் ரூசியர் தோல்வியுற நேர்ந்தது என்பதை முன்பே வாசித்தறிந்து கொண்டோமல்லவா? அதனுல் அதிருப்தி வளர்ந்தது. பிறகு ஆட்சி புரிந்த இரண்டாம் அலெக்சாந்தர் சீர்திருத்தங்களை வழங்கினுன். தொழில்களை விருத்தி செய்து, அடிமைகளை விடுதலை செய்தான்; 'செமசுதவ்' என்ற சுய

ஆட்சிக்குரிய சபைகளையும் அமைத்தான். எனினும், 'சூன்யவாதிகள்' (Nihilists) போன்ற புரட்சிக் காரர்கள் கலகம் விளைவித்தமையால், கொடிய அடக்கு முறைகளை மேற்கொண்டான். அதனால், 1861-ல் இந்த அரசன் பயங்கர இயக்கத்தைச் சேர்ந்தவனொருவனால் குண்டு வீசிக் கொல்லப்பட்டான். இதனால் அரசியல் முன்னேற்றம் தடைப்பட்டு, பின்வந்த மூன்றாம் அலெக்சாந்தரும், இரண்டாம் நிக்கோலசும் கடுமை யான சட்டங்களைப் பிறப்பித்தனர். 1905-ல் சென்ற் பீட்டர்சுபாக்கில் கலகம் விளைந்து வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. அதனால், கடுமையான அடக்குமுறை ஆட்சி தோன்றிய போதிலும், பெயரளவில் அதிகாரம் படைத்த டூமா என்ற பாராளுமன்றமும் தோன்றியது.



படம் 63. இலெனின்

எனினும், பிரபுக்கள் ஆதிக்கமும், மதகுரு மாரின் செல்வாக்கும், மிருகத்தனமான அடக்கு முறைகளும் நீடித்தன. இதனால் உலகப்போரில் ரூசியா ஈடுபட்ட பொழுதுங் கூட ரூசியமக்கள் உற் சாகத்துடன் போர் புரிய முன்வரவில்லை. சேர்மனியர் பெரும் வெற்றியடைந்து ரூசி யப் படைகளைப் பின் னிடச் செய்ததும் நாட் டில் குழப்பம் தோன்றி, அரசவம்சம் அழிக்கப் பட்டு 'மென்சிவிக்' என்ற மிதவாதிகளின் ஆட்சி கெரன்சுகி தலைமையில் நிறுவப்பட்டது. இவர்கள்

போர் நிறுத்தம் செய்யாமையால், படைவீரரும் தொழிலாளரும் தீவிரவாதிகளான 'போல்சுவிக்' என்ற பொதுவுடமைக் கட்சியின் சார்பில் போராடலாயின. 1917-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மிதவாத ஆட்சியை வீழ்த்தி, **இலெனின்** தலைமையிற் பொதுவுடமையாட்சி நிறுவப்பட்டது. உடனே சேர்மனியுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்டு, சர்வாதிகார அரசியலை நிறுவினர்.

இங்கு இலெனினுடைய வாழ்க்கை வரலாற்றைச் சிறிது ஆராய்வோம். இவரது பழைய பெயர், "உலியனுவ்" என்பதாகும். 1870-ல் பிறந்த இவர், சட்டக்கல்வி பயின்ற பொழுதே மார்க்கசீய சித்தாந்தத்தில் விருப்பம் கொண்ட புரட்சி வீரராய்த் திகழ்ந்தார். 1907 முதல் 1917 வரை நாட்டில் தேசப்பிரட்டம் செய்யப்பட்டமையால், வெளிநாடுகளில் சஞ்சரித்தார். 1917-ல் சேர்மானிய இராணுவத்தினரின் உதவிபெற்று நாட்டிற்குள் புகுந்தார். உடனே அவர் போல்சிவிக்குகளின் தலைவராக ஏற்கப்பட்டதால், டிராட்சுகி, சுடாலின் முதலியவர்களின் உதவியுடன் புரட்சி தொடங்கினர். 1917 ஆடி மாதத்தில் புரட்சி பலனளிக்கவில்லை; எனவே, மேற்கூறியவாறு மீண்டும் நவம்பர் மாதத்தில் புரட்சி நிகழ்த்தி, அவர் வெற்றி பெற்றார். முதலில், தனது அரசியல் எதிரிகளை இலெனின் இரக்கமின்றி அழித்தான். பிறகு 'சோவியத் குடியரசுகளின் சமட்டி' அமைக்கப்பட்டது. கிராம சோவியத் சபைகள் முதல் மத்திய நிர்வாக சபைவரை தேர்தல்முறை அனுசரிக்கப்பட்டதாயினும், எதிர்க்கட்சிகள் இல்லாமையால் பொதுவுடமைக் கட்சியும், அதன் தலைவனை இலெனினும் சர்வாதிகாரம் வகித்தனர். ஆரம்பத்தில், தமது கொள்கைப்படி தொழிற்சாலைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவே, உற்பத்தி குறைந்து தொழிலாளருக்கும் கமக்காரர்களுக்குமிடையே சச்சரவு தோன்றியது. இதனால் 1921-ல் 'புதிய பொரு

ளாதாரக் கொள்கை' (N.E.P.) பின்பற்றப்பட்டுப் பொது வுடமை முறை தளர்த்தப்பட்டு, வியாபாரிகளும் கமக் காரர்களும் சில விசேட உரிமைகள் பெற்றனர். இதனுல் கோபமடைந்த தீவிரவாதிகளில் ஒருவரால் இலெனின் 1922-ல் சுடப்பட்டார். அதனுல், அவர் இறக்கவில்லையா யினும், அவரது உடல் நலம் குறைவுற்று நோய்வாய்ப் பட்டார். 1924-ல் லெனின் மரணமடையவே, அவனது சீடர்களான **டிராட்சுகியும், சுடாலினும்** தலைமைப் பத விக்குப் போட்டி இட்டனர். முடிவில் சுடாலின் வெற்றி பெற்றுச் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு நிகரற்ற சர் வாதிகாரியாக விளங்கினுர்.



படம் 64. சுடாலின்

சுடாலினது வாழ்க்கையும் இலெனினுடையதைப் போன்றே புதுமையும் புரட் சிப் பெருமையும் படைத்த தாகும். சோர்சியாவில் 1879-ல் பிறந்த **சுகாசுவில்லி** இளைஞனுக இருந்த பொழுதே போல்சிவிக் கட்சி யிற் சேர்ந்து, சைபீரியாவிற் குத் தேசப்பிரட்டம் செய்யப் பட்டான். 1917-ல் நிகழ்ந்த புரட்சிகளில் இவருக்குப் பெரும் பங்கு உண்டு. 1919-ம் ஆண்டினின்றும் இவர் கட்சியின் பொதுக் காரியதரிசிப் பதவியைத் திறம்பட வகிக்கலானுர். இவரது புனை பெயரான "**சுடாலின்**" என்பதற்கு "இரும்பு மனிதன்" என்பதே பொருளாகும். லெனின் இறந்த பிறகு ரூசியாவில் பொதுவுடமை சமு தாயத்தை நிலைநாட்டிய பெருமை இவருக்கே உரியது. பிறகு 1928-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களால் நாட்டின் பொருளாதார நிலை

சீர்திருத்தப்பட்டது. கமக்காரர்கள் ஒடுக்கப்பட்டு அவர்களது நிலங்கள் பறிக்கப்பட்டு, அரசாங்கப் பெரும் பண்ணைகளும் கூட்டுறவுப் பண்ணைகளும் நிறுவப்பட்டன. பல பெரும் தொழில்களும் தோற்றுவிக்கப்பட்டன. இவ்வாறு மீண்டும் ரூசியா உலக அரசியலரங்கில் ஒரு வல்லரசாகத் திகழும் நிலைமை அடைந்தது.

## வினாக்கள்

1. ரூசியாவில் புரட்சிக்கு முன்பிருந்த நிலையை விளக்குக.

2. இலெனினது வரலாற்றையும் கொள்கைகளையும் தெளிவாக விளக்கி வரைக.

3. சுடாலின் புரிந்த சேவைகள் யாவை?

4. குறிப்புரை வரைக: டிராட்சுகி, மென்சிவிக், கெரன்சுகி, முதலாம் நிக்கொலசு.

## 21. புதிய சர்வாதிகார இயக்கங்கள்

ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் உதித்த சில சர்வாதிகார இயக்கங்கள் பற்றி ஆராய்வோம். இவை ருசிய சர்வாதிகார முறையினின்றும் வேறுபட்டிருந்த போதிலும், அதனைப் போலவே எதிர்ப்புகளை அழித்துப் பலம் பெற்றவைகளாகும். இவற்றில், இத்தாலியில் தோன்றிய 'பாசுசுட்டுப் புரட்சி' பொதுவுடமைப் புரட்சியினின்றும் மாறுபட்டதாகும். உண்மையில், அது பொதுவுடமை இயக்கத்திற்கு எதிராகவே தோன்றியது. 1918-ல் உலகப் போர் முடிந்த பிறகு மற்ற வல்லரசுகள் இத்தாலிக்குப் போதிய குடியேற்ற நாடுகள் அளிக்காமையாலும், போரினின்றும் மீண்ட இளைஞர்கள் வேலையின்றித் துன்புற்றதாலும் எங்கும் அதிருப்தி நிலவியது. பிறகு தோன்றிய 'பாக்டா' அரசாங்கம் பலவீனமுற்றிருந்தபடியால், பொதுவுடமைக்காரர்களின் தூண்டுதலால் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. அப்போது, சோசலிசுட்டுக் கட்சியினரும் பிறரும் பலவீனமாக இருந்தமையால், தீவிர தேசீய உணர்ச்சி வாய்ந்த பாசிசுட்டுகளின் கட்சியே நிலைமையைத் திருத்த முன்வந்தது. இந்தக் கட்சியின் தலைவரான **முசோலினி** வாழ்க்கையில் எளிய நிலையிலிருந்து உயர்வு பெற்றவர்; மன உறுதியும் தளராத ஊக்கமும் படைத்தவர். இவர் 1883-ல் ஒரு கொல்லனது புதல்வராய்ப் பிறந்தார். வாலிப வயதில் சமதர்மவாதியாய் விளங்கியதால் நாட்டினின்றும் வெளியேற நேர்ந்தது. பிறகு உலகப் போர்க்காலத்தில் தீவிர தேசீயவாதியாக மாறினர். போரிலும் ஈடுபட்டார். போரில் படுகாயமடைந்த போதிலும், தளராத உறுதிபடைத்த முசோலினி விரைவில் திரும்பி, "**பாபுலோ இத்தாலியா**" என்ற பத்திரிகையை வெளியிடலானர். 1919-ல் அவரால் தொடங்கப் பெற்ற பாசிசுட்டுக் கட்சியும் வளர்ச்சியுற்றது. 1922-ல் முசோலினி அதிகாரத்தைக் கைப்பற்றும்

பொருட்டு, 40000 வீரருடன் முசோலினி உரோமாபுரி மீது படையெடுக்க துணிந்தார். எளிய நிலையிலிருந்து படிப்படியாக உயர்ந்து பத்திராதிபராகவும், பாசிட்டுக் கட்சியின் தலைவராகவும் விளங்கிய முசோலினி இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தமது 'கருஞ் சட்டையினருடன்' உரோமாபுரிமீது படை எடுத்தார். உடனே பாக்டா விலகிக்கொண்டு அவரிடம் அதிகார மளிக்கவே, முசோலினி 1922-ல் பிரதம மந்திரிப் பதவி பெற்ருர். உடனே எதிர்க்கட்சியினரை அழித்து, மன்னனை வெறும் பொம்மையாக அமரச்செய்து, உண்மை அதிகார மனைத்தையும் தம்மிடமே வைத்துக்கொண்டார். 'பாசிட்டு களின் கிரண்டு கவுன்சில்' என்ற மகாசபையே அவருக் குத் துணைபுரிவதாயிற்று. "இத்தாலி பண்டைய உரோம சாம்ராச்யம் போலப் பெருமையுற்று வாழவேண்டும்; முதலாளிகள், தொழிலாளர், உழவர் முதலிய எல்லா வகுப்பினரும் நாட்டின் நலன் ஒன்றையே கருதி அர சாங்கம் பணித்தவாறு ஒத்துழைக்க வேண்டும்; நாட்டின் ஏகதலைவனைச் சிறிதுந் தயக்கமின்றிப் பின் பற்ற வேண்டும்; போரில் பெருமைகொள்ள வேண்டும்," என்ற கொள்கைகள் படைத்த பாசிட்டுகள் சனநாயக ஆட்சிமுறையை அழித்ததில் வியப்பில்லை. முசோலினி யின் ஆட்சியிற் படைப்பலம் பெருக்கப்பட்டது. பெருந் தொழில்கள் தோற்றுவிக்கப்பட்டன; சலமின்சக்தி பெருக்கப்பட்டது; விவசாயிகளுக்கு அரசாங்கம் ஆதரவு தந்தமையால், விளைபொருள்கள் பெருகின. இவ்வாறு இத்தாலி வளம் பெற்றதாயினும், அதன் நாடுபிடிக்கும் ஆசையும் வளர்ந்தது. 1936-ல் முசோலினி அபிசீனி யாவைக் கைப்பற்றினர். சர்வதேச சங்கத்தை உதறி எறிந்து, இட்லருடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். இத்தகைய பேராசையே இத்தாலி உலகப் போரில் ஈடு படுவதற்கும், இறுதியில் முசோலினி ஆட்சி வீழ்ச்சி யுறுவதற்கும் காரணமாக அமைந்தது.

இத்தாலியில் சர்வாதிகாரம் தோன்றிய காலத்தி லேயே துருக்கியிலும் அரசாங்க மாறுதல் ஏற்பட்டு, ' துருக்கியின் தந்தை ' எனப்படும் **முசுதபா கமால் பாசா** சர்வாதிகாரம் பெற்ருர். முசுதபா கமால் (1881—1938) சலோனிக்காவில் பிறந்து வளர்ந்தவர். விரைவில் அவர் இராணுவ அதிகாரம் பெற்றபோதிலும் அவர் "வாலிபத் துருக்கியர்" இயக்கத்தில் இடம்பெற்ருர். 1915-ல் காலிபோலியில் ஆங்கிலக்கப்பல்களேயும், பிற ராணுவ ஏற்பாடுகளேயும் சிதைத்தார். துருக்கி அரசாங்க விசயங்களேயும் சேர்மானியர் தலேயிடுவதை அவர் விரும்பவில்லே. பிறகு அவர் போலீசு இன்சுபெக்டர் செனரலாக நியமனம் பெற்று (1920) கலகம் செய்வோரை அடக்க முயன்ருர். ஆனல், உலகப் போரில் நேச நாடுகளால் முறியடிக்கப்பட்டுச் சிரியா, பாலத்தீனம் முதலிய மாகாணங்களே இழந்து ஒடுங்கி இருந்த துருக்கி நாட்டில் அதிருப்தி ஏற்பட்டு, ஒவ்வொரு பிரதேசத்திலும் கிளர்ச்சிகள் தோன்றின. துருக்கி அரசர் அவற்றை ஒடுக்குமாறு போலீசு இலாகா தலேவரான கமால் பாசாவைப் பணித்தபோது, அவர் தாமே கலகக்காரர் களின் தலேவனுகி அனடோலியா மாகாணத்தில் தம் ஆட்சியை நிறுவினர். பிறகு மன்னுட்சியை ஒழித்து, 1924-ல் துருக்கியில் மதச்சார்பற்ற குடியரசை நிலே நிறுத்தினர். சனநாயக முறையில் ஆட்சிமன்றம் அமைக்கப்பட்டதாயினும், 1938-ல் கமால் இறக்கும்வரை அவரிடமே அதிகாரம் தங்கி இருந்தது. துருக்கியின் சட்டதிட்டங்களே மாற்றியமைத்து, விவசாயத்தையும் தொழில்களேயும் பெருக்கக் கல்வியை வளர்த்து, இங்கி லாந்துடன் தம் நாடு நட்புறவு கொள்ளச் செய்த பெருமை இவருக்குண்டு. மிகவும் துணிச்சலுடன் ' காலிப் ' மதபீடத்தை ஒழித்துத் துருக்கியர் ஐரோப்பியர் போன்ற நடையுடை பாவனேகளே மேற்கொண்டு

நாகரிக மேம்பாடுறச் செய்தமையால், இவரது திறமை யைக் கண்டு உலகம் வியந்தது.

இக்காலத்திற் ரோன்றிய சர்வாதிகாரங்களில் மிகவும் வலிமையும் கொடூரமும் படைத்தது, சேர்மனியத் தலைவனான அடால்ப் இட்லரின் ஆட்சியேயாகும்.

இட்லர் ஆசுத்திரியாவில் பிராஞவ் என்ற இடத்தில் 1889-ம் ஆண்டில் பிறந்தார். அதிகம் கல்வி கற்காததால், வியன்னாவில் வர்ணம் தீட்டுவோனாகவும் தச்சனாகவும் வேலை பார்த்தார். பிறகு மியூனிக் நகரத்தை அடைந் தார். 1914-ல் சேர்மானிய சேனையில் சேர்ந்து "லான்சு-காப்போரல்" பதவிவரை உயர்வு பெற்றார். பிறகு மியூ னிக் நகரத்துச் சிற்றுண்டிச் சாலையொன்றில் ஆரம்பிக் கப்பட்ட சேர்மானிய தொழிலாளர் கட்சியில் ஏழாவது அங்கத்தினராகச் சேர்ந்தார். சிறிது சிறிதாக ஊக்கத் தால் உயர்வு பெற்ற இட்லர், அந்தக் கட்சியின் தலைவ னாகி, அதனையே "தேசீய சமதர்மக் (National Socia-list) கட்சி"யாக மாற்றியமைத்தார். இதுவே, பின்னர் நாசிக் கட்சி என்று பெயர் பெற்றது. 1923-ல் இந்தக் கட்சியினர் பவேரிய மாகாணத்தில் ஆட்சியைக் கைப் பற்ற முயன்றதால், இட்லர் சிறைத் தண்டனை யடைந் தார். சிறையிலிருக்கும்பொழுதே அவர் தமது சுயசரித மான "எனது போராட்டம்" என்ற நூலை எழுதினார். 1928-ம் ஆண்டில் முதன் முதலாக அவரது கட்சி தேர்த லில் ஈடுபட்டது. ஆனால் 1930-ல் தான் அது உண்மை யான மக்கள் ஆதரவுபெற்ற கட்சியாயிற்று. உலகப் பொருளாதார நெருக்கடி காரணமாக அவருக்கு ஆதரவு வளர்ந்தது.

இவ்வாறு எளிய குடும்பத்தில் பிறந்து, பல துன்பங் களுக்கிடையே போர்வீரனாகவும் அரசியல் தலைவனாகவும் உயர்வு பெற்ற இட்லரை ஒரு சரித்திராசிரியர், "இவர் வார்சேல்சு நகரில் முடிவான பழிவாங்கும் ஒப்பந்தத்தின் குழந்தை யெனலாம்" என்று கூறுகிறார். ஏனெனில்,

அந்த ஒப்பந்தத்தினுல் சேர்மனி பலவாறு சிதைக்கப் பட்டு அதன் மக்கள் இழிநிலையடைந்தபோது, அவர் களது உள்ளத்தில் தோன் றிய வெறுப்பையும், பழி வாங்கு முணர்ச்சியையும் பயன்படுத்திக் கொண்டே இட்லரின் நாசிக் கட்சி வளர்ந்தது. "சேர்மனி யர் நாகரிகத்தில் சிறந்த வர்களாதலின் உலகிற்குத் தலைமை வகிக்க உரிமை படைத்தவர்கள்; அதனுல், யூதர் போன்ற அநாகரிக இனத்தினரை ஒடுக்குதல் வேண்டும்; சேர்மனி பலம் பெற்று, வல்லரசுகளில் முதன்மை யாக விளங்குதல் வேண்டும்; அந்த இலட்சியத்தை அடையும் பொருட்டு நாட்டில் நாசிக் கட்சி ஒன்றே பணியாற்றுவதுடன் ஒரே தலைவ னின்கீழ் மக்களனைவரும் கட்டுப்பாடாக இயங்குதல் வேண்டும்," என்ற கொள்கைகள் எங்கும் பிரசாரம் செய்யப்பட்டுக் கட்சி நாளடைவில் பலம் பெற்றது. இந்தக் கொள்கைகளை இட்லர் தாம் சிறையில் எழுதிய 'எனது போராட்டம்' (Mein Kampf) என்ற சுய சரிதத்தில் விளக்கியுள்ளார்.



படம் 65. இட்லர்

1933-ல் பல சூழ்ச்சிகளின் விளைவாக இட்லர் சான் சலராகப் பதவி பெற்றதும், பொதுவுடைமைக்காரர்கள் போன்ற பகைவர்களை அழித்தார். யூதர்கள் வேட்டை யாடப்பட்டு, அவர்களது சொத்துகள் பறிக்கப்பட்டன. வார்சேல்சு நிபந்தனைகளை மீறிச் சேர்மனியின் தரைப் படையும் விமானப் படையும் பெருக்கப்பட்டன. யுத்தத்

திற்குத் தேவையான தொழில்களும், போக்குவரவு வசதிகளும், விவசாயமும் அபிவிருத்தி யடைந்தன. 1934-ல் **கிண்டன்பாக்** இறந்ததும் தானே தலைவராகவும், விளங்கியதுடன், மறு ஆண்டிலேயே றைன்லாந்துப் பிரதேசத்தை இட்லர் ஆக்கிரமித்தார். அவரது ஆட்சியில் வாலிபர்களிடையே வேலையில்லாமை ஒழிந்தது. நாட்டின் பணிக்காக அனைவரும் வேலை செய்யுமாறு வற்புறுத்தப்பட்டனர். கல்வி மூலமாகவும், பிரசாரம் மூலமாகவும் சேர்மனியரின் உள்ளத்தில் நாட்டுப்பற்றும் போர்வெறியும் தூண்டிவிடப்பட்டன. இட்லரின் ஆட்சியிற் றோன்றிய அபிவிருத்திகளைக் கண்டு உலகம் வியந்துகொண்டிருக்கையில், இட்லர் தமது ஆக்கிரமிப்புகளை மீண்டும் தொடங்கினார். பிறகு 1936-ல் இத்தாலியுடன் நெருங்கிய உறவு கொண்டு, சுபெயினில் **பிராங்கோவின்** சர்வாதிகாரம் ஏற்பட உதவினார். மறு ஆண்டில் ஆசுத்திரியாவைக் கைப்பற்றிச் சேர்மனியுடன் ஐக்கியப் படுத்தியதும், இத்தாலி, போலந்து, அங்கேரி முதலிய நாடுகளுடன் ஒப்பந்தங்கள் புரிந்தார். 1938-ல் **மூனிக் ஒப்பந்தத்தினால்** செக்கோசிலேவேக்கியாவில் சேர்மனியர் வாழ்ந்த சுடேடன் பகுதி சேர்மனி வசமாயிற்று. ஆனால், மறு ஆண்டில் போலந்து மீது படையெடுக்க நேர்ந்ததும், உலகப் பெரும்போர் மூண்டது. இவ்வாறு இட்லரின் சர்வாதிகாரமே உலக சமாதானத்திற்கு உலைவைத்தது எனலாம்.

### வினாக்கள்

1. பாசிசம் என்றால் என்ன? முசோலினி எவ்வாறு அதிகாரம் பெற்றார்?

2. முசோலினியின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி ஒரு குறிப்பு வரைக.

3. பாசிச ஆட்சியால் இத்தாலி அடைந்த நன்மை தீமைகளை விளக்குக.

4. இட்லர் எவ்வாறு சேர்மனியின் தலைவரானார் ?

5. நாசிக்கட்சியின் கொள்கைகள் யாவை ? அது எவ்வாறு சேர்மனியில் நிலைபெற்றது ?

6. இட்லரின் அயல்நாட்டுக் கொள்கை யாது ? அது எவ்வாறு போருக்குக் காரணமாயிற்று ?

7. முசுதபா கமால் பாசாவின் வரலாற்றை விளக்குக.

8. துருக்கியில் கமால் பாசா புரிந்த சேவைகள் யாவை ?

9. சிறு குறிப்புகள் வரைக :—பிராங்கோ, "எனது போராட்டம்", பாக்டா அரசாங்கம், கிண்டன்பாக்.

### பயிற்சி

ஐரோப்பா தேசப்படத்தில், இட்லர், முசோலினி முதலியவர்கள் போருக்கு முன்பு கைப்பற்றிய பிரதேசங்களைக் குறிப்பிட்டுக் காட்டுக.

## 22. இரண்டாம் உலகப்போர்

ஐரோப்பாவில் 1938-க்குப் பிறகு ஒரு புறம் சர்வாதிகாரிகளும், மற்றொரு புறத்தில் சனநாயக நாடுகளும் மீண்டும் உலகயுத்தம் தோன்றக்கூடுமென்று எதிர்பார்த்துத் தத்தம் படைப் பலத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தனர். மியூனிக் நகரத்தில், 1938-ல் பிரித்தானியப் பிரதமரான நெவில் சேம்பர்லின், பிரான்சுப் பிரதமர், டிலேடியர், இத்தாலிய சர்வாதிகாரியான முசோலினி என்ற மூவரும் இட்லரைச் சந்தித்துச் செக்கோசிலேவேக்கியாவின் ஒரு பகுதியான சேர்மனியரடங்கிய சுடேடன் மாகாணத்தைப் பிரித்துச் சேர்மனியுடன் சேர்த்துவிட ஒப்புக்கொண்டனர். இவ்வாறு ஒரு சிறு நாடு துன்புறுத்தப்படுவதைக் கண்டு உலகம் திகைப்பும் வெறுப்பும் அடைந்தது. சேம்பர்லின் தாம் 'கௌரவமான சமாதானத்தை' நிலைநாட்டியதாகக் கூறிக் கொண்டாராயினும், உலக அரசியல் வானத்தில் யுத்த மேகங்கள் கவிந்து கொண்டிருப்பதை உணராதவரில்லை. ஏனெ

னில், செக்கோசிலேவேக்கியாவைச் சின்னபின்னப் படுத்திய பிறகும் போர்வெறி கொண்ட சேர்மனியர் திருப்தி அடையாமல், போலந்து மீது கவனம் செலுத்தலாயினர்.

போலந்தின் வடக்கிலுள்ள டான்சிக் துறைமுகமும், மெமல் பிரதேசமும், வார்சேல்சு உடன்படிக்கையால் சேர்மனியினின்றும் பிரிக்கப்பட்டுச் சர்வதேச சங்கத்தின் மேற்பார்வையின் கீழ் நிருவகிக்கப்பட்டன. அங்கும் நாசிக் கட்சியினர் வலுத்துத் தாம் சேர்மனியுடன் ஐக்கியமடைய விரும்புவதாக அந்தப் பிரதேச மக்கள் கூறலாயினர். அவை ஐக்கியமடைந்ததும், அவற்றிற்கும் சேர்மனிக்குமிடையேயுள்ள "பொலிசு இடை வழி" (Polish Corridor) யையும் இட்லர் ஆக்கிரமிக்க எத்தனித்தார். சுமார் நூறு மைல் நீளமுள்ள அந்தப் பிரதேசத்தின் மூலமாகவே போலந்து நாட்டிற்கும் பால்டிக் கடலுக்கும் தொடர்பிருந்தமையால், அந்த நாட்டினர் இட்லரின் முயற்சிகளைப் பிடிவாதமாக எதிர்த்தனர். இதனால் கோபமடைந்த இட்லர் 1939-ம் ஆண்டு புரட்டாசி மாதத்தில் போலந்துமீது போர் தொடுத்தார். போலந்தைப் பாதுகாப்பதாக உறுதியளித்திருந்த பிரான்சும், உடனே தான் போரில் சேர்ந்துவிட்டதாக அறிவித்தது. பிறகு பிரித்தானியரும் போரில் ஈடுபட்டனர். ரூசியா மட்டும் நடுநிலை வகித்தது. இவ்வாறு மீண்டும் உலகப்போர் மூண்டது.

இந்த யுத்தத்தின் நிகழ்ச்சிகளை இரு கூருகப் பிரிக்கலாம்: (1) 1942 வரையிலும், சேர்மனியரும், அவர்களது நண்பர்களான யப்பானியரும் பிரமிக்கத் தக்க வெற்றிகள் அடைந்த காலம். (2) அதற்குப் பிறகு 1945 வரை 'நேச நாடுகள்' என்றழைக்கப்பட்ட சன நாயக தேசங்கள் மேன்மை பெற்ற காலம். போரின் தொடக்கத்தில் சேர்மனியரிடம் ஏராளமான போர் விமானங்களும் ஆயுத தளவாடங்களும் இருந்தன. இட்லரின் துணைவர்களான பிரசாரத்தில் வல்ல கெபல்சும் விமான தளபதி கோய

ரிங்கும், இராச தந்திரியான ரிப்பன்டிராப்பும் மற்ற இராணுவத் தளபதிகளும் திறமை படைத்தவர்கள். அவர்களனைவரும் சேர்ந்து திட்டங்கள் வகுத்து, புதிய '**மின்னல் தாக்குதல்**' (Blitz) முறையைப் பின்பற்றிய தால், பல ஐரோப்பிய நாடுகள் விரைவில் அவர்களது ஆக்கிரமிப்புக்குட்பட்டன.

1939-ல் போர் தொடங்கிய பின்னர் இரண்டு வாரங் களுள் சேர்மனியர் மேற்குப் போலந்தை அழித்து வார்சா நகரத்தை அடைந்தனர். அப்போது உலகமே பிரமிக்கத் தக்க விதமாக, பொதுவுடைமை வாதிகளின் எதிரியான இட்லரும், ரூசியரும் நேச ஒப்பந்தம் செய்து கொண்டு, போலந்தைத் தமக்குள் பங்கிட்டுக் கொண்டனர். பிறகு இட்லர் பயமின்றி மேற்குத் திசையிலுள்ள பகைவர் களைத் தாக்குவதில் ஈடுபட்டார். 1940-ல் வசந்த காலத்தில் சேர்மனியப் படைகள் விரைவில், நடுநிலை வகித்த நாடு களான நோர்வே, டென்மார்க், ஒல்லாந்து, பெல்சியம் போன்ற நாடுகளிற் புகுந்து அவற்றைப் பணியச் செய்தன. அப்போது ஆங்கில மக்களின் பிடிவாதத்திற் கும் உறுதிக்கும் அடையாளமாக **வின்சுடன் சேர்ச்சில்** ஆங்கிலப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரால் உற்சாக மூட்டப்பெற்ற பிரித்தானியரும் மற்ற நேச நாட்டினரும் தோல்விகளினால் மனந்தளராது போரை நடத்தி வந்தனர். 1940 மே மாதத்தில், பலம் மிகுந்த 'மாகினோ' அரணின் வடபாகத்தைத் துளைத்துக் கொண்டு சேர்மனியர் பிரான்சில் புகுந்தனர். எட்டு நாட்களில் அவர்கள் பாரிசை அடைந்ததும், பிரான்சுப் படையில் பெரும்பகுதி சரணடைந்தது. பிரான்சுக்கார ருக்கு உதவியாக வந்த பிரித்தானியச் சேனை **டன்கர்க்** என்ற இடத்தினின்றும் பகைவரிடம் அகப்படாமல் பின் வாங்கியது. பிரான்சு வீழ்ச்சியுறுந்தருவாயில், அதுவரை யில் போரில் ஈடுபடாதிருந்த இத்தாலி சேர்மனியருக்கு உதவியாகப் பிரான்சைத் தென்திசையில் தாக்கியது.

பிரான்சிற் பெரும் பகுதியைச் சேர்மனியர் கைப்பற்றியதும், குடியரசு மறைந்து, மார்சல் பெடேய்ன் தலைமையின்கீழ்த் தென் பிரான்சில் ஓர் அரசாங்கம் தோன்றி, சேர்மனியருடன் சரணுகதி ஒப்பந்தம் செய்து கொண்டது.

பிறகு பிரித்தானிய நாட்டின்மீது சேர்மனிய விமானங்கள் இடைவிடாது தாக்குதல் நடத்தின. லண்டன் நகரில் பெரும்பகுதி குண்டுகளுக் கிலக்காகி, மக்கள் சொல்லொணுத துன்பம் அனுபவித்தனர். போரின் இந்த நிலையைப் 'பிரித்தானியப் பெரும் போர்' (Battle of Britain) என்றும் வழங்குவார். ஆயினும், பிரித்தானியரது உறுதி தளரவில்லை. நீர்மூழ்கிக் கப்பல்களால், பிரித்தானியரின் வியாபாரக் கப்பல்களும் கடற்படையும் பெரிதும் நட்டமடைந்தன. இதற்கிடையே ஆபிரிக்காவில் எகிப்தில் புகமுயன்ற இத்தாலியப் படைகளைப் பிரித்தானியர் முறியடித்து, அபிசீனியாவிலும் புகுந்தனர்.

1941-ல் சேர்மனியர் பால்கன் தீபகற்பத்தில் புகுந்து, யுகோசிலேவியா முதலிய நாடுகளை ஆக்கிரமித்தனர். அப்போது இத்தாலியர் அல்பேனியாவைக் கைப்பற்றினர். பிறகு சேர்மனியர் கிரீசையும் ஆக்கிரமித்து, கிரீட் தீவையும் வியக்கத்தக்க முறையில் தாக்கி நொடிப்பொழுதில் கைப்பற்றினர். வட ஆபிரிக்காவிலும் சேர்மனியப் படைகள் தளபதி ரோமல் தலைமையில் நேசநாட்டுப் படைகளை எகிப்துக் கருகில் பின்னிடச்செய்தன. இவ்வாறு ஐரோப்பாவின் பெரும்பகுதியில் சேர்மனி தன் இராணுவ பலத்தினுல் ஒப்பற்ற ஆதிபத்தியம் பெற்று விளங்கியது.

இந்த நிலையில், சேர்மனி பழைய ஒப்பந்தத்தை மறந்து திடீரென்று ரூசியாவைத் தாக்கியது. முன்பு நெப்போலியன் வீழ்ச்சி யுற்றதுபோல, இட்லர் முடிவில் தோல்வியுறுவதற்கும் இந்த ரூசியப் படையெடுப்பே

காரணமாயிற்று. முதலில், சேர்மனியப் படைகள் வெற்றிகரமாக ரூசியப் பிரதேசத்தில் புகுந்து, லெனின் கிராடு, மாசுகோ வரையிலும் முன்னேறின. தெற்கில் தான்யவளம் மிகுந்த உக்ரேனில் பெரும் பகுதியும் சேர்மனியர் வசமாயிற்று. அப்போது கடும் குளிர் தோன்றிவிட்டதாலும், ரூசியர் எல்லாவற்றையும் அழித் தொழிக்கும் கொள்கையை மேற்கொண்டதாலும் நாசிப் படைகள் பெருந் துன்பமடைந்தன.

சேர்மனி, இத்தாலி, யப்பான் என்ற மூன்று நாடு களும் முன்னரே '**ரோம்—பெர்லின்—டோக்கியோ அச்சு**' என்ற ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தமையால் போரில் இறங்குவதற்குத் தருணம் பார்த்துக்கொண் டிருந்த யப்பான் இந்த ஆண்டு மார்கழியில் திடீரென போரில் ஈடுபட்டது. இதற்கு முன்னரே சீனக் கடற்கரை யிலும் பிரான்சுக்காரருக்குரிய இந்தோ சீனத்திலும் புகுந் திருந்த யப்பானியர், இப்பொழுது சமாதானம் பேசுவது போல நடித்துத், திடீரென்று அமெரிக்கக் கடற்படையைப் **பேர்ல் துறையில்** தாக்கி அதிற் பெரும்பகுதியை மூழ் கடித்தது. இதனால் உடனே பசுபிக் பகுதியில் யாரும் எதிர்த்து நிற்பவர்கள் இல்லாதபடியால் யப்பானியர் வெகுவிரைவில் இந்தோசீனா, பிலிப்பைன்சு, சிங்கப்பூர், மலாயா, சீய நாடாகிய தாய்லந்து, பர்மா, யாவா முதலிய இந்தோனிசியத் தீவுகள் என்பனவற்றைத் தொடர்ந்து கைப்பற்றி விட்டனர். இதனால் இந்தியாவும் இலங்கையும் தாக்கப்படலாம் என்ற நிலை தோன்றியதால், திரிகோண மலையில் தென்கிழக்காசியக் கடற்படையின் பிரதம காரியாலயத்தைத் தாபித்தனர்.

போர் தொடங்கியதிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டினர் சனநாயக நாடுகளான பிரித்தானியா, பிரான்சு போன்றவர்களிடம் அனுதாபம் கொண்டிருந்தனராயி னும், போரில் இறங்குவதற்குத் துணியவில்லை. இக் காலத்தில் சனாதிபதியாகப் **பிராங்லின் ரூசுவெல்ட்**

விளங்கியது, சனநாயகங்களின் நல்ல அதிட்டமென்றே கூறத்தகும். முதல் உலகப் போர்க்காலத்தில் சனாதிபதி வில்சனிடம் கடற்படைக் காரியதரிசியாகவும், பின்னர் 1928 னின்றும் நியூயார்க் மாகாண கவர்னராகவும் விளங்கி அரசியல் அனுபவம் பெற்றவரான ரூசுவெல்டு, 1932-ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நான்கு முறை சனாதிபதியாக விளங்கிய பெருமை வாய்ந்தவர். இவரே " நியூடீல் " (New Deal) திட்டம் வகுத்து அமெரிக்கப் பொருளாதாரத்தைக் காப்பாற்றியவர். இவருக்கு இயல்பாகவே



படம் 66. ரூசுவெல்ட்

சனநாயக தத்துவத்தில் நம்பிக்கையும் சனநாயக நாடுகளிடம் அனுதாபமும் உண்டு. எனவே, அவர் சர்ச்சிலின் வேண்டுகோளுக்கிணங்கிப், பணம் கொடுத்தே பொருள்களை வாங்கவேண்டு மென்றிருந்த நிலையை மாற்றிக், கடனாகவும் குத்தகையாகவும் பொருள்களையும் இடங்களையும் கொடுத்துதவ ஏற்பாடு செய்தார். பிறகு 1941-ல் சர்ச்சிலும் ரூசுவெல்ட்டும் சந்தித்து 'அட்லாண்டிக் சாசனம்' என்ற அறிக்கையை வெளியிட்டனர். இதன்படி, சிறிய 'நாடுகளின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதாகவும் எல்லா நாடுகளையும் கொடுங்கோன்மையினின்றும் விடுவிப்பதாகவும் இரு தலைவர்களும் உறுதி கூறினர். அந்த ஆண்டின் முடிவில், யப்பானியரின் தாக்குதலால் அமெரிக்கா போரில் ஈடுபடுமாறு நேர்ந்துவிட்டது. அவர்களது கடற்படையும், தரைப்படையும் பெரும்

உதவி செய்ததுடன், அவர்கள் நாட்டில் தேவையான பொருள்கள் யாவும் பெருமளவில் உற்பத்தி செய்யப் பட்டன.

1942-ல் வட ஆபிரிக்காவில் சேர்மனியப் படை களுக்கும் அமெரிக்கப்—பிரித்தானியப் படைகளுக்கு மிடையே கடும்போர் நிகழ்ந்து வந்தது. அந்த ஆண்டின் முடிவில் ‘ எல் அலமின் ’ போரில் வெற்றி பெற்ற நேச நாடுகளின் படைகள், மறு ஆண்டின் தொடக்கத்தில் டுனீசியாவில் நுழைந்தன. இவ்வாறு வட ஆபிரிக்கா வில் நிகழ்ந்த போர் முடிவுற்றது. பிறகு நேசநாட்டினர் மத்தியதரைக் கடலைக் கடந்து, சிசிலியிலும் இத்தாலியி லும் புகுந்தனர்.

இந்த நிலையில், சேர்மனியருக்கும் ரூசியருக்கும் த்ட்டாலின் கிராட் என்ற நகரில் இடைவிடாத போர் நிகழ்ந்து, இலட்சக்கணக்கான வீரர் இறந்தனர். முடிவில் 1943-ல் சேர்மனியர் இங்கிருந்து பின்வாங்க நேர்ந்தது. அதன் பயனாக ரூசியர் முன்னேறத் தொடங் கினர். அப்போது இத்தாலியில் நேசநாட்டினர் முன் னேறியதால், புரட்சி விளைந்து முடிவில் முசோலினி கலகக்காரரால் கொல்லப்பட்டான். 1944-ல் பிரான்சின் வடகரையான நார்மண்டிப் பகுதியில், ஆங்கில அமெரிக்கப் படைகள் தளபதி ஐஸன்ஹவர் தலைமையில் இறங்கி, விரைவில் முன்னேறின. இருபுறமும் தாக்கப் பட்டமையால், சேர்மனியர் பெரிதும் துன்பமடைந்தனர். ரூசியர் முன்னேறி வருகையில், ருமேனியா, அங்கேரி, யூகோசுலேவியா, போலந்து முதலிய நாடுகள் ஒவ் வொன்றாக விடுவிக்கப்பட்டன. இறுதியில் சேர்மனி யிலும் ரூசியப்படைகள் புகுந்தன. அப்போது சேர்மனி யின் மேற்குப் பகுதிகளை நேசநாட்டினர் கைப்பற்றினர். முடிவில் பெர்லின் நகரம் ரூசியரால் தாக்கப்பட்டபோது இட்லர் முதலியவர்கள் தற்கொலை புரிந்துகொள்ளவே சேர்மனி சரணடைந்தது.

அதற்குப் பின்னரும் கீழ்த்திசையிற் சிறிது காலம் போர் நீடித்தது. ஒவ்வொரு தீவாக அமெரிக்கக் கடற் படை கைப்பற்றி, இறுதியிற் பிலிப்பைன் தீவுகளையும் அமெரிக்கர் தம் வசமாக்கினர். அப்போது சியாங்கை சேக் புரிந்த வீரப்போரால் யப்பானியர் சீனத்திலிருந்தும் பின்வாங்க நேர்ந்தது. பர்மா, இந்தோசீனு முதலியவை யப்பானிய ஆட்சியினின்றும் மீட்கப்பட்டன. 1945-ன் தொடக்கத்தில் ரூசியாவும் யப்பான்மீது போர்த்தொடுத் தது. ஆனல், அமெரிக்கர் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அணுக்குண்டுகளை நாகசாகி, ஈரோசீமா என்ற தீவுகள் மீது வீசி நாசம் விளைத்ததும், வேறு வழியின்றி யப்பான் சரணடைந்தது.

பிறகு யப்பானிலும், சேர்மனியிலும் நேச நாடுகள் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டின. சேர்மனி, நான்கு வல்லரசுகளின் ஆட்சியில் அடங்கியிருக்க நேரிட்டது. பின்னர்ச் சேர்மனி இருகூருகப் பிரிக்கப்பட்டுவிட்டது. ரூசியரின் ஆதிக்கத்தில் அடங்கிய "கிழக்குச் சேர்மனி யும் பெர்லின் நகரின் பெரும் பகுதியும் பொதுவுடைமைக் கொள்கைப்படி ஆளப்படுகின்றன. அந்த அரசாங்கத் தின் பிரதமர் வில்லியம் பீக் என்பார். மேற்கு நாடு களின் ஆதிக்கத்திலிருந்த "மேற்குச் சேர்மானியக் குடி யரசு", அதன் பிரதமரான கோன்ராடு அடெனுர் தலை மையின்கீழ் விரைந்து முன்னேறிவருகிறது. யப்பானில், அமெரிக்கத் தளபதி மக் ஆர்தரைத் தனித் தலைவராக நியமனம் செய்து சில ஆண்டுகள் வரை, அந்த நாட்டில் தமது ஆதிபத்தியத்தை நிலைநிறுத்தி யிருந்தனர். இந்த நாடுகளிற் போர்க்காலத்திற் பிரதான தலைவர்களாக விளங்கியவர்களை இராணுவ நீதிமன்றங்கள் விசாரித்து, யுத்தக் குற்றங்களுக்காகக் கடும் தண்டனைகள் விதித்தன. யப்பானில் அரசரது ஏகபோக உரிமைகளும் விசேட அதிகாரங்களும் நீக்கப்பட்டமையால், அந்த அரசர் பிரித் தானிய மன்னரை ஒத்த நிலையிலிருந்து வருகிருர்.

இப்போது பாராளு மன்றமும் சனநாயக முறையிலமைந்த மந்திரி சபையும் ஆண்டு வருகிறது. இவ்வாறு போரின் முடிவில் அச்சுநாடுகள் வீழ்ச்சியுற, சனநாயகம் காப்பாற்றப்பட்டது. அளவற்ற செல்வம் படைத்த அமெரிக்க ஐக்கிய நாடும் பொதுவுடைமை ரூசியாவும் உலகப் பேரரசுகளில் முதன்மை பெற்றுத் திகழலாயின.

## வினாக்கள்

1. இரண்டாம் உலகப்போருக்குக் காரணமாய் அமைந்த சம்பவம் யாது ?

2. இட்லரின் துணைவர்கள் யாவர் ?

3. முதல் இரு ஆண்டுகளில் சேர்மனியர் பெற்ற வெற்றிகளைக் கூறுக.

4. 1943-க்குப் 'பிந்திய போர் நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுக.

5. போர்க்காலத்தில் அமெரிக்கரின் கொள்கை சனநாயக நாடுகளுக்குச் சாதகமாக உருவானதை விளக்குக.

6. போரின் முடிவு யாது ?

குறிப்பு வரைக :—

பிரித்தானியப் பெரும்போர், பெடேய்ன், போலீசு இடை வழி, அச்சுநாடுகள், கிரீட்தீவு, டன்கர்க், அத்திலாந்திக் சாசனம், தீட்டாலின்கிராடு, பேர்ல் துறைமுகம், நாகசாகி.

## பயிற்சி

1942-ன் முடிவில் ஐரோப்பா இருந்த நிலையைத் தேசப் படத்தின் உதவியால் விளக்குக.

# 23. சமாதான ஏற்பாடு

முதல் உலகப்போரைப் பார்க்கிலும் மிகக் கொடூரமான இரண்டாம் உலகயுத்தமானது, 1943-ஆம் ஆண்டில் ஒரு முக்கியமான கட்டத்தை அடைந்தது. ஏனெனில், அப்போது அச்சு நாடுகளின் வலிமை குன்றவும், 'ஐக்கிய நாடுகள்' எனப்பட்ட சனநாயக தேசங்களின் பெருமை ஓங்கவுந் தொடங்கியது. இவ்வாறு, 'வெற்றி கிடைப்பது நிச்சயம்' என்ற உணர்ச்சி சனநாயக தேசங்களிலுள்ள மக்களின் உள்ளங்களில் உதயமானதும், மற்ருெரு புதிய கவலையும் தோன்றிவிட்டது. 'இத்தகைய கொடும்போர் இனி மூளாத வண்ணம் தடுக்கவேண்டும்; உலகெங்கும் அமைதியை நிலைநாட்ட வல்ல தாபனமொன்று மீண்டும் நிறுவப்படுதல் வேண்டும்', என்ற சிந்தனைகள் எங்கும் பரவின. இத்தகைய சூழ்நிலை காரணமாகச் சுமார் 50 நாடுகளின் பிரதிநிதிகள் சான் பிரான்சிசுகோ நகரத்தில் மகாநாடு கூடிப் புதிதாக 'ஐக்கிய நாடுகளின் தாபனம்' (U. N. O.) ஒன்றை அமைக்கத் தீர்மானித்தனர். அப்போது தளபதி சுமட்சு போன்ற இராச தந்திரிகள் அந்த தாபனத்தின் அடிப்படை இலட்சியங்கள் அடங்கிய பிரகடனம் (Charter) ஒன்றையும் வெளியிட்டனர். இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டதை உலக சரித்திரத்தில் புதிய அத்தியாயமொன்றின் தொடக்கத்தைக் குறிக்கும் சான்ருகவே கொள்ளலாம்.

பின்னர் 1945-லேயே ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ஆரம்பவிழா நடைபெற்றது. அதுமுதல் ஒவ்வோர் ஆண்டிலும் தவருது இருமுறையேனும் இந்தத் தாபனத்தின் பொதுச்சபை கூடி, உலகப் பிரச்னைகளை விவாதித்து வருகிறது. மேலும், மிகவும் அவசரமான சந்தர்ப்பங்களிற் பாதுகாப்புச் சபை கூடி வேலைத் திட்டத்தை வகுத்து நடவடிக்கை எடுக்கின்றது. இவ்வாறு கடந்த

பத்து ஆண்டுகளில் ஐ. நா. தாபனம் சிறந்த பணி யாற்றி வருகின்றதென்பதில் தடையில்லை.

இனி, ஐ. நா. தாபனத்தின் அமைப்பு முறையை ஆராய்வோம். முதலாவதாகப் **பொதுச்சபை** அமைக்கப் பட்டிருக்கிறது. இந்தச் சபைக்கு, ஐக்கிய நாடுகளின் தாபனத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாடும் பிரதிநிதிகளை அனுப்புகிறது. இவர்கள் இங்குக் கூடிப் பிரச்னைகளைக் குறித்து, வெளிப்படையாக விவாதம் புரிவதால், இந்தப் பொதுச்சபை ஒரு பாராளும் மன்றத் தைப்போல இயங்குகிறது. இதனால் உலகிலுள்ள மக்கள் பிரச்னைகளைத் தெளிவாக உணர்ந்துகொள்ள வும், இரு கட்சியிலுமுள்ள நியாயத்தை அறியவும் சந்தர்ப்பம் உண்டாகிறது. இந்தப் பொதுச்சபை ஒவ்வொரு முறை கூடும்போதும், ஒரு தலைவரைத் தேர்ந் தெடுத்துக் கொள்கின்றனர். ஆனால், அவ்வாறு தேர்ந் தெடுக்கப்படுவோர் சார்பில், மொத்த வாக்குகளில் மூன்றில் இரண்டு பங்கேனும் பதிவாகி இருக்கவேண்டும்; இல்லையேல், அவ்வாறு நிகழும்வரை மீண்டும் மீண்டும் தேர்தலை நடத்திக்கொண்டிருப்பார்கள். மேலும், அவ ருக்கு உதவி புரியப் 'பொதுக் காரியதரிசி' ஒருவர் உண்டு; இவரே நிரந்தரக் காரியாலயத்தின் தலைவரும் ஆவார். ஒவ்வொரு பொதுச்சபைக் கூட்டத்தின் றொடக்கத்திலும், சபையால் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயங்கள் நிச்சயிக்கப்பட்டு நிகழ்ச்சிக் குறிப்பைச் சபையினர் ஒப்புக்கொள்ளுதல் வழக்கம். பிறகே, ஒவ் வொன்றாக அவை விவாதிக்கப்படும்.

இரண்டாவதாகப் **'பாதுகாப்புச் சபை'** (Security Council) என்பது மிக முக்கியமான அங்கமாகும். இந்தச் சபையில் பதினோர் அங்கத்தினர்கள் உண்டு. அவர்களில் ஐந்து உறுப்பினர்கள் நிரந்தரமானவர்கள். இவர்கள் பிரித்தானியா, பிரான்சு, ரூசியா, அமெரிக்க ஐக்கியநாடு, சீனா என்ற வல்லரசுகளின் பிரதிநிதிகள்.

மற்ற ஆறு தானங்களுக்கும் இரண்டு வருடங்களுக் கொருமுறை தேர்தல் நிகழ்கின்றது. இந்தப் பாது காப்புச் சபை எப்பொழுதுமே கூடுவதற்குத் தயாராக இருக்கின்றது; ஏனெனில், முக்கியமான பிரச்னைகளில் அவசர நடவடிக்கை எடுப்பது இதன் கடமையாகும். உதாரணமாக, வட கொறியா நாடு தென் கொறிய நாட்டின் மீது படையெடுத்த செய்தி கிடைத்ததும், உடனே பொதுச்சபை கூடுவதற்குக் காத்திராமல் பாதுகாப்புச் சபை நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்தது. மேலும், இதில் நிரந்தர அங்கத்தினரான ஐந்து வல்லரசுகளுக்கும் '**ரத்து அதிகாரம்**' (Veto) வழங்கப்பட்டிருக்கிறது. அதன்படி, அவற்றில் ஒன்று இந்த அதிகாரத்தைப் பயன் படுத்திஞல் எந்தத் தீர்மானமும் நிறைவேருமல் இருந்து விடும். இந்த அதிகாரத்தை ருசியா பன்முறை பயன் படுத்தியுள்ளது.

மூன்ருவதாக, நியூயார்க் நகரின் ஒரு பகுதியாகிய லேக்சக்சசில் ஐ. நா. தாபனத்தின் நிரந்தரத் தலைமைக் காரியாலயம் அமைந்திருக்கிறது. இங்கே தலைமை நிர்வாகியாகப் பொதுச் சபையால் ஐந்தாண்டுகளுக் கொருமுறை நியமிக்கப்படும் பொதுக் காரியதரிசி (Secretary General)யும், அவருக்குத் துணைபுரிய உதவிக் காரியதரிசியும், பல நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளும் உள்ளனர்.

இவற்றையன்றிப் பல விசேட தாபனங்கள் ஐ. நா. தாபனத்தின் கிளைத் தாபனங்களாக வேலை செய்து வருகின்றன. அவற்றில், 'விஞ்ஞான-கலாச்சார-சமூக-கல்வி' தாபனம் (UNESCO), விஞ்ஞான ஆராய்ச்சி களின் முடிவுகளையும், கல்வி-கலை சம்பந்தமான கருத்துக் களையும் நாடுகள் தம்மிடையே பரிமாறிக் கொள்ள உதவியளிக்கின்றது. உலக சுகாதாரத் தாபனம் (WHO), பெரிய தொற்று நோய்களின் காரணங்களை ஆராய்ந்து அதுபற்றிய அறிவைப் பரப்பவும், அத்தகைய நோய்

களைத் தடுக்கவும், மருந்துகளை இயன்றவரை வழங்கவும் முயன்றுவருகிறது. உலக உணவு-விவசாய தாபனம், உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகளுக்கும் அவற்றை வாங்கும் நாடுகளுக்கு மிடையே தொடர்பு உண்டாக்கப் பெரிதும் முயன்று வருகிறது. விவசாய முன்னேற்றம், தானிய விலைவாசிகள் முதலியன பற்றிய அறிவை வழங்குவதும் இதன் கடமையே. 'பிரதேச பொருளாதாரச் சபைகள்,' அந்தந்தப் பிரதேசங்களி லுள்ள நாடுகளிடையே ஒற்றுமையை யுண்டாக்கிப், பொதுவான பொருளாதாரப் பிரச்னைகளை அவை யாவும் ஒன்று சேர்ந்து கவனிக்குமாறு செய்கின்றன. இத்தகைய சபைகளில், தென்கிழக்கு ஆசியப் பிரதேசத்திற்குரிய பொருளாதார சபை (U.N.E.C.A.F.E.)யின் காரியாலயம் **பாங்காக்** நகரில் உள்ளது. இந்தத் தாபனத்திற்கு இந்தியப் பொருளாதார நிபுணர் ஒருவர் பொதுக் காரிய தரிசியாக விளங்குகிருர். உலக வங்கி (World Bank) சிறு அளவில் பிற்போக்கான நாடுகள் செய்யும் முன் னேற்ற முயற்சிகளுக்கு மூலதனம் அளித்து உதவு கின்றது. '**சர்வதேச நாணய பரிவர்த்தனை சபை**' (I.M.F.), மற்ற நாடுகளிடமிருந்து பொருள்களை வாங்கிக் குறிப்பிட்ட நாணயம் வேண்டுமாயின், ஓரளவிற்குக் கொடுத்து உதவுகின்றது. 'சர்வதேசத் தொழிலாளர் தாபனம்' (I.L.O.), ஒவ்வொரு நாட்டிலுந் தொழிலாள ருக்கு அளிக்கப்பட வேண்டிய குறைந்த பட்ச உரிமை களையும், நலன்களையும் பாதுகாக்கப் பிரகடனமொன்று செய்துள்ளது. இதன் முயற்சியால் பிற்போக்கு நாடு களிலும் தொழிலாளர் பாதுகாக்கப்படுகின்றனர். '**சர்வ தேச நீதிமன்றம்**' ஏக் நகரில் தலைமைக் காரியாலய முடையது. இது கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நாடுகளிடையே எழும் சட்டரீதியான பிரச்னை களைத் தீர்த்து வருகிறது. தற்சமயம் ஐ. நா. தாப னத்தின் ஓர் அங்கமாக வேலை செய்கின்றது. மற்ருெரு

முக்கியமான கிளைத் தாபனம் **தர்மகர்த்தா சபை** (Trusteeship Council) என்பதாகும். பழைய சருவ தேச சங்கத்தில் **'மாண்டேட்'** பொறுப்பைச் சில நாடுகள் ஏற்றுக் கொண்டன என்று கூறினேமல்லவா? அவ்வாறே தமது 'காலனிகள்' (குடியேற்ற நாடுகள்) அரசியல் வளர்ச்சியும் பொருளாதார முன்னேற்றமு மடைவதை வல்லரசுகள் கண்காணித்து, அவ்வப்போது ஐ. நா. தாபனத்திற்கு அறிக்கைகள் அனுப்புதல் வேண்டும். அவற்றை இந்தத் 'தர்மகர்த்தா சபை' பரிசீலனை செய்து, தனது யோசனைகளையுந் தீர்மானங்களையும் வெளியிடுகின்றது. இவ்வாறு சாம்ராச்சிய நாடுகளைக் கட்டுப்படுத்த வல்லதொரு தாபனம் இருப்பதால், "காலனி ஆட்சி முறை" பெரிதும் திருந்தியிருக்கிறது எனலாம்.

கடந்த பத்தாண்டுகளில் ஐ. நா. தாபனம் பல அருஞ் செயல்களைப் புரிந்திருக்கிறது. இவற்றில் பிரதானமானவைகளைச் சுருக்கமாக ஆராய்வோம். போர் தோன்றும் நிலையில் ஆங்காங்குச் சமாதானத்தை உண்டாக்கி இருக்கிறது என்பதற்குக் கொறியப் பிரச்னையே உதாரணமாகும். காச்மீரத்திலும் இவ்வாறே போர் நிறுத்தம் செய்து இரு கட்சியினரும் அமைதியாகப் பிரச்னையை விவாதிக்குமாறு செய்துள்ளது. மேலும், அடிமை நாடுகள் ஆதிபத்திய நாடுகளை எதிர்ப்பதற்கும் ஓர் அளவு உதவிபுரிந்துள்ளது. உதாரணமாக, இந்தோனேசியாவில் ஒல்லாந்தரைத் தடுத்து முடிவில் அந்த நாட்டு மக்கள் சுதந்திரம் பெற உதவியது. அன்றியும், அகதிகள் பிரச்னையைத் திறம்படத் தீர்த்து வைத்துள்ளது. உதாரணமாகப் பாலத்தீனத்தில் யூதருக்கும் அராபியருக்கு மிடையே தோன்றிய பூசலால், இருபக்கமும் கணக்கற்ற அகதிகள் துன்பமடையவே, அவர்களைப் பரிவர்த்தனை செய்து அவர்களுக்கு ஆதரவு தந்தது. பொருளாதாரத் துறையில் ஐ. நா. தாபனம் பல நாடுகளும் முன்னேற்றமடையத் துணைபுரிந்த

தற்கு, ஐரோப்பாவிற்குப் புத்துயிர் அளிக்க மார்சல் திட்டமும், ஆசிய நாடுகளுக்குக் கொழும்புத் திட்டமும் சான்றுகளாம். மேலும், நாடுகளிடையே கலாச்சார ஒத்துழைப்பும், நல்லுறவும் தோன்றப் பெரும் நூல்களை மொழிபெயர்த்து வெளியிடுவது போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. உலக வங்கி போன்றவை கடன் கொடுத்ததால் இந்தியா போன்ற நாடுகளில் பெரும் நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சுருங்கக் கூறின், ஐ. நா. தாபனம் உலக மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஊட்டியிருக்கிறது; தான் ஒரு நாட்டின் பிரசை என்பதோடு உலகப் பிரசை என்ற பொறுப்பையும் ஓரளவு உணரச் செய்திருக்கிறது; எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தத் தாபனம் ஒன்றின் உதவியாலேயே உலக சமாதானம் நிலைபெறக்கூடும் என்ற நம்பிக்கையை வளர்த்திருக்கிறது. சமீப காலத்தில் நிகழ்ந்த செனீவா மகாநாடுகளே இதற்குச் சான்றுகும்.

பழைய சர்வ தேச சங்கத்தைவிட இந்தத் தாபனம் வல்லமை மிகுந்ததென்பதில் ஐயமில்லை. ஏனெனில், சுதந்திரம் பெற்ற பல ஆசிய நாடுகளின் கூட்டுறவும், ஐரோப்பியருக் கிணையாக ஆசிய இனத்தினர் பெற்றுள்ள அந்தத்தும் சம உரிமையும், அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலிய பல வல்லரசுகளின் ஒத்துழைப்பும் இதற்குப் பெரும் பலத்தை அளித்திருக்கின்றன. எதிர்காலத்தில் இந்தத் தாபனம் உலக சமாதானத்தை நிலைநிறுத்தி, மனித குலத்தின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்குமென்று உலகம் எதிர்பார்க்கின்றது.

## ஐ. நா. தாபனம்


ஐ. நா. பொதுச்சபைத் தலைவர்
பொதுக் காரியதரிசியும் நிர்வாகக் காரியாலயமும்
ஐ. நா. பொதுச் சபை
பாதுகாப்புச் சபை
W.H.O. (சுகாதாரம்)
உலக வங்கி
I.M.F. (நாணய பரிவர்த்தனை)
F.A.O. விவசாயமும் உணவும்
தர்மகர்த்தா சபை Trusteeship Council
UNESCO கல்வி-விஞ்ஞானம்-கலாச்சாரம்
I.L.O. தொழிலாளர்

**வினுக்கள்**

1. ஐக்கிய நாடுகள் தாபனம் தோன்றக் காரணம் யாது ?

2. ஐ. நா. தாபனத்தின் மூன்று பிரதான அங்கங்கள் யாவை ?

3. இந்தத் தாபனத்தின் கிளைத் தாபனங்களாகப் பணி யாற்றும் தாபனங்களையும், அவற்றின் கடமைகளையும் குறிப் பிட்டு விளக்குக.

4. இந்தத் தாபனம் புரிந்துள்ள சேவைகள் யாவை ?

5. இதனைச் சர்வதேச சங்கத்தைப் பார்க்கிலும் பலம் மிகுந்த தாபனமென்று கூறக் காரணங்கள் யாவை ?

குறிப்பு வரைக :—

பாதுகாப்புச் சபை, ரத்ததிகாரம், பொதுச்சபை.

**பயிற்சி**

உலகப்படத்தில் ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் நாடு களைக் குறிப்பிட்டுக் காட்டுக.

# 24. இன்றைய உலகம்

இந்த இருபதாம் நூற்றுண்டை மனித நாகரிகம் ஓங்கி வளர்ந்துள்ள புதுயுகமென்று வருணிக்கின்ருேம். புதிய கருவிகளும், வாகன வசதிகளும், விஞ்ஞான ஆராய்ச்சியின் அற்புதமான அபிவிருத்தியும் அந்த அள விற்கு மனித வாழ்க்கையையே மாற்றியமைத்துவிட்டன என்பது உண்மைதான். ஆனுல், இந்த நூற்றுண்டி லேயே இருபெரும் போர்கள் நிகழ்ந்து மனித குலம் அடி யோடு அழிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் இருந்து வந் திருக்கிறது என்ற உண்மையையும் நாம் மறக்கலாகாது. அணுகுண்டுகளும், ஜலவாயுக் குண்டுகளும் (Hydrogen bombs) வல்லரசுகளால் உற்பத்தி செய்யப்படுவதாலும், அவற்றினிடையே கொள்கைகளில் பெரும் வேற்றுமைக ளிருப்பதாலும், அத்தகைய யுத்த பயம் இன்னமும்

இருந்துவருகிறது. ஐக்கிய நாட்டுத் தாபனம் (U.N.O.) சிறந்த முறையிற் பணியாற்றி வருகிறதெனினும், உலகில் நிலைத்த சமாதானம் ஏற்படவில்லை.

இவ்வாறு சமாதானமற்ற நிலை நீடித்திருப்பதற்குக் காரணம் யாது என்பதை ஆராய்ந்தால், அதற்கு உலகில் நெடுங்காலமாக இருந்து வந்துள்ள பிரச்னைகள் பல இன்னமும் தீர்ந்து போய்விடாமல் நீடிப்பதே முக்கிய காரணமாகும்! அந்தப் பிரச்னைகளைப் பின்வருமாறு பிரித்து ஆராயலாம்:—(1) அரசியற் பிரச்னைகள் (2) சமுதாயம் பற்றிய கொள்கை வேற்றுமைகள் (3) பொருளாதாரப் பிரச்னைகள் (4) இனவேற்றுமை (5) விஞ்ஞான வளர்ச்சி.

1. **அரசியற் பிரச்னைகள்** :—இன்னும் உலக அரசியல் அரங்கத்திலே பற்பல பிரச்னைகள் தலைதூக்கி நிற்பதைக் காண்கிறோம். அவற்றில் பிரதானமானது, **தாழ்வுற்ற நாடுகளுக்குச் சுதந்திரம்** அளிப்பது என்பதேயாகும். சென்ற உலகப் பெரும்போரிற் பலம் மிகுந்த ஏகாதிபத்தியங்கள் சரிந்துவிட்டன என்பது உண்மையே. ஆயினும், உலகினின்றும் ஆதிபத்திய உணர்ச்சி (Imperialism) இன்னமும் மறையவில்லை. உதாரணமாகத் தென்கிழக்கு ஆசியாவில் நியூகினித் தீவிற்கு ஒல்லாந்தர்கள் இன்னமும் உரிமை பாராட்டி இந்தோனேசியரைப் பகைக்கின்றனர்; இந்தியாவில் கோவாப் பிரதேசத்திற்குச் சுதந்திரமளிக்கப் போர்த்துக்கீசர் மறுக்கின்றனர். வட ஆபிரிக்காவில் மொரோக்கோ, அல்சியர்சு பகுதிகளில் உள்ள இசுலாமிய மக்கள் பிரான்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத் தமது சுதந்திரத்திற்காகப் போராடி வருகின்றனர். இவ்வாறு ஆபிரிக்கா, ஆசியா முதலிய கண்டங்களில் வாழ்ந்து வரும் சுதேசிகள், ஐரோப்பியரைப் போலத் தேசீய உணர்ச்சியும் (Nationalism), விடுதலை விருப்பமும் (Love of liberty) பெற்று, அந்த இலட்சியங்களுக்காக

உயிரையும் உடைமைகளையும் தியாகஞ் செய்ய ஆயத்த மாக இருந்து வருகிறார்கள். இவ்வாறு காலப்போக்கில் கீழ்த்திசை நாட்டினர் அடைந்துள்ள மாறுதலை நன் குணர்ந்து கொண்ட பிரித்தானியர், இலங்கை, பாகித் தான், இந்தியா, பர்மா போன்ற நாடுகளுக்கு விரைவிற் சுதந்திரமளித்து அவர்களது நல்லுறவைப் பெற்றுக் கொண்டனர். அதனை உணராத மற்ற ஐரோப்பியர், அதன் விளைவாகக் கிளர்ச்சிகள் எழும்போது அல்லலுறு கின்றனர். ஏகாதிபத்திய நாடுகள் விரைவிற் குடியேற்ற நாடுகளுக்குச் சுதந்திரமளித்து விடுவதொன்றே இந்த பிரச்னைக்குத் தக்க பரிகாரமாகும்.

இதுமட்டுமன்றி, **நாடுகள் பிரிவினை செய்யப்பட்ட மையாலும் கிளர்ச்சிகள் எழுந்துள்ளன.** உதாரண மாகப் பாலத்தீன் நாட்டில் யூதர்கள் பழங்குடிகளென்ற உரிமை பாராட்டித் தமது இசுரேல் நாட்டை அமைக்க முற்பட்டதன், காரணமாக அங்கு அவர்களுக்கும் அரேபியருக்குமிடையே கொடும்போர் நிகழ்ந்ததல்லவா? அதன் பின்னர், நாட்டை இரு கூறுகப் பிரித்து 'இசுரேல்' தனி நாடாக நிறுவப்பட்டு விட்டது. ஆயினும், அங்கு எருசலேம் போன்ற இடங்களில் இடை விடாது போர் நிகழ்கின்றது. இவ்வாறே இந்தியாவில் இந்திய யூனியனுக்கும் பாகித்தானுக்குமிடையே 'காச் மீரப் பிரச்னை' காரணமாகப் பகைமை தொடர்ந்து வருகிறது. கொறியா தீபகற்பத்திலும் வடகொறியா, தென்கொறியா என்று இரு நாடுகள் உண்டாக்கப்பட் டிருப்பதால், இவற்றினிடையே மீண்டும் போர் மூளக் கூடிய நிலையைக் காண்கிறோம். இத்தகைய 'பிரிவினைப் பிரச்னைகள்' அந்தந்தப் பிரதேச மக்களின் விருப்பத் திற் கிணங்கச் சரிவரத் தீர்த்து வைக்கப்பட்டாலன்றி, அந்தப் பிரதேசங்களில் அமைதி நிலவுவது அரிதாகும்.

**2. சமுதாயம் பற்றிய கொள்கை வேற்றுமைகள்:**
"சமுதாய வாழ்க்கையில் காணப்படும் அறியாமை,

வறுமை முதலிய தீமைகளுக்குக் காரணங்கள் யாவை, அவற்றிற்குப் பரிகாரம் யாது?'' என்பன போன்ற விசயங்களை ஆராய்ந்து பல அறிஞர்கள் பல கொள்கைகளை வகுத்திருக்கின்றனர். அத்தகைய அறிஞர்களில் சென்ற நூற்றுண்டில் தோன்றிய **கார்ல் மார்க்கசும்** ஒருவர். அவர் தாம் எழுதிய 'கைப்பிற்றல்' (Capital-மூலதனம்) என்ற நூலில் புரட்சிகரமானதொரு கொள்கையை வெளியிட்டார். ''உலகில் யந்திரங்களால் பொருளுற்பத்தி பெருகியதிலிருந்து மூலதனம் படைத்த '**முதலாளிகள்**' என்றும், உடலுழைப்பால் ஊதியம் பெறும் '**தொழிலாளிகள்**' என்றும் இரு வர்க்கங்கள் தோன்றிவிட்டன. இலாபத்தில் பெரும் பங்கைக் கவர்ந்துகொள்ளும் முதலாளிகள், தொழிலாளரை வறுமையில் ஆழ்ந்து வாடுமாறு செய்துவிடுகின்றனர். அதனால், இந்தத் தொழிலாளர் வர்க்கமானது ஒற்றுமையடைந்து புரட்சி செய்து, அதிகாரத்தைக் கைப்பற்றித் தனது ஆட்சியை நிறுவவேண்டும். நிறுவிய பின்பு, உற்பத்திக்கு உதவும் மூலப்பொருள்கள், ஆலைகள் முதலியவற்றை அரசாங்கம் எடுத்துக்கொண்டு, அவற்றால் உற்பத்தியாகும் செல்வத்தை ஏற்றத் தாழ்வின்றிச் சமுதாயத்தில் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.'' இதுவே மார்க்கசு விளக்கிய **பொதுவுடைமைக்** (Communism) **கொள்கையின்** சாரமாகும். இதனைப் பின்பற்றும் நாடுகளில் ருசியா, சீனு, செக்கோசிலேவேபக்யா, போலந்து முதலியவை பிரதானமானவை. யுகோசிலேவியா நாட்டின் பொருளாதார அமைப்புங்கூட, ஏறக்குறைய இந்தக் கொள்கையை ஒட்டி அமைந்ததுவேயாகும்.

இத்தகைய நாடுகளில் தொழில்கள் பெருகியுள்ளதும், வறுமையும் ஏற்றத் தாழ்வுகளுங் குறைந்துள்ளதும் உண்மையே யெனினும், இங்கு அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் பிரிட்டனிலும் பிரான்சிலும் தனி மனிதனுக்கு உள்ள 'சீவாதார உரிமைகள்' (Fundamental

rights of a man) பலவும் மறுக்கப்பட்டிருப்பதையும் காண்கிருேம். அத்தகைய உரிமைகளிற் பிரதான மானவை, கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், கலாச்சார விசயங்களிற் சுதந்திரம், பிற நாட்டினருடன் தங்கு தடையின்றிப் பழகும் சுதந்திரம் என்பனவாம். பொதுவுடமையை நிலைநிறுத்தும் பொருட்டுச் சர்வாதி காரங்கள் தோன்றுவது தவிர்க்க முடியாதநிலை யாகை யால், அத்தகைய சமுதாயங்களில் மேற்கூறிய உரிமைகள் மறுக்கப்படும் என்பதில் ஐயமில்லை. ஆகையால், இத்தகைய உரிமைகளைப் போற்றும் **சனநாயகக்** (Democracy) கொள்கையை உடைய அமெரிக்கா, பிரித் தானியா, பிரான்சு போன்றவை, ரூசியா, சீனு முதலிய நாடுகளோடு மாறுபடுவதற்கும் இதுவே மூல காரண மாகும். இத்தகைய கொள்கை மாறுபாடு காரணமாக, இந்த இருபெரும் வல்லரசுக் கூட்டங்கள் ஒன்றை யொன்று எதிர்த்து நிற்கின்றன. இதுவே உலகில் அமைதியின்மைக்குப் பெருங் காரணமாகும்.

இவ்வாறு வல்லரசுகள் யுத்தத்திற்குத் தேவையான நிலைமையை உண்டாக்கியபோதிலும், தென்கிழக்கு ஆசியாவிலுள்ள நாடுகளும் வேறு சில தேசங்களும் பிடிவாதமாக 'நடுநிலைமைக் கொள்கையைப்' பின் பற்றி வருகின்றன. அதனுல், உலகில் ஒருபுறம் பொது வுடமைக் கொள்கையும் மற்றெரு புறம் சனநாயகக் கொள்கையும் நிரந்தரமாக ஒன்றையொன்று அழித்து விடாமல் இரண்டும் வளர்ச்சியுறுமாறு செய்வதைப் "**பஞ்சசீலக் கொள்கை**" (Five principles of co-existence) என்று இந்த நாடுகள் கூறுகின்றன. இந்த அறிவுரைக்கு இரு வல்லரசுத் தொகுதிகளும் செவி சாய்க்கத் தொடங்கி இருப்பதற்குச் செனீவா மகாநாடு (1955) சான்ருகும்.

**3. பொருளாதாரப் பிரச்னை** :—எல்லாப் பிரச்னை களிலும் முதன்மை வாய்ந்தது இதுவேயாகும். ஏனெ

னில், மற்றப் பிரச்னைகள் இதனின்றுமே தோன்று கின்றன. ஒவ்வொரு நாட்டிலும் வேலையின்மை, வறுமை, ஏற்றத் தாழ்வுகள்போன்ற பிரச்னைகள் இருப்பது மட்டுமன்றி, உலகின் சில பகுதிகளிற் செல்வங் குவிந் திருப்பதும் மற்றப் பகுதிகளில் வறுமை நிறைந்திருப் பதும் துன்பங்களுக்குக் காரணமாகின்றன. உதாரண மாக, அமெரிக்க ஐக்கிய நாட்டில் இயற்கைச் செல்வமும் பொருளுற்பத்தியும் நிறைந்துள்ளன; உலகின் மொத்த வருமானத்தில் ஏறக்குறைய நாற்பது சதவீதம் இந்த நாட்டு மக்களிடமே தங்கிவிடுவதாகக் கூறப்படுகிறது. இங்குள்ள மக்களின் **வாழ்க்கைத் தரம்** (Standard of living) மிக உயர்ந்த நிலையிலுள்ளது. இதற்கு அடுத்தபடியாகக் கனடா, அவுத்திரேலியா, நியூசீலந்து, இங்கிலாந்து, பிரான்சு முதலிய நாடுகளிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரங்களைக் குறிப்பிடலாம். ஆனால், ஆசியாவிலும், ஆப்பிரிகாவிலும் கோடிக்கணக் கான மக்கள் உண்ண உணவும் உடுக்க உடையுமின்றி வறுமையிலாழ்ந்து கிடப்பதைக் கண்கூடாகக் காண லாம். இத்தகைய நிலைமை நீடித்தால் நாடுகளிடையே பகைமை பெருகும்; போர்கள் தோன்றுவதற்கு வழி உண்டாகும். ஆகவே, அத்தகைய தீய விளைவுகளைத் தடுக்கவே, பொதுவாக உலக மக்களிடையிலும், சிறப் பாக ஐக்கிய நாடுகள் தாபனத்திலும் (U. N. O.) பொருளாதார அடிப்படையில் ஒற்றுமையை வளர்க்கும் முயற்சிகள் உருவாகி வருவதைக் காணலாம். உதாரண மாக அமெரிக்சர்கள் **'மார்சல் உதவித் திட்டம்'** (Marshall Aid) 'வகுத்து யுத்தத்தால் அழிந்துபோன மேற்கு ஐரோப்பிய நாடுகளின் தொழில் வளத்தைப் புத்துயிர் பெறச் செய்தார்கள். இவ்வாறே மற்றப் பல நாடுகளுக்கும் அமெரிக்கா உதவி வருவதையும் காண் கிறோம். இலங்கை முதலிய தென்கிழக்காசிய நாடுகள் தமக்கென வகுத்துக்கொண்டுள்ள **'கொழும்புத்திட்டத்'**

திலும் (Colombo Plan) ஓரளவு பொருள்கள் தருவதாகவும் தொழில் பற்றிய நுட்பங் (Technical Aid) களைக் கூறி உதவுவதாகவும் அமெரிக்கா, அவுத்திரேலியா முதலிய நாடுகள் முன்வந்திருக்கின்றன. ஐக்கிய நாடுகள் தாபனம் ஐரோப்பா, தென்கிழக்காசியா முதலிய பகுதிகளுக்குத் தனித்தனிப் பொருளாதாரக் கூட்டுறவுத் தாபனங்களை அமைத்திருக்கிறது. நாமிருக்கும் பகுதிக்குரிய அத்தகைய தாபனத்தின் (ECAFE) தலைமைக் காரியாலயத்தைப் **பாங்காக்** நகரில் காணலாம். இந்தத் தாபனம் புள்ளி விவரங்களைச் சேகரித்து நாடுகளின் நிலைமையை விளக்கி, அவற்றிற்கு உதவி தேடுவதில் ஊக்கமாக இருந்து வருகின்றது. இவ்வாறே உலக உணவு விவசாயத் தாபனமும் (F. A. O.), அகில உலக நாணயச் செலாவணி நிதியும் (International Monetary Fund), உலக வங்கியும் (World Bank), அவ்வப்போது உணவு அல்லது பொருள் முட்டுப்பாட்டால் தவிக்கும் நாடுகளுக்கு ஓரளவு உதவிபுரிகின்றன. இத்தகைய ஏற்பாடுகளால் உலகம் முழு நன்மையும் அடைவதானால், செல்வம் படைத்த வல்லரசுகள் தாராள மனப்பான்மை கொள்ளவேண்டும்.

4. **இனவேற்றுமை :**—புதிய ஐ. நா. தாபனத்தில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சமமாக ஆசிய நாடுகளும் இடம்பெற்றுள்ளனவாயினும், இன்னமும், இனவேற்றுமையும் துவேச உணர்ச்சியும் நீங்கவில்லையென்பது வருந்தத்தக்க உண்மை. உதாரணமாக, நாகரிக மேம்பாடுற்ற ஐக்கிய அமெரிக்க நாட்டில்கூட நீக்ரோவர் மற்ற வெள்ளையினத்தினருக்குச் சமமாக நடத்தப்படவில்லை என்பதும், தென்னாபிரிக்க யூனியன் அரசாங்கம் அங்கு வாழ்கின்ற இந்தியரையும், மற்ற ஆசிய-ஆபிரிக்க இனத்தினரையும் ஒடுக்கி வெள்ளையரது ஆதிபத்தியம் நிலைபெறச் செய்துவருகிறது என்பதும்

இத்தகைய இனவேற்றுமைக்கும் வெறுப்புணர்ச்சிக்கும் எடுத்துக்காட்டுகளாகும். ஐ. நா. தாபனம், விருப்பு வெறுப்புகளன்றி, இத்தகைய தீமைகள் எங்குத் தோன்றிடினும், அவற்றைக் களைந்து சமத்துவமும் சகோதரத்துவமும் உலகில் நிலைபெறச்செய்தல் வேண்டும். இல்லையேல், அந்தத் தாபனமும் பழைய சர்வதேச சங்கம் போலப் பயனற்றதாகிவிடும். உலகிலெங்கும் மக்களின் உள்ளத்தில் ' யாதும் ஊரே ! யாவரும் கேளிர் !' என்ற பண்டைத் தமிழ்க் கவிஞரின் பொன்மொழிகளில் பொதிந்துள்ள உன்னதமான கருத்து நிலைபெறச் செய்த அன்றே, ஐக்கிய நாடுகள் தாபனம் தான் பிறந்த பயனை எய்தியது எனலாம்.

**5. விஞ்ஞான வளர்ச்சி :**—விஞ்ஞான வளர்ச்சியாகிய அடிப்படைமீதே இன்றைய மனித நாகரிகம் நிலைத்திருக்கிறது என்ற உண்மையை நீவிர் உணர்ந்து கொண்டிருக்கிறீர்கள். விஞ்ஞான அறிவு ஓங்கியதால், புதிய இயந்திரங்கள் தோன்றிச் சமுதாய வாழ்வை வளப்படுத்தியிருக்கின்றன. ஆயினும், சமீபகாலத்தில் விஞ்ஞான அறிவு, ஆக்கவேலைகளுக்கு மட்டுமின்றி, அழிவு வேலைகளுக்கும் பயன்படுவதால், மனித சமுதாயத்தையே அழிக்கவல்ல ஆயுதங்களும், கருவிகளும் தோன்றிவிட்டன. இந்த நிலையைக்கண்டு, பெட்ருண்டு ரச்சல், ஆல்டசு அக்லி, டேவிடலியன்தால், கோமிபாபா போன்ற அறிஞர்களும் விஞ்ஞான நிபுணர்களுமே வருந்துகிறுர்கள். ஐ. நா. தாபனமும் உலகிலுள்ள பல நாடுகளின் அரசாங்கங்களும் ஒன்று கூடி, விஞ்ஞான அறிவைத் தகுந்த வகையிற் பயன்படுத்துவதென்ற உறுதியுடன் தமது முயற்சிகளைத் தொடங்குவராயின், இந்த உலகம் தீமைகளகன்று ஒரு நாள் பொன்னுலகமாகத் திகழுமென்பது திண்ணம்.

## பயிற்சிகள்

கீழ்க்காணும் பொருள்கள் பற்றிக் கட்டுரைகள் வரைக :—

(a) உலகப் பொருளாதாரப் பிரச்னைகளும், அவை தீர்க்கப்படும் வழிகளும்.

(b) இனவேற்றுமையால் விளையும் தீமைகள்.

(c) விஞ்ஞானத்தால் நேர்ந்த நன்மை தீமைகள்.

(d) உலகில் நிரந்தரமாகச் சமாதானம் ஏற்படுவது எவ்வாறு?

வித்தியாதிபதி அவர்களால் 3–9. 6-இல் G. C. E. வகுப்புச் சரித்திர பாடபுத்தகமாக அங்கீகரிக்கப்பட்டது.


# புது முறைச் சரித்திரம்

BY

V. S. S. RAM, M. A.,

T. V. K. MOORTHY, B. A. (Hons.)

| | | | |
|---|---|---|---|
| VI-ம் வகுப்பு | 2-00 | VIII-ம் வகுப்பு | 3-00 |
| VII-ம் ,, | 2-00 | G.C.E. ,, | 5-00 |

## G. C. E. வகுப்புப் பாடபுத்தகங்கள்

பொற்காலப் பூமி சாத்திரம் 5-50
(இலங்கையும் உலகமும்)
*by* V. S. S. RAM, M. A.

*

சுகாதாரமும் சரீர சாத்திரமும் 5-50
N. நடராசா, B. Sc., (Hons.)

*

உயிர் நூல் 4-00
C. J. டானியல், M.A., B.Sc.

*

தமிழ் மொழிப் பயிற்சி II-ம் பாகம் 2-50
வித்துவான். சு. பொ. சுவாமிதாசன்


# NEW METHOD HISTORY–S. S. C.

BY

V. S. S. RAM, M. A.,

T. V. K. MOORTHY, B.A., Hons.


KALAIVANI BOOK CENTRE

130, TRINCOMALI STREET, KANDY.



*Copyright*]


[*Price Rs.* 5–00